Koviloor Digital Library

புறநானூறு

[மூலமும் உரையும்]

புத்தகம் — 1

VTN0124

உரையாசிரியர்கள்

முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
முனைவர் அ. விசுவநாதன்
முனைவர் வி. நாகராசன்
முனைவர் இரா. ஆரோக்கியசாமி
முனைவர் க. திலகவதி
முனைவர் வெ. சத்தியநாராயணன்

தலைமைப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ. மா. பரிமணம்
முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்

திருநெல்வேலி பல்கலைக்கழகம்... வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.

Koviloor Digital Library

புறநானூறு (மூலமும் உரையும்)

முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
முனைவர் அ. விசுவநாதன்
முனைவர் வி. நாகராசன்
முனைவர் இரா. ஆரோக்கியசாமி
முனைவர் க. திலகவதி
முனைவர் வெ. சத்தியநாராயணன்

முதல் பதிப்பு : ஏப்ரல், 2004

© நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

Code No : A 1261

ISBN : 81-234- 0848 - X

விலை : சங்க இலக்கியம் எட்டுத்தொகை & பத்துப்பாட்டு நூல்கள் ரூ.3000

ஒளி அச்சு : *பிரிண்ட்மேஜிக்*
84-சி, நீதிமன்றச் சாலை
தஞ்சாவூர் - 613 001.
☎: 04362 - 277981.

அட்டைப் படம் : *மருது*

அச்சிட்டோர் : *பாவை பிரிண்டர்ஸ்*
142, ஜானிஜான்கான் ரோடு
ராயப்பேட்டை, சென்னை-600 014.
☎: 28482441.

Koviloor Digital Library

புறநானூறு

புத்தகம் – 1

உள்ளுறை

பக்கம்

பதிப்புரை

– ஆர். பார்த்தசாரதி
ஆசிரியர் குழு, என். சி. பி. எச் v

அணிந்துரை

– முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர். xviii

பதிப்பு முன்னுரை

– முனைவர் அ.மா. பரிமணம்
– முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
தலைமைப் பதிப்பாசிரியர்கள் xxxiv

உரை பற்றிய முன்னுரை

– முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
உரையாசிரியர் xxxvii

பாடிய புலவர்கள் – பாடல் எண்கள் xLiii

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

தமிழ்நாட்டில் முதன்மை நூல்வெளியீட்டகமாகக் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் இலக்கியத்தையும் முற்போக்குச் சிந்தனைகளையும், தமிழகத்தின் பட்டிதொட்டிகளுக்குக் கிளைகள் வழிக் கொண்டுசெல்ல முனைப்புடன் பணியாற்றி வரும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (புதுயுக நூல் வெளியீட்டகம்) நெடுங்காலமாகக் கண்டிருந்த கனவு இப்பொழுது நனவாகிறது – சங்க இலக்கியமும் உரையும் வெளியிடுவதன் வாயிலாக.

இந்திய நாட்டின் தென்கோடியில் உள்ள தமிழ்நாடு உயர் நாகரிகத்தின் தொட்டிலாக இலங்கி வந்துள்ளது. தமிழ்மொழி மிகத் தொன்மையான மொழி, அது எப்பொழுது தோன்றிற்று என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாதது, இலக்கண, இலக்கியத்துறைகளில் நுட்பமும் செறிவுமுடையது என்பன அனைவரும் அறிந்த வரலாற்று உண்மைகள்.

பண்டைய தமிழ் நாகரிகம் மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோர்க்குச் சான்றாதாரமாக, செய்தி ஊற்றாக அமைவது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தின் எந்த நூலைப் பிரித்து பார்த்தாலும் சிறந்த சிந்தனைகள் மிளிர்வதையும் – ஓங்கி வளர்ந்த நாகரிகத்தைப் பிரதிபலிப்பதையும் காணலாம். அத்தகைய இலக்கியத்தை முழுமையாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உரையுடன் வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

சங்க இலக்கியங்கள் மூவகையாக, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் எனச் சிலரும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் சங்க இலக்கியங்களே என வேறு சிலரும் கருதுவர். ஆனால் கால நிரல்படி பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சில சங்ககால நூல்களாகவும், வேறுசில பிற்பட்ட காலத்தவையாகவும் அதாவது சமண, பௌத்த, வைதிகச் சமயச் சிந்தனைகள் தமிழகத்தில் ஆழ வேரூன்றி இரண்டறக் கலந்தபின் எழுந்தவையாகவும் கொள்ளுதலே பொருந்தும்.

Koviloor Digital Library

சங்க இலக்கியம் எனக் குறிப்பிடும்போது இரு ஐயவினாக்கள் இயல்பாக எழும். 1. சங்கம் என்பது என்ன? 2. சங்கம் என ஏதேனும் இருந்ததா? இருந்தது எனில் எக்காலத்தில்? என்பன. இவ்வினாக்களுக்கு விடையளிக்க ஏறத்தாழ நூறு ஆண்டுகளாக ஆய்வுகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இது இன்னும் முடிந்தபாடில்லை. ஏனெனில், புதிய புதிய செய்திகள் கிடைத்தவண்ணம் உள்ளன. எனவே அவை இனியும் தொடரும்.

சங்கம் என்பது தமி'ழாயும் அவை; கூடல் எனவும் பொருளுடையது. "தமிழரின் வரலாறு" என்னும் நூலில் பி. டி. சீனிவாச ஐயங்கார் சங்கம் இருந்ததற்கான சான்றுகள் எவையும் இல்லை என்றார். "பழந்தமிழர் கால அட்டவணை" **Chronology of Early Tamil's** என்னும் நூலில் K. N. சிவராஜபிள்ளை சங்கம் இருந்தது என்பது நம்பத்தக்கது அன்று; சங்கம் பற்றி இறையனார் களவியலில் கண்ட செய்திகள் பொய்யானவை; பிற்காலத்தவர் எவரோ எழுதிச் சேர்த்த இலக்கிய மோசடி என்றார். சங்கம் இருந்ததே இல்லை என்று அடித்துச் சொல்லுபவர்களும் இறையனார் களவியல் செய்திகள் முழுக்க முழுக்க உண்மை என்று வாதிப்பவர்களும் இன்றும் உள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் எனக் கருதப்பெறும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தொடக்கத்தில் சங்கம் ஏதும் இருந்ததில்லை என்று உறுதியாக நம்பினர். ஆனால் அவை, மன்றம், கூட்டு, சங்கம் என்னும் வழக்காறுகள் சங்கம் என்பது போன்ற அமைப்பு இருந்ததற்கு அகச் சான்றுகளாகவும், புறச்சான்றுகளாகவும் மோதி எழுந்ததால் முச்சங்கங்கள் இல்லை என்றாலும் சங்கம் என்பது ஒன்றாவது இருந்திருக்க வேண்டும் என்று ஏற்று, பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் சங்க நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் என வரையறை செய்தார். சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம் பற்றிச் சமஸ்கிருதச் செல்வாக்கு தம்மீது அதிகம் இருந்த காரணத்தால், ஒப்ப வைத்து எண்ணத்தக்க சமஸ்கிருத இலக்கியங்களைத் தழுவி அவற்றின் பின்னரே எழுந்தவை என வையாபுரிப்பிள்ளை வாதித்தார். எனினும், அவர்களின் இக்கருத்தை ஏற்காதவர்களும், சங்கம் இருந்தது என்பது பற்றியும் நூல்களின் வைப்பு முறை பற்றியும் அவருடைய பொதுவான கருத்தை ஏற்பர்.

Koviloor Digital Library

சைவசித்தாந்த மகாசமாஜம் சார்பாக வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1940ஆம் ஆண்டு பதிப்பித்த சங்க இலக்கியம் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டி. இவர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுக்கு அமைத்துத் தந்த காலவரிசையை அறிஞர் ஒப்புக்கொண்டுள்ளனர். இவரே நக்கீரர் நால்வர் இருந்தனர். ஔவையாரும் ஒருவருக்கு மேற்பட்டவர் எனச் சுட்டிக்காட்டினார்.

சங்க இலக்கியங்கள் கற்பனையும் கனவும் பொய்யும் புனைவும் அற்ற தமிழ்ச் சமுதாயத்தை உள்ளது உள்ளபடியே காட்டும் படிமக்கலங்கள்—கண்ணாடிகள் என்று மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையும் வரலாற்றுப் பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியும், கலாநிதி கைலாசபதியும் கலாநிதி சிவத்தம்பியும் கருதுவர். இந்தப் பின்புலத்தில் சங்க இலக்கியத்தை உரையுடன் வெளியிட்டுத் தமிழர்களின் அவாவை நிறைவேற்ற முனைந்துள்ளோம்.

சங்க இலக்கியங்கள் காட்டும் நாகரிகம் சமகாலத்தில் நிலவியிருந்த கிரேக்க, ரோம நாகரிகங்களுடன் ஒப்பவைத்துக் கருதத்தக்கது. எவ்வகையிலும் குறைந்ததன்று. அசோகன் பாறைக் கல்வெட்டு (கி. மு. 3ஆம் நூற்றாண்டு) சேர, சோழ, பாண்டியர் அரசுகளைக் குறிப்பிடுகிறது. கி. மு. 22 இல் ரோம் அரசன் அகஸ்டஸ் அரசவைக்குப் பாண்டிய தூதன் வந்திருந்ததுபற்றி ஸ்ட்ரேபோ என்பார் குறிப்பிடுகிறார். பினினி (கி. பி. 77) பெரிபுளூஸ் (கி. பி. 54) அலெக்ஸாண்டிரியா சார்ந்த புவிநூல் வல்லுநர் டாலமி (கி. பி. 50) ஆகியோர் தமிழ் நாட்டுடன் துணி, முத்து, நறுமணப் பொருள்கள் வாணிபம் நடைபெற்றது பற்றிப் பேசுகின்றனர். கி. மு. 1000ஆம் ஆண்டு ஆண்டதாகக் கருதப்பெறும் சாலமன் மன்னன், தமிழ் நாட்டிலிருந்து பொன்னும் வெள்ளியும் யானைத் தந்தமும் மனிதக் குரங்குகளும் (கபி – கவி: வளைதல்) மயில் தோகையும் (துகி) இறக்குமதி செய்ததாக, ஈப்ரு மொழி விவிலிய சான்று தருவதாகக் கருதுகின்றனர். வில்போர்டு ஹார்வி ஸ்காப் (**Wilford Harvey Schoff**) என்னும் ஆய்வாளர் 1913ஆம் ஆண்டு, “அமெரிக்கக் கீழை நாட்டுச் சமுதாய ஆய்வு” இதழில் பண்டைய தமிழர் வாணிபம்பற்றி “கிறித்துவ அக்தத்தின் முதல் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் அரசியல் பிரிவுகள்” என்னும் தலைப்பில்

Koviloor Digital Library

ஒரு கட்டுரை வரைந்தார். கிரேக்கரும் ரோமானியரும் யவனர் எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுடைய குடியிருப்புகள் கீழைக் கடற்கரை ஓரங்களில் அமைந்திருந்தன. யவன வீரர் பாண்டியர் அரண்மனைகளில் காவலாளிகளாக இருந்தனர் எனவும் இலக்கியங்கள் சான்று தருகின்றன.

சங்ககாலம் கி. மு. 500 முதல் கி. பி. 300 வரை ஏறத்தாழ 1000 ஆண்டுகள் நிலவியிருந்தது என ஆராய்ச்சியாளர் சிலர் கருதுவர். வேறு சிலர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை சங்கம் இருந்தது என்பர். கடந்த நூற்றாண்டில் சங்க நூல்களையும் வேறு பல நூல்களையும் அச்சு வடிவில் பதிப்பித்த சான்றோர் பலர். ஏட்டுச் சுவடிகளைச் சேகரிப்பதற்கும் அவற்றில் கண்ட மூலபாடங்களை ஒப்பிட்டுச் சரிசெய்வதற்கும் அச்சேற்றுவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளையும் சந்தித்த இடர்ப்பாடுகளையும் விரிவாக எடுத்துச் சொல்லியுள்ளனர். இதனை நோக்கும்போது போக்குவரத்து வசதி இல்லாத, கல்வி வளர்ச்சி அடையாத நிலையையும் இடைஇடையே அடுத்தடுத்து மாறுபட்ட அரசுகள் ஆண்டதனால் ஏற்பட்ட இடையூறுகளையும் நோக்கும்போது பல நூற்றாண்டுகளுக்கு முன் சங்க இலக்கியங்களை ஒன்றுதிரட்டிப் பனை ஓலை ஏடுகளில் எழுதித் தொகுத்துத் தருவதற்காக தொகுத்தோரும், தொகுப்பித்தோரும் மேற்கொண்ட முயற்சிகள் மிகக் கடுமையானவை, இச்சான்றோர் என்றும் பாராட்டத்தக்கவர்கள், நினைவில் கொள்ளத் தக்கவர்கள், இவர்கள் இன்றேல் சங்க இலக்கியங்களே நமக்குக் கிடைத்திராமல் போயிருக்கும் என்பது தெளிவு. இக்கால அறிஞர் பெருமக்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் தம் அரிய விரிந்த அணிந்துரையில் ஆங்காங்குக் குறிப்பிட்டுச் சொல்வது நினைவில் கொள்ளத்தக்கது. பாடல்கள் கால வரிசையில் அமைந்தவை அல்ல; சில முன் பின் காலத்தவையாக இருக்கலாம், இடைச் செருகல்களாக எழுதிச்சேர்த்த பாடல்களும் உள்ளனவாகலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில், ஐவகை நிலம் சார்ந்த இனக்குழுச் சமுதாயத்தைக் கடந்து வர்க்க சமுதாயத்தை – மேலோர், கீழோர், ஏவலர், வினைவலர், ஆண்டான், அடிமை, செல்வர், வறியர் உழுவித்து உண்போர் உழுவோர் எனப் பல்வேறு வர்க்கப் படிநிலைகள் வரலாற்றுப் போக்கில் அமைந்துவிட்டதனைச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது.

Koviloor Digital Library

மேலும், சங்க இலக்கியத்தின் தலையான சிறப்பு, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐவகை நிலப்பிரிவுகளும் அவற்றையொட்டியமைந்த மக்கள் பிரிவுகளும் திணை, துறை காட்டும் பழக்கவழக்கங்களும் ஒழுகலாறுகளும் ஆகும். முதன் முதலில் குறிஞ்சி நிலத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய குன்றக்குறவர் – தமிழன் எவ்வாறு படிப்படியாகச் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தினான், சமுதாயத்தைக் கட்டியமைத்துக் கடலையும், ஆற்றையும் வென்று ஆளுமை செலுத்தினான் என்பதைச் சங்க இலக்கியங்கள் பெருமிதத்துடன் எடுத்துக் கூறுகின்றன. இது மட்டுமல்லாமல் விண்கோள்களையும், அவற்றின் நிலை மாற்றங்களையும், பருவ மாற்றங்களையும் கண்டறிந்தான். வேளாண்மை, வாணிபம், கைத்தொழில், ஆகியவற்றுக்குப் பயன்படுத்தினான். பல கலைகளை, போர், ஆடல், பாடல், ஓவியம், சிற்பம், கட்டடம், அணை, புணை தெப்பம், ஓடம், நாவாய் கப்பல் கட்டுதல், பானை வனைதல், நெசவு, உழுகருவிகள், போர் கருவிகள் படைத்தல் போன்ற கலைகள், தொழில்கள் எல்லாவற்றையும் கற்றுத் தெரிந்து சிறந்தான் என்பதையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

உலக இலக்கியங்களுள் சங்க இலக்கியங்கள் சமயம் சாரா இலக்கியங்கள் என்பது தெளிவாகத் தெரியும்.

மனித சமுதாய வரலாறு ஒவ்வொரு சமுதாயத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அரசு என்பது இருந்ததில்லை எனக் காட்டுகிறது. ஆங்காங்குப் பழங்குடிக் குழுக்களும், குல அமைப்புகளும் இருந்து மக்கள் கூட்டங்களை நெறிப்படுத்தி வழிகாட்டின. அவை சமுதாயத்திற்கு வழிகாட்டி நெறிப்படுத்தத் தேவையான விதிகளையும், உறவுகளையும் ஒழுகலாறுகளையும், பண்புகளையும் படைத்துக்கொண்டன. அரசு தோன்றிய பிறகு அவை அறநெறிகளாகவும், பழக்கவழக்கங்களாகவும், காலத்திற்கேற்ப மாறிப் புதுப்பொலிவுடன் இன்றளவும் நின்று நிலவிப் பெருமை சேர்த்து வருகின்றன. உழைப்பு, நேர்மை, அறம், வாய்மை, உண்மை, இன்னா செய்யாமை, ஒப்புரவு போன்ற பண்புகள் எல்லாம் இவ்வாறு உருப்பெற்றுத் தொடர்வனவே.

இரும்பு கண்டுபிடிப்பும், வேளாண்மையில் அதன் பயன்பாடும் நாகரிகத்தையும் வர்க்க சமுதாயத்தையும் தோற்றுவித்தன. இந்த உண்மையைச் சங்க இலக்கியங்கள் மிகத் துல்லியமாகக் காட்டுகின்றன.

Koviloor Digital Library

பிரடெரிக் ஏங்கெல்ஸ் ''குடும்பம் தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' என்னும் நூலில் அரசின் குணங்களை இவ்வாறு எடுத்துக்கூறுகிறார். ''வரையறுக்கப்பட்ட எல்லைகளையுடைய நாடு, பொது அதிகாரம், அதனைச் செலுத்தும் உள் அமைப்புகள், படை, அமைச்சு, காவல்துறை, ஒற்று, நீதிமன்றங்கள் என்பன. இவை எல்லாவற்றின் நோக்கமும் தனி உடைமையைப் பேணிப் பாதுகாத்து வரி வசூலிப்பதே. விவசாயத்திலும் வாணிபத்திலும் பிற தொழில்களிலும் கிடைக்கும் உபரி மதிப்பிலிருந்து பெறும் வரிகள், மக்களை நெருக்கிச் சுரண்டி அடக்கிப் பெறும் வருவாய் ஆகும். இதனால் அரசின் நலன்களும் மக்கள் நலன்களும் ஒரே சீராக இல்லாதாகி அதிகார அமைப்பாக அரசு மாறுகிறது. அதாவது மக்கள் நலன்களுக்காக என்று சொல்லித் தனி உடைமையைப் பாதுகாப்பதும் அதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதும் அரசு''. மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தெரிவு நூல்கள் தொகுதி III பக். 328) சற்றேறக்குறைய சங்ககாலச் சமுதாயத்தில் தோன்றி நிலைபெற்ற அரசு இத்தகைய தன்மை பெற்றிருந்தது என்பதைப் புறநானூறும், பத்துப்பாட்டும், பதிற்றுப்பத்தும் காட்டுகின்றன.

சங்ககாலத்தில் வேளாண்மையும் கைவினைத் தொழில்களும் வாணிபமும் கைகோத்து இணைந்து வளர்ந்தன. பரிசிலர்களுக்குப் பொன்னும், பொருளும் அரசர்களும் குறுநில மன்னர்களும் கொடையாக வழங்கியதோடு நிலத்தையும் தானமாகத் தந்தனர். பாரி 300 ஊர்களைப் புலவர்களுக்குப் பரிசிலாகத் தந்தான் என்று புறநானூறு கூறுகிறது. பதிற்றுப்பத்து, சேர மன்னர் சிலர் யாகம் செய்வதற்குப் பிராமணர்களுக்கு நிலக்கொடை தந்தனர் – என்று குறிப்பிடுகிறது.

''இந்தியாவின் நிலமானியமுறை'' என்னும் நூலில் ஆர். எஸ். சர்மா மன்னர்கள் நிலக்கொடை தந்ததிலிருந்து நிலமானியமுறை தொடங்குகிறது என்று கூறுவது நினைவுகொள்ளத்தக்கது.

வரி விதிப்பின் மூலம், பெரும்பகுதி வரி நிலத்திலிருந்தும் வாணிபத்திலிருந்தும் அரசன் பெற்றான். சங்க இலக்கியங்கள் பல்வேறு ஊர்களில் கோயில்கள் – சைவ வைணவக் கோயில்கள், சமணப்பள்ளிகள்

Koviloor Digital Library

புத்த விகாரைகள் இருந்தன எனக் குறிப்பாக மதுரைக்காஞ்சி காட்டுகிறது. கோயில்களுக்கு நிலத்தானம் செய்யும் வழக்கம் அப்போதே தோன்றியிருக்க வேண்டும். எனவே நிலத்தில் கோயில்கள், மதங்களின் தனிஉடைமை அக்காலத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம்.

வேளாண்மை மிகப் பழைய நிலையில் இருந்ததைச் சில பாடல்கள் காட்டுகின்றன. வேறுசில பாடல்கள் மருத நாகரிகத்தில் நிலத் தனிஉடைமை தோன்றி வளர்ந்து வலிமை பெற்றதனையும் காட்டுகின்றன. தனிஉடைமை நிலத்தில் கால்கொண்டு, உபரி உற்பத்தி பெருகி உழுவோர், உழுவித்துண்போர், கடைசியர், ஏவலர், வினைவலர் என்றும் மக்கட் பகுதிகளைத் தோற்றுவித்தது. நெல்லைச் சேமித்துவைக்க நிலவறைகள் **(Godowns)** இருந்தன. வேட்டுவர், காலப்போக்கில் எவ்வாறு பல படிநிலைகளைக் கடந்து வேளாளர் ஆகின்றனர் என்பதனை ரோமில்லாதாப்பர் **From Lineage to State** என்னும் நூலில் மிக அருமையாக எடுத்துச் சொல்கிறார். தேனெடுத்துச் சாமை, வரகு, தினை பயிரிட்ட தமிழ் மக்கள் பின் எவ்வாறு நெல்லையும், கரும்பையும் பயிரிட்டனர் என்பதனை நோக்கும்போது, சங்ககாலச் சமுதாய வளர்ச்சி பல படிநிலைகளைக் கடந்து வந்தது என்பது புலனாகும்.

சமூக வாழ்வில் மக்கள் அனைவரும் கண்டு அறிந்து அனுபவித்து மகிழ்வதைப் புறம் எனவும் தலைவன்–தலைவி, கணவன் – மனைவி இருவரிடை முகிழ்க்கும் உறவையும் மேற்கொள்ளும் இல்வாழ்க்கையையும் உண்டாகும் பிறர்க்கு அறிவிக்கவொண்ணாப் பேரின்பத்தை அகம் எனவும் தமிழ்ச் சான்றோர் பகுத்துக் கண்டனர். போரில் புறம்காட்டா வீரர்களையும் தம் மக்களைப் போருக்குத் தெருட்டித் துணிவு தந்து அனுப்பிய தாய்மார்களையும் போரில் விழுப்புண் பட்ட மறவர்களைப் பாராட்டுதலையும் அரசு வீழ்ந்த மறவர்களுக்கு நடுகல் நாட்டுதலையும் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தியது என்பதையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அரசன் பிற நாட்டின்மேல் படையெடுத்துக் கொள்ளையடிப்பதையும் ஆநிரை கவர்வதையும் அக்காலப் போர் அறமாகச் சங்க இலக்கியம் காட்டுகிறது. அதே போது "சாலிநெல்லின் சிறைகொள் வேலி ஆயிரம் விளையூட்டாக, காவிரி புரக்கும் நாடு" எனப் பொருநர் ஆற்றுப்படையும்,

Koviloor Digital Library

“வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத் தலைய கடற்காவிரி” என மதுரைக் காஞ்சியும் “மழைத் தொழில் உதவ மாதிரம் கொழுக்கத் தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய” என மதுரைக் காஞ்சியும், தண்டலை உழவர் தனி மனையில் விளைபொருள் குவிந்து” “மாடம் ஓங்கிய மணல் மலி மருகு” “விண்பொருள் நிவந்த வேயா மாடம்” என வேளாண்மையால் செழித்துத் திளைத்த தமிழகத்தைப் பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிடுவது காண்கிறோம்.

அதேபோது சீரழிந்த ஊர்களும் நம்முன் நிற்கின்றன. “பருவ வானத்து மாமழை கடுப்பக் கருவை வேந்த கருங்குடிச்சீரூர்” “வேழம் நிறைத்து வெண்கோடு விரைஇத் தாழைமுடித்துத் தருப்பை வேய்ந்த குறியிரைக் குரம்பை” “பறியுடை முன்றில்” என ஏழைகள் வாழ்ந்த குடிசைகளையும் சங்க இலக்கியம் காட்டுகின்றது. ஐவகை நில மக்களும் அவர்தம் தொழில்களும் ஒன்றுடன் ஒன்று மயங்கிக்கிடந்த பான்மையையும் வாணிபம் தழைத்து, ஊர்களில் ஊடுருவி ஊர் அங்காடிகள் உலக வாணிபத்தோடு இணைந்ததையும் சங்க இலக்கியம் அறிய வைக்கின்றது. இவற்றிலிருந்து வர்க்க வேற்றுமைகள் ஆழக்கால் கொண்டுவிட்டன என்பது தெரிகின்றது. தினை, சாமை விளைத்துத் தேனெடுத்த குறிஞ்சியும், ஆனிரை மேய்த்து, கலத்துப் பால், தயிர், வெண்ணெய் விற்ற முல்லையும் மருதத்துக்கு உள்ளடங்கின. இதனோடு நெய்தல் நாகரிகம் இணைந்தது.

கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததான மாங்குளம் கல்வெட்டு வணிகச் சாத்து **(Merchant Guild)** இருந்ததாகக் குறிப்பிடுகிறது. மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த தமிழகம், இயல்பாகவே கடல் வாணிபத்தில் சிறப்படைந்தது, கிரேக்கம், ரோம், அரேபியா, சாவகம், கடாரம் முதலான நாடுகளுடன் வாணிபத் தொடர்பு இருந்தது. கடல் வழியாகவே கிறித்துவம், இந்தியா வந்தடைந்தது. வாணிபத்தில் நேர்மையையும் நாணயத்தையும் வலியுறுத்துவதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. பட்டினப்பாலை “புகழ்நிலை இயமொழி வளர அறன்நிலைஇய அகன் அட்டில், சோறு வாக்கிய கொழுங்கஞ்சி, யாறு போலப் பரந்து ஒழுகி (42 – 45) வழிந்த உணவுச் சாலைகளையும் நீரினின்று நிலத்தேற்றவும் நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்

Koviloor Digital Library

அளந்தறியாப் பல பண்டம் வரம்பறியாமை வந்தீண்டி அரும்கடிப் பெருங்காப்பின் வலியுடையவல் அணங்கின் நோன் புலிபொறித்துப் புறம் போக்கி" (129 – 135) "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும் வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும் தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் கங்கை வாரியும் காவிரிப்பயனும் ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகு" (185 – 193) என நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்காகக் காத்திருக்கும் பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான பண்டங்களை எடுத்துச் செல்லுவதற்கான செயல்பாடுகளையும் விவரிக்கின்றது. அது மட்டுமல்லாமல் அது நேர்மையான வணிகப் பெருமக்களையும் "நெடுநுகத்துப் பகல் போல நடுவுநின்ற நன்னெஞ்சினோர் வடு அஞ்சி வாய் மொழிந்து தமவும் பிறவும் . ஒப்பநாடிக் கொள்வதூஉ மிகைகொளாது. கொடுப்பதூஉம் குறை கொடாது பல பண்டம் பகிர்ந்து வீசும் நெஞ்சினர்" எனப் பாராட்டிக் கூறுகிறது.

ரோம் அரசர்கள் வழங்கிய நாணயங்கள் இந்தியாவில் 127 இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலான இடங்கள் தமிழகத்தில் உள்ளன எனத் தொல்லியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளனர். "இந்தியாவின் ஆதி வரலாறு" என்னும் நூலில் வின்செண்ட் ஸ்மித் இவ்வாறு எழுதுகிறார். "தமிழரசுகளிடம் வலிமை வாய்ந்த கப்பற்படை இருந்தது. கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் பண்டங்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் துறைமுகங்களில் தங்கின. பல்வேறு நாடுகளிலிருந்து முத்து, பவளம், மிளகு, பிற பண்டங்கள் வாங்குவதற்கு வணிகர் வந்து குழுமினார்கள். அப்பண்டங்களுக்கு விலையாகப் பொன், வெள்ளி, நேர்த்தியான கலைப்பொருள்களைத் தந்தனர். ரோமானியர் குடியிருப்புகள் கிறிஸ்துவ அப்தத்தின் முதலிரு நூற்றாண்டுகளில் உண்டாயின." (பக்கம் 461 – 462) பிளினி, ரோம் மகளிர் ஒப்பனை செய்துகொள்வதற்குச் செல்வச் செழிப்பில் மிதப்பதற்கு ஒவ்வொராண்டும் தமிழகத்திலிருந்து நறுமணப்பொருள்கள் இறக்குமதி செய்யப் பலகோடி ரோமானிய நாணயங்களை (செஸ்டர் செஸ்)ச் செலவழிக்கவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

Koviloor Digital Library

சங்ககால நிலப்பிரிவுகள் தொழில்கள் அடிப்படையில் உண்டாயின. மேலோர், கீழோர் என மக்கள் பிரிந்தனர். வடபுலத்திலிருந்து வந்த நால்வருணப் பாகுபாடு தமிழ்ச் சமுதாயத்தில் ஊடுருவிற்று. ஏற்கனவே மேலோர் கீழோர் எனப் பிரிந்திருந்த சமுதாயம் நால்வருணப் பாகுபாட்டால் மேலும் சிதைந்தது. குலத்தொழில்கள் நால்வருணப் பாகுபாட்டு அடிப்படையில் மாறி அமைந்தன. இதனால், சாதியே தொழிலாகவும் தொழிலே சாதியாகவும் தமிழ்ச் சமுதாயத்தில் பிற்காலத்தில் மாறிப் போயின. தந்தை வழிக் "குடி" எனவும் தாய்வழிக் "குலம்" எனவும் வழங்கப்பட்டன என்பர் அறிஞர் சிலர். இக்கருத்து ஆராயத்தக்கது.

சிந்துச்சமவெளி நாகரிகம் சிதைந்த பின் சில மக்கட் பகுதிகள் தமிழகம் வந்தடைந்தன. ஜைனமும், பௌத்தமும் அடுத்து வந்தன. பின்னரே பிராமணர்கள் வந்தனர் என அறிஞர்கள் சு. வித்தியானந்தனும், கே. கே. பிள்ளையும், தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் கருதுவர். வந்த பின்னர்தான் சிவனும் திருமாலும் முழுமுதற் கடவுளாயினர். ஆரிய தெய்வங்கள் சிறு தெய்வங்களாயின. இம்மாற்றத்தினையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. தமிழர் தெய்வமான முருகனும் மாயோனும் சுப்பிரமணியனாகவும் விஷ்ணுவாகவும் மாறுகின்றனர். புராணங்களும் இதிகாசங்களும் மக்களிடை வலிமை பெறுகின்றன. இந்த நிகழ்ச்சிகளே தமிழ் பக்தி இலக்கியத்திற்குத் தூண்டுகோல்களாக அமைகின்றன. கோயில்கள் கட்டுவதும், குளங்கள் வெட்டுவதும் பக்தி இயக்கத்தை ஊக்குவித்தன. குறிஞ்சிநில வெறியாட்டும் மருதநில நடுகல் வழிபாடும் நெய்தல் நிலச் சுறா வழிபாடும் (பட்டினப் பாலை 86 – 92) பிற்காலத்தே எழுந்த பக்தி இயக்க உருவ வழிபாட்டுக்கு அடிகோலின. அக்காலத் தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கைகள் – பேய், பிசாசு, நிமித்தம், சோதிடம், குறி சொல்லுதல், காக்கை பலி, பல்லிசொல் போன்றவற்றிற்குச் சங்க இலக்கியம் சான்று தருகிறது. மனை உறை மகளுக்குக் கற்பும் ஆடவர்க்கு வினையும் இலக்கணங்களாயின. ஆடவன் மேன்மைபெற்றான். பெண் நிலை தாழ்கிறாள். பரத்தையர், பொதுமகளிர் பற்றி மதுரைக் காஞ்சியும் திருமணச் சடங்கு பற்றிக் குறிஞ்சிப் பாட்டும் எடுத்துக் கூறுகின்றன. மகளிர் தாழ்வுற்ற போதும் சங்ககாலத்தில் மகளிர் சில உரிமைகளோடு மேன்மையாக வாழ்ந்தனர், பிற்காலத்தே தாழ்ந்தனர் என வரலாற்று அறிஞர் கருதுவர்.

இப்பதிப்புரை இவ்வளவு நீண்டு விரிவாக அமைய வேண்டுமா எனப் பலர் ஐயம் கொள்ள நேரிடலாம். இது நியாயமானது. ஆயினும் முதன்

Koviloor Digital Library

முதலாகக் கன்னி முயற்சியாகச் சங்க இலக்கியத்தை நேரியமுறையில் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டும், அவர்கள் பயனுறவேண்டும் என்னும் நன் நோக்கத்தோடு பதிப்புப் பணியை, பொறுப்பை எமது நிறுவனம் ஏற்றுக்கொண்டது. சங்க இலக்கியத்தின் சிறப்பைச் சற்றாவது எங்கள் நோக்கத்தோடு இணைத்துச் சொல்லவேண்டும் எனக் கருதினோம்.

கடந்த நூற்றாண்டில் தலைசிறந்த பதிப்பகங்கள் சங்க இலக்கியங்களின் மூலங்களையும், உரைகளையும், பழைய உரைகளையும், புத்துரைகளையும் பதிப்பித்துப் பெரும் பணியாற்றியுள்ளன. அப்பதிப்பகங்கள் எல்லாவற்றிற்கும் எங்கள் வெளியீட்டகம் கடன்பட்டுள்ளது. நன்றி நவில்கிறது. புத்தகப் பதிப்பில் உள்ள இடர்ப்பாடுகள் கண்டு அஞ்சி இவற்றை எல்லாம் புறம்கண்டு முன்னோடிகளாகப் பணியாற்றிய அப்பதிப்பகங்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி.

1957ஆம் ஆண்டு மர்ரே அண்டு கம்பெனி உரிமையாளர் திரு. ராஜம் அவர்கள் சங்க இலக்கியம், தொல்காப்பியம், கல்லாடம், கம்பராமாயணம், வில்லிபாரதம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகியவற்றை வெளியிட்டார். திறமையான ஆசிரியர் குழு இதற்காகப் பொறுப்பேற்றது. இலக்கண, சந்திப் பிழைகள் இன்றி அலகு பிரித்து அற்புதமான முறையில் முன்னுரையுடன் இவை வெளியிடப்பட்டன. ராஜம் மர்ரே கம்பெனியிடம் வெளியிடும் உரிமைபெற்று இவற்றில் சில நூல்களை என். சி. பி. எச் 1981ஆம் ஆண்டு வெளியிடத்தொடங்கிற்று. மக்களின் நல்லாதரவு கிடைத்தது.

இந்த நல்லாதரவு உந்த ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன் சங்க இலக்கியங்கள் உரையுடன் வெளியிடுவதற்குச் சிந்தித்தோம். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் **முனைவர் இ. சுந்தரமூர்த்தி** அவர்கள் உதவ முன்வந்தார்.

பழைய உரைகள் கற்பதற்குக் கடினமாக அமைந்துவிட்ட காரணத்தினால், மூலம் பழைய உரை ஆகியவற்றின் சிறப்பு, சிறிதளவும் சிதையாமல் அறிஞர் பெருமக்கள் உரை வரைந்துள்ளனர். உரைகள் புத்துரைகளாகவே அமைகின்றன. மூலத்தின் சிறப்பு உரையில் மிளிர்கிறது. பலபுதிய நுண்ணிய கருத்துகளையும் உரையாசிரியர்கள் தத்தம் உரைகளில் ஆங்காங்கே எடுத்துச் சொல்லுகின்றனர். பழைய உரையாசிரியர்கள்

Koviloor Digital Library

இலக்கணக் குறிப்புகள் மிகுதியும் தருவர். இவ்வுரைகளில் உரையாசிரியர்கள் அருஞ்சொற்களுக்கும் சிறப்பிடம் தந்துள்ளனர்.

தலைமைப் பதிப்பாசிரியர்களாகப் பொறுப்பேற்றோர் முனைவர்கள் அ. மா. பரிமணம், கு. வெ. பாலசுப்பிரமணியன் ஆகிய இரு பெரும் அறிஞர்கள். இவர்களே சில நூல்களுக்கு உரையாசிரியர்களாகவும் பணி ஏற்றனர்.

கீழ்க்கண்ட அறிஞர் பெருமக்கள் உரை வரைந்துள்ளனர்.

நற்றிணை	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
குறுந்தொகை	–	முனைவர் வி. நாகராசன்
ஐங்குறுநூறு	–	முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
பதிற்றுப்பத்து	–	முனைவர் அ. ஆலிஸ்
பரிபாடல்	–	முனைவர் பெ. சுப்பிரமணியன் முனைவர் கு..வெ. பாலசுப்பிரமணியன் முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
கலித்தொகை	–	முனைவர் அ. விசுவநாதன்
அகநானூறு	–	முனைவர் இரா. செயபால்
புறநானூறு	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் முனைவர் அ. விசுவநாதன் முனைவர் வி. நாகராசன் முனைவர் இரா. ஆரோக்கியசாமி முனைவர் க. திலகவதி முனைவர் வெ. சத்திய நாராயணன்
பத்துப்பாட்டு முதற் பகுதி	–	முனைவர் இரா. மோகன்
பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி	–	முனைவர் வி. நாகராசன்

இப் பேராசிரியப் பெருமக்களின் உரைத் திறனை வாசகப் பெருமக்கள் படித்தறியலாம். இவர்களுக்கு எங்கள் பதிப்பகத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி.

Koviloor Digital Library

உரை வரைந்து முடிந்த பின் பேராசிரியர்கள் அ. மா. பரிமணம், அ. விசுவநாதன், பெ. சுப்பிரமணியன் மூவரும் இயற்கை எய்தினர். எங்கள் நிறுவனம் இவர்கள் பணிக்கு நன்றி செலுத்தி மறைவுக்குக் கைக்கூப்பி அஞ்சலி செய்கிறது.

இது மிகப்பெரும்பணி. ஏதேனும் பிழைகள் இருப்பின் வாசகப் பெருமக்கள் அன்புகூர்ந்து சுட்டிக்காட்டுவார்களேயானால் இனிவரும் பதிப்புகளில் செம்மை செய்ய இயலும்.

நியூ செஞ்சுரி நூல் வெளியீட்டகம் தோன்றிய பின் பாவை, அறிவு, தாமரை என்னும் துணைப்பதிப்பகங்கள் உருவமைந்தன. அனைத்தும் இணைந்து பதிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. நியூ செஞ்சுரி நூல் வெளியீட்டகம் 2001–ஆம் ஆண்டு பொன் விழா கண்டது.

எமது நிறுவனமும் துணை நிறுவனங்களும் பணியாற்றும் காலத்தில் பட்டி தொட்டிகளில் எல்லாம் இரவு பகல் பாராது பணிக் காலங்களில் ஊர்திகளைச் செலுத்திச் சென்று நூல் விற்பனை செய்த ஊழியர்கள், வெயில் பனி பாராது ஊர்கள் பலவற்றில் புத்தகக் கண்காட்சிகளில் பணியாற்றியவர்கள், கை எழுத்துப் படிகளைச் சரிபார்த்துத் தட்டச்சு, ஒளியச்சு செய்தல், மெய்ப்புத் திருத்துதல், செப்பனிடல், பதிப்புரை வரைதல் என்னும் பணி செய்பவர்கள், நூலாசிரியர்களுடனும் விற்பனையாளர்களுடனும் தொடர்பு கொள்ளுதல் என்னும் பணிகளில் ஒருங்கிணைந்து அயராது பணிசெய்த கிளை மேலாளர்கள், ஊழியர்கள் எல்லாருக்கும், கண் துஞ்சாது அயராது காலம் வருவாய் கருதாது பல்லாண்டுகள் உழைத்து எமது நிறுவனங்களை இந்த நிலைக்கு உயர்த்திய தொழிலாளத் தோழர்கட்கு அன்புக் காணிக்கையாக இந்தப் பதிப்பை நன்றியுடன் உரிமையாக்குகிறோம்.

ஆசிரியர் குழுவுக்காக, உரையாசிரியர் திறமையையும் தகைமையையும் பாராட்டி, தமிழ்ப் பெருமக்களின் உணர்வையும் ஆர்வத்தையும் பெருமிதத்தையும் தூண்டுதற்பொருட்டு இந்நீண்ட பதிப்புரையை எழுதலுற்றேன்.

வணக்கம்.

ஆர். பார்த்தசாரதி

[ஆசிரியர் குழுவுக்காக]

Koviloor Digital Library

அணிந்துரை

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

இருபதாம் நூற்றாண்டு சமூக, அரசியல், இலக்கிய மாற்றங்களுக்குப் பல்வேறு வகைகளில் தடம் பதித்தது. இந்த நூற்றாண்டின் ஆய்வுக் களத்துக்குரிய பலவும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டுவிட்டன. அச்சு ஊடகத்தின் உயரிய வெளிப்பாடாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு விளங்கியது. தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர்களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கிய இலக்கணப் பெருஞ்செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்து புதிய ஆய்விற்குத் தடம் பதித்தவர்கள் இவர்களே ஆவர். மேலை நாட்டார் வருகையினால் தோன்றிய அச்சுயந்திர வசதிகளும் கல்வி மறுமலர்ச்சியும் புதிய நூலாக்கங்களுக்கு வழிவகுத்தன. ஆறுமுக நாவலர் (1822–1879), சி.வை. தாமோதரம் பிள்ளை (1832–1901), உ.வே. சாமிநாதையர் (1855–1942), வையாபுரிப்பிள்ளை (1891–1956) ஆகியோர் தமிழ்ப் பதிப்பு முன்னோடிகளாய் விளங்கித் தமிழுக்கு வளம் சேர்த்தனர்.

தம்பிரான் வணக்கம் (1557) தமிழில் அச்சுருவில் தோன்றிய முதல் நூல் என்பர். இந்நூலே இந்திய நாட்டில் முதன்முதல் அச்சுருப்பெற்ற நூல் என்பர். தொடக்க காலத்தில் கிறித்தவ சமய நூல்களே பெரும்பாலும் அச்சாகி வெளிவந்தன. ஏசு சபையினர் அம்பலக் காட்டிலும், புன்னைக்காயலிலும் அச்சகங்களை நிறுவி இந்நூல்களை வெளியிட்டனர். தமிழகத்தில் தரங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடம் ஏற்பட்டது (1712), இரட்சிப்பின் ஒழுக்கம் (1712), விவிலிய நூல் தமிழ் மொழிபெயர்ப்பு (1715), வேதசாஸ்திரம் (1718), ஞான உபதேசத்தின் குருபீடம் (1798) முதலாய பல நூல்கள் வெளிவந்தன. தரங்கம்பாடி அச்சகம் வெளியிட்ட தமிழ் அகராதிகள் (தமிழ், ஆங்கிலம்), பதிப்பு வரலாற்றிலும் அகராதிக் கலை வளர்ச்சி வரலாற்றிலும் தடம் பதித்து முன்னோடியாய் விளங்கின.

1810–க்குப் பின் தமிழில் புதிய பதிப்பு முயற்சிகள் தொடங்கின. சென்னைக் கல்விச் சங்கத்தார் வெளியிட்ட திருவேற்காடு சுப்பராய முதலியார் எழுதிய தமிழ் விளக்கம் (1811) தமிழில் எழுதிய உரைநடை இலக்கணம் ஆகும்.

Koviloor Digital Library

இன்று கிடைக்கும் இலக்கிய நூல்களுள் முதன்முதலில் அச்சுருவம் பெற்ற நூல் திருக்குறள். 1812–இல் திருக்குறள் மூலபாடம் வெளியிடப்பெற்றது. 'தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை மாநகரம் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால்' அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது. இந்நூலின் பதிப்பு முறையும் நூலின் முன்னுரையும் தமிழ்ப்பதிப்பு நெறியின் வரலாற்றைச் சுட்டுவன. மூலபாடத் திறனாய்வுக்குரிய முன்னோடிப் பதிப்பாக இந்நூல் விளங்கியது.

பதிப்பு நூல்களுள் பின்வருவன முன்னோடி நூல்களாகக் கருதத் தக்கன. திருக்குறள் (எல்லிஸ் துரை 1812), இலக்கணச் சுருக்கம் (சிற்றம்பலதேசிகர் 1313), இராமாயண உத்தரகாண்டக் கதை 1815, சதுர் அகராதி (பெஸ்கி 1824), கணித தீபிகை (பண்டன ராமசாமி நாயக்கர் 1825), கதாமஞ்சரி (பஞ்சதந்திரம் தாண்டவராய முதலியார் 1826), தமிழ் அரிச்சுவடி (திருவேங்கட முதலியார் 1827), இலக்கண வினாவிடை (தாண்டவராய முதலியார் 1828), குமரகுருபரர் நீதி விளக்கம் (எம்ஸ்போக்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பு 1831), திருக்குறள் (விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் 1831), கம்பராமாயணம் (நரசிங்கதரையச் சருக்கம் 1843), திருக்குறள் (வேதகிரி முதலியார் 1849) முதலாய நூல்கள் பதிப்பு நூல்களுள் குறிப்பிடத்தக்கன. திருக்குறளைத் திருத்திய சுகாத்தியர் பதிப்பும் (1889) குறிப்பிடத்தக்கது. 1850–1900 ஆண்டுகளுக்கிடையே பல்வேறு நூல்கள் அச்சுருவம் பெறுகின்றன. திருமுருகாற்றுப்படை (1851) ஆறுமுக நாவலர், 1858–இல் வெளியிடப்பெற்ற தொல்காப்பியம் – நன்னூல் (சாமுவேல்பிள்ளை), 1887–இல் சி.வை. தாமோதரனாரின் கலித்தொகை, உ.வே. சாமிநாதையரின் பதிப்புகள் முதலானவை குறிப்பிடத்தக்கன. வையாபுரிப்பிள்ளை அவர்களின் சங்க இலக்கியம் (சமாஜப்பதிப்பு) பதிப்பு முயற்சிகளுள் தனித்த சிறப்புடையதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

சி. வை. தா., உ. வே. சா. ஆகியோரின் பதிப்பாய்வு முன்னுரைகள் தமிழ் ஆராய்ச்சியில் புதிய தடங்களைப் பதித்தன. 1856–இல் மொழி ஒப்பாய்வு குறித்துக் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' இருபதாம் நூற்றாண்டுக்குரிய ஆய்வுநெறியில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தது. கால்டுவெலின் ஒப்பிலக்கணம் அவர்தம் கடுமையான உழைப்பின் பயனாகவும் அத்துறையில் முன்னோடி நூலாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் ஆகியன அவருக்குக் கிடைக்கவில்லை.

Koviloor Digital Library

மலையாளமொழி அறிஞரான குண்டர்ட், தமிழ் அறிஞரான போப், கன்னட அறிஞர் கிட்டெல் ஆகியோர் சில திருத்தங்களைக் கூறினர். கால்டுவெல் அதனை ஏற்றுக்கொண்டு திருத்திப் பதிப்பித்தார். சென்னைப் பல்கலைக்கழகம் இதனை வெளியிட்டது. இவ்வாய்விற்குப் பின் மாகறல் கார்த்திகேய முதலியாரின் மொழிநூல், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் 'தமிழ்ப்பாஷையின் வரலாறு' இவ்வகையில் தோன்றின. தெ.பொ.மீ அவர்களின் தமிழ்மொழி வரலாறு, மு.வ. அவர்களின் மொழி வரலாறு, மொழிநூல் முதலாயவை குறிப்பிடத்தக்கன. இந்த ஆய்வுநெறி அடிப்படையில் மொழி வரலாறு, மொழியியல், ஒப்பியல் மொழிநூல் முதலாய ஆய்வுகள் வளர்ந்தன.

தொல்காப்பியப் பதிப்பிற்குப் பின் (1846 சி.வை.தா., மழவை மகாலிங்க ஐயர்) அதனைத் தொடர்ந்து பல ஆய்வுகள் தோன்றின. தொல்காப்பிய வரதப்ப முதலியார் காலத்திற்குப்பின் இப்பயிற்சி (தொல்காப்பியப் பயிற்சி) வளர்ந்ததாகச் சி.வை.தா. தம் நூலின் முன்னுரையில் குறிப்பிடுவார். அரசஞ்சண்முகனார், மு. இராகவையங்கார், பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், சி. கணேச ஐயர், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாராயண ஐயங்கார், சி. இலக்குவனார், தெ. பொ. மீ, வ. சுப. மா எனப் பலரும் இவ்வாய்வின் முன்னோடிகளாக விளங்குகின்றனர். அ. சிதம்பரநாதனாரின் தமிழ் யாப்பியல் சிறப்பாய்வு (Advanced Studies in Tamil Poetry) குறிப்பிடத்தக்க ஆய்வாகும். தொல்காப்பிய மேற்கோள் விளக்க அகராதி (நாகமணி அடிகள், 1942), தொல்காப்பிய நன்னூல் ஒப்பாய்வு, மொழியியல் நோக்கில் ஒப்பாய்வு நூல்கள் தொல்காப்பிய ஆய்வடங்கல் முதலானவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

சங்க இலக்கிய ஆய்வுகளுள் முன்னோடியாய் விளங்குவது அறிஞர் கனகசபைப்பிள்ளையின் '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' (1904) என்னும் நூல். இது **Madras Review** என்னும் இதழில் தொடர் கட்டுரையாக வெளிவந்தது (1895–1901). இந்நூலை ஆர்.சி. மஜூம்தார் முதலாய வரலாற்று அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்தனர். கே.என். சிவராசபிள்ளை (The Chronology of Early Tamils), பெ. சுந்தரம்பிள்ளை (Some Milestones in the History of Tamil Literature), பி.டி. சீனிவாச ஐயங்கார் (History of Tamils), வேங்கடராசலு ரெட்டியார் (கபிலர், பரணர்), தெ.பொ.மீ (சங்க காலம்), கமில சுவலபில் (History of Tamil Literature), கைலாசபதி (Tamil Heroic

Koviloor Digital Library

Poetry), கா. சிவத்தம்பி (The Literary History of Tamil), ஏ.கே. இராமானுசன் (Interior Landscape), மு. வரதராசனார் (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை), வ.சுப.மாணிக்கம் (தமிழ்க்காதல்), தனிநாயக அடிகளார் (Landscape and Poetry), ந. சுப்பிரமணியன் (சங்ககால வாழ்வியல் Sangam Polity), தமிழண்ணல் (Tradition and Talent in Cankam Poetry) போன்றோர் சங்க இலக்கிய ஆய்வில் தடம்பதித்துள்ளனர்.

நீதி நூல்களுள் திருக்குறள் குறித்து ஏறத்தாழ இரண்டாயிரம் நூல்களுக்குமேல் வெளிவந்துள்ளன. சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் வாயிலாக அரிய ஆய்வுநூல்கள் வெளிவந்துள்ளன. சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற திருக்குறள் நீதி இலக்கியம் ஒப்பாய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கது (க.த. திருநாவுக்கரசு : 1971). சக்கரவர்த்தி நயினாரின் திருக்குறள் ஆய்வு நூல் முன்னோடி நூலாக விளங்குகின்றது. காலந்தோறும் திருக்குறளுக்குப் பல்வேறு துறைகளிலும் நூல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

மொழிஞாயிறு பாவாணரின் மொழியாய்வு, சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், மாந்த நாகரிகம், தமிழ் உயர் தனிச் செம்மொழி முதலாய நூல்கள் ஆய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கன. அறிஞர் சாமி சிதம்பரனார், வெ. சாமிநாதசர்மா, மயிலை சீனிவேங்கடசாமி, சிலம்புச்செல்வர் ம.பொ.சி, சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, ந. சஞ்சீவி முதலாய அறிஞர்களின் ஆய்வு நூல்களுள் சங்க இலக்கியம் குறித்த புதிய ஆய்வுத் தடங்களைக் காணலாம். மறைமலையடிகளார் இவ்வகை ஆய்விற்கு அடிகோலினார். தமிழாராய்ச்சியின் வளர்ச்சி குறித்து ஆராய்ந்த ஏ.வி. சுப்பிரமணிய ஐயரின் நூல் புதுவகையானது. நா. வானமாமலை ஆராய்ச்சிக்குப் புதிய பார்வை தந்து பல ஆய்வு நூல்களை வெளியிட்டார். கோவை கிழார் பல்துறை ஆய்வுகளையும் வளர்த்து முன்னோடியாய் விளங்கினார்.

இரண்டு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து தமிழியல் ஆய்வுகள் வளர்ந்த வண்ணமுள்ளன. உரையாசிரியர்கள் ஒருவகையில் ஆய்வு நெறிகட்கு முன்னோடியாய் அமைந்து விளங்கினர். இருபதாம் நூற்றாண்டில் தமிழியல் ஆய்வு பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுத் திகழ்ந்தது. எதிர்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டிற்கு இவை அடித்தளமாய் அமைந்து புதிய பார்வைகளையும், புதிய வீச்சினையும் தமிழ் ஆய்வியல்நெறி பெறும் என்று நம்பலாம்.

Koviloor Digital Library

தமிழிலக்கிய மரபில் தனிச் சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் சமூகப் பின்னணியையும் வாழ்க்கை நெறிமுறையையும் சங்க இலக்கியங்கள் மூலமே இன்று நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. பழமை வாய்ந்த சங்க இலக்கியத்தை முன்னையோர் அகத்திணை, புறத்திணை என இருவகைப்படுத்தியுள்ளனர். சங்கப் பாடல்களுள் ஏறத்தாழ முக்கால் பகுதி அகத்திணைப் பாடல்களாகும். 2381 பாடல்களுள் 1862 பாடல்கள் அகப்பாடல்கள். சங்கப் புலவர்களின் எண்ணிக்கை 473. அகப்பாடல்கள் பாடியோர் 378. எனவே சங்க இலக்கியப் பாடல்களுள் முதன்மையாகத் திகழ்வது அகத்திணையேயாகும்.

முதன்முதலில் சங்கப் புலவர்கள் பலரும் பாடிய பாடல்களைத் தொகுத்துத் தந்த முன்னை அறிஞரின் பெருமுயற்சி பெரிதும் எண்ணுதற்குரியது. ‘பாட்டும் தொகையும்’ எனத் தொகுத்துப் பலரும் பாடிய பாடல்களுக்கு வாழ்வு தந்த பெருமக்கள் பண்டைய அறிஞர்களாவர். தொகுத்தோன், தொகுப்பித்தோர் என்று சங்க நூல்கள் தொகுத்த காலத்திலேயே அவர்களைப் பதிவுசெய்து நூல் தொகுப்பு வரலாற்றில் போற்றப்படுகின்றனர்.

சங்கச் செய்யுள்களைப் பழந்தமிழ்ச்சுவடிகள் போற்றிப் பாதுகாத்து இன்றைய தலைமுறைக்குத் தந்தன. அச்சுவடிகளைப் பொன்னேபோல் போற்றி எழுதிய பெருமக்களுள் ஒருவர் சங்க இலக்கியத்தைச் சுவடியில் படியெடுத்துத் தந்த நெல்லை நாயகம் என்பவர். சங்க இலக்கிய ஓலைச்சுவடி ஒன்றின் இறுதியேட்டில் (சுமார் முந்நூறு ஆண்டு காலப் பழைமையது) உணர்வு மிகுந்த நடையில் தன்னைப் பற்றிய குறிப்பை அவர் பின்வருமாறு சுட்டுவது பெரிதும் கருதத்தக்கது.

> ‘சங்க இலக்கியத்தை அனுசரிக்கும் மகாவித்துவான்களுக்குத்
> தொண்டு செய்யும் நெல்லை நாயகம் எழுத்து’

என்னும் அந்தக் குறிப்பு அக்காலத்திய அறிஞர்தம் மன உணர்வைக் காட்டும். இந்தக் குறிப்பினைக் கல்கத்தா தேசிய நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ள ஓலைச்சுவடியில் காணமுடிகின்றது. இங்ஙனம் காலந்தோறும் சுவடிகள் மூலம் சங்க இலக்கியத்தைப் போற்றிப் பாதுகாத்துத் தந்த தமிழறிஞர்களை நினைவுகூர்வது பொருத்தமாகும்.

> பழம் சங்கப் பனுவலைக் கற்றால்
> கிழம்போகும் கீழ்மையும் போம்.

என்று பாராட்டிப் போற்றினார் அறிஞர் வ.சுப. மாணிக்கனார்.

Koviloor Digital Library

சங்க இலக்கியப் பயிற்சியைக் காலந்தோறும் போற்றி வந்தமையை வரலாறு நமக்குக் காட்டும். இன்று சங்க இலக்கியம் குறித்துப் பல்வேறு பார்வைகளில் ஆய்வுநூல்கள் வந்துள்ளன. இத்தகைய ஆய்வு நூல்களுக்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர்கள் சென்ற நூற்றாண்டில் சங்க இலக்கியத்தைப் பதிப்பித்துத் தந்த பேரறிஞர்களே ஆவர். சுவடியினின்றும் சங்க இலக்கியத்தை அச்சுவடிவில் கொண்டுவருவதற்கு அவர்கள் பெருமுயற்சி எடுத்து உழைத்தனர்.

சங்க நூல்களுள் கலித்தொகை 1887ஆம் ஆண்டில் முதன்முதலாக அச்சிடப்பெற்றது. (இதற்கு முன்னர் திருமுருகாற்றுப்படையை மட்டும் ஆறுமுக நாவலர் 1851–ல் வெளியிட்டார்) யாழ்ப்பாணத் தமிழறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இதனைப் பதிப்பித்து அறிமுகம் செய்தார். பதிப்புலகில் பெரும்புகழ் பூத்து விளங்கிய டாக்டர் உ.வே. சாமிநாதையர் 1889–ல் பத்துப்பாட்டு நூலினை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தார். பின்னர் இப்பணியைத் தொடர்ந்து உ.வே.சா. அவர்கள் புறநானூறு (1894) ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகிய நூல்களை வெளியிட்டார்.

சங்க நூல்கள் முதன்முதலில் அச்சான விவரங்கள் வருமாறு:

திருமுருகாற்றுப்படை	–ஆறுமுக நாவலர்	1851
கலித்தொகை	–சி.வை. தாமோதரம்பிள்ளை	1887
பத்துப்பாட்டு	–உ.வே. சாமிநாதையர்	1889
புறநானூறு	–உ.வே. சாமிநாதையர்	1894
ஐங்குறுநூறு	–உ.வே. சாமிநாதையர்	1903
முல்லைப்பாட்டு	–மறைமலையடிகள்	1903
பதிற்றுப்பத்து	–உ.வே. சாமிநாதையர்	1904
பட்டினப்பாலை	–மறைமலையடிகள்	1906
பொருநராற்றுப்படை	–வா. மகாதேவமுதலியார்	1907
குறுந்தொகை	–சௌரிப்பெருமாள் அரங்கனார்	1915

Koviloor Digital Library

நற்றிணை	–பின்னத்தூர் நாராய்ணசாமி அய்யர்	1915
பரிபாடல்	–உ.வே. சாமிநாதையர்	1918
அகநானூறு	–ரா. இராகவையங்கார்	1918

இவற்றைத் தொடர்ந்து சங்க இலக்கியங்களுக்குப் பல்வேறு வகைகளில் நூல்கள் எழுந்தன. பழைய உரைகளைப் பதிப்பித்தனர். புத்துரைகளும், விளக்கவுரைகளும், எளிய உரைகளும் எனப் பொதுமக்கள் எளிதில் படித்துணர்ந்துகொள்ளுமாறு பல வகைகள் தோன்றின. ஒவ்வொரு நூலுக்கும் திறனாய்வு நோக்கிலும் பல நூல்கள் எழுந்தன. அறிஞர்கள் எளிமையான விளக்கங்களுடன் சங்க இலக்கியத்தை மக்கட்கு அறிமுகம் செய்தமை பெரிதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் 'சங்க இலக்கியம் – பாட்டும் தொகையும் என்னும் சமாஜப் பதிப்பு (1940) சங்க இலக்கியப் பதிப்பு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். தொகை நூல்களைப் பழைய உரையுடனோ அல்லது புதிய எளிய உரையுடனோ தொகைவாரியாகக் கற்ற நிலையிலிருந்து மாறிப் புலவர் வாரியாகக் கற்கும் நெறியை இப்பதிப்பு புதுநெறியாகக் காட்டியது. சங்கப் பாடல்களை உரையின்றி உணர்ந்துகொள்வதற்கு ஏற்பச் சந்தி பிரித்துப் பதிப்பிக்கும் முறையினையும் பேராசிரியர் அறிமுகம் செய்து வெற்றிபெற்றார்.

மரபுப்பாங்கான முறை வைப்பிலிருந்து மாற்றிப் புலவர் வரிசையில் சங்கப் பாடல்களை அமைத்தார். இப்பதிப்பால் பல்வேறு வகைப் பதிப்புகளும் ஆய்வு நூல்களும் தோன்றின. திணைவாரியான பதிப்புகள், திறனாய்வு அடிப்படையில் அமைந்த ஒரு புலவரின் பாடல் தொகைகளின் ஆய்வு முதலாயவை தோன்றின. சங்க இலக்கியப் பதிப்புகளுள் இப்பதிப்பு பல்வேறு நிலைகளில் தனிச் சிறப்புப் பெற்றதாகும்.

சங்கச் செய்யுள்களை உரையின்றிப் படிக்கும் காலம் மிகப் பழங்காலத்தில் இருந்திருக்கவேண்டும். காலம் செல்லச் செல்ல உரையிலக்கணமும் தேவைப்பட்டது. உரைநடையில் சங்கச் செய்யுட்களுக்கு விளக்கம் தோன்றிற்று. அறிவுத் தேடலின் வளர்ச்சியில் இக்காலகட்டம் பெரிதும் நினைவுகூரத் தக்கதாகும். உரையின் வரலாறும் தோற்றம் கொள்கின்றது.

மொழியின் தொன்மையையும் தோன்றிய காலத்தையும் வரையறை செய்வது என்பது இயலாததொன்று. மனித வரலாறு காலத்தால் நீண்டு

Koviloor Digital Library

செல்வதைப்போலவே மொழியின் வரலாறும் நீண்டு செல்கிறது. சில மொழிகளில் உரைநடைத் தோற்றத்தையும் வரலாற்றையும் வரையறை செய்வது இயலாததொன்றாக உள்ளது. மொழியின் கூறுகளுள் பாட்டும் உரையும் முதன்மையானவை. தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்களுள் முதன்மையானதாகிய தொல்காப்பியம் செய்யுளைப் பற்றியும் உரைநடையினைப் பற்றியும் சுட்டிச்செல்வது இங்கு உளங்கொளத்தக்கது. எனவே பாட்டும் உரையும் மிகப் பழங்காலந்தொட்டே தமிழில் வழங்கிவருகின்றன என்பது வெள்ளிடைமலை.

மிகப் பழங்காலத்தில், மக்கள் செய்யுள் வடிவிலேயே தங்கள் கருத்தை எளிதில் விளக்கும் திறன் பெற்றிருந்தவர்களாய் இருந்திருத்தல் வேண்டும். விரிவுரை விளக்கங்கள் இன்றியே பொருளுணர்ந்த காலமும் இருந்தது.

இக்கருத்தை 'உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலம் உண்டு' என்றும், 'உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள் என்பது கருத்து' என்றும் பேராசிரியர் மரபியலில் விளங்க உரைப்பதால் புலனாகிறது.

உரை என்ற சொல்லும் தமிழில் 'சொல்' என்றே பொருள் விளங்குமாறு அமைந்துள்ளதும் வாய்மொழி இலக்கியமாக இவை முன் இருந்தன என்பதற்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது என்பர்.

'கற்றலினும் கேட்டலே நன்று' என்று கேள்விச் செல்வத்தைப் பழங்காலத்தில் போற்றினர். செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்கும்பான்மை அக்காலத்தில் மிகுதியும் வழக்கில் இருந்தது. 'கேள்வி' என ஓர் அதிகார அமைப்பே குறளில் உள்ளது கருதத்தக்கது. 'மாணாக்கர் பாடம் கேட்கும் இயல்பு' என்றே இதற்கு மயிலைநாதர் விளக்கமும் தருவர். இவை எல்லாம் உரை எழுதி நூற்களைப் படிப்பதைவிடப் பிறரிடமிருந்து கேட்டுக் கல்வி பயின்ற வழக்கம் அக்காலத்தில் மிகுதியும் இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

அக்காலத்து எழுது கருவிகளும் எழுதும் கலை விரைவில் வளரத் தடையாப் இருந்தன. பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு ஒரு நூலைப் பல நாட்கள் எழுதிச் சேர்த்துச் சுவடியாக்கிப் போற்றிக் காக்கவேண்டிய நிலை இருந்துவந்தது. ஒரே சுவடியைப் பலர் கூடிக் கற்கும் நிலையும் இருந்தது.

Koviloor Digital Library

ஒருவர் படிக்க மற்றவர் காதால் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக்கவேண்டியவற்றை எழுதாமல் வாயால் கூறியே விளக்கிவந்தனர். 'விரிப்பின் பெருகும்; விரிவஞ்சி விடுத்தாம்; வல்லார்வாய்க் கேட்டுணர்க; வந்தவழிக் காண்க' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச்செல்லும் வழக்கம் அக்காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்ப்பாடுகளை உணர்த்தும். நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கல்வி கற்றுப் புலமைபெறும் வழக்கம் அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது. எனவே பலமுறை வாய்மொழியாக வழங்கி வந்த உரைகளே பின்னர் எழுதும் பேறுபெற்று அழியாநிலை பெற்றன எனலாம்.

இறையனார் அகப்பொருள் உரை பல தலைமுறைகளாக வாய்மொழியாக வந்தது என்பதற்கு அவ்வுரையிலேயே அகச்சான்று உண்டு.

'மதுரை ஆலவாயிற் பெருமானடிகளால் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு குமாரசுவாமியால் கேட்கப்பட்டது என்று'

'இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்'

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கீரங் கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார், இங்ஙனம் வருகின்றது உரை'

என்னும் பகுதி உரையின் வாய்மொழி வரலாற்றை நன்கு உணர்த்தும்.

காலப்போக்கில் இவ்வுரை விளக்கங்களே பல்வேறு வடிவம் பெற்றன. விளக்கங்கள் மிகுதியாக நினைவில் நிறுத்துவதும் அரியதாயிற்று. எனவே உரைகளை எழுதி வைத்துப் போற்றவேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இந்நிலை ஏற்பட்டபோதும் அக்காலத்தில் எழுதுவதில் இருந்த தொல்லைகளால் முதலில் உரைகள் குறிப்புரைகளாகவே

Koviloor Digital Library

அமைந்தன. விரிவும் விளக்கமுமமைந்த உரையாக அமையவில்லை. அருஞ்சொற்களுக்குப் பொருளும், சொற்களைக் கொண்டுகூட்டி முடிக்கும் முறையும் நினைவிற்காகச் சில வரலாற்றுக் குறிப்புகளுமே கொண்டு அமைந்தன.

சான்றாகச் சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையைக் கொள்ளலாம். மேலும் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் எனும் சங்கத்தொகை நூல்களுக்குக் குறிப்புரைகளே முதலில் இயற்றப்பட்டன. அகநானூற்றிற்கும் (தொண்ணூறு பாடல்கள்) பழைய உரை குறிப்புரையாகவே கிடைத்துள்ளது. புறநானூற்றில் பழைய உரை பொழிப்புரையாகவே உள்ளது. பின்னர் எழுந்த உரைகள் விளக்கவுரைகளாக மலர்ந்தன.

கருத்துக்கள் வளர வளரப் பொழிப்புரை, விளக்கம், மேற்கோள் முதலியன உரைகளில் இடம்பெற்று வளர்ச்சியுற்றன. இக்கருத்திற்கு அரண் செய்யும் வகையில் சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையைத் தொடர்ந்து அடியார்க்கு நல்லாரின் உரை எழுந்தது.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை முதன்முதலில் சிலப்பதிகாரமே ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ என்று போற்றப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் தொடர்ந்து உரைநடை வருவதைக் காண இயலாது. உரைபெறு கட்டுரை, உரைப்பாட்டு மடை முதலிய தலைப்புக்களில் உரைநடை இடையிடையே வருகின்றது. அரும்பத உரையாசிரியர் ‘உரைப்பாட்டு மடை’ என்பதற்கு ‘உரையாகிய பாட்டை இடை மடுப்பது’ என உரை எழுதுவர்.

உரையின் வளர்ச்சி மூலபாடம் சொல்லல், கருத்துரைத்தல், சொல் வருவித்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங்காட்டல், விரிவுகாட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனொடுபடுத்தல், ஆசிரிய வசனம் காட்டல் என்று பலவகைகளாக விரிந்தது என்பதை மயிலைநாதர் உரையால் அறியமுடிகிறது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்து, பின் தோன்றாது நின்ற உரைநடை, சிலப்பதிகார காலத்தில் மறைவாகத் தோன்றி மறுபடியும் சில நூற்றாண்டுகள் கழித்தே வளர்ச்சியுற்றது என்ற கருத்து இங்குக் கருதத்தக்கது.

இறையனார் களவியலுக்கு உரை வகுத்த நக்கீரர் காலத்திலிருந்துதான் (கி. பி. எட்டாம் நூற்றாண்டு) உரை வரலாற்றின் சிறப்பு தொடங்குகிறது என்பர். ஒரு நூல் முழுமைக்கும் முழு உரையாகவும் முழுமைபெற்ற உரையாகவும்

Koviloor Digital Library

விளங்குவது நக்கீரரின் இறையனார் களவியல் உரையே ஆகும். எனவே இதனை உரைநடையின் ஊற்றிடம் என்று கூறுவர்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை தமிழ் உரைநடை செழித்து வளர்ந்தோங்கியது. இக்காலத்தில் பல்வேறு பழந்தமிழ் நூல்களுக்கு உரைகள் எழுந்தன. அறிஞர் இக்காலத்தைத் தமிழ் உரைநடை வரலாற்றின் பொற்காலம் என்பர்.

சோழப் பெருமன்னர் ஆட்சி மிகச் சிறப்புற்று விளங்கிய இக்காலத்திலே சைவ சித்தாந்தம், விசிஷ்டாத்துவிதம் முதலிய தத்துவக் கொள்கைகள் நாட்டிலே பரவின. அவை முதன்முதலாகச் செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ள நூல்களிலேயே வரலாயின. அந்நூல்களிற் காணப்படும் கருத்துக்களை மக்களுக்குத் தெளிவாக விளக்குதற் பொருட்டு அவற்றிற்கு உரைகள் வகுக்கப்படலாயின. தத்துவக் கொள்கைகளைத் தருக்க முறைப்படி விளக்க வேண்டியிருந்ததனாலே தமிழ் உரைநடை ஒரு புது வழியில் விருத்தியடையலாயிற்று என்று தமிழ் உரைநடை வளர்ச்சிக்கான இக்காலச் சூழலை அறிஞர் ஆராய்ந்து கூறுவர்.

இவ்வுரை நூல்கள் எழுந்த காலச்சூழலை 'மீட்சி இயக்கம்' என்று கூறும் அறிஞரின் கருத்தும் இங்கு எண்ணுதற்குரியதாகும்.

இடைக்காலத்தில் வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமிழிற் குடிபுகுந்தன. பல்வேறு நல்லியல்புகளும், தமிழில் வந்தமைந்தன. ஆனால் அவற்றோடு சில தீய தன்மைகளும் புகுந்துவிட்டன. சுருக்கம், நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்துபோயின; அலங்காரங்களும் ஆடம்பரங்களும் தலையோங்கி விட்டன. அக்காலத்துக் கல்வியாளர் சிலர் சங்கத்தமிழின் மீதும் அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின் மீதும் பொதுமக்கள் பற்றுக்கொண்டு கற்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணினர். இதனால் சங்கத்தமிழுக்கு மீட்சி இயக்கம் (**Return to Classicism**) நிகழ்வதாயிற்று. இம்மீட்சி இயக்கத்திற்கு அறிகுறியாகச் சங்க இலக்கியங்களுக்கும், அவற்றோடொத்த பெருமையுடைய குறள் போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன. ஒரு வலுவான இலக்கிய இயக்கத்தின் விளைவாகவே தோன்றிய, இந்த இயக்கம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிச் சுமார் மூன்று நூற்றாண்டுகள்வரை தமிழ் இலக்கிய உலகில் சக்தியுடன் இயங்கியது என்பர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.

Koviloor Digital Library

இக்காலத்தை ஒட்டியே சற்று முன்னும் பின்னுமாக வேதாந்த தத்துவங்கட்கு வடமொழியில் சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோரால் சூத்திரங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றிற்குப் பல பேருரைகள் எழுந்தன. வைணவ நூல்களுக்கு மணிப்பிரவாள உரைகளும் மலர்ந்தன.

இவ்வாறு வடமொழி உரைகள் பல எழுந்ததை ஒப்பிட்டுப் பார்த்தால் இக்காலத்திலேயே இரு மொழிகளிலும் உரைநூல்கள் தோன்றி வளர்ந்தன என்பது புலனாகும்.

குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே 'அறிவுப் பசி' தலையெடுக்கின்றபொழுது, தங்கள் பழம்பெரும் நூல்களுக்குத் தங்கள் காலத்திய வாழ்க்கைச் சூழலுக்கேற்ப விளக்கம் தர அக்காலத்திய அறிஞர்கள் முயலுகின்றனர். அவர்களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்றபொழுதும், பழமையில் புதியன காணவேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உண்டாகின்ற பொழுதும் அவர்கள் தங்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதுகின்றனர். எனவே இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்களின் சிந்தனை வளர்ச்சியே உரையெனலாம்.

இடைக்காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட புலவர் சிறந்து விளங்கிய பண்டைக்கால நூல்களுக்கு உரைகள் எழுதுவதன் மூலமே தங்கள் ஆராய்ச்சிக்கு உருவம் கொடுத்தனர். உரை எழுதுவதை அரிய இலக்கிய ஆக்க முயற்சியாகவே கருதித் தமிழ்ப் புலவர் அதைக் கையாண்டனர்.

எனவே பண்டையோர் நூல்களுக்கு உரையெழுதும் முயற்சிகளை இலக்கிய ஆராய்ச்சியாகவும், இலக்கிய ஆக்க முயற்சியாகவுமே கருதினர் என்பது புலனாகும்.

தொல்காப்பியர் உரையின் வகைகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்தி உரைப்பர். அவை காண்டிகை உரை, விருத்தி உரை என்பன. இறையனார் அகப்பொருள் உரை கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என நான்கு வகைகளைக் குறிக்கின்றது. நம்பியகப் பொருள் இந்நான்கு வகைகளையும் பின்வருமாறு விளக்குவது உளங்கொளத்தக்கது.

" அவற்றுள் கருத்து உரைத்தலாவது, சூத்திரத்தின் உட்கோள் உரைத்தல்,

கண்ணழித்தலாவது சூத்திரத்துள் சொற்றோறும் பொருள் உரைத்தல்,

Koviloor Digital Library

பொழிப்புத் திரட்டலாவது சூத்திரத்துப் பொருளை
யெல்லாம் தொகுத்துரைத்தல்,

அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை
செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து
விரித்துரைத்தல்.''

யாப்பருங்கல விருத்தியுரையும் உரைகள் பத்துவகைக் குற்றங்களின்றியும், பத்துவகை அழகுகள் பொருந்தியும் எழுவகை மதங்கள் பொருந்தியும் அமைதல் வேண்டும் என்பதனை,

முத்திறத்தானும், மூவிரு விகற்பினும்
பத்து விதத்தானும், பதின்மூன்று திறத்தானும்
எழுவகையானும், இரண்டு கூற்றானும்
வழுவு நனிநீங்க, மாண்பொடும் மதத்தொடும்
யாப்புறுத்துரைப்பது சூத்திர உரையே

என்னும் நூற்பாவால் உரை இலக்கணத்தை நன்கு விரித்துக் காட்டும்.

இவற்றுள் முத்திறம் என்பது பொழிப்பு, அகலம், நுட்பம் என மூன்று வகைப்படும்.

மூவிரு விகற்பமாவது எடுத்துக்காட்டல், பதம் காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் உரைத்தல், வினாதல், விடுதல் ஆகியனவாம்.

பத்துவிதமாவன,

சொல்லே சொற்பொருள் சோதனை மறைநிலை
இலேசே எச்சம் நோக்கே துணிபே
கருத்தே செலுத்தலென் றீரைங் கிளவியும்
நெறிபட வருவது பனுவல் உரையே

என்னும் நூற்பாவால் விளக்கப்படுகின்றன.

பதின்மூன்று திறமாவன, சூத்திரம் தோன்றல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடம் காட்டல், உதாரணம் காட்டல், ஆசிரிய வசனம் காட்டல், அதிகார வரவு காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்த்தல் என்பன.

எழுவகை பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், பதப்பொருள் உரைத்தல், ஏற்புழிக்கோடல், எண்ணல் என்பன.

Koviloor Digital Library

இரண்டு கூறாவன தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணா்ந்து உரைத்தல் என இவை.

பத்துவகை வழுக்களாவன, குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச்சொற் புணா்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயன் இன்மை ஆகியன. இவ்வழுக்கள் இன்றி உரை அமைக்கப்படல் என்று மேலும் வலியுறுத்தும்.

உரை, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணா்த்தல், ஓசை உடைமை, ஆழமுடைத்தாதல், உலகமலையாமை, முறையின் வைத்தல், விளங்குதாரணத்தாகுதல் ஆகிய மாண்புகள் பொருந்தியிருத்தல் வேண்டும் என்று கூறும்.

எழுவகை ஆசிரிய மதங்களையும்கொண்டு உரை அமையும் என்று உரைக்கும், அவை உடன்படல், மறுத்தல், பிறர் தம் மத மேற்கொண்டு களைதல், தாஅனாட்டித் தனாது நிறுத்தல், இருவர் மாறுகோள் ஒருதலை துணிதல், பிற நூற்குற்றம் காட்டல், ஏனைப் பிறிதொடு படாஅன் தன் மதம் கொளல் என்பன.

இவை உரை இலக்கணத்தினைப் பற்றிய யாப்பருங்கல விருத்தியுரையின் கொள்கைகளாம். நன்னூலார் கூறும் இலக்கணத்தினையே இவ்வுரை விரித்துரைக்கின்றது எனலாம்.

இங்ஙனம் முன்னோா் நெறியில் யாப்பருங்கல விருத்தியுரை, இறுதியில்,

'எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளவற்றுள் யாதானும் ஒருவகையாற் கேட்போர் உணர்வு புலன் கொள்ளுமாற்றால் எடுத்துக்கொண்ட சூத்திரப் பொருள் உரைக்க வேண்டும்'

என்றுரைப்பது எண்ணுதற்குரியதாகும்.

இங்ஙனம் கூறிய உரைப்பண்புகள் அனைத்தும் இலக்கண நூற்பாக்களுக்கு உரியன எனினும் இப்பண்புகளே பொதுவாக இலக்கிய உரைகளுக்கும் பெரிதும் பொருந்தும் எனலாம். சான்றாக இவ்விலக்கண நூல்களுக்கு முன்னர்த் தோன்றிய அற இலக்கியமாகிய நாலடியாரும் ஒரு நூலின் உரை எவ்வாறு அமைந்து விளங்கவேண்டும் என்பதனைக் கீழ்வருமாறு சுட்டுகிறது:

Koviloor Digital Library

பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் பழிப்பி
னிரையாமோ சேர்க்கு நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலிற்கு நன்று

இச்செய்யுளுக்கு உரை எழுதிய பதுமனார் திரண்ட பொருளைச் சொல்லலும் விரித்துரைத்தலும், கடாவும் விடையுமாகச் சொல்லுதலும், இலேசான பொருளை உரைத்தலும் என உரையியல்புகளைக் கூறுவதும் உளங்கொளத்தக்கது.

இத்தகைய உரைப் பின்புலங்களைக் கண்டறிந்து உரையாசிரியர்கள் பழஞ்சங்கச் செய்யுட்களுக்கு உரைகண்டுள்ளனர். இன்றைய சூழலில் காலத்திற்கேற்றவாறு உரையினை எளிமைப்படுத்தி உரை எழுதவேண்டியது இன்றியமையாததாகும். இவ்வகையில் சங்க இலக்கியம் முழுமைக்கும் எளிய உரை எழுதும் திட்டத்தை மேற்கொண்டுள்ள என்.சி.பி.எச். புத்தக நிறுவனத்தாரின் பெருமுயற்சி வரவேற்கத்தக்கது.

சங்க இலக்கியம் பழந்தமிழரின் அரிய பண்பு நலனையும், சமூக வரலாற்றையும் காட்டும் காலப் பெட்டகம். சங்க இலக்கியம் முழுவதையும் உரையோடு பதிப்பிக்கும் அரிய முயற்சியில் என்.சி.பி.எச். நிறுவனம் நன்கு திட்டமிட்டு இப்பொழுது சுமார் 8000 பக்கங்களில் பல தொகுதிகளாக வெளிக்கொணர்வது பெரிதும் பாராட்டத்தக்கது.

தமிழறிஞர் பலரையும் இப்பணியில் ஈடுபடுத்தி அவர்களுடைய அரிய உழைப்பால் இத்தொகுதிகள் வெளிவருகின்றன. அறிஞர்கட்கும், பொதுமக்கட்கும், மாணவர்க்கும் ஒருசேரப் பயன்படுமாறு வடிவமைத்து இத்தொகுதிகளை உருவாக்கியுள்ளனர்.

இந்நூலுக்கு உரையெழுதிய ஆசிரியப் பெருமக்கள் பலரும் பல்லாண்டு காலம் மாணவர்க்குச் சங்க இலக்கியத்தைக் கற்றுத்தந்தவர்கள். அவர்களுடைய பட்டறிவும் புலமையும் இவ்வுரையில் நன்கு புலனாகின்றன.

அனைவர்க்கும் நன்கு புரியுமாறு எளிய நடையில் உரையை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. பொழிப்புரையும், கருத்து விளக்கங்களும், சொல்லாய்வு நுட்பமும் படிப்போர்க்கு மூலத்தை நன்கு புரிந்துகொள்வதற்கு உதவியாய் அமைகின்றன. சிற்சில புதிய விளக்கங்களும் இவ்வுரையில் காணக்கிடப்பது உரையாசிரியர்களின் நூற்புலமையைக் காட்டுவன.

Koviloor Digital Library

சங்க இலக்கியப்பதிப்பு வரலாற்றில் இத்தொகுதிகள் தனித்த வரவேற்பைப் பெறும். தமிழ் இலக்கியத்திற்கு மேலும் செழுமைசேர்க்கும் அரிய தொகுதிகள்.

பழம் உரையாசிரியர்களின் பின்புலத்தில் இத்தொகுதிகள் புதிய விளக்கம் கண்டு உரைப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியப் பெருமக்களின் உரையை நன்கு கூர்ந்து ஆராய்ந்து உரைக்கு மேலும் செழுமைசேர்த்த முதன்மைப் பதிப்பாசிரியர்களின் பணியும் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

என்.சி.பி.எச். நிறுவனம் பல்லாண்டுகளுக்கு முன் சங்க இலக்கிய மூலத்தை (மர்ரே பதிப்பு) மறுபதிப்புச் செய்து வெளியிட்டுத் தொண்டாற்றியது. தொடர்ந்து பின்னர் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலான நூல்களுக்கு எளிய உரை எழுதி வெளியிட்டது.

இப்பொழுது அரியபெரிய முயற்சியை மேற்கொண்டு ஏறத்தாழ இருபது தொகுதிகளில் சங்க இலக்கியத்தை உரையோடு வெளியிட்டுப் பழந்தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளது. இவ்வரிய பணிக்குத் துணைநின்ற நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவருக்கும், மேலாண்மை இயக்குநருக்கும், அலுவலர்க்கும் தமிழ்கூறு நல்லுலகத்தின் நன்றியும் பாராட்டும் என்றும் உரியன.

சங்க இலக்கியப் பதிப்பு வரலாற்றில் இத்தொகுதிகள் புதுவரவாக – நல்வரவாகத் திகழும். தமிழ்மக்கள் இத்தொகுதிகளை ஏற்றுப் போற்றுவார்களாக.

இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
19-11-2003.

இ. சுந்தரமூர்த்தி

Koviloor Digital Library

பதிப்பு முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் காலப்பழமை மிக்கன. தமிழர்தம் அறிவுவீறு, வினைத்திறம், வாழ்வியல் நலம், உள்ளச்செம்மை ஆகியன எல்லாம் அவ்விலக்கியங்களால் அறியப்பெறுகின்றன. ஒவ்வோர் எழுத்தும், அசையும், சீரும், அடியும் பற்பல பொருள்களை விரிக்கும் நிலையும் செறிவுற அமைந்த அப்பழஞ் செய்யுட்களை இன்று உரையின்றிப் பலராலும் பயில இயலாது. ஏன்? அந்நூல்கட்கு அமைந்த பழைய உரைகளும் இன்று விளங்கிக் கொள்ளப்பெறா. உள்ளுறை, இறைச்சி, குறிப்பு, அங்கதம் எனப் பற்பல பொருண்மைப் புதைவுகள் அச்செய்யுட்களில் பழந்தமிழ் உரையாசிரியர்கள் அகழ்ந்து அகழ்ந்து காட்டியும் விளக்கிக் கூறியும், ஒப்புமை உரைத்தும், மேற்கோள் சுட்டியும், இலக்கண அமைப்பைப் புலப்படுத்தியும் தத்தம் உரைகளில் கல்வி வித்தகம் காட்டினர். அப்பெருமக்கள் கூறிய உரையும், விளக்க நுட்பங்களும் அனைவராலும் உணர்ந்துகொள்ள இயலா. இன்றோ அந்தப் புத்தகங்களும் கிடைக்கப்பெறா நிலை! என்செய? இழப்பு குறித்து அவலித்துக் கண்ணெகிழ்ந்து அடங்குவதால் தமிழ் தழைக்குமா? இக்கால எளிய நிலையினர் ஏற்கவும், பழந்தமிழ் உரைகாரர்களின் பொருள் நுட்பம் புலப்படவும், சங்க நூற்கள் பதினெட்டுக்கும் உரை காண எண்ணிற்று "நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்". சங்க இலக்கியம் இக்கால மக்களின் இல்லமெலாம் பரவவேண்டும் எனவும், உலகெங்கும் பண்டைத்தமிழ் இலக்கியம் கற்க அவாவுநர் யார்க்கும் கையகத்து எளியதாய் அவ்விலக்கியம் கிடைக்க வேண்டுமெனவும், இந்நிறுவனம் எண்ணி ஒரு முன் வெளியீட்டுத் திட்டம் வரைந்து செயற்பட்டது.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகையில் இருபது, சிந்தாமணி ஆகிய நூல்கட்கெல்லாம் விருத்தி கண்ட விச்சைவலான் நச்சினார்க்கினியனோ இன்று உள்ளான்! அத்தகு கல்விக்கும் ஓயா உழைப்பிற்கும் இக்காலப் பின்னோக்கு வாழ்வியல் இடமளிக்குமா? பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், சௌரிப்பெருமாள் அரங்கனார், உ.வே. சாமிநாதையர், இரா. இராகவய்யங்கார்,

Koviloor Digital Library

இ. வை. அனந்தராமையர் (குறிப்புரை) ஔவை துரைசாமிப்பிள்ளை, பரிமேலழகர், ந. மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, பொ. வே. சோமசுந்தரனார், அருளம்பலவனார் போன்ற பெரியோரெல்லாம் தம் அறிவான் உழுது ஆற்றலால் வளர்த்த உரைப்பயிர் போலவும் இக்காலத்தும் இயலுமா? இவ்வினாக்கட் கெல்லாம் விடைகாணும் முயற்சியில் எம் பதிப்புக்குழு செவ்விதின் முயன்று கண்டனவே இவ்வுரை இணர். பல்லாண்டுகள் ஆசிரியப் பணியில் தோய்ந்தும் அறிவாராய்ச்சியில் அமிழ்ந்தும், தாமின்புறுவது உலகின்புறக் கண்டு உவந்தும் நிற்கும் பெருமக்களிடம் இப்பணிகளை ஒப்புவித்தோம். பழைய உரைகளைத் தழுவியும் வேண்டுழி எளிமை செய்தும், சுருங்கக் கூறுமிடத்துச் சுருங்கக் கூறியும் விளக்கம் வேண்டுமிடத்து விளக்கியும், சொற்பிரித்தும், எடுத்துக்காட்டியும் இலக்கணக் குறிப்புரைத்தும் இப்பேராசிரியர்கள் உரை கண்டுள்ளனர்.

நற்றிணை	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
குறுந்தொகை	–	முனைவர் வி. நாகராசன்
ஐங்குறுநூறு	–	முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
பதிற்றுப்பத்து	–	முனைவர் அ. ஆலிஸ்
பரிபாடல்	–	முனைவர் பெ. சுப்பிரமணியன் முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
கலித்தொகை	–	முனைவர் அ. விசுவநாதன்
அகநானூறு	–	முனைவர் இரா. செயபால்
புறநானூறு	–	முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் முனைவர் அ. விசுவநாதன் முனைவர் வி. நாகராசன் முனைவர் இரா. ஆரோக்கியசாமி முனைவர் க. திலகவதி முனைவர் வெ. சத்திய நாராயணன்

Koviloor Digital Library

பத்துப்பாட்டு முதற் பகுதி – முனைவர் இரா. மோகன்

பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி – முனைவர் வி. நாகராசன்

இந்நூலில் அருஞ்சொல் நிரல்கள் பத்து நூல்களுக்கும் பின்னிணைப்பாக அமைந்துள்ளன. இந்நிரல்களை ஆக்கியோர் திரு. வெ. சத்தியநாராயணனும் திருமதி பிருந்தாஸ்ரீயும் ஆவர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் மக்கள் கல்வியிலும், மாணவர் கல்வியிலும் ஆர்வம் மிகக் கொண்டது. பன்னூறு வெளியீடுகளைக் கொணர்ந்து நாடெங்கும் அறிவுப்புனல் பரக்க ஆக்கம் செய்யும் அரிய நிறுவனம். இந்நிறுவனத்தார் சங்க இலக்கியங்களை மீண்டும் வெளிக்கொணர்வது பாராட்டுக்குரிய நற்பணியாகும். நிறுவனத்தின் தலைமை இயக்குநர் மதிப்புறு **ஆர். நல்லகண்ணு** அவர்களுக்கும், மேலாண் இயக்குநர் மதிப்புறு **ஆர். இராதாகிருஷ்ணமூர்த்தி** அவர்களுக்கும் இம்முயற்சியில் அவர்க்குத் துணைபுரிந்த முன்னாள் செயலாளர், மறைந்த **மே. சுப்பிரமணியன்,** மண்டல நிர்வாகி, **தி. இரத்தினசபாபதி,** கிளை நிர்வாகி **ச. சரவணன்** ஆகியோர்க்கும் அச்சுப்பணி செய்தளித்த அனைத்து நிறுவனத்தினர்க்கும் தலைமைப் பதிப்பாசிரியர்கள் எனும் முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய செம்பதிப்புத் திட்டம் பதினெண் கீழ்க்கணக்கிற்கும் தொடர உள்ளது. தமிழ் மக்கள் இவற்றின் பயன்கொள்ள வேண்டுகிறோம்.

முனைவர் அ. மா. பரிமணம்

முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

(தலைமைப் பதிப்பாசிரியர்கள்)

Koviloor Digital Library

புறநானூறு மூலமும் உரையும்

உரை பற்றிய முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் குறித்த முழு நூல்கள் இரண்டு; அவை பதிற்றுப்பத்தும், புறநானூறும் ஆம். பதிற்றுப்பத்து சேரவேந்தரையே பாடுவது. புறநானூறு தமிழகமெங்கணும் இருந்த பெருவேந்தர், குறுநிலமன்னர், ஈகையஞ்செல்வர், சால்பமைந்த பெரியோர், புலவர் எனப் பலரையும் குறிப்பதாக அமைந்தது. புலவர் நூற்று ஐம்பத்து எழுவராற் பாடப்பெற்ற இந்நூலில் பாடப்பெற்றோர் நூற்று எழுபத்து எண்மராவர். இந்நூற்குரிய நானூறு பாடல்களில் 267, 268 ஆகிய எண்ணுடைய இரு பாடல்கள் கிடைக்கவில்லை. எஞ்சிய பாடல்களில் பதினான்கு பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் அறியப்படவில்லை.

புறநானூறு பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு; பண்பாட்டுக் களஞ்சியம்; இலக்கியக் கருவூலம். இதனுள் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றிய செய்திகளும், புரவலர்கள் புலவர்களைப் போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புகளும், மன்னர் தம் மானமாண்பு பற்றிய அரிய குறிப்புகளும் போர்த்தினவுற்று அறமுறை பிறழாது போர்புரிந்து, மார்பில் வேலேற்ற மைந்துடைக் காளையரின் வீரப்பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான பண்புகளும் குறுநிலமன்னர்களின் ஆண்மை, ஈகை, ஒப்புரவு முதலான சால்புகளும் களச்சாவுற்ற தம் மைந்தரின் உடல்கண்டு பெருமிதமெய்திய தாயரின் மறக்குணங்களும் பிறவும் மிக அழகுற எடுத்துரைக்கப் பெறுகின்றன.

புறநானூற்றில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் பதினொரு திணைக்குரிய பாடல்கள் உள்ளன. உழிஞைத் திணைக்குரிய பாடல்கள் இல்லை. வெட்சி –5, கரந்தை –12, வஞ்சி –12, காஞ்சி – 31, நொச்சி – 6, தும்பை –27, வாகை –77, பாடாண் – 143, பொதுவியல் –70,

Koviloor Digital Library

கைக்கிளை –3, பெருந்திணை – 5 எனத் திணைகள் பாடல்களைப் பெற்றுள்ளன. 244. 282, 289, 323, 355, 361 ஆகிய எண்ணுடைய பாடல்களுக்குத் திணைப் பெயர் அறியப்பெறவில்லை. சில பாடல்களுக்கு இருதிணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. (இங்கு முதலில் கொடுக்கப்பட்டுள்ள திணையே கணக்கிற் கொள்ளப்பட்டுள்ளது.) இந்நூலின் திணைப்பகுப்பு தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படவில்லை. நச்சினார்க்கினியர், புறத்திணையியல் உரையில் "தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமும் தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டுமென்றறிக" என்று கூறுகிறார்.

புறநானூற்றுக்குப் பழைய உரை ஒன்றுள்ளது. இது நூலின் முதல் 266 பாடல்களுக்கு மட்டும் கிடைக்கப்பெற்று உ.வே. சாமிநாத ஐயரவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. (முதற்பதிப்பு 1894) இவ்வுரையைப் பற்றி ஐயரவர்கள்

"இந்நூற்குக் கிடைத்த உரை பதப்பொருளை இனிது விளக்கி உரிய இடங்களிற் சொற்களை முடித்துக்காட்டி இலக்கணக் குறிப்பையும் திணை, துறைகளையும் ஆங்காங்குள்ள பழமொழிகளையும் அணியையும் சொன்னயம், பொருணயங்களையும் புலப்படுத்துவது; இவ்வுரையில் இக்காலத்து வழங்காத சொற்கள் பலவுள்ளன. அன்றியும் இதன் இடையிடையே சிற்சில வாக்கியங்கள் அவ்வவ்விடத்திற்குப் பொருத்தமில்லாதனவாகத் தோன்றும். அவற்றைச் செவ்வை செய்து கொள்வதற்கு இப்பொழுது தக்க சாதனம் கிடையாமையானும் இனி நல்ல பிரதிகள் கிடைப்பின் அவற்றைக்கொண்டு செவ்வை செய்து கொள்ளலாமென்றும் அவற்றை மாற்றாமற் பிரதிகளிலிருந்தவாறே பதிப்பித்தேன்."

என்று கூறுகின்றார்கள். இவ்வுரை அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முற்பட்டது. நம்மால் அறியப் பெறும் உரையாசிரியர்கள் பிறரிடமிருந்து உரைப்பண்புகளில் இவ்வுரையாசிரியர் வேறுபடுகின்றார். இவர் வைதிக நெறியினரென்று இவரது உரையினின்றும் அறியப் பெறுகின்றது. இவ்வுரையாசிரியர் அரிய சொற்களுக்குப் பொருள் விளங்க உரை

Koviloor Digital Library

காண்கிறார்; சொற்பொருள் நலம் காட்டுகின்றார். குறிப்பு மற்றும் உள்ளுறைப் பொருளை இனிதே புலப்படுத்துகின்றார். புராண இதிகாச மேற்கோள்களை எடுத்தாளுகின்றார். ஆற்றொழுக்காக எச்சங்களை அடுக்கிச் சென்று தக்க வினை முடிபு காட்டுகின்றார். இவர்க்கு முன்னும் புறநானூற்றுக்கு உரை இருந்திருக்கிறது என்பது 'நீயோ; ஒ அசைநிலை; அன்றி இதனை வினாவிற்குப் பொருளாக்கி உரைப்பாருமுளர்' போன்ற பகுதிகளால் விளங்கும். தாட்சிணாக்கினி என்பதனை இவர் 'தென்றிசையங்கி' என்றும் சனியைக் 'காரி, கரியவன்' என்றும், நட்சத்திரம் என்பதனை 'நக்கத்திரம்' என்றும், கூறுவது கருதத்தக்கது.

பூவார் கா	–	வானோர் இவன் முன்னோர்க்கு வரங்கொடுத்ததற்கு வந்திருந்த கா.
வாய் போகாது	–	எக்காலமும் அத்தியயனம் பண்ணப்படும்.
வாலியோன்	–	நம்பி மூத்தபிரான்.

கோவதை முதலாயின வாக்காற் சொல்லவும் படாமையின் ஆன்முலை அறுத்த என்றார்.

என்று உரை கூறுமிடங்கள் இவருடைய ஈடுபாட்டைக் காட்டும். பலவகையிலும் சிறந்த இவ்வுரை நூல் முழுமைக்கும் கிடைக்காமற் போனது வருந்தத்தக்கது. மேலும் பாட்டின் போக்கில் ஆற்றொழுக்காகவும் ஒரே தொடர்ப்படவும்அமைந்த இப்பழைய உரை, பல இடங்களில் பொருள் உணர்தற்கு இயலாததாக உள்ளது.

புறநானூற்றுக்கு ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் ஓர் உரை எழுதியுள்ளனர். பிள்ளையவர்கள் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் பணியாற்றியபோது கோபாலசாமி ரகுநாத ராசாளியார் அவர்கள் இல்லத்திருந்த ஏட்டுப்பிரதி ஒன்றின் படியினைக் கண்ணுற்ற நிலையில் புறநானூற்றின் பிற்பகுதியில் விடுபட்டிருந்த அடிகளும், வேறு சில திருத்தங்களும் காண நேர்ந்ததாகக் கூறுகின்றார். புதிய பிரதியில் கிடைக்கப்பெற்ற செய்திகளையும் கல்வெட்டுச் செய்திகளையும் துணைக்கொண்டு பிள்ளையவர்கள் புறநானூற்றுக்கு எழுதிய உரை 1947ல் வெளிவந்தது. பிள்ளையவர்களின் இவ்வுரையைப் பற்றிச் செந்தமிழ்க் காவலர் அ. சிதம்பரநாத செட்டியாரவர்கள்

Koviloor Digital Library

"இவ்விளக்கவுரையில் ஒவ்வொரு செய்யுளில் முன்னும் அதனைப் பாடிய புலவர்க்கு உரிய ஊரும் பேரும் நாடும் பிற செய்திகளும் பற்றிய வரலாற்றுக் குறிப்பும், பாடப்பட்டோரைப் பற்றிய செய்திகளும் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. பழைய உரையுள்ள பாடல்களுக்கு அப்பழைய உரையின் பொழிப்புரையினையே சிறிதும் மாற்றாது கண்ணழித்து அமைக்கப்பட்ட பதவுரையொடு சிறப்புரையும் தரப்பட்டுள்ளது. இம்முறை பழைய உரையினைப் பயில்வார்க்கு மிகவும் துணை செய்யும் என்பது உறுதி."

என்று கூறுகிறார். பிள்ளையவர்கள் தம் நுண்மாண் நுழைபுலத்தாலும் ஆராய்ச்சியாலும் புறம் பாடிய புலவர்கள் பலரின் பெயர்களைத் திருத்தம் செய்துள்ளார். கருங்குழலாதனார் என்பதைக் கருங்குளவாதனார் என்றும், தும்பி சொகினனார் என்பதைத் தும்பைச் சொகினனார் என்றும், நெடுங்கழுத்துப் பரணர் என்பதை நெடுங்களத்துப் பரணர் என்றும் மாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பாடலுக்கும் முன்னுரையாகப் பாட்டுத் தோன்றிய சூழல், புலவர் பற்றிய குறிப்பு உள்ளத்துணர்ச்சி ஆகியனவற்றை இவ்வுரை கூறுதல் நயந்து போற்றத்தக்கது.

புறநானூற்றுக்கு எளிய உரைகளும், பொழிப்புரைகளுமாயமைந்த பதிப்புகள் பலவும் வெளிவந்துள்ளன. இந்நிலையில், பழைய உரையின் திட்பநுட்பமெல்லாம் தழுவியும், அதன் பொருண்மை நலம் குன்றாமல் எளிமைப்படுத்தியும், புதிய நயங்காண் பகுதிகளை விளக்கியும், திணை துறை இயைபு காட்டியும், அமையும் ஓர் உரை இக்கால் தேவையென நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் கருதியது. அந்நிலையில் இதன் தலைமைப்பதிப்பாசிரியர்களாகப் பேராசிரியர் முனைவர் அ.மா. பரிமணம் அவர்களையும் பேராசிரியர் முனைவர் ,கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களையும் தேர்ந்து தக்க உரையாசிரியர்கள்வழி இவ்வுரை முயற்சியை மேற்கொள்ள வேண்டியது.

இந்நிலையில் புறநானூற்றின் ஒவ்வொரு பகுதியையும், அதனைப் பாடமாக நடத்தும் பணி மேற்கொண்ட அறிஞர் பெருமக்களிடம் ஒப்படைத்து உரை எழுத வேண்டினோம். அவ்வண்ணம்

Koviloor Digital Library

1	–	100	....	பேராசிரியர் வெ. சத்திய நாராயணன்
101	–	200	....	பேராசிரியர் க. திலகவதி
201	–	250	....	பேராசிரியர்கு.வெ. பாலசுப்பிரமணியன்
251	–	300	....	பேராசிரியர் வி. நாகராசன்
301	–	350	....	பேராசிரியர் அ. விசுவநாதன்
351	–	400	....	பேராசிரியர் இரா. ஆரோக்கியசாமி

என்றவாறு உரையாசிரியர்கள் பாடல்களுக்கு உரை வரைந்து தந்தனர். அறுவர் எழுதிய உரையிலும் ஓர் அமைப்பொருமை விளங்குமாறு உரை செப்பம் செய்யப்பெற்றுள்ளது. ஓரளவு தமிழறிவுள்ளவரும் அறிந்து கொள்ளும்வண்ணம் பழைய பொழிப்புரை எளிமையாக்கப்பட்டுள்ளது. பாடல் 24இன் தொடக்க அடிகளுக்கு.

"நெல்லை யரியும் பெரிய உழவர் செஞ்ஞாயிற்றினது வெயிலை வெறுப்பின் தெளிந்த கடற்றிரையின் மேலே பாயும் திண்ணிய திமிலையுடைய வலிய நுளையர் வெம்மையையுடைய மதுவையுண்டு மெல்லிய குரவைக் கூத்திற்கு ஏற்ற தாளத்தை யாரும் கடற்றுவலையாலே தழைத்த தேன்பரந்த புன்னையினது ..."

என்று அமையும் பொழிப்பினை இவ்வுரை.

"மிழலைக் கூற்றம் எனும் பகுதியை நீ வென்றாய்; அப்பகுதி நெல்லரியும் பெரும் உழவர் செம்மையான கதிரவனின் வெயிலால் வெறுப்புற்றால் தெளிந்த கடல் அலைமீது பாயக் கூடிய தன்மையது; திண்மையான படகுடைய வன்பரதவர்(மீனவர்) விரும்பத்தக்க கள்ளையுண்டு மெல்ல ஆடும் குரவைக் கூத்தின் தாளத்தை ஒத்து அசையும் இயல்புடையது. கடலின் நீர்த்திவலைகளால் செழித்த புன்னையின் தேன் நிறைந்த மெல்லிய மலர்க் கொத்துகளை ஆடவர் மாலையாகச் சூடினர்."

என்ற அமைப்பில் பொழிப்புரை கூறுகின்றது. ஒவ்வொரு பாட்டிலும் அமைந்த அருந்தொடர்களுக்கு உரிய விளக்கத்தை உரைவிளக்கம் என்னும் பகுதி காட்டுகின்றது. (எ–டு) பாட்டு 158இன் உரை விளக்கம்.)

Koviloor Digital Library

"உன் முன்னோருள் ஒருவன் கழாத்தலையார் என்ற நல்லிசைப் புலவனை இகழ்ந்ததனால் அரையம் கெட்டது. நீயும் மூவேந்தரிடத்துக்கொண்ட அச்சத்தால் பாரியின் மகளிர் என்ற அளவில் இவரை ஏற்க உடம்படாய் ஆயினை. இவ்வாறு இகழ்ந்தமையின் உன்காலத்தும் அரையம் கெடுமென்றார். உன்னைப் போலும் அறிவினன் என்பது இகழ்ச்சிக் குறிப்பு. நின்வேல் வெல்வதாக என்பது நீ வெலமாட்டாய் என்ற பொருள் தோற்றியது. . . . வேங்கை மலர்கள் பரந்த துறுகல் வேங்கையைப் போலத் தோன்றும் என்றது அஞ்ச வேண்டாததற்கு நீ அச்சம் கொள்கிறாய் என்பதுணர்த்தவாம்."

இவ்வாறு பல்வேறு குறிப்புப் பொருண்மைகளையும் இவ்வுரை புலப்படுத்தக் காணலாம். ஒவ்வொரு சொல்லின் நுட்பமும் அமைய உரை அழைந்த தன்மையை,

"பிறந்த ஊரை விளங்கச் செய்வதற்கு
மாறாக அதன் அழிவிற்கே காரண
மாயினள் என்பது அணங்கு என்ற
சொல்லால் குறிக்கப்பட்டது."

என்றமை காண்க. பழைய உரையைத் தழுவியே, அமையினும், விரிவுற விளக்கம் வேண்டுமிடங்களில் விளக்கம் தந்தும், தக்கமேற்கோள் காட்டியும், இலக்கணக் குறிப்புரைத்தும், இவ்வுரை ஐயந்திரிபு எழா வகை அமையக் காணலாம்.

கு.வெ. பாலசுப்பிரமணியன்

Koviloor Digital Library

பாடிய புலவர்கள்	-	பாடல் எண்கள்
1. பாரதம் பாடிய பெருந்தேவனார்	-	1
2. முரஞ்சியூர் முடி நாகராயர்	-	2
3. இரும்பிடர்த்தலையார்	-	3
4. பரணர்	-	4, 63, 141,144, 145
5. நரி வெரூஉத் தலையார்	-	5, 195
6. காரிக்கிழார்	-	6
7. கருங்குழலாதனார்	-	7
8. கபிலர்	-	8, 14, 105, 106, 107, 108, 109, 110, 111, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 143, 200
9. நெட்டிமையார்	-	9, 12, 15
10. ஊன்பொதி பசுங்குடையார்	-	10
11. பேய்மகள் இளவெயினி	-	11
12. முடமோசியார்	-	13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135
13. பாண்டரங்கண்ணனார்	-	16
14. குறுங்கோழியூர் கிழார்	-	17, 20, 22
15. குடபுலவியனார்	-	18, 19
16. ஐயூர் மூலங்கிழார்	-	21
17. கல்லாடனார்	-	23, 25
18. மாங்குடிகிழார்	-	24, 26
19. முதுகண்ணன் சாத்தனார்	-	27, 28, 29, 30
20. கோவூர்கிழார்	-	31, 32, 33, 41, 44, 45, 46, 47, 68, 70
21. ஆலத்தூர்கிழார்	-	34, 36, 69, 177, 178
22. வெள்ளைக்குடி நாகனார்	-	35
23. ஆவூர் மூலங்கிழார்	-	38, 166, 177, 178, 196
24. மாறோக்கத்து நப்பசலையார்	-	37, 39, 126, 174
25. இடைக்காடனார்	-	42
26. தாமப்பல் கண்ணனார்	-	43
27. பொய்கையார்	-	48, 49
28. மோசிகீரனார்	-	50, 154, 155, 156
29. ஐயூர் முடவனார்	-	51
30. மருதன் இளநாகனார்	-	52, 55, 138, 139
31. இளங்கீரனார்	-	53
32. மாடலன் மதுரைக்குமரனார்	-	54, 61, 167, 180, 197
33. காரிக்கண்ணனார்	-	57, 58, 169, 170, 171
34. சீத்தலைச்சாத்தனார்	-	59
35. உறையூர் மருத்துவன் தாமோதரனார்	-	60
36. வடம வண்ணக்கன் தாமோதரனார்	-	172
37. கழாத்தலையார்	-	62, 65
38. நெடும் பல்லியத்தனார்	-	64
39. வெள்ளிக்குயத்தியார்	-	66

Koviloor Digital Library

40.	பிசிராந்தையார்	-	67, 184, 191
41.	பூதப்பாண்டியன்	-	71
42.	தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்	-	72
43.	சோழன் நலன்கிள்ளி	-	73, 75
44.	சேரமான் கணைக்கால் இரும்பொறை	-	74
45.	இடைக்குன்றூர்கிழார்	-	76, 77, 78, 79
46.	சாத் தந்தையார்	-	80, 81, 82
47.	நக்கண்ணையார்	-	83, 84, 85
48.	காவற்பெண்டிர்	-	86
49.	ஔவையார்	-	87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 101, 102, 103, 107, 140, 187
50.	பாரி மகளிர்	-	112
51.	வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்	-	125
52.	துறையூர் ஓடைக்கிழார்	-	136
53.	ஒரு சிறைப் பெரியனார்	-	137
54.	அரிசில்கிழார்	-	146
55.	பெருங்குன்றூர்கிழார்	-	147
56.	வன்பரணர்	-	148, 149, 150, 151, 152, 153
57.	இளவெயினி	-	157
58.	பெருஞ்சித்திரனார்	-	158, 159, 160, 161, 162, 163
59.	பெருந்தலைச் சாத்தனார்	-	164, 165
60.	கருவூர்க் கதம்பிள்ளைச் சாத்தனார்	-	168
61.	குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்	-	173
62.	ஆத்திரையனார்.	-	175
63.	நன்னாகனார்	-	176
64.	வடநெடுந்தத்தனார்	-	179
65.	முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்	-	181
66.	கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி	-	182
67.	ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்	-	183
68.	தொண்டைமான் இளந்திரையன்	-	185
69.	அறிவுடை நம்பி	-	188
70.	நக்கீரனார்	-	189
71.	சோழன் நல்லுருத்திரன்	-	190
72.	கணியன் பூங்குன்றனார்	-	192
73.	ஓரேருழவர்	-	193
74.	பக்குடுக்கை நன்கண்ணியார்	-	194
75.	பேரிசாத்தனார்	-	198
76.	பெரும்பதுமனார்	-	199

Koviloor Digital Library

1

கண்ணி கார் நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பின் தாரும் கொன்றை :
ஊர்தி வால் வெள் ஏறே; சிறந்த
சீர் கெழு கொடியும் அவ் ஏறு என்ப :
கறை மிடறு அணியலும் அணிந்தன்று; அக் கறை
மறை நவில் அந்தணர் நுவலவும் படுமே :
பெண் உரு ஒரு திறன் ஆகின்று; அவ் உருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் :
பிறை நுதல் வண்ணம் ஆகின்று; அப் பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே –
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய,
நீர் அறவு அறியாக் கரகத்து,
தாழ்சடைப் பொலிந்த, அருந் தவத்தோற்கே.

கடவுள் வாழ்த்து

பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது.

துறை விளக்கம் : பாடாண்திணையின் 'அமரர் கண் முடியும் ...' (தொல். பொருள். 81) என்ற நூற்பாவிற்கு விளக்கம் அளிக்கும் நச்சினார்க்கினியர் 'தொகைகளிலும், கீழ்க்கணக்கிலும் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எல்லாம் இதன்கண் அடக்குக' என்றல் எண்ணத்தக்கது. தொகை நூல்களில் அகப்பொருள் சார்ந்த நூல்களுக்கு நூலின் புறமாகக் கடவுள் வாழ்த்து கருதப்படும்; புறநானூற்றில் நூலுள் அமைந்த பாடல்களுள் ஒன்றாகவே அமைந்தது.

உரை : இறைவன் திருமுடியில் சூடிடும் மாலை, கார்காலத்தில் மலரும் மணமிகுந்த கொன்றைப் பூவால் ஆனது;

Koviloor Digital Library

அழகிய திருமார்பில் அணிந்த மாலையும் கொன்றைப் பூவால் ஆனது; அவன் இயங்கும் ஊர்தியாக விளங்குவது தூய வெண்ணிற ஆனேறு; மிகுந்த பெருமையையுடைய கொடியாய் விளங்குவதும் அந்த ஆனேறே என்பர். விடத்தின் கரிய நிறத்தால் அவனுடைய கறைபட்ட கழுத்து அழகு பெற்றதாக விளங்கும். அந்தக் கறை, வேதத்தைப் பயிலும் அந்தணரால் போற்றிப் புகழவும் பெறும். தன்னுடலின் ஒருபாகத்தே பெண்வடிவும் கொண்டனன்; அவ்வடிவத்தைத் தனக்குள்ளே அடக்கி மறைக்கவும் செய்பவன். நிலவின் இளம்பிறை இறைவனின் திருநுதலுக்கு அழகு செய்யும். அந்தப் பிறை இறைவனால் சூடப்படுவதால் பதினெண் கணத்தாராலும் புகழப்படும்.

எல்லா உயிர்கட்கும் காவலாக விளங்குபவனும், நீர் குறைவு படாத கரகத்தையும் தாழ்ந்த சடையையும் கொண்டு விளங்குகின்றவனுமாகிய அரிய தவத்தையுடைய சிவபெருமானுக்கு இத்தோற்றம் உரியது.

உரை விளக்கம் : அருந்தவத்தோற்குக் கண்ணி, தார், ஊர்தி, கொடி, கறை மிடறு, பெண்ணுரு ஒரு திறன், பிறைநுதல் என இயைக்க. இறைவனை ஏத்தும் பதினெண் கூட்டத்தாரைப் பழைய உரை, "தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் ஆகாச வாசிகளும் போகபூமியோரும் என இவர்" என்று கூறும்.

தாரும், கொடியும் என்பவற்றில் அமைந்த உம்மைகள் முறையே கொன்றையையும் ஏற்றையும் குறிக்க எழுந்தன. எனவே நச்சினார்க்கினியர் 'இடைவந்த சொற்கள் விசேடித்து வந்தன" (தொல். எச்ச. 59) என்றார். இப்பாடலின் 'ஊர்தி வால் வெள்ளேறு' எனும் அடியையும் 'பதினெண் கணனும் ஏத்தவும் படும்' எனும் அடியையும் அடியார்க்கு நல்லார் ஒப்புமை மேற்கோளாகக் கையாண்டுள்ளார்.

Koviloor Digital Library

பெருந்தேவனார் எனும் பெயரில் புலவர் பலர் இருந்தனர் போலும். அவரினும் வேறுபடுத்த, இவர் பாடிய பாரதம் கருதி, 'பாரதம் பாடிய' எனும் அடைமொழி ஈந்தனர்.

இவர், பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் நற்றிணையில் திருமாலைப் போற்றுவதாயும் குறுந்தொகையில் முருகவேளைப் போற்றுவதாயும் ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய நூல்களில் சிவபெருமானைப் போற்றுவனவாகவும் அமைந்துள்ளன. இறைவன் ஏறூர்தல், 'ஊர்ந்தது ஏறே' என அகநானூற்றிலும் 'விடையேறியோர் தூவெண் மதிசூடி' எனப் பிற்காலச் சமயச் சான்றோர் பாடல்களிலும் வந்தமை காண்க. இறைவன் கொன்றை மாலை சூடியது, 'கொன்றையந்தார் சுவல் புரள' எனக் கலித்தொகையில் கூறப்படும். இறைவன் உமையொடு பாகனாய திறத்தை ஐங்குறுநூறு, ''நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்னும், சிவபெருமானின் பிறைநுதலும் மணிமிடறும் ஔவையாராலும் இந்நூலில் கூறப்பட்டன (91).

அருஞ்சொற்பொருள் : கண்ணி – தலைமாலை; காமர் – அழகு; கரத்தல் – மறைத்தல்; நுதல் – நெற்றி.

2

மண் திணிந்த நிலனும்,
நிலன் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்,
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல் –
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்,
வலியும், தெறலும், அளியும், உடையோய்!
நின் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்

Koviloor Digital Library

வெண் தலைப் புணரிக் குட கடற் குளிக்கும்,
யாணர் வைப்பின், நல் நாட்டுப் பொருந!
வான வரம்பனை! நீயோ, பெரும!
அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ,
நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை
ஈர் ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய,
பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,
நாஅல் வேத நெறி திரியினும்,
திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி,
நடுக்கின்றி நிலியரோ அத்தை – அடுக்கத்து,
சிறு தலை நவ்விப் பெருங் கண் மாப் பிணை,
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத் தீ விளக்கின், துஞ்சும்
பொற் கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!

திணை : *பாடாண்திணை;* **துறை :** *செவியறிவுறூஉ; வாழ்த்தியலும் ஆம்.*

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது.

திணை விளக்கம் : *பாடப்படும் ஆண்மகனின் வீரம், கொடை முதலியன கூறுவதால் பாடாண்திணை ஆகும்.*

துறை விளக்கம் : *பாடாண்திணையின் துறைகளுள் ஒன்று; பகைமையும் கெடுதலுமற்ற பெரிய எண்ணங்களை அரசனுக்கு உரைத்தல் செவியறிவுறூஉ எனப்படும். ''மறம் திரிவு இல்லா மன்பெரும் சூழ்ச்சி, அறம்தெரி கோலாற்கு அறிய உரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை இத்துறைக்குப் பொருள் கூறும். அரசனிடம் உலகங் காவன்முறையைச் சொல்லி, அவன் செவியிற் புகுத்தி அறிவித்தல் எனவும் பொருள்படும்.*

Koviloor Digital Library

இப்பாடலில், 'திரியாச் சுற்றமொடு, நடுக்கின்றி நிலியரோ' என அறிவுறுத்தியதால் செவியறிவுறூஉ ஆயிற்று.

உரை : (1 – 8) அணுக்களால் செறிந்த நிலம், நிலத்தின் கண் ஓங்கியிருக்கும் வானம், வானளவு பொருந்தித் தடவி நிற்கும் காற்று, காற்றினால் பெருகும் தீ, தீயுடன் மாறுபட்ட நீர் என்று ஐந்து வகையான பெரிய ஆற்றல்களை உடையது இயற்கை; அவ்வியற்கை போன்றே நின்னைப் போற்றாத பகைவர்தம் பிழையை நிலம் போலப் பொறுக்கின்றாய்; பகைவர் பிழை பொறுக்காத அளவாக, அவரை அழிக்கச் செய்யும் ஆராய்ச்சி வானமளவு அகன்றதாய் அமைந்தது; பகை முடிக்குமாறு நீ கொண்ட மனவலிமையும் நாற்படை வலிமையும் காற்றின் வலிமையை ஒத்தன; அவற்றால் நீ பகைவரை அழித்தல் தீயினை ஒத்தது; அப்பகைவர் நின்னை வழிபடும் காலத்து நீர் போலத் தண்மையான அருள் செய்கிறாய். இவ்வாறு ஐம்பெரும் பூதத்து இயற்கையுடன் நீ ஒப்பாக விளங்குகிறாய்.

(9 – 12) உன்கடலில் பிறந்த ஞாயிறு மீண்டும் வெண்மையான மேற்பரப்புடைய அலையையுடைய் நின் மேற்குக் கடலில் மூழ்கும்; புதுவருவாய் நிறைந்த பல ஊர்களையுடைய நல்ல நாட்டின் அரசனே! வானத்தை எல்லையாக உடையவனே! பெருமானே!

(13 – 16) அசையும் தலையாட்டத்தினையுடைய குதிரைகளுடைய பாண்டவர் ஐவர்; அவருடன் பகைத்து நாடு (நிலம்) கையகப்படுத்தியவரும் பொன்னாலாகிய தும்பைப் பூக்கள் அணிந்தவருமான நூற்றுவராகிய துரியோதனன் முதலான கௌரவர், போரில் ஈடுபட்டுக் களத்தில் அழிந்தனர்; அத்தன்மையதான போர் முடியும் வரை இருபெரும் படைகட்கும் பெருஞ்சோறாகிய உணவை நீ அளவில்லாது தந்தாய்.

Koviloor Digital Library

(20 – 24) பக்கமலையில் சிறிய தலையமைந்த குட்டிகளுடன் பெரிய கண்ணமைந்த மான் பிணைகள் தங்கும்; மாலை வேளையில் அந்தணர் செய்வதற்கரிய வேள்வியாகிய கடமையில் ஆவுதி இடுவர்; அவர்கள் ஆவுதி இடுகின்ற மூத்தீயாகிய விளக்கின் ஒளியில் மான் கூட்டம் இனிதுறங்கும். அவ்வாறு துயிலுதலமைந்த பொற்சிகரங்களையுடையன இமயமலையும் பொதிய மலையும் ஆகும்.

(16 – 20 & 24) பால் தன் இனிய சுவை கெட்டுப் புளிப்பினும் கதிரவன் ஒளிகுன்றி இருண்டிடினும் நால்வேதம் கூறிய ஒழுக்கம் மாறுபடினும் வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய அமைச்சர்கள் முதலான சுற்றத்துடன், நடுக்கின்றி நிலைத்த இமயமும் பொதியமும் போல வாழ்வாயாக.

உரை விளக்கம் : இயற்கை ஐந்து கூறுகளால் அமைந்தது என்பதை 'நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' (தொல். பொருள். மரபியல் 89) என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் அறியலாம். 'விசும்பு தைவரு வளி' என்றதால், காற்று வான் பொருந்துமன்றி வானை ஊடுருவிச் செல்லாது என்றுணர்த்தினார்; 'வளியிடை வழங்கா வானம்' (புறம். 35) எனப் பின்னரும் வருதல் அறியலாம். தீ காற்றால் செயல் மிகுவது; எனவே வளித்தலைஇய தீயும் என்றார். 'காற்றொடு எரி நிகழ்ந்தன்ன' என இவற்றின் தன்மையை உவமையாக்கினார் பிறரும் (புறம். 41). ஐம்பெரும் பூதத்தின் பண்புகளுடன் சேரலாதனின் குணங்களை ஒப்பிட்டுக் கூறினார். இயற்கையுடன் மன்னர்தம் பண்புகள் ஒப்பு நோக்கப் பெறுதலை, புறநானூற்றின் 20 ஆம் பாடலாலும் பதிற்றுப்பத்தின் 14 ஆம் பாடலாலும் அறியலாம்.

'நின் கடற் பிறந்த ஞாயிறு நின் ... குடகடல் குளிக்கும்' என்றதால் தமிழக எல்லை முழுவதும் ஆண்ட தன்மையன் என உணர்த்தினார். 'வரையாது கொடுத்தோய்; நீயோ பெரும' எனக் கூட்டுதலும் தகும்; வியப்பினால் வந்த வினா என்க.

Koviloor Digital Library

பாண்டவர் ஐவருடன் அவர்தம் நாடுகொண்ட கௌரவர் நூற்றுவரும் போரிட்டு மாய்ந்த களத்தில் இருபெரும் படையினர்க்கும் இவன் உணவிட்டான் என்பது தொன்மச் செய்தி. எனவே இவன் **'பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்'** எனப் பெற்றான். 'வரையாது கொடுத்த பெருமையன் நீயோ' என்று வியந்ததாகக் கொள்க. 'உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை' (அகம். 233) என்பதும் காண்க.

முத்தீ : ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி (தென் திசையங்கி) என்பன. இத் தீ ஒளியினுக்கு அஞ்சிப் புலி வரா. எனவே மான்கள் துயில்வனவாயின. சேரலாதனுக்கு அஞ்சிப் பகைவரும் வாரார்; குடிகள் இன்புறுவர் என்பது குறிப்பு.

மலை நடுக்கமற்றது; உயர்ந்தது; நிலைத்தது. எனவே அவ்வாறே 'வாழ்க' என வாழ்த்துதல் மரபு. இதனை 'முழு முதல் மிசைய கோடுதொறும் துவன்றும் அயிரை நெடுவரை போலத் தொலையாதாக நின் வாழும் நாள்' (பதிற். 70) என்பதாலும் அறியலாம்.

அருஞ்சொற்பொருள் : தைவருதல் – தடவுதல்; சூழ்ச்சி – ஆராய்ச்சி; தலை – இடம், பரப்பு; யாணர் – புதுவருவாய்; வைப்பு – ஊர்; பொருநன் – வீரன், (தலைவன்); நவ்வி – மான்.

3

உவவு மதி உருவின் ஓங்கல் வெண் குடை
நிலவுக் கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற,
ஏம முரசம் இழுமென முழங்க,
நேமி உய்த்த நேஎ நெஞ்சின்,
தவிரா ஈகை, கவுரியர் மருக!
செயிர் தீர் கற்பின் சேயிழை கணவ!

Koviloor Digital Library

பொன் ஓடைப் புகர் அணி நுதல்,
துன் அருந் திறல், கமழ் கடாஅத்து,
எயிறு படையாக எயிற் கதவு இடாஅ,
கயிறு பிணிக்கொண்ட கவிழ் மணி மருங்கின்,
பெருங் கை, யானை இரும் பிடர்த் தலை இருந்து,
மருந்து இல் கூற்றத்து அருந் தொழில் சாயாக்
கருங் கை ஒள் வாட் பெரும்பெயர் வழுதி!
நிலம் பெயரினும், நின் சொல் பெயரல்;
பொலங் கழற் கால், புலர் சாந்தின்
விலங்கு அகன்ற வியல் மார்ப!
ஊர் இல்ல, உயவு அரிய,
நீர் இல்ல, நீள் இடைய,
பார்வல் இருக்கை, கவி கண் நோக்கின்,
செந் தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்பு விட, வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை,
திருந்து சிறை வளை வாய்ப் பருந்து இருந்து உயவும்
உன்ன மரத்து துன் அருங் கவலை,
நின் நசை வேட்கையின் இரவலர் வருவர் – அது
முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்
இன்மை தீர்த்தல் வன்மையானே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் கருங்கை ஒள் வாட் பெரும் பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடியது.

துறை விளக்கம் : *'நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்' என அறிவுறுத்தியதால் இப்பாடலும் செவியறிவுறூஉ ஆயிற்று.*

உரை : *(1 – 6) முழுமதியின் வடிவத்தைப் போலும் விளங்குகிற உயர்ந்த வெண்கொற்றக்குடை; அது நிலைத்த கடற்பரப்பை எல்லையாக உடைய நிலத்தை, நிழல் செய்யவும், காவலாக*

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
Koviloor Digital Library
CENTRAL LIBRARY
Accession No. 63743
Date of purchases:

Call Number:

அமைந்த முரசு, 'இழும்' என்ற ஓசையுடன் முழங்கவும் ஆணைச்சக்கரத்தைச் செலுத்தியவர் பாண்டியர்; அருளுடைய நெஞ்சமும் குறையாத ஈகையும் உடையோர்; அத்தகைய பாண்டியரின் மரபில் வந்தவனே! குற்றமற்ற கற்பினையுடைய, சேயிழையின் தலைவனே!

(7 – 13) பொன்னாலாகிய பட்டத்தையும் புள்ளியையுடைய நெற்றியையும் அணுகுதற்கு அரிய வலிமையையும் மணம் வீசும் மதநீரையும் கயிற்றால் கட்டிய கவிழ்ந்த மணிகள் பொருந்திய பக்கங்களையும் பெரிய துதிக்கையையும் கொண்டதாக நின்யானை விளங்கும். அது தன் தந்தங்களாகிய கொம்புகளைப் படைக்கலமாகக் கொண்டு பகைவர் மதிலின் கதவுகளைக் குத்தும். அத்தகைய யானையின் கழுத்தின்மேல் அமர்ந்து பரிகாரமில்லாத கூற்றுவனின் பொறுத்தற்கரிய கொலைத்தொழிலிற்குச் சற்றும் குறையாதபடி வலிமையான கையில் ஒளிபொருந்திய வாளுடன் விளங்கும் பெரும்புகழுடைய வழுதியே!

(15 – 24) பொன்னாலாகிய வீரக்கழல் புனைந்த காலும், பூசப்பட்டு உலர்ந்த சந்தனத்துடன் குறுக்கே அகன்ற பரந்த மார்பும் உடையவனே! ஊரில்லாதனவாயும், பொறுத்தற்கரிய துன்பம் உடையனவாயும் நீரில்லாதனவாயும் அமைந்த நெடிய வழிகள்; அவ்வழிகளில் புதியவர்களை வருத்துதற்குத் தொலைதூரம் பார்த்தபடி இருக்கும் இருப்பையும், கையைக் கவித்தபடி கண்ணால் பார்க்கும் பார்வையையும், நல்ல அம்புகளைத் தவறாது விடும் வன்கண்மையையும் கொண்ட மறவர்களின் அம்புக்கு இலக்காகி வீழ்ந்தோர் மீது புதிதாக அமைந்த கற்குவியல் காணப்படும். அதன் மீது திருந்திய சிறகினையும், வளைந்த வாயினையும் உடைய பருந்து அமர்ந்து வருந்துவனவாகவும் உன்ன மரங்கள் வளர்ந்தனவாகவும் பிரிந்து செல்லும் வழிகள் விளங்கும்.

(25 – 27) இத்தகைய வழிகளைக் கடந்து நின்னை வேண்டும் விருப்பத்துடன் இரவலர் வருவர்; மனக்கருத்தை

Alagappa university
Central Library
63743

Koviloor Digital Library

முகக்குறிப்பாலேயே உணர்ந்து இரவலர் வறுமையைத் தீர்க்க வல்லவன் என்பதால் நின்னை இரந்து வருவர்;

எனவே, நிலம் பிறழ்ந்து பெயர நேர்ந்தாலும் நின் ஆணையாகிய சொல் தவறாது நிலைக்க வேண்டும்.

உரை விளக்கம் : இப்பாடலில் 'இரும்பிடர்த் தலை இருந்து' என்னும் தொடரால் புலவர் 'இரும்பிடர்த் தலையார்' எனப் பெயர் பெற்றார். 'மருந்து இல் கூற்றம்' என்பது கூற்றுவனின் கொலைத் தொழிலினின்று மீளவழியில்லை என உணர்த்திற்று; அவ்வாறே வழுதியின் ஆற்றலுக்குத் தப்பும் பகைவரும் இல்லை என உணர்த்தினார். வழுதியின் ஆற்றலால் அவன் புகழப் பெற்றனன்; எனவே அப்பெயராலேயே இப்பாட்டினுள்ளும் கூறப்பெற்றனன். பெரும் பெயர் : மிகப் புகழ்;

உவவுமதி – நிறைமதி; வெண் கொற்றக் குடையின் நிறத்தாலும் வடிவாலும் பெற்ற உவமையாயிற்று; 'வானுறையும் மதி போலும் ... குடை' (புறம். 20) என்பதும் காண்க. குடைநிழலான் குடிகளைத் துன்பமின்றிக் காத்தல் மன்னர்தம் கடன்; எனவேதான் ''கடன்அறி மன்னர் குடைநிழல்' (நற். 146) 'அறன் நிழல் எனக் கொண்டாய் ஆய்குடை' (கலித். 99) என அகப்பாடல்களிலும் கூறினர்.

'நிலம் பெயரினும்' என்ற உவமை நிலை திரியக்கூடாது, சொல் மறுத்தல் கூடாது எனும் கருத்துடன் ஆளப்படும் மரபினை, 'நிலம் திறம் பெயரும் காலை யாயினும் கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலை' (பதிற். 63) என்று பதிற்றுப் பத்துள்ளும் காணலாம்.

பாலை நிலத்தில் கொலைஞர் அம்பினால் வழிச் செல்வார் இறந்து படுதலை, 'கொடுவில் கானவர் கணையிடத் தொலைந்தோர் படுகளத்து உயர்த்த மயிர்த்தலை பதுக்கை' (கலித். 147) என்றதும் காண்க.

Koviloor Digital Library

உன்னம் – ஒருவகை மரம்; அது தழைத்தலும், கரிந்து நிற்றலும் சகுனங்களாகும்.

முன்னத்தின் உணர்ந்து இன்மை தீர்த்தல் : வருவோர்தம் முகக் குறிப்பை உணர்ந்து அவர்கூறுமுன் அருளுடன் வழங்குதல் வேண்டும் என்றுணர்த்தும். 'இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன் நல்லது வெஃகி வினை செய்வார்' (பரி. 10.87 – 88), 'இலன் என்னும் உரையாமை ஈதல், குலனுடையான்கண்ணே உள' (குறள். 223) என்பனவும் இப்பொருளின. முன்னம் : மனக்கருத்து.

பாண்டியர் கவுரியர் எனப் பெறுவர்; இதனை 'வென்வேல் கவுரியர்' (அகம். 70) என்பதாலும் அறிக.

அருஞ்சொற்பொருள் : உரு – நிறம்; நிழற்ற – நிழல்தர, அருள; ஏமம் – காவல்; நேமி – சக்கரம், ஆணையாகிய சக்கரம்; செயிர் – குற்றம்; எயிறு – தந்தம்; உயவு – துன்பம்; பார்வல் – பார்வை; கவலை – பிரிந்து செல்லும் வழிகள்.

4

வாள், வலம் தர, மறுப் பட்டன
செவ் வானத்து வனப்புப் போன்றன;
தாள், களம் கொள, கழல் பறைந்தன
கொல்ல் ஏற்றின் மருப்புப் போன்றன;
தோல், துவைத்து அம்பின் துளை தோன்றுவ,
நிலைக்கு ஒராஅ இலக்கம் போன்றன;
மாவே, எறி பதத்தான் இடம் காட்ட,
கறுழ் பொருத செவ் வாயான்,
எருத்து வவ்விய புலி போன்றன;
களிறு கதவு எறியா, சிவந்து, உராஅய்,
நுதி மழுங்கிய வெண் கோட்டான்,

Koviloor Digital Library

உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன;
நீயே, அலங்கு உளைப் பரீஇ இவுளிப்
பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி,
மாக் கடல் நிவந்து எழுதரும்
செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ –
அனையை ஆகன்மாறே,
தாய் இல் தூவாக் குழவி போல,
ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே.

திணை : வஞ்சி; துறை : கொற்றவள்ளை.

சோழன் உருவப் பல் தேர் இளஞ்சேட்சென்னியைப் பரணர் பாடியது.

திணை விளக்கம் : மன்னன் ஒருவன் மாற்றான் மேல் படையெடுத்துச் செல்லுதலைக் கூறுவது வஞ்சித் திணையாகும். இப்பாடலில் இளஞ் சேட் சென்னியின் படையெழுச்சி கூறியதால் வஞ்சித்திணையாயிற்று.

துறை விளக்கம் : மன்னனது புகழைக் கூறி, பகைவர் நாட்டின் அழிவிற்கு இரங்குதல் கொற்றவள்ளை; இப்பாடலில் 'தாயில் குழவி போல நின் பகைவர் நாடு ஓவாது கூஉம்' என்றதால் இப்பாடல் கொற்றவள்ளை ஆயிற்று.

உரை : (1 – 9) வாள்கள் வெற்றியைத் தருமாறு குருதிக்கறைப் படிந்தன ஆதலால் சிவந்த வானத்தின் வனப்பினைப் போன்றன; போர்க்களம் தமதாகுமாறு பெயர்ந்து சென்று போரிடுகின்ற வீரக்கழலணிந்த கால்கள் காவல் தொழிலை அறிவிப்பதால் அவை கொல்லும் இயல்புடைய ஆனேற்றின் கொம்புகளைப் போன்றன; கேடயங்கள், ஒலித்துத் தைத்த அம்புகளால் துளைபெற்றன, அவை நிலையில் தப்பாத இலக்கினைப் போன்றன. குதிரைகள் எதிரியை வீழ்த்தும் காலம் நேர்ந்தபோது இடம் வலம் என்று காட்டுவதால்

Koviloor Digital Library

முகம், சேணத்துடன் உராய்ந்து சிவந்த வாயைப் பெற்றன; ஆதலால் அவை விலங்குகளின் கழுத்தைக் கவ்விய புலி போன்றனவாயின.

(10 – 19) ஆண் யானைகள் மதிற்கதவுகளை முறித்துச் சினமுடன் திரிந்து கூர்முனை மழுங்கிய கொம்புகளை உடையனவாதலால் உயிரை உண்ணும் எமனைப் போன்றனவாயின. நீ அசையும் தலையாட்டமுடைய விரைந்தியங்கும் குதிரைகளுடன் விளங்கும் பொன்னாலான தேர்மீது பொலிவுடன் தோற்றம் கொண்டு விளங்குகிறாய்; அதனால் பெரிய கரிய கடல் நடுவே உயர்ந்து எழும் சிவந்த ஞாயிறு போல அழகுடன் தோன்றுகின்றாய். அவ்வாறு விளங்குவதால் உன்னைப் பகைத்தவர் நாடுகள் தாயில்லாததால் உணவுண்ணாமல் அழும் குழந்தை போல் ஓயாமல் விளித்து அழுவனவாயின.

உரை விளக்கம் : யானை பகைவர் மதிலைக் குத்தித் தம் தந்தங்கள் முனை மழுங்குமாறு போரிடுதலை, 'நுதி முகம் மழுகிய வெண் கோட்டு யானை' (அகம். 24) 'நுனை முரி மருப்பிற் கடாஅம் வார்ந்து கடுஞ் சினம் பொத்தி மரங் கொல் மழகளிறு' (பதிற். 16) என்பதாலும் அறிக. செஞ்ஞாயிற்றுக் கவினுடன் சேட்சென்னி உவமிக்கப்பெற்றான்; செஞ்ஞாயிறு கடலிலிருந்து எழுகையில் கதிர்கள் வெப்பம் குறைவாகத் தோன்றும்; பின் உச்சி ஏறக் கதிர்கள் வெம்மையவாய்ச் சுடும். அதுபோல, போருக்கு எழும் சென்னியின் இயல்பும் விளங்கும். போர்க்களம் செல்லச் செல்ல அவன் சீற்றம் மிக உடையனாய் விளங்குவான் என்பது குறிப்பில் உணர்த்தினார்.

வாள் கறை படிந்தமையும், யானை பூண் சிதைந்தமையும், 97ஆம் பாடலாலும் உணர்க.

தாயில்லாது அழும் குழந்தையை உவமை செய்தது. தாய்போல் தம்மைக் காப்பாரின்மையால் பகைநாடுகளில் குடிகள் வருந்தி நிற்பர் என உணர்த்துதற்காம். 'ஈன்றோள் நீத்த குழவி'

Koviloor Digital Library

'தாயில் தூவாக்குழவி' (புறம். 230, 379) 'தாயொழி குழவி போலக் கூஉம்' (மணி. 13. 11) என இவ்வுவமை பிறவிடத்தும் வந்தது.

அருஞ்சொற்பொருள் : வலம் - வெற்றி; மறு - கறை; மருப்பு - கொம்பு; கறுழ் - சேணம்; தோல் - கேடயம்; இவுளி - குதிரை; தூவா - துவ்வா, உண்ணாத.

5

எருமை அன்ன கருங் கல் இடை தோறு,
ஆனின் பரக்கும் யானைய, முன்பின்,
கானக நாடனை! நீயோ, பெரும!
நீ ஓர் ஆகலின், நின் ஒன்று மொழிவல்;
அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,
குழவி கொள்பவரின், ஓம்புமதி!
அளிதோ தானே; அதுபெறல் அருங்குரைத்தே.

திணை : பாடாண்திணை; **துறை :** செவியறிவுறூஉ; பொருண்மொழிக் காஞ்சியும் ஆம்.

சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்ட ஞான்று, நின் உடம்பு பெறுவாயாக! என, அவனைச் சென்று கண்டு, தம் உடம்பு பெற்று நின்ற நரிவெரூஉத்தலையார் பாடியது.

துறை விளக்கம் : 'குழந்தையைப் பேணுபவர்போலக் காவல் செய்க' என அறிவுறுத்தியதால் செவியறிவுறூஉ ஆயிற்று.

பொருண்மொழிக் காஞ்சியாயின் திணையைப் பொதுவியல் எனக் கொள்க. புறத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளைக்

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 63743
Date of purchases:
Call Number: 894.811E P4
Koviloor Digital Library

கூறுவதாலும் அவ்வத்திணைகளில் கூறாது ஒழிந்தவற்றைக் கூறுவதாலும் பொதுவியல் எனப் பெயர் பெற்றது.

இம்மை, மறுமைகளில் உயிர்களுக்கு உறுதி தரும் வண்ணம் முனிவர் தெளிந்த பொருளை உரைப்பது பொருண்மொழிக்காஞ்சி. 'அன்பும் அருளும் நீக்கித் தீயனசெய்து நரகம் அடைபவருடன் சேராதே' என்றதால் பொருண்மொழிக் காஞ்சி ஆயிற்று.

உரை : எருமைப் போன்ற நிறம் பொருந்திய கரிய கற்கள் அமைந்த இடங்கள் தோறும் பசுக்கூட்டம் பரந்து நிற்பது போல யானைக் கூட்டம் உடையவனே! வலிமையயுடையவனே; காட்டகத்து அமைந்த நாட்டினை உடையவனே! பெருமானே! நீ இவ்வாறு பகைவர் அணுகுதற்கும் அரிய இயல்பான பெரிய செல்வமுடையவன்; எனவே நின்னிடத்து ஒன்று கூறுவேன், கேட்பாயாக; அருளையும் அன்பையும் ஒழித்துத் தீவினை புரிதலான் நரகத்திலிருந்து நீங்காது இருக்கும் தன்மையை அடைபவர் சிலர்; அவரோடு சேராது உன்னால் காக்கப்படும் நாட்டைக் குழந்தையைப் பேணுபவர் போல நின்று பாதுகாத்திடுக; அத்தகைய காவல் அருளுடையது; அத்தகைய நிலை பெறுவதற்கும் அரியது.

உரை விளக்கம் : நீ ஓர் ஆகலின் : நீ ஒருவனே ஆனதால் என்னும் பொருளது; ஒருவனே என்பது ஈண்டு இவன் ஒருவனே ஒப்பற்ற வீரச் செல்வமுடைய முடிவேந்தன் என உணர்த்திற்று; அத்தகையவன் மனச் செருக்கால் பிழைபடாதிருக்கச் செவியறிவுறுத்தினார். அருளும் அன்பும் இல்லாதவர் நரகத்தில் இடர்ப்படுவர்; எனவே நிரயம் கொள்பவர் என்றார். குடிகளைப் பேணிப்பாதுகாக்கும் அருள் உள்ளம் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை; எனவே பெறுதற்கரியது என்றார். குடிகளைக் குழந்தையைத் தாய் பேணுமாறு காக்க வேண்டும் என்றார். முற்பாடலில் தாயில்லாது வருந்தும் குழவியைப் புலவர் ஒருவர் சான்று காட்ட இப்பாடலுள் குழந்தையைத் தாயுள்ளம் பேணுகிற தன்மையை

Koviloor Digital Library

நரிவெரூஉத் தலையார் சான்று காட்டுவார். 'குழவி கொள்வாரின் குடிபுறம் தந்து' என்பதும் (பதிற். 6 பதிகம்) இப்பொருளில் வந்த உவமை.

பசுக்கூட்டம் போல யானைக் கூட்டம் பெருக விளங்கியமையை 'ஆபரந்தன்ன செலவில் பல்யானை' (பதிற். 77) என்று பதிற்றுப்பத்தும் கூறும்.

'இரும்பொறையைக் கண்டு நீ உடம்பு பெறுவாய்' எனக் கூறக் கேட்ட நரிவெரூஉத்தலையார் அவ்வாறே அவனைக் கண்டு இழந்த தம் உடம்பினைப் பெற்று உவந்தார். அத்தகைய நிகழ்ச்சியினால் ஏற்பட்ட வியப்பாக 'நீயோ பெரும' என்பதைக் கொள்ளுதல் பொருந்தும். நரிவெரூஉத்தலையார் தம் உடலால் பெற்ற துன்பம் எது? இரும்பொறையைக் காணுமாறு கூறியவர் யார்? என்பது புலப்படவில்லை. வறுமையால் உடல் தளர்ந்து இரும்பொறையைப் பாடி நலம் பெற்றிருக்கலாம். அவ்வாறாயின் கூறியவற்றை ஆற்றுப்படுத்தும் இரவலராகக் கருதலாம். அன்பு - தன்னால் காக்கப்படுவர் மேலுள்ள காதல்; அருள் - ஒன்றின் துயர் கண்ட அளவில் காரணமின்றிப் பெருகும் இரக்கம் என்று பழைய உரை விளக்கும்.

அருஞ்சொற்பொருள் : முன்பு - வலிமை; நிரயம் - நரகம்; குழவி - குழந்தை; அளிது - இரக்கமுடையது.

6

வடாஅது பனி படு நெடு வரை வடக்கும்,
தெனாஅது உரு கெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரை பொரு தொடு கடற் குணக்கும்,
குடாஅது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது முப் புணர் அடுக்கிய முறை முதற் கட்டின்

Koviloor Digital Library

நீர் நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத்தானும், ஆனாது
உருவும் புகழும் ஆகி, விரி சீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல, ஒரு திறம்
பற்றல் இலியரோ! நின் திறம் சிறக்க!
செய் வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்து,
கடல் படை குளிப்ப மண்டி, அடர் புகர்ச்
சிறு கண் யானை செவ்விதின் ஏவி,
பாசவல் படப்பை ஆர் எயில் பல தந்து,
அவ் எயில் கொண்ட செய்வுறு நன் கலம்
பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கி,
பணியியர் அத்தை, நின் குடையே – முனிவர்
முக் கட் செல்வர் நகர் வலம் செயற்கே!
இறைஞ்சுக, பெரும! நின் சென்னி – சிறந்த
நான்மறை முனிவர் ஏந்து கை எதிரே!
வாடுக, இறைவ! நின் கண்ணி – ஒன்னார்
நாடு சுடு கமழ் புகை எறித்தலானே!
செலியர் அத்தை, நின் வெகுளி – வால் இழை
மங்கையர் துனித்த வாள் முகத்து எதிரே!
ஆங்க, வென்றி எல்லாம் வென்று அகத்து அடக்கிய
தண்டா ஈகைத் தகை மாண் குடுமி!
தண் கதிர் மதியம் போலவும், தெறு சுடர்
ஒண் கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய, பெரும! நீ நிலமிசையானே!

திணையும் துறையும் அவை; துறை வாழ்த்தியலும் ஆம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கிழார் பாடியது.

துறை விளக்கம் : ''தெரிகோல் ஞமன்ன் போல ஒரு திறம் பற்றாது இரு' எனத் துலையின் கோல் போல வாழ அறிவுறுத்தியதாலும்

Koviloor Digital Library

'குடை பணிக, தலை இறைஞ்சுக என்பனவற்றாலும் செவியறிவுறூஉ ஆயிற்று.'

மன்னனை வாழ்த்திப் பாடுகின்ற தன்மையில் அமைவது வாழ்த்தியல். இப்பாடலில் 'தண்கதிர் மதியம் போலவும் ஒண்கதிர் ஞாயிறு போலவும் நிலைத்திடு' என்று வாழ்த்துவதால் வாழ்த்தியலும் ஆயிற்று.

உரை : (1 – 8) வடதிசையில் பனிபடரும் நெடிய மலையாகிய இமயத்திற்கு வடக்கிலும், தென் திசையில் அச்சம் தரும் கன்னியாற்றிற்குத் தெற்கிலும், கிழக்குத் திசையில் சகரரால் தோண்டப் பெற்றுக் கரையை மோதும் கடலுக்குக் கிழக்கிலும் மேற்குத் திசையில் தொன்மையாய் முதிர்ச்சியுற்ற கடற்பரப்பின் மேற்கிலும், கீழுள்ள நிலம், வான், சுவர்க்கம் என்ற மூன்றும் சேர்ந்து அடுக்கிய முறையில் முதலாவதாய் அமைந்த நீர்நிலையிலிருந்து உயர்ந்து தோன்றும் நிலத்திற்குக் கீழேயும், மேல் அமைந்த கோ உலகத்திற்கு மேலேயும் விளங்குகின்ற அடங்காத அச்சமும் புகழும் உன்னுடையதாகட்டும்.

(8 – 10) பரந்த அளவுடைய பொருள்களை ஆராயும் துலாக் கோலின் சமன்கோல் போன்றே நீயும் ஒரு பக்கம் சார்ந்து நில்லாதே; நின் படை முதலிய உறுப்புகள் சிறந்து விளங்கட்டும்.

(11 – 17) போர் செய்ய எதிர்ந்த பகைவருடைய நாடுகளில் கடல் போன்ற படை, மேலும் மேலும் உட்புகுந்து செல்க; அடர்ந்த புள்ளிகளையுடைய சிறிய கண்ணுடைய யானையைத் தடையில்லாது செம்மையாக ஏவிப் பசிய விளை வயல்களையும் அரிய மதில் அரண்கள் பலவற்றையும் கொள்க. அவ்வரண்களில் கொண்ட அழகிய நல்ல அணிகலன்களைப் பரிசிலர்களுக்கு முறையுடன் வழங்குக. உன் கொற்றக் குடை, முனிவரால் வணங்கப்பெறும் முக்கட் செல்வராகிய சிவபெருமானின், திருக்கோயிலை வலம் வருவதற்குரிய வகையில் தாழ்ந்து விளங்கட்டும்.

Koviloor Digital Library

(17 – 26) பெருமானே! சிறந்த நான்கு மறை நவிலும் அந்தணர் நின்னை வாழ்த்த உயர்த்திய கைகளின் முன்னர் நின் முடி பணிந்து வணங்கட்டும். இறைவனே! நின் மாலை பகைவர்தம் நாடுகளை எரிப்பதால் பரவும் புகை வீசுவதால் வாடட்டும். வெண்மையான முத்தாரம் முதலான அணிகளை அணிந்த நின் உரிமை மகளிர் தம் ஊடல் கொண்ட, ஒளி திகழும் முகத்தின் எதிரே நின் சினம் தணியட்டும். வெற்றி பெற்று அவ்வெற்றி யாவற்றையும் வியந்து நோக்காது நின் மனத்தில் அடக்கியவனே! குறையாத ஈகையையுடைய தகுதி மாட்சிமையுடைய குடுமியே!

(27 – 29) பெருமானே! நீ இவ்வுலகின்மேல் குளிர்ந்த கதிர்களையுடைய நிலவு போலவும், சுடுகின்ற ஒளியுடைய கதிர்களுடைய கதிரவன் போலவும் நிலைத்திருப்பாயாக.

உரை விளக்கம் : நாட்டெல்லையை விடப் புகழ் பரந்து விளங்கவும், பெருவழுதியின் ஆணைக்கு அஞ்சும் அச்சம் பரந்து விளங்கவும் வாழ்த்துபவராய் இமயமலை, குமரி, கீழைக்கடல் மேலைக்கடல் ஆகிய எல்லைகட்கு அப்பாலான நிலப்பரப்பிலும்,மேலே ஆகாயம் கடந்து விளங்கும் கோ உலகத்திலும், கீழே நில உலகிற்குக் கீழுமாக எல்லை குறித்தார்.

நில எல்லையைக் குமரி – இமயம் என எல்லை கூறுதலை 'தென்குமரி வட பெருங்கல் குண குட கடலாவெல்லை' (புறம். 17; மதுரைக். 70 – 72) என்பனவற்றாலும் அறியலாம். 'பேரிசை இமயம் தென்னங் குமரியொடு ஆயிடை', (பதிற். 11), 'நெடுவரை வடதிசை எல்லை இமயமாகத் தென்னங் குமரியொடாயிடை' (பதிற். 43) என வருவனவும் ஒப்புநோக்கற்பாலன.

துலாக்கோல் போல நடுவுநிலையுடன் அறமறிந்து ஆய்ந்து கூறுதல் மன்னர் கடன்; எனவே ஒரு பாற்கோடாமை கூறினார். 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' (குறள். 118), 'ஞமன் கோலன்ன

Koviloor Digital Library

செம்மைத்தாகிச் சிறந்த கொள்கை அறங் கூறும் அவையம்' (மதுரைக். 491 – 2), 'ஐயம் தீரப் பொருளை யுணர்த்தலும் மெய்ந் நடுநிலையும் மிகு நிறை கோற்கே' (நன்னூல் – பாயிரம்) என்பனவற்றானும் நடுவுநிலைக்குத் துலாக்கோல் உவமை கூறப்பெறுதல் காணலாம்.

தொடுகடல் – என்றது தோண்டப் பெற்ற கடல் என்னும் பொருளது. 'சகரர்' என்னும் அரசன் மைந்தர் பலர் தோண்டியுருவாக்கினர் என்பது தொன்மச் செய்தி. கீழைக் கடலினும் மேலைக்கடல் பழையது என்பார் 'தொன்று முதிர் பௌவம்' என்று கூறினார்.

'நகர் வலம் செயற்குப் பணியியர் என வீடும் ஏந்துகை எதிர் இறைஞ்சுக என அறமும் புகையெறித்தலான் வாடுக எனப் பொருளும் முகத்து எதிர் தணிக என இன்பமும் கூறியவாறாயிற்று' எனப் பாட்டின் பொருளைப் பழைய உரை விளக்கும். ஞாயிறு போலவும் மதியம் போலவும் வாழ்க என வாழ்த்துதலை, புறப்பாடல் 56–ஆலும் உணரலாம்.

அருஞ்சொற்பொருள் : குணக்கு – கிழக்கு; குடக்கு – மேற்கு; நிவப்பு – உயர்ச்சி; உரு – அச்சம்; ஞமன் – துலாக்கோல்; தெவ்வர் – பகைவர்; படப்பை – விளைநிலம்; துனித்த – ஊடிய.

7

களிறு கடைஇய தாள்,
கழல் உரீஇய திருந்து அடி,
கணை பொருது கவி வண் கையால்,
கண் ஒளிர்வரூஉம் கவின் சாபத்து,
மா மறுத்த மலர் மார்பின்,
தோல் பெயரிய எறுழ் முன்பின்,

Koviloor Digital Library

எல்லையும் இரவும் எண்ணாய், பகைவர்
ஊர் சுடு விளக்கத்து அழு விளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை; ஆகலின், நல்ல
இல்ல ஆகுபவால் - இயல் தேர் வளவ!
தண் புனல் பரந்த பூசல் மண் மறுத்து
மீனின் செறுக்கும் யாணர்ப்
பயன் திகழ் வைப்பின் பிறர் அகன் தலை நாடே.

திணை : வஞ்சி; துறை : கொற்றவள்ளை; மழபுல வஞ்சியும் ஆம்.

சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

துறை விளக்கம் : "கொள்ளையை விரும்பினாய், பிறர் நாடுகள் இனி நல்லன இல்லாமற் போகும்" எனப் பகைவர் நாட்டின் அழிவிற்கு இரங்கியமையால் கொற்றவள்ளை ஆயிற்று.

பகைவர் நாட்டைக் கொள்ளை கொண்டு அவர்தம் மனைகள் பாழாக்குதலைக் கூறுதல் மழபுலவஞ்சியாகும். இப்பாடலில், 'ஊர் சுடும் விளக்கத்து அழுவிளிக் கம்பலைக் கொள்ளையை விரும்பினாய்; இனி பயன்தரும் ஊருடைய பிறர் நாடுகள் நல்லன இழக்கும்' என்றதால் மழபுலவஞ்சியும் ஆயிற்று.

உரை : (1 – 6) களிற்றினை (ஆண் யானையை)ச் செலுத்திய காலையும், வீரக்கழலால் தேயப்பெற்ற, நல்இலக்கணம் பொருந்திய அடியையும், அம்புடன் போரிட்டும் தருவதற்குக் கவிந்த வள்ளன்மை பொருந்தியும் அமைந்த கையில் கண்ணுக்குத் தோன்றும் அழகுடைய வில்லையும் பிறரை மறுத்துத் திருமகள் இருப்பதற்குரிய மலர்ந்த மார்பையும் யானையைப் பெயர்க்கும் ஆற்றலையும் உடையவனே;

Koviloor Digital Library

(7 - 10) இயற்றப்பட்ட தேருடையாய்; வளவ, பகலும் இரவும் என எண்ணாது பகைவர்தம் ஊரினைச் சுடும் தீயின் ஒளியில் தம் சுற்றத்தை அழைப்பதுடன் அழும் ஆரவாரம் மிகுந்த கொள்ளையை நீ விரும்பினாய்.

(10 - 11) குளிர்ந்த நீர் பரந்த ஓசையையுடைய உடைப்புகள் மண்ணால் அடைக்கப்பெறாமல் மீனால் அடைக்கின்றனவும் புதிய வருவாயாகிய பயனை உடைய ஊர்களையுடையனவுமான பகைவர்தம் அகன்ற இடமமைந்த நாடுகள் விளங்கும். நீ கொள்ளையை விரும்பினை யாகையால் அந்நாடுகள் இனி நல்ல பொருட்கள் இல்லாதனவாய் அமையும்.

உரை விளக்கம் : 'வளவ, நீ கொள்ளை மேவலை; அகன்தலை நாடு இல்லை ஆகுப' எனக் கூட்டுக. பிறரை மறுத்துத் திருமகள் தங்கும் மார்பினன் என்பதால் திருமால் ஒத்த சிறப்பினன் என உணர்த்தினார். மன்னர் மார்பில் திருமகள் உறைதலாகக் கூறுதலை, 'திருஞெமர் அகலம்' (பதிற். 14; 16; 40), 'திருஞெமிர் அகலம்' (சிலம்பு. 28. 169) என்பனவற்றாலும் அறியலாம். எறுழ் முன்பு : ஒரு பொருட் பன்மொழி; யானையைக் காலால் செலுத்துதல் 'களிற்றுத் தழும்பிருந்த கழல் தயங்கு திருந்தடி' (சிறுபாண். 123) என்று வந்தமையும் காண்க. திருந்து அடி என்பதைப் பிறக்கிடாத அடி என்றும் கூறுவர்.

அருஞ்சொற்பொருள் : கடைஇய - கடாவிய, செலுத்திய; உரீஇய - உராய்ந்த; சாபம் - வில்; மா - திருமகள்; தோல் - யானை; எறுழ், முன்பு - வலிமை; எல்லை - பகல்; மேவுதல் - விரும்புதல்; வைப்பு - ஊர்.

Koviloor Digital Library

8

வையம் காவலர் வழி மொழிந்து ஒழுக,
போகம் வேண்டி, பொதுச் சொல் பொறாஅது,
இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,
ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகை,
கடந்து அடு தானைச் சேரலாதனை
யாங்கனம் ஒத்தியோ? - வீங்கு செலல் மண்டிலம்!
பொழுது என வரைதி; புறக்கொடுத்து இறத்தி;
மாறி வருதி; மலை மறைந்து ஒளித்தி;
அகல் இரு விசும்பினானும்
பகல் விளங்குதியால், பல் கதிர் விரித்தே

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி; பூவை நிலையும் ஆம்.

சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : தலைவனுடைய இயல்பினைக் கூறுதலும், அவன் முன்னோர் செயல்களையும் பாராட்டிக் கூறுதலும், புனையாது இயல்புபட மொழிதலும் இப்பாடலில் 'ஒடுங்கா ... சேரலாதன்' என அவனியல்பு கூறியதால் இயன்மொழியாயிற்று.

தலைவனைத் திருமால் முதலான தேவர்களுடன் ஒப்பிட்டுப் போற்றுதல் பூவைநிலை. இப்பாடலில் கதிரவனைச் சேரலாதனுடன் ஒப்பிட்டதால் பூவைநிலையும் ஆயிற்று.

உரை : (6 - 10) விரைவாகச் செல்லும் இயல்புடைய கதிரவனே! நீ பகற்பொழுது ஒன்றனையே உனக்கு வரையறை செய்து கொள்கிறாய். நிலவு எழுங்காலத்துப் புறங்கொடுத்து ஓடுகின்றாய்; தெற்கும் வடக்குமாகிய இடங்களில் மாறி மாறி அமைவாய்; மலையினிடத்து மறைந்து வெளிப்படாது ஒளிவாய்;

Koviloor Digital Library

அகன்ற பெரிய வானத்தின்கண் பல கதிர் பரப்பியவனாயினும் பகற்பொழுதில் மட்டுமே விளங்குகின்றாய்.

(1 – 6) உலகத்தைக் காக்கும் அரசரால் வழிபட்டுப் போற்றப் பெறுபவன்; பெருஞ்செல்வமாகிய இன்பத்தை நுகர விரும்பியவன்; 'நிலம் பொதுவாய் அமைந்தது' எனும் சொற் பொறுக்காது 'தன் நாடு சிறிது' என்று விரிவுப் படுத்தும் ஊக்கமுடையவன்; சோம்பியிராத உள்ளமும் தமக்கெனப் பாதுகாவாத கொடைத் தன்மையும் உடையவன்; பகைவரை வஞ்சிக்காது எதிர்த்து நின்று போரிட்டு வெல்லும் படையையுடையவன்; இத்தகைய சேரலாதனை நீ எவ்வாறு ஒத்து விளங்குவாய்? அவனுக்கு ஒப்பாகமாட்டாய்.

உரை விளக்கம் : அரசர் பிறர் வணங்கி நிற்பதால் பேரரசன் என உணர்த்தினார். பூமி முழுதும், தானே இருந்து என்றும் ஆளும் இன்பத்தைப் போகம் என்றார். பூமி முழுதும் தானே இருந்து என்றும் ஆளாது பகற்பொழுது மட்டும் தனதாக ஆள்வதால் கதிரவன் சேரமானுக்கு ஒப்பாகவில்லை; அவன் கடந்தடு தானையன்; ஆனால் கதிரவன் மதியத்திற்குப் புறங் கொடுப்பவன். அவன் மாறாத உள்ளத்தினன்; கதிரவன் தெற்கும் வடக்குமாகிய திக்குகளில் மாறிமாறி வருபவன். அவன் மறைத்து வைக்காத ஈகையன்; கதிரவன் தன் கதிர் மறைத்து மலையிடத்து மறையும் இயல்பினன். இவ்வாறு ஒப்புமை கூறி, வேறுபட வந்த உவமையாய்ப் பாடல் செய்தார்.

இளம்பூரணர், இப்பாடற் கருத்தை 'நிலவு ஒப்பாகாது' என்று கொண்டு தன் தொல்காப்பிய உரையில் உணர்த்துவார் (தொல். 2210. 35 உரை). இடஞ்சிறிதென எண்ணுபவன் சேரமான்; மதியம் தன்னெல்லைக்கண் அன்றித் தோன்றாது; ஒடுங்கா உள்ளம் அவனுடையது; மதியம் தேய்ந்து ஒடுங்கும் இயல்பினது. ஓம்பா ஈகை அவனுடையது; நாளுக்கு ஒரு கலையென்ற அளவில் கதிர் ஒளி தருவது மதியம். கடந்தடு தானையன் சேரமான்;

Koviloor Digital Library

நிலவின் படையாகிய விண்மீன்கள் பரிதி மண்டலத்திற்குத் தோற்கும் என்று விளக்குதல் காண்க. இன்னும் விளக்கத்தை அவருரையில் காண்க. அரசர் ‘பூமி பொது’ எனப் பொறாமையை, ‘தண்டமிழ்ப் பொது எனப் பொறான்’ (புறம். 51), ‘பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்’ (கலித். 68) என்பனவற்றாலும் அறியலாம்.

அருஞ்சொற்பொருள் : போகம் – இன்பம்; துரப்ப – செலுத்த; ஓம்பா – காவாத; கடத்தல் – வெல்லுதல்; அடுதல் – கொல்லுதல்.

9

‘ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,
எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்’ என
அறத்து ஆறு நுவலும் பூட்கை, மறத்தின்,
கொல் களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும்
எம் கோ, வாழிய, குடுமி – தம் கோச்
செந் நீர்ப் பசும் பொன் வயிரியர்க்கு ஈத்த,
முந்நீர் விழவின், நெடியோன்
நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே!

திணையும் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

துறை விளக்கம் : இப்பாடலில் ‘அறத்தின் நெறியின்படி கூறும் மன உறுதியையும் வீரத்தையும் உடையவன்’ எனப் பெருவழுதியின் இயல்பு மொழிந்தமையால் இயன்மொழி ஆயிற்று.

அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 14127

Koviloor Digital Library

உரை : 'பசுவும், பசுவினியல்பை ஒத்த பார்ப்பனரும், பெண்களும், நோயுற்றவரும், இறந்து தென் திசையில் வாழும் முன்னோர்க்குச் செய்யும் அரிய சடங்குகளை மதித்துச் செய்யும் புதல்வர்களைப் பெறாதீரும் எனப் பலரும் கேட்பீராக; யாம் எம் அம்புகளை விரைவு படச் செலுத்திப் போரிட உள்ளோம்; நீவிர் யாவரும் நுமக்குப் பாதுகாப்பான இடத்தை அடையுங்கள்' என்னும் அறநெறியைக் கூறும் மன உறுதியையும் அதற்கேற்ற வீரத்தையும் கொண்டவனாய், கொல்லும் தன்மையதாகிய யானை மீது எடுக்கப்பட்ட கொடிகளால் ஆகாயத்தில் நிழலைச் செய்பவனுமாய் விளங்கும் எம்மரசன் முதுகுடுமி வாழ்வானாக; முன்னோனாகிய, சிவந்த இயல்புடைய குற்றமற்ற பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கியவனும் முந்நீராகிய கடலின் தெய்வத்துக்கு விழா எடுத்தவனுமான நெடியோனால் உண்டாக்கப் பெற்றது பஃறுளியாறு; நல்ல நீரையுடைய அந்தப் பஃறுளியாற்று மணலினும் பலகாலும் எம் மன்னன் வாழ்வானாக.

உரை விளக்கம் : 'பழந்தமிழர் பசுக்கூட்டத்தையும் பார்ப்பனரையும் பெண்டிரையும் பேணுதற்குரியராகக் கருதினர்; எனவேதான் பின்னும் ஒரு பாடலில் (புறம்.) 'ஆன்முலை அறுத்தல், பார்ப்பார்த்தப்புதல், மகளிர்க்கரு சிதைத்தல்' குற்றங்களாகக் கூறினர். எனினும் இப்பாட்டுக்கள் தமிழ – ஆரியப் பண்பாட்டுக் கலப்பிற்குப் பிந்தைய நிலையின எனக் கொள்ளுதல் தகும்.

பசு முதலாகிய பலரையும் காத்தல் அரசர்தம் கடன்; மாற்றரசாயினும் முன் அறிவிப்பு செய்து போரால் அவர் இடையூறு அடையாதிருக்குமாறு கூறினான்; இவ்வறிவிப்பால் 'அறத்தாறு நுவலும்' பெருவழுதியின் இயல்பு கூறினார். பசு முதலாகிய பலரும் போற்றப்படுதலை. 'நன்பால் பசுவே, துறந்தார், பெண்டிர், பாலர் பார்ப்பார் என்பாரை ஓம்பேன் எனின்' என வரும் சீவக சிந்தாமணியின் பாடலடிகளாலும் (சீவக. 443) உணரலாம்.

தென்புலம் வாழ்நர் : 'பித்ருக்கள்' எனப் பெறுபவர், குடியில் முன் பிறந்து இறந்தவர்; அவருக்கு நீர்க்கடன் செய்யப் பிள்ளைகள்

Koviloor Digital Library

பெறல் வேண்டும்; அவ்வாறு பெறவில்லையேல் அதுகாறும் போரினின்று விலகுமாறு வேண்டப்படுவர்.

"முந்நீர்க்கண் வடிம்பு அலம்ப நின்றான் என்ற வியப்பால் நெடியோன் என்றார் என்ப; யாற்று நீரும் ஊற்று நீரும் மழைநீரும் உடைமையால் கடற்கு முந்நீர் என்று பெயராயிற்று; அன்றி முன்னீர் என்றோதி நிலத்திற்கு முன்னாகிய நீரென்றும் உரைப்ப" என்பது பழைய உரை; இதனைச் சிலப்பதிகார உரையாசிரியார் அடியார்க்கு நல்லார் 'முச்செய்கையையுடைய நீர் முந்நீர் என்பது; முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும் மண்ணையழித்தலும், மண்ணைக் காத்தலும்' என்று கூறுதலும் எண்ணத்தக்கது; கடல் முந்நீர் எனப்பெறுதலை, புறம் 24 ஆம் பாட்டாலும் உணரலாம்.

அரசனை வாழ்த்துகையில் அவன் நாட்டெல்லைக்கு உட்பட்ட ஆற்றின் மணலினும் பலவாகிய நாட்கள் வாழ்க எனல் மரபு; இதனை இந்நூலின் 43 ஆம் பாடலாலும் உணரலாம்.

அருஞ்சொற்பொருள் : கடி – விரைவுப்பொருள் தரும் இடைச்சொல்; பூட்கை – மன ஊக்கம்; நிழற்றும் – நிழல் செய்யும்; வயிரியர் – கூத்தர்.

10

வழிபடுவோரை வல் அறிதீயே;
பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே;
நீ மெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி, அத் தக ஒறுத்தி;
வந்து, அடி பொருந்தி, முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி, நீ பண்டையின் பெரிதே –
அமிழ்து அட்டு ஆனாக் கமழ் குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசை இல் வாழ்க்கை

Koviloor Digital Library

மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத் தார் மார்ப!
செய்து இரங்கா வினை, சேண் விளங்கும் புகழ்,
நெய்தலங்கானல் நெடியோய்!
எய்த வந்தனம் யாம்; ஏத்துகம் பலவே!

திணையும் துறையும் அவை.

சோழன் நெய்தலங்கானல் இளஞ் சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

துறை விளக்கம் : இப்பாடலில் சேட்சென்னியிடம், 'வல் அறிதி; மொழி தேறாய்; தீமை காணின் ஒறுத்தி; தண்டமும் தணிதி' என அவனியல்பு கூறியதால் இப்பாட்டும் இயன்மொழி ஆயிற்று.

உரை : (1 – 6) உன்னை வழிபட்டு நிற்போரை நீ விரைவாக அறிவாய்; பிறரைக் குறை கூறுவார்தம் சொற்களில் உண்மையைத் தெளிவாய்; நீ மெய்யாகக் கண்டு, ஆராய்ந்து முடிவு செய்யப்பட்ட தீமையை ஒருவனிடம் கண்ட அளவில் அறநூல்களுக்கு ஒப்ப ஆய்ந்து அதற்குரிய தண்டனையை வழங்குவாய்; அவர்தாம் வந்து நின்னையடைந்து நின்னடி வணங்கி முன் நின்றால், அவர் தீமை புரியும் முன் அவரிடம் கொண்ட அருளினும் மிகுதியான அருளால் அவருடைய தண்டனையைக் குறைக்கவும் செய்வாய்.

(7 – 13) அமிழ்தத்தைச் சுவையால் வென்று உண்ண உண்ண அடங்காத, மணம் நிறைந்த தாளிப்பினையுடைய உணவினை வரும் விருந்தினர்க்கு அளவிறந்து அளித்து மகிழும் குற்றமற்ற வாழ்க்கையையுடையர் குல மகளிர்; அம்மகளிரால் போரிடுவதே அன்றி வீரரால் போரிட இயலாது ஒழிந்ததும், இந்திரவில்லை ஒத்த மாலையை உடையதுமான மார்பினையுடையவனே! ஒரு செயலைச் செய்தபின் 'அது தவறு செய்தனம்' என்று இரங்கிக் கூறாத திட்பமுடைய செய்கையும், வெகுதொலைவிலும் விளங்குமாறு

Koviloor Digital Library

அமைந்த புகழையும் உடையவனே! நெய்தலங்கானல் எனும் ஊரினை உடைய நெடியவனே! இத்தகைய, உன்னுடைய பல புகழைக் கூறுதற்காக யாம் உன்னை வந்தடைந்தோம்.

உரை விளக்கம் : 'வழிபடுவோரை வல் அறிதி' என்றது 'வழிபட்டு நிற்போர் தம் வேட்கையைக் கூறாதபோதும் விரைவாக உணர்ந்து அருள் செய்வாய்' என்பதுணர்த்தும். 'மெய்கண்ட தீமை' என்பதை அறநூல்களில் தீயனவாகக் குறித்த செயல் எனினும் அமையும். 'பண்டையின் பெரிது' என்பது தண்டிக்க எழும் சினத்தின் அளவினும் அருளின் அளவு பெரிதெனவும் உணர்த்திற்று.

மகளிர் எதிர்கொள்வதன்றிப் பகைவரார் எதிர் கொள்ள இயலாத வன்மையான மார்புடையவன் என்னும் கருத்து 'இளையோர்க்கு மலர்ந்த மார்பினை' (சிறுபாண். 232) 'அகலம் மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலை' (பதிற். 63) என்பனவற்றிலும் வந்தது. இவை மகளிர்க்கு மென்மையராயும் பகைவர்க்கு வன்மையராயும் இருக்கும் அரசரியல்பு உணர்த்தின. 'மகளிர் சாயல் மைந்தர்க்கு மைந்து' (புறம். 221) என்பதும் அது. 'வருநர்க்கு ... மகளிர்' என்றதால் மகளிர்தம் விருந்தோம்பும் இயல்பு கூறினார். இல்லறத் தலைவியர்தம் கடனாகத் தொல்காப்பியம் 'விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்' (தொல். கற்பு. 11) என்னும். 'நீணெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும் இற்பொலி மகடூஉ' (புறம். 331) 'அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும் மெல்லியற் குறுமகள்' (நற். 142) என்பனவற்றால் மகளிரின் விருந்து பேணும் இயல்புணரலாம்.

செய்திரங்காவினை; முன் ஒரு செயல் செய்து பின் அது செய்தமைக்கு வருந்தாதபடி செயல்புரிதல்; 'என்றென்று இரங்குவ செய்யற்க' (குறள். 655) 'செய்து பின் இரங்காவினை' (அகம். 268) என்பனவும் இப்பொருள் பயப்பன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : ஒறுத்தல் - தண்டித்தல்; ஆனா - அடங்காத; கமழ் - மணம்; குய் - தாளிப்பு; மலைத்தல் - போரிடல்; சிலை -வில், வானவில்.

11

அரி மயிர்த் திரள் முன்கை,
வால் இழை, மட மங்கையர்
வரி மணல் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக் கொய்து,
தண் பொருநைப் புனல் பாயும்,
விண் பொரு புகழ், விறல் வஞ்சி
பாடல் சான்ற விறல் வேந்தனும்மே,
வெப்பு உடைய அரண் கடந்து,
துப்பு உறுவர் புறம் பெற்றிசினே;
புறம் பெற்ற வய வேந்தன்
மறம் பாடிய பாடினியும்மே,
ஏர் உடைய விழுக் கழஞ்சின்,
சீர் உடைய இழை பெற்றிசினே;
இழை பெற்ற பாடினிக்குக்
குரல் புணர் சீர்க் கொளை வல் பாண் மகனும்மே,
என ஆங்கு,
ஒள் அழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப் பெற்றிசினே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இளவெயினி பாடியது.

துறை விளக்கம் : தான் பரிசில் வேண்டி நிற்றலை மன்னர்க்கு அறிவுறுத்தவேண்டி, 'யாவரும் பரிசில் பெற்றனர்; நான் வில்லை'

Koviloor Digital Library

என்று குறிப்பால் கூறுதல். இப்பாடலில் 'பாடினி இழை பெற்றிசின்; பாண்மகன் பூப்பெற்றிசின்' என்றதால் தான் எதுவும் பெறவில்லை என்று குறித்து, தன் பரிசில் வேட்கை தோன்றக் கூறியதால் பரிசில் கடாநிலை ஆயிற்று.

உரை : மெல்லிய மயிர்த்திரளமைந்த முன்கையையும், தூய அணிகலன்களையும் உடைய பேதைப் பெண்கள் வண்டல் மண்ணால் இழைத்த பாவைக்கு மரத்தின் வளைந்த கிளையிலுள்ள மலரைச் சூட்டுவர்; குளிர்ந்த ஆன்பொருநையின் நீரில் பாய்ந்தும் விளையாடுவர்; இத்தகைய இயல்புடைய வான் தொடும் புகழையும் வெற்றியையும் உடையது கருவூர்; இவ்விடத்தில் பாடுவதற்கமைந்த வெற்றியை உடைய அரசனும் எதிர்ந்தோர்க்கு வெம்மையான அரணை அழித்தான்; வலிமையுடன் தம்மை எதிர்த்தோர் புறம் காட்டி ஓடவும் கண்டான்; பகைவரைப் புறங்கண்ட வலிய அரசனின் வீரத்தைப் புகழ்ந்த பாடினியும் அழகும் சிறப்புமுடைய பல கழஞ்சுகளால் செய்த நல்ல அணிகலனைப் பெற்றனள். அப்பாடினிக்கு, முதல்தானமாகிய குரலில் (இசையளவு) வந்து பொருந்தும்படி பாடவல்ல பாணனும் ஒளிபொருந்திய நெருப்பினிலுண்டான பொன்னாலாகிய தாமரைப்பூவை வெள்ளி நாரில் தொடுக்கப் பெற்றனன் (யான் ஏதும் பெறவில்லையே).

உரை விளக்கம் : 'தண் பொருநை' ஓர் ஆறு; கருவூரைச் சார்ந்து செல்வது; இவ்வாற்றாங்கரை மணலில் மகளிர் பாவை செய்து விளையாடினர்; பாவைக்குச் சூட்டுதற்காகப் பூவும் கொய்தனர்; மகளிர் மணலேயன்றிப் பலவகைப் பொருட்களிலும் பாவை செய்து விளையாடுவர். ''குறுமகள் பாவை தைஇயும்' (குறுந். 276) ''பைஞ்சாய்ப் பாவை ஈன்றனன்'' (ஐங். 155) ''சாய்க் கொழுதிப்பாவை தந்தணைத்தற்கோ' (கலித். 76) என்பன மகளிர்தம் பாவை விளையாட்டு கூறும் அடிகளாகும். பாவைக்குப் பூச்சூட்டுதலை, 'திணிமணல் செய்வுறு பாவைக்குக் கொய்பூ தைஇத் தண்கயமாடும் மகளிர்' (புறம். 243) என்பதாலும் அறியலாம்.

Koviloor Digital Library

'விறல் வஞ்சி' என்றது வெற்றிச் சிறப்புடைய கருவூரைக் குறித்தது. வஞ்சிக் கொடியினின்று வேறுபடுத்த விறல் வஞ்சி என்றார். பாடினி, பாணன் பரிசில்தரப் பெற்றார் என்பதுடன் மன்னன் பகைவரை புறமுதுகிட்டு ஓடச் செய்தமையைப் 'புறம் பெற்றான்' என்னும் நயம் காண்க. குரல் – முதற் சுரம் (இசையலகு) வேந்தனும்மே – வேந்தனுமே; விரித்தல் விகாரம்; பிறவும் அவை.

பேய்மகள் என்ற பெயர்க் கொண்டு, பேய்மகள் பெண் வடிவாகப் பாடினள், என்றும் 'யாவரும் பரிசில் பெற்ற களத்தே, பகைவர் புறமுதுகிட்டதால் தன்னுணவாகிய தசைத்துண்டம் பெறாது பாடினாள் என்றும் பழைய உரை கூறும்.

அருஞ்சொற்பொருள் : அரி – மென்மை; வால் – தூய, வெண்மையான; குலவு – வளைந்த; கழஞ்சு – பொன் அளவு; கொளை – இசை.

12

பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனை தேர் பண்ணவும்,
அறனோ மற்று இது – விறல் மாண் குடுமி!
இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு,
இனிய செய்தி, நின் ஆர்வலர் முகத்தே? .

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

துறை விளக்கம் : இப்பாடலுள், 'இன்னா ஆகப் பிறர் மண்கொண்டு இனிய செய்தி ஆர்வலர் முகத்தே' என்று பெருவழுதியின் இயல்பு கூறியதால் இயன்மொழி ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : பாணர் பொன்னலாகிய தாமரைப் பூவைச் சூடினர்; புலவர் பொருந்திய பட்டமுடைய நெற்றியுடன் விளங்கும் யானையுடன் அலங்கரிக்கப்பெற்ற தேரினைச் செலுத்துமாறு அமைத்தனர்; வெற்றியால் மாட்சிமைப்பட்ட குடுமி! பகைவர் மண்ணைக் கைப்பற்றி அவர்க்கு இன்னாதவற்றைச் செய்கிறாய்; ஆனால் நின்னுடைய பரிசிலரிடம் இனியன செய்கிறாய்; இவ்வாறு செய்தல் அறமாகுமோ?

உரை விளக்கம் : பாணர்க்குப் பொற்றாமரை ஈதலும் புலவர்க்கு யானையை வழங்குதலும் அரசர்தம் கொடைத் தன்மையாம்; பாணர்க்குப் பொற்றாமரையை வழங்குதலை, ''புறப் பாடல்'' 29இலும் காண்க. யானை ஈதலை, 'பாடிவருநர்க்கு ... உவந்து நீயளித்த அண்ணல் யானை' (புறம். 130) என்பதால் அறியலாம். பகைவர்தம் மண்ணைக் கைப்பற்றி அவர்பொருட்களை இரவலர்க்கு அளிப்பதால் 'பிறர் மண் கொண்டு இனிய செய்தி' என்றார். பிறர் மண்கொண்டு இரவலர்க்கு அளித்தலை, 'புலவர் நின்நோக்கினர்; மாற்றுவேந்தர் மண் நோக்கினை' (புறம். 42), என்பதாலும் உணர்க. அறனோ என்பது அறம் தான் என்ற உறுதிப் பொருளில் வந்தது.

அருஞ்சொற்பொருள் : நுதல் – நெற்றி; மலைதல் – சூடுதல்; செய்தி – செய்கின்றாய்.

13

'இவன் யார்?' என்குவை ஆயின், இவனே
புலிநிறக் கவசம் பூம் பொறி சிதைய
எய் கணை கிழித்த பகட்டு எழில் மார்பின்,
மறலி அன்ன களிற்று மிசையோனே;
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பல் மீன் நாப்பண் திங்கள் போலவும்,

Koviloor Digital Library

சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப,
மரீஇயோர் அறியாது, மைந்து பட்டன்றே;
நோய் இலன் ஆகிப் பெயர்கதில் அம்ம!
பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்,
கொழுமீன், விளைந்த கள்ளின்,
விழு நீர் வேலி நாடு கிழவோனே.

திணை : பாடாண் திணை; துறை : வாழ்த்தியல்.

சோழன் முடித் தலைக் கோப்பெருநற்கிள்ளி கருவூரிடம் செல்வானைக் கண்டு சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறையோடு வேண்மாடத்து மேல் இருந்து, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : மன்னனை வாழ்த்தும் தன்மையில் அமைவது வாழ்த்தியல். இப்பாடலில், 'நோய் இலனாகிப் பெயர்க' என வாழ்த்துவதால் இப்பாடல் வாழ்த்தியல் ஆயிற்று.

உரை : 'இவன் யான்' என்று என்னிடம் வினவுவீராயின்;

(10 – 13) இவன்தான், வயலில் மயில் உதிர்த்த தோகைகளை உழவர்கள் அரிந்த நெற்கதிர்களுடன் சேர்த்துக் கட்டவும், கொழுத்தமீனும் மிகுந்த கள்ளும் கொண்ட மிகுதியான நீராகிய வேலியை உடையதாகவும் விளங்குகிற நாட்டிற்கு உரிமையுடையவன்;

(1 – 9) இவன்தான், புலியின் தோலால் செய்த கவசத்தில் விளங்கும் புள்ளிகள் சிதையுமாறு ஏவிய அம்புகள் பிளந்ததும் பரந்து அழகுடையதுமான மார்பினையுடையவனாய், எமனைப் போல விளங்கி ஆண் யானையின் மீது அமர்ந்தவன்; இவன் அமர்ந்த யானை கடல் நடுவே செல்லும் மரக்கலம் போலவும்

Koviloor Digital Library

விண்மீன்களிடையே செல்லும் நிலவினைப் போலவும் விளங்கும்; அது சுறாக்கூட்டம் போன்ற வாளுடைய வீரர் சூழத் தான் வரும்போது தன்னுடைய பாகரும் அறியாதபடி மதங்கொண்டது; இவன் தீதின்றிப் பெயர்வானாக;

உரை விளக்கம் : சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறையுடன் கொண்ட பகையால் கிள்ளி கருவூரிடத்திற்கு யானை மீது ஏறி, தன்படையுடன் போரிட வருகிறான்; இவன் வருகையை அரசனிருக்கும் மாடத்தில் நின்று இரும்பொறையுடன் காண்கிறார் புலவர். அப்பொழுது அவன் வருகையின் பெருமிதம் கருதி இப்பாடல் பாடினார் என்பது பாடற் குறிப்பு. தன் மன்னன் உடனிருந்தும் பகை மன்னனை வாழ்த்திய செம்மையை உணர்க.

மன்னனை வாழ்த்தப் புகுமுன் வினாவினைப் படைத்து மொழிந்து அதற்கு விடைகூறுதலாகப் பாடிப்புகழ்ந்து முடித்தல் புலவர்தம் பாடல் மரபு; இத்தன்மையை, 'இவர் யார் என்குவையாயின் இவரே ...' (புறம். 202), 'நுங்கோ யாரென வினவின் எம்கோ' (புறம். 212; பதிற். 20) என்னும் பாடல்களாலும் உணரலாம். யானைமீது எமன் ஊர்தல் போல என்ற உவமையால் இவனது சினமிகுதி கூறினார்; 'பெருங்கை யானை இரும்பிடர்த் தலையிருந்து மருந்தில் கூற்றத்து' (புறம். 3) என்பதனை இதனுடன் ஒப்பநோக்கலாம்.

மரீஇயோர் – மருவியோர்; அருகிருப்பவர். யானைக்கு அருகிருப்பவர் பாகர் என்பது உணர்த்திற்று. யானை பாகரும் அறியாது மதம்பட்டது என்பதால் யானையின் சினமிகுதியும் கூறினார். யானையை நாவாயாகவும் திங்களாகவும் கூறினார். 'நளி கடலிடுங்குட்டத்து ... கலம் போலக் களிறு சென்று' (புறம். 26) என்பதும் காண்க.

பாகரும் அவன் யானை மதம்பட்டது அறியார்; எனவே அவன் துன்பமின்றிச் செல்வானாக என்றார்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : நிறம் - தோல்; பொறி - வரி; பகட்டு - பரந்த; மறலி - கூற்றுவன்; நாப்பண் - நடுவே; மைந்து - மதம்; பீலி - தோகை; சூடு - அரிகதிர்கள்.

14

கடுங் கண்ண கொல் களிற்றால்
காப்பு உடைய எழு முருக்கி,
பொன் இயல் புனை தோட்டியால்
முன்பு துரந்து, சமம் தாங்கவும்;
பார் உடைத்த குண்டு அகழி
நீர் அழுவ நிவப்புக் குறித்து,
நிமிர் பரிய மா தாங்கவும்;
ஆவம் சேர்ந்த புறத்தை தேர் மிசைச்
சாப நோன் ஞாண் வடுக் கொள வழங்கவும்;
பரிசிலர்க்கு அருங் கலம் நல்கவும்; குரிசில்!
வலிய ஆகும், நின் தாள் தோய் தடக் கை
புலவு நாற்றத்த பைந் தடி
பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன் துவை
கறி சோறு உண்டு வருந்து தொழில் அல்லது,
பிறிது தொழில் அறியா ஆகலின், நன்றும்
மெல்லிய - பெரும! - தாமே. நல்லவர்க்கு
ஆர் அணங்கு ஆகிய மார்பின், பொருநர்க்கு
இரு நிலத்து அன்ன நோன்மை,
செரு மிகு சேஎய்! - நிற் பாடுநர் கையே.

திணை : அது; துறை : இயன்மொழி.

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் கபிலர் கைப்பற்றி, மெல்லியவாமால் நும் கை என, கபிலர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : கபிலர் தம் கையின் இயல்பு கூறுபவர்போல், அரசன் கையின் வலிய இயல்பினையும் கூறுவதால் இப்பாட்டு இயன்மொழியாயிற்று.

உரை : *(1 – 11)* தலைவ, வன்கண்மையுடைய கொல்லும் யானையால் காவலுடைய கணையமரத்தை முறித்து, இரும்பால் செய்த அழகிய அங்குசத்தால் அந்த யானையை முன்பு தூண்டிப் பின் வேண்டுமளவு நிறுத்துவன, நின் கைகள்; அவை வன்னிலத்தில் குந்தாலியால் இடித்துக் குழியாக அமைந்த நீர் நிலையின் ஆழம் கருதி, அதனிடம் செல்லாமல் விரையும் குதிரைகளைத் தடுப்பன; மேலும் அம்பறாத்தூணியை உடைய முதுகினராய்த் தேர்மேல் நின்று வில்லின் வலிய நாணின் விசையால் வடு உண்டாகும்படி அம்பு செலுத்துவன; பரிசில் வேண்டியோர்க்கும் அரிய கலங்களை நல்குவன; ஆகவே முழந்தாளைத் தொடும் நின்கைகள் வன்மையுடையனவாயின.

(16 – 19) பெண்டிரை வருத்தும் மார்பையும் போரிடுவோர்க்கு நடுக்கமுறாத பெரிய நிலம் போன்ற வலிமையையும் கொண்டவனாய்ப் போரில் முருகவேளை ஒத்துத் தோன்றுவாய்;

(12 – 16 & 19) பெருமானே! உன்னைப் புகழ்வோருடைய கைகள் புலால் மணமுடைய ப்சிய இறைச்சியைப் பூமணம் வீசும் புகையை எழுப்பிச் செய்த ஊனையும் துவையலையும் கறியையும் சோற்றையும் உண்பதன்றி வருந்தும் தொழிலாய்ப் பிறிதொன்றும் அறியா; ஆகவே அவர்தம் கைகள் மென்மையாயின.

உரை விளக்கம் : சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலரின் கையைப் பற்றியபோது அவர் கை மிக மென்மையதாய் இருத்தலைக் கூறினான்; அதற்கு மறுமொழி கூறவந்த கபிலர் தம் கையின் மென்மையுடன் அரசன் கையின் வன்மையும் கூறினார். இப்பாட்டுள் தம்மோடு தம்மை ஒத்த புலவர் இயல்பும் இணைத்துக் கூறினார்.

Koviloor Digital Library

'குரிசில், சமந்தாங்கவும் மா தாங்கவும், வடுக்கொள வழங்கவும் நின் தடக்கை வலியவாகும். நிற்பாடுநர் கை, உண்டு வருந்துதொழிலல்லது அறியா; என்றும் மெல்லிய' எனக் கூட்டுக.

நல்லவர் – ஈண்டு பெண்டிரைக் குறித்தது. பெண்டிற்தம் வருத்தம், அவர்தாம் கண்டு கூடவிரும்புவதால் பெற்ற வருத்தம் என்க. நிலத்தின் வன்மைபோல வலிய தன்மை உடையன் என்றார். இதனால் இன்பச் சிறப்பும் வீரச் சிறப்பும் கூறினார். செருமிகு சேஎய் என்பது சேய்போன்றவன் என அவாய் நிலையான் விரித்துரைக்கப்பெற்றது; முருகவேள் போரில் சினமுடன் எதிர்க்கும் இயல்பினான்; எனவே அவ்வியல்புடைய மன்னனும் சேய் எனப் பெற்றான்.

அருஞ்சொற்பொருள் : எழு – கணைய மரம், (மதிற் கதவிற்குக் குறுக்காக இடும் மரம்); தோட்டி – அங்குசம்; பார் – பாறை நிலம்; நிவப்பு – உயர்ச்சி, (ஈண்டு நீரின் உயர்ச்சி கூறியதால் ஆழம் என்க) ஆவம் – அம்புஅறாத்தூணி; புறம் – முதுகு; நோன் – வலிமை; தடி – ஊன் துண்டம்; அணங்கு – வருத்தம்.

15

கடுந் தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,
வெள் வாய்க் கழுதைப் புல் இனம் பூட்டி,
பாழ் செய்தனை, அவர் நனந் தலை நல் எயில்,
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளை வயல்,
வெள் உளைக் கலி மான் கவி குளம்பு உகளத்
தேர் வழங்கினை, நின் தெவ்வர் தேஎத்து,
துளங்கு இயலான், பணை எருத்தின்,
பாவு அடியான், செறல் நோக்கின்,
ஒளிறு மருப்பின் களிறு அவர
காப்பு உடைய கயம் படியினை,

Koviloor Digital Library

அன்ன சீற்றத்து அனையை;[1] ஆகலின்,
விளங்கு பொன் எறிந்த நலம் கிளர் பலகையொடு
நிழல் படு நெடு வேல் ஏந்தி, ஒன்னார்
ஒண் படைக் கடுந் தார் முன்பு தலைக் கொண்மார்,
நசை தர வந்தோர் நசை பிறக்கு ஒழிய,
வசை பட வாழ்ந்தோர் பலர்கொல்? புரை இல்
நல் பனுவல், நால் வேதத்து,
அருஞ் சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம் மலி ஆவுதி பொங்க, பல் மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,
யூபம் நட்ட வியன் களம் பலகொல்?
யா பலகொல்லோ? - பெரும! வார் உற்று
விசி பிணிக்கொண்ட மண் கனை முழவின்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய்! நினக்கே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

துறை விளக்கம் : *'உன்னால் வெல்லப்பட்டு இகழ்ச்சியுற்றார் பலர் கொல்? நீ வேள்வி முற்றி நட்ட தூண்கள் பல கொல்? எவையோ பல?' எனப் பெருவழுதியை வியப்பதுபோல் கூறினார் நெட்டிமையார். இதனால் போரில் வெல்லுதலும் வேள்வி வேட்டலும் அவனியல்பு என உணர்த்தினார். எனவே இப்பாட்டும் இயன்மொழியாயிற்று.*

உரை : *(22 - 25) பெரும! வாரினால் இழுத்துக் கட்டப்பெற்ற மார்ச்சனை மண் தடவிய தண்ணுமையையுடைய பாடினி; அவள் நீ படையெடுத்த தன்மையைப் பாடுவாள்; அதற்கேற்ப ஆராய்ச்சி நிறைந்த வலிமையோனே!*

Koviloor Digital Library

(1 – 11) நின் பகைவரின் நல்ல அகன்ற இடமுடைய மதில்களை தேர் விரைந்து செல்லக் குழிந்த தெருக்களில், வெண்மையான வாயுடைய கழுதையாகிய தாழ்ந்த விலங்கினம் பூட்டி உழுது பாழ் செய்தாய். நின் பகைவர்தம் நாட்டில் பறவைகள் ஆரவாரிக்கும் புகழ்நிறைந்த விளைவயல்; அங்கு வெண்மையான தலையாட்டத்தையுடைய செருக்குடைய குதிரைகளின் கவிந்த குளம்புகள் தாவுமாறு நின் தேரைச் செலுத்தினாய். அசையும் தன்மையுடன் பருத்த கழுத்தையும் பரந்த அடியையும், சினங் கொண்ட பார்வையையும் ஒளி பொருந்திய தந்தங்களையும் உடைய ஆண் யானைகள்; அவற்றைப் பகைவர்தம் காவல் நிறைந்த நீர் நிலைகளில் படியச் செய்து கலக்கினாய். அத்தகைய சினத்துக்கேற்பச் செய்யும் வன்மையும் உடையை.,

(12 – 16) விளங்கிய இரும்பால் செய்து ஆணியும் பட்டமும் இடப்பட்ட கேடயத்துடன் ஒளியுடைய நெடிய வேலையும் ஏந்திய பகைவர் ஒளிபொருந்திய படைக்கலங்களை உடைய உன் விரையும் தூசிப்படையுடன் போரிடுவர்; அப் படையின் வலிமையை அழிக்குமாறு தம் ஆவல் செலுத்த வந்த பகைவர்கள், அவ்வாவல் நீங்கி இகழ்ச்சியுடன் வாழ்பவர் ஆயினர்; அவ்வாறு உயிர் வாழ்பவர் பலரோ?

(16 – 22) குற்றமற்ற நல்ல அற நூல்களிலும் நான்குவகை வேதங்களிலும் கூறப்பெற்றனவும், அடைய அரிதாகிய புகழுடையனவும் சமிதை, பொரி முதலிய பெரும் பொருட்கள் நெய்யுடன் இடப்பெறுவனவும் புகை மேன்மேல் கிளர்வனவும் மாண்புடையனவும் ஆகிய அழியாத் தலைமையையுடைய வேள்வி பலவற்றை முடித்தனை. அவ்வாறு முடித்த வேள்விகளின் அடையாளமாகத் தூண் நடப்பெற்ற அகன்ற வேள்விச்சாலைகள் பலவோ?

இவற்றுள் யாவையோ பலவாய் ஆகுவன?

Koviloor Digital Library

உரை விளக்கம் : பாட்டுடைத் தலைவன் பெயர்க்காரணத்தை இப்பாடல் விளங்கக் கூறும். பல வேள்வி முற்றி யாகத் தூண்கள் நட்டசிறப்பால் 'இவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' எனப் பெற்றான்.

'மைந்தினோய்! நின்னால் வெல்லப்பட்டவர் பலரோ? நீ நட்ட யாகசாலைத் தூண்கள் பலவோ? இவற்றுள் யாவையோ பலவாய் ஆகுவன' என வினவுவதாய் பாடற் கருத்தை இயைத்துக் காண்க.

பகை நாடுகளை வென்று பாழ் செய்தல் வெற்றிப் படைஞர் இயல்பு; கழுதையைக் கொண்டு பாழ் மனைகளை உழுவர். விளைவயல் அழிப்பர்; நீர்த்துறைகளைக் கலக்குவர்; இடங்களை எரியூட்டுவர். இவ்வாறு விளைவயலில் குதிரைகள் புகுதலையும் கழுதைகள் கொண்டு உழுதலையும் எரித்தலையும் 'மாவாடிய புலன் நாஞ்சில் சூடா ... படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி' ... ஒள்ளழல் ஆடிய மருங்கு' (பதிற். 25) என்பதாலும் அறியலாம்.

பெருவழுதியை வெல்லும் ஆவலுடன் பகைவர் வந்தனர்; ஆனால் அவன் ஆற்றலுக்கு முன் ஆற்றாது தோற்றோடினர்; எனவே அப்பகைவர் தம் ஆசையைப் போர்க்களத்தேயே விட்டுப் புறங்கொடுத்தனர் என்று கூற 'நசை பிறக்கு ஒழிய' என்றார்.

பாடினி பாடும் வஞ்சி என்றது படையெடுத்துச் சென்ற சிறப்பைப் பாடினி பாடினள் என்பதாம். வஞ்சித் திணை என்பது படையெடுத்துச் செல்லும் இயல்பு என்பதும் எண்ணுதற்குரியது. 'மின்னிழை விறலியர் நின் மறம் பாட' என்பது (பதிற். 54) 'பாடினி பாடும் வஞ்சி' என்பதுடன் ஒப்பிடத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : ஞெள்ளல் – தெரு; நனந்தலை – அகன்ற இடம்; உகள – துள்ள; துளங்குதல் – அசைதல்; கயம் – நீர் நிலை; பலகை – கேடயம்; நிழல் – ஒளி; யூபம் – வேள்வித்தூண்.

Koviloor Digital Library

16

வினை மாட்சிய விரை புரவியொடு,
மழை உருவின தோல் பரப்பி,
முனை முருங்கத் தலைச் சென்று, அவர்
விளை வயல் கவர்பூட்டி,
மனை மரம் விறகு ஆகக்
கடி துறை நீர்க்களிறு படீஇ,
எல்லுப் பட இட்ட சுடு தீ விளக்கம்
செல் சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்ற,
புலம் கெட இறுக்கும் வரம்பு இல் தானை,
துணை வேண்டாச் செரு வென்றி,
புலவு வாள், புலர் சாந்தின்,
முருகற் சீற்றத்து, உரு கெழு குருசில்!
மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்,
பனிப் பகன்றை, கனிப் பாகல்,
கரும்பு அல்லது காடு அறியாப்
பெருந் தண் பணை பாழ் ஆக,
ஏம நல் நாடு ஒள் எரி ஊட்டினை,
நாம நல் அமர் செய்ய,
ஓராங்கு மலைந்தன, பெரும! நின் களிறே.

திணை : வஞ்சி; துறை : மழபுலவஞ்சி.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங்கண்ணனார் பாடியது.

துறை விளக்கம் : *பகைவர்மேல் படையெடுத்துச் செல்லும் திறம் பற்றிய வஞ்சித்திணையின் ஒரு துறை மழபுலவஞ்சி. இது, பகைவர் நாடு பாழாக்கப்படுவதைக் கூறும். ''வயல் கவர்ந்தும், துறையில் களிறு படிந்து அழிக்கவும் நல்நாடு ஒள்எரி ஊட்டினை' எனப் பகைவர் நாட்டைப் பெருநற்கிள்ளி பாழாக்கியமை கூறியதால் மழபுல வஞ்சியாயிற்று.*

Koviloor Digital Library

உரை : *(1 – 8)* *பெருமானே!* போர்ச் செயல் பொருந்திய அளவில் விரைவாகச் செல்லும் குதிரையுடன் மேகம் போன்ற நிறத்துடன் விளங்கும் கேடயங்களைப் பரப்பியபடி போர் முனை கலங்குமாறு படை சென்றது; பகைவர்தம் விளைந்த வயலைக் கொள்ளையிட்டது; வீடுகளை இடித்து, வீட்டில் பொருந்திய மரங்களே விறகாகத் தீ மூட்டியது. காவலமைந்த நீர்நிலைகளில் யானைகள் படிந்து கலக்கின; ஒளி உண்டாகுமாறு நாட்டில் எரிகின்ற தீயின் தோற்றம் இயங்கும் சுடராகிய ஞாயிற்றின் சிவந்த கதிர்போலத் தோன்றும்.

(9 – 12) இடம் இல்லை எனும்படி தங்கிய எல்லையற்ற பெரும் படையையும், துணைப்படை வேண்டாது போரில் கண்ட வெற்றியையும், புலால் நாற்றமுடைய வாளையும், மேனியில் பூசி உலர்ந்த சந்தனத்தையும், முருகவேள் கொள்ளும் சினத்தையும் உடையவனே! இவற்றால் அச்சம் தரவல்ல தலைவனே!

(13 – 19) ஒன்றுடன் ஒன்று கலந்த வள்ளைக் கொடியையும் மலர்ந்த ஆம்பற்கொடியையும் குளிர்ச்சியுடைய பகன்றைக் கொடியையும் பழமுடைய பாகல் கொடியையும் கொண்டதும் கரும்பு அல்லாது வேறு காட்டை அறியாததுமான பெரிய குளிர்ந்த மருதநிலம். அது பாழாகுமாறு, காவலுடைய நல்ல நாட்டை ஒளியையுடைய தீயில் எரித்தாய்; அவ்வாறு நீ, அச்சம் தரத்தக்க நல்ல போரைச் செய்தாய்; உன்னுடைய யானைகளும் நின் கருத்துடன்பட்டு, போர் செய்தன.

உரை விளக்கம் : 'விளைவயல் கவர்பூட்டி' என்றதால் வயலின் விளை கதிர்கள் கவர்ந்தனர் என்பதுணரலாம். 'கொள்ளை வல்சிக் கவர்கால் கூளியர்' என்பதும் (பதிற். 19) இப்பொருளது. பகைவர் நாட்டை எரித்தலைப் புறநானூற்றின் பல பாடல்கள் உணர்த்தும்; தீயின் ஒளி பெருகுதலை 'ஊர் சுடு விளக்கம்' எனக் கூறுதல் காணலாம் (புறம். 7) 'உடன்றோர் மன்எயில் ... அழலாடிய மருங்கின்' (பதிற். 25) என்பதும் பகைப்புலம் எரிக்கப்பெறுதல் கூறும்.

Koviloor Digital Library

முருகனைப் போன்ற சீற்றத்துடன் போரிட்டுப் பகைவர் நாடழித்தலை, 'முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்' என்பதாலும் கூறுதல் காண்க. (பதிற். 26)

அரசன் கருத்திற்கு இயைய யானைப்படைகளும் பொருதன; எனவே ஓராங்குமலைந்தன என்றார்.

அருஞ்சொற்பொருள் : மழை - மேகம்; தோல் - கேடயம், கிடுகு; முருங்க - கலங்க; எல்லு - ஒளி; பணை - மருதநிலம்; நாமம் - அச்சம்.

17

தென் குமரி, வட பெருங்கல்,
குண குட கடலா எல்லை,
குன்று, மலை, காடு, நாடு
ஒன்று பட்டு வழிமொழிய,
கொடிது கடிந்து, கோல் திருத்தி,
படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல!
குலை இறைஞ்சிய கோட் தாழை
அகல் வயல், மலை வேலி
நிலவு மணல் வியன் கானல்,
தெண் கழிமிசைத் தீப் பூவின்,
தண் தொண்டியோர் அடு பொருந!
மாப் பயம்பின் பொறை போற்றாது,
நீடு குழி அகப்பட்ட
பீடு உடைய எறுழ் முன்பின்,
கோடு முற்றிய கொல் களிறு
நிலை கலங்கக் குழி கொன்று

Koviloor Digital Library

கிளை புகலத் தலைக்கூடியாங்கு –
நீ பட்ட அரு முன்பின்
பெருந் தளர்ச்சி, பலர் உவப்ப,
பிறிது சென்று, மலர் தாயத்துப்
பலர் நாப்பண் மீக்கூறலின்
உண்டாகிய உயர் மண்ணும்
சென்று பட்ட விழுக் கலனும்
பெறல் கூடும், இவன் நெஞ்சு உறப் பெறின்' எனவும்,
'ஏந்து கொடி இறைப் புரிசை,
வீங்கு சிறை, வியல் அருப்பம்,
இழந்து வைகுதும், இனி நாம் – இவன்
உடன்று நோக்கினன், பெரிது' எனவும்,
வேற்று அரசு பணி தொடங்கு நின்
ஆற்றலொடு புகழ் ஏத்தி,
காண்கு வந்திசின், பெரும! ஈண்டிய
மழை என மருளும் பல் தோல், மலை எனத்
தேன் இறை கொள்ளும் இரும் பல் யானை,
உடலுநர் உட்க வீங்கி, கடல் என
வான் நீர்க்கு ஊக்கும் தானை, ஆனாது
கடு ஒடுங்கு எயிற்ற அரவுத் தலை பனிப்ப,
இடி என முழங்கும் முரசின்,
வரையா ஈகைக் குடவர் கோவே!

திணை : வாகை; துறை : அரசவாகை; இயன்மொழியும் ஆம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் பிணியிருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை வலிதின் போய்க்கட்டில் எய்தினானைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.

Koviloor Digital Library

திணை விளக்கம் : வாகை சூடிப் பகைவரை வென்ற நிலையில் ஆரவாரித்தல் வாகைத் திணையாகும். தம் தம் திறன்களை மிகுத்துக் கூறுதலும் இத்திணையில் அடங்கும் என்பர்.

துறை விளக்கம் : அரசனுடைய வீரம், வெற்றி முதலான இயல்புகளைக் கூறுதல் அரசவாகை ஆகும். தளர்ச்சி நீங்கிப் பின் அரசு எய்திய தன்மையைக் கூறுவதால் அரசவாகையாயிற்று.

துறை இயன்மொழியாயின் திணையைப் பாடாண் திணையாகக் கொள்க. இப்பாட்டில் 'இனிதுருண்ட சுடர்நேமி முழுதாண்டவர்தம் வழித்தோன்றலே; அவர்தம் மரபைக் காத்தவனே' என்பதால் நன்மையான செயல்களைப் பேணும் இயல்பு கூறினார். எனவே இஃது இயன்மொழியும் ஆயிற்று.

உரை : *(1 – 8)* தென் திசையில் கன்னியையும் வடதிசையில் இமயத்தையும் கிழக்கு மற்றும் மேற்குத் திசைகளில் கடற் பரப்பையும் எல்லைகளாகக் கொண்டு இவ்விடைப்பட்ட நிலம் விளங்கும். இங்கு, குன்றும் மலையும் காடும் நாடும் எனப் பல்வகை நிலப்பகுதிகள் உடையோர் பலரும் ஒருமைப்பட்டு வழிபடவும், தீயன போகவும், கோல் செங்கோலாகவும், உரிய இறைப்பொருளுண்டு நடுவுநிலையுடன் தம் சுடர் விளங்கும் ஆணைச் சக்கரத்தை இனிதாகச் செலுத்தவும் வல்லவராய் வாழ்ந்தோர் நின் முன்னோர்; அவ்வாறிருந்து மண் முழுதும் ஆண்ட அன்னவர்தம் மரபினைக் காத்தவனே!

(9 – 13) குலை தாழ்ந்து, கொள்ளுமாறு அமைந்த தென்னையையும் அகன்ற வயல்களையும் வேலியாகிய மலைகளையும் நிலவு போன்ற மணல் செறிந்த அகன்ற கடற்கரையையும் தெளிந்த கழியில் தீப்போல மலரும் பூவையும் உடையது குளிர்ந்த தொண்டி; இத்தன்மையதான ஊரினர்தம் வீரத்தலைவனே!

Koviloor Digital Library

(33 - 40) மேகக் கூட்டம் என மருளுமாறு கேடயம் பலவும், மலை என மயங்கித் தேனீக்கள் தங்கும் பெரிய யானைகள் பலவும் பகைவரை அச்சுறுத்தும் அளவு மிகுதியால், கடலெனக் கருதி மேகம் நீர் கொள்ளுமாறு அமைந்த பெரும் படையும் அடங்காத கடு நஞ்சினைப் பல்லில் அடக்கிய பாம்பின் தலை நடுங்கச் செய்யும் இடியினைப்போல முழங்கும் முரசும் உடையவனே! யாவர்க்கும் குறைவில்லாது வழங்கும் குடநாட்டார்தம் மன்னனே!

(14 - 23) பெரிய குழியின் மீது பொய்த் தோற்றம் தந்து நிலம் போல விளங்கும் பரப்பு; தன் மனதின் செருக்கால் பொறுமையைக் கொண்டிராது, அத்தகைய பொய்ப்பரப்புடைய நெடிய குழியிடத்தே சென்று யானை அகப்பட்டுக் கொள்ளும். அது பெருமையுடைய மிகுதியான வலிமையும் முற்றிய தந்தமும் கொல்லும் தன்மையும் கொண்ட பெரும் களிறு. அக்களிறு, குழியின் பக்கப்பகுதி நிலை சரியுமாறு தந்தத்தால் குத்திக் குழியைத் தூர்த்துத் தன் இனம் விரும்புமாறு தன்னினத்தைச் சேரும்.

அதுபோல, 'உன் வலிமையால் பகையைப் போற்றாது நீ தளர்ச்சி அடைந்தாய்; பின் அது நீங்கி, மற்றொரு சூழ்ச்சியால் தப்பிச் சென்று பரந்த இடமுடைய உன் உரிமைத் தேயத்தைப் பலரும் மகிழுமாறு அடைந்தாய்' எனச் சுற்றத்தார் பலர் நடுவே நீ உயர்த்திக் கூறப்படுகின்றாய்.

(24 - 33) அதனால், பாண்டியனிடம் சிறைப்படும் முன் உன்னால் அழிக்கப்பட்டுத் தம் நாட்டை இழந்து நின்வரவு நோக்கிய பகைவர், 'இவன் நெஞ்சத்தை நாம் அடைந்தால் இவன் முன் கொண்ட நாட்டையும் போயகப்பட்ட சிறந்த அணிகலன்களையும் பெறலாம் எனக் கருதி நிற்பர். நின் வரவை எதிர்பாராது நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட பகைவர் 'உயர்த்திய கொடி விளங்கும் மதிலும் மிகுதியான காடும் அகழியும் முதலான காவலுடைய அகன்ற அரண்களை நாம் இனி இழந்து இருப்போம்; ஏனெனில் இவன் நம்மை மிகவும் வெகுண்டு நோக்கினான்' என்று கருதி நிற்பர்;

Koviloor Digital Library

இவ்வாறு இருநிலையிலும் கருதிய வேற்று மன்னர்கள் பலரும் பணிந்து ஏவல்புரியும் நின் ஆற்றலையும் புகழையும் வாழ்த்தவும் காணவும் வந்தேன்.

உரை விளக்கம் : யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் நெடுஞ்செழியனும் போரிட்டனர்; போரின் முடிவில் இரும்பொறையைச் செழியன் சிறையில் பிணித்தான்; அங்கிருந்து தப்பித் தன் அரசுக் கட்டில் ஏறிய தன்மையை இப்பாட்டுள் குறுங்கோழியூர் கிழார் குறிப்பிடுகின்றனர்.

குன்று, மலை, காடு, நாடு வழி மொழிய என்பது ஆங்குள்ள மன்னர் வழிபட என்று பொருள் தந்தது. முழுதாண்டோர் வழி காவல என்றதால் முன்னோர் மரபைக் காத்தவன் என்றார். மரபைக் காத்தல் என்பது, தானும் முன்னோர்போல மன்னர் வழிபட்டும் கொடிது கடிந்தும் கோல், திருத்தியும் படுவதுண்டும் நடுவு நிலையுடன் இருந்தும் ஆணை செலுத்தினான் என்பது குறித்தது. மன்னர் ஏவல்கேட்டிருத்தலை, மதுரைக்காஞ்சியிலும் (70 – 72) காணலாம்.

'படுவதுண்டு' என்பதற்குப் பழைய உரை, ''ஆறில் ஒன்றாகிய இறையை உண்டு' எனப் பொருள் தரும். ஆறாவன : பொருளை ஆறாகப் பகுத்து, தெய்வத்திற்குரியது, தென்புலத்தாராகிய முன்னோர்க்குரியது, விருந்தினர்க்குரியது, சுற்றத்தார்க்குரியது, தமக்குரியது, அரசர்க்குரிய இறை ஆவது என ஆறாம். எனவே ஆறில் ஒன்றாகிய இறை என்றார்.

நிலை கலங்க என்றமையை மனச் செருக்குற்ற நிலை கலங்க எனக் கொள்ளுதலும் பொருந்தும். மீக்கூறுதல் : உயர்த்திப்பேசுதல்.

பாசறை கடல்அளவு பரந்தது என்று உவமிக்கப்பெறுதலை, ''படுநீர்ப் புணரியின் பரந்தபாடி' (முல்லை. 28), ''கடல் மருள் பாசறை'' (புறம். 294), ''கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்'' (புறம். 295) என்பதாலும் அறியலாம். 'கடல் போல் தானை' (பதிற். 69) என்பதும் அது.

Koviloor Digital Library

இடிக்குப் பாம்பு அஞ்சுதல், புறநானூற்றின் 37, 58, 126, 211, 366 ஆகிய பாடல்களிலும் தொகை நூல் பிறவற்றிலும் கூறப்பட்டுள்ளமை காண்க.

முரசின் ஒலி இடியோசை போன்றது என்பது, "உருமு உறழ்பு இரங்கும் முரசு" (பதிற். 25) என்பதால் அறியலாம்.

அருஞ்சொற்பொருள் : பகல் – நடுவுநிலை; தாழை – தென்னை; பயம்பு – குழி; எறுழ், முன்பு – (ஒருபொருட் பன்மொழி) வலிமை; தாயம் – உரிமை; நாப்பண் – நடுவே; அருப்பம் – அரண்; உட்க – அஞ்ச; ஊக்கும் – முகக்கும்; அரவு – பாம்பு.

18

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியல் ஞாலம்
தாளின் தந்து, தம் புகழ் நிறீஇ,
ஒரு தாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்று பத்து அடுக்கிய கோடி கடை இரீஇய
பெருமைத்தாக, நின் ஆயுள்தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
பூக் கதூஉம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி;
வான் உட்கும் வடி நீள் மதில்;
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள் வலி முருக்கி,
ஒரு நீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல் இசை நிறுத்தல் வேண்டினும், மற்று அதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!

Koviloor Digital Library

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே;
வித்தி வான் நோக்கும் புன் புலம் கண் அகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே;
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே.

திணை : பொதுவியல்; **துறை :** முதுமொழிக்காஞ்சி.

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது.

திணை விளக்கம் : வெட்சி முதலாகப் பாடாண் ஈறாக அமையும் புறத்திணைகளில் கூறப்பெறாதனவும் அவற்றிற்குப் பொதுவாகியனவுமான செய்திகளைக் கொண்டது பொதுவியல்.

துறை விளக்கம் : அறம், பொருள், இன்பம் என்பவற்றின் தன்மையைக் குற்றமில்லாது, அறிவுடையோர் அரசனுக்குக் கூறுதல் முதுமொழிக் காஞ்சியாகும். இப்பாடலில், அறம் முதலிய மூன்றும் நீர்வளத்திற்கேற்பவே நிலைக்கும் எனக் குறித்தமையால் இப்பாட்டு முதுமொழிக் காஞ்சியாயிற்று.

உரை : (1 – 12) முழங்கும் கடல் முழுதும் வளைத்த பரந்தகன்ற உலகத்தைத் தம் முயற்சியால் கொண்டு, தம்புகழை உலகில் நிலைக்கச் செய்து தாமே ஆண்ட வலியோர் மரபில் வந்தவனே! ஒன்றைப் பத்தின் மடங்குகளாக அடுக்கிய, கோடியைக் கடை

Koviloor Digital Library

எண்ணாக இருத்திய பேரெண்ணிக்கையை நின் வாழ்நாள் கொண்ட பெருமையை அடையட்டும்.

நீரில் படியுமாறு தாழ்ந்த குறுகிய காஞ்சி மரத்தின் மலர்களைக் கவ்வும் வாளை இன மீன்களையும் சிறிய ஆரல் மீன்களையும் பருத்தவரால் மீன்களையும் நிறம் பொருந்திய கெடிற்று மீன்களையும் கொண்டது ஆழமான அகழி; அதனுடன் வானம் அஞ்சுமாறு உயர்ந்த சீரிய நெடிய மதிலையும் கொண்ட வளமுடைய பழைய ஊரினைக் கொண்டு விளங்கும் வலிமையான அரசனே!

(13 – 17) நீ செல்கின்ற உலகத்தில் நுகரத்தக்க செல்வத்தை வேண்டினாலும் உலகை ஆளும் அரசர் பலருடைய தோள் வலிமையை அழித்து நீ ஒருவனே ஆள விரும்பினாலும் நல்ல, சிறந்த புகழை இவ்வுலகில் நிலை நிறுத்த விரும்பினாலும் அவ்விருப்பங்களுக்குத் தக்க செயல் ஒன்றனைக் கூறுவேன் இனி; பெருமையை உடையவனே! கேட்பாயாக;

(18 – 30) வெல்லும் போருடைய செழிய! நீரின்றி அமையாத உடல், உணவால் அமைவது; உணவையே முதன்மையாகவும் உடையது; உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர். எனவே உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் கூட்டிப் படைத்தவர் ஆவர்.

விதைகளை விதைத்து மழையை நோக்கும் புல்லிய புன்செய் நிலம் அகன்ற இடமுடைய நிலமாயினும் அதனைச் சார்ந்து ஆளும் அரசனின் முயற்சிக்குச் சிறிதும் உதவாது. அதனால் நான் கூறிய மொழிகளை இகழாது விரைவாகக் கடைபிடிப்பாயாக; நிலம் குழிந்த இடங்கள் தோறும் நீர்நிலை பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்துடன் நீரைக் கட்டியோர் (முற்கூறிய செல்வம் முதலான மூன்றும் பெறுவதுடன்) இவ்வுலகில் நிலைக்குமாறு

Koviloor Digital Library

தன்பெயரை உலகுள்ளவரை நிறுத்திய புகழை அடைவர்; அவ்வாறு செய்யாதவர் இவ்வுலகினோடு தம் பெயரைச் சேர்த்த புகழை அடையார்.

உரை விளக்கம் : நீர்வளம் மிகுதியாதலே நாட்டிற்குத் தேவையான ஒன்று; அது எல்லா நலங்களையும் தரும் எனும் கருத்தில் பாடினார் புலவர். 'ஒன்று ... கோடி கடை இரீஇய' என்றதால் வாழ்நாட்களின் எண்ணிக்கை மிகுதியைக் கூறினார். கோடி கடை இரீஇய என்பது கோடி எனும் எண்ணிக்கையை இறுதியில் இருத்திய எனும் பொருள் தரும். பழைய உரை சங்கு முதலாகிய பேரெண்களைச் சுட்டிய நுட்பத்தையும் காண்க. எண்ணிக்கை மிகுதியாக வாழ்நாள் பெறுக என வாழ்த்துதலை, 'நின் நாள் திங்கள் அனைய ஆக; திங்கள் யாண்டு ஓரனைய ஆக; யாண்டே ஊழி அனைய ஆக; ஊழி வெள்ளவரம்பின ஆக' (பதிற். 90) என்பதாலும் அறியலாம் (வெள்ளம் – பேரெண்).

வான்உட்கும் என்றதால் மதிலின் உயர்ச்சி கூறினார் 'வான்உற ஓங்கிய வளைந்துசெய் புரிசை' என்பதும் அது (பதிற். 53).

வாளை நீர் நிலையிலிருந்து எழுந்து துள்ளி, அருகிருக்கும் மரங்களின் பூ முதலிய பொருட்களைத் தீண்டுதல் தொகை நூல் பலவும் சுட்டின; சான்றாக 'விளைந்துகு தீம்பழம் பழனவாளை கதூஉம்' (குறுந்.) என்பதனைச் சுட்டலாம்.

உடல் உயிர் வளர்க்க உணவைக் கொள்ளும்; எனவே உயிராக உணவைக் கூறினார்; உடல் உணவால் அமைவது எனும் கருத்தில் 'உணவின் பிண்டம்' என்று கூறப்பெற்றது. நீரும் நிலனும் முறையே உடலும் உயிரும் போன்றது. எனவே இவ்விரண்டும் படைத்தோர் அறம் முதலிய மூன்றும் படைத்தோர் ஒத்த சிறப்பினர் என்றார். நீர் இன்றியமையாதது என்பது 'நீரின்றியமையா உலகு' (குறள். 20) என வள்ளுவத்திலும் வந்தது. உணவு உயிராகக் கூறப் பெறுதல்லை 'மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி

Koviloor Digital Library

கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (மணி. 11.95–6) என மணிமேகலையாலும் அறியலாம்.

நிலம் உயிர் எனப் பெற்றது ஏனெனில் உயிராகிய உணவு தருதலால் என்க. நீர் உடல் எனப்பெற்றது நிலத்தின் தன்மைக்கேற்ப இயங்குதலும் தன்மைபெறுதலும் எனச் சார்ந்து இருப்பதால் என்க. நீர்வளம் இன்றேல் செய் நன்செய் எனப்பெறாது; நெல் விளையாது; அதனால் வறட்சியுற்றுப் பஞ்சம் நேரும்; அவ்வழி அரசரைப் பழிக்கும் உலகு, எனவே 'வித்தி ... இறைவன் தாட்கு உதவாது' என்றார்.

அருஞ்சொற்பொருள் : *தாள் – முயற்சி; உம்பல் – தலைவன்; கதூஉம் – கவரும்; குரூஉ – நிறம்; தட்டோர் – பிணித்தோர்; தள்ளாதோர் – பிணிக்காதோர்.*

19

இமிழ் கடல் வளைஇய ஈண்டு அகன் கிடக்கை,
தமிழ் தலைமயங்கிய தலையாலங்கானத்து,
மன் உயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும்,
நின்னொடு தூக்கிய வென் வேற் செழிய!
'இரும் புலி வேட்டுவன் பொறி அறிந்து மாட்டிய
பெருங் கல் அடாரும் போன்ம்' என விரும்பி,
முயங்கினேன் அல்லனோ, யானே – மயங்கிக்
குன்றத்து இறுத்த குரீஇ இனம் போல,
அம்பு சென்று இறுத்த அரும் புண் யானைத்
தூம்புடைத் தடக் கை வாயொடு துமிந்து,
நாஞ்சில் ஒப்ப, நிலம் மிசைப் புரள,
எறிந்து களம் படுத்த ஏந்து வாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோர், எம் புன் தலைப் புதல்வர்;
'இன்ன விறலும் உளகொல், நமக்கு? என,

Koviloor Digital Library

மூதிற் பெண்டிர் கசிந்து அழ, நாணி,
கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை,
எழுவர் நல் வலம் கடந்தோய்! நின்
கழூஉ விளங்கு ஆரம் கவைஇய மார்பே!

திணை : வாகை; துறை : அரசவாகை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'மன் உயிர்ப் பன்மையும், கூற்றுவனின் இயல்பு ஒன்றனையும் தன்னுடன் ஒப்பிடச் செய்த வேலுடையான், எழுவரின் வீரமும் வலிமையும் அடக்கினான்' எனச் செழியனின் இயல்பு கூறியதால் அரசவாகை ஆயிற்று.

உரை : (1 – 4) முழங்கும் கடல் சூழ்ந்த மண்செறிந்த, அகன்ற உலகில் தமிழரசர் பலரும் கூடிய படையுடன் மாறுபட்டுத் தலையாலங்கானத்தில் போரிட்டாய்; அங்கு நிலைத்த உயிர்கள் பலவற்றையும் அவ்வுயிர்களைக் கவரும் கூற்றுவனின் தன்மை ஒன்றனையும் உன்னுடன் ஒப்ப நோக்குமாறு செய்தது நின்வேல்; இத்தகைய வெற்றிதரும் வேலையுடைய செழியனே!

(7 – 17) அச்சத்தால் கலங்கி மலையில் தங்கிய குருவிக் கூட்டம் போல் யானையின் மீது அம்புகள் சென்று தாக்கின. அம்பு பட்ட புண்ணினால் வருந்தும் யானையின் துளையமைந்த பெரிய துதிக்கை, அதன் வாயுடன் வெட்டுப்பட்டு வீழ்ந்தது. துதிக்கை, ஏர்க் கலப்பையைப் போல நிலம் மீது புரளுமாறு வீழ்த்துயர்த்திய வாளினால் வெற்றியையுடைய வீரர்கள்; அவர்கள் எம் தலைவனுடன் போர்க்களத்தில் கிடந்தவரும் மெல்லிய தலைகளை யுடையவருமான எம் புதல்வர்கள் ஆவர்; அவர்களைக் கண்ட தொன்மையான மறக்குடி மகளிர், ''நமக்கு இத்தகைய வெற்றியும் உண்டோ'' என்று மகிழ்ச்சியால் நெகிழ்ந்து, அழுதனர்; கூற்றுவன், மகளிரின் நெகிழ்ச்சியால் நாணுமாறும் அழுகையால்

Koviloor Digital Library

இரங்குமாறும் விளங்கிய, அச்சம் விளைக்கின்ற போர்க்களம்; அங்கு அரசர் எழுவரின் நல்ல வலிமையைச் சிதைத்தவனே!

(18 & 5 – 7) கழுவிய தூய முத்துக்களால் அமைந்த ஆரம் தழுவிய மார்பு நின்னுடையது; அதனை, ''பெரிய புலி வேட்டைக்குச் செல்லும் வேட்டுவன், எந்திரத்தின் தன்மையறிந்து பொருத்திய பெரிய கல்லையுடைய அடார் போன்றது'' என்று விருப்பத்துடன் நான் நின்னைத் தழுவினேன், அல்லனோ?

உரை விளக்கம் : தன்னை இளையன் எனக் கருதிப் போரிட்ட எழுவரைத் தலையாலங்கானத்தில் வென்றான் நெடுஞ்செழியன். இவ்வெற்றி இந்நூலுள் பின்னரும் கூறுதல் காண்க.

'தமிழ் தலை மயங்கிய' என்றது தமிழ்மன்னர்தம் படைகள் ஒன்று கூடிப் போரிட்ட எனும் பொருளது. 'கொண்டி மிகைபடத் தண்டமிழ்ச் செறித்து' என்ற அடியிலும் (பதிற். 63) தமிழப் படைகளின் தொகுதி 'தமிழ்' என்று கூறப்பெற்றது. பலரை வென்ற சிறப்பாலும், தான் ஒருவனாகிய சிறப்பாலும் கூற்றுவனுடன் ஒப்பிட்டார்.

அடார் : புலியகப்படுத்தும் எந்திரம். இது கற் பலகைகளைக் கொண்டு அமைக்கப்படுவது.

தம் இல்லத்து ஆடவர் இறந்தமைக்கு மூதிற் பெண்டிர் தம் குடிப் பெருமையால் உளம் நெகிழ்ந்தனர்; மனம் பூரித்து அழுதனர்; மூதிற்பெண்டிர் இறப்பிற்குக் கசிந்தழுதலால் கண்ணோடியவனாய்க் கூற்றுவன் சென்றான். பழைய உரை ''அம்பு தைத்த யானையை வெட்டிப் படுத்தல் மறத்திற்கு இழிபு'' என்று பெண்டிர் இரங்கி அழுதலின் கூற்றுக் கண்டு நாணிக் கண்ணோடியது என்று குறிப்பிடும் நயமும் காண்க.

Koviloor Digital Library

போர் முடிந்ததால் அகன்ற கூற்றுவனை மகளிர் கசிந்தழக் கண்ணோடிச் சென்றதாகக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணியாகும். கூற்றுவன் கண்ணோடுதலாகக் கூறுதலை, 'கூற்றுக் கண்ணோட வரிந்து களங் கண்டோர்' (சிலம்பு. 27.40) என்பதாலும் உணரலாம். பெரிய வெற்றியாதலான் புலவர் உவந்து தழுவினார் என்க.

அருஞ்சொற்பொருள் : இமிழ் – முழங்கும்; கிடக்கை – உலகம்; குரீஇ – குருவி; தூம்பு – உள்துளை; நாஞ்சில் – கலப்பை; விறல் – வெற்றி; கவைஇய – தழுவிய.

20

இரு முந்நீர்க் குட்டமும்,
வியல் ஞாலத்து அகலமும்,
வளி வழங்கு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை,
அறிவும், ஈரமும், பெருங் கண்ணோட்டமும்;
சோறு படுக்கும் தீயொடு
செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிது தெறல் அறியார், நின் நிழல் வாழ்வோரே;
திருவில் அல்லது கொலை வில் அறியார்;
நாஞ்சில் அல்லது படையும் அறியார்;
திறன் அறி வயவரொடு தெவ்வர் தேய, அப்
பிறர் மண் உண்ணும் செம்மல்! நின் நாட்டு
வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது,
பகைவர் உண்ணா அரு மண்ணினையே;
அம்பு துஞ்சும் கடி அரணால்
அறம் துஞ்சும் செங்கோலையே;
புதுப் புள் வரினும், பழம் புள் போகினும்,

Koviloor Digital Library

விதுப்புறவு அறியா ஏமக் காப்பினை;
அனையை ஆகன்மாறே,
மன் உயிர் எல்லாம் நின் அஞ்சும்மே.

திணையும் துறையும் அவை.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : 'அளத்தற்கு அரியை; செங்கோலை உடையாய்; ஏமக்காப்புடையாய்' என இரும்பொறையின் இயல்பு கூறியமையால் அரசவாகையாயிற்று.

உரை : (1 – 5) பெரிய கடலின் ஆழமும், அகன்ற உலகத்தின் பரப்பும் காற்று வீசும் திசைகளும், எந்தப் பற்றுக் கோடுமின்றி நிலைபெற்ற ஆகாயமும் என்னும் இவற்றை அளந்து அறிந்து ஆய்ந்து கூறினாலும் கூறலாம்; அறிவும் அருளும் பெரிய அன்புடைய கண்ணோட்டமும் கொண்ட நீ, ஆய்ந்து அறிந்து கூறுவதற்கு அரியவன்.

(6 – 17) நின்னிழல் வாழும் குடிமக்கள் உணவு சமைக்கும் தீயுடன் செஞ்ஞாயிற்றின் வெம்மையை மட்டும் அறிவர்; அவை அல்லாது வருத்தும் பிற வெம்மையை அறியார். வானவில்லாகிய திருவில் அன்றிக்கொலை செய்யும் வில்லினை அறியார்; உழுபடைக் கருவியாகிய கலப்பை அல்லாது கொலைப்படை ஒன்றனையும் அறியார்; போராற்றல் அறிந்த வீரருடன், பகைவர் அழிய, அவர்தம் மண்ணைக் கொண்டு, உண்ணும் தலைவனே! உன்னாட்டில், கருவுற்று வேட்கைநோய் பிணித்த மகளிர் விரும்பி உண்பது அல்லாமல் பகைவரால் உண்ணப்படாத பெறுதற்கரிய மண்ணை உடையவனே! அம்புகள் தங்கிய காவலையுடைய மதிலுடன் அறம் நிலைத்த செங்கோலையும் உடையவனே!

Koviloor Digital Library

(18 – 21) புதிய பறவை வந்தாலும், பழைய பறவை அவ்விடம் விட்டு அகன்றாலும், அத்தகைய தீய குறிகளால் மன நடுக்கமுறாத காவலையுடையவனே! இத்தகைய இயல்பை நீ உடையவனாகையாலே உலகில் நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் தம்மால் உனக்குத் துன்பம் வருமோ என அஞ்சுகின்றன.

உரை விளக்கம் : அளத்தற்கரிய இயற்கைப் பொருட்களைத் தலைவர்தம் குணங்களுக்கு உவமை கூறி, இயற்கையை அளப்பினும் குணங்களை அளத்தல் அரிது என முடித்துக் கூறுதல் புலவர்தம் பாடல் மரபு. இந்நூலின் 30 ஆம் பாடலில் 'சென்றளந்து அறிந்தார் போல' என்றதும் இயற்கை அளப்பரியது என்பதையே உணர்த்தும். இத்தகைய இயற்கையினை அளப்பினும் பண்புகளை அளத்தல் அரிது என்பது, 'நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின் அளப்பரியையே' என்றும் 'நீர் நிலம் தீ வளி விசும்போடைந்தும் அளந்து கடையறியினும் அளப்பருங்குரையை' என்றும் பதிற்றுப்பத்திலும் (பதிற். 14, 24) கூறுதல் எண்ணத்தக்கது. வறிது நிலைஇய காயம் என்றது மேலே எவ்விதத் தாங்கும் பொருளின்றி நிலைபெற்ற ஆகாயம் என உணர்த்தியது. காயம், ஆகாயம் என்பதன் முதற்குறை.

வானவில்லைத் திருவில் என்றது மழையாகிய செல்வத்தால் தோன்றும் வில் என்றதால்; இந்திரன் எனும் கடவுளின் வில் எனும் கருத்தில் திரு என்ற அடைமொழி த்ந்ததாகவும் கொள்க. 'தேர் செலவழுங்கத் திருவில் கோலி' என ஐங்குறுநூறும் கூறும். (ஐங். 428)

மன்னர் பிறர் மண் உண்பர் என்பது பகைவர் நாட்டு மண்ணில் விளைந்த வளங்கொள்வர் என்பதாகும். உண்பர் என்பதை மகளிர் கருத் தாங்கிய காலத்து மண்ணுண்ணுதலுடன் தொடர்புறுத்திச் சேரநாட்டு மண்ணை மகளிர் உண்பர் அல்லால் பகைவர் கொண்டுண்ணார் என உணர்த்தினார்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : குட்டம் – ஆழம்; திருவில் – வானவில், (இந்திரவில்); வயவுறுமகளிர் – கருவுற்ற பெண்கள்; விதுப்பு – நடுக்கம்.

21

புல வரை இறந்த புகழ்சால் தோன்றல்! –
'நில வரை இறந்த குண்டு கண் அகழி,
வான் தோய்வு அன்ன புரிசை, விசும்பின்
மீன் பூத்தன்ன உருவ ஞாயில்,
கதிர் நுழைகல்லா மரம் பயில் கடிமிளை,
அருங் குறும்பு உடைத்த கானப்பேர் எயில்,
கருங் கைக் கொல்லன் செந் தீ மாட்டிய
இரும்பு உண் நீரினும், மீட்டற்கு அரிது' என,
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடு கொளக் குழைந்த தும்பை, புலவர்
பாடுதுறை முற்றிய, கொற்ற வேந்தே!
இகழுநர் இசையொடு மாய,
புகழொடு விளங்கிப் பூக்க, நின் வேலே!

திணையும் துறையும் அவை.

கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் பாடியது.

துறை விளக்கம் : 'புகழ் சால் தோன்றல்; பாடுதுறை முற்றிய வேந்து; வைகலும் வெற்றியால் குழைந்த தும்பை யணிந்தவன்' என வழுதியின் இயல்பு கூறியமையால் அரசவாகையாயிற்று.

உரை : (1 – 6) நின்னைப் புகழ்ந்து பாடுபவரின் அறிவின் எல்லையைக் கடந்த புகழ் நிறைந்த தலைவனே! நிலத்தின் எல்லை

Koviloor Digital Library

கடந்த ஆழத்தைப் பெற்ற இடமமைந்த அகழியையும் விண்ணைத் தொடுவது போன்ற மதிலையும், அந்த விண்ணில் விண்மீன் பூத்தது போன்ற வடிவையுடைய மதிலுச்சியையும், ஞாயிற்றின் கதிர் நுழையாத மரம் செறிந்த காவற்காட்டையும் கடத்தற்கரிய சிறு அரண்களையும் உடையது கானப்பேர்எயில்;

(7 – 13) வலிய கையை உடைய கொல்லன் செந்தீயில் காட்டப்பட்ட இரும்பில் தெளிக்கப்பட்டு அதனாற் கொள்ளப்பெறும் நீர் மீட்டற்கு அரிது; அதுபோன்றே தன் கானப் பேர் எயிலையும் மீட்டல் அரிது என வேங்கை மார்பன் இரங்கி வருந்தினான். நாள்தோறும் வெற்றியால் தழைத்த தும்பை மாலையை யுடையவனே! புகழ்ந்து பாடப்பெறும் துறைகள் பலவற்றால் புலவரால் பாடப்பெற்றுத் துறைகள் முற்றிய, வெற்றியையுடைய வேந்தனே! நின்னை மதியாத பகைவர் தம் புகழ்விளங்க மாய்ந்தனர்! நின் வேல் புகழுடன் விளங்கிப் பொலிவுறட்டும்.

உரை விளக்கம் : அகழி, புரிசை, ஞாயில், கடிமிளை, குறும்பு ஆகியவற்றால் கானப்பேர் எயிலின் அரிய காவலை உணர்த்தினார். அதனை இழந்ததால் வேங்கைமார்பன் மனம் வருந்தினான். புலவர், 'இரும்பு உண் நீரினும் மீட்டற்கு அரிது' என்று வேங்கை மார்பன் வருந்தியதாகக் கூறுவர். நீரினும் என்பதில் வரும் உம்மையால், 'இரும்புண்ட நீரையும் மீட்டுக் கொளல் எளிது; வழுதியிடம் அகப்பட்ட கானப்பேரெயிலை மீட்டுக் கொளல் அரிது' எனும் பொருள் தோன்றியது. காட்டையே இடைக்காவல் மதிலாகக் கொண்டதால், கானப்பெரெயில் எனப்பெற்றது.

'இகழுநர் இசையுடன் மாய' என்பது, 'நின்னைப் பகைத்து இகழ்வோர் நின்னோடு போரிட்டு மடிவர்; நின்னோடு போரிட்ட தன்மையாலும், புறங்கொடாது உயிர்நீத்த சிறப்பாலும் புகழை அடைவர்; எனவே, பகைவரும் புகழடைந்தனர்' என உணர்த்தியது.

'புகழொடு பூக்க வேல்' என்றது பலரை 'வென்றிடத் துணை செய்த சிறப்பால் நின் கைவேல் புகழடைந்தது.' என்றும் இனி, 'பகைவரின்மையால் பொலிவோடு விளங்கட்டும்' என்றும் குறித்தது.

Koviloor Digital Library

பாடுதுறை முற்றிய பெருமையை, ''தோடார் போந்தை தும்பையொடு முடித்துப் பாடுதுறை முற்றிய கொற்றவேந்தன்'' (சிலம்பு. 27.45–46) எனச் சிலப்பதிகாரமும் கூறும். வெயில் நுழைய முடியாத காடு. 'வெயில் நுழைபறியாக் குயில்நுழை பொதும்பர்' (பெரும்பாண். 374; மணி. 4.5), 'வெயிலொளி அறியாத விரிமலர்த் தண்கா' (கலித். 30.7–8), எனப் பிறவிடத்தும் வருணிக்கப்பெற்றது.

அருஞ்சொற்பொருள் : புலம் – அறிவு; தோன்றல் – தலைவன்; இறந்த – கடந்த; குண்டு – ஆழம்; கண் – இடம்; புரிசை – மதில்; மிளை – காவற்காடு; குறும்பு – சிற்றரண்.

22

தூங்கு கையான் ஓங்கு நடைய,
உறழ் மணியான் உயர் மருப்பின,
பிறை நுதலான் செறல் நோக்கின,
பா அடியான் பணை எருத்தின,
தேன் சிதைந்த வரை போல,
மிஞிறு ஆர்க்கும் கமழ் கடாத்து,
அயறு சோரும் இருஞ் சென்னிய,
மைந்து மலிந்த மழ களிறு
கந்து சேர்பு நிலைஇ வழங்க;
பாஅல் நின்று கதிர் சோரும்
வான் உறையும் மதி போலும்
மாலை வெண்குடை நீழலான்,
வாள் மருங்கு இலோர் காப்பு உறங்க;
அலங்கு செந்நெற் கதிர் வேய்ந்த
ஆய் கரும்பின் கொடிக் கூரை,
சாறு கொண்ட களம் போல,
வேறு வேறு பொலிவு தோன்ற;
குற்று ஆனா உலக்கையான்

Koviloor Digital Library

கலிச் சும்மை வியல் ஆங்கண்,
பொலந் தோட்டுப் பைந் தும்பை
மிசை அலங்கு உளைய பனைப் போழ் செரீஇ,
சின மாந்தர் வெறிக் குரவை
ஓத நீரின் பெயர்பு பொங்க;
வாய் காவாது பரந்து பட்ட
வியன் பாசறைக் காப்பாள!
வேந்து தந்த பணி திறையான்
சேர்ந்தவர்தம் கடும்பு ஆர்த்தும்,
ஓங்கு கொல்லியோர், அடு பொருந!
வேழ நோக்கின் விறல் வெஞ் சேஎய்!
வாழிய, பெரும! நின் வரம்பு இல் படைப்பே,
நிற் பாடிய வயங்கு செந் நாப்
பின் பிறர் இசை நுவலாமை,
ஓம்பாது ஈயும் ஆற்றல் எம் கோ!
'மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஓம்பிய நாடே
புத்தேள் உலகத்து அற்று' எனக் கேட்டு வந்து,
இனிது கண்டிசின்; பெரும! முனிவு இலை,
வேறு புலத்து இறுக்கும் தானையொடு
சோறு பட நடத்தி – நீ துஞ்சாய்மாறே!

திணையும் துறையும் அவை; துறை : இயன்மொழியும் ஆம்.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : *இப்பாடலில் 'பாசறைக் காப்பாள! கடும்பு ஆர்த்தும் பொருந! ஓம்பாது ஈயும் எம்கோ! நீ துஞ்சாய்; முனிவிலை; நாடு புத்தேள் உலகத்து அற்று' என அரசர் இயல்பு கூறியதால் அரச வாகையும் ஆயிற்று; இயன்மொழிக்கும் அங்ஙனமே கொள்க. இயன்மொழியாயின் பாடாண்திணை என்க.*

Koviloor Digital Library

உரை : (1 – 9) நின் யானைகள் அசையும் கையுடன் தலையுயர்த்தி நடப்பன; நடையினால் மாறுபட்டு ஒலிக்கும் மணிகளும் உயர்ந்த தந்தங்களும் உடையன; பிறைவடிவான நெற்றியுடன் சினமுடைய பார்வையையுடையன; பரந்த அடியுடன் பருத்த கழுத்துடையன; தேனடை கலைந்த மலை போலத் தேனீக்கள் ஆரவாரித்துச் சூழுமாறு மணக்கும் மதநீர் வடியும்; வடியும் மதநீருடன் புண்ணிலிருந்து வடியும் நீரும் உடைய பெருந் தலையை உடையன. இத்தகைய வலிமை நிறைந்த இளைய ஆண் யானைகள் தூண்களில் சேர்த்துக் கட்டப்பெற்றனவாய் நின்று அசைந்து கொண்டிருப்பன.

(10 – 13) பக்கத்தில் கதிர் பரப்பி விண்ணில் தங்கும் முழுமதி போல, முத்துமாலையையுடைய வெண் கொற்றக்குடை; அதன் நிழலால் வாளைக் காப்பாகக் கருதி அதனைக் கொண்டிராதோர் அக்குடையே காவலாய்க் கருதி உறங்குவர்.

(14 – 17) அசையும் செந்நெற் கதிர்களைக் கூரையாக வேய்ந்து கரும்பை இடையே கழிகளாக உடைய ஒழுங்கு பெற்ற கூரை, வேறுவேறாய் நின்றும் அழகுடன் விளங்கும்.

(18 – 25) நெல் குற்றுவதால் அடங்காத உலக்கையின் பேரொலியுடன் மிக்க ஆரவாரத்தையும் உடைய அகலிடம்; அவ்விடத்தில் பொன்னால் செய்த இதழையுடைய பசிய தும்பையுடன் மேலே, அசையும் உச்சியையுடைய பனந் தோட்டையும் செருகியவராய்ச் சினமுடைய வீரர் விளங்குவர். அவர்களாடும் வெறியாடுதலாகிய குரவைக் கூத்தின் ஒலி, கடலொலிபோல எழுந்து ஒலிக்கும். இத்தகைய படைவீரர் மிகுதியினால் இடமின்றிப் பரந்த அகன்ற பாசறையில் தங்கிய காவலனே!

(26 – 33) பகைவேந்தர் பணிந்து தந்த திறைப்பொருளால் வந்தடைந்தோரையும் அவர்தம் சுற்றத்தையும் மகிழ்வுடன் உண்ணச் செய்பவனே! உயர்ந்த கொல்லி மலையினர்தம்,

Koviloor Digital Library

கொல்லும் வீரமுடைய தலைவனே! யானையைப் போன்ற பார்வையினால் வெற்றியை விரும்பும் சேய் என்பவனே! நின் எல்லையற்ற செல்வம் வாழிய! பெருமானே! நின்னைப் பாடி விளங்கிய செவ்விய நா, பின்னும் பிறருடைய புகழைப் பாடாதவாறு செல்வத்தைக் காத்துப் போற்றாது வழங்கும் பண்புடைய எம் அரசனே!

(36 – 38) முயற்சியில் வெறுப்பில்லாது பகைப்புலத்துச் சென்று தங்கும் படையுடையாய்; அதனுடன் நின் நாட்டில் உணவுப் பொருட்கள் உண்டாக்கவும் செய்வாய்; ஏனெனில் நீ சோம்பலில்லாத தன்மையன்.

(34 – 36) இவற்றால் 'மாந்தரஞ் சேரல் இரும்பொறை போற்றிய நாடு தேவருலகை ஒத்தது' எனப் பலரும் கூறக்கேட்டு வந்ததுடன் அதன் உண்மையையும் இனிதாகக் கண்டேன் பெரும! வாழிய.

உரை விளக்கம் : களிறு நிலைவழங்க, வாண் மருங்கிலோர் காப்புறங்க, பொலிவு தோன்ற, குரவை பெயர்பு பொங்கப் பரந்துபட்ட பாசறை எனக்கூட்டுக. மன்னன் பெயரின் காரணம் இப்பாடலில் காணப்படும். 'வேழ நோக்கின் விறல் வெஞ் சேஎய்' (29) என்பதால் அவன் யானைக்கட் சேய் எனப்படுதல் உணர்த்தப்பெறும். சேய் – இயற்பெயர்; மாந்தரஞ் சேரல் இரும்பொறை (34) என்பதால் அவனுடைய குடியின் சிறப்புப்பெயரும் உணர்த்தப்பெறும்.

வாய் – இடம்; இடம் காவாது என்றது இடையே இடம் இல்லையெனும்படி பெருகிய படையால் என்க. குடைநிழல் குடிகளை நிலவின் தண்ணளிபோல் காத்திடும் தன்மையாலும் வடிவ அமைதியாலும் குடைக்கு நிலவு உவமை கூறப்பெறும். இதனை இந்நூலின் 3,60 ஆம் பாடல்களாலும் உணரலாம்.

Koviloor Digital Library

'பொலந்தோட்டு ... செரீஇ' என்பது போருக்குரிய அடையாளமாகப் பொன்னாலாகிய தும்பையையும் குடிக்குரிய அடையாளமாகப் பனந்தோட்டையும் சூடினான் என உணர்த்திற்று. போருக்குரிய அடையாளப் பூக்களைப் பொன்னால் செய்து சூடுதல் புறநானூற்றில் 2, 97 ஆகிய பாடல்களிலும் பதிற்றுப்பத்தின் 45 ஆம் பாடல்களிலும் காண்க. ஈயும் மன்னன் இருக்கும் நாட்டைத் தேவருலகுடன் ஒப்பிட்டுக் காணுதல் இந்நூலின் 38 ஆம் பாடலிலும் காண்க.

'குற்றுஆனா உலக்கை' என்பது குற்றிக்குற்றி அடங்காத உலக்கை ஆகும். படையின் மிகுதியால் உணவுக்கெனக் குற்றுதலின் மிகுதியையும் இதனால் கூறினார். பரிசில் வேண்டிப் பிறரிசை நுவலாமை என்பது பிறரை அடைந்து பொருள் இரக்குமாறு செய்யாது நிரம்பத் தருவான் என உணர்த்திற்று. 'பிறன் கடை மறப்பு நல்குவன்' எனப் பின்னும் (புறம். 68) வந்தது. கையால், மணியால், நுதலால், அடியால் : ஆல் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது.

அருஞ்சொற்பொருள் : தூங்குதல் – அசைதல்; செறல் – சினம்; பா – பரந்த; எருத்து – கழுத்து, பிடரி; வரை – மலை; மிஞிறு – வண்டு; கடாம் – மதநீர்; அயறு – புண்வடிநீர்; மைந்து – வலிமை; மழ – இளமைப் பொருளில் வந்தது; சாறுகொண்ட – விழாக்கொண்ட; சும்மை – ஆரவாரம்; வாய் – இடம்; கடும்பு – சுற்றம்; வேழம் – யானை; புத்தேள்உலகு – தேவருலகு.

23

'வெளிறு இல் நோன் காழ்ப் பணை நிலை முனைஇ,
களிறு படிந்து உண்டென, கலங்கிய துறையும்;
கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்,
சூர் நவை, முருகன் சுற்றத்து அன்ன, நின்
கூர் நல் அம்பின் கொடுவில் கூளியர்

Koviloor Digital Library

கொள்வது கொண்டு, கொள்ளா மிச்சில்
கொள்பதம் ஒழிய வீசிய புலனும்;
வடி நவில் நவியம் பாய்தலின், ஊர்தொறும்
கடி மரம் துளங்கிய காவும்; நெடு நகர்
வினை புனை நல் இல் வெவ் எரி நைப்ப
கனை எரி உரறிய மருங்கும்; நோக்கி,
நண்ணார் நாண, நாள்தொறும் தலைச் சென்று,
இன்னும் இன்ன பல செய்குவன், யாவரும்
துன்னல் போகிய துணிவினோன்' என,
ஞாலம் நெளிய ஈண்டிய வியன் படை
ஆலங்கானத்து அமர் கடந்து அட்ட
கால முன்ப! நிற் கண்டனென் வருவல் –
அறு மருப்பு எழிற் கலை புலிப்பால் பட்டென,
சிறு மறி தழீஇய தெறிநடை மடப் பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண் பூக் கறிக்கும்
ஆள் இல் அத்தம் ஆகிய காடே.

திணையும் துறையும் அவை; துறை : நல்லிசை வஞ்சியும் ஆம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார் பாடியது.

துறை விளக்கம் : *'இன்னும் இன்ன பல செய்குவன், யாவரும் அணுகுதற்கரிய துணிவினோன்' எனச் செழியன் இயல்பு கூறப் பெறுதலால் அரசவாகையாயிற்று.*

பகைவரிடம் போர் செய்ய எதிர்தலாகிய வஞ்சித் திணையில் ஒருதுறை நல்லிசை வஞ்சி; இது பகைவரிடங்களை அழித்த வீரனின் மேன்மையைப் புகழ்தலாகும். இப்பாட்டில் 'நண்ணார் நாண நாள்தொறும் தலைச்சென்று இன்ன பல செய்குவன்' எனச் செழியன் பாராட்டப் பெற்றமையால் நல்லிசை வஞ்சியும் ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : *(15 – 17)* மன்னுயிர்களின் சுமையைத் தாங்க இயலாது, உலகம் நெளிய, திரண்ட பெரிய படையுடன் தலையாலங்கானத்தில் நிகழ்ந்த போரில் எதிர்த்துக் கொன்ற, காலனைப் போன்ற வலிமையுடையவனே!

(1 – 11) வெண்மையில்லாத திண்ணிய வலிய வயிரம் பாய்ந்த மரத் தூணினை உடைய கூடத்தில் நிற்பதை வெறுத்த யானை, படிந்து நீருண்டதால் நீர்த்துறைகள் கலங்கின. மழைக்காலத்தின் புதிய மணமுடைய கடம்பின் பசிய இலைகளுடன் விரவிய மலர்களால் கட்டப்பெற்ற மாலையையுடையவனும் சூரபன்மாவைக் கொன்றவனுமாகிய முருகவேள்; அவன் ஏவலராகிய கூளிச்சுற்றம் போன்ற கூர்மையான நல்ல அம்புடன் வளைந்த வில்லுடைய வீரர்கள் கைக்கொள்ளும் அளவு கொண்டபின் எஞ்சிய பொருளைப் பகைவர் கொண்டு உணவாக்காதவாறு விளைநிலங்கள் அழிக்கப்பட்டன. வடித்துக் கூராக்கப் பெற்ற கோடரி பாய்வதால் ஊர்தோறும் சோலைகளில் அமைந்த காவல்மரங்கள் நிலைகுலைந்தன. பெரிய நகரில் அழகிய வேலைப்பாடமைந்த நல்ல வீடுகளில் சமைத்தற்கு எழும் தீயைப் பெருந்தீயால் அழித்ததால் நகரின் புறம் எங்கும் அதன் ஓசை கேட்டது.

(11 – 14) இவ்வாறு உன்னால் அழிந்த துறைகளையும் விளைவயல்களையும் சோலைகளையும் நகர்ப்புறங்களையும் கண்டேன். அதனால் 'பகைவர் நாண அவர்தம் நாடுகளிலும் சென்று இத்தகைய வன்மையை இன்னும் பல செய்வான்' என்றும் 'தன்னை யாரும் அணுகுதற்கரிய ஆராய்ச்சியும் (சூழ்ச்சியும்) துணிவும் உடையவன்' என்றும் கருதினேன்.

(17 – 22) கொம்பு அற்றுப்போன பெரிய ஆண்மான் புலியிடம் அகப்பட்டது. அதனால் தன் சிறிய மான்குட்டியைத் தழுவியபடி, துள்ளும் நடையையுடைய மான்பிணை பூளைச்செடி வளர்ந்த அச்சந்தரும் பாழிடத்தில் வேளையின் வெளிய பூவைத் தின்னும்.

Koviloor Digital Library

இத்தகைய ஆளற்ற அருஞ்சுரமாகிய காட்டுவழியே நின்னைக் கண்டவனாய் வந்தேன்.

உரை விளக்கம் : 'மன்ன! பகைப்புலத்தைப் பாழ்ப்படுத்தியமை கண்டேன். இதுபோன்று பிறர் நாடுகளிலும் செய்வாய் எனக் கருதினேன்! காடாகிய வழியில் வந்தேன்' என்பது பொருள் முடிபு. காணாமுன் 'நிற் கண்டனென் வருவல்' எனக் 'கண்டுவந்தேன்' என்று கூறினார். மன்னனை நேரில் காணாராயினும் அவனுடைய சீற்றத்தை அவன் பாழாக்கிய தன்மையால் உணர்தலினால் கண்டதாகக் கூறினார். 'சூர் நவை முருகன்' என்பது சூரபத்மனை முருகன் அழித்தமையைக் கூறும். முருகவேளின் இச்செயல், 'சூர்கொன்ற செவ்வேலான்' (கலித். 93) 'சூர் மருங்கறுத்த இகல் வெய்யோய்' (தொல். செய்யுளியல் – 152 நச்சர்; மேற்கோள்) எனப் பலராலும் சுட்டப்பெற்றது. முருகவேள் கடம்ப மாலையையுடையவன் என்பது 'பராரை மராஅத்து உருள் பூந்தண்டார் புரளும் மார்பினன்' (மராம் – கடம்பு; முருகு. 10 – 11) 'கார்நறும் கடம்பின் கண்ணி சூடி ... முருகே' (நற். 34), 'கார்க் கடப்பந் தார் எம் கடவுள்' (சிலம்பு. 24. பாட்டுமடை) எனப் பலவிடத்தும் கூறினர். கூளியர் என்போர் ஏவல் செய்யும் இளையோர்; ஏவல் இளையோர் 'பல்லுருவில் குறும்பல் கூளியர்' (முருகு. 282) எனப்படுதலை முருகாற்றுப்படை உணர்த்தும்; 'கொடுவில் கூளியர்' (மலைபடு. 422) என்று மலைபடுகடாமும் கூறும். உணவுப் பொருட்களைக் கூளியர் கவர்தல் 'கொள்ளை வல்சிக் கவர்கால் கூளியர்' (பதிற். 19) எனப் பதிற்றுப்பத்துக் கூறுவதுடன் ஒப்பிட்டு அறியலாம்.

சமைக்கும் நெருப்பைப் பெருநெருப்பு அழித்தது என்பது பெருநெருப்பால் வீடுகள் அழிந்து, அங்கு வாழ்வோரில்லாமையால் சமையல் தொழில் ஒழிந்தது கூறும். வெவ்வெரி – விரும்பத்தக்க தீ; சமையல் தொழிலுதவும் தீ.

ஆண்மான் புலியால் கொல்லப்படத் தன் குட்டியை அணைத்தபடி வேளையின் பூவை உண்டு பெண்மான் வாழும் என்பது குறிப்புப் பொருள். செழியனால் அழிந்த பகைவர்தம்

Koviloor Digital Library

மனைவியர் தம்தம் மக்களுக்காக உயிர் வாழ்ந்து கைம்மை மேற்கொண்டு வேளைக் கீரையை உணவாகக் கொள்வர் என்றும் கருத்துத் தோற்றியது.

அருஞ்சொற்பொருள் : வெளிறு – உறுதியின்மை; வெளிறுஇல் – உறுதியான; காழ் – தூண்; தெரியல் – மாலை.

24

நெல் அரியும் இருந் தொழுவர்
செஞ் ஞாயிற்று வெயில் முனையின்,
தெண் கடல் திரை மிசைப் பாயுந்து;
திண் திமில் வன் பரதவர்
வெப்பு உடைய மட்டு உண்டு,
தண் குரவைச் சீர் தூங்குந்து;
தூவற் கலித்த தேம் பாய் புன்னை
மெல் இணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல் வளை மகளிர்த் தலைக் கை தரூஉந்து;
வண்டு பட மலர்ந்த தண் நறுங் கானல்
முண்டகக் கோதை ஒண் தொடி மகளிர்
இரும் பனையின் குரும்பை நீரும்,
பூங் கரும்பின் தீம் சாறும்,
ஓங்கு மணற் குவவுத் தாழைத்
தீம் நீரோடு உடன் விராஅய்,
முந் நீர் உண்டு முந்நீர்ப் பாயும்;
தாங்கா உறையுள் நல் ஊர் கெழீஇய
ஓம்பா ஈகை மா வேள் எவ்வி
புனல் அம் புதவின் மிழலையொடு – கழனிக்
கயல் ஆர் நாரை போர்வில் சேக்கும்,
பொன் அணி யானைத் தொல் முதிர் வேளிர்,
குப்பை நெல்லின், முத்தூறு தந்த

Koviloor Digital Library

கொற்ற நீள் குடை, கொடித் தேர்ச் செழிய!
நின்று நிலைஇயர் நின் நாள்மீன்; நில்லாது
படாஅச் செலீஇயர், நின் பகைவர் மீனே –
நின்னொடு, தொன்று மூத்த உயிரினும், உயிரொடு
நின்று மூத்த யாக்கை அன்ன, நின்
ஆடு குடி மூத்த விழுத் திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள் வலம் வாழ்த்த,
இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண் தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண் கமழ் தேறல் மடுப்ப, மகிழ் சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி, பெரும! 'ஆங்கு அது
வல்லுநர் வாழ்ந்தோர்' என்ப – தொல் இசை
மலர் தலை உலகத்துத் தோன்றி,
பலர், செலச் செல்லாது, நின்று விளிந்தோரே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

அவனை மாங்குடி கிழார் பாடியது.

துறை விளக்கம் : புறத்திணைகட்குப் பொதுவான திணையாகிய பொதுவியலின் துறை பொருண்மொழிக் காஞ்சி; உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதி தருமாறு முனிவர் தெளிந்த பொருளை உரைப்பது இத்துறையாகும். நிலையாமை கூறி, 'இனிது ஒழுகு; அது வல்லுநர் வாழ்ந்தோர் என்ப' என்றதால் இப்பாட்டு பொருண்மொழிக் காஞ்சி ஆயிற்று.

உரை : (1 – 19) மிழலைக் கூற்றம் எனும் பகுதியை நீ வென்றாய்; அப்பகுதி, நெல்லரியும் பெரு உழவர் செம்மையான கதிரவனின் வெயிலால் வெறுப்புற்றால் தெளிந்த கடல் அலைமீது பாயக்கூடிய தன்மையது; திண்மையான படகுடைய வன்பரதவர் (மீனவர்) விரும்பத் தக்க கள்ளையுண்டு மெல்ல ஆடும் குரவைக்

Koviloor Digital Library

கூத்தின் தாளத்தை ஒத்து அசையும் இயல்புடையது. கடலின் நீர்த் திவலைகளால் செழித்த புன்னையின் தேன் நிறைந்த மெல்லிய மலர்க் கொத்துக்களை ஆடவர் மாலையாகச் சூடினர்; அவ்வாடவர் ஒளிதிகழும் வளையணிந்த மகளிர்க்குக் குரவையாடுவதற்கு என முதற்கை தரும் இயல்புடையது; வண்டுகள் சூழுமாறு மலர்ந்த, மணமுடைய குளிர்ந்த கடற்கரைச் சோலையில் கடல் முள்ளியாலான மாலையை ஒண்தொடியணிந்த மகளிர் சூடினர். அம்மகளிர் பெரிய பனைக் குரும்பையின் நுங்கு நீரும் பூவினையுடைய கரும்பின் சாறும் உயர்ந்த மணற்பகுதியில் திரண்டு விளைந்த தெங்கின் இளநீரும் கலந்து முந்நீராய்க் குடித்தனர்; அத்தகையோர், முந்நீராகிய கடலில் பாயும் தன்மையது. மக்கள் பலர் தங்கும் நல்ல ஊர்களையுடையது; நீர் பெருகும் கால்வாய்களையுடையது. இத்தன்மையதான மிழலைக்கூற்றம் தனக்கென்று போற்றாது தரும் கொடையையுடைய மாவேள் எவ்வியினுடையது.

(19 - 25) வயலில் கயல் மீனுண்ணும் நாரை வைக்கோற்போரில் சென்று தங்கி உறங்கும் தன்மையதும் பொன்னாலாகிய பட்டத்தையுடைய யானைகளைக் கொண்டதும் நெற் குவியலைக் கொண்டதுமான பழைய வேளிர் குடியின் முத்தூற்றுக் கூற்றத்தையும் மிழலைக் கூற்றத்துடன் கொண்டாய். வெற்றி பொருந்திய உயர்ந்த குடையையும் கொடி விளங்கும் தேரினையும் உடைய செழியனே! உனக்கு உரிய நாள்மீன் நிலைக்கட்டும். உன் பகைவர்தம் நாள்மீன் பட்டழிந்து போகட்டும்.

(35 - 36) பரந்த இடமுடைய இவ்வுலகில் பிறந்து பழைமையான புகழைப் பரவச் செய்யாது நின்று அழிந்தோர் பலர்; அவர்களை வாழ்ந்தோர் என அறிஞர் போற்றார்.

(26 - 34) எனவே, பெரும! உன்னுடைய மூத்த உயிரைவிட, உயிருடன் விளங்கி முதிர்ந்த உடலைப் போன்றது, உன் வெற்றியையுடைய குடி; அக்குடியின் பழைமையும் சிறப்பும்

Koviloor Digital Library

உடைய குலத்தில் பிறந்த வாட்போர் வல்லவர் உன் முயற்சியின் வலிமையை வாழ்த்தட்டும்; இரவலர்கள் உன் கொடையைப் புகழட்டும்; குளிர்ந்த மணமுடைய மதுவினை ஒள்ளிய தொடியணிந்த மகளிர், பொற்கலத்தில் ஏந்தி ஊட்டட்டும்; அதனால் மகிழ்ச்சி நிறைந்த வல்லவரையே உலகத்து அறிஞர் வாழ்ந்தோர் எனப் போற்றும்.

உரை விளக்கம் : பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து என்பன பாயும், தூங்கும் தரூஉம் என்றும் வினைவடிவத்தில் உம் ஈறு உந்து எனத் திரிந்து வடிவங்களாகும். 'நெல்லரியும் ... மிழலையொடு' – மிழலைக் கூற்றத்தின் வளங்குறித்த பகுதி; 'கழனி ... முத்தூறு' – இது முத்தூற்றுக் கூற்றத்தின் வளங்குறித்த பகுதி.

வேளிரை அகத்தியர் வரச் செய்து இருத்தினார் என்பது மரபு. எனவே, மரபின் தொன்மையால் 'தொன் முதிர் வேளிர்' எனப் பெற்றனர். மரபின் வழிவந்து, புகழை நிலை நிறுத்தாதோர் வாழ்ந்தோர் எனப்பெறார். எனவே 'புகழுக்குரிய செயல் புரிக' என அறிவுறுத்தக் கருதிய புலவர் அச்செயல்களை, 'வலம் வாழ்த்துமாறும் ஈகை நுவலுமாறும் மகிழ் சிறந்து வாழ்க' என்றார். 'ஈதல், இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்று திருக்குறள் கூறுதலும் எண்ணத்தக்கது. மகளிர் தர, மன்னவர் மதுவுண்ணுதலைப் புறநானூறு 56, 367 ஆம் பாடல்களிலும் பொருநராற்றுப்படையிலும் (84–7) காண்க.

'நின்னொடு ... விழுத்திணை' என்பது குடிப்பெருமை கூறிற்று. மன்னன் உயிராகவும் குடிகள் உடலாகவும் விளங்குதல் இவ்வடிகளில் கூறினார். உயிரொடு மூத்தயாக்கை என்பது மன்னர் குலத்துடன் வழிவழியாக உரிமை பூண்ட தொண்டு மரபினராய் ஏவல் செய்யும் குடியினர் என்பதற்காக வந்தது. உயிர் மூத்து நின்று தொடர்ந்து உயிரைப் பேணுதலும் யாக்கை உயிரின் இயக்கத்தை உணர்ந்து செயல்படுதலும் குறிப்பில் நின்று மன்னன் – குடியினர் உறவு நிலையை உணர்த்திற்று. 'மன்னர் உயிர்த்தே மலர்தலை

Koviloor Digital Library

உலகம்' (புறம். 186) என்றார் பிறரும். 'உலகினுக்கு உயிராய் இருந்தனன் இறை' (திருவிளையாடற். பழியஞ். 44) என்பதும் அது.

அருஞ்சொற்பொருள் : தொழுவர் – உழவர்; முனையின் – வெறுப்பின், வெப்பு – விருப்பு; மட்டு – கள்; தாழை – தென்னை; முந்நீர் – கடல்; புதவு – கால்வாய்; சேக்கும் – தங்கும்; விளிந்தோர் – அழித்தோர்.

25

மீன் திகழ் விசும்பில் பாய் இருள் அகல
ஈண்டு செலல் மரபின் தன் இயல் வழாஅது,
உரவுச் சினம் திருகிய உரு கெழு ஞாயிறு,
நிலவுத் திகழ் மதியமொடு, நிலம் சேர்ந்தாஅங்கு,
உடல் அருந் துப்பின் ஒன்றுமொழி வேந்தரை
அணங்கு அரும் பறந்தலை உணங்கப் பண்ணி,
பிணியுறு முரசம் கொண்ட காலை,
நிலை திரிபு எறிய, திண் மடை கலங்கிச்
சிதைதல் உய்ந்தன்றோ, நின்வேல் செழிய! –
முலை பொலி ஆகம் உருப்ப நூறி,
மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர,
அவிர் அறல் கடுக்கும் அம் மென்
குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே.

திணை : வாகை; துறை : அரசவாகை.

அவனைக் கல்லாடனார் பாடியது.

துறை விளக்கம் : அரசனின் இயல்பு கூறும் அரசவாகை; 'கூந்தல் கொய்தல் கண்டு நின்வேல் சிதைதல் உய்ந்தன்று' என மன்னனின் அருளைக் கூறியதால் அரசவாகையாயிற்று.

Koviloor Digital Library

உரை : *(1 – 7)* விண்மீன்கள் திகழ்ந்த வானத்தில் படர்ந்த இருள் அகலுமாறு உயர்ந்து செல்லும் முறைமையுடைய தன் இயல்பில் தவறாது வலிய வெம்மை முற்றிய அச்சம் தரும் ஞாயிறு; அது, தண்மையான ஒளியுடன் திகழும் மதியினோடு, விண்ணைவிட்டு நீங்கி நிலம் சேர்ந்தமை போன்று தோன்றும் வேந்தர் இருவர்; பகைத்தற்கரிய வலிமையுடன் வஞ்சினம் கூறிய அவ்வேந்தர்களை, வருத்துதற்கரிய போரில் மடியச் செய்தாய். அவர்களுடைய வாரால் பிணிக்கப்பட்ட முரசத்தைக் கையகப்படுத்தினாய்.

(10 – 14) அப்பொழுது, முலை பொலிந்த மார்பம் வருந்துமாறு அடித்துக்கொண்டும் அறிவு மயங்கியும் அளவற்ற அழுகையால் ஆரவாரித்தும் ஒள்ளிய நெற்றியையுடைய மகளிர், கைம்மையை மேற்கொள்ள வேண்டி, விளங்கித்தோன்றும் ஆற்றின் கருமணலையொத்தும் மெல்லியதும் குவிந்ததுமான கரிய மயிரினைக் களைந்தார்கள்.

(8 – 9) செழிய! அதனை நீ கண்ட அளவிலேயே, நின்ற நிலையில் நின்று, நின்னைச் சூழ்ந்த வீரர்களைத் தாக்குவதால் திண்ணிய கைப்பிடி கழன்று கெட்டுப் போவதிலிருந்து, நின் வேல் பிழைத்தது.

உரை விளக்கம் : இப்பாடல் மன்னனின் அருளுள்ளத்தை வெளிப்படுத்தி நின்றது. 'தம் கணவர் போரில் மாய்ந்தனராக, பெண்கள் கைம்மையை நோற்பதன் பொருட்டுத் தம் கூந்தலைக் கொய்து நீக்குகிறார்கள். அப்பெண்டிரின் துயரத்தால் பகைவரைக் கொல்லும் தன் வேலைச் செலுத்தாது விடுகின்றான்', என்பது பாடற்கருத்து. இதனை 'நின்வேல் பகைவர் மீது வீசுவதால் கெட்டுத் தளர்ந்து போவதினின்று பிழைத்தது' என்று நயம்பட உரைத்தனர்.

ஒன்றுமொழிதல் – வஞ்சினம் கூறுதல்; இப்பொருள், 'ஒன்றுமொழிக் கோசர்' (குறுந்.) ஒன்றுமொழி மறவர் (பதிற். 41) எனப் பிறவிடத்தும் சுட்டப் பெற்றது. பகைவரை வென்று அவர் முரசும், குடையும், முடியும் கைக்கொள்ளல் மரபு;

Koviloor Digital Library

இம்மரபு இந்நூலில் 26, 72, 179 ஆகிய பாடல்களிலும் மதுரைக் காஞ்சியிலும் (மதுரை. 128-30) வந்தமை காண்க. பகைமன்னர் இருவர்க்கு ஞாயிறும் நிலவும் உவமையாகும்.

அருஞ்சொற்பொருள் : உரவு - வலிமை; அடல் - கொல்லுதல்; துப்பு - வலிமை; மடை - கைப்பிடி; உணங்க - வருந்த; அறல் - ஆற்றின் கருமணல்; கடுக்கும் - ஒத்திருக்கும்.

26

நளி கடல் இரும் குட்டத்து
வளி புடைத்த கலம் போல,
களிறு சென்று களன் அகற்றவும்,
களன் அகற்றிய வியல் ஆங்கண்
ஒளிறு இலைய எஃகு ஏந்த,
அரைசு பட அமர் உழக்கி,
உரை செல முரசு வெளவி,
முடித் தலை அடுப்பு ஆக,
புனற் குருதி உலைக் கொளீஇ,
தொடித் தோள் துடுப்பின் துழந்த வல்சியின்,
அடுகளம் வேட்ட அடு போர்ச் செழிய!
ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை,
நான் மறை முதல்வர் சுற்றம் ஆக,
மன்னர் ஏவல் செய்ய, மன்னிய
வேள்வி முற்றிய வாய் வாள் வேந்தே!
நோற்றோர் மன்ற - நின் பகைவர் நின்னொடு
மாற்றார் என்னும் பெயர் பெற்று
ஆற்றார் ஆயினும் ஆண்டு வாழ்வாரே.

திணையும் துறையும் அவை.

அவனை மாங்குடி கிழார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : 'அடுகளம் வேட்ட செழியன்; வேள்வி முற்றிய வேந்தன்' எனச் செழியனின் இயல்பு கூறியதால் அரசவாகையாயிற்று.

உரை : பெரிய கடலின் மிகுந்த ஆழமுடைய பரப்பிடத்தில், காற்றால் செலுத்தப்பட்ட மரக்கலம், நீரை விலக்கி முன்னேறும். அதுபோல, ஆண்யானை போர் மேல் சென்று போர்க்களத்தின் இடத்தை அகலமாக்கியது. அகலமடைந்த அகன்ற இடத்தில், ஒளியையுடைய இலையமைந்த வேல் ஏந்திப் பகை அரசர்கள் வீழுமாறு போர்க்களத்தில் திரிந்தாய். புகழ் பரவுமாறு அவர்தம் முரசுகளைக் கவர்ந்தாய்; பகைவர்தம் முடித் தலைகளை அடுப்புப் போலமைத்து இரத்தமாகிய உலை நீரில், வீரவளையணிந்த தோளைத் துடுப்பாகக் கொண்டு துழாவி உணவு உண்டாக்கினாய்; அவ்வுணவால் போர்க்களத்தில் களவேள்வி செய்யும்படி, கொல்லும் போரையுடைய செழியனே! அமைந்த கல்வியுடையவரும் ஐம்புலனும் அடங்கிச் செய்யும் நோன்புகளுடையவரும் நான்கு வேதத்தைக் கொண்டோருமான அந்தணர்கள் உனக்குச் சுற்றம் ஆயினர்; அவர்களுடன் நின்னால் வெல்லப் பெற்ற மன்னர்களும் ஏவல் செய்து நிற்க, நிலைத்த வேள்வியை முற்றுவித்தாய்; தப்பாத வாளுடைய வேந்தனே! உனக்குப் பகைவராகி எதிர்த்து நிற்க இயலாது போயினும் துறக்கத்தை அடைந்தனர்; எனவே நின் பகைவர் தவம்புரிந்தவர் என்பது உறுதி.

உரை விளக்கம் : யானை சென்றதால் பகைவீரர் அஞ்சி அகன்றனர்; எனவே போர்க்களம் இடம் அகன்றதாகத் தோன்றியது 'உரை செல ... அடுபோர்ச் செழிய' என்பது கள வேள்வியாகும். புறப்பொருள் வெண்பாமாலை 'பேயாரக் ... கொடுத்தான் - முடித்தலைத் தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக மூளையஞ் சோற்றை முகந்து' (பு.வெ. 160) என்று கூறும். 'முடித்தலையடுப்பில் பிடர்த்தலைத் தாழி. தொடித்தோள் துடுப்பில் துழைஇய ஊன் சோறு' (சிலம்பு. 26.242-4) என்று சிலம்பும் கூறும். மதுரைக் காஞ்சியின் 29-38 அடிகளையும் ஒப்பிட்டு நோக்குக. இவையே பிற்காலப் பரணியிலக்கியத்தின் 'கூழடுதல்' என்பதற்கு அடிப்படை.

Koviloor Digital Library

களவேள்வியோடு அறமுறைக்கேள்வி அந்தணர் வேள்வியும் செய்தான். இவன் செய்தவேள்வியின் சிறப்பால் இவன் பகைவரும் துறக்கம் அடைந்தனர் என அவனைப் பாராட்டினர்.

அருஞ்சொற்பொருள் : குட்டம் - ஆழம்; ஆங்கண் - அவ்விடத்தில்; ஒளிறு - ஒளி; வல்சி - உணவு; நோற்றோர் - தவத்தையுடையவர்; மாற்றார் - பகைவர்.

27

சேற்று வளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,
நூற்று இதழ் அலரின் நிரை கண்டன்ன,
வேற்றுமை இல்லா விழுத் திணைப் பிறந்து,
வீற்றிருந்தோரை எண்ணும் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மரை இலை போல மாய்ந்திசினோர் பலரே;
'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப, தம் செய் வினை முடித்து' எனக்
கேட்பல்; எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!
தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்,
அறியாதோரையும் அறியக் காட்டி,
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,
அருள வல்லை ஆகுமதி; அருள் இலர்
கொடாஅத துப்பின் நின் பகை எதிர்ந்தோரே.

திணை : பொதுவியல்; துறை : முதுமொழிக்காஞ்சி.

Koviloor Digital Library

சோழன் நலங் கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடியது.

துறை விளக்கம் : வெட்சி முதலாகப் பாடாண் ஈறாக அமைந்த புறத்திணைகளுக்குப் பொதுவாய் அமைவனவும் அவற்றில் கூறாது ஒழிந்தனவும் ஆகிய பொருட்களை கூறும் பொதுவியலின் ஒருதுறை முதுமொழிக் காஞ்சி. இது அறம், பொருள், இன்பம் என்பவற்றின் தன்மையைக் குற்றமில்லாது, அறிவுடையோர் அரசனுக்குக் கூறுதலாகும். 'அருள வல்லை ஆகுக' என அறம் கூறியதாலும் 'புலவர் பாடும் புகழுடையார் வானவூர்தி எய்துவர் எனப் புகழ்ச் செல்வத்தின் பயன் கூறியதாலும் முதுமொழிக் காஞ்சி ஆயிற்று.

உரை : சேற்றில் வளரும் தாமரையின் பூத்த ஒளியுடைய நிறமும் நூற்றுக் கணக்கான இதழ்களுடைய தாமரை மலரின் குவியலைக் கண்டதுபோல ஏற்றத் தாழ்வில்லாத சிறந்த குலத்தில் பிறந்து கவலையின்றி அரசர் வீற்றிருப்பர். அவர்களை மனத்தால் கருதும்போது அவர்களுள் புகழும், அதனால் பாடப்பெறும் பாட்டும் உடையராய் இருப்பவர் சிலரே ஆவர்; தாமரையின் இலையைப் போலப் பயன்படாது மாய்ந்தோர் பலர்; "புலவரால் பாடப் பெறும் புகழுடையோர், வானில் வலவனால் செலுத்தப் படாதியங்கும் விமானத்தினைத் தாம் செய்யும் நல்ல செயல்களை முடித்தபின் அடைவர் என்பர் அறிவுடையார்" எனச் சொல்லக் கேட்பேன். என்னுடைய இறைவனே! சேட்சென்னியே! நலங்கிள்ளியே! வளர்கின்ற ஒன்று குன்றுவதையும் குன்றிப் போனது வளர்வதையும் பிறந்தது இறப்பதையும் இறந்தது பிறப்பதையும் உண்மை எனக் கல்லாதவரும் அறியுமாறு செய்யும் திங்களாகிய தெய்வம்; அது இயங்கும் உலகத்தில் ஒன்றனைச் செய்ய வல்லவராயினும் செய்ய இயலாதவராயினும் வறுமையால் வருந்தி வந்தோரின் வயிற்றின் பக்கங்களைக் கருதி அவர்களுக்கு அருளுடன் வழங்க வல்லவனாகுக. கெடாத வலிமையுடன் உனக்குப் பகைவரானவர்கள் அருளின்றிக் கொடாது இருத்தலில் வல்லவராகட்டும்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தாமரை மலர் பல இதழ்களுடையது; எனவே அம்மலரை 'நூற்றிதழ் அலரி' என்றார். தாமரை மலர் அரசர்க் கூட்டத்திற்கு உவமை. விழுமம் – சிறப்பு; திணை – குடி; 'விழுத்திணை' என்னும் சொல்லாட்சி சிறந்த குடி என்ற பொருளில் 'விழுத்திணைத் திருத்தி' (பதிற். 31) எனப் பதிற்றுப் பத்துள்ளும் வந்தது. உரை என்பது புகழைக் குறித்தது; பலராலும் உரைக்கப்படும் பொருள், புகழ்; இதனை, 'உரை சால் சிறப்பின் புகழ் சாலும்' (புறம். 57) என்பதாலும் உணரலாம். எனவே உரை என்பது புகழிற்கு ஆகுபெயர். மரையிலை – தாமரையிலை; முதற்குறை. 'வலவன் ஏவா வானவூர்தி எய்துப' என்பது புகழுடையார் துறக்கம் புகுவர் என்பதைக் குறித்தது. புகழுடையாரைத் துறக்க உலகத்து ஊர்தி வந்து அழைத்துச் செல்லும் என்பது நம்பிக்கை. புகழில்லாதார்க்கு மேலுலகு இல்லை என்பது மரபு. 'இவணிசை உடையோர்க்கு அல்லது அவணது உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை' (புறம். 50.14 – 15) எனப் பின்னரும் வந்தது.

திங்களின் இயல்பு வாழ்க்கையின் இயல்பு கூறப் பயன் தந்தது. நலங்கிள்ளி அருளும் கொடையும் உடையவன்; எனவே அவனுக்குப் பகையை வெல்லுதல் எளிது; அருளில்லாதார்க்கு அவனருளும் இன்று; எனவே நலங்கிள்ளியால் வெல்லப்படுவர். அருளும் கொடையும் உடையோர் பகையை வெல்வர் என்பதை ஐயரவர்கள் 'நிதி தலை திறந்து பீடுடை ... நிலம் பயம்புறச் செல்வன் செல்லுமே' (சீவக. 331) என்றும் சீவகசிந்தாமணி பாடலையும் நச்சரின் உரையையும் மேற்கோள் காட்டி விளக்கினார். பாட்டுடைத் தலைவனின் பெயர் 10 ஆம் அடியில் வந்தது.

அருஞ்சொற்பொருள் : கேழ் – நிறம்; அலரி – மலர்; திணை – குடி; உரை – புகழ்; வலவன் – ஊர்தியியக்குபவன், பாகன்; புத்தேள் – கடவுள்.

Koviloor Digital Library

28

சிறப்பு இல் சிதடும் உறுப்பு இல் பிண்டமும்
கூனும், குறளும், ஊமும், செவிடும்,
மாவும் மருளும், உளப்பட வாழ்நர்க்கு
எண் பேர் எச்சம் என்று இவை எல்லாம்
பேதைமை அல்லது ஊதியம் இல்' என,
முன்னும் அறிந்தோர் கூறினர்; இன்னும்,
அதன் திறம் அத்தை யான் உரைக்க வந்தது –
வட்ட வரிய செம் பொறிச் சேவல்
ஏனல் காப்போர் உணர்த்திய கூஉம்
கானத்தோர், நின் தெவ்வர்; நீயே,
புறஞ்சிறை மாக்கட்கு அறம் குறித்து, அகத்தோர்
புய்த்து எறி கரும்பின் விடு கழை தாமரைப்
பூம் போது சிதைய வீழ்ந்தென, கூத்தர்
ஆடு களம் கடுக்கும் அக நாட்டையே;
அதனால், அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும், பெரும! நின் செல்வம்;
ஆற்றாமை நிற் போற்றாமையே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : *இப்பாடலில் சோழன் நலங்கிள்ளியிடம், 'நின் செல்வம் அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும் பெரும' என்றதால் இதுவும் முதுமொழிக் காஞ்சியாயிற்று.*

உரை : *(1 – 7) 'சிறப்பில்லாத குருடும், வடிவற்ற தசைப்பிண்டமும், கூனும், குறுகிய தோற்றமும் ஊமையும், செவிடும், விலங்கு வடிவிலான தோற்றமும் அறிவின்றி மயங்கியிருப்பதும் ஆகிய எட்டுப் பெரிய குறைபாடுகள் மக்கட் பிறப்பில் உள்ளன.*

Koviloor Digital Library

இவை, இவ்வுலகில் வாழ்வார்க்குப் பேதைத் தன்மையிலான பிறப்புகள்; அன்றி இவற்றால் யாதொரு பயனும் இல்லை' என நன்கு அறிந்தோர் முற்காலத்தில் சொல்லினர்; இன்னும் நான் பிறப்பின் பயனும் பயனின்மையும் கூறவந்தேன்;

(8 – 17) உன் பகைவர், வட்டமாகிய புள்ளிகள் நன்கு பொறித்த காட்டுக் கோழியின் சேவல் தினைப்புனம் காப்பவரைத் துயிலுணர்த்திடக் கூவி எழுப்பும் காட்டில் உள்ளவரே ஆவார்; வேலிப்புறத்தே நின்று வேண்டுவோர்க்கு, அறத்தைக் கருதி அகத்திருப்பவர் வயலகத்திலிருந்து கரும்பினைப் பறித்து எறிவர்; அவை தாமரையின் தாதினை உதிர்க்குமாறு பொய்கையில் விழும். அதனால் எழும் அலையின் ஆரவாரம் கூத்தர் ஆடும் களத்தை ஒத்துத் தோன்றும். இத்தகைய உள்ளிடங்களை உடைய நாட்டையுடையவனே! எனவே உன் செல்வம் அறம், பொருள், இன்பம் என மூன்றையும் செய்து உதவும். அது பயன்படாமற் போவது, நின்னைப் போற்றாத பகைவர்க்கேயாகும்.

உரை விளக்கம் : 'மக்கட்பேறு பெற்றோரை இன்புறுத்த வேண்டும்; தென்புலம் வாழ்நர்க்கு உரிய கடன்களை செய்தலும் வேண்டும்; அவ்வாறு செய்வதற்கு இயலாதும் இன்புறுத்த இயலாதும் அமையும் குழவிப் பிறப்பினால் பயனின்று' எனும் கருத்தில் 'பேதைமை அல்லது ஊதியம் இல்' என்றார். எண்பேர் எச்சம் என்பது பிறப்பு முழுமையில்லாது குறைபாடுடைய எட்டுவகையான பிறவிகளை எண்ணிக் கூறியது. வினையின் எச்சத்தால் விளைவன எனினும் அமையும். பிறந்தும் பயனற்றது போலச் செல்வம் இருந்தும் கொடாது இருப்பதால் அதன் பயனின்று என உணர்த்தினார்.

'நின்னைப் போற்றாததால், பகைவர் அழிவு நேர்ந்து செல்வத்தின் பயனை உணராது போக நேரிடும்; என்பதை 'ஆற்றாமை நின் போற்றாமையே' என்பதால் குறித்தனர். 'இனி இரவலர் நின்னைப் போற்றி அணுகாததால் நின் செல்வத்துப் பயனை அடையார்' என்றும் கொள்க.

Koviloor Digital Library

'வேண்டுவார்க்குக் கரும்பைப் பறித்து எறியும் அறமுடைய மக்களையுடைய நாடு நினது; எனவே, நின் செல்வமும் அறத்தின் வழியில் நின்று பொருளும் இன்பமும் ஆற்றும்' என்று குறிப்புணர்த்தினார். கரும்பைத் தம் உழைப்பின் விளைச்சல் என்று தன்னலத்தால் தாமே கொள்ளாத உணர்வுடையர்; எனவே 'அறங்குறித்து' என்றார்.

கானத்தோர் நின் பகைவர் என்றது, 'நின் பகைவர் உனக்கு அஞ்சிக் காட்டுக்குள் புகுந்து மறைந்தனர்' என்றார். இதனால் பகையின்மை கூறினார். 'கரும்பின் விடுகழை ... அகநாடு' என்பதால் வளமுடைமை கூறினார்.

குறையுற்ற பிறவிகளை, 'குறளொடு செவிடு மூங்கை கூன் மருள் குருடு மாவே, ஊம் உறுப்பில்லாப் பிண்டம் ஓதிய எண் மெய் எச்சம்' எனச் சூடாமணி நிகண்டும் (12.94) கூறும். பொலிவுடைய நாட்டுப்பகுதிக்கு ஆடுகளத்தை உவமையாக்குதல் 'முசுண்டையொடு முல்லை தாஅய், மணி மருள் நெய்தல் உறழக் காமர், துணிநீர் மெல்லவல் தொய்யிலொடு மலர, வல்லோன் தைஇய வெறிக்களம் கடுப்ப' (மதுரைக். 281 - 4) என மதுரைக் காஞ்சியிலும் காண்க.

அருஞ்சொற்பொருள் : சிதடு - குருடு; குறள் - குறுகியவடிவு; மா - விலங்கின்வடிவு; மருள் - அறிவுதிரிந்திருந்தல்; எச்சம் - குறை; ஊதியம் - பயன்; ஏனல் - தினைப்புனம்; புய்த்தல் - பிடுங்குதல்; போது - மலர்.

29

அழல் புரிந்த அடர் தாமரை
ஐது அடர்ந்த நூற் பெய்து,
புனை வினைப் பொலிந்த பொலன் நறுந் தெரியல்
பாறு மயிர் இருந் தலை பொலியச் சூடி,

Koviloor Digital Library

பாண் முற்றுக, நின் நாள் மகிழ் இருக்கை!
பாண் முற்று ஒழிந்த பின்றை, மகளிர்
தோள் முற்றுக, நின் சாந்து புலர் அகலம்! ஆங்க
முனிவு இல் முற்றத்து, இனிது முரசு இயம்ப,
கொடியோர்த் தெறுதலும், செவ்வியோர்க்கு அளித்தலும்,
ஒடியா முறையின் மடிவு இலை ஆகி,
'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை' என்போர்க்கு இனன் ஆகிலியர்!
நெல் விளை கழனிப் படு புள் ஓப்புநர்
ஒழி மடல் விறகின் கழி மீன் சுட்டு,
வெங் கள் தொலைச்சியும், அமையார், தெங்கின்
இளநீர் உதிர்க்கும் வளம் மிகு நல் நாடு
பெற்றனர் உவக்கும் நின் படை கொள் மாக்கள்,
பற்றா மக்களின் பரிவு முந்துறுத்து,
கூவை துற்ற நாற்கால் பந்தர்ச்
சிறு மனை வாழ்க்கையின், ஒரீஇ வருநர்க்கு
உதவி ஆற்றும் நண்பின் பண்புடை
ஊழிற்றாக, நின் செய்கை! விழவில்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும் இவ் உலகத்து, கூடிய
நகைப்புறன் ஆக, நின் சுற்றம்!
இசைப்புறன் ஆக நீ ஓம்பிய பொருளே!

திணையும் துறையும் அவை

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் *: 'இல்லை என்போர்க்கு இனன் ஆகாய்; படைகொள் மாக்கள் பரிவுடன் வருநர்க்கு உதவி செய்யும் ஊழிற்று ஆகுக நின் செய்கை; பாண் முற்றுக, தோள் முற்றுக என்பவற்றான் முறையே அறமும் பொருளும் இன்பமும் கூறினமையால் இதுவும் முதுமொழிக் காஞ்சியாயிற்று.*

Koviloor Digital Library

உரை : *(1 – 12)* நெருப்பிலிட்டுத் தகடாக்கிச் செய்த தாமரை மலரை மெல்லிய கம்பியாகச் செய்த வெள்ளியிழையாகிய நூலில் இட்டதும் வேலைப்பாடமைந்த அழகு பொலிவதுமாகப் பொன்னாலாகிய நல்ல மாலை விளங்கும். அதனைப் பரந்த மயிருடைய கரிய தலையில் பாணர்தம் சுற்றம் பொலிவுடன் சூடியவராய் நின்னைச் சூழ்ந்து விளங்குவதாகுக நின் அவைக்களம். பாணர் சுற்றம் சூழ்ந்து, பின் அகன்றபின், சந்தனம் பூசிப் புலர்ந்த நின் மார்பு, உரிமை மகளிரின் தோளைச் சூழ்வதாகுக. என்றும் வெறுத்தற்கு இயலாத நின் மாளிகையின் முற்றத்தில் முரசு இனிதாக ஒலிக்கட்டும். கொடியவரைத் தண்டித்தலும், நல்லோருக்கு அருள் செய்தலும் நின் இடையறாத மரபினால் சோம்பலின்றி விளங்குக. நல்வினையினால் வரும் நன்மையும் தீவினையால் வரும் தீமையும் இல்லை என்போர்க்கு உறவுடையன் ஆகாமல் விளங்குக.

(13 – 26) நெல் விளைந்த வயலில் பறவைகளை விரட்டும் உழுகுடியோர், கீழே விழுந்த பனங்கருக்கை விறகாகக் கொண்டு கழியிடத்துப் பிடித்த மீனைச் சுடுவர்; அதனுடன் விருப்பம் மிகுந்த கள்ளை உண்பர்; அவ்வாறு உண்ட பின்னும் அடங்காது, தென்னையின் இளநீரை உதிர்ப்பர். இத்தகைய செல்வமிகுந்த நல் நாட்டை நின் படையினர் பெற்று மகிழ்ந்தனர். அவர்கள், நின்பகைவரைப் போல இரக்கம் தோன்ற கூவையிலையால் மூடி நான்கு கால்களுடைய பந்தலாகிய சிறிய படைவீட்டிலிருந்து வாழும் வாழ்க்கையிலிருந்து நீங்கினர். அத்தகையோர், நாடிவரும் இரவலர்க்கு உதவி புரியும் நட்பினையுடைய பண்பு பெறுவார்களாகுக; அதற்கு ஏற்றபடி நின் செய்கை அமையட்டும்; விழாக்காலத்தில் ஆடும் கூத்தர் வேறுவேறான ஒப்பனையுடன் திகழும் காட்சிபோன்று, முறை முறையே தோன்றி, இயங்கி, அழியும் இயல்புடையது இவ்வுலகம்; இவ்வுலகில் நின் சுற்றம் மகிழ்ச்சியை யடையட்டும்; நீ பாதுகாத்து வைத்த பொருட்செல்வம் புகழை அடையட்டும்.

உரை விளக்கம் : பொற்றாமரையினை வெள்ளியிழையில் கட்டி மாலையாகப் பாணர்க்குக் கொடுத்தல் அரசர் இயல்பு.

Koviloor Digital Library

'அழல் புரிந்த தாமரை வெள்ளி நாரால் பூப்பெற்றிசின்' என்று முன்னர் வந்தமை கருதி, 'வெள்ளியிழை' என உரையிற் கொள்ளப்பெற்றது; பொன்னிழை எனலும் பொருந்தும்.

நாண்மகிழ் இருக்கை பகற்பொழுதில் பலரும் வந்து காணுமாறு மகிழ்வுறுத்தும்படி வீற்றிருக்கும் அவை; மகிழ்வு என்பது வரும் இரவலர்க்குக் கள்ளீத்துப்பெறும் மகிழ்ச்சி. 'நாண் மகிழ் இருக்கை இனிது கண்டிகும்', 'சூடா நறவின் நாண்மகிழ் இருக்கை' (பதிற். 65, 85) என்று பதிற்றுப் பத்தினுள்ளும் அவையின் தன்மை போற்றப் பெற்றது.

பகைவரை வருத்தி நல்லோரை அருளும் பண்பு, 'நகைவர்க்கு அரணம் ஆகிப் பகைவர்க்குச் சூர் நிகழ்ந்தற்று' என்பது போன்றது (பதிற். 31). இல்லை என்போர். நல்லனவற்றால் வரும் நல்வினையும் தீயனவற்றால் வரும் தீமையும் இல்லை என்போர் நன்மை மறந்து தீமை புரியும் இயல்பினர்; எனவே அவரொடு சேர்தல்வேண்டா என்றார். இவரை நாத்திகர் என்று ஐயரவர்கள் குறிப்பிடுவார்.

மன்னனேயன்றிப் படையினரும் கொடையாளராகத் திகழவேண்டும்; அவ்வகையில் அரசனின் செயல்கள் வழிகாட்டவேண்டும். எனவே, 'படை கொள்மாக்கள், வருநர்க்கு உதவும், ஊழிற்று ஆகுக, நின் செய்கை' (17 – 22) என்று கூறினார். ஆடுநர் கழியும் இவ்வுலகு, எனும் தொடர், ''கூத்தாட்டு அவைக் குழாத்து அற்றே' (குறள். 332) என்னும் குறட்பாவை நினைவூட்டும்.

அருஞ்சொற்பொருள் : ஐது – மென்மை; பொலம் – பொன்; பாறு – பரந்த; அகலம் – மார்பு, (ஆகுபெயர்); தெறுதல் – தண்டித்தல்; மடிவு – சோம்பல்.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY.
Accession No. 63743
Date of purchase:
Call Number: 894.811E P4

Koviloor Digital Library

30

செஞ் ஞாயிற்றுச் செலவும்,
அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்று இவை
சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே; அனைத்தும்
அறி அறிவு ஆகாச் செறிவினை ஆகி,
களிறு கவுள் அடுத்த எறிகல் போல
ஒளித்த துப்பினை ஆதலின், வெளிப்பட
யாங்ஙனம் பாடுவர், புலவர்? கூம்பொடு
மீப் பாய் களையாது, மிசைப் பரம் தோண்டாது,
புகாஅர்ப் புகுந்த பெருங் கலம் தகாஅர்
இடைப் புலப் பெரு வழிச் சொரியும்
கடற் பல் தாரத்த நாடு கிழவோயே

திணை : *பாடாண்திணை;* **துறை :** *இயன்மொழி.*

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : *தலைவனின் இயல்பினை எடுத்துரைத்தல் இயன்மொழி; இப்பாடலில் 'செறிவினை ஆகி ஒளித்த துப்பினை' என மன்னனது அடக்கமுடைமை கூறியமையால் இயன்மொழி ஆயிற்று.*

உரை : *(11 – 15) கூம்பொடு மேல் விரிக்கப்பட்ட பாயை மாற்றாமல், சுமையையும் குறைக்காமல் ஆற்றின் கழிமுகப் பகுதியில் பெரிய மரக்கலம் புகுந்தது. அதனைத் தகுதியற்ற கீழ்மக்கள், தம்மிருப்பிடத்திற்கு இடைப்பகுதியாகிய பெரிய வழியிடத்துக் கொண்டு செல்வர். அப்போது, கீழே விழுகின்ற*

Koviloor Digital Library

கடலால் கொணரப் பெறும் பொருட்கள் பலவுடைய நாட்டின் தலைவனே!

(1 – 10) சிவந்த ஞாயிற்றின் பாதையும், அதன் இயக்கமும், இயக்கம் சூழ்ந்த கிரணக்கதிர்களால் அமைந்த பார் வட்டமும் காற்று இயங்கும் திசைகளும், எந்தப் பற்றுதலும் இல்லாது தனித்து நிற்கும் வானமும் ஆகிய இவற்றைச் சென்று அங்கங்கு அளந்தறிந்தவர்களைப் போல நாளும் இவ்வளவின என்று கூறுவோரும் உள்ளனர்; அப்பெரியோர் அத்தகைய அறிவினர் ஆக இருந்தும் அடக்கம் அறியார். அவர் அறியாத அடக்கத்தை உடையவனாய், யானை தன் கதுப்பில் அடக்கி எறியும் கல் போல மறைத்த வலிமையையுடையாய்; ஆதலால் புலவர் நின்னை எத்தன்மையில் வைத்துப் பாடுவர்?

உரை விளக்கம் : ஆகாயத்துச் சென்று அறிந்தவர் போல ஞாயிற்றின் பாதை, அதன் இயக்கம், அது செல்லும் இடப்பரப்பு ஆகியவற்றையும் காற்றுப் பரவிநிற்கும் திசைகளையும் ஆகாயத்தின் தன்மையையும் கருத்தளவையால் நுட்பமுடன் அறிந்து கூறுவாரும் உளர். ஆனால் அவரிடம் அடக்கம் என்பதின்று. ஆனால் நலங்கிள்ளி அடக்கமுடைமையால் அவனுடைய ஆற்றலைப் புலவர் பாடுதற்கியலாது போயிற்று. 'என்போரும் உளரே' சிறப்பும்மை; மீப்பாய் ... பெருங்கலம் துறைமுகத்தின் இயல்பைக் குறித்தது. தமிழரின் கடல் வாணிபத்தைப் புறநானூற்றின் 60 ஆம் பாடலாலும் உணரலாம்.

களிற்றின் கல் ஒளிக்கும் இயல்பு, ''காய்ந்தெறி கடுங்கல் தன்னைக் கவுட் கொண்ட களிறு போல ஆய்ந்து அறிவுடையராகி அருளொடு வெகுளிமாற்றி, வேந்தர்தாம் விழைபவெல்லாம் மறைத்தல் கண்டாய்' எனச் சீவகசிந்தாமணியில் உவமையாக வந்தது. *(சீவக. 2910).*

சோழநாட்டில் கடல் வழியாகப் பல பொருட்களை இறக்குமதியும் ஏற்றுமதியும் செய்தனர். 'நீரினின்று நிலத்தேற்றவும்

Koviloor Digital Library

நிலத்தினின்று நீர்ப்பரப்பவும் அளந்தறியாப் பலபண்டம் வரம்பறியாமை வந்தீண்டி' (பட்டினம். 129.32) எனப் பொருள்வளம் சுட்டுதற்குக் கடல்வாணிபத்தைப் பட்டினப் பாலையிலும் விளக்கினர். கடல்பல் தாரம் என்பதைக் கடலின்மூலம் கொணரப்பட்ட பொருட்கள் என்னாது கடல்படு பொருட்களாகிய முத்து, மணிகள், மீன்கள் முதலிய பொருட்கள் எனினும் அமையும்.

ஆகாயம் முதற்குறையாகக் காயம் என ஆயிற்று; தகாஅர் – தகாதோர், இழிகுலத்தோர்.

அருஞ்சொற்பொருள் : *செலவு – பாதை; பரிப்பு – இயக்கம்; காயம் – ஆகாயம்; துப்பு – வலிமை; பரம் – பாரம், குறுக்கல் விகாரம்; புகாஅர் – துறைமுகப்பகுதி; தாரம் – பண்டங்கள்.*

31

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல,
இரு குடை பின்பட ஓங்கிய ஒரு குடை,
உரு கெழு மதியின், நிவந்து சேண் விளங்க,
நல் இசை வேட்டம் வேண்டி, வெல் போர்ப்
பாசறை அல்லது நீ ஒல்லாயே;
நுதி முகம் மழுங்க மண்டி, ஒன்னார்
கடி மதில் பாயும் நின் களிறு அடங்கலவே;
'போர்' எனின், புகலும் புனை கழல் மறவர்,
'காடு இடைக் கிடந்த நாடு நனி சேஎய;
செல்வேம் அல்லேம்' என்னார்; 'கல்லென்
விழவுடை ஆங்கண் வேற்றுப் புலத்து இறுத்து,
குண கடல் பின்னது ஆக, குட கடல்
வெண் தலைப் புணரி நின் மான் குளம்பு அலைப்ப,
வலமுறை வருதலும் உண்டு' என்று அலமந்து,
நெஞ்சு நடுங்கு அவலம் பாய,
துஞ்சாக் கண்ண, வடபுலத்து அரசே.

Koviloor Digital Library

திணை : வாகை; துறை : அரசவாகை; மழபுலவஞ்சியும் ஆம்.

அவனைக் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : அரசனின் இயல்பு கூறுதல் அரசவாகை, 'நல் இசை வேட்டத்தால் வெல் போர்ப் பாசறையல்லது நீ ஒல்லாய்' என அரசனின் இயல்பு கூறியதால் அரசவாகையாயிற்று.

பகைவர் நாட்டைக் கொள்ளை கொண்டு அவர் நாட்டைப் பாழாக்குதல் மழபுலவஞ்சியாகும்; வடபுலத்து அரசர் நாடு பாழாகும் என அஞ்சுதல் குறித்ததால் மழபுலவஞ்சியுமாம்; இத்துறையாயின் திணைவஞ்சி ஆம்.

உரை : (1 – 11) சிறப்புடைய மரபினால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னாக அமையும் தோற்றம் போல, நின்னால் வெல்லப்பட்டோர்தம் குடை பின்னால் அமைய முன்னே உயர்ந்தோங்கிய நின் குடை; நிறம் பொருந்திய மதியினைப் போல எழுந்துயர்ந்து அது, தொலைவிலும் விளங்குமாறு திகழும். நல்ல புகழின் வேட்கையால், விரும்பிச் செய்யும் வெல்லும் போரையுடைய பாசறையல்லது ஊரின் மாளிகையில் தங்க நீ உடன்படாய்; நின்னுடைய யானைக் கூட்டம், தம் தந்தங்களின் கூரிய முனை மழுங்கப் பகைவரின் காவலரண்மீது பாயும்; அவ்வாறு மண்டுதல் அல்லது அடங்கியிரா; 'போர்' என்றால் புனைந்த வீரக்கழலணிந்த வீரர்கள் விருப்பம் கொள்வர்; மாறாக, ''காட்டுப் பகுதிகள் இடைப்பட்ட நாடுகள் வெகு தொலைவின; எனவே செல்லமாட்டோம்'' எனக் கூறார். நின் படையின் தன்மை இத்தன்மையது ஆகும்.

(11 – 17) ''கல்லென்று ஆரவாரிக்கும் விழாக்களையுடைய பகைப்புலத்தின் இருப்பிடங்களில் தங்குவாய்; பின் நின் கீழைக் கடல் பின்னேகுமாறு மேலைக்கடல் நோக்கிச் செல்வதால் வெண்மையான மேற்பரப்புடைய அலைகள் நின் குதிரைகளின் குளம்புகளை வருத்தும்;

Koviloor Digital Library

அவ்வாறு வருந்த வலமுறையாக வடதிசைக்கும் வருவாய்" எனத் தடுமாறி, மனம் நடுங்குகிற துன்பமடைந்த வடபுலத்து அரசர்கள் உறங்காத கண்களையுடையர் ஆவர்.

உரை விளக்கம் : இப்பாட்டின் முதலிரு அடிகளை 'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தின் விளக்கவுரையில் பரிமேலழகர் காட்டுகின்றார். அறத்துவழியில் பொருளும் இன்பமும் பெறுதல், "சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு' என்றும் "அறத்தான் வருவதே இன்பம்" என்றும் (குறள். 31, 39) குறளில் வள்ளுவர் கூறினார். 'இருகுடை பின்பட ஓங்கிய குடை' என்பதால் சேரன், பாண்டியன் ஆகிய இருபெரு வேந்தரையும் வென்றவன் என்பது பெறப்படும். பாசறையில் மன்னன் விரும்பித் தங்குதலை, பதிற்றுப்பத்து (பதிற். 19) முல்லைப்பாட்டு (முல்லை. 79 – 80) ஆகியவற்றாலும் உணரலாம். தமிழ் மன்னர்க்கு வடபுலத்து அரசர் அஞ்சுதல் புறப்பாடல் – 52 ஆலும் அறியலாம். அச்சத்தால் மன்னர் உறங்காமை 'நெடுநகர் அரசு துயிலீயாது,' (பதிற். 12) என்பதாலும் அறிக.

அருஞ்சொற்பொருள் : உரு – நிறம்; நிவந்து – உயர்ந்து; ஒல்லாய் – உடன்படாய்; புகலும் – விரும்பும்.

32

கடும்பின் அடுகலம் நிறையாக நெடுங் கொடிப்
பூவா வஞ்சியும் தருகுவன்; ஒன்றோ?
'வண்ணம் நீவிய வணங்கு இறைப் பணைத் தோள்,
ஒள் நுதல், விறலியர் பூவிலை பெறுக!' என,
மாடமதுரையும் தருகுவன்; எல்லாம்
பாடுகம் வம்மினோ, பரிசில் மாக்கள்!
தொல் நிலக் கிழமை சுட்டின், நல் மதி
வேட்கோச் சிறாஅர் தேர்க் கால் வைத்த

Koviloor Digital Library

பசு மண் குரூஉத் திரள் போல, அவன்
கொண்ட குடுமித்து இத் தண் பணை நாடே

திணை : பாடாண்திணை; **துறை** : இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'வஞ்சியும் தருகுவன்; மதுரையும் தருகுவன்; அவன் கொண்ட முடிபினை உடையது சோழநாடு' என மன்னனின் இயல்பு கூறியமையால் இயன்மொழியாயிற்று.

உரை : (7 – 10) நலங்கிள்ளியின் தொன்றுபட்ட நில உரிமையைக் குறிப்பிட்டால் இந்தக் குளிர்ந்த மருதநிலம் உடைய நாடாகிய சோழநாடு ஆகும். இந்நாடு, நல்லறிவு படைத்த குயவர்குலச் சிறுவர்கள், பானை வனைய உதவும் சக்கரத்தில் வைத்த பசிய மண்ணாகிய கனத்த திரள் போல அவனுடைய கருத்தின் முடிவையுடையது.

(6) ஆகவே, பரிசிலரே! வாரீர்; எல்லோரும் அவன் புகழைப் பாடுவோமாக;

(1 – 5) அதனால் தம் சுற்றத்தாரின் சமையற் கலங்கள் எப்போதும் நிறைந்திருக்குமாறு, நெடிய கொடியாகப் பூவாத வஞ்சி எனப்படும் கருவூரையும் தருவான்; அஃதொன்றோ? "நிறமுடைய கலவை பூசியதும் வளைந்து விளங்கும் சந்துடையதுமான முன்கையும் மூங்கில் போன்ற தோளும், ஒளிபொருந்திய நெற்றியும் உடைய விறலியர்தம் பூக்களுக்கு விலையாக பெறுவீராக" என மாடங்கள் பொருந்திய மதுரையையும் தருவான்.

உரை விளக்கம் : நலங்கிள்ளி சேர, பாண்டியரை வென்றான் என்பது முற்பாடலில் கூறப்பெற்றது. இரவலர்க்கு வஞ்சியும் மதுரையும் தருகுவன் என்பதனாலும் அதன் உண்மை கூறப்பெற்றது. வஞ்சி – பலபொருள் ஒரு சொல். பூவா வஞ்சி என்றது பூக்கும்

Koviloor Digital Library

தொழிலுடைய வஞ்சிக் கொடியிலிருந்து வஞ்சியாகிய கருவூரை வேறுபத்தியுரைப்பதற்கு என்க. வாடாவஞ்சி என்பதும் அது; 'பூவா வஞ்சியில் பூத்தவஞ்சி .... முடிக்கணிந்து' (சிலம்பு. 29.50 – 51) என வருதல் காண்க.

மதுரை மாடங்கள் பொருந்திய நகர் என்பது 'மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்' (மதுரைக். 429) 'நான்மாடக் கடல்' (கலித். 92) எனப் பலவிடத்தும் கூறப்பெற்றது.

குடுமி என்பது கருத்து, முடிவு. நலங்கிள்ளி பகைவரை வென்று அவர் நாட்டைப் பரிசிலாகத் தருபவன்; அவ்வாறு சோழநாட்டைப் பகைவர் தருதல் கருதின் இயலாது; அவரால் வெல்லுதற்கரிது. எனவே அது சோழனின் கருத்தாகவே அமையும் எனப் பொருள் கொள்தல் பொருந்தும்.

'நெடுங்கொடிப் பூவாவஞ்சி என்பதை நெடிய துகிற் கொடியுடைய பூவாத வஞ்சி' எனப் பழையவுரை விளக்கும்.

அருஞ்சொற்பொருள் : கரும்பு – சுற்றம்; வணங்கு – வளைந்த; பணை – மூங்கில்; கிழமை உரிமை; குரூஉ – கனத்த; குடுமி – முடிவு; பணைநாடு – மருதநிலநாடு.

33

கான் உறை வாழ்க்கை, கத நாய், வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்
தயிர் கொடு வந்த தசும்பும், நிறைய,
ஏரின் வாழ்நர் பேர் இல் அரிவையர்
குளக் கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்,

Koviloor Digital Library

ஏழ் எயிற் கதவம் எறிந்து, கைக்கொண்டு, நின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை;
பாடுநர் வஞ்சி பாட, படையோர்
தாது எரு மறுகின் பாசறை பொலிய,
புலராப் பச்சிலை இடை இடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்து கண்டன்ன
ஊன் சோற்று அமலை பாண் கடும்பு அருத்தும்
செம்மற்று அம்ம, நின் வெம் முனை இருக்கை –
வல்லோன் தைஇய வரி வனப்பு உற்ற
அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப,
காம இருவர் அல்லது, யாமத்துத்
தனி மகன் வழங்காப் பனி மலர்க் காவின்,
ஒதுக்குஇன் திணி மணற் புதுப் பூம் பள்ளி
வாயில் மாடந்தொறும் மை விடை வீழ்ப்ப
நீ ஆங்குக் கொண்ட விழவினும் பலவே

திணை : வாகை; துறை : அரசவாகை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : ''உழுவை பொறிக்கும் ஆற்றலை; நின் இருக்கை செம்மல் உடையது; என நலங்கிள்ளியின் வீர இயல்பு கூறியமையால் அரசவாகையாயிற்று.

உரை : வேட்டை நாயையுடைய வேட்டுவன், காட்டில் வாழும் வாழ்க்கையன்; அவன் மான் தசையைக் கொண்ட கடகப் பெட்டியையும், ஆய்மகள் தயிர் கொண்டுவந்து தந்த பானையும் உடையவன்; அவனுக்கு ஏரினால் உழுது வாழும் உழவர்தம் பெரிய வீட்டிலுள்ள மகளிர், குளத்திற்குக் கீழாக விளைந்த களத்திலிருந்து பெற்ற வெண்ணெல்லை முகந்து தருவர்; அதனைப் பெற்றவனாய் மகிழ்ந்து தன்னிருப்பிடத்திற்கு மீள்வான்.

Koviloor Digital Library

இவ்வாறு குடிகளை உடையவனும் தெற்கே பொதிய மலையையுடையவனுமாகிய பாண்டியனின் நாடு; அந்த நல்ல நாட்டினுள்ளே ஏழு மதிலின் கதவுகளையும் அழித்துக் கையகப்படுத்தி நின் இலச்சினையாகிய பெரிய வாயுடைய புலியைப் பொறிக்கும் வலிமையையுடையவன் நீ; நின்னைப் பாடுபவர் நீ படையெடுத்துப்போர் மேற்சென்ற சிறப்பைப் பாடுவர்; நின் படையினர் தாதாகிய எரு வீழ்ந்த பகுதிகளையுடைய பாசறையில் பொலிவு பெற்றுத் தோன்றுவர்.

வாடாத பசிய இலைகள் இடையே கட்டப்பெற்று மொட்டுக்களால் அமைந்த மாலை; அதன் பந்துவடிவம் போன்று ஊனுடன் பெரிய சோற்றுத்திரளைப் பாணர்க்கு வழங்கி அவர்தம் சுற்றத்துடன் உண்ணச் செய்யும் இயல்புடையது வெய்ய போர்க்கள முனையாகிய நின் பாசறை.

ஓவியம் வல்ல ஒருவன் எழுதிய அழகுடைய அல்லிப்பாவை; அது அல்லியக் கூத்தை (ஆண், பெண் என) ஆடுவதைப் போலத் தம்முள் காதல் கொண்ட இருவர் அல்லாது தனித்து நள்ளிரவில் செல்லாத சோலை; அங்கு நடப்பதற்கு இனிய மணல் திணிந்த, புதிய பூக்களுடைய சாலையின் வாயிலில் மாளிகை தோறும் செம்மறியாட்டின் கிடையைக் கொல்வர். அவ்வாறு நீ அங்கு எடுத்த சிறு சோற்று விழாவினும் பாசறை பல சிறப்புடைய தலைமையையுடையது;

உரை விளக்கம் : 'கானுறை வாழ்க்கை ..... நன்னாடு' என்பதால் பாண்டிய நாட்டு வளம் கூறினர். அந்நாட்டின் வளம் அழித்து வெல்லும் ஆற்றலுடையவன் கிள்ளிவளவன்; எனவே நன்னாட்டுள்ளும் என்றார். வஞ்சி என்பது பகைவரை எதிர்த்துப் போரிடச் செல்லுதல்; அச்சிறப்பைப் புலவர் புகழ்தலால் 'பாடுநர் வஞ்சிபாட' என்றார்.

Koviloor Digital Library

அல்லிப்பாவை என்பது ஒருவகைக் கூத்து; ஆண் பெண் என இருவகைக் கோலம் புனைதல் இதனியல்பு; இதனைச் சிலம்பு 'அல்லியத் தொகுதி' என்னும் (சிலம்பு 6.48).

பகைவரை வென்று அங்கு தம் இலச்சினையைப் பொறித்தல் மரபு; இதனை இந்நூலின் 58-ஆம் பாடலிலும் காண்க. தனிமகன் வழங்கா மலர்க்கா என்றது கூடினோர்க்கன்றிப் பிறர்க்குத் துன்பம் செய்தலால் தனித்துப் புகாச் சோலை என்க.

அருஞ்சொற்பொருள் : கதம் - சினம்; வட்டி - பனை ஓலைப் பெட்டி; தசும்பு - கலயம்; தென்னம் பொருப்பன் - தெற்கே பொதிய மலையுடைய பாண்டியன்; கடும்பு - சுற்றம்; ஒதுக்கு - தெரு.

34

'ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்,
மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்,
பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும்,
வழுவாய் மருங்கில் கழுவாயும் உள' என,
'நிலம் புடை பெயர்வது ஆயினும், ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்' என,
அறம் பாடின்றே - ஆயிழை கணவ!
'காலை அந்தியும், மாலை அந்தியும்,
புறவுக் கரு அன்ன புன் புல வரகின்
பால் பெய் புன்கம் தேனொடு மயக்கி,
குறு முயற் கொழுஞ் சூடு கிழித்த ஒக்கலொடு,
இரத்தி நீடிய அகன் தலை மன்றத்து,
கரப்பு இல் உள்ளமொடு வேண்டு மொழி பயிற்றி,
அமலைக் கொழுஞ் சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்,
எம் கோன் வளவன் வாழ்க! என்று, நின்

Koviloor Digital Library

பீடு கெழு நோன் தாள் பாடேன் ஆயின்,
படுபு அறியலனே, பல் கதிர்ச் செல்வன்;
யானோ தஞ்சம்; பெரும! இவ் வுலகத்து,
சான்றோர் செய்த நன்று உண்டாயின்,
இமயத்து ஈண்டி, இன் குரல் பயிற்றி,
கொண்டல் மாமழை பொழிந்த
நுண் பல் துளியினும் வாழிய, பலவே!

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : தலைவனின் இயல்புகளையும் அவன் முன்னோர் இயல்புகளையும் கூறுதல் இயன்மொழி. இப்பாடலில் 'பாணர்க்கு அகலாச் செல்வம் செய்தோன்' என அவனியல்பு பாராட்டியதால் இயன்மொழி ஆயிற்று.

உரை : ஆயிழையின் கணவ! 'பசுவின் பால்மடியினை அறுத்து அதுதரும் பயன் கெடுத்த தீவினையாளர்க்கும், மாட்சிமையுடைய அணிபுனைந்த மகளிர்தம் கருவைச் சிதைத்தவர்க்கும், பார்ப்பனருக்குத் தீமை புரிந்த கொடுமையானவர்க்கும் அவர்கள் பிழை செய்தவழி உண்டான தீவினையைப் போக்கும் வழிகள் உள்ளன. நிலம் கீழ் மேலாகப் பெயர்ந்தாலும் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தவர்க்குத் தீவினையிலிருந்து உய்வது என்றில்லை" என அறநூல் கூறிற்று அன்றோ.

புறாவின் கருமுட்டை போன்ற புன்மையான நிலத்தில் விளைந்த வரகரிசியைப் பாலிலிட்டுச் சமைத்த உணவைத் தேனுடன் கலந்துண்டனர்; சிறிய முயலின் கொழுத்த சூட்டிறைச்சியையும் என் சுற்றத்தார் தின்றனர்; இலந்தை மரமுயர்ந்த அகன்ற இடமுடைய மன்றத்தில், மறைக்காத உள்ளத்துடன், உளம்விரும்பும் இனிய

Koviloor Digital Library

மொழிகளைக் கூறிப் பெருந்திரளாகிய கொழுத்த சோற்றினை எம்போன்ற பாணர் உண்டனர். 'பாணர்க்கு நீங்காத செல்வம் முழுமையாக அளித்த எம் அரசன் வளவன் வாழ்க' என்று உன் பெருமையுடைய வலிய தாளைப் பாடுவேன்.

அவ்வாறு காலைப் பொழுதும் மாலைப்பொழுதும் நின்னைப் பாடேனாயின், வாழ்நாள் உணர்த்தும் பல கதிருடைய ஞாயிறு தோன்றுவதை நான் அறியாமற் போவேனாகுக. பெருமானே! யானோ எளியவன்; இந்த உலகத்தில் நல்லோர் செய்த நல்வினை உண்டாயின், இமயமலையில் திரண்டு இனிய ஓசையைச் செய்து கீழைக்காற்றால் உந்தப்பட்டு வரும் பெரிய மேகம் பொழிந்த நுண்ணிய பல நீர்த்திவலைகளினும் பல காலம் நீ வாழ்க.

உரை விளக்கம் : 'ஆன் முலை ..... அறம் பாடின்றே' என அறமுரைத்த நூல் எதுவென விளங்கவில்லை; இதன் ஒரு பகுதியாகிய 'ஒருவன் ..... உய்திஇல்' என்னும் அடிகள் 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் குறட்பாவை நினைவூட்டும். பழந்தமிழர்தம் நம்பிக்கையும் பின்பற்றிய அறமுறையையும் விளக்கும் பாடலாக அமைகிறது. 'காலை அந்தியும் மாலை அந்தியும்' என்றது எப்பொழுதும் என்னும் குறிப்புப் படநின்றது. 'கதிரவன் மறைவதை அறியாதுபோவேன்' என்றது 'நின்னைப் பாடேனாயின் அது பயனற்றது என உயிர்நீப்பேன்' என உணர்த்துதற்காம். எண்ண இயலாதனவற்றை வாழ்நாள் உவமையாக்கிப் பாடுதல் முன்னும் கூறினர். இங்கு மழைத் திவலைகள் அத்தகைய உவமையாக அமைந்தன.

பசு, பெண், பார்ப்பாரைப் பழந்தமிழர் உயர்வாக எண்ணினர் என்பது 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் போரில் தாக்கப்பட்டுவிடுதல் கூடாது' என்ற எண்ணத்தில் முன் அறிவிப்பு செய்த மரபினாலும் (புறம். 9) அறிக. இனி, 'பசுவதை, பெண்கொலை, பார்ப்பார் கொலை என வெளிப்படக் கூறுதலும்

Koviloor Digital Library

தகாது என்று மறைத்து 'ஆன்முலை அறுத்தல், கருச்சிதைத்தல், பார்ப்பார்த் தப்புதல்' என்று குறிப்பாகக் கூறினர் எனப் பழையவுரை பகரும். இப்பாடல் கருத்தைப் பரிமேலழகர் குறள் (110) விளக்கத்திற்கு எடுத்தாண்டுள்ளார்.

அருஞ்சொற்பொருள் : கழுவாய் – பரிகாரம்; புன்கம் – சோறு; ஒக்கல் – சுற்றம்; இரத்தி – இலந்தை; அமலை – திரள்; தஞ்சம் – எளிமை.

35

நளி இரு முந்நீர் ஏணி ஆக,
வளி இடை வழங்கா வானம் சூடிய
மண் திணி கிடக்கைத் தண் தமிழ்க் கிழவர்,
முரசு முழங்கு தானை மூவருள்ளும்,
அரசு எனப்படுவது நினதே, பெரும!
அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்,
அம் தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட,
தோடு கொள் வேலின் தோற்றம் போல,
ஆடு கண் கரும்பின் வெண் பூ நுடங்கும்
நாடு எனப்படுவது நினதே அத்தை; ஆங்க
நாடு கெழு செல்வத்துப் பீடு கெழு வேந்தே!
நினவ கூறுவல்; எனவ கேண்மதி! –
அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறை வேண்டு பொழுதில் பதன் எளியோர் ஈண்டு
உறை வேண்டு பொழுதில் பெயல் பெற்றோரே;
ஞாயிறு சுமந்த கோடு திரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவு நின்றாங்கு
கண் பொர விளங்கு நின் விண் பொரு வியன்குடை

Koviloor Digital Library

வெயில் மறைக் கொண்டன்றோ? அன்றே; வருந்திய
குடி மறைப்பதுவே; கூர்வேல் வளவ!
வெளிற்றுப் பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப,
களிற்றுக் கணம் பொருத கண் அகன் பறந்தலை,
வருபடை தாங்கி, பெயர் புறத்து ஆர்த்து,
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே;
மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்,
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,
காவலர்ப் பழிக்கும், இக் கண் அகல் ஞாலம்;
அது நற்கு அறிந்தனை ஆயின், நீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி
குடி புறந்தருகுவை ஆயின், நின்
அடி புறந்தருகுவர், அடங்காதோரே.

திணை : அது; **துறை** : செவியறிவுறூஉ.

அவனை வெள்ளைக்குடி நாகனார் பாடி, பழஞ்செய்க்கடன் வீடு கொண்டது.

துறை விளக்கம் : *தீதற்ற நற்கருத்தை மன்னர்க்கு உளங்கொள்ளுமாறு அறிவுறுத்துதல் செவியறிவுறூஉ. 'நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது, பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக் குடி புறந்தருக' என அறிவுரை கூறியதால் செவியறிவுறூஉ ஆயிற்று.*

உரை : *பெரும! செறிந்த பெரிய கடலே எல்லையாகக் கொண்டும் காற்று நுழைந்து செல்லாத பரப்புடைய வானத்துடன் பொருந்தியும் மண் செறிந்தும் விளங்கும் உலகு; இவ்வுலகில் குளிர்ந்த தமிழகத்திற்குரியதாய் ஆட்சிபுரியும், முரசுடைய படைகளுடைய முப்பெரு வேந்தர்களிலும் அரசு எனக்*

Koviloor Digital Library

கருதப்பெறுதற்கு உரியது நின்னுடையதே; சுடர் விளங்குகின்ற கதிர்களையுடைய ஞாயிறு நான்கு திசைகளிலும் தோன்றினாலும் ஒளியையுடைய கதிர்களையுடைய வெள்ளிமீன் தென் திசைக்குச் சென்றாலும், அழகிய குளிர்ந்த காவிரி கால்வாய் பலவாகப் பிரிந்து வளமூட்டி வரும், அதனால் வேலின் தொகுதிபோலக் காட்சி தரும், கணுக்களையுடைய கரும்பு அசையும்; அசையும் போது கரும்பின் வெண்மையான பூவும் அசையும். இத்தகைய நின் நாடே நாடு எனக் கருதப் பெறுவதற்குரியது. அவ்வாறாக, நாட்டில் பொருந்திய செல்வத்தால் உயர்ச்சியடைந்த வேந்தனே; உனக்கு ஒன்று கூறுவன்; என் மொழி கேட்பாயாக.

அறக்கடவுளின் ஆராய்ச்சி போலச் செங்கோலால் ஆராய்ந்து நீதி வேண்டும் காலத்தில், எளிதாக நின்னிடத்தில் நீதி பெறுதல் வேண்டும்; அதனை வேண்டும் காலத்தில் மழை பொழியப் பெற்றாரைக் கொண்டுணரலாம். ஞாயிற்றைத் தன்மேல் சுமந்து, பக்கம் திரண்ட மேகங்கள் வானில் நடுவே நின்று ஞாயிற்றின் வெம்மையை மறைக்கும். கண்ணைக் கவருமாறு அமைந்த விண்ணுயர்ந்த அகன்ற நின் குடை, வெயில் மறைப்பதற்காகவோ? அன்றே. நின் குடிகளின் வருத்தம் மறைய நிழல் செய்து காப்பதற்காக அமைந்தது.

கூரிய வேலுடைய வளவனே! இளம்பனை மரம் வெட்டுப்பட்டு வீழ்ந்தது போலத் துண்டங்களாக, யானைகள் போரிட்டு வீழ்ந்தன. அத்தகைய இடமகன்ற போர்க்களத்தில் போருக்கு எழும் படைகளை வென்று அவை புறம்பெயர்ந்து ஓடுதலைக் கண்டு ஆரவாரிக்கும்படி நின்படையினர் வெற்றியை விளைப்பர்; அவ்வெற்றியும் உழுபடையாகிய ஏரினால் நிலத்தில் ஊன்றி விளைந்த நெல்லின் பயனாகும்.

மழை பெய்யும் காலத்தில் பெய்யாமறபோனாலும் விளைவு குன்றினாலும், இயல்பாக அமையாதன மக்களின் செயற்கையால் தோன்றினாலும் இந்த இடமகன்ற உலகு, அரசரைப் பழிக்கும்.

Koviloor Digital Library

அதனை நன்கு நீ உணர்ந்திருந்தால், நீயும் அயலாரின் பழிச் சொற்களைக் கொள்ளாதும் ஏரைப் பாதுகாத்து உழவு புரிவோர்தம் குடியைக் காத்தும் அதனால் நின் குடிமக்களையும் காத்துவருவாய். அவ்வாறாயின் நின் பகைவரும் நின்னடியைப் போற்றி வணங்குவர்.

உரை விளக்கம் : ''வெள்ளைக் குடிநாகனார் தம் பழைய, விளை நிலங்களுக்கு இறை செலுத்த வேண்டியிருந்தது. அப்போது வளவனைப் பாடி இறை செலுத்துவதிலிருந்து விடுவிக்குமாறு கோரினார். அங்ஙனமே மன்னனும் இறையிலி நிலங்களாக அவற்றைக் கொண்டு அவர் இறை செலுத்துதலை நீக்கினான்,'' என்பது பாடல் தோன்றிய வரலாறு.

தமிழ்க் கிழவர் – தமிழ்நாட்டிற்குரிய மன்னராகிய மூவேந்தர். கதிரவன் திசை நான்கிலும் தோன்றுதல்; வெள்ளியாகிய கோள் தென் திசையில் இயங்குதல் ஆகியன மழை பொழியாது வறண்டு போகச் செய்வன எனப் பழந்தமிழர் நம்பினர். வளமிகுதி கூறுகையில், அவ்வாறு தீக்குறி தோன்றினும் நீர் வளம் குறையாது எனப்புனைதல் மரபு. 'வசையில் புகழ்வயங்கு வெண்மீன் திசை திரிந்து தெற்கேகினும்..... வான்பொய்ப்பினும் தான்பொய்யாக் .... காவிரி' (பட்டின. 1 – 6) 'வெள்ளி தென்புலம் படரினும் ..... காவிரிப் புதுநீர்க் கடுவரல்' (சிலம்பு. 10 : 102 – 8) எனப் பிறவிடத்தும் இப்புனைவினைக் காணலாம்.

நீதிநிலை பெற்றால் மக்கள் வேண்டுங் காலத்தில் மழை பொழியும். எனவே, நீதி நிலைபெற்றமையை, மழை பெறுவாரைக் கண்டேயுணர்லாம் என்றார். 'முறை கோடி மன்னவன் செய்யின் உறை கோடி ஒல்லாது வானம் பெயல்' என்றார் வள்ளுவரும் (குறள். 559) குடை நிழல் என்பது பகைவரான் வரும் துன்பம் முதலியன இன்றிக் காத்தலாகும்; எனவேதான் வெயில் மறைப்பதற்கன்று என்றார்.

உழவினால் உண்டாகும் பயனே வெற்றிக்குக் காரணம் என்பதை 'இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை

Koviloor Digital Library

விளைப்போர்' எனச் சிலம்பும் (சிலம்பு. 10. 149 – 150) கூறியது. அயலார், பகையுண்டாக்கும் மொழி கூறுதலை 'ஏதின் மாக்கள் பொதுமொழி' (புறம். 58) எனப் பின்னரும் வருதல் காண்க. உழவரைப் போற்றும் செயல் 'குடிபுறந்தருநர் பாரம் ஓம்பி' என்று பதிற்றுப்பத்தினுள்ளும் வந்தது (பதிற். 13).

நாட்டில் தீமை நிகழின் மன்னரைப் பழிக்கும் உலகு; இதனை 'மழை வளம் கரப்பின் வான் பேரச்சம்; பிழையுயிர் எய்தின் பெரும் பேரச்சம்; குடி புரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி, மன் பதை காக்கும் நன் குடிப் பிறத்தல், துன்பமல்லது தொழுதகவுஇல்' (சிலம்பு. 25. 100 – 104) எனச் சிலப்பதிகாரத்தும் உணர்க.

அருஞ்சொற்பொருள் : ஏணி – எல்லை; கனலி – சூரியன்; தோடு – தொகுதி; கொண்மூ – மேகம்; வெளிறு – உறுதியில்லாத; நொதுமலாளர் – அயலவர்.

36

அடுநை ஆயினும், விடுநை ஆயினும்,
நீ அளந்து அறிதி, நின் புரைமை – வார் கோல்,
செறி அரிச் சிலம்பின், குறுந் தொடி மகளிர்
பொலம் செய் கழங்கின் தெற்றி ஆடும்
தண் ஆன்பொருநை வெண் மணல் சிதைய,
கருங் கைக் கொல்லன் அரம் செய் அவ் வாய்
நெடுங் கை நவியம் பாய்தலின், நிலை அழிந்து,
வீ கமழ் நெடுஞ் சினை புலம்ப, காவுதொறும்
கடி மரம் தடியும் ஓசை தன் ஊர்
நெடு மதில் வரைப்பின் கடி மனை இயம்ப,
ஆங்கு இனிது இருந்த வேந்தனொடு, ஈங்கு, நின்
சிலைத் தார் முரசம் கறங்க,
மலைத்தனை என்பது நாணுத் தகவு உடைத்தே.

Koviloor Digital Library

திணை : வஞ்சி; துறை : துணை வஞ்சி

அவன் கருவூர் முற்றியிருந்தானை ஆலத்தூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : பகைவர்மேற் போர் செய்ய எழும் வஞ்சித் திணையின் ஒருதுறை துணைவஞ்சி; பகைவருடன் போரிட வந்தவனைத் தடுத்து அமைதிப்படுத்திப் போரைத் தவிரச் செய்தல். இருபெரு வேந்தர்க்கும் சந்து செய்வித்தல் எனவும் கூறப்பெறும். இப்பாட்டில் 'நெடுமதில் வரைப்பில் இனிதிருந்த வேந்தனொடு மலைத்தல் என்பது நாணத்தக்கது' என்று கூறிப் போரைத் தடுத்தமையால் துணைவஞ்சி ஆயிற்று.

உரை : (2 – 13) செறிந்த, பரல்கள் உடைய சிலம்பும் நீண்ட கோல்தொழிலமைந்த சிறிய வளையல்களும் அணிந்த மகளிர், குளிர்ந்த ஆன் பொருநையாற்று மணல் மேட்டிலே பொன்னாலாகிய கழற்சிக் காய்களைக் கொண்டு வீசி விளையாடுவர்; அவர்கள் விளையாடும் வெண்மணற்பரப்பு, சிதையுமாறு, வலிய கையையுடைய கொல்லனால் அராவிக் கூராக்கப்பட்ட அழகிய வாயையுடைய நெடிய கைப்பிடியை உடைய கோடரி கொண்டு நின் வீரர் காவல் மரங்களை வெட்டுவர்; அதனால் மலர் மணமுடைய நெடிய கிளைகள் பூக்கள் உதிர்ந்து பொலிவழியும்; இவ்வாறு சோலைகள் தோறும் காவல் மரங்களை வெட்டும் ஓசை தனது ஊரில் நெடிய மதில் எல்லையை உடைய காவலமைந்த மாளிகையிடத்துச் சென்றொலிக்கும்; எனினும் மானமின்றி, இனிதாக அங்கே உறையும் வேந்தனுடன், இங்கு வானவில் போன்ற நிறமுடைய மாலையையுடைய முரசு முழங்க நீ போரிட்டாய் என்பது நாணத்தக்கது.

(1 – 2) எனவே நீ பகைவேந்தனைக் கொன்றாலும் கொல்லாது விடுத்தாலும் அவற்றால் உனக்கு நேரும் உயர்ச்சியை நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. நீயே நன்கு எண்ணி அறிவாய்; எனவே இப்போரைத் தவிர்தலும் உண்டு.

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'நீ போரை விரும்பிப் பகைவர் காவல் மரங்களை வெட்டுகிறாய்; நின் பகைவன், மரங்கள் வெட்டப்படும் ஓசையைக் கேட்டும் போரிட வராது தன் மாளிகையிடத்தில் இருக்கிறான். இவ்வாறு வீரமற்றவன் நின்னால் கொல்லப்பட்டாலும் கொல்லப்படாவிட்டாலும் என்ன? கோழையுடன் அன்றோ நீ போரிடுவாய்; அது உனக்குப் புகழ் தருமா' என்னும் கருத்தில் 'நீ யளந்தறிதி' என்றார். 'போரைத் தவிர்தலும் உண்டு' என்பது அவாய் நிலையான் பெறப்பட்டது. 'சிலைத்தார்' என்றது வானவில் போன்ற பலவண்ணப் பூக்களுடைய மாலை என்பதற்காம்.

கோடரியால் பகைவரின் காவல் மரத்தை வெட்டுதல் 'வடிநவில் நவியம் பாய்தலின் ஊர்தொறும் அடிமரம் துளங்கிய கா்வு நெடுநகர்' என்று முன்னரும் கூறியது காண்க (புறம். 23.8 – 9) 'இனிதிருந்தனன்' என்பது குறிப்புமொழி; 'பகைவன் நின் போரின் கடுமையை உணராதான்; அவன் தன்னிடத்தில் பாதுகாப்பாக இனிதிருந்தான் என உரைத்தது. இவ்வாறே பின்னரும் வந்தமை (புறம். 44.9) காண்க.

இப்பாடல் 'உள்ளியது முடிக்கும் வேந்தன் சிறப்பு' எனும் தொல்காப்பியப் புறத்துறைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

அருஞ்சொற்பொருள் : அடுதல் – கொல்லுதல்; புரைமை – உயர்ச்சி, புகழ்; நவியம் – கோடரி; கறங்க – ஒலிக்க.

37

நஞ்சுடை வால் எயிற்று, ஐந் தலை சுமந்த,
வேக வெந் திறல், நாகம் புக்கென,
விசும்பு தீப் பிறப்பத் திருகி, பசுங் கொடிப்
பெரு மலை விடரகத்து உரும் எறிந்தாங்கு,

Koviloor Digital Library

புள் உறு புன்கண் தீர்த்த, வெள் வேல்,
சினம் கெழு தானை, செம்பியன் மருக!
கராஅம் கலித்த குண்டு கண் அகழி,
இடம் கருங் குட்டத்து உடன் தொக்கு ஓடி,
யாமம் கொள்பவர் சுடர் நிழல் கதூஉம்
கடு முரண் முதலைய நெடு நீர் இலஞ்சி,
செம்பு உறழ் புரிசை, செம்மல் மூதூர்,
வம்பு அணி யானை வேந்து அகத்து உண்மையின்,
'நல்ல' என்னாது, சிதைத்தல்
வல்லையால், நெடுந்தகை! செருவத்தானே.

திணை : வாகை; துறை : அரசவாகை; முதல் வஞ்சியும் ஆம்.

அவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

துறை விளக்கம் : அரசனின் இயல்பினை (வீரத்தை) எடுத்துரைத்தல் அரசவாகை. இப்பாடலில் 'நல்ல எண்ணாது சிதைத்தல் வல்லை' என மன்னனியல்பு கூறியதால் அரசவாகையாயிற்று.

தொன்மையான வரலாற்றையுடைய அரசர் குடியின் முன்னவரியல்பு கூறுதல் (முதுமொழி வஞ்சி) முதல் வஞ்சி. இப்பாடலில் 'புள்உறு புன்கண் தீர்த்த செம்பியன்' என முன்னோர் பாராட்டப் பெறுவதால் முதல் வஞ்சியுமாயிற்று.

உரை : (14) நெடுந்தகையே! புறாவின் துன்பம் தீர்த்தவனும், வெண்மையான வேலுடன் சினங்கொண்ட தானையை உடையவனுமான சோழனின் வழித்தோன்றலே!

(5 – 14) கராம் நிறைந்த ஆழ்ந்த இடமுடைய அகழி, இருள்பெற்ற ஆழ்ந்த இடத்தில் சேர்ந்து திரண்டோடியதும் இடையாமத்து இரவுக் காவலர்தம் விளக்குகளின் நிழல் படிந்ததும் கடுமையான மாறுபாடுடைய முதலைகள் உடையதுமான நீர்

Koviloor Digital Library

மிகுந்த மடு, செம்பினால் அமைந்த மதில்; இவற்றை உடைய செம்மையான பழைய ஊரில் முகபடாம் அணிந்த, யானையை உடைய அரசுகள் உள்ளமையால் அவற்றை நல்லன எனக் கருதாது போரில் அழிக்கவல்லவன்;

(1 – 4) நின் செயல் நஞ்சினைக் கொண்ட வெண்மையான பல்லுடன், ஐந்து படம் விளங்குகிற தலையைச் சுமந்த சினமும் வெம்மையான ஆற்றலும் உடைய பாம்பு அஞ்சிப் புகும்படி பசுமையான கொடிகளுடைய பெரிய மலையின் பிளவுகளில் இடி தாக்குவது போல் விளங்கும்.

உரை விளக்கம் : கழுகிடமிருந்து புறா ஒன்று தப்பி, சிபி எனும் மன்னனிடம் அடைக்கலம் புகுந்தது. அதனைத் தொடர்ந்து வந்த பருந்து, புறாவை வேண்ட, அதன் எடைக்குத் தகத் தன் தசையை அரிந்து தர முயன்றான். இறுதியில் புறாவின் எடையுடன் நேர் நில்லாததால் தானே துலைத்தட்டில் ஏறினான். இத்தகைய அருள் உள்ளமுடையவன் சிபி. இத்தொன்ம வரலாறு இந்நூலில் 39, 41, 46 ஆம் பாடலிலும் வந்தது. ‘அருளுடைய சிபியின் வழியினனாக இருந்தும் ‘நல்ல’ என்னாது பகைவரின் மதிலழித்தனை’ என வியந்ததாகக் கொள்க. சிபியின் வரலாறு பிற்கால நூல் பலவற்றிலும் போற்றப்பட்டது. கராம், முதலை ஒரே உயிரினத்தின் இருவேறுபட்ட சாதி; இவற்றை மதிலடுத்த அகழியில் இட்டு அயலார் புகாதபடி தடுப்பர். ‘கோள்வல் முதலைய குண்டுகண்ணகழி வானுறு ஓங்கிய வளைந்து செய் புரிசை’ (பதிற். 53) எனப் பதிற்றுப்பத்தும் பழந்தமிழரின் மதிற்காவலைக் கூறும்.

மின்னலைக் கொடியெனல் மரபு; எனவே பெருங்கொடி விடரகத்துப் பசுங்கொடி உரும் எனக் கூட்டினும் அமையும்; அதற்கு மின்னலையுடைய இடி எனப் பொருள் கொள்க; மின்னல் கொடி எனப்படுதல் ‘இருள் போழும் கொடிமின்னு’ (கலித். 141) என்பதனால் அறியலாம்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : வால் – வெண்மை; எயிறு – பல்; விடரகம் – மலைக்குகை; குட்டம், குண்டு – ஆழம்; யாமம் கொள்பவர் – இரவுக்காவலர்; வம்பு – முகபடாம்; செரு – போர்.

38

வரை புரையும் மழ களிற்றின் மிசை,
வான் துடைக்கும் வகைய போல,
விரவு உருவின கொடி நுடங்கும்
வியன் தானை விறல் வேந்தே!
நீ, உடன்று நோக்கும்வாய் எரி தவழ,
நீ, நயந்து நோக்கும்வாய் பொன் பூப்ப,
செஞ் ஞாயிற்று நிலவு வேண்டினும்,
வெண் திங்களுள் வெயில் வேண்டினும்,
வேண்டியது விளைக்கும் ஆற்றலை ஆகலின்,
நின் நிழற் பிறந்து, நின் நிழல் வளர்ந்த,
எம் அளவு எவனோ மற்றே? 'இன் நிலைப்
பொலம் பூங்காவின் நல் நாட்டோரும்
செய் வினை மருங்கின் எய்தல் அல்லதை,
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவது அன்மையின், கையறவு உடைத்து' என,
ஆண்டுச் செய் நுகர்ச்சி ஈண்டும் கூடலின்,
நின் நாடு உள்ளுவர், பரிசிலர் –
ஒன்னார் தேஎத்தும், நின்னுடைத்து எனவே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

அவன், 'எம் உள்ளீர்? என் நாட்டீர்?' என்றாற்கு ஆவூர் மூலங்கிழார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : தலைவனின் இயல்பினை மொழிந்து நிற்கும் துறை இயன்மொழி. இப்பாட்டில் 'வேண்டியது விளைக்கும் ஆற்றலை' என்று அவனியல்பு கூறியதால் இது இயன்மொழியாயிற்று.

உரை : மலை போன்ற இளங்கன்றாகிய யானைமீது விண்ணைத் தடவுவது போலப் பல நிறங்கள் விரவிய கொடிகள் அசைந்து தோன்றும்படி விளங்கும் பரந்த படைகளுடைய வெற்றி வேந்தனே! நீ சினந்து பார்க்குமிடம் தீப்பற்றும்; நீ அருளுடன் பார்க்குமிடம் பொன் பொலியும்; நீ செம்மையான ஞாயிற்றில் நிலவுண்டாக்க வேண்டினாலும், வெண்மையான நிலவிடம் வெயிலை உண்டாக்க வேண்டினாலும் வேண்டியவற்றை உண்டாக்கும் வலிமையுடையவன்.

இனிய நிலையுடன் பொன்னாலாகிய பூ விளங்குகிற கற்பகச் சோலையையும் உடைய நல்ல விண்ணுலகத்தவர் தாம் செய்த நல்வினையால் இன்பம் அடைவர். மாறாகச் செல்வமுடையார் இரவலர்க்குத் தருவதும் இரவலர் செல்வமுடையாரிடத்து இரத்தலும் அவ்வுலகில் நிகழா; எனவே அது செயலுக்கு உகந்தது அன்று எனக் கருதுவர் பரிசிலர்; அவ்விண்ணுலக இன்பத்தை இங்கேயே அடைவதால், உன் நாட்டில் நீ உள்ளாய் என்ற மனக்கருத்தில் பகை நாட்டிலிருந்தும் பரிசிலர் நின்னை வந்தடைவர். உன்னுடைய அருளாகிய நிழலில் பிறந்து வளர்ந்த எம் மனநிலையைக் கூறவேண்டுமோ? வேண்டாமன்றோ.

உரை விளக்கம் : 'எம்மைக்கருதி வந்த நீவிர் எந்நாட்டினர்?' என மன்னன் கேட்கப் 'பகைவர் நாட்டிலிருந்தும் நின்னை நாடி வருகின்றார்கள்; நானோ நின்னுடைய குளிர்ந்த ஆட்சியையுடைய நாட்டில் பிறந்து வளர்ந்தவன். நானும் நின்னையே நாடிவந்தேன்' என்றார். நின் நிழல்பிறந்து என்பதை மன்னனுடைய ஆட்சிக்காலமாகக் கொண்டுரைக்க வேண்டா; அவன் முன்னோர் ஆண்ட வெண் கொற்றக் குடைநிழலை இவனுடையதாக உரைத்தனர். 'துறக்கத்தில் இரத்தலும் இல்லை; பெறுதலும் இல்லை,

Koviloor Digital Library

எனவே பரிசிலர் துறக்க உலகினும் பெரும்பயனுடையது, அங்கு பெறும் மகிழ்ச்சி நின்னாட்டிலேயே பெறுதல் எளிது' எனப் புலவர் வந்தனர். ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து வாழ்வாரே வன்கணவர்' என்றார் வள்ளுவரும்.

''செஞ்ஞாயிற்று ..... வெயில் வேண்டினும்' என்றது ஆற்றலை மிகுத்துக் கூறுதற்காம். ஞாயிற்றில் நிலவின் தண்மையும் நிலவில் ஞாயிற்றின் வெம்மையும் உண்டாக்க வல்லவன் என்பதால் அவனுடைய கருதியது முடிக்கும் ஆற்றலுணர்த்தினார். பகைவர் அவனால் வருந்துவர் என்பதையும் அவனருள் பெற்றோர் மகிழ்வர் என்பதையும் கண்ணின் பார்வையால் விளையும் பயனாகக் குறித்தனர். 'மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட, நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப' (பெரும். 423 – 4) என்றும் 'நட்டவர் குடியுயர்க்குவை, செற்றவர் அரசு பெயர்க்குவை' (மதுரைக் 131 – 2) என்றும் கூறினர் பிறரும். பொன் பொலிய என்பதை இரவலர்க்கு வழங்கும் பொன்னாகக் கருதுதலும் அமையும்.

அருஞ்சொற்பொருள் : உடலுதல் – சினத்தல்; பொலம்பூங்கா – கற்பகச் சோலை; ஒன்னார் – பகைவர்; தேஎம் – நாடு.

39

புறவின் அல்லல் சொல்லிய, கறை அடி
யானை வால் மருப்பு எறிந்த வெண் கடைக்
கோல் நிறை துலாஅம் புக்கோன் மருக!
ஈதல் நின் புகழும் அன்றே; சார்தல்
ஒன்னார் உட்கும் துன் அருங் கடுந் திறல்
தூங்கு எயில் எறிந்த நின் ஊங்கணோர் நினைப்பின்,
அடுதல் நின் புகழும் அன்றே; கெடு இன்று,
மறம் கெழு சோழர் உறந்தை அவையத்து,
அறம் நின்று நிலையிற்று ஆகலின், அதனால்

Koviloor Digital Library

முறைமை நின் புகழும் அன்றே; மறம் மிக்கு
எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள்,
கண் ஆர் கண்ணி, கலி மான், வளவ!
யாங்கனம் மொழிகோ யானே – ஓங்கிய
வரை அளந்து அறியாப் பொன் படு நெடுங் கோட்டு
இமயம் சூட்டிய ஏம விற்பொறி,
மாண் வினை நெடுந் தேர், வானவன் தொலைய,
வாடா வஞ்சி வாட்டும் நின்
பீடு கெழு நோன் தாள் பாடுங்காலே?

திணையும் துறையும் அவை.

அவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

துறை விளக்கம் : *இப்பாடலில் 'ஈதல் நின்புகழன்று; அடுதல் நின் புகழன்று; முறைமை நின் புகழன்று' என்று கூறி அவன் முன்னோரின் செயல்களைப் பாராட்டினர். எனவே மன்னன் நற்குடியில் பிறந்த இயல்பு தோன்றியமையால் இயன்மொழியாயிற்று. முன்னோர் செயல்கூறி வாழ்த்துதலும் இயன்மொழியாகும்.*

உரை : *(1 – 12) கறைபடிந்த அடியை உடைய யானையின் வெண்மையான தந்தத்தை வெட்டிக் கடைந்து அமைத்த, வெண்மையான கடைப்பகுதி அமைந்த கோலாகிய நிறுக்கும் துலாக்கோல்; அதில் புறாவின் வருத்தத்தைப் போக்குவதற்காகத் தானே ஏறிநின்ற சோழன் வழித்தோன்றலே! இரப்பவர்க்குத் தருதல் உன்னுடைய இயல்பன்றிப் புகழ் அன்று; பகைவர் உளம் நடுங்கி அஞ்சுவதும் அணுகுவதற்கு அரியதும் மிகுந்த வலிமையானதுமான தூங்கெயிலை அழித்த நின் முன்னோரை நினைப்பின், இன்று பகைவரை வெல்லுதலும் நின் புகழ் அன்று; வீரமுடைய சோழர்களின் உறந்தை அவைக்களத்தில் தீமையின்றி, அறம் நின்று நிலைத்தது. எனவே, முறைமை செய்து அறம் கூறுதலும் நின் புகழ் அன்று; வீரம் மிகுந்து எழுந்த போருக்கு எதிர்ந்து வென்றவனும்*

Koviloor Digital Library

கணைய மரத்துடன் மாறுபடும் திண்மையான தோளுடையவனும் கண்ணுக்கு அழகிய மாலையை அணிந்தவனும் செருக்குடைய குதிரையை உடையவனுமாகிய வளவ!

(13 – 15) உயர்ந்து, அளந்துணரப்படாத அளவு பொன் படர்கின்ற நெடிய சிகரங்களைக் கொண்ட இமயமலை; அங்கு தனக்குக் காவலான வில்லின் இலச்சினையைப் பொறித்தவனும் மாட்சிமைப்பட்ட வேலைப்பாடுடைய நெடிய தேருடையவனுமாகிய சேரன் அழிய அவனது அழிவில்லாத கருவூரை அழித்தாய். இத்தகைய உயர்ச்சி பொருந்திய நின் வலிய தாளைப் புகழ்ந்துபாடும்போது எவ்வாறு நான் உணரக் கூறுவேன்?

உரை விளக்கம் : தூங்கெயில் என்பது விண்ணில் இடைப் பகுதியில் அவுணர் அமைத்த அரண்; இதனைப் பதிற்றுப்பத்து, 'கடவுள் அஞ்சி வானத்திழைத்த தூங்கெயில்' (பதிற். 31 : 18 – 19) என்று கூறும். தேவர்கள் அஞ்சிய தூங்கெயிலைச் சோழன் மரபினோன் ஒருவன் அழித்தான் என்பது, 'தூங்கெயில் எறிந்த ..... நற்றேர்ச் செம்பியன்' (சிறு. 79 – 82) 'தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்' (சிலம்பு. 27.164 – 5) எனப் பலவாறு கூறிப் போற்றப்பட்டுள்ளது. அவன் புகழுடைய குடியில் பிறந்தவன். அவன் குடியின் சிறப்புகள் யாவும் அவனிடத்தில் இயல்பாகத் தங்கிற்று எனும் கருத்தில் 'புதுவதாக யாங்ஙனம் மொழிவேன்?' என்றார். சேரன் இமயத்தில் விற்பொறித்தமையை 'அருவி இமையம் விற்பொறித்து' எனக் (பதிற். பதிகம் – 2) கூறும். வாடா வஞ்சி என்றது வாடும் வஞ்சியாகிய கொடியினின்று வஞ்சியாகிய கருவூரை வேறுபடுத்துவதற்காம். மேலும் அழிவில்லாத வஞ்சியை அழித்தான் என்னும் சிறப்புத் தோன்றுவதற்காக எனினும் அமையும். முன் 'பூவா வஞ்சி' (புறம். 32) என்பதும் அது. உறந்தை அவைக்களம் அறம் நிலைபெற விளங்கியமை 'அறந்துஞ்சு உறந்தை' (புறம். 58.9) 'அறங்கெழு நல்லவை உறந்தை (அகம். 93) என்பவற்றாலும் அறியமுடிகிறது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : *ஊங்கணோர் – முன்னோர்; ஏமம் – காவல்; வாடா வஞ்சி – கருவூர்; உறழ் – மாறுபட்ட; வானவன் – சேரன்; பீடு – உயர்ச்சி.*

40

நீயே, பிறர் ஓம்புறு மற மன் எயில்
ஓம்பாது கடந்து அட்டு, அவர்
முடி புனைந்த பசும் பொன் நின்
அடி பொலியக் கழல் தைஇய
வல்லாளனை; வய வேந்தே! –
யாமே, நின் இகழ் பாடுவோர் எருத்து அடங்க,
புகழ் பாடுவோர் பொலிவு தோன்ற,
இன்று கண்டாங்குக் காண்குவம் – என்றும்
இன்சொல் எண் பதத்தை ஆகுமதி – பெரும!
ஒரு பிடி படியும் சீறிடம்
எழு களிறு புரக்கும் நாடு கிழவோயே!

திணை : *அது;* **துறை :** *செவியறிவுறூஉ.*

துறை விளக்கம் : *தீதற்ற நற்கருத்தை மன்னர்க்கு உளங்கொள்ளுமாறு அறிவுறுத்துதல் செவியறிவுறூஉ. இப்பாடலில், ‘இன்று கண்டாங்குக் காண்குவம், என்றும் இன்சொல் எண் பதத்தை ஆகுமதி’ என்று அறிவுரை கூறியதால் செவியறிவுறூஉ ஆயிற்று.*

உரை : *(10 – 11) பெண்யானை ஒன்று படியும் சிறிய இடத்தில் ஏழு யானைகளைக் காக்கின்ற உணவு வளம் நிறைந்த நாட்டிற்கு உரியவனே!*

(1 – 9) பகைவர் காத்துநின்ற வீரம் நிலைத்த மதில்களைப் பாதுகாவாது எதிர்த்து அழித்து, பகைவரைக் கொன்றாய்;

Koviloor Digital Library

அதன் அடையாளமாக அவர்தம் பொன்முடியின் பசும் பொன்னினால் நின் அடி அழகுறக் கழலை அணிந்தாய்; அத்தகைய வலிய ஆண்மையை உடையவனே; வெற்றி வேந்தனே! நீ இன் ்சால்லை உடையவனாயும் எளிமை உடையவனாயும் என்றும் விளங்குக. நின்னைப் பழிப்போர்தம் கழுத்து வணங்கவும் நின்னைப் புகழ்வோர் பொலிவுறவும் காட்சி தருகிறாய்; அவ்வாறே நாங்கள் காணுமாறு நீ இன்று விளங்குவது போல என்றும் விளங்குக.

உரை விளக்கம் : பகைவர் முடியின் பொன்னால் வீரக்கழல் புனைந்தனன்; எனவே 'பகை இல்லை' என உணர்த்தினார். பகைவர்தம் முடிப்பொன்னை அவரை வென்றதன் அடையாளமாகத் தான் கழலாகவோ ஆரமாகவோ சூடுதல் மன்னரியல்பு; 'எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலம்' (பதிற். 14) என்னும் அடி பகைவர்தம் முடிப்பொன்னை ஆரமாக்கிப் புனைந்தமை கூறும். 'பிடி படியுமிடம் எழுகளிறு புரக்கும்' என்றதால் பொருள் வளத்தால் நிறைவு பெற்றமையை உணர்த்தினார். இவ்வாறு பகையின்மையாலும் பொருள் வளத்தாலும் செருக்குறாது விளங்குக எனல் வேண்டி 'இன்சொல் எண்பதத்தை ஆகுமதி' என்றார். 'காட்சிக் கெளியன் கடுஞ் சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்' என்ற குறட்பா (குறள். 386) இணைத்தெண்ணத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : ஓம்புதல் – காத்தல்; கடந்து – வென்று; அட்டு – கொன்று; தைஇய – அணிந்த; எருத்து – கழுத்து; எண்பதம் – எளிமை; பிடி – பெண் யானை; களிறு – ஆண்யானை.

41

காலனும் காலம் பார்க்கும்; பாராது,
வேல் ஈண்டு தானை விழுமியோர் தொலைய,
வேண்டு இடத்து அடூஉம் வெல் போர் வேந்தே!
திசை இரு – நான்கும் உற்கம் உற்கவும்,

Koviloor Digital Library

பெரு மரத்து, இலை இல் நெடுங் கோடு வற்றல் பற்றவும்
வெங் கதிர்க் கனலி துற்றவும், பிறவும்,
அஞ்சுவரத் தகுந புள்ளுக் குரல் இயம்பவும்,
எயிறு நிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்,
களிறு மேல் கொள்ளவும், காழகம் நீப்பவும்,
வெள்ளி நோன் படை கட்டிலொடு கவிழவும்,
கனவின் அரியன காணா, நனவில்
செருச் செய் முன்ப! நின் வரு திறன் நோக்கி,
மையல் கொண்ட ஏமம் இல் இருக்கையர்,
புதல்வர் பூங் கண் முத்தி, மனையோட்கு
எவ்வம் கரக்கும் பைதல் மாக்களொடு
பெருங் கலக்குற்றன்றால் தானே – காற்றோடு
எரி நிகழ்ந்தன்ன செலவின்
செரு மிகு வளவ! நிற் சினைஇயோர் நாடே.

திணை : வஞ்சி; துறை : கொற்றவள்ளை.

அவனைக் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : பகைவரை எதிர்த்துப் போர் மேற்செல்லும் வஞ்சித் திணையின் ஒருதுறை கொற்றவள்ளை. இது பகைவர் நாட்டின் அழிவுகூறி மன்னனது புகழை எடுத்துரைத்தல் ஆகும். இப்பாட்டில் 'எரிநிகழ்ந்தன்ன செலவுடைய வளவன்' என்று மன்னனைப் புகழ்ந்தும் 'நின்னைச் சினமுறச் செய்தவர் நாடு பெருங்கலக்குற்றன' என்று பகைவர் நாட்டினை எண்ணி இரங்கியும் கூறியமையால் கொற்றவள்ளை ஆயிற்று.

உரை : தன்னால் உயிர் பற்றப் படுவதற்குக் காலனும் உரிய காலம் பார்த்திருப்பான்; ஆனால் உரிய காலம் பாராது, வேல் செறிந்த படையுடைய விழுமியோர் அழியுமாறு நீ வேண்டியபோது கொன்று வெல்லும் போரை உடைய வேந்தே!

Koviloor Digital Library

எட்டுத்திசைகளிலும் எரிகொள்ளி எரிந்து வீழும்; பெரிய மரத்தின் இலையில்லாத பெரிய கிளை உலர்ந்து போகும்; வெம்மையான கதிர்களுடைய ஞாயிறு பலவிடங்களிலே செறிந்து தோன்றும்; மேலும் அச்சம் தரும் பறவைகள் ஓசையெழுப்பும்; இவ்வாறு நனவினில் பல தீய குறிகளைக் கண்டாய்;

பல் பூமியில் விழுந்தது போலும் எண்ணெயினைத் தலையில் தடவியது போலும் ஆண் பன்றி மீது ஏறுவதுபோலும் ஆடையைக் களைந்தது போலும் வெண்மையான வலிய படைக்கருவி தானிருந்த கட்டிலோடு கீழே கவிழ்வது போலும் உள்ளம் பொறுப்பதற்கு அரிய பல தீய குறிகளைக் கனவில் கண்டாய்; கண்ட தீய குறிகளைக் கருதாது நனவில் போர்புரியும் வலிமையுடையவனே! போர்க்களத்தில் காற்றும் நெருப்பும் கலந்து சுழல்வது போல இயங்கும் பேராற்றலுடைய வளவனே!

நீ போர்மேற் செல்லும் தன்மையைக் கருதி மயக்கமுற்றுக் காவலில்லாது இருப்போர் தம் புதல்வருடைய பூப்போலும் கண்களை முத்தமிடுவதன் மூலம் தம் மனைவியர்க்குத் தம்முடைய துன்பத்தை மறைப்பர்; இத்தகைய துன்புறும் வீரருடன், நின்னைச் சினமுறச் செய்தோரின் நாடுகளும் மிகுந்த கலக்கத்தையடைந்தன.

உரை விளக்கம் : "காலனும் காலம் பார்க்கும் பாராது ... அடூஉம் வேந்து" என்றது 'ஒருவன் உயிரைக் கவர்கின்ற காலம் வரும் வரை காலனும் பொறுத்திருப்பான். 'உண்ணும் துணையும் காக்கும் கூற்று' (பழ. 89) 'காலம் பார்க்கும் காலன்' (பெருங். 1.37, 205) எனப் பிறவிடத்தும் காலனின் இயல்பு கூறப்பட்டது. ஆனால் சோழன் அவ்வாறு பொறுத்திரான்; பகைவரை அழிக்கக் கருதிய பொழுதே போருக்கு எழுவான் என உணர்த்தினார். இவ்வாறு போருக்கு எழுகையில் நல்ல, தீய குறிகள் தென்படுகின்றனவா; அவற்றின் உட்பொருள் யாது என அறிதல் மரபு. ஆனால் தீய குறிகள் கண்டாலும் போருக்கு எழுந்த மன்னன் பின்

Koviloor Digital Library

கொள்கையினின்று வழுவாது போர் புரிவான் என்பதை இப்பாட்டில் புலவர் உணர்த்தினார். நனவிலும் கனவிலும் பல தீய குறிகள் நிகழ்ந்தன. எரிகொள்ளி வீழ்தல், மரம் வற்றுமாறு ஞாயிறு பலவிடத்தும் தோன்றுதல், கோட்டான் முதலிய பறவைகள் ஒலியெழுப்புதல் ஆகியன நனவினில் கண்ட தீக்குறிகள். பல் விழுதல், எண்ணெய் பூசிக்கொண்டு நீராடுதல், பன்றியின் மீதூர்தல் கட்டில் கவிழ்தல் ஆகியன கன்வினில் கண்டவை. ஆயினும் இவற்றால் மனங்கலங்காது போர் செய்பவன் சோழன் என உணர்த்தினார். இத்தகைய மனவலிமை 'நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு எங்கோன் ஏயினன்' எனப் (தொல். புறத். 3 நச்சர், மேற்கோள்) பிறவிடத்தும் வந்தது. இவ்வாறே புள்ளின் தீய நிமித்தம் கருதாது செல்லும் நலங்கிள்ளி புட்பகை எனப்பெற்றான் (புறம். 68).

தம் புதல்வர்க்கு முத்தமிடுவதற்காகக் குனிகையில் தன் கண்களில் பெருகிய நீரை மனைவியர் அறியாது பகைப்புல வீரர் மறைப்பர். இதனால் கிள்ளிவளவனுக்கு அஞ்சிய அவரியல்பு கூறப்பட்டது. மன்னனின் சினத்தால் பகைவர் நாடு அழியும் என்று உறுதிபட மொழிதல் 'சிதைந்தது மன்ற நீ சிவந்தனை நோக்கலின்' (பதிற். 27) எனப் பதிற்றுப் பத்தினுள்ளும் வந்தது.

அருஞ்சொற்பொருள் : உற்கம் – எரிகொள்ளி; துற்றுதல் – தோன்றுதல்; எயிறு – பல்; முத்தி – முத்தமிட்டு; எவ்வம் – துன்பம்; பைதல் – துன்பம்.

42

ஆனா ஈகை, அடு போர், அண்ணல்! நின்
யானையும் மலையின் தோன்றும்; பெரும! நின்
தானையும் கடல் என முழங்கும்; கூர் நுனை
வேலும் மின்னின் விளங்கும்; உலகத்து
அரைசு தலை பனிக்கும் ஆற்றலை ஆதலின்,

Koviloor Digital Library

புரை தீர்ந்தன்று; அது புதுவதோ அன்றே;
தண் புனற் பூசல் அல்லது, நொந்து,
'களைக வாழி, வளவ!' என்று நின்
முனை தரு பூசல் கனவினும் அறியாது,
புலி புறங்காக்கும் குருளை போல,
மெலிவு இல் செங்கோல் நீ புறங்காப்ப,
பெரு விறல் யாணர்த்து ஆகி, அரிநர்
கீழ் மடைக் கொண்ட வாளையும், உழவர்
படை மிளிர்ந்திட்ட யாமையும், அறைநர்
கரும்பில் கொண்ட தேனும், பெருந்துறை
நீர் தரு மகளிர் குற்ற குவளையும்,
வன்புலக் கேளிர்க்கு வரு விருந்து அயரும்
மென்புல வைப்பின் நல் நாட்டுப் பொருந!
மலையின் இழிந்து, மாக்கடல் நோக்கி,
நில வரை இழிதரும் பல் யாறு போல,
புலவர் எல்லாம் நின் நோக்கினரே;
நீயே, மருந்து இல் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண்டன்ன முன்பொடு,
மாற்று இரு வேந்தர் மண் நோக்கினையே.

திணை : வாகை; துறை : அரசவாகை.

அவனை இடைக்காடனார் பாடியது.

துறை விளக்கம் : அரசனின் இயல்பு கூறுதல் அரசவாகை. இப்பாட்டில் 'பகையரசர் நடுங்கச் செய்யும் ஆற்றலுடையாய்' என்றதால் கிள்ளிவளவன் இயல்பு கூறினர். எனவே அரசவாகையாயிற்று.

உரை : (1 – 6) அளவிறந்த பெரிய ஈகையையும் பகையைக் கொல்லும் போரையும் உடைய தலைவனே! நின்யானை மலைபோல விளங்கும். பெருமானே! நின் படை கடல்போன்று ஆரவாரிக்கும்;

Koviloor Digital Library

கூரிய முனையையுடைய வேலும் மின்னலைப் போல ஒளிவிடும்; நீ உலகத்தில் பகையரசர் தலை நடுங்குவதற்குரிய வலிமையை உடையவன்; ஆதலால் குற்றமற்று விளங்குகிறாய்; இது புதியதும் அன்று; நின் குடிப் பெருமையால் தொன்றுதொட்டு வருவதாகும்.

(7 – 12) குளிர்ந்த நீர்ப்பெருக்கு உண்டாக்குகிற பூசலேயன்றி வருந்தி 'எம் துயர் களைக' என்று முன்னே வீரத்துடன் செல்லும் படையினர் செய்யும் பூசலை நீ கனவினும் அறியாய். புலிகாக்கும் குட்டிபோலக் குறைவில்லாத செங்கோன்மையால் நீ பாதுகாப்பாய்.

(12 – 24) பெருஞ்சிறப்புடைய புதுவருவாய் உடையாகும் நின் நாடு. நெல் அறுப்பவர் நீரின் கடைமடையில் கொண்ட வாளை மீனையும், உழுபவர் தம் கருவியால் கொண்ட ஆமையையும் கரும்பு வெட்டுவார் கரும்பிடமிருந்து பெற்ற தேனையும் பெரிய நீர்த்துறையில் நீரை முகக்கும் பெண்டிர் பறித்த செங்கழுநீர் மலர்களையும் வன்மையான நிலங்களுடைய ஊர்களிலிருந்து வரும் சுற்றத்தார்க்கு விருந்தாக விரும்பி வழங்குவர். அவ்வாறு வழங்குமாறு மென்மையான நிலங்களை உடையதாயும் விளங்குவது நின் நாடு; நல்ல நாட்டிற்குரிய தலைவ; மலையிலிருந்து இறங்கி நில எல்லையை விட்டகலும் ஆறுகள் பலவும் பெருங்கடலை நோக்கிச் செல்லும்; அத்தகைய ஆறுகளைப் போன்று புலவர்கள் நின்னையே நோக்கினர். நீயோ, மாற்று இல்லாத குந்தாலிப்படை வருந்தச் சுழற்றிக் கூற்றுவன் சினந்தது போல வலிமையுடன் மாற்றாராகிய இருவேந்தர்தம் நாடுகளைக் கொள்ள நோக்கினாய்.

உரை விளக்கம் : 'பொருந! புலவர் நின்னை நாடி வந்தனர்; நீ பகைவர் நடுக்குறும் வண்ணம் வீர ஆற்றல் வாய்ந்தவன்; எனவே, நீ பகைவர் நாடு கொள்ள நோக்கினாய்' என்பதால் புலவர்கட்கு வழங்குவதன் பொருட்டுப் பகை நாட்டினை நோக்கினான் என்பது உணரலாம். நீரின் பூசலின்றிக் குடியினரோ படையினரோ செய்யும் பூசலில்லாது விளங்கும் நாடு; எனவே 'கனவிலும் அறியாது' என உரைத்தார். நீர்ப்பூசலின்றி வேறு பூசலின்று என்பது, 'உருத்துவரு

Koviloor Digital Library

மலிர் நிறைச் செந்நீர்ப் பூசல் அல்லது வெம்மையரிது நின் அகன்தலை நாடு' எனச் (பதிற். 28 : 12 – 14) சேரர் நாடு கூறப் பெற்றதன் மூலமும் அறியலாம். 'நீ கூற்றுவனை ஒப்பச் சினத்துடன் விளங்குகிறாய் என்பதால் அவனுடைய சின மிகுதி கூறிற்று. கூற்றுவனின் சினத்திற்கு மாற்றமின்றி, (பிழைக்கும் வழியற்று) கூற்றுவன் கருதியதுபடி உயிர் பறித்தலால் அவன் கணிச்சியாகிய மழு, 'மருந்தில் கணிச்சி' எனப் பெற்றது.

அருஞ்சொற்பொருள் : பனித்தல் – நடுங்குதல்; முனை – படை; குருளை – குட்டி; குற்றுதல் – பறித்தல்; வைப்பு – ஊர்; வட்டித்து – சுழற்றி; முன்பு – சினம்.

43

நிலமிசை வாழ்நர் அலமரல் தீர,
தெறு கதிர்க் கனலி வெம்மை தாங்கி,
கால் உணவு ஆக, சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருள, கொடுஞ்சிறைக்
கூர் உகிர்ப் பருந்தின் ஏறு குறித்து, ஒரீஇ,
தன் அகம் புக்க குறு நடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக!
நேரார்க் கடந்த முரண் மிகு திருவின்
தேர்வண் கிள்ளி தம்பி! வார் கோல்,
கொடுமர மறவர் பெரும! கடு மான்
கை வண் தோன்றல்! ஐயம் உடையேன்;
'ஆர் புனை தெரியல் நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்று இது
நீர்த்தோ நினக்கு?' என வெறுப்பக் கூறி,
நின் யான் பிழைத்தது நோவாய் என்னினும்,
நீ பிழைத்தாய் போல் நனி நாணினையே;

Koviloor Digital Library

'தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும்' என,
காண்தகு மொய்ம்ப! காட்டினை; ஆகலின்,
யானே பிழைத்தனென்; சிறக்க நின் ஆயுள் –
மிக்கு வரும் இன் நீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே!

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணனும் வட்டுப் பொருவுழி, கை கரப்ப, வெகுண்டு வட்டுக் கொண்டு எறிந்தானை, 'சோழன் மகன் அல்லை' என நாணியிருந்தானைத் தாமப்பல் கண்ணனார் பாடியது.

துறை விளக்கம் : இப்பாடலில் 'தம்மைப்பிழைத்தோரைப் பொறுக்கும் செம்மல்' என்னும் அரசனியல்பு கூறியதால் அரசவாகையாயிற்று.

உரை : நிலத்தில் வாழ்வோரின் துன்பம் நீங்க, சுடுகின்ற கதிரை உடைய ஞாயிற்றின் வெப்பத்தைத் தாங்கியும், காற்றை உணவாகக் கொண்டும் ஒளியோடு திரியும் இயல்பினர், விளங்கிய சடையை உடைய முனிவர்கள்; வளைந்த சிறகினையும் கூரிய நகங்களையும் கொண்ட ஆண் பருந்தின் தாக்குதலில் இருந்து தப்பித் தன்னிடம் வந்த குறுகிய நடையை உடைய புறாவின் அழிவுக்கு அஞ்சித் துலாக்கோலின் தட்டில் அமர்ந்த அளவில்லாத கொடைமையை உடையவனைக் கண்டு அம்சு முனிவர்களும் வியப்பால் மயங்கினர்; அத்தகைய வலிமையானவனின் வழித்தோன்றலே! பகைவரை வென்ற மாறுபாட்டால் அடைந்த மிக்க செல்வத்தையுடையவனும் தேர் வழங்கும் வன்மையானுமாகிய கிள்ளியின் தம்பியே! நீண்ட அம்பினையும் வளைந்த வில்லினையும் உடைய வீரர்களின் தலைவனே!

Koviloor Digital Library

விரைந்த குதிரையையுடைய கைவண்மை மிக்க தலைவனே! நின் பிறப்புக் குறித்து நான் ஐயமடைகின்றேன்; ஆத்திப்பூவால் செய்த மாலையை அணிந்த நின் முன்னோர் யாவரும் பார்ப்பனர் மனம் நோகும் செயல்களைச் செய்யார்; ஆயினும் இவ்வெறுக்கத்தக்க செய்கை உனக்குரிய இயல்பாகுமோ?" என நீ மனம் வெறுக்குமாறு நான் கூறினேன். உன் மீது நான் பழி கூறிப் பிழை செய்ய, நீ என்னைவிடப் பிழை செய்தவன் போல் மிகவும் நாணமடைந்தாய்; இவ்வாறு தமக்குப் பிழை செய்தோரைப் பொறுத்தருளும் தலைமை, இக்குலத்தில் பிறந்தவர்க்கு எளிமையாகக் காணப்படும் பண்பாகும்; இப்பண்பினை நான் காணுமாறு வெளிப்படுத்தினாய். ஆகவே, பிழை செய்தவன் யானே; வலிமையுடையோய், மிகுதியாய்ப் பெருகும் இனிய நீரை உடைய காவிரி குவித்த மணலினும் பலவாக நின் வாழ்நாள் சிறப்பதாக.

உரை விளக்கம் : மாவளத்தானும் தாமப்பல் கண்ணனாரும் வட்டாடினர்; வட்டுக்காய்கள் காணாமற் போயின; அதனால் வெகுண்ட சோழன் வட்டுக் காய்களைப் புலவர் மீது வீசினான்; புலவர் 'பார்ப்பார் மனம் வருந்தச் செய்தல் சோழர்க்கு இல்லையே; நீ என்னை வருத்தினாய்; நீ சோழன் வழிவந்தவன் அல்லன்' எனக் கூறினார். இதனால் தன் குடிப் பெருமை கருதித் தான் நாணியிருந்தான். மாவளத்தானின் பெரும் பண்பு கருதி, 'நான் தவறு செய்தவனாக நீ தவறு செய்தவன் போல் வருந்தினை; இது நின் குடியின் சிறப்பு' என்றார். இதனால் 'நீ சோழன் மகனே; வருந்தற்க' எனப் போற்றினார் எனலாம். 'ஆர்புனை தெரியல்' என்பதால் சோழனின் குடியுணர்த்தப் பெற்றது.

'நிலமிசை ..... முனிவர்' என்னும் அடிகளுக்கு 'உயிர் வாழ்வார்க்கு வெம்மையான் உளதாகிய சுழற்சி நீங்க ..... ஞாயிற்றினது வெப்பத்தைத் தாம் பொறுத்து' எனப் பழையவுரை விளக்கம் தரும். மேலும் முனிவரின் இத்தகைய பண்பினை முருகாற்றுப்படையின் உரையில் நச்சினார்க்கினியர், 'ஞாயிற்றின் வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்தல் ஆற்றாவென்று கருதித்

Koviloor Digital Library

தமதருளினால் சுடரொடு திரிந்து அவ்வெம்மையைப் பொறுக்கின்ற முனிவர்' (முருகு. 107 உரை) என்பதும் எண்ணத்தக்கது. பிறரைப் பேணும் இயல்புடைய முனிவரும் மருளுமாறு புறாவின் துன்பம் கருதித் துலாத் தட்டேறினான் சிபிச்சக்கரவர்த்தி. இச்செய்தி புறம். 37, 39 ஆகிய பாடல்களிலும் கூறியமை காண்க.

பழந்தமிழர் பார்ப்பனரை உயர்வாகப் பேணினர் என்பதனை 'பார்ப்பார் நோவன செய்யார்' என்னும் அடி உணர்த்தும். 'பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே' (பதிற். 63), 'பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும் (புறம். 34) முதலான அடிகளிலும் அந்தணரைப் பேணுதலும், அவர்க்குத் தீங்குறுத்தல் கூடாது என்பதும் உணர்த்தப் பெற்றன.

'மற்றிது நீர்த்தோ நினக்கு' என்றது 'நின் குடியினர் பார்ப்பனர் மனம் நோகச் செய்யாதிருக்க நீ ஏன் மனம் நோகச் செய்தனை' என்ற வினாவின் மூலம் 'நீ சோழன் குடியினன் ஆகாய்' எனப் பழித்துரைக்கவாம்.

மன்னனின் ஆட்சிக்குரிய பகுதியின் ஆற்றில் மணலின் எண்ணிக்கையினும் பல நாட்கள் வாழ்க என வாழ்த்துதல் இலக்கிய மரபு. எனவே 'காவிரி எக்கரிட்ட மணலினும் பலவாக ஆயுள் சிறக்க' என்றார் இம்மரபை, 'நின் பெயர் வாழியரோ ... காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே' (பதிற். 48), 'நன்னீர் பஃறுளி மணலினும் பலவே' (புறம். 9) என்னும் அடிகளாலும் உணரலாம்.

அருஞ்சொற்பொருள் : அலமரல் - மனச்சுழற்சி, துன்பம்; கனலி - கதிரவன்; கால் - காற்று; ஒரீஇ - நீங்கி; தபுதி - அழிவு; சீரை - துலாம் ஆகிய சமன் நிறுக்கும் கோல்; நீர்த்து - தன்மைத்து; எண்மை - எளிமை.

Koviloor Digital Library

44

இரும்பிடித் தொழுதியொடு பெருங் கயம் படியா,
நெல்லுடைக் கவளமொடு நெய்ம் மிதி பெறாஅ,
திருந்து அரை நோன் வெளில் வருந்த ஒற்றி,
நிலமிசைப் புரளும் கைய, வெய்து உயிர்த்து,
அலமரல் யானை உரும் என முழங்கவும்,
பால் இல் குழவி அலறவும், மகளிர்
பூ இல் வறுந் தலை முடிப்பவும், நீர் இல்
வினை புனை நல் இல் இனைகூஉக் கேட்பவும்,
இன்னாது அம்ம, ஈங்கு இனிது இருத்தல்;
துன் அருந் துப்பின் வய மான் தோன்றல்!
அறவை ஆயின், 'நினது' எனத் திறத்தல்;
மறவை ஆயின், போரொடு திறத்தல்;
அறவையும் மறவையும் அல்லையாக,
திறவாது அடைத்த திண் நிலைக் கதவின்
நீள் மதில் ஒரு சிறை ஒடுங்குதல்
நாணுத்தகவு உடைத்து, இது காணுங்காலே.

திணையும் துறையும் அவை.

அவன் ஆவூர் முற்றியிருந்த காலத்து அடைத்து இருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : *நெடுங்கிள்ளி மதிற்கதவு அடைத்திருக்க, 'அறவுணர்வுடையனும் அல்லன்; மறவுணர்வுடையோனும் அல்லன்' என அவனியல்பு பழித்து 'நினதெனத் திறத்தல் அல்லது போரிடத் திறத்தல்' அரசர் இயல்பு கருதிக் கூறியதால் அரசவாகையாயிற்று.*

உரை : *(10) நெருங்குவதற்கு அரிய பெரும் வலிமையுடைய தலைவனே!*

Koviloor Digital Library

(1 – 9) கரிய பெண்யானைக் கூட்டத்துடன பெரிய பொய்கையில் நீராடாமலும் நெல்லையுடைய உணவினுடன் நெய்யைக் கலந்து வழங்கும் கவளத்தை உண்ணாமலும் யானைகள் விளங்கும்; அவை திருந்திய அடிப்பகுதியை உடைய வலிய தூணை வருந்தச் சாய்த்து நிலத்தில் புரளும் கைகளையுடையன; பெருமூச்சு விட்டு இடிபோல முழங்கித் திரிகின்றன;

பாலில்லாது குழந்தைகள் அழுகின்றன; மகளிர் பூவின்றி வெறுங்கூந்தலை முடிக்கின்றனர்; நல்ல வினைப்பாடு அமைந்த வீட்டிலுள்ளோர் நீரில்லாது வருந்திக் கூவுகின்றனர். இவ்வாறிருந்தும் இங்கு இனிதாக நீ தங்கியிருத்தல் இன்னாதது;

(11 – 16) நீ அறமுடையவனாயின் மதிலை முற்றியிருக்கும் நலங்கிள்ளியிடம் உன்னுடையது 'இவ்வூர்' எனக் கூறி மதிலைத் திறந்து விடுக; வீரமுடையவனாயின் போரின் பொருட்டு மதிலைத் திறப்பாயாக;

நீயோ அறவுணர்வில்லாதவனாயும் வீரவுணர்வு இல்லாதவனாயும், திறவாமல் அடைத்த திண்ணிய நிலைத்த கதவினையுடைய நெடிய மதிலின் ஒருபுறம் ஒதுங்கியவனாய் இருக்கின்றாய். ஆராயும் காலத்து இச்செயல் நாணம் தருவதாய் அமைந்தது.

உரை விளக்கம் : பகைவர்தம் யானைகள் போரின் பொருட்டுத் திரிகின்றன; நின் குடிகள் மதிலடைத்தமையால் உரிய பொருள் பெற இயலாது துன்புறுவர் என்பதால் முறையே வீரவுணர்வும் அறவுணர்வும் எடுத்துரைக்கப்பெற்றன. பகையானைகள் போருக்கு எழுந்தும் இவன் போரிட முயலவில்லை. எனவே, வீரவுணர்வில்லை என்றும்; தன் குடிகள் வருந்துவதைக் கண்டும் மதிலடைத்தமையால் அறவுணர்வில்லை என்றும் கூறினார். குடிகள் வருந்துமாறு அரசன் இனிதிருத்தல் அரசருக்கு இன்னாச் செயல். எனவே, 'இன்னாதம்ம ... ஈங்கு இனிதிருத்தல்' என்றார். தன் நாடு, நகர் முற்றுகையிடப்

Koviloor Digital Library

பட்ட நிலையில் போரிடாது தன் அரணிடத்தில் இனிதாக இருத்தல் பழியுடையது என்பது புறம் 36ஆம் பாடலிலும் வந்தது.

படை யானைக் கூட்டம் நீர்த்துறைகளைக் கலக்கும் என்பது 'துறைநீர்க் கைமான் கொள்ளுமோ' (புறம். 96) என்பதாலும் பெறப்பட்டது.

அருஞ்சொற்பொருள் : வெளில் – தூண்; உரும் – இடி; இனைகூ – கூவி அழும்; துப்பு – வலிமை.

45

இரும் பனை வெண் தோடு மலைந்தோன் அல்லன்;
கருஞ் சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
நின்ன கண்ணியும் ஆர் மிடைந்தன்றே; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்தன்றே;
ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்,
குடிப்பொருள் அன்று, நும் செய்தி; கொடித் தேர்
நும் ஓர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம் மலி உவகை செய்யும் இவ் இகலே.

திணை : வஞ்சி; துறை : துணைவஞ்சி.

சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றி இருந்தானையும், அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : பகைத்துப் போரை விரும்பிச் செல்லுதல் வஞ்சித் திணையாகும். அவ்வாறு போர் கருதிச் செல்வோனிடம் 'போரைத் தவிர்க்குமாறு அறிவுறுத்துதலும் சினத்துடன் கொல்லக் கருதியவனை அமைதிப்படுத்துதலும் துணை வஞ்சியாகும்.

Koviloor Digital Library

இது சந்து செய்வித்தல் எனப்படும். இப்பாடலில் 'குடிப்பொருள் அன்று நும் போராகிய செய்கை' என அறிவுறுத்திப் போரைத் தவிர்த்தமையால் துணை வஞ்சியாயிற்று.

உரை : நின் பகைவன், பெரிய பனையின் வெண்மையான தோட்டினை மாலையாக அணிந்த சேரனும் அல்லன்; கரிய கிளைகளுடைய வேம்பின் மலர்களை மாலையாக அணிந்த பாண்டியனும் அல்லன். உன்னுடைய மாலையும் ஆத்தி மலர்களால் தொடுக்கப்பட்டது; உன்னுடன் போரிடுவோன் மாலையும் ஆத்தி மலர்களால் தொடுக்கப்பட்டது. உம்முள் எவர் ஒருவர் தோற்றாலும் தோற்பவர் உம் சோழர் குடியினரே; நீங்கள் இருவரும் ஒரு சேர வெல்லுதல் உலக இயல்பன்று; எனவே, உம் செயல் உம்முடைய குடிப்பெருமைக்கு உரியதன்று; நீங்கள் செய்யும் இப்போர், உம்மைப்போன்று கொடியமைந்த தேருடைய மன்னர்களுக்கு உடல் பூரிக்குமாறு பெருமகிழ்ச்சியைச் செய்யும்; ஆகவே இப்போரைத் தவிர்க்க வேண்டும்.

உரை விளக்கம் : தாம் ஒரே குடியினராய் இருந்தும் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகை கொண்டனர்; நலங்கிள்ளி பகை காரணமாக நெடுங்கிள்ளி ஆளும் உறையூரை முற்றுகையிட்டான். இதனால் விளையும் பழியுணர்த்திக் கோவூர்கிழார் போரை நீக்கினார். முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய மாலை, இப்பாடலில் சுட்டப்பெற்றன. பனத்தோட்டினாலாகிய மாலை சேரர்க்கும் வேம்பினாலாகிய மாலை பாண்டியர்க்கும் ஆத்தியால் ஆகிய மாலை சோழர்க்கும் உரியன. 'போந்தை வேம்பே ஆர் என வரும் மாபெருந்தானையர் மலைந்த பூவும்' என்று தொல்காப்பியமும் மூவேந்தரின் பூக்கள் பற்றிக் கூறிற்று. ஐயரவர்கள் 'தோற்பது உம் குடியே' என்னும் பாடம் கொண்டனர்.

சோழர்குடியினர் தம்முள் பகைத்தால் 'சோழன் ஒருவன் தோற்றான்' என்ற பழி சோழர் குடிக்கு நேரும். எனவே, 'குடிப்பொருள் அன்று' என்றார். தாயத்தாரின் உட்பகை

Koviloor Digital Library

அயலவர்க்கு மகிழ்ச்சியைத் தரும்; அதனால் கேடு நிகழும். எனவே, போரைத் தவிர்க்க வற்புறுத்தினார்.

அருஞ்சொற்பொருள் : தெரியல் – மாலை; ஆர் – அத்தி; வேறல் – வெல்லுதல்; இகல் – பகை.

46

நீயே புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி,
தமது பகுத்து உண்ணும் தண் நிழல் வாழ்நர்;
களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன் தலைச் சிறாஅர்; மன்று மருண்டு நோக்கி,
விருந்தின் புன்கணோ உடையர்;
கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே!

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கு இடுவுழி, கோவூர்கிழார் பாடி, உய்யக் கொண்டது.

துறை விளக்கம் : மலையமானின் மக்களை யானைக்காலால் இடறி வீழ்த்தக் கிள்ளிவளவன் கருதினன். அப்பொழுது அவனைத் தடுத்து அச்சிறுபிள்ளைகளைக் கோவூர்கிழார் காப்பாற்றினார். 'கேட்டனை ஆயின் வேட்டனை செய்க' எனக் கூறிக் கொல்லாமற் சந்து செய்வித்தமையால் துணைவஞ்சி ஆயிற்று. (இப்பாட்டு போர்மேல் செல்லுதலாக அமையாமையால் துணை வஞ்சி அன்று என்பர் நச்சர்).

Koviloor Digital Library

உரை : நீ புறாவின் துன்பம் மட்டுமின்றிப் பிற உயிர்களின் துன்பத்தையும் தீர்த்த சோழனின் வழித்தோன்றல்; மெல்லிய தலையையுடைய இச்சிறுவரோ, அறிவால் உழுதுண்ணும் புலவர்களின் வறுமைக்கு அஞ்சித் தம் பொருளைப் பகுத்துண்ணுவோரும் குளிர்ந்த நிழலினை உடையவருமானோர் மரபில்வந்தவர்கள்; புல்லிய தலையை உடைய சிறுவர்களாகிய இவர்தாம் (தம்மைக் கொல்ல வரும்) யானையைக் கண்ட அளவில், அதனைக் கண்டமும் அழுகையையும் மறந்தனர்; பலரும் கூடிய பொது மன்றத்தில் அச்சத்துடன் நோக்கிப் புதியதொரு வருத்தமும் அடைந்தனர்; எம்மொழி கேட்டாயானால் நீ விரும்பியது செய்க.

உரை விளக்கம் : 'புறாவிற்காகத் தன்னைத் தந்த மரபினனாய் இருந்தும் மலையமானின் சிறுபிள்ளைகளைக் கொல்லக் கருதுதல் குடிக்குப் பெருமையன்று' என அறிவுறுத்தினார். மலையமானின் மக்களும் நற்குடியினரே எனக் கூறிப் 'புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சிப் பகுத்துண்டு வாழும் மரபினர்' என்றார். புலன் உழுது உண்மார் – புலவரைக் குறித்தது. அறிவையே கருவியாகக் கொண்டு மனத்தினை உழுது பயன்கொள்பவர் என்பது பொருள். சொல்லேர் உழவர் என்றாற் போல இதனைக் கொள்க. களிறு கண்டு அழுகையை மறந்தனர் என்பது களிறு கண்ட அளவில் தம் துன்பம் மறந்து மகிழ்ச்சியுறும் பேதைச் சிறார் என உணர்த்தியது. விருந்தின் புன்கண் – புதிய வருத்தம். இதுநாள்வரை துன்பமறியாத இளம்பிள்ளைகள், முதன் முறையாகத் துன்புற்றனர் என உணர்த்திற்று. 'வேட்டது செய்ம்மே' என்றது 'என் சொல் கேட்டால் நீ விரும்பியதைத் தவிர்வாய்' என்னும் குறிப்புடன் நின்றது; செய்ம்மே – என்றது செய்யாதே எனும் கருத்துப்பெற வைத்தது. இனி 'நீ, நான் வேண்டியதைச் செய்க' என வலிந்து கூறுதலும் பொருந்தும்.

அருஞ்சொற்பொருள் : மருகன் – வழித்தோன்றல்; அழாஅல் – அழுகை; விருந்து – புதுமை; வேட்டது – விரும்பியது.

Koviloor Digital Library

47

வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,
'நெடிய' என்னாது சுரம் பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடி,
பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே; திறப்பட
நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,
ஆங்க இனிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்
மண் ஆள் செல்வம் எய்திய
நும் ஓர் அன்ன செம்மலும் உடைத்தே.

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனை, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி 'ஒற்று வந்தான்' என்று கொல்லப் புக்குழி, கோவூர் கிழார் உய்யக் கொண்டது.

துறை விளக்கம் : சோழன் நலங்கிள்ளியிடமிருந்து நீங்கி நெடுங்கிள்ளியின் உறையூரை 'இளந்தத்தன்' என்ற புலவன் அடைந்தான். அவனை நெடுங்கிள்ளி 'ஒற்றன்' எனக் கருதிக் கொல்லத் துணிந்தான்; அப்பொழுது புலவனைக் கொல்லாதவாறு நெடுங்கிள்ளியைத் தடுத்தார் கோவூர்கிழார்; இப்பாட்டில் 'புலவர் நும்மோரன்ன செம்மல்' எனக் கூறிக் கொல்லாது தடுத்தமையால் துணைவஞ்சியாயிற்று. இதுவும் போர்மேற் செல்லுதலாக அமையாமையால் துணை வஞ்சியன்று என மறுப்பார் நச்சர்.

உரை : இரவலர், பழுத்த மரம் தேர்ந்து செல்லும் பறவை போலக் கொடைக்குரியவரைக் கருதிச் செல்வர்; 'நீண்டவழி' எனக்

Koviloor Digital Library

கருதாது கடத்தற்கரிய பல பகுதிகளையும் கடந்து செல்வர்; குற்றமில்லாத தெளிந்த சொற்களால் தமக்கியன்றவாறு பாடிப் பரிசில் பெறுவர்; அப்பரிசிலைத் தம் சுற்றத்தினருக்குத் தந்தும், தம்மிடம் மறைத்துக் கொள்ளாது தாமும் உண்டும், தம் உள்ளம் மலரப் பிறர்க்கு வழங்கியும் வாழ்வர்; தம்மை ஆதரிப்பார் தமக்குச் செய்யும் சிறப்பின் பொருட்டு வருந்தும் பரிசில் வாழ்க்கையை உடையவர்; இத்தகைய வாழ்க்கை, பிறருக்குத் தீமை புரிய அறியுமா எனில் அறியாது; பல நுட்பமமைந்த கல்வியின் சிறப்பால் தம்மை எதிர்ந்தோர் நாணும்படி பெருமையுடன் தலையுயர்த்திச் சென்றவிடத்தும் இனிதாக நடக்கும் இயல்புடையது; அதுவேயன்றி உயர்ந்த புகழுடைய, நிலமாளும் செல்வத்தை அடைந்த உம்மை போன்ற மன்னர்களின் தலைமையையும் உடையது.

உரை விளக்கம் : கொடை வண்மை யுடையவரை நாடி வருதல் புலவரியல்பு; அவ்வாறே இளந்தத்தன் எனும் புலவர் நெடுங்கிள்ளியை நாடினார். ஆனால் 'ஒற்றன்' எனக் கருதினான் நெடுங்கிள்ளி; அவரைக் கொல்லாது கோவூர்கிழார் தடுத்தற்குக் குறிப்புப் பொருளுடன் பாடியது இப்பாட்டு. புலவனைக் கொல்லுதல் குற்றம் என வெளிப்படக் கூறாது தானே உணரவைத்தார். 'நெடுங்கிள்ளி ஒற்று வந்தான் எனக் கொல்லப்புக்குழி அவ்வரசற்கு வருகின்ற துகளினைக் கோவூர்கிழார் புலப்படாமற் செய்யுள் செய்து ..... பொருளை நிறுத்துதலின் பழிகரப்புச் செவியுறை அங்கதம்' என இப்பாட்டைச் சான்று காட்டி விளக்குவர் நச்சினார்க்கினியர் (தொல். செய்யுளியல். 128).

புள்ளின் போகி என்றது பழுத்த மரத்தைத் தேர்ந்து செல்லும் பறவைகளை ஒப்பர் பரிசிலர் என்றுணர்த்தியது. இவ்வுவமை புறம் (370. 11) பொருநராற்றுப்படை (64.7) மதுரைக்காஞ்சி (576–80) எனப் பிறவிடத்தும் வந்தது. வடியாநா என்பதனைத் 'திருந்தாதநா' என்று பழைய உரை கூறும். கலித்தொகையில் (141.18) வடியாநா என்பதனை 'வழுவிய சொற்கள் சொல்லாதபடி தெள்ளிய நா' என்றார் நச்சர். நச்சரின் பொருளே ஈண்டு கொள்ளப்பெற்றது.

Koviloor Digital Library

வல்லாங்குப் பாடுதல் என்பது தாமறி அளவையில் பாடுதலாகும். தாம் பெற்ற பொருளைப் பலருக்குத் தரும் பண்பினால் மன்னனுடன் ஒப்பிட்டு 'நும்மோரன்ன செம்மல்' என்றார். பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தும் பண்பை 'நின் நயந்துறைநர்க்கும், நீ நயந்துறைநர்க்கும், பன்மாண் கற்பினின் கிளை முதலோர்க்கும் கடும்பின் கடும்பசி தீர யாழநின் நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும் ... எல்லோர்க்கும் கொடுமதி' (புறம். 163.1) என்னும் புறப்பாட்டாலும் உணரலாம்.

அருஞ்சொற்பொருள் : வள்ளியோர் – கொடையாளர்; சுரம் – கடத்தற்கரிய பாலை வழி; செம்மல் – தலைமை.

48

கோதை மார்பின் கோதையானும்,
கோதையைப் புணர்ந்தோர் கோதையானும்,
மாக் கழி மலர்ந்த நெய்தலானும்,
கள் நாறும்மே, கானல்அம் தொண்டி;
அஃது எம் ஊரே; அவன் எம் இறைவன்;
அன்னோற் படர்தி ஆயின், நீயும்
எம்மும் உள்ளுமோ – முது வாய் இரவல்! –
'அமர் மேம்படூஉம் காலை, நின்
புகழ் மேம்படுநனைக் கண்டனம்' எனவே.

திணை : பாடாண்திணை; துறை : புலவராற்றுப்படை.

சேரமான் கோக்கோதை மார்பனைப் பொய்கையார் பாடியது.

துறை விளக்கம் : தாம் பெற்ற பெருவளத்தைப் பெறார்க்குச் சென்று பெறுமாறு வழிப்படுத்திக் கூறுதல் ஆற்றுப்படை; புலவரை ஆற்றுப்படுத்தினால் அத்துறை புலவராற்றுப்படை ஆகும்.

Koviloor Digital Library

இப்பாடலில் புகழ் மேம்படுத்துபவன் என்று தன்னைக் கூறியமையால் புலவர் என்ற குறிப்புப் பிறந்தது. அவ்வாறு 'தொண்டி எம் ஊர்; கோதை எம் இறைவன்; அன்னோன் படர்தி' என்றதால் புலவராற்றுப்படை ஆயிற்று.

உரை : முதிய, வாய்மையையுடைய இரவலனே! கோதை எனும் சேரன் அணிந்த மாலையாலும், அவனுடன் கூடிய மகளிர் அணிந்த மாலையாலும், கரிய நீர்ப்பரப்பிடத்து மலர்ந்த நெய்தலாலும், கடற்கரைச் சோலையையுடைய நகரமான தொண்டி, தேன்மணம் வீசும். அஃது எம்முடைய ஊர்; கோதையாகிய மன்னனே எம் தலைவன்; அவனிடத்தே செல்வாயானால், ''நீ போரில் மேம்பட்டு விளங்கும் போது, நின் புகழை உயர்த்திக் கூறுபவனைக் கண்டோம்'' என்று எம்மையும் நினைத்து அவனிடம் கூறுவாயாக.

உரை விளக்கம் : முதலிரு அடிகளின் முதற் சீர்களில் மன்னன் பெயர் அமைந்தது. கோதை என்பது சேரன் பெயரையும் மாலையையும் சுட்டும். நீர்ப்பரப்பில் பூக்களை உடைய தொண்டி என்பது, ''வியன் கானல் தெண் கழி மிசைச் சுடர்ப் பூவின் தண்தொண்டி' என்பதாலும் கூறப்பெற்றது. அரசர் புகழ் மேம்படுத்தல் புலவர்க்கு இயல்பு; எனவே தன்னைப் புலவர் என்று குறிக்க, 'புகழ் மேம்படுநன்' என்றார். முதுவாய் இரவலன் என்றது நெடுங்காலப் பழமை பெற்ற வாய்மையையுடைய இரவலன்; பரிசில் வேண்டிப் பொய்கூறும் இயல்பினன் அல்லன் என்பது குறிப்பு; இவ்வாறு கூறப்பெறுதலைப் புறம் (180.9), பதிற்றுப்பத்து (66) ஆகியவற்றாலும் அறிக.

அருஞ்சொற்பொருள் : கழி – நீர்ப்பரப்பு; கானல் – கடற்கரைச் சோலை; அமர் – போர்.

Koviloor Digital Library

49

நாடன் என்கோ? ஊரன் என்கோ?
பாடு இமிழ் பனிக் கடற் சேர்ப்பன் என்கோ?
யாங்கனம் மொழிகோ, ஓங்கு வாட் கோதையை? –
புனவர் தட்டை புடைப்பின், அயலது
இறங்கு கதிர் அலமரு கழனியும்,
பிறங்கு நீர்ச் சேர்ப்பினும், புள் ஒருங்கு எழுமே!

திணையும் துறையும் அவை; துறை இயன்மொழியும் ஆம்.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : *புலவன் ஒருவனை வள்ளலிடம் ஆற்றுப்படுத்தும் துறை புலவராற்றுப்படை. வள்ளல் பெயரும் இருப்பிடமும் கூறுதல் ஆற்றுப்படையில் அமையும் ஒரு கூறு. இப்பாடலில் அவ்வாறு கூறும் போது மன்னனை எவ்வாறு மொழிதல் கூடும் எனத் தடுமாறியது போலக் கூறினார். இதனால் வள்ளலை அறிமுகஞ் செய்தலாகிய தன்மை பெறப்பட்டது. எனவே, ஆற்றுப்படையாயிற்று. மன்னனின் இயல்பைப் புகழ்ந்தமையால் இயன்மொழியும் ஆயிற்று.*

உரை : *(4 – 6) தினைப்புனம் உடையவர்கள், தங்கள் புனத்தினில் வந்து தினைக்கதிருண்ணும் கிளிகளை விரட்ட, தட்டை எனும் கிளி கடிகருவியால் ஒலி எழுப்புவர்; அருகே, நீர் மிகுதியால் சுழல்கின்ற வளைந்த நெற்கதிர்களைக் கொண்ட வயல்களிலிருந்தும் செறிந்த கடலுடன் பொருந்திய நிலப்பரப்பிலிருந்தும், தட்டையின் ஓசையைக் கேட்டு அஞ்சிய பறவைகள் உடன் எழும்;*

(1 – 3) ஆதலால் உயர்த்திய வாளையுடைய கோதையை, குறிஞ்சி நிலம் உடையவனாகையால் 'நாடன்' என்பேனோ? மருதநிலம் உடையவனாகையால் 'ஊரன்' என்பேனோ?

Koviloor Digital Library

ஒலிக்கின்ற குளிர்ந்த கடற்பகுதி உடையவனாகையால் 'சேர்ப்பன்' என்பேனோ? எவ்வாறு உரைப்பேன்.

உரை விளக்கம் : பழைய உரை 'கோதை மார்பனின் நாடு நானில வளமும் உடையது எனக் குறித்தமையால் அவனை நாடிப் பொருள் பெறுக' என ஆற்றுப்படுத்தினார் என்று கூறும். குறிஞ்சி முல்லை நிலம் உடைய தலைவன் நாடன் எனப் பெறுவான்; மருதநிலத் தலைவன் ஊரன் எனப்பெறுவான்; நெய்தல் நிலத் தலைவன் சேர்ப்பன் எனப்பெறுவான். தினைப்புனத்தில் கிளியைக் கடிந்து ஒப்பும் ஓசை மருதநிலத்திலும் கடற்பகுதியிலும் பறவைகளை அஞ்சிடச் செய்யும். எனவே நானிலமும் ஒருங்கு பெற்ற வளமுடையவன் என உணர்த்தினார். புனவர் என்பது குறிஞ்சி நில மக்களையும் முல்லை நில மக்களையும் குறிக்கும். எனவே இருநிலமும் குறித்தார் என்க. கிளி கடிந்து ஒப்புதல் 'தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்' (அகம். 188) எனப் பிறவிடத்தும் வந்தது.

அருஞ்சொற்பொருள் : என்கோ? – என்பேனோ?; தட்டை – கிளிகடி கருவி; இறங்கு – வளைந்த; பிறங்கு – செறிந்த.

50

மாசு அற விசித்த வார்புறு வள்பின்
மை படு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண் பொறி மணித் தார்,
பொலங் குழை உழிஞையொடு, பொலியச் சூட்டி,
குருதி வேட்கை உரு கெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்தன்ன மென் பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர,
இரு பாற்படுக்கும் நின் வாள் வாய் ஒழித்ததை

Koviloor Digital Library

அதூஉம் சாலும், நல் தமிழ் முழுது அறிதல்;
அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சி, தண்ணென
வீசியோயே; வியலிடம் கமழ,
இவண் இசை உடையோர்க்கு அல்லது, அவணது
உயர் நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல் –
வலம் படு குருசில்! நீ ஈங்கு இது செயலே?

திணை : *அது;* **துறை** : *இயன்மொழி.*

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை முரசு கட்டில் அறியாது ஏறிய மோசி கீரனைத் தவறு செய்யாது, அவன் துயில் எழுந்துணையும் கவரி கொண்டு வீசியானை மோசி கீரனார் பாடியது.

துறை விளக்கம் : *அரசனின் பண்புகளை இயல்புற மொழிதல் இயன்மொழி; இப்பாட்டில், 'வாள்வாய் ஒழித்தாய்; தமிழ் முழுதும் அறிந்தவன்; தண்ணென வீசியோய்' என இரும்பொறையின் சிறந்த குணங்களைக் கூறியமையால் இயன்மொழியாயிற்று.*

உரை : *(1 – 5) நின் வீர முரசு, குற்றம்தீர இறுகப் பிணித்துக் கட்டப்பட்ட வாரையுடையது; கரியமரத்தால் அமைந்ததால் கருமை படர்ந்த பக்கங்களையுடையது; மயிலின் தழைத்து நீண்ட தோகைகளால் ஒளிபொருந்திய புள்ளியையுடைய நீலமணி போன்ற மாலையாகக் கொண்டு சூட்டப்பெற்றது. அதனுடன் உழிஞையின் பொன் போன்ற தளிர்களும் அழகு பெறச் சூட்டப் பெற்றது; இத்தகைய பொலிவுடன் குருதியைப் பலிகொள்ளும் வேட்கையுடையதாய் அச்சம் தருவதாயும் நின் முரசு விளங்கும்.*

(6 – 17) அந்த முரசினை நீராட்டிக் கொண்டு வரும் முன் எண்ணெய் நுரையை முகந்து பரப்பியது போல மென்மையான

Koviloor Digital Library

பூக்களையுடைய கட்டிலில், அது முரசுகட்டில் என அறியாது ஏறிக் கிடந்துறங்கினேன். ஆயினும் சினத்துடன் இரு கூறாக்கும் உன் வாளின் வாயால் என்னைக் கொல்லாது விடுத்தாய்; நீ நல்ல தமிழின் இனிமை முழுதும் உணர்ந்தவனாகையாலே அச்செயல் உனக்கே உரியது. அது மட்டுமன்று; என்னருகே வந்து உன்னுடைய வலிமையான முழவு போன்ற தோளை உயர்த்திக் குளிர்ச்சியுடன் கவரி வீசவும் செய்தாய். இந்த அகன்ற உலகில் பரந்த புகழுடையார்க்கு அல்லாது பிறர்க்கு உயர்நிலை உலகமாகிய அங்கு தங்குதல் இயலாது என நன்கு கேட்டிருந்த தன்மையாலோ நீ அருளுடன் எனக்குக் கவரி வீசினாய்? வெற்றியையுடைய தலைவ! நீ செய்தது எதனாலோ? கூறுவாய்.

உரை விளக்கம் : இரும்பொறையின் அரண்மனையிடத்து முரசு வைக்கும் கட்டிலில் மோசிகீரனார் அறியாதுஏறி வழிநடந்த களைப்பால் அயர்ந்தார். முரசுகட்டிலில் ஏறியது தவறு என்று தண்டிக்காது அவர் துயில் நீங்கும் அளவு கவரி வீசினான். மோசிகீரனின் தமிழ்ப் புலமையைப் போற்றுமாறு இச்செயல் அமைந்தது; எனவேதான், ''வாள்வாய் ஒழித்ததை, அதூஉம் சாலும் நற்றமிழ் முழுது அறிதல்'' என்று போற்றினார். தமிழ் என்பதைத் தமிழ்நாடெனக் கொண்டு ''தமிழ்நாடு முழுதும் ஆளும் அறிவினனாக இருப்பதற்கு இத்தகைய பண்பே காரணம்'' எனினும் அமையும்.

முரசு அடையாள மலர்களாலும் அலங்கரிக்கப் பெற்றது, அவற்றை உடைய தலைவர்க்கு ஒப்பச் சிறப்புடையது என்பதால் என்க. மயிற்பீலியால் அழகு செய்தல் ஔவையின் பாடலாலும் அறிக. (புறம். 95).

'குருதி வேட்கை உருகெழு முரசம்' என்றதால் போர் முரசு என்பதறியலாம். குருதித்தெளித்து வழிபடப் பெறும் முரசெனினும் அமையும். 'குருதிவேட்ட மயிர் புதை மாக்கண் கடிய கழற' (பதிற். 29) 'குருதி வேட்கை முரசு' (மணி 1.31) என்று குருதி வேட்கையுடைய முரசு கூறப்பெற்றது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : மஞ்ஞை – மயில்; ஒலி – தழைத்த; உரு – அச்சம்; மண்ணுதல் – நீராட்டுதல்; மதன் – வலிமை.

51

நீர் மிகின், சிறையும் இல்லை; தீ மிகின்,
மன் உயிர் நிழற்றும் நிழலும் இல்லை;
வளி மிகின், வலியும் இல்லை; ஒளி மிக்கு
அவற்று ஓர் அன்ன சினப் போர் வழுதி,
'தண் தமிழ் பொது' எனப் பொறாஅன், போர் எதிர்ந்து,
கொண்டி வேண்டுவன் ஆயின், 'கொள்க' எனக்
கொடுத்த மன்னர் நடுக்கு அற்றனரே;
அளியரோ அளியர், அவன் அளி இழந்தோரே –
நுண் பல சிதலை அரிது முயன்று எடுத்த
செம் புற்று ஈயல் போல,
ஒரு பகல் வாழ்க்கைக்கு உலமருவோரே!

திணை : வாகை; துறை : அரசவாகை.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியை ஐயூர் முடவனார் பாடியது.

துறை விளக்கம் : 'தண்தமிழ் பொது' எனப் பொறான்' என மாறன் வழுதியின் இயல்பு கூறியமையால் அரசவாகையாயிற்று.

உரை : நீர் பெருக்கெடுத்து மிகுமானால் அதனைத் தடுத்து நிறுத்தும் வலிய அரணும் இல்லை, தீ பெருகி எரிக்குமானால் உலகில் நிலைபெற்ற உயிர்களைக் காக்கின்ற நிழலும் இல்லை; காற்று மிகுமானால் அதனைப் பொறுக்கும் வலிமையும் இல்லை; அத்தகைய நீர், தீ, காற்று போலவே, புகழ்மிகுதி உடையனாய்ச்

Koviloor Digital Library

சினத்துடன் போர் புரிபவன் மாறன் வழுதி; அவன் தண்மையான தமிழ்நாடு மூவேந்தர்க்குப் பொதுவானது என்பதனைப் பொறுத்திரான்; அவன் போருக்கு எதிர்ந்து கொள்ளையாகத் திறை வேண்டினால் வேண்டியது கொள்க' எனத் தந்த மன்னர் தம் உள்ளத்தில் அச்சம் நீங்கினர்; அவ்வாறு தந்து அவனுடைய அருளைப் பெறாதவர் மிகவும் இரங்கத்தக்கவர்; அவ்வரசர்தாம், நுண்ணியபல கறையான்கள் அரிதாக முயன்று எடுத்த, செம்மை நிறமுடைய புற்றிலிருந்து வெளிப்பட்ட ஈயல்போல ஒரு பகற்பொழுதில் வாழும் வாழ்க்கையின் பொருட்டும் அஞ்சித்திரிவர்.

உரை விளக்கம் : பயன்தரும் நீர், தீ, காற்று ஆகியன தன் அளவில் மிகுமானால் அழிவு நேரும். அவற்றைப் போன்று சினம் மிகுமாயின் போர் ஏற்று எழுபவன் வழுதி என்றார்; எனவே பகைவரின் அழிவு கூறினார்.

'தமிழ்' என்றது ஈங்கு தமிழ்நாட்டை; தமிழ்நாடு மூவர்க்கு உரியது என ஏற்காது தன்னடிக்குரியது என்ற கொள்கையன்; எனவே 'தமிழ்நாடு பொது என்றால் பொறான்' ஆயினன்; திறை பெறும் மன்னர் சினம் தணிவர் என்பது, 'பணிந்து திறை தருப நின் பகைவராயின் சினம் செலத் தணி யுமோ' (பதிற். 59) என்று பதிற்றுப் பத்தும் குறித்தது. சினம் தணிவதால் பகை மன்னர் நடுக்கம் தீர்ந்தனர்.

ஈசல்போல ஒரு பகல் வாழ்க்கைக்கும் தடுமாறுவர் என்றதால் திறை கொடாது பகை செய்தாரை ஒரு பகலுக்குள் அழிப்பான் என்னும் உறுதி கூறினார்.

அருஞ்சொற்பொருள் : கொண்டி – திறை; அளி – அருள்; சிதலை – கரையான்; ஈயல் – ஈசல்.

Koviloor Digital Library

52

அணங்குடை நெடுங் கோட்டு அளையகம் முனைஇ,
முணங்கு நிமிர் வயமான் முழு வலி ஒருத்தல்,
ஊன் நசை உள்ளம் துரப்ப, இரை குறித்து,
தான் வேண்டு மருங்கின் வேட்டு எழுந்தாங்கு,
வட புல மன்னர் வாட, அடல் குறித்து,
இன்னா வெம் போர் இயல் தேர் வழுதி!
இது நீ கண்ணியது ஆயின், இரு நிலத்து
யார்கொல் அளியர்தாமே? ஊர்தொறும்
மீன் சுடு புகையின் புலவு நாறு நெடுங் கொடி
வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்
பெரு நல் யாணரின் ஒரீஇ, இனியே
கலி கெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலி கண் மாறிய பாழ்படு பொதியில்,
நரை மூதாளர் நாய் இடக் குழிந்த
வல்லின் நல் அகம் நிறைய, பல் பொறிக்
கானவாரணம் ஈனும்
காடு ஆகி விளியும் நாடு உடையோரே!

திணையும் துறையும் அவை.

அவனை மருதன் இளநாகனார் பாடியது.

துறை விளக்கம் : வழுதியின் இயல்பு கூறுமுகமாக 'இன்னா வெம்போர் இயல்தேர் வழுதி' எனப் போற்றி அவன் வீரத்தால் பகைப்புலம் அழிதலைக் கூறியதால் அரசவாகையாயிற்று.

உரை : (1 – 8) தெய்வங்களைக் கொண்ட நெடிய சிகரங்களையுடைய மலைக் குகையில் தன் சோம்பலைப் போக்கும் ஆண் புலி; நிறைந்த வலிமையை உடைய அப்புலி, ஊனை விரும்பி உள்ளம் செலுத்த இரையைத் தேடித் தான் கருதிய இடத்திற்கு விரும்பிச் செல்லும். அதுபோல, வடபுலத்துமன்னர் வருந்த

Koviloor Digital Library

அவரைக் கொல்லக்கருதி கொடிய வெம்மையான போர் செய்பவனே! இயற்றப்பட்ட தேருடைய வழுதியே! இப்போரை நீ கருதினாய் எனில் பெரிய உலகத்தில் இரங்குதற்குரியார் யாவரோ?

(8 – 17) ஊர்தொறும் மீனைச் சுடுதலால் எழும்புகையால் புலால் நாற்றம் நெடிய ஒழுங்குடன் வயலில் மருதமரத்தின் வளைந்த கிளைகளைச் சூழும். இத்தகைய மிகுந்த நல்ல வருவாயிலிருந்து ஊர் நீங்கும்; இனி முழவு முதலானவற்றின் இசை பொருந்திய தெய்வங்கள் தாம் உறைந்த தூண்களிலிருந்து அகலும்; தாம் பலி பெறும் இடங்களை மாற்றிக்கொள்ளும். இவ்வாறு பாழான அம்பலங்களில் முன்பு சூதாடுகையில் சூதாடு கருவியை வைப்பதனால் இடம் குழியும். அக்கருவி இருந்த குழிந்த இடம்தோறும் நிறையுமாறு பல் புள்ளிகளை உடைய காட்டுக்கோழி முட்டையிடும் காடாகிக் கெட்டழியும்; இவ்வாறு அழியும் நாடுகளை உடையோராகிய மன்னரில் இரங்கத்தக்கவர் யாரோ?

உரை விளக்கம் : புலி இரைவேட்டுத் தான் விரும்பிய காலத்தில் செல்லுதல் புறநானூற்றில் 78 ஆம் பாடலிலும் உவமையாக வந்தது. புலியெழுந்தது போல மாறன் வழுதி போர் செய்ய எழுந்தால் வடபுல மன்னர் தம் நிலையை எண்ணி வருந்துவர். இப்போர் பகைவர்க்கு மிகவும் இன்னாதது; எனவே 'இன்னா வெம் போர்' என்றார். போரினால் பகைவர் நாடுகள் வளத்தினின்று நீங்குதலும் கடவுள் தாம் நிலை பெற்ற இடங்களிலிருந்து நீங்குதலும் நேரும். கடவுளிருந்த இடங்கள் பாழாகிக் காடாகும் என்று கூறுவதால் அவனுடைய வீரச்சிறப்பு கூறினார். பகைவர் வளமிழக்குமாறு போர் செய்தலை, 'ஒலிதெங்கின் இமிழ் மருதின், புனல் வாயில் பூம்பொய்கைப் பாடல் சான்ற பயங்கெழு வைப்பின், நாடு கவினழிய நாமம் தோற்றி' என்றும் (பதிற். 13) குறித்தனர் பிறரும். தம்மை வழிபடுவோர் இன்மையால் கடவுளர் தாம் இருந்த தூண்களிலிருந்து நீங்கினர்; அதனால் கோயில் பாழானது. இச்செய்தி 'கடவுள் போகிய கருந்தாள் கந்தம்' (அகம். 310) எனப்பிறவிடத்தும் வந்தது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : அணங்கு - அச்சம்; அளை - குகை; அடல் - கொல்லுதல்; கண்ணியது - கருதியது; கந்தம் - தூண்; பொதியில் - பொதுஇல், (இலக்கணப்போலி); நாய் - சூதாடும் காய்களில் ஒன்று.

53

முதிர் வார் இப்பி முத்த வார் மணல்,
கதிர் விடு மணியின் கண் பொரு மாடத்து,
இலங்கு வளை மகளிர் தெற்றி ஆடும்
விளங்கு சீர் விளங்கில் விழுமம் கொன்ற
களம் கொள் யானை, கடு மான், பொறைய! -
விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்;
மம்மர் நெஞ்சத்து எம்மனோர்க்கு ஒருதலை
கைம்முற்றல, நின் புகழே, என்றும்;
ஒளியோர் பிறந்த இம் மலர் தலை உலகத்து
வாழேம் என்றலும் அரிதே - 'தாழாது
செறுத்த செய்யுட் செய் செந் நாவின்,
வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்
இன்று உளன் ஆயின், நன்றுமன்' என்ற நின்
ஆடுகொள் வரிசைக்கு ஒப்ப,
பாடுவல் மன்னால், பகைவரைக் கடப்பே.

திணையும் துறையும் அவை.

சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பொருந்தில் இளங்கீரனார் பாடியது.

துறை விளக்கம் : 'நின்புகழ் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும் என்னும் அளவு பாராட்டி முடியாப் பண்பினது நின்புகழ்' என்பதால் இரும்பொறையின் சிறப்பு கூறினர். எனவே இது அரச வாகையாயிற்று.

Koviloor Digital Library

உரை : (1 – 5) ஒளிவீசும் மணிகளால் கண்ணைப் பறிக்கும் மாடத்தில் வாழும் ஒளியுடைய வளையணிந்த மகளிர்; அவர்தாம் முற்றிய நீண்ட சிப்பியில் முத்துபோல, வெண்மையான ஒழுங்குபட்ட மணல்திடலில் உள்ள மேட்டில் விளையாடுவர். அத்தகைய புகழுக்கு விளக்கமாகி நின்ற விளங்கில் எனும் நகரத்திற்குப் பகைவரால் துன்பம் ஏற்பட்டது. அதனைத் தீர்த்துப் போர்க்களத்தைத் தனதாக்கிக் கொண்ட யானையையும் விரைந்து செல்லும் குதிரையையும் கொண்ட பொறையனே!

(10 – 15) விரைவாகப் பலபொருள் அடக்கிப் பாடல் புனையும் செவ்விய நாவினையும் செறிந்த புலமையையும் பலரும் அறிய நின்று விளங்கிய புகழையும் உடையவன் கபிலன். அவன் இன்றிருப்பின் நன்று என்றாய்; நின் வெற்றிச் சிறப்பிற்கு ஏற்ப நீ பகைவரை வென்ற திறத்தை யானும் பாடுவேன்.

(6 – 10) ஆயினும் நின் வெற்றியாகிய புகழை விரிவாகக் கூறத் தொடங்கினால் பெருகும்; தொகுத்துக் கூறினால் பாடலில் முழுமையுறாது நின்புகழ் எஞ்சி நிற்கும். எனவே மயங்கும் நெஞ்சுடைய எம் போன்றோர்க்கு நின்புகழை எந்நாளும் பாடுதல் என்பது முற்றும் கூறிவிடுவதாக அமையாது. கல்வியிற் சிறந்தவர் பிறந்த இவ்வகன்ற உலகில் வாழமாட்டோம் என்பதும் அரிது; எனவே இயன்ற வகையில் நின்புகழைப் பாடுவோம்.

உரை விளக்கம் : 'நின் புகழ் முற்றுப் பெற்றுவிடவில்லை. அதனைப் பாடி முடிதல் எம்மனோர்க்கு இயலா; கபிலன் இருந்தால் சிறப்புற நின்னைப் பாடுவான்; ஆயினும் என்னால் இயன்றவரை பாடுவேன்; பாடாதிருத்தல் அரிது' என அவன் புகழை விளக்கினார். மன்னர் புகழை மேம்படச் செய்பவர் புலவர்களே; புகழ் மேம்படுநன் எனப் புலவரைக் குறித்த தொடர் முன்னும் (புறம். 48.9) வந்தது. சிறப்புறப் பாடுவதற்கு எல்லோருக்கும் இயலாது சிறந்த புலவர்க்கே அது இயலும். எனவே 'கபிலன் இன்றிருந்தால் அவன் நன்கு பாடுவான்' என்றார்.

Koviloor Digital Library

இதுபோன்றே பாடுநர்க்கு அரியை பரணன் பாடினன்மற் கொல்,' எனப் பின்னரும் கூறினர் (புறம். 99). கபிலரின் பாடும் ஆற்றல், 'மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின் உவலை கூராக் கவலையில் நெஞ்சின் நனவில் பாடிய நல்லிசைக் கபிலன்' எனப் பதிற்றுப் பத்தினுள்ளும் பாராட்டப்பெற்றது.

'வாழேம் என்றல் அரிது' என்றது நின்னைப் பாடாது வாழ்தல் கூடாது எனத் தன் உள்ளம் செலுத்துதலால் தான் பாடுவதாகக் குறிக்க எழுந்தது. கண் பொரு மாடம் என்றது ஒளி கண்ணுடன் போர் செய்வது போலத் திகழ்வதால் கூறினார்.

அருஞ்சொற்பொருள் : *இப்பி – சிப்பி; விழுமம் – சிறப்பு; மம்மர் – மயக்கம்; வெறுத்த – செறிந்த; ஆடு – வெற்றி.*

54

எம் கோன் இருந்த கம்பலை மூதூர்,
உடையோர் போல இடையின்று குறுகி,
செம்மல் நாள் அவை அண்ணாந்து புகுதல்
எம் அன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
இரவலர்க்கு எண்மை அல்லது – புரவு எதிர்ந்து,
வானம் நாண, வரையாது, சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவி கை வண்மைக்
கடுமான் கோதை துப்பு எதிர்ந்து எழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்கும் காலை,
பாசிலைத் தொடுத்த உவலைக் கண்ணி,
மாசு உண் உடுக்கை, மடி வாய், இடையன்
சிறு தலை ஆயமொடு குறுகல் செல்லாப்
புலி துஞ்சு வியன் புலத்தற்றே –
வலி துஞ்சு தடக் கை அவனுடை நாடே.

திணையும் துறையும் அவை.

Koviloor Digital Library

சேரமான் குட்டுவன் கோதையைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரன் பாடியது.

துறை விளக்கம் : குட்டுவன் கோதையின் அவைக்களத்துப் புகுதல் இரவலர்க்கு எளிது; பகைமன்னர்க்குப் புலி துஞ்சு வியன்புலம் போல் அரிது' என்றதால் அவன் வன்மைப் பண்புணர்த்தினார். எனவே அரசவாகையாயிற்று.

உரை : (5 – 8) குடிகளைப் பாதுகாத்தலைத் தனதாகக் கொண்டு வான் மழையும் நாணுற, அவனை நாடிச் செல்வார்க்கு இடுவதால் கவிந்த கையால் அளவில்லாது வழங்கும் கொடையையுடையவன் 'கடுமான் கோதை';

(1 – 4) இத்தகைய எம் அரசன் இருந்த ஆரவாரமுடைய பழைய ஊரில், அவ்வூர்க்கு உரியவர் போலக் காலம் பாராது, பலமுறை அணுகி அவனுடைய அவைக்களத்தே செம்மாந்த தலையுடன் புகுதல் எம்போன்ற இரவலர்க்கு எளிது;

(8 – 14) அவன் வலிமையுடன் மாறுபட்டுப் போருக்கு எழுந்த பகையரசர்கள் வஞ்சினம் கூறினர்; அவர்கள் மனத்தால் ஆராயும்போது, பசுமையான தழைகளைக் கொண்டமைந்த மாலையையும் மாசுபடிந்த ஆடையையும் மடித்த வாயினையும் உடைய இடையன் தன் சிறிய தலையையுடைய ஆநிரையுடன் அணுக இயலாதபடி புலியுறங்கும் அகன்ற இடம் போல வலிமை தங்கிய பெரிய கைகளை உடைய அவனுடைய நாடு விளங்கும்; ஆகவே பகைவர் புகுதல் அரிது.

உரை விளக்கம் : இரவலராய் வருபவர்க்கு அருள் செய்பவன்; பகைவராய் வருபவர்க்கு அணுகுதற்கரியவன் என்னும் அவன் பண்பினை இப்பாடல் உணர்த்திற்று. வள்ளலை அடைதல் இரவலர்க்கு எளிது என்பது 'அருங்கடி வாயில்

Koviloor Digital Library

அயிராது புகுமின் (மலை. 491) 'நெடுங்கடை நிற்றலும் இலையே' (புறம். 69) என்பனவற்றாலும் பெறப்படும். கல்விச் செம்மையால் புலவர் அண்ணாந்து புகுதலை முன்னரும் (புறம். 47) காண்க.

மன்னர்க்கு இடையனையும் அவர் படைக்குச் சிறுதலை ஆயத்தையும், கோதை நாட்டிற்குப் புலிதுஞ்சு வியன் புலத்தையும் உவமையாகக் கொள்க. பாசிலை, உவலை, இரண்டும் தளிரைக் குறித்தன. வானம் நாண என்றது மழையிறும் மிகுதியாக ஈவான் என உணர்த்திற்று. 'தளியிற் சிறந்தனை வந்த புலவர்க்கு அளியொடு கை தூவலை (கலித். 50) என்றாற் போன்றது. மடிவாய் என்றது சீழ்க்கை ஒலி எழுப்பும் வாய் என்பதால் என்க.

அருஞ்சொற்பொருள் : கம்பலை – ஆரவாரம்; இடை – சமயம்; அன – அன்ன, இடைகுறுகியது; புரவு – காத்தல்; துப்பு – வலிமை; சிறுதலை ஆயம் – செம்மறித்திரள்.

55

ஓங்கு மலைப் பெரு வில் பாம்பு ஞாண் கொளீஇ,
ஒரு கணை கொண்டு மூஎயில் உடற்றி,
பெரு விறல் அமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறை நுதல் விளங்கும் ஒரு கண் போல,
வேந்து மேம்பட்ட பூந் தார் மாற!
கடுஞ் சினத்த கொல் களிறும்; கதழ் பரிய கலி மாவும்,
நெடுங் கொடிய நிமிர்தேரும், நெஞ்சு உடைய
புகன்மறவரும், என
நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட
அற நெறி முதற்றே, அரசின் கொற்றம்;
அதனால், 'நமர்' எனக் கோல் கோடாது,
'பிறர்' எனக் குணம் கொல்லாது,

Koviloor Digital Library

ஞாயிற்று அன்ன வெந் திறல் ஆண்மையும்,
திங்கள் அன்ன தண் பெருஞ் சாயலும்,
வானத்து அன்ன வண்மையும், மூன்றும்,
உடையை ஆகி, இல்லோர் கையற,
நீ நீடு வாழிய - நெடுந்தகை! - தாழ்நீர்
வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடு வேள் நிலைஇய காமர் வியன்துறை,
கடு வளி தொகுப்ப ஈண்டிய
வடு ஆழ் எக்கர் மணலினும் பலவே!

திணை : பாடாண்திணை; துறை : செவியறிவுறூஉ.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் பாடியது.

துறை விளக்கம் : தீயதகன்ற நற்கருத்தை அரசனுக்கு அறிவுறுத்துதல் செவியறிவுறூஉ ஆகும். இப்பாடலில் 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்; கோல்கோடாது, குணம் கொல்லாது ஆண்மையும் சாயலும் வண்மையும் உடையை ஆகுக' எனக் குறிப்பிட்டமையால் இது செவியறிவுறூஉ ஆயிற்று.

உரை : (1 - 6) உயர்ந்த மலையாகிய பெரிய வில்லில் பாம்பினை நாணாகக் கொண்டு ஒரே அம்பினால் மூவர் மதிலை அழித்துப் பெருஞ்சிறப்புடைய அமரர்க்கு வெற்றி தந்தவன், விடமுண்டு கருமை படிந்த திருமிடறுடைய இறைவன்; அந்தப் பெருமானின் அழகிய திருமுடியில், சூடிய பிறை சேர்ந்த நெற்றியில், விளங்கும் கண்போல, வேந்தர் மூவருள்ளும் உயர்ந்தவனே! பூமாலை அணிந்த மார்பை உடையவனே!

(7 - 10) கடுமையான சினத்துடன் கொல்லும் யானைகளும் விரைந்து செல்லும் இயல்புடைய செருக்குடைய குதிரைகளும் நெடிய கொடிகளுடன் விளங்கும் உயர்ந்த தேர்களும் மனவலிமை

Koviloor Digital Library

மிகுந்து போரை விரும்பும் மறவரும் என நான்கு வகையாக அமைந்த படைகளால் மாட்சிமைப் பெற்றாலும் வேந்தருடைய வெற்றி என்பது, மாண்புடைய அறநெறியை அன்றோ முதலாக உடையது.

(11 – 16) ஒருவர் தீமை புரிந்தவழி அவர் நம்மவர் என்று அவர் தீமையைப் பொறுத்துச் செங்கோல் வளையச் செய்தல் கூடாது; ஒருவர் அயலார் என்று அவருடைய நற்குணங்களைப் போற்றாமலிராதே; ஞாயிற்றைப் போல வெம்மையான ஆற்றலுடைய வீரமும் திங்களைப் போலக் குளிர்ந்த பெரிய மென்மையும், வான்மழையைப் போலக் கொடைச்சிறப்பும் உடையவனாகுக.

(16 – 22) நெடுந்தகையே! இரவலர்கள் இல்லாமற்போகுமாறு நெடுங்காலம் வாழ்வாயாக. ஆழமான நீர்ப்பரப்பையும் வெண்மையான மேற்பரப்பையுடைய அலைகள் திரியும் செந்திலம்பதியில் நெடியோனாகிய முருகவேள் நிலைபெற்ற அழகிய அகன்ற துறை; அத்துறையில் பெருங்காற்று திரட்டுவதால் குவிந்ததும் சுவடுகள் பதிவதுமான மணல் மேட்டிலுள்ள மணலின் எண்ணிக்கையினும் பலகாலம் வாழ்வாயாக!

உரை விளக்கம் : சிவ பெருமான் முப்புரம் எரித்த செய்தி தொன்மமாக இப்பாடலில் அமைந்துள்ளது. மேருமலையை வில்லாகவும் பெரும் பாம்பினை வில்லின் நாணாகவும் பொருத்தித் திருமாலை அம்பாகவும் கொண்டு முப்புரம் எரித்துத் தேவரைக் காத்தான் சிவபெருமான். இச்செய்தி, 'மடங்கல் போல் சினைஇ மாயஞ் செய் அவுணரைக் கடந்தடு முன்பொடு முக்கணான் மூவெயிலும் உடன்றக்கால்' (கலித். 2) என்றும் 'திரிபுரம் தீயெழச் சிலை கோலினாய்' (சுந்தரர் தேவாரம்) என்றும் 'பொருந்திய பொற்சிலை குனித்தாய்' (மாணிக்கவாசகர் திருச்சதகம்) என்றும் பற்பலவிடத்து வந்தன.

Koviloor Digital Library

முக்கண்ணானின் மூன்று கண்களைப் போன்று தமிழ வேந்தர் மூவரும் விளங்கினர். அவர்தம் முன் பாண்டியன் பிறை பொருந்திய நெற்றியிடத்து விளங்கிய கண் போன்றவன் என்றதால் அவன் உயர்ச்சி கூறினார்; மேலும் பகை கெடுக்கும் வெம்மையால் கூறினார் எனினும் அமையும்.

படையினும் அறமே முதன்மை; எனவேதான் அறநெறி முதற்றே என்றார். 'வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉம் கோடாது எனின்' என்று குறளும் கூறியதும் காண்க. இதன் உரையில் பரிமேலழகர் இப்பாடலைச் சான்று காட்டினார். வெம்மைக்கு ஞாயிற்றையும் தண்மைக்குத் திங்களையும் வண்மைக்கு வானத்தையும் உவமையாக்குதல் ''நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள; நின் தண்மையும் சாயலும் திங்களுள; நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள'' எனப் பரிபாடலிலும் வந்தது. (பரி. 4) செந்தில் என்றது முருகவேள் நிலைத்த செந்தூர். அங்கு கடல் கொழித்த மணலினும் பலகாலம் நீடு வாழ்க என்பது போன்ற வாழ்த்து முன்னும் (புறம். 9, 43) வந்தது.

அருஞ்சொற்பொருள் : கொளீஇ – பொருத்தி; காமர் – அழகு; புகல் – விருப்பம்; சாயல் – மென்மை; புணரி – அலை. எக்கர் – மணல் திடல்.

56

ஏற்று வலன் உயரிய எரி மருள் அவிர் சடை,
மாற்று அருங் கணிச்சி, மணி மிடற்றோனும்;
கடல் வளர் புரி வளை புரையும் மேனி,
அடல் வெந் நாஞ்சில், பனைக் கொடியோனும்;
மண்ணுறு திரு மணி புரையும் மேனி,
விண் உயர் புட் கொடி, விறல் வெய்யோனும்,
மணி மயில் உயரிய மாறா வென்றி,

Koviloor Digital Library

பிணிமுக ஊர்தி, ஒண் செய்யோனும் - என
ஞாலம் காக்கும் கால முன்பின்,
தோலா நல் இசை, நால்வருள்ளும்,
கூற்று ஒத்தீயே, மாற்று அருஞ் சீற்றம்;
வலி ஒத்தீயே, வாலியோனை;
புகழ் ஒத்தீயே, இகழுநர் அடுநனை;
முருகு ஒத்தீயே, முன்னியது முடித்தலின்;
ஆங்கு ஆங்கு அவர் அவர் ஒத்தலின், யாங்கும்
அரியவும் உளவோ, நினக்கே? அதனால்,
இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈயா,
யவனர் நன் கலம் தந்த தண் கமழ் தேறல்
பொன் செய் புனை கலத்து ஏந்தி, நாளும்
ஒண் தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி! - ஓங்கு வாள் மாற! -
அம் கண் விசும்பின் ஆர் இருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும், குட திசைத்
தண் கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇயர், உலகமொடு உடனே!

திணை : அது; துறை : பூவைநிலை

அவனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

துறை விளக்கம் : *பாட்டுடைத் தலைவரைத் திருமால் முதலான கடவுளருடனும் தேவர் பிறருடனும் ஒப்பிட்டுப் போற்றுதல் பூவைநிலை. இப்பாடலில் நன்மாறனை, 'கூற்றுவன், பலதேவர், திருமால், முருகவேளுடன்' ஒப்புமை செய்து போற்றியதால் இது பூவைநிலை ஆயிற்று.*

உரை : *(1 - 10) உயர்த்திய வாளையுடைய மாறனே! ஆனேற்றினை வெற்றிக்கொடியாக உயர்த்தியவனும், தீயை ஒத்து*

Koviloor Digital Library

விளங்கும் சடையை உடையவனும் விலக்குதற்கரிய மழுப்படையை உடையவனும் நீலமணி போலும் கழுத்துடையவனுமாகிய சிவபெருமான்; கடலில் வளரும் வளைந்த சங்கின் வெண்ணிறத்தை உடையவனும் கொலையை விரும்பும் கலப்பையை உடையவனும் பனைக்கொடியையுடையவனுமாகிய பலதேவர்; கழுவப்பெற்ற அழகிய நீலமணி போன்ற நிறமுடைய மேனியையுடையவனும் விண்ணைத் தொடும்படி உயர்ந்த கருடக் கொடியை உடையவனும் வெற்றியை விரும்புவோனுமாகிய கண்ணன்; அழகிய மயிலைக் கொடியாக உயர்த்தியவனும் மாறாத வெற்றியையுடையவனும் பிணிமுகமாகிய யானையினை ஊர்தியாக உடையவனுமாகிய ஒளியையுடைய செய்யோன் எனும் முருகவேள் என அமைந்த கடவுளர் நால்வர்; இவர்தாம் உலகைக் காப்பதிலும் முடிப்பதிலும் வல்ல வலிமையையும் தோல்வியுறாத நல்ல புகழையும் உடைய நால்வர்;

(11 – 16) இந்நால்வருள்ளும் விலக்குதற்கரிய சினத்தால் கூற்றுவனாகிய நீ சிவபெருமானை ஒத்துவிளங்குவாய்; வலிமையால் வெண்ணிறமுடைய பலதேவனை ஒத்துவிளங்குவாய்; புகழால் பகைவரைக் கொல்லும் மாயோனை ஒத்துவிளங்குவாய்; அவ்வப் பண்புகளில் அவரவரை ஒத்த தன்மையால் உனக்கு எங்கேயும் அரியனவாகிய செயல்களுண்டோ; இல்லையன்றோ.

(16 – 25) ஆகவே இரவலர்க்குப் பெறுதற்கரிய அணிகலன்களைக் குறையாமற் கொடுப்பாயாக; யவனர்தம் நல்ல குப்பிகளில் கொண்டுவரப்பட்ட குளிர்ந்த மணமுடைய மதுவினைப் பொன்னாலாகிய கலத்தில் ஏந்திய ஒளியுடைய மகளிர், நாளும் உனக்கு ஊட்டுவர்; அதனால் மகிழ்வுடன் இனிது நடப்பாயாக; அழகிய இடமுடைய விண்ணில் செறிந்த இருளகற்றும் வெம்மையான கதிர்களையுடைய ஞாயிற்றுக்கடவுள் போலவும் மேற்கில் தோன்றும் குளிர்ந்த கதிர்களுடைய நிலவினைப் போலவும் உலகத்துடன் கூட நீயும் நின்று நிலைபெற்று வாழ்க.

Koviloor Digital Library

உரை விளக்கம் : கடவுளர் நால்வரின் திறலுக்கு மாறனின் ஆற்றலை ஒப்புமை செய்து புகழ்ந்தார்; அழிக்கும் தொழிலுக்குரியார் சிவபெருமான் எனவே, கூற்றுவன் என்றார்; கூற்றுவனைப் போன்று கணிச்சியுடையர் என்பதும் நோக்குக. மாற்றரும் கணிச்சி என்பது மருந்தில் கணிச்சி என முற்கூறிய கருத்தில் அமைந்தது. பலதேவர் ஏரை ஆயுதமாகவும் பனையைக் கொடியாகவும் உடையர். இவர் வெண்மைநிறமுடையர். எனவே, 'வாலியோன்' என்றார். பலதேவர் 'கொடுமிடல் நாஞ்சிலான்' (கலித். 36) வால்வளை மேனி வாலியோன் (சிலம்பு. 5.171) 'வயங்கு ஒளிர் பனைக் கொடிப் பானிறவண்ணன்' (கலித். 104) எனப் பிறவிடத்தும் குறிக்கப்பெற்றமை காண்க. கருடனைக் கொடியாக உடைய கண்ணபெருமான், பலராலும் புகழ்தற்கு உரியவன். இதனை, 'தேயா விழுப்புகழ்த் தெய்வம்' (கலித். 103) எனப் பிறவிடத்தும் வந்தமையாலும் அறியலாம்.

மயிலைக் கொடியாகவும் பிணிமுகம் என்னும் யானையை ஊர்தியாகவும் கொண்டு கருதியது முடிப்பவன் முருகவேள். பிணிமுகம், 'ஓடாப் பூட்கைப் பிணிமுகம்' (முருகு. 247) 'சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து' (பரி. 5) 'பிணிமுகம் மேற் கொண்டு' (சிலம்பு. 24 உரையிடை) எனப் பிறவிடத்தும் கூறப்பெற்றது. முருகன் கோழிக் கொடியேயன்றி மயிற்கொடியும் உடையன்; 'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ' (முருகு. 122) என வந்தமை காண்க.

இக்கடவுளரை ஒத்தமையால் மாறனுக்கு அரிய செயல்கள் இல்லை என்று புகழ்ந்தார். ஞாயிறு போன்றும் திங்கள் போன்றும் விளங்குதல் புறநானூற்றின் 57ஆம் பாட்டாலும் உணர்க.

யவனர் - கிரேக்கர் என்பாரும் உளர். பழந்தமிழரின் வணிகத் தொடர்பை இப்பாட்டு உணர்த்தும்.

அருஞ்சொற்பொருள் : வளை - சங்கு; நாஞ்சில் - ஏர்; தேறல் - மது; மடுப்ப - ஊட்ட; அங்கண் - அழகிய இடம்.

Koviloor Digital Library

57

வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,
புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன,
உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற!
நின் ஒன்று கூறுவது உடையேன்; என் எனின்,
நீயே, பிறர் நாடு கொள்ளும் காலை, அவர் நாட்டு
இறங்கு கதிர்க் கழனி நின் இளையரும் கவர்க;
நனந்தலைப் பேர் ஊர் எரியும் நைக்க;
மின்னு நிமிர்ந்தன்ன நின் ஒளிறு இலங்கு நெடு வேல்
ஒன்னார் செகுப்பினும் செகுக்க; என்னதூஉம்
கடிமரம் தடிதல் ஓம்பு – நின்
நெடு நல் யானைக்குக் கந்து ஆற்றாவே.

திணை : வஞ்சி; துறை : துணை வஞ்சி.

அவனைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

துறை விளக்கம் : பகைவரை வீழ்த்தச் சென்ற நன்மாறனிடம் 'கடிமரம் தடிதல் ஓம்பு' என்ற மொழியால் போரைத் தவிர்தல் வேண்டும் என்றார் புலவர். இவ்வாறு சந்து செய்வித்தமையான் துணை வஞ்சி ஆயிற்று.

உரை : கல்வியில் வல்லவராயினும் அல்லராயினும் நின்னைப் பலரும் புகழ்வர்; அவ்வாறு புகழ்வோர்க்கு மாயோனைப் போல, கூறுவதற்குப் பொருந்திய தலைமையான புகழுடன் விளங்கும் மாறனே! உனக்கு ஒன்று சொல்வேன்; என்னவெனில் நீ பகைவர்தம் நாடுகளைக் கொள்ளும்போது அவர்களுடைய வளைந்த கதிர்களையுடைய வயலை நின் இளையோராகிய வீரர் கொள்ளையிடினும் கொள்ளையிடட்டும்; அகன்ற இடம் அமைந்த

Koviloor Digital Library

பெரிய ஊரினைத் தீ எரிப்பதானாலும் எரிக்கட்டும்; மின்னல் நெடிதாய்த் தோன்றுவது போல் நின் ஒளியுடன் விளங்குகிற நெடிய வேல் பகைவரை அழித்தாலும் அழிக்கட்டும்; என்னவாயினும் அவர்தம் காவல் மரத்தை வெட்டுவதை மட்டும் தவிர்ப்பாயாக; ஏனெனில் அம்மரங்கள் நின் யானைக்குக் கட்டும் தறியாக இருந்து தாங்கவல்லன ஆகா.

உரை விளக்கம் : வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும் என்பது கல்வி பெறாதவிடத்தும் மன்னனைப் புகழப் பலரும் விரும்பினர் என உணர்த்தியது; 'கைம்முற்றல புகழ், வரிசைக் கொப்பப் பாடுவன்' (புறம். 53) என்றது போலப் பாட்டில் வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும் என்றதாகவும் கொள்ளுதல் பொருந்தும். புகழில் திருமால் மேம்பட்டவன் என்பதை, 'புகழொத்தீயே இகழுநர் அடுநனை' என்பதாலும் உணரலாம்.

பகைவர் கழனி கவர்தலாவது விளைச்சலைத் தமதாக்கிக் கொள்ளுதல். 'கழனி கவர்க; ஊர் எரிக்க; ஒன்னார் செகுக்க. ஆயினும் கடிமரம் தடிதல் ஓம்பு' என்றார். பகைவர் முற்றுகையில் காவல் மரம் தடிதல் இயல்பு; அதனைத் தவிர்க்குமாறு கூறியமையான் பிறவற்றையும் செய்தல் வேண்டாம் என குறிப்புப்பட வேண்டினார்.

யானையைக் கட்டும் தூண்களாகக் காவல் மரங்கள் ஆற்றா என்றமையால் நின் பகைவனும் நினக்கு ஆற்றான்; அவனுடன் பொருதல் தகாது என உணர்த்தினார்.

அருஞ்சொற்பொருள் : மாயோன் - திருமால்; கழனி - வயல்; நனந்தலை - அகன்ற இடம்; ஒளிறு - ஒளி; கந்து - தூண்கள், நடப்பெற்ற தறிகள்.

Koviloor Digital Library

58

நீயே, தண் புனற் காவிரிக் கிழவனை; இவனே,
முழு முதல் தொலைந்த கோளி ஆலத்துக்
கொழு நிழல் நெடுஞ் சினை வீழ் பொறுத்தாங்கு,
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது,
நல் இசை முதுகுடி நடுக்கு அறத் தழீஇ,
இளையது ஆயினும் கிளை அரா எறியும்
அரு நரை உருமின், பொருநரைப் பொறாஅச்
செரு மாண் பஞ்சவர் ஏறே; நீயே,
அறம் துஞ்சு உறந்தைப் பொருநனை; இவனே,
நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய என,
வரைய சாந்தமும், திரைய முத்தமும்,
இமிழ் குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ் கெழு கூடல் தண் கோல் வேந்தே;
பால் நிற உருவின் பனைக் கொடியோனும்,
நீர் நிற உருவின் நேமியோனும், என்று
இரு பெருந் தெய்வமும் உடன் நின்றாஅங்கு,
உரு கெழு தோற்றமொடு உட்குவர விளங்கி,
இன்னீர் ஆகலின், இனியவும் உளவோ?
இன்னும் கேண்மின்; நும் இசை வாழியவே;
ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர், இருவீரும்
உடன் நிலை திரியீர் ஆயின், இமிழ்திரைப்
பௌவம் உடுத்த இப் பயம் கெழு மா நிலம்
கையகப்படுவது பொய் ஆகாதே;
அதனால், நல்ல போலவும், நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்,
காதல் நெஞ்சின் நும் இடை புகற்கு அலமரும்
ஏதில்மாக்கள் பொதுமொழி கொள்ளாது,
இன்றே போல்க, நும் புணர்ச்சி; வென்று வென்று
அடு களத்து உயர்க, நும் வேலே; கொடுவரிக்

Koviloor Digital Library

கோண்மாக் குயின்ற சேண் விளங்கு தொடு பொறி
நெடு நீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய ஆக, பிறர் குன்று கெழு நாடே.

திணை : பாடாண்திணை; துறை : உடனிலை.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும், ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

துறை விளக்கம் : உடனிலை என்னும் புறத்துறை சேர்ந்திருக்கும் இருவரைப் பாடுதலாகும். இப்பாடலில் திருமாவளவனும் பெருவழுதியும் ஒருங்கிருந்தமை 'இருபெருந் தெய்வமும் உடனிருந்தாங்கு' எனச் சுட்டப் பெற்றமையால் உடனிலை எனும் துறையாயிற்று.

உரை : (1 – 8) நீ குளிர்ந்த நீருடைய காவிரிக்குத் தலைவன்; இவன் கோளியாகிய ஆலமரத்தின் நிழல்தரும் கிளைப்பகுதியை, பருத்த அடிமரம் இற்றுப்போன பின்னும் அதன் விழுதுகள் தாங்குவது போலத் தன் முன்னோர் இறந்தபின் தளராமல் நற்புகழுடைய பழமையான குடியைத் தடுமாறாது காப்பவன்; தான் சிறிது எனினும் கிளையிலுள்ள பாம்பினைத் தாக்கும் பொறுத்தற்கரியதும் வெண்மையானதுமான இடியினைப்போல இளம் பருவத்திலேயே பகைவரைக் கண்டு பொறுத்திராதவன்; போரில் மாட்சிமைப் பெற்ற பாண்டியர் குடியில் சிங்கம் போன்றவன்.

(8 – 14) நீ அறம் நிலைபெற்ற உறந்தைக்கு அரசன்; இவன் நீரும் நெல்லும் யாவர்க்கும் எளியன என்று பெறுதற்கரியனவாகிய பொதியமலைச் சந்தனமும் தென்கடல் முத்தும் கொண்டவன்; முழங்கும் முரசு மூன்றுடன் ஆள்பவன்; தமிழ் நிலைபெற்ற மதுரையில் குளிர்ந்த செங்கோலால் ஆட்சி செய்யும் அரசன்.

Koviloor Digital Library

(15 – 20) பால்போலும் நிறமுடையவனும் பனைக்கொடியை உடையவனுமாகிய பலதேவன், நீலம் போலும் நிறமுடையவனும் சக்கரப்படையை உடையனுமாகிய கண்ணபெருமான் எனச் சொல்லப்படும் கடவுளர் இருவர்; அவ்விருவரும் உடன்சேர்ந்து நின்றது போல, அச்சம் தரும் காட்சியும் பகைவர் அஞ்சுமாறும் நீங்கள் இருவரும் விளங்குகின்றீர். நீங்கள் இவ்வாறு விளங்கும் காட்சியினும் இனிய பொருட்கள் உள்ளனவோ; இன்னும் உரைக்கக் கேட்பீர்.

(20 – 24) உம் புகழ் நெடுங்காலம் வாழ்க! நீங்கள் ஒருவர்க்கு ஒருவர் உதவுக; நீங்கள் இருவரும் சேர்ந்து இருக்கும் நிலையில் இருந்து மாறாதிருப்பின், ஒலிக்கும் அலைகளுடைய கடலை ஆடையாக உடைய பயன் பொருந்திய பெரிய உலகம் உம்மால் கையகப்படுத்தப் பெறுவது பொய்க்காது.

(25 – 32) எனவே நல்லன போன்றும் உண்மையுடையன போன்றும் முன்னோர் சென்ற தொன்றுபட்ட நெறியின போலவும் தோன்றும் பொய்ம்மொழிகளால், அன்பு பொருந்திய மனங்களுடைய உம்மிடையே புகுந்து உம்மைப் பிரிப்பதற்கு அயலார் திரிவர்; அப்பொய்ம் மொழிகளைக் கேளாமல், இன்று போல் உங்கள் நட்பு என்றும் நிலைப்பதாகுக. வெற்றியையுடைய போர்க்களத்தில் உம்முடைய வேல்கள் உயர்ந்து விளங்கட்டும். பிறருடைய குன்றுகள் உடைய நாடுகள், தொலைவிடத்துத் தெரியுமாறு பொறிக்கப்பட்ட வளைந்த கோடுகளுடைய புலிவடிவ இலச்சினையுடன் பெரிய நீரில் வாழும் மீன்வடிவ இலச்சினையையும் கொண்டுள்ள சிகரங்களை உடையனவாகட்டும்.

உரை விளக்கம் : காவிரி சோழநாட்டில் பாய்தலால் காவிரிக் கிழவன் எனச் சோழனைக் குறித்தனர்; கோளி ஆலம் என்றது பூவாது காய்க்கும் ஆலமரம்; 'கோடு பல முரஞ்சிய கோளியாலயம்' (மலை. 268) என்பதும் காண்க. ஆலமரத்தின் வேர் இற்றுப் போனாலும் விழுது மரக்கிளைகளைக் காக்கும்;

Koviloor Digital Library

அதுபோல முன்னோர் வழியில் தன் சுற்றம் காத்தனன் பாண்டியன்; அரசர்க்குரிய இவ்வியல்பு 'துளங்குகுடி விழுத்திணை திருத்தி' (பதிற். 31) எனப் பதிற்றுப்பத்தினுள்ளும் கூறப்பெற்றது. இடியினால் பாம்பு அழியும் என்பது தொகைநூல் பலவற்றிலும் கூறப்பெறும் மரபு. சான்றாக, 'காம்புடை விடரகம் சிலம்பப் பாம்பு உடன்று ஓங்குவரை மிளிர வாட்டி ..... கடுங்குரல் ஏறொடு' (நற். 51) என நற்றிணையின் பகுதியைக் காணலாம். உறந்தையின் அவைக்களம் அறமுடையது. எனவே 'அறந்துஞ்சு உறந்தை' என்றார். 'உறந்தை அவையத்து அறம் நிலையிற்று' (புறம். 39) என முன்னரும் வந்தது. நெல்லும் நீரும் என்றது மக்களுக்குரிய உணவாகக் கொள்க. பாண்டியநாட்டில் முத்தும் சந்தனமும் மிகுதியாகக் கிடைத்தலை இப்பாடலில் கூறினார்.

'இன்னீர் ஆகலின்' என்றது பெருவேந்தராய் இருந்தும் சினந்து பகை கொள்ளாது அன்புடன் இருந்த தன்மையைச் சுட்டிற்று. 'நல்லன போன்றும் உண்மையுடையன போன்றும் தொன்றுபட்ட நெறியின போன்றும் விளங்கும் அன்பினால் ஒன்றுபட்டீர்; நும் இடையே கூறும் பழிமொழி கொள்ளற்க' என்று கூறுதலும் பொருந்தும். இருபெருவேந்தரும் சினந்தால் பகைவர் நாடுகள் அவர் கைப்படும் என்பதை, 'புலிப் பொறியும் மீன்பொறியும்' பொறிக்கப்பட்ட சிகரங்களை உடையன ஆகும் என்பதால் பெற வைத்தார்.

அருஞ்சொற்பொருள் : வீழ் - விழுது; துளங்கல் - தளர்தல்; நரை - வெண்மை; பஞ்சவர் - பாண்டியர்; திரை - அலை, கடல்; கூடல் - மதுரை; உட்கு - அச்சம்; இசை - புகழ்; பௌவம் - கடல்; ஏதில்மாக்கள் - அயலவர்; குடுமி - சிகரம்.

Koviloor Digital Library

59

ஆரம் தாழ்ந்த அணி கிளர் மார்பின்,
தாள் தோய் தடக் கை, தகை மாண் வழுதி!
வல்லை மன்ற, நீ நயந்து அளித்தல்;
தேற்றாய் பெரும! பொய்யே; என்றும்
காய் சினம் தவிராது கடல் ஊர்பு எழுதரும்
ஞாயிறு அனையை, நின் பகைவர்க்கு;
திங்கள் அனையை, எம்மனோர்க்கே.

திணை : அது; துறை : பூவைநிலை.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடியது.

துறை விளக்கம் : *மனிதரைத் திருமால் முதலான கடவுளருடனும் பிற தேவருடனும் உவமை கூறுதல் பூவை நிலை; இப்பாடலில் 'ஞாயிறு அனையை, திங்கள் அனையை' என்று நன்மாறனைப் போற்றியதால் இது பூவை நிலையாகும்.*

உரை : *மாலை தாழ்ந்து விளங்கிய அழகு மிகுந்த மார்பினையும், முழந்தாள் பொருந்திய பெரிய கைகளையும், அழகின் மாட்சிமையும் உடைய வழுதியே! நீ அருளுடன் அளிப்பதில் வல்லவன் ஆவாய்; என்றும் பொய்கூறி அறியாய்; பெருமானே! உன் பகைவர்க்கு வெப்பம் நீங்காது, கடலிடத்துத் தோன்றும் ஞாயிறு போன்றவன்; ஆயினும் எம் போன்ற நின் அருள் பெற்றவர்க்கு திங்களைப் போன்றவன்.*

உரை விளக்கம் : *'எம்மனோர்க்கு நயந்து அளித்தலால் திங்கள் அனையை; 'பகைவர்க்குக் காய்சினம் தவிராத நின் தன்மையால் ஞாயிறு அனையை என இயைத்துக் கூறுதலும் அமையும், 'ஆரம் ..... வழுதி' மன்னனின் அழகை வருணித்த அடிகள்;*

Koviloor Digital Library

கடலூர்பெழுதரும் ஞாயிறு என்றமையால் கிழக்குத் திசை கூறப்பட்டது; தண்ணளி செய்யும் முழுமதி கிழக்கே தோன்றுவதால் திங்களுக்கும் அதுவே கொள்க.

பகைவர்க்கு ஞாயிறு அனையான், என்னும் உவமை, 'விசும்பில் பன்மீன் ஒளிகெட ஞாயிறு தோன்றியாங்கு மாற்றார் உறுமுரண் சிதைத்த நின்' என்று பதிற்றுப்பத்துள்ளும் வந்தது (பதிற். 64) தேற்றாய் பொய் என்றது 'புகழ் கெடுப்பதாகலான் பொய் கூறாதான்' என்க.

அருஞ்சொற்பொருள் : தட – பெரிய; தேற்றாய் – தேறாய் என்பது தேற்றாய் என நின்றது.

60

முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்
உச்சி நின்ற உவவு மதி கண்டு,
கட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த,
சில் வளை விறலியும், யானும், வல் விரைந்து,
தொழுதனெம் அல்லமோ, பலவே – கானற்
கழி உப்பு முகந்து கல் நாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன் பகட்டு அன்ன எம் கோன்,
வலன் இரங்கு முரசின் வாய் வாள் வளவன்,
வெயில் மறைக் கொண்ட உருகெழு சிறப்பின்
மாலை வெண் குடை ஒக்குமால் எனவே?

திணை : அது; துறை : குடைமங்கலம்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : மன்னனது வெண்கொற்றக்குடையைச் சிறப்பித்துக் கூறுதல் குடைமங்கலமாகும். இப்பாடலில் குடையின் நிழற்சிறப்புக் கூறி அதனுடன் ஒத்த தன்மையலே நிலவை வணங்கினோம் எனப் பாராட்டியதால் குடைமங்கலம் ஆயிற்று.

உரை : (1 – 6) கடல்நடுவே படகினில் வைத்த விளக்கு போல செவ்வாயின் ஒளி திகழும் மாகமாகிய ஆகாயத்தில் உச்சியில் முழுமதி நின்று தோன்றும்; அதனைச் சுரமாகிய அரிய பாலை வழியில் காட்டில் வாழும் மயிலைப் போன்றவளும் சிலவளையல்களை அணிந்தவளுமான விறலியுடன் நானும் கண்டேன். கண்டதுடன் பலமுறை விரைவாகத் தொழுதோம்.

(6 – 12) கடற்கரைக் கழிமுகத்திலுள்ள நீரால் விளைந்த உப்பினைச் சுமந்து மலைநாடு நோக்கிச் செல்லும் ஆரக்கால்கள் அமைந்த வண்டி; அதனைப் பள்ளத்தில் ஆழ்ந்துவிடாதபடி வலிமையுடையதும் சுமை தாங்குவதுமான காளை இழுத்துச் செல்லும்; அந்த வலிய காளையைப் போன்றவன் எம் அரசன்; அவன் வெற்றி முழக்கமிடும் முரசும் தப்பாத வாளும் உடையவனாகிய வளவன்; அவனுடைய, வெயிலை மறைக்கும் பொருட்டு ஏந்தியதும், அச்சம் தருமாறு விளங்குவதும் முத்துக்கள் பொருந்தியதுமான தலைமையான வெண்கொற்றக் குடை; அதனை ஒத்தது என்பதால் நிலவினைப் பன்முறை தொழுதோம் அல்லமோ?

உரை விளக்கம் : நிலவைக் கண்டோம்; அதன் தண்மை நின் குடையை ஒத்தது, எனவே அதனைத் தொழுதோம் எனக் கூட்டுக. பழையவுரை, ''வளவன் வெண்குடையைக் காட்டித் தொழுமின்' என்றாற்கு 'நிறைமதி தொழப் படாதாயினும் குடையொடு ஒப்புமைகண்டு தொழுத யாம் குடை தன்னைக் கண்டால் தொழுதல் சொல்ல வேண்டுமோ' என அதன் சிறப்புக் கூறியவாறு'' எனக் கூறுதலும் காண்க. மாக விசும்பு, ஒரு பொருட் பன்மொழி; செம்மீன் இமைக்கும் மாக விசும்பில் உச்சி நின்ற உவவுமதி என்றதால் செவ்வாய் தெரியுமளவு மாலைப் பொழுது சென்றது உணர்த்தினார்.

Koviloor Digital Library

அரசர் வன்மைக்குப் பகடு உவமிக்கப் பெறுதலை, இந்நூலின் 90 ஆம் பாடலிலும் காண்க; 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான்' (குறள். 624) என்பதும் அத்தன்மையது.

'வெயில்மறைக் கொண்ட' என்றது பகைவரான் வரும் வெம்மையை மறைத்து என்னும் குறிப்புப் பொருள் தந்தது.

அருஞ்சொற்பொருள் : முந்நீர் – கடல்; நாப்பண் – நடுவே; திமில் – மரக்கலம்; செம்மீன் – செவ்வாய்; உவவு மதி – நிறைமதி; கட்சி – காடு; உரு – அச்சம்.

61

கொண்டைக் கூழைத் தண் தழைக் கடைசியர்
சிறு மாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்,
மலங்கு மிளிர், செறுவின் தளம்பு தடிந்து இட்ட
பழன வாளைப் பரூஉக் கண் துணியல்
புது நெல் வெண் சோற்றுக் கண்ணுறை ஆக,
விலாப் புடை மருங்கு விசிப்ப மாந்தி
நீடு கதிர்க் கழனிச் சூடு தடுமாறும்
வன் கை வினைஞர் புன் தலைச் சிறாஅர்
தெங்கு படு வியன் பழம் முனையின், தந்தையர்
குறைக்கண் நெடும் போர் ஏறி, விசைத்து எழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழம் தொட முயலும்,
வைகல் யாணர், நல் நாட்டுப் பொருநன்,
எஃகு விளங்கு தடக்கை இயல் தேர்ச் சென்னி,
சிலைத் தார் அகலம் மலைக்குநர் உளர் எனின்,
தாம் அறிகுவர் தமக்கு உறுதி; யாம் அவன்
எழு உறழ் திணி தோள் வழு இன்று மலைந்தோர்
வாழக் கண்டன்றும் இலமே; தாழாது,
திருந்து அடி பொருந்த வல்லோர்
வருந்தக் காண்டல், அதனினும் இலமே.

Koviloor Digital Library

திணை : வாகை; **துறை :** அரசவாகை.

சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட் சென்னியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

துறை விளக்கம் : சேட்சென்னியுடன் மலைந்தோர் வாழக் கண்டதும் இல்லை; அடி பொருந்துவோர் வருந்தக் கண்டதும் இல்லை' என்பதால் தன்னை அடைந்தாரைப் போற்றிப் பகைத்தாரை வீழ்த்தும் அவனியல்பு கூறப்பெற்றது. எனவே, இது அரசவாகை ஆயிற்று.

உரை : (1 – 11) மலங்குமீன் துள்ளும் வயல்களில், சிறிய அழகுடைய நெய்தலுடன் ஆம்பலையும், கொண்டையணிந்த கூந்தலும் குளிர்ந்த தழையும் உடைய உழத்தியர் களையாகப் பறிப்பர்; வயலில் பிறழும் வாளைமீன் வயலைச் செப்பம் செய்யும் தளம்பு எனும் கருவியால் துண்டிக்கப்படும். அதன் பருத்த ஊனைப் புதிய நெல்லினாலுண்டான வெண்மையான சோற்றிற்குக் கறியுணவாகக் கொண்டு உழத்தியருடன் வலிய கைகளை உடைய உழவர்களும் விலாப் புடைக்க உண்பர். அவ்வாறு உண்டதால், நீண்ட கதிரை உடைய நெல்லின் அரிந்த தாளை இடுமிடம் அறியாது தடுமாறுவர். அவர்தம் மென்மையான தலையை உடைய சிறுவர்கள் தென்னங்காய்களை விளையாடி வெறுப்புற்றபோது தம் தந்தையர், குறைந்த இடத்தில் குவியாமல் பரந்திடப்பட்ட உயர்ந்த போரின் மீது ஏறுவர், அங்கிருந்து துள்ளி எழுந்து வளமையான குலைகளுடைய பனையின் பழத்தைத் தொட முயல்வர்;

(12 – 19) இத்தகையதும் நாள்தொறும் புது வருவாயை உடையதுமான நல்ல நாட்டின் வேந்தன், வேல் விளங்கும் பெரிய கையையும் புனைந்தியன்ற தேரையும் உடையவனாகிய சென்னி ஆவான் – வானவில் போன்ற மாலையை உடைய அவனது மார்புடன் மாறுபட்டுப் போர்புரிபவர் இருப்பின்,

Koviloor Digital Library

தம்முடைய நிலையைத் தாமே அறிய நேரும். நாங்கள், அவனுடைய கணைய மரத்துடன் மாறுபடும் வன்மையை உடைய திண்மையான தோளுடன் குற்றமின்றிப் போரிடும் பகைவர் வாழக்கண்டதும் இல்லை. அதனினும், அவனுடைய போரில் பிறக்கிடாத அடியைப் பொருந்தி வணங்கி நிற்பார் வருந்தக் கண்டதும் இல்லை.

உரை விளக்கம் : சென்னியின் நாட்டுச்சிறப்பும் வீரச்சிறப்பும் ஒருங்கு கூறப்பெற்றது. சோழநாட்டு வளம் விரிவாகக் கூறியமையை நோக்கின் பகைப்புலங்கள் அவனால் அழிக்கப் பெறுவன என்பதும் தன் வீரச்சிறப்பால் குடிகள் வருந்தாமல் காக்கின்றான் என்பதும் உணர்த்தப் பெறும்.

தளம்பு, என்பது சேற்றுக்கட்டி உடைக்கும் கருவி. தோள் வலிமை கணைய மரத்துடன் ஒப்புமைப்படுத்திப் போற்றப்பெறுதல் மரபு. ‘எழுஉறழ் திணி தோள், இயல்தேர்க் குட்டுவன்’ (சிறு. 49) ‘எழூஉ நிவந்தன்ன பரேர் எறுழ் முழவுத் தோள்’ (பதிற். 20) என்பன காண்க. அடைந்தவர்க்கு அருளுதலும் பகைத்தவரை வீழ்த்துதலும் அரசரியல்பு; ‘செற்றோரை வழி தபுத்தனன்; நட்டோரை உயர்பு கூறினன் (புறம். 239) ‘நட்டவர் குடியுயர்க்குவை; செற்றவர் அரசு பெயர்க்குவை (மதுரை. 131 – 2) என்று பிறவிடத்தும் அரசரின் இவ்வியல்பு கூறினர்.

அருஞ்சொற்பொருள் : துணியல் – துணிக்கப்பட்ட ஊன் துண்டம்; தழை – தழையால் அமைந்த ஆடை; கண்ணுறை – உணவுக்கு மேலீடாக இட்டு உண்பது; பெண்ணை – பனை.

Koviloor Digital Library

62

வருதார் தாங்கி, அமர் மிகல் யாவது?
பொருது ஆண்டு ஒழிந்த மைந்தர் புண் தொட்டு,
குருதிச் செங் கைக் கூந்தல் தீட்டி,
நிறம் கிளர் உருவின் பேஎய்ப் பெண்டிர்
எடுத்து எறி அனந்தற் பறைச் சீர் தூங்க,
பருந்து அருந்துற்ற தானையொடு, செரு முனிந்து,
அறத்தின் மண்டிய மறப் போர் வேந்தர்
தாம் மாய்ந்தனரே; குடை துளங்கினவே;
உரை சால் சிறப்பின் முரைசு ஒழிந்தனவே;
பல் நூறு அடுக்கிய வேறு படு பைஞ் ஞிலம்
இடம் கெட ஈண்டிய வியன் கண் பாசறை,
களம் கொளற்கு உரியோர் இன்றி, தெறுவர,
உடன் வீழ்ந்தன்றால், அமரே; பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே;
வாடாப் பூவின், இமையா நாட்டத்து,
நாற்ற உணவினோரும் ஆற்ற
அரும் பெறல் உலகம் நிறைய
விருந்து பெற்றனரால்; பொலிக, நும் புகழே!

திணை : தும்பை; துறை : தொகை நிலை.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற் பல் தடக்கைப் பெருவிறற் கிள்ளியும், போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கழாத்தலையார் பாடியது.

திணை விளக்கம் : இருபெரும் படைகளும் ஒரு களத்தில் போரிடுதலும் அதன் உட்கூறுகளும் தும்மைத் திணையாகும்.

Koviloor Digital Library

துறை விளக்கம் : தும்பைத் திணையில் இருபெரும் படைகளும் போரிட்டு தோற்காமல் ஒருவர் கூட எஞ்சாது அழிதல் தொகை நிலையாகும். இப்பாடலில் 'களம் கொளற்கு உரியோர் இன்றி உடன் வீழ்ந்தது போர்' என்றதால் யாரும் போரில் எஞ்சாமை கூறப்பட்டது, எனவே தொகை நிலையாயிற்று.

உரை : *(2 – 19)* பேய் மகளிர், போரிட்டுக் களத்தில் மடிந்த வீரர்களின் புண்களைத் தோண்டிக் குருதி படர்ந்த செங்கையினால் தமது மயிரைக் கோதிடுவர்; நிறம் செறிந்த வடிவுடைய அப்பேய்மகளிர் மேன்மேலும் முழங்குகிற மெல்லிய ஓசையையுடைய பறையின் தாளத்திற்கு ஆடுவர்; பருந்து ஊனை உண்ணுமாறு செய்யும் படையால் போரில் சினந்து, அறத்தின் தன்மைகள் செறிந்த வீரப்போரைச் செய்யும் வேந்தர் இருவரும் இறந்தனர்; அவர்தம் கொற்றக் குடைகளும் வீழ்ந்தன; புகழ்மிகுந்த சிறந்த முரசுகளும் வீழ்ந்தன. பலநூறு என அடுக்கிய எண்ணிக்கையுடன் வேறு வேறு மொழி பேசும் படைவீரராகிய தொகுதியினர், இடமில்லாதபடி சேர்ந்த அகன்ற இடத்தையுடைய பாசறை; அங்கு போர்க்களம் தம்முடையது எனக் கொள்வாரின்றிக் காண்பவர் அஞ்சுமாறு போர் உடனே முடிந்தது; அவர்தம் பெண்டிர் பசிய கீரைகளை உண்ணாது குளிர்ந்த நீரில் மூழ்காது, தம் தம் கணவராகிய வீரர்களின் மார்பினைச் சேர்ந்து உயிர் நீத்தவராய்க் களத்தில் கிடந்தனர்; வாடாத கற்பக மலரினையும், இமையாத கண்களையும் அவியுணவையும் கொண்ட தேவர்களும் பெறுவதற்கு அரிய, உலகத்தில் நிரம்புமாறு விருந்து பெற்றனர்.

(1) வருகின்ற தூசிப்படையைத் தடுத்துப் போரில் ஒருவரை ஒருவர் வெல்வோம் எனச் செல்லுதல் எத்தன்மையதோ?

(19) அதனால் உம் புகழ் விளங்கட்டும்.

உரை விளக்கம் : குடக்கோ நெடுஞ்சேரலாதனும், பெருவிறற்கிள்ளியும் பெரிய போரைச் செய்தனர்; இருவர்தம் படைகளும் அழிந்தன; பின்னும் மனந்தளராது போரிட்டு இருவரும் மாய்ந்தனர்;

Koviloor Digital Library

படை ஒழிந்தது எனப் போர் தவிராது, படையோரின் உயிர்க்கொடையை மதித்துப் போரிட்டனர். எனவே புலவர் 'அறத்தின் மண்டிய போர்' என்றார். 'பன்னூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்' – 'படையில் வேறு வேறு மொழி பேசுவோரும் ஒருங்கிருந்து பலநூறு பேர்கள் எனும் எண்ணிக்கையினர் ஆவர்' என்பது குறித்தது; பைஞ்ஞிலம் – மக்கட் தொகுதி; 'உண்ணாப் பைஞ்ஞிலம்' (பதிற். 31 – 6) என மக்கட் கூட்டத்தைக் குறித்தது. பல்வேறு மொழிபேசும் படையினர் என்பது முல்லைப்பாட்டில் 'வேறுபல் பெரும்படை நாப்பண்' என வந்தது.

பேய் மகள் பெரும்போர் கண்டால் மகிழ்ந்து கூத்தாடும் என்பது, 'கழல் கண் கூகைக் குழறுகுரல் பாணிக் கருங்கட் பேய்மகள் வழங்கும்' (பதிற். 22.36 – 37) என்பதாலும் பெறப்படும். களம் கொள்ளுதல் என்பது பகைவரை வீழ்த்தி, எதிர்ப்பார் இல்லாது களத்து வெற்றியைத் தனதாக்கிக் கொள்ளுதல் ஆம். 'பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்' என்பது கணவர் மாய்ந்தபின் மகளிர் உயிரோடிருந்து கைம்மையை ஏற்றிரார், உடன் உயிர் துறந்தார் என்பது குறித்தது; கைம்மை நோன்பில் பசிய இலைக்கறியுணவு உண்பர் என்பதை 'வேளை வெந்தை வல்சியாக' என்பதாலும் அறியலாம். தேவர்கள் வாடாத மாலையும், இமையாத கண்களையும் கொண்டு அவிப்பலி பெறுபவர் என்பது, "வாடாப்பூவின் இமையா நாட்டத்து, நாற்ற உணவின் உருகெழு பெரியோர்" (மதுரை. 457 – 8) எனப் பிறவிடத்தும் வந்தது.

புகழ் விளங்குக என்றது அறத்தின் மாறுபடாது போர் செய்தனர் என்பதால் என்க.

அருஞ்சொற்பொருள் : உரு – நிறம்; சீர் – தாளம்; தூங்க – இசைக்க; அடகு – இலைக்கறி, கீரை.

Koviloor Digital Library

63

எனைப் பல் யானையும் அம்பொடு துளங்கி,
விளைக்கும் வினை இன்றிப் படை ஒழிந்தனவே;
விறற் புகழ் மாண்ட புரவி எல்லாம்
மறத் தகை மைந்தரொடு ஆண்டுப் பட்டனவே;
தேர் தர வந்த சான்றோர் எல்லாம்,
தோல் கண், மறைப்ப, ஒருங்கு மாய்ந்தனரே;
விசித்து வினை மாண்ட மயிர்க் கண் முரசம்,
பொறுக்குநர் இன்மையின், இருந்து விளிந்தனவே;
சாந்து அமை மார்பில் நெடு வேல் பாய்ந்தென,
வேந்தரும் பொருது, களத்து ஒழிந்தனர்; இனியே,
என் ஆவது கொல்தானே – கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக் கை மகளிர்
பாசவல் முக்கி, தண் புனல் பாயும்,
யாணர் அறாஅ வைப்பின்
காமர் கிடக்கை அவர் அகன் தலை நாடே?

திணையும் துறையும் அவை.

அவரை அக் களத்தில் பரணர் பாடியது.

துறை விளக்கம் : *முற்பாடலை ஒட்டியது இப்பாடலும்; 'யானையும் படை ஒழிந்தன; புரவி மைந்தரொடு பட்டன; சான்றோர் மாய்ந்தனர் வேந்தரும் ஒழிந்தனர்' என ஒருவரும் போரில் எஞ்சாமை கூறியதால் இப்பாட்டும் தொகை நிலை ஆயிற்று.*

உரை : *(1 – 10) எத்துணையோ பல யானைகளும் அம்பால் வருந்தி இனிமேல் செய்யும் போர்ச் செயல் ஏதுமில்லாமல் படையினர் இருப்பை அடைந்தன. வெற்றியால் புகழ் சிறந்த குதிரைகள் யாவும் வீரம் செறிந்த தம் மேலாட்களுடன் போர்க்களத்தே வீழ்ந்தன; தேரில் வந்த வீரர்கள் யாவரும்*

Koviloor Digital Library

தம்முடைய கேடயத்தால் கண்களை மறைத்தபடி ஒருங்கு வீழ்ந்தனர். இறுகக் கட்டப்பட்டதும் வேலைப்பாடமைந்ததும், மயிர் நீக்காது போர்த்தப்பட்ட தோலாகிய பரப்பினையுடையதுமான முரசங்கள் தம்மைத்தாங்கி அடிப்பாரில்லாமையால் இருந்தும் பயனில்லாது போயின. சந்தனம் பூசப்பெற்ற மார்பில் நெடிய வேல் பாய்ந்ததால் வேந்தர்களும் போரிட்டு அக்களத்தில் மடிந்தனர்.

(11 – 15) வயலிடத்து ஆம்பல் தண்டினால் செய்த வளையணிந்த கையையுடைய மகளிர், செம்மையான அவலினை, வாய் நிறையக் கொண்டவராய்க் குளிர்ந்த நீரில் பாய்ந்தாடுவர்; இத்தகையனவும் புதிய வருவாய் நீங்காதனவும் அழகிய இடங்களுடையனவுமாகிய அவ்வேந்தர்தம் அகன்ற இடம் அமைந்த நாடுகள் இனி எத்தகைய துன்பம் அடைவனவோ?

உரை விளக்கம் : முற்கூறிய பாடற் கருத்தொடு தொடர்புடையது; இது இருபெருவேந்தரும் இறந்தபின் அவர் நாடுகளின் நிலையை எண்ணிப் பாடியது; 'பல்யானையும் படைஒழிந்தன; புரவி எல்லாம் மைந்தரொடு பட்டன; தேர் தரவந்த சான்றோர் ஒருங்கு மாய்ந்தனரே' என்பன நாற்படையின் அழிவையும் சுட்டின; குதிரைப்படையுடன் மறவர்ப் படையையும் இணைத்துக் கூறினர்; படைகளுடன் அவர்தம் முரசங்களும் முழக்குவாரின்றிப் பாழாயின; பொறுக்குநர் என்றது முரசு அறைவாரை, அவர் முரசினைத் தாங்கி இசைப்பதால் என்க; மயிர்க்கண் முரசம், என்பது 'மயிர் புதை மாக்கண்' (பதிற். 29.12) என்றும் 'மயிர்க்கண் முரசு' (சிலம்பு. 5.88) என்றும் பிறவிடத்தும் சுட்டப்பட்டது; சிலப்பதிகார உரையில், ''புலியைப் பொருது கொன்று நின்று, சிலைத்துக் கோட்டு மண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர் சீவாமல் போர்த்த முரசு'' என்பதும் எண்ணத்தக்கது.

சான்றோர் என்பது இங்கு வீரரைக் குறித்தது. 'நோன்புரித் தடக்கைச் சான்றோர்' (பதிற். 14 : 12) என்றும் ''குறையாத் தானைச் சான்றோர்'' (பதிற். 82.13) என்றும் பதிற்றுப் பத்தும் வீரரைச் சான்றோர் எனக் குறித்தது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : மாண்ட - மாட்சி பொருந்திய; சான்றோர் - வீரர்; தோல் - கேடயம்; விசித்து - இறுக்கி; காமர் - அழகு, விருப்பம்.

64

நல் யாழ், ஆகுளி, பதலையொடு சுருக்கி,
செல்லாமோதில் - சில் வளை விறலி!
களிற்றுக் கணம் பொருத கண் அகன் பறந்தலை,
விசும்பு ஆடு எருவை பசுந் தடி தடுப்ப,
பகைப்புலம் மரீஇய தகைப் பெருஞ் சிறப்பின்
குடுமிக் கோமாற் கண்டு
நெடு நீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே?

திணை : பாடாண்திணை; துறை : விறலியாற்றுப்படை.

பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெடும்பல்லியத்தனார் பாடியது.

துறை விளக்கம் : 'தலைவனைக் கண்டால் அவன் பரிசிலால் வறுமை நீங்கும்' என்று வழிப்படுத்துதல் ஆற்றுப்படை; விறலியை முன்னிலையாகக் குறிப்பிட்டுக் கூறின் விறலியாற்றுப்படை; இப்பாடலில் 'சில்வளை விறலி! செல்வோம் புற்கை விட்டு வருவோம்' என்றதால் விறலியாற்றுப்படை ஆயிற்று.

உரை : (2 - 6) சில வளையல் அணிந்த விறலியே; யானைப்படை போரிட்ட அகன்ற இடமாகிய போர்க்களம்; அங்கு விண்ணைத் தொடுமாறு திரியும் கழுகுகளின் வழியைப் பசிய ஊனின் துண்டங்கள் தடுக்கும். அவ்வாறு பொருது பகைவரின் நாட்டிலமைந்த அழகிய பெருஞ்செல்வங்களைக் கொண்டான் முதுகுடுமிக் கோமான்;

Koviloor Digital Library

(6 – 7) அவனைக் கண்டு நீர் மிகுதியால் உண்டாக்கப்பட்ட கூழினைக் கைவிட்டு வருவோம்.

(1 – 2) அதற்கு நல்ல யாழினையும் சிறுபறையையும், ஒரு புறத்தே அடிக்கப்படும் பதலை எனும் பறையையும் பையிலிட்டுச் சுருக்கிச் செல்வோமோ?

உரை விளக்கம் : 'எருவை பசுந்தடி தடுப்ப' என்றது வானில் திரியும் கழுகுகளை, ஊன் உண்ணும் விருப்பத்தைச் செய்வதால் வழியைத் தடுக்கும்' எனக் கூற வந்தது. நீத்தனம் வரற்கே என்பது முற்றெச்சமாய் நின்று, விட்டு வருவதற்காக எனப் பொருள் தந்தது. 'புற்கை' என்பது நீர் மிகுதியாய், உணவுத் திரளில்லாது சோற்றுப் பருக்கையால் அமைந்த கூழ். 'தெண்ணீர் அடு புற்கை' (குறள். 1065) என்றார் வள்ளுவரும். பல்லியம் என்பது பல இசைக் கருவியின் தொகுதியைக் குறிக்கும். புலவர் நெடிய பல இசைக்கருவி உடையர் என்பதைக் குறிக்க 'நெடும்பல்லியத்தனார் என்ற பெயர் அமைந்தது; அதற்கேற்ப 'நல்யாழ் ..... சுருக்கி' என்பதும் காண்க. 'சுருக்கி' என்பது கருவிகளைப் பையிலிட்டு அதன் வாயைக் கட்டுதல் என்பதைக் குறிப்பது ஆம்.

'பண்ணமை முழவும் பதலையும் பிறவும், கண்ணறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கிக் ..... கலப்பையர்' (பதிற். 4. 3 – 5) 'சுருக்கினெம் கலப்பை' (புறம். 206.10) 'சுருக்கிக் காய கலப்பையிர்' (மலை. 13) எனவரும் தொடர்கள் இதனை உணர்த்தும்.

அருஞ்சொற்பொருள் : ஆகுளி, பதலை – தோலால் ஆகிய இசைக்கருவி வகைகள்; எருவை – கழுகு; தடி – ஊன்துண்டம்.

Koviloor Digital Library

65

மண் முழா மறப்ப, பண் யாழ் மறப்ப,
இருங் கண் குழிசி கவிழ்ந்து இழுது மறப்ப,
சுரும்பு ஆர் தேறல் சுற்றம் மறப்ப,
உழவர் ஓதை மறப்ப, விழவும்
அகலுள் ஆங்கண் சீறூர் மறப்ப,
உவவுத் தலைவந்த பெரு நாள் அமையத்து,
இரு சுடர் தம்முள் நோக்கி, ஒரு சுடர்
புன்கண் மாலை மலை மறைந்தாங்கு,
தன் போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப் புண் நாணி, மறத் தகை மன்னன்
வாள் வடக்கிருந்தனன்; ஈங்கு,
நாள் போல் கழியல, ஞாயிற்றுப் பகலே.

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

சேரமான் பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற் பெருவளத்தானோடு பொருது, புறப்புண் நாணி, வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது.

துறை விளக்கம் : *தன் தலைவன் இறந்தபின் செயலற்று வருந்திப் பாடுதல் 'கையறுநிலை' எனும் துறையாகும். பெருஞ்சேரலாதன் புறப்புண் நாணி வடக்கிருந்தான்; அவனிறப்பிற்குப் பிறகு அவனின்றி முன்பு போல வாழ்க்கை நடத்துதல் எளிதன்று' என வருந்திக் கூறி அவன் பிரிவுணர்த்தியதால் கையறு நிலை எனும் துறை ஆயிற்று.*

உரை : *(6 – 11) முழுமதி நாளான பெருநாளில் ஞாயிறும் மதியமும் தம்முன் நோக்கிக் கொள்ள, அவற்றுள் ஒன்றாகிய ஞாயிறு புல்லிய பொழுதுடைய மாலைக் காலத்தில் மலையிடத்து மறைந்தது; அதுபோல, தன்னை ஒத்த மன்னன் முன்பகுதியாகிய*

Koviloor Digital Library

மார்புக்கு என்று வீசிய வேலால் உண்டான புண் முதுகிலும் உண்டானதை எண்ணி வீரம் பொருந்திய மன்னனாகிய பெருஞ்சேரலாதன் வாளுடன் வடக்கிருந்தான்.

(1 – 5) அதனால் முரசின் கண்ணமைந்த பகுதியில் மார்ச்சனை இடுதல் மறந்தது; யாழ் இசையெழுப்புதலினின்று மறந்தது; பெரிய இடமுடைய பானையும் பாலின்மையால் கவிழ்ந்து நெய்கடையும் ஓசையை மறந்தது; தம்முடைய உறவினர்கள் மதுவுண்ணுதலை மறந்தனர்; உழவர் உழவுத்தொழில் செய்யாது நீங்கினர். அகன்ற தெருவுடைய சிற்றூர்கள் விழாவினை மறந்தது. தன் நாட்டில் இவ்வாறு ஆகுமாறு வடக்கிருந்தான்.

(11 – 12) ஆதலால் தனித்துத்திரியும் ஞாயிறு அமைந்த பகற்பொழுது, அவனில்லாத இவ்விடத்தில் எமக்கு முன்பு கழிந்து சென்ற நாட்களைப் போல அமையாது.

உரை விளக்கம் : மன்னன் உயிர்துறந்தனனாக, அவன் நாடு செயலற்று வருந்தும் நிலையை இப்பாடலுள் உணர்த்தினார்; 'மண் முழா மறப்ப ..... சீறூர் மறப்ப' என்று வருவன அவற்றின் பயன் கொள்வார் இன்மையை உணர்த்தின.

தன் பெருமைக்கு இழுக்கு வந்துற்றபோது அதற்கு நாணி, வடதிசைக்கண் ஏகி உயிர்விடுதல் வடக்கிருத்தலாகும். புறப்புண் நாணிப் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்தமை, 'கரிகால் வளவனொடு வெண்ணிப்பறந்தலை, பொருது புண் நாணிய சேரலாதன் அழிகளமருங்கின் வாள் வடக்கிருந்தென' (அகம். 55 10 – 12) என்பதனாலும் பெறப்படும்.

மண்முழா மறப்ப என்றது முழவின் அடிக்கும் பகுதியில் மார்ச்சனையிடுதலைக் குறித்தது; முழவில் மார்ச்சனை இடப்பெறுதலை 'மண்முழா அமைமின்' (புறம். 152.14) என்பதும் உணர்த்திற்று. 'இருங்கண் குழிசி' என்றது தன்னகத்தே பெரிய இடத்தைக்கொண்ட பானை என்பதைக் குறித்தது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : இரும் – பெரிய; இழுது – நெய்; சுரும்பு – வண்டு; உவவுத்தலைவந்த பெருநாள் – முழுமதி நாள், (பௌர்ணமி); அமையம் – பொழுது.

66

நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி,
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால்வளவ!
சென்று, அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே –
கலி கொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,
மிகப் புகழ் உலகம் எய்தி,
புறப் புண் நாணி, வடக்கிருந்தோனே?

திணை : வாகை; துறை : அரசவாகை.

சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடியது.

துறை விளக்கம் : அரசனின் இயல்பு கூறும் துறை அரசவாகை. இப்பாடலில் 'ஆற்றல் தோன்ற வென்றோய்' என்று வீரமும் குடிப்பண்பும் குறித்தமையால் இது அரச வாகையாயிற்று.

உரை : நீர் செறிந்த பெரிய கடலிடத்தே மரக்கலம் செலுத்தியும், அது அசையாதபோது, காற்றினை ஏவல் கொண்டும் அமைந்த வலிமையை உடையவனின் வழித்தோன்றலே! மதம் பொருந்திய ஆண்யானையை உடைய கரிகால் வளவனே! போர் மேற்சென்று கொன்று நின்னாற்றல் தோன்றுமாறு வென்றாய்; குறைவுபடாது பெருகும் புதுவருவாயை உடைய வெண்ணியில் ஊர்ப்புறத்தின் போர்க்களத்தில் மிகப் புகழமைந்த உலகை விரும்பிப்

Koviloor Digital Library

பொருந்தியவனும், புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்தோனுமான பெருஞ்சேரலாதன் நின்னைவிட நல்லன் அல்லனோ?

உரை விளக்கம் : பழந்தமிழர் மரக்கலம் செலுத்துவதில் வல்லவர் என்பதை இப்பாடல் உணர்த்தும். 'விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்' (மதுரைக். 321) என வந்தமையும் காண்க. 'வளி தொழில் ஆண்ட' என்றது காற்றின் திசையறிந்து அதன் பயனைக் கொள்ளுதலாகும். கரிகாலனின் வெற்றி, 'வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள் கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்' (பொருந. 147 – 8) எனவும் 'வெண்ணி வாயில் ..... வேந்தர் சாய, மொய் வலி யறுத்த' (அகம். 246.9 – 13) எனவும் வரும் அடிகளால் உணரலாம்.

கரிகாலன் வெற்றியால் புகழைப் பெறினும், மார்பு தைத்துப் புறத்து வேல் உருவின புண்ணைக் கருதி நாணி வடக்கிருந்த சிறப்பால் கரிகால் வளவனைவிடச் சிறப்புடையோன் என்றும் மிகப்புகழாகிய வீரஉலகம் அடைந்தனன் என்றும் குறித்தனர். திருக்குறளின், 'இளிவரின் வாழாத மானம் உடையார், ஒளி தொழுதேத்தும் உலகு (குறள். 970) என்பதற்கேற்பப் பெருஞ்சேரலாதன் வாழாது உயிர்விடுத்த பெருமையன் என்க. நின்னினும் நல்லன் என்ற உம்மையால் 'நீயும் நல்லனே' என்பது குறித்தனர்.

அருஞ்சொற்பொருள் : முந்நீர் – கடல்; நாவாய் – மரக்கலம்; உரவோன் – வலியோன்; யாணர் – புதியவருவாய்.

67

அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடு கொள் வென்றி அடு போர் அண்ணல்
நாடு தலை அளிக்கும் ஒள் முகம் போல,

Koviloor Digital Library

கோடு கூடு மதியம் முகிழ் நிலா விளங்கும்
மையல் மாலை, யாம் கையறுபு இனைய,
குமரிஅம் பெருந் துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது
சோழ நல் நாட்டுப் படினே, கோழி
உயர் நிலை மாடத்து, குறும்பறை அசைஇ,
வாயில் விடாது கோயில் புக்கு, எம்
பெருங் கோக் கிள்ளி கேட்க, 'இரும் பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்ட நின்
இன்புறு பேடை அணிய, தன்
அன்புறு நன் கலம் நல்குவன் நினக்கே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் பாடியது.

துறை விளக்கம் : அரசனின் செயல்களை புனையாது இயல்பாக மொழிதல். சோழனிடம் 'ஆந்தை அடியுறை' என்றால் நன்கலம் நல்குவன் எனச் சோழனின் இயல்பு கூறியதால் இயன்மொழி ஆயிற்று.

உரை : அன்னச் சேவலே! அன்னச் சேவலே! வெற்றியுள் மிக்க வெற்றியையுடைய, கொல்லும் போர்த் தொழில் புரியும் தலைமையன்; தன்னாட்டிற்கு அருள் செய்யும் அவனுடைய முகம் போல, இரு விளிம்பும் கூடிற்றாக விளங்கும் நிலவு தோன்றும் மாலைக்காலம்; தம் துணையின்றித் தனித்து விடப்பட்டோர்க்கு மயக்கத்தை உண்டாக்கும் மாலைக்காலம்; இவ்வேளையில் யாம் செயலற்று வருந்த, குமரியாற்றின் பெரிய நீர்த்துறையில் அயிரை மீனை நிறைய உண்டு வடதிசையிலமைந்த இமயமலைக்குப் பெயர்வாய்; அங்ஙனம் பெயர்ந்து செல்வாயானால், குமரிக்கும் இமயமலைக்கும் இடைப்பகுதியில் நன்மை பொருந்திய சோழநாட்டில் தங்குவாயானால் உறையூரின் உயர்ந்த மாளிகையில்

Koviloor Digital Library

நின் பேடையுடன் தங்குவாய்; வாயில் காவலர்க்கும் கூறாது தடையில்லாமல் அவனுடைய அரண்மனைக்குள் செல்க; சென்றால் எம் பேரரசனாகிய கிள்ளி கேட்குமாறு பிசிர் என்னும் பெரிய ஊரில் உறையும் ஆந்தையின் அடிக்கீழ் எனச் சொல்க; சொன்னால், மாட்சிமைப்பட்டதும் இன்பமுடையதுமான நின்னுடைய பெண் அன்னம், பூணுமாறு உனக்கு விருப்பமுடன் தனது நல்ல அணிகலனை அளிப்பான்.

உரை விளக்கம் : அன்னச் சேவல் என்பது அன்னத்தின் இனத்துள் ஆண்பறவையைக் குறித்தது; அன்னச்சேவல் என்றது அண்மை விளி; கருத்துரைக்கும் ஆர்வத்தால் அடுக்கி வந்தது. பாடலின் 11 – 12 ஆம் அடிகளில் பாடுவோர் பெயரும் பாட்டுடைத் தலைவன் பெயரும் வந்தன. பிசிராந்தையார் நேரிற் காணாது பழகிய நட்பினர்; எனவே இவரை, ''புணர்ச்சி பழகுதல் வேண்டா ....'' என்னும் குறட்பாவிற்குப் பரிமேலழகர் சான்று காட்டினர். இவ்விருவர்தம் நட்பின் பெருமையைச் 'செல்வக் காலை நிற்பினும் அல்லற் காலை நில்லலன்' (புறம். 215.8 – 9) எனக் கோப்பெருஞ்சோழனும் 'இசைமரபாக நட்புக் கந்தாக ..... வருவன் என்ற கோனது பெருமையும் அது பழுதின்றி வந்தவன் அறிவும்' (புறம். 217.5 – 8) என்று பொத்தியாரும் பாடிய பாடல் அடிகளால் உணரலாம்; பிசிராந்தையார் பாடிய புறப்பாட்டாலும் (புறம். 212) அவர்தம் நட்பை அறியலாம்.

'யாம் கையறுபு இனைய' என்றது சோழனைத் தாம் காணாமையால் 'செயலற்று வருந்த' என்று குறித்தது. கோழி என்றது உறையூர் ஆகும். 'கோழியோனே கோப்பெருஞ்சோழன்' என வருவதும் காண்க. அடியுறை என்றது அவர்க்குக் கீழிருந்து தொண்டு புரிவோரைக் குறித்தது.

அருஞ்சொற்பொருள் : ஆடு – வெற்றி; இனைய – வருந்த; படிதல் – தங்குதல்; குறும்பறை – பெடை, (அன்னப்பெடை); கோயில் – மன்னன் இருப்பிடம் (கோ + இல்).

Koviloor Digital Library

68

உடும்பு உரித்தன்ன என்பு எழு மருங்கின்
கடும்பின் கடும் பசி களையுநர்க் காணாது,
சில் செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து,
ஈங்கு எவன் செய்தியோ? - பாண! - 'பூண் சுமந்து'
அம் பகட்டு எழிலிய செம் பொறி ஆகத்து
மென்மையின் மகளிர்க்கு வணங்கி, வன்மையின்
ஆடவர்ப் பிணிக்கும் பீடு கெழு நெடுந்தகை,
புனிறு தீர் குழவிக்கு இலிற்று முலை போலச்
சுரந்த காவிரி மரம் கொல் மலி நீர்
மன்பதை புரக்கும் நல் நாட்டுப் பொருநன்,
உட்பகை ஒருதிறம் பட்டென, புட் பகைக்கு
ஏவான் ஆகலின், சாவேம் யாம்' என,
நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப,
தணி பறை அறையும் அணி கொள் தேர் வழி,
கடுங் கள் பருகுநர் நடுங்கு கை உகுத்த
நறுஞ் சேறு ஆடிய வறுந் தலை யானை
நெடு நகர் வரைப்பில் படு முழா ஓர்க்கும்
உறந்தையோனே குருசில்;
பிறன் கடை மறப்ப, நல்குவன், செலினே.

திணை : பாடாண்திணை; துறை : பாணாற்றுப்படை.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : பாட்டுடைத் தலைவன் ஒருவர்க்குப் பரிசில் நல்கிட அதனைப் பெற்றவன் பெறாதவனை அத்தலைவன் பால் வழிப்படுத்துதல் ஆற்றுப்படை; பாணனைச் சென்று பொருள் பெறுமாறு வழிப்படுத்தினால் பாணாற்றுப்படை. இப்பாடலில் 'பாண! குருசில் உறந்தையோன்; சென்றால் பிறன்கடை மறப்ப நல்குவன்' என்றதால் இது பாணாற்றுப்படை ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : (1 – 4) பாண! உடும்பினை உரித்தது போல எலும்பு புடைத்து எழுந்த விலாப்பகுதியை உடைய சுற்றத்தின் பசியைத் தீர்க்கின்றவரைக் காணமாட்டாய்; பலரும் அறிவதற்கு அரிய புலமையர் சிலரே; ஆதலால் சிலர் செவிகட்கு மட்டுமே இடமானது இந்தப் பாண் சாதியின் உணவுக்கெனப் பெற்ற யாழாகிய பரிசு என்று மனம் வெறுத்து இங்கு என்ன செய்கிறாய்?

(4 – 10) அணிகலன் புனைந்த, அழகிய, பெருமையையுடைய, சிவந்த வரி பரந்த மார்பினையுடையவன்; அவன் தன் மென்மையான இயல்பால் மகளிர்க்குத் தாழ்ந்து தந்து நிற்பவன்; அவனே வன்மையான இயல்பால் வீரரைச் சிறைப்படுத்தும் பெருமை சான்ற நெடுந்தகையான்; பிள்ளை ஈன்று பல திங்கள் செல்லினும், பால் சுரக்கும் தாயின் மார்பு போல, மிகுதியான நீர், கரையின் மரங்களைச் சாய்க்குமளவு பெருகிய வெள்ளத்தையுடைய காவிரி உலக உயிர்களைக் காக்கும் சோழ நன்னாட்டிற்கு வேந்தன்;

(11 – 19) அவன், "தமக்குள் உட்பகை தோன்றியதால், பகைவர்க்குப் பறவைகள் செய்யும் தீய குறிகளுடைய போர்க்களத்திற்கு வீரரை ஏவான்; நாங்கள் மடியமாட்டோம்" என்று வருந்தி நீங்காத வீரமுடைய, வீரர் தம்முடைய பருத்த தோளினைத் தட்டுவர். அவ்வீரர்களின் மன எழுச்சி அடங்குமாறு பறையோசை கேட்கும் அழகு பொருந்திய தேர் செல்லும் தெரு; அங்கு விருப்பம் தரும் கள்ளைப் பருகுவாருடைய கை நடுக்கத்தால் கள் தெருவில் சிந்தும்; மணமிகுந்த கள்ளாகிய சேற்றில் ஆடிய பாகர் ஏறாத யானை பறையோசையைச் செவிதாழ்த்தி உற்றுக்கேட்கும்; இத்தகைய உறையூரில் இருக்கின்றவனே எம் இறைவன்; அவனை அடைந்தால் நீ பிறருடைய வாயிலை நினையாத வண்ணம் மிகுதியாக வழங்குவான்.

உரை விளக்கம் : பாணனை விளித்து சோழன் நலங்கிள்ளியின்பால் செல்ல விடுத்தனர் என்க. 'செம்பொறி ஆகத்து' என்னும் அடியை, 'திருஞெமர் அகலம்' என்றாற் போல (பதிற். 16.17) செம்மையான

Koviloor Digital Library

திருமகள் பொருந்திய ஆகம் எனலும் அமையும் (பொறி : திருமகள்). வெற்றியையுடைய அரசர் பலரும் மகளிர்க்கு மென்மையனாயும் பகைவர்க்கு வன்மையனாயும் விளங்குதல் 'மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர் மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப' (புறம். 10.9-10) என முன்னரும் கூறியமையானும் உணரலாம். உரிய தேவைக்கும் மிகுதியாகக் காவிரியில் நீர் பெருகியமையைக் குறிக்க, குழந்தை பிறந்து பல திங்கள் கடந்த பின்னும் பால்சுரக்கும் தாயைச் சான்றாக்கினார். இதன்மூலம் காவிரியைத் தாயாக்கி உலக உயிர்கள் அதனாற் காக்கப்படுதலை உணர்த்தினார்.

புட்பகை : புள்ளின் நிமித்தத்திற்குப் பகையாகியவன் எனவும் நலங்கிள்ளி கூறப்படுபவன்; எனவே பறவையின் தீய சகுனத்திற்கு மாறாக வெல்லுதலையுடையவன் எனல் அமையும். உட்பகை தீராது புறப்பகை தீர்த்தலரிது; எனவே அயலாரிடம் போர் செய்ய கிள்ளி விரும்பாதிருந்தனன்; 'வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக, கேள்போல் பகைவர் தொடர்பு (குறள். 882) என்றார் திருவள்ளுவரும்; மன்னன் போர் மறுப்பவும் வீரர் வீரம் குன்றாமையை 'உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்' என்னும் (குறள். 778) குறளுக்குப் பரிமேலழகர் சான்று காட்டினார்.

'பிறருடைய வாயில் மறப்ப' என்றது தன் கொடைத் தன்மையால் தன்னையே கருதுமாறு ஈவான்' என்றும் 'மீண்டும் இரவாது வாழ்வதற்கேற்பப் பெரும் பொருள் ஈவான்' என்றும் உணர்த்தியது.

அருஞ்சொற்பொருள் : கடும்பு - சுற்றம்; புனிறு - ஈன்று அண்மையையுடைய காலம்; இலிற்றுதல் - சுரத்தல்.

Koviloor Digital Library

69

கையது, கடன் நிறை யாழே; மெய்யது,
புரவலர் இன்மையின் பசியே; அரையது,
வேற்று இழை நுழைந்த வேர் நனை சிதாஅர்
ஓம்பி உடுத்த உயவற் பாண!
பூட்கை இல்லோன் யாக்கை போலப்
பெரும் புல்லென்ற இரும் பேர் ஒக்கலை;
வையகம் முழுதுடன் வளைஇ, பையென
என்னை வினவுதி ஆயின், மன்னர்
அடு களிறு உயவும் கொடி கொள் பாசறை,
குருதிப் பரப்பின் கோட்டு மா தொலைச்சி,
புலாக் களம் செய்த கலாஅத் தானையன்
பிறங்கு நிலை மாடத்து உறந்தையோனே
பொருநர்க்கு ஒக்கிய வேலன், ஒரு நிலைப்
பகைப் புலம் படர்தலும் உரியன்; தகைத் தார்
ஒள் எரி புரையும் உரு கெழு பசும் பூண்
கிள்ளி வளவற் படர்குவை ஆயின்,
நெடுங் கடை நிற்றலும் இலையே; கடும் பகல்
தேர் வீசு இருக்கை ஆர நோக்கி,
நீ அவற் கண்ட பின்றை, பூவின்
ஆடு வண்டு இமிராத் தாமரை
சூடாயாதல் அதனினும் இலையே

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : *கிள்ளிவளவனிடம் சென்று பரிசில் பெறும் வண்ணம் பாணனை நோக்கி, 'உயவல் பாண! வினவுதி; கிள்ளி வளவனை அடைந்தால் நெடுங்கடை நிற்றலும் இல்லை;*

Koviloor Digital Library

வண்டிமிரா பொற்றாமரை சூடாமற் போதல் அதனினும் இல்லை' எனக் கூறி வழிப்படுத்தியமையால் பாணாற்றுப்படை ஆயிற்று.

உரை : *(4)* வருத்தத்தை உடைய பாணனே!

(1 – 8) நின் கையில் இலக்கணம் பொருந்திய யாழுடன், உன்னுடலில், காப்பார் இல்லாமையால் உண்டான பசியுடன் தோன்றுவாய்; இடையில் வேறுவேறு நூலிழை நுழைந்து, வேர்ப்பதால் நனைந்த கந்தலாடையைத் துன்பத்தை மறைத்து உடுத்தினாய்; சோம்பலினால் ஊக்கமில்லாதவன் உடலைப் போன்று பெரிதாகப் பொலிவிழந்த சுற்றத்தை உடையவனாய் உலகம் முழுதும் திரிந்து பின் என்னை மெல்ல அணுகி வறுமை தீர்ப்பார் யாவர் என வினவுகின்றாய்; ஆதலால் கேட்பாயாக;

(9 – 16) வேந்தர்தம் கொல்லும் யானை புண்பட்டு வருந்திக் கிடப்பதும், கொடியெடுக்கப் பட்டதுமான பாசறையில், குருதிபடர்ந்த பரப்பில் யானையைக் கொன்று, புலாலையுடைய போர்க்களம் செய்த படையைக் கொண்டவன்; அவன் உயர்ந்த நிலைகளை உடைய மாடங்கள் பொருந்திய உறையூரிடத்திருப்பவன். அவன் பகைவீரரை எதிர்க்க உயர்த்திய வேலையுடையவனாய் ஒரு நிலையில் பகைவர் நாடு செல்லுதலும் உரியவன். சுற்றப்பட்ட மாலையையும் ஒளி பொருந்திய நெருப்புப் போல நிறமுடைய பசிய பொன்னால் செய்த பூணினை உடையவன் கிள்ளிவளவன்.

(16 – 21) அவனிடத்துச் செல்வாயானால் அவனது நெடிய வாயிலில் புகும் காலம் பார்த்து நிற்க வேண்டுதல் இல்லை; கடிய பகல் பொழுதில் இரவலர்க்குத் தேரினை வழங்குகின்றவனாய் அவன் இருப்பதை நீ உன் கண்ணாரக் காண்பாயாக. அவ்வாறு கண்டபின் பூவில் தேனுண்ணும் வண்டு மொய்க்காத பொன்னால் ஆகிய தாமரையைப் பெறுவாய்; வாயிலில் நிற்றல் இல்லாமை போன்றே தாமரையைச் சூடாமல் போதலும் இல்லையாம். எனவே அவனை நாடிச் செல்க.

Koviloor Digital Library

உரை விளக்கம் : உறந்தையோன்; பகைப்புலம் படர்தலும் உரியன்' என்பதால் போரின் பொருட்டு நகரை விட்டு நீங்குமுன் செல்லுக எனக் குறிப்புப் பொருட்டுத் தோன்றியது. 'அவனருளுக்கு ஏங்கிப் பகைவர்கள் நெடிய வாசலில் நிற்பதுண்டு; நீ பாணன் ஆகையால் நெடிய வாசலில் நிற்க வேண்டா உன்னைத் தடுப்பாருமில்லை' என்பதன் பொருட்டு 'நெடுங்கடை நிற்றலுமிலையே' என்றார். மேலும் அவன் எப்பொழுதும் பாணர் முதலானோராகிய இரவலரை ஏற்றுப் போற்றுவான்; எனவே காலம் பார்த்து நெடிய வாசலில் புகுவதற்கு நிற்க வேண்டியதில்லை என்பதும் கொள்க. பொன்னாலாகிய மலர் செயற்கையாதலால் மணமில்லை; வண்டு மொய்க்காது. எனவே, '''வண்டிமிராத் தாமரை' என்றார். இயற்கைத் தாமரையினின்று வேறுபடுத்தவும் மன்னனின் பொன் வழங்கும் ஈகையைக் கூறவும் இங்ஙனம் கூறினார். ''ஆடு வண்டு இமிரா அழல் அவிர் தாமரை'' (பெரும்பாண். 481) என்பதும் அது. பாணர் வறுமையால் கந்தையை உடுத்த தன்மையை, ''வேறொடு நனைந்து வேற்றிழை நுழைந்த'' (பொருந. 80 – 81) என்பதாலும் உணரலாம்.

அருஞ்சொற்பொருள் : சிதாஅர் – கந்தை; பூட்கை – மன உறுதி; உயவு – வருத்தம்; ஒக்கிய – வீசிய, உயர்த்திய; உரு – நிறம்.

70

தேஎம் தீம் தொடைச் சீறியாழ்ப் பாண!
'கயத்து வாழ் யாமை காழ் கோத்தன்ன
நுண் கோல் தகைத்த தெண் கண் மாக் கிணை
இனிய காண்க; இவண் தணிக' எனக் கூறி;
வினவல் ஆனா முது வாய் இரவல!
தைஇத் திங்கட் தண் கயம் போல,
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியல் நகர்,

Koviloor Digital Library

அடுதீ அல்லது சுடுதீ அறியாது;
இரு மருந்து விளைக்கும் நல் நாட்டுப் பொருநன்,
கிள்ளி வளவன் நல் இசை உள்ளி,
நாற்ற நாட்டத்து அறு காற் பறவை
சிறு வெள் ஆம்பல் ஞாங்கர் ஊதும்
கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழும் ஓதி, ஒள் நுதல்,
இன் நகை விறலியொடு மென்மெல இயலிச்
செல்வை ஆயின், செல்வை ஆகுவை;
விறகு ஒய் மாக்கள் பொன் பெற்றன்னதோர்
தலைப்பாடு அன்று, அவன் ஈகை;
நினைக்க வேண்டா; வாழ்க, அவன் தாளே!

திணையும் துறையும் அவை.

அவனைக் கோவூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : கிள்ளிவளவனை அடைந்து பொருள் பெறுமாறு பாணனிடம் "சீறியாழ்ப்பாண; கிள்ளிவளவனின் புகழைக் கருதி, விறலியுடன் செல்க; சென்றால் செல்வம் அடைவாய்" எனக் கூறியதால் இப்பாட்டும் பாணாற்றுப்படையாயிற்று.

உரை : தேன்போல இனிமை தருவதும் தொடுக்கப்பட்ட நரம்புகளை உடையதுமான சிறிய யாழைக் கொண்ட பாணனே! "குளத்தின் கண் வாழும் ஆமையைக் கோலில் பிணைத்ததுபோல நுண்ணிய கோலில் பிணித்த பெரிய உடுக்கையின் ஓசை இனிது காண்க; இவ்விடத்தில் தங்கி வருத்தம் தணிக", எனக் கூறிப் பின் வினவுதல் தவிராத முதிய வாய்மையை உடைய இரவலனே! தைத்திங்களின் குளிர்ந்த குளம் போலப் பலரும் கொண்ட பின்னும் குறையாத சோறுடைய அகன்ற நகரம்; அது உணவிற்கென உண்டாக்கப்பட்ட நெருப்பையன்றி ஊர் சுடுகின்ற நெருப்பினை அறியாது; தண்ணீரும் உணவுமாகிய இரு மருந்தைப் பசிப்பிணிக்குத்

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY

தரும் நல்ல நாட்டையுடைய தலைவனாகிய கிள்ளிவளவன்; அவனுடைய நல்ல புகழைக் கருதுவாய்; மணத்தை ஆராயும் இயல்புடைய வண்டு சிறிய வெள்ளை ஆம்பல் மீது வட்டமிடும்; கையில் வண்மையான கொடையை உடைய பண்ணனின் சிறிய குடிவழியே பாதிரி மலர் மணக்கும் கூந்தலையும், ஒளியுடைய நுதலையும் இனிய முறுவலையுமுடைய விறலியுடன் மெல்ல மெல்ல நடந்து செல்க; சென்றால் செல்வத்தை அடைவாய்; விறகுகளைக் காட்டினின்று எடுத்துச் செல்லும் மக்கள், பொன் பெறுவது போன்ற தன்மையில் அவனுடைய ஈகை அமையாது; அவனுடைய கொடைப்பொருள் பெறுவமோ என நினைக்க வேண்டாம்; உறுதியுடன் பெறுவாய்; அவன் தாள் வாழ்க.

உரை விளக்கம் : சோழனிடம் பரிசில் பெற்றுவரும் பாணனைக் கண்ட பாணன் வினவுதாகவும் அவன் விடை கூறுவதாகவும் அமைந்தது இப்பாட்டு. 'வினவல் ஆனா' என்றது பரிசில் பெற்றதிறத்தைப் பலமுறை கேட்டும் மீண்டும் மீண்டும் வினவுகின்றான் எனக் குறித்தது. நீரும் உணவும் பசிப்பிணியை நீக்கி உயிரைக் காப்பதில் இருமருந்து எனப்பட்டன; மணிமேகலையில் 'அதிற் பெய்த ஆருயிர் மருந்து' (மணி. 11.40) 'பசிப்பிணி மருந்து' (மணி. 11.80) என்பனவும் அப்பொருளில் அமைந்தன.

சோழநாட்டில் கிள்ளிவளவன் காலத்தில் வாழ்ந்த வள்ளல் ஒருவன் பண்ணன்; உணவுக் கொடையில் சிறந்தவன்; எனவே, 'பசிப்பிணி மருத்துவன்' (புறம். 173.11) என்று கிள்ளிவளவனால் பாராட்டப் பெற்றான்; மன்னனாலேயே பாராட்டப் பெற்ற சிறப்புடையன் ஆதலால் கோவூர் கிழாரும் 'பண்ணன் சிறுகுடி'யை நினைந்து குறித்தார்; 'விறகொய் மாக்கள் பொன் பெற்றன்னதோர் தலைப்பாடு அன்று' என்பது 'விறகின் பொருட்டுக் காட்டுக்குவருவோர் பொன்னை அடைந்து மகிழ்வதுபோல அவன் பரிசில்தாரான்; அவரவர் வரிசையறிந்து அளித்தலில் வல்லவன்' எனக் குறித்தது.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 63743
Date of purchases:
Call Number:
Koviloor Digital Library

மன்னர்கள் வரிசையறிந்து ஈதல் வேண்டும் என்பதைக் கபிலரின் புறப்பாட்டால் (புறம். 121) உணர்க. நினைக்க வேண்டா என்றது பரிசில் தருவானோ என ஐயுறல் வேண்டா என்பதற்காம்.

அருஞ்சொற்பொருள் : காழ் - கோல்; அடுதீ - சமைத்தலாலுண்டாகும்தீ; ஓதி - கூந்தல்; இயலி - நடந்து.

71

மடங்கலின் சினைஇ, மடங்கா உள்ளத்து,
அடங்காத் தானை வேந்தர் உடங்கு இயைந்து,
என்னொடு பொருதும் என்ப; அவரை
ஆர் அமர் அலறத் தாக்கி, தேரொடு
அவர் புறங்காணேன் ஆயின் - சிறந்த
பேர் அமர் உண்கண் இவளினும் பிரிக;
அறன் நிலை திரியா அன்பின் அவையத்து,
திறன் இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக; மலி புகழ்
வையை சூழ்ந்த வளம் கெழு வைப்பின்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும், மன் எயில் ஆந்தையும், உரை சால்
அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்,
வெஞ் சின இயக்கனும், உளப்படப் பிறரும்,
கண் போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன் களி மகிழ் நகை இழுக்கி யான் ஒன்றோ,
மன்பதை காக்கும் நீள் குடிச் சிறந்த
தென்புலம் காவலின் ஒரீஇ, பிறர்
வன் புலம் காவலின் மாறி யான் பிறக்கே!

திணை : காஞ்சி; துறை : வஞ்சினக் காஞ்சி.

Alagappa university
Central Library
63743

Koviloor Digital Library

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் பாட்டு.

திணை விளக்கம் : பகைவர் போரிட வருகையில் அவரை எதிர்த்துப் போருக்கு எழுதல் காஞ்சித்திணையாகும்.

துறை விளக்கம் : அக்காஞ்சித் திணையில் எதிர்த்த பகைவரை வெல்வேன் என சபதம் செய்வேன் என்பது மரபு. 'வெல்வேன் வெல்லேனாயின் இன்ன பிழை செய்தவன் ஆவேன்' எனத் தன்னைக் குறித்து மொழிவது வஞ்சினக் காஞ்சியாகும். இப்பாடலில் 'புறங்காணேன் ஆயின் ..... மெலிகோல் செய்தேன் ஆகுக; நண்பின் மகிழ்ச்சியை விட்டவனாகுக; மாறியான் பிறப்பதாகுக' என்று மொழிந்தமையால் இது வஞ்சினக் காஞ்சி ஆயிற்று.

உரை : \சிங்கம் போலச் சினம் கொண்டு மீளாத உள்ள எழுச்சியுடன் அடங்காத பெரிய படையுடைய வேந்தர் பலரும் தம்முள் கூடி என்னுடன் 'போரிடுவோம்' என்பர். அவ்வேந்தர்களைப் பொறுத்தற்கரிய போரில், அவர்கள் அலறுமாறு தாக்கித் தேருடன் அவர் புறங்கண்டு ஓடுதலைக் காண்பேன்; அவ்வாறு காணேனாயின், நான் சிறந்த, பெரிய மைதீட்டிய கண்களுடைய என் பெருந்தேவியாகிய இவளை விட்டு நீங்குவேனாகுக; அறம் நிலைபெற்றதும், குடிகளிடம் மாறுபடாத அன்புடையதுமான அவைக்களத்தில், அறமுறைக்குப் புறம்பான ஒருவனை வைத்து, நீதிநெறி தவறி, கொடுங்கோல் ஆட்சி செய்தவனாக நான் ஆவேனாகுக; புகழ் மிகுந்த வையையால் சூழப்பெற்ற வளம் பொருந்திய ஊர்களில் பொய்யாத புதிய வருவாயை உடைய 'மையல்' என்னும் ஊருக்குத் தலைவனாகிய மாவனும், நிலையான 'எயில்' என்னும் ஊருக்குத் தலைவனாகிய ஆந்தையும், புகழ் நிறைந்த அந்துவன் சாத்தனும் ஆதன் அழிசியும், வெம்மையான சினமுடைய இயக்கனும் உட்படப் பிறரும் என்னுடன் கண் போல் நட்புடன் கலந்த நண்பினர்; அத்தகைய உறவுடையவருடன் கூடிய இனிய பெருமிதம் கூடிய மகிழ்ச்சியான நகைப்பினைத்

Koviloor Digital Library

தவறவிட்டவன் ஆவேனாகுக; பல உயிரையும் காக்கும் தொன்மையான குலங்களில் சிறந்த பாண்டியக் குலத்தில் பிறந்து பாண்டிய நாட்டைக் காக்கும் பெருமையிலிருந்து நீங்கிப் பிறருடைய வன்புலங்களைக் காக்கும் குடியினனாகப் பிறப்பு அடைந்து சிறுமையுறுவேனாகுக.

உரை விளக்கம் : மாவன், ஆந்தை, அந்துவன்சாத்தன், அழிசி, இயக்கன் ஆகியோர் பூதப்பாண்டியனின் நண்பர்கள்; போரில் வெல்லாது போயின் நண்பர்களின் நட்பிற்கு ஊறு செய்தவனாகுக என்றமையால் இவனுடைய உளங்கலந்த நட்பு உணர்த்தப் பெறும். பாண்டியர் குடி தொன்மையானது; அறமுறைமையுடையது; எனவே, 'மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த தென்புலக் காவல்' என்றான். இதனை ஒட்டியே சிலம்பிலும் 'மன்பதை காக்கும் தென்புலம் காவல் என் முதற் பிழைத்தது' (சிலம்பு. 20.76 – 77) மெலிகோல் செங்கோல் என்பதற்கு மறுதலை; கொடுங்கோல் என்பதும் அது; நீதிநெறி குன்றினால் செங்கோல் தன் அறத்தின் வன்மை குன்றி மெலிந்து வளையும் என்பது பழந்தமிழர் கருத்து; எனவே போரில் வெல்லாது போயின் நீதிநெறி தவறியோர் பழிக்கப் பெறுவது போலத் தானும் பழிக்கப் பெறுவன் என்றார். 'நடுவு இகந்து ஒரீஇ நயனில்லான் வினைவாங்கக், கொடிதோர்த்த மன்னவன் கோல் போல' எனக் கலித்தொகையில் உவமையாய்க் கூறப்படுவதும் பழந்தமிழர் மரபுணர்த்தும். 'பிறர் வன்புலம் காவலின்' என்றது பேரரச வாழ்வின் நீங்கிச் சிற்றரசனாய்ப் பிறர்க்குத் தொண்டு புரிந்து, கப்பம் கட்டும் இழிநிலையைச் சுட்டியது;

அருஞ்சொற்பொருள் : மடங்கல் – சிங்கம்; வைப்பு – ஊர்; யாணர் – புதுவருவாய்; ஒரீஇ – நீங்கி.

Koviloor Digital Library

72

'நகுதக்கனரே, நாடு மீக்கூறுநர்;
இளையன் இவன்' என உளையக் கூறி,
'படுமணி இரட்டும் பா அடிப் பணைத் தாள்
நெடு நல் யானையும், தேரும் மாவும்,
படை அமை மறவரும், உடையம் யாம்' என்று
உறு துப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கி,
சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அருஞ் சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் - பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது,
'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பி,
குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு.

துறை விளக்கம் : *'முரசமொடு அகப்படுத்திலேன் எனில், குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக; புலவர் பாடாது வரைக; இன்மை யான் அடைக' என்று தன் வீரம் புலப்படச் செழியன் சபதம் செய்ததால் இது வஞ்சினக் காஞ்சி ஆயிற்று.*

உரை : *'இவன் மிகவும் இளையவன்; இவனுடைய நாட்டை உயர்வாகப் புகழும் புலவர்கள் நம் நகைப்பிற்கு*

Koviloor Digital Library

இடமாவார்கள்' என என் மனம் வெறுக்குமாறு கூறினார்கள். மேலும் 'ஒலிக்கும் மணிகள் இருபுறமும் கட்டப்பட்டு, மாறி மாறி ஒலிக்கும்படி இயங்குவதும், பரந்த அடியும் பருத்த காலும் உடையதுமான நெடிய நல்ல யானைகளையும், தேர்களையும், குதிரைகளையும், படைக்கருவிகளுடைய மறவர்களையும் நாங்கள் கொண்டுள்ளோம்' என்று, என் மிகுதியான வலிமைக்கு அஞ்சாது பகைத்துச் சினம் பெருகிப் புன்மையான மொழிகளைச் சினமுடைய வேந்தர் கூறினர்; அவ்வாறு கூறியோரை, பொறுத்தற்கரிய போரில் சிதறுமாறு போர் செய்து அவருடைய முரசங்களுடன் கைக்கொள்ளுவேன்; அவ்வாறு அவரைக் கொள்ளாவிடில், பொருந்திய என் கொற்றக் குடையின் நிழலில் வாழும் குடிகள், சென்று தங்க நிழல் காணாது வருந்த, 'எம் அரசன் கொடியவன்' எனக் கண்ணீருடன் பழி தூற்றும், கொடுங்கோலேன் ஆவேனாக; சிறந்த தலைமையும் மேம்பட்ட புலமையும் உடைய மாங்குடி மருதன் முதல்வனாக, உலகத்தில் வாழும் நிலையுடையோர் பலராலும் பாராட்டப்பட்ட சிறப்பினையுடைய புலவர் பலரும் என் நில எல்லையைப் பாடாது நீங்குக; என்னால் காக்கப்படும் சுற்றத்தார் துன்பமடைந்து இரந்து கேட்கும் போது அவர்க்குத் தர இயலாது வருந்தும் வறுமைநிலையை நான் அடைவேனாக.

உரை விளக்கம் : இளைய வயதில் அரசேற்றான் நெடுஞ்செழியன்; அதனால் அவன் நாடு கொள்ளுதல் எளிதெனப் பகைவர் வந்தமையை 'இளையன் இவன்' எனும் பகைவர் கூற்றாக மொழிந்தான். தலையாலங்கானத்தில் இளமைப் பருவத்திலேயே போர் ஏற்றுப் புகுந்தான் என்பதை, ''கிண்கிணி .....'' ''வணங்குதொடை ...'' எனவரும் புறப்பாடல்களாலும் (புறம். 77 – 78) உணர்க. தமிழ்கெழு கூடல் என்று சங்கமிருந்தமையைக் கூறும்; 'மாங்குடி மருதன் தலைவனாகப் புலவர் பாடாது வரைக' என்பதும் அதனொடு பொருந்திச் சங்கமிருந்தமையை உணர்த்தும். நாடு மீக் கூறுநர் – நாட்டை உயர்த்திக் கூறும் புலவர்கள்; பகைவர் தன் நாட்டை உயர்த்தியுரைப்பாரை எண்ணிச் சிரிக்கத்தக்கவர் என்றனர்; அவ்வாறு ஆகாது போரில் வெல்லவேண்டும்; போரில் வெல்லாவிடில்

Koviloor Digital Library

பகைவர் கூறியது மெய்யாகிவிடும். எனவே உயர்த்திக் கூறும் புலவர்கள் பாடாதொழிக எனக் கருத்தியைபு பட நின்றது. சிறுசொல் என்றது தன்னை மதியாமல், 'இளையன்' என்றும் 'உடையம் யாம்' என்று சினத்துடன் கூறிய மொழிகளை. 'புரப்போர் ... உறவே' என்றதால் தன் ஈகை விருப்பத்தையும் புலப்படுத்தினான்.

'கொடியன் எம் இறை' என்றது, ''அலவுற்றுக் குடி கூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக் கொலையஞ்சா வினைவரால் கோல் கோடியவன் நிழலுலகு (கலித். 10.5 – 7) என்றாற் போல, 'தன்மக்களும் வருந்திப் பழிக்கும் நிலையைப் பெறுதலைக் கூறியது.

அருஞ்சொற்பொருள் : மீக்கூறுநர் – உயர்த்திக் கூறுபவர்; இரட்டுதல் – மாறி மாறி ஒலித்தல்; மா – குதிரை, (குதிரைப்படை); வரைக – நீங்குக.

73

மெல்ல வந்து, என் நல் அடி பொருந்தி,
'ஈ' என இரக்குவர் ஆயின், சீருடை
முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்;
இன் உயிர் ஆயினும் கொடுக்குவென், இந் நிலத்து;
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது, என்
உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்
துஞ்சு புலி இடறிய சிதடன் போல,
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே; மைந்துடைக்
கழை தின் யானைக் கால் அகப்பட்ட
வன் திணி நீள் முளை போல, சென்று அவண்
வருந்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய
தீது இல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல் இருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக, என் தாரே!

Koviloor Digital Library

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளி பாட்டு.

துறை விளக்கம் : 'பகைவரை அவர் வருந்துமாறு பொருது வெல்வேன்; அவ்வாறு போரிடாது போயின், பொதுமகளிருடன் கூடிக் குழைந்த இழிநிலையை என் மாலை உறுவதாகுக' என்று சோழன் மொழிந்தமையால் வஞ்சினக் காஞ்சியாயிற்று.

உரை : 'மெல்லவந்து எனது பிறக்கிடாத நல்ல அடியை அடைந்து, ''எமக்குத் தருக'' எனத் தாழ்ந்திரந்து நிற்பாராயின் சிறப்புடைய முரசு பொருந்தியதும் தொன்மையானதுமான எனது அரசாட்சியைத் தருதலும் எளிது; அவர்க்கு இனிய உயிரையும் இவ்வுலகில் தருவேன்; மாறாக, தம் அமைச்சர், படைத்தலைவர் முதலான ஆற்றலுடையவர்தம் ஆற்றலைப் பாதுகாக்காது, என் உள்ளத்தைப் பழித்துக் கூறிய மடமையையுடையவன், பலரும் அறியுமாறு உறங்கும் புலியைக் காலால் இடறி எழுப்பிய பார்வையற்றவன் போலப் பிழைப்பது அரிது ஆகும். மூங்கிலை உண்ணும் வலிய யானையின் காலிடையே அகப்பட்ட வன்மையான, திண்மையான மூங்கில் முளை அழிவது போலப் பகைவரூர் சென்று அவர் வருந்தும்படி போரிடுவேன்; அவ்வாறு போரிடேனாயின், பொருந்திய தீதற்ற உள்ளம் கொண்டு காதலிக்காதவரும், பலவாகிய, கரிய கூந்தலையுடையவருமான பொதுப்பெண்டிர்தம்மொடு கூடிய பொருந்தாத தழுவலில் என் மாலை துவள்வதாகுக.

உரை விளக்கம் : வலிமையுடைய அரசன் அடிகளைப் போற்றி வலிமையில்லாதார் நிற்றல் இயல்பு. எனவே 'என் நல்லடி பொருந்தி' என்றான். 'திருந்தடி பொருந்த வல்லார் வருந்தக் காண்டல் அதனினும் இலம்' (புறம். 66.18) என்றமை போலத் தன்னடி வந்தடைந்தால் வருத்தம் இன்று; தன் நாடும் தருதல் உண்டு என்றான். இவற்றால் சோழன் நலங்கிள்ளியின் வீரமும் பெருமையும் உணர்த்தப்பெறும்.

Koviloor Digital Library

'ஆற்றலுடையார் ஆற்றல் போற்றாது' என்றது தன்னாட்டு வீரர்தம் சிறப்பினைக் கூறியது. உறங்கும் புலியைக் கண்டவர் அஞ்சி அகல்வர்; மாறாகக் கண்ணிலான் காணாது அதனைக் காலால் இடறினால் புலியினின்று உய்தல் அரிது. அதைப்போலத் தன்னிடமிருந்து பகைவர் தப்புதலும் அரிது என்றான்;

யானை மூங்கிலுண்ணுகையில் அதன் காலில் மூங்கில் முளை அழியும்; அதுபோல, பகைவர் அழிதலும் உறுதி என்பது 'கழைதின் யானை ... நீண்முளைபோல' என்பதாலுணர்த்தினான். இவ்வுவமை 'வார் முகில் முழக்கின் மழகளிறு, மிகீஇத் தன், கான்முளை மூங்கில் கவர்கிளைபோல, உய்தல் யாவது நின்னுடற்றியோரே'' எனப் பதிற்றுப் பத்தினுள்ளும் வந்தது. 'தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளா' என்பதைத் தீதற்ற நெஞ்சத்துப் பிறந்த காதலைக் கொள்ளாது, அவர் கொண்ட பொருளைக் கொண்டு' எனினும் அமையும். பொதுப் பெண்டிராகிய பொருட்பெண்டிர் முயக்கம் இழிந்தது; எனவேதான் வள்ளுவரும், ''பொருட் பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள் ஆயும் அறிவினவர் (குறள். 914) என்றும் 'ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப மாய மகளிர் முயக்கு' (குறள். 918) என்றும் கடிகின்றார். அறிவுடையோர் பலரால் கடிந்து ஒதுக்கப்படும் இழிசெயல் புரிவதால் உண்டாகிய பழியை யான் அடைக என்று கூற 'ஒல்லா முயக்கிடை குழைக என் தார்' என்றான். இதனால் இவன் நல்லொழுக்கம் புலனாகும்.

அருஞ்சொற்பொருள் : தஞ்சம் – எளிமை; சிதடன் – பார்வையற்றோன்; மைந்து – வலிமை; ஒல்லா – பொருந்தாத; தார் – மாலை.

Koviloor Digital Library

74

குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,
'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்;
தொடர்ப் படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்,
மதுகை இன்றி, வயிற்றுத் தீத் தணிய,
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ, இவ் உலகத்தானே?

திணை : பொதுவியல்; துறை : முதுமொழிக் காஞ்சி.

சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது, பற்றுக் கோட்பட்டு, குடவாயில் கோட்டத்துச் சிறையில் கிடந்து, 'தண்ணீர் தா' என்று பெறாது, பெயர்த்துப் பெற்று, கைக் கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு.

துறை விளக்கம் : *அறிவுடையார் ஆய்ந்து கூறும் உலக இயல்பு கூறுதலாகிய பொதுவியல் துறையின் இலக்கணத்தின்படி, 'அரசர்க்கு மானத்தினும் சிறந்த அறமும் பொருளும் இன்பமும் இல்லை' என்று கூறியமையால் இப்பாட்டு முதுமொழிக் காஞ்சியாயிற்று.*

உரை : *பிள்ளை இறந்து பிறந்தாலும் தசைப் பிண்டமாக வந்து பிறந்தாலும் அவற்றை ஆள் அல்ல என்று கருதார்; அவற்றையும் வாளால் வடுப்படுத்தி அடக்கம் செய்யும் முறைமையில் தவறார். அங்ஙனமாக, அரசராயிருந்து போரில் பகைவர் வாளினால் வடுப்பட்டு அழியாது உயிர்பிழைத்தால், சங்கிலியில் பிணிக்கப்பட்ட நாய் போல விலங்கு பூட்டித் துன்புறுத்துவர் பகைவர்; அத்தகைய உறவு கொண்டிராத பகைவர் உதவியால் சிறிது நீரினை, "அவரிடம் இரந்துண்ணோம்" என்னும்*

Koviloor Digital Library

மனவலிமை இல்லாது வயிற்றுத் தீயினைத் தணிக்க வேண்டி இரந்திடும் இழிந்த இயல்புடையார்; இவ்வியல்புடையாரை அரசர்களும் பெறுவார்களோ?

உரை விளக்கம் : இப்பாட்டுப் பழந்தமிழர்தம் விழுப்புண் வேட்கையையும், போர்க்களத்தில் அழிதலையும் உணர்த்தும்.

குடவாயிலில் கோச்செங்கணானால் சிறைப்பட்ட கணைக்கால் இரும்பொறை, நீர் வேட்கையால், சிறைக்காவலரை நீர் வேண்டினான். காலம் தாழ்த்தித் தந்த நீரைப் பெறாது உயிர் நீத்தான். அப்போது தன்னிலைக்குத் தானிரங்கிப் பாடியது இப்பாட்டு. தன்னைச் சிறைப்படுத்தியதை நாயினைச் சங்கிலியால் பிணைத்ததுடன் ஒப்பிட்டான்; நாயினைச் சங்கிலியால் கட்டுதலை, 'தொடர் நாய் யாத்த துன் அரு கடிநகர்' என்பதாலும் (பெரும். 125) அறிக.

வாளால் பிளத்தலைப் புறநானூற்றின் 93 ஆம் பாட்டால் விரிவாக அறியலாம்; கேள் அல் கேளிர் என்றது நட்பு கொள்ளாது சூழ்ந்த சிறைக் காவலரைக் குறித்தது. சிறுபதம் – நீர்.

அருஞ்சொற்பொருள் : தடி – தசை; தொடர் – சங்கிலி; ஞமலி – நாய்; இரீஇய – இருத்திய; மதுகை – மனவலிமை.

75

'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தென,
பால் தர வந்த பழ விறல் தாயம்
எய்தினம் ஆயின், எய்தினம் சிறப்பு' எனக்
குடி புரவு இரக்கும் கூர் இல் ஆண்மைச்
சிறியோன் பெறின், அது சிறந்தன்று மன்னே;
மண்டு அமர்ப் பரிக்கும் மதனுடை நோன் தாள்

Koviloor Digital Library

விழுமியோன் பெறுகுவன் ஆயின், தாழ் நீர்
அறு கயமருங்கின் சிறு கோல் வெண் கிடை
என்றூழ் வாடு வறல் போல, நன்றும்
நொய்தால் அம்ம தானே - மை அற்று,
விசும்புற ஓங்கிய வெண் குடை,
முரசு கெழு வேந்தர் அரசு கெழு திருவே.

திணை : அது; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

சோழன் நலங்கிள்ளி பாட்டு.

துறை விளக்கம் : முனிவர் பலரும் தெளிந்து கூறும் மொழியைப் போல, 'தாயம் சிறியோன் பெறின் சிறந்தது அன்று; விழுமியோன் பெறின் மெல்லியதாம்' எனச் சோழன் தெளிந்த பொருளைக் கூறியமையால் பொருண்மொழிக் காஞ்சியாக இப்பாட்டு அமைந்தது.

உரை : (1 – 5) "நம் குடியின் மூத்தோர் பலரையும் கூற்றுவன் கொண்டு செல்ல, அவர் வழிவந்தோரில் விதியால் தரப்பட்டு நம்மால் அடையப் பெறுவதும் பழைமையான வெற்றியால் உண்டாகியதுமான அரசவுரிமையைப் பெற்றால் சிறப்புறுவோம்; இத்தலைமையை அடைவோம்" என மகிழ்வர்; அவருள் குடிமக்களிடம் இறைவேண்டி இரக்கும் சிறுமை படைத்த உள்ளமுடையவனும் மேம்பாடில்லாத ஆண்மையை உடையவனுமான ஒருவனுக்கு அவ்வுரிமை கிடைத்தால் அவனுக்கு அது தாங்க இயலாத பாரமாய் விளங்கும்.

(6 – 12) பெருகிய போரை எதிர்த்து நிற்கும் பொறுமையை உடையவனும் மனஎழுச்சியுடன் கூடிய வன்முயற்சியும் உடையவனுமான செம்மல் ஒருவனுக்கு அவ்வுரிமை சேர்தல் வேண்டும். அவனுக்குக் குற்றமில்லாத, வானோக்கிய வெண் கொற்றக் குடையினையும் முரசினையுமுடைய அரசவுரிமையாகிய செல்வம், வற்றிய குளத்தில்

Koviloor Digital Library

தாழ்ந்த நீரிலுள்ள வெண்மையான நெட்டி, கோடைக்காலத்தில் உலர்ந்துவிடுவதால் மாறிய சுள்ளியைப் போலச் சுமையின்றி மென்மையாக விளங்கும்.

உரை விளக்கம் : அரச உரிமை தந்தை வழியில் மகனாகப் பிறந்து அடைவது பழந்தமிழர். மரபு; ஆயினும் அது திறமையுடையவனை அடைதலே தக்கது என்பதை இப்பாடல் உணர்த்தும். அரச உரிமை குடிமக்களிடம் மிகுதியாக வரியிரக்கும் நிலையை அடைந்த ஒருவனுக்குப் பெருஞ்சுமையாகும்; அதுவே, வீரமும் முயற்சியும் உடையவனுக்குச் சுமையின்றி உலர்ந்த நெட்டிச் சுள்ளிபோல மென்மையுடன் விளங்கும். எனவே, தொன்மரபில் வந்த உரிமையைப் பெறுவோனின் ஆற்றலும் முதன்மையானது என உணர்த்தினார்.

குடிகளை வருத்தி வரி பெறுதலை, ‘வேலொடு நின்றான் இடுவென்றது போலும், கோலொடு நின்றான் இரவு’ (குறள். 552) என்றார் வள்ளுவரும். ‘தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி’; ‘உருகெழு தாயம் ஊழின் எய்தி’ (பட். 227) என்பவற்றானும் தமிழர் அரசப் பொறுப்பேற்கும் மரபுணரலாம். ‘மூத்தோர் மூத்தோர்’ என அடுக்கியது அரச மரபின் தொன்மையை உணர்த்தும். இனி, தானே தன் வீரத்தால் அடையாத தன்மையில் விதியால் பெற்ற உரிமை என்று குறிக்க, ‘பால் தரவந்த’ என்றார் எனினும் அமையும்.

அருஞ்சொற்பொருள் : உய்த்தல் – கொண்டு செல்லுதல்; பால் – விதி; புரவு – வரி; பரிக்கும் – தாங்கும்; என்றூழ் – கோடை; நொய்து – மெல்லியது; மை – குற்றம்.

76

ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்,
புதுவது அன்று; இவ் உலகத்து இயற்கை;

Koviloor Digital Library

இன்றின் ஊங்கோ கேளலம் - திரள் அரை
மன்ற வேம்பின் மாச் சினை ஒண் தளிர்
நெடுங் கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து,
செறியத் தொடுத்த தேம் பாய் கண்ணி,
ஒலியல் மாலையொடு, பொலியச் சூடி,
பாடு இன் தெண் கிணை கறங்க, காண்தக,
நாடு கெழு திருவின், பசும் பூண், செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடி,
'பொருதும்' என்று தன்தலை வந்த
புனை கழல் எழுவர் நல் வலம் அடங்க,
ஒரு தான் ஆகிப் பொருது, களத்து அடலே

திணை : *வாகை;* **துறை** : *அரசவாகை.*

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : *'தான் ஒருவன் பொருது எழுவர் வீரம் அடங்க வென்றான்' எனச் செழியனின் இயல்பு கூறியதால் அரசவாகையாகும்.*

உரை : *(3 - 13) மன்றத்தின் கண் விளங்கிய திரண்ட அடிப்பகுதியுடைய வேப்ப மரத்தின் பெரிய கிளையிடத்து உண்டான ஒளி பொருந்திய தளிருடன் நெடிய கொடியாகிய உழிஞைக் கொடியினையும் கலந்து செறிவாகக் கட்டப்பட்டதும், தேன் பொருந்தியதுமான மாலை; அதனுடன் வளையமாகிய மாலையையும் அழகுப் பெறச் செழியன் சூடினான்; இனிய தெளிந்த ஓசையையுடைய பறை முழங்கிற்று. கண்ணுக்கு நிறைவாய் அமைந்த நாட்டில், பொருந்திய செல்வத்தையும் பசிய பொன்னாலான பூணையும் உடைய செழியனின் பெருமையையும் தலைமையையும் அறியாத பகைவர்கள் கூடினார்கள். அவர்கள் போரிடுவோம் என்று தன்நாட்டிற்கு வந்தபோது வீரக்கழல் அணிந்த*

Koviloor Digital Library

அந்தப் பகைமன்னர்கள் எழுவருடைய நல்ல வலிமை அடங்குமாறு தான் ஒருவனே களத்தில் நின்று போரிட்டுக் கொன்றான்.

(1 – 3) ஒருவனை ஒருவன் பகைகொண்டு கொல்லுதலும் ஒருவனுக்கு ஒருவர் தோற்றுப் போதலும் இவ்வுலகில் புதியதன்று. இது உலகில் தொன்றுதொட்டு வரும் இயல்பாகும். ஆனாலும் தான் ஒருவனாய் நின்று எழுவரை வென்ற செழியனின் வீரத்தை இன்றைக்குமுன் இதுபோல கேட்டறியோம்.

உரை விளக்கம் : 'ஒருவர்க்கு ஒருவர் மாறுபட்டுப் போருக்கு எழுந்து போரிடுதல் புதியதன்று; ஆனால் ஒருவன் எழுவரை எதிர்த்து நின்று பொருதான் என்பதே புதுமை; அதனினும் அவன் எழுவரின் வீரமும் அடங்கத் தானொருவனாய் வெற்றியும் பெற்றான்; இத்தகைய புதுமையைக் கேட்டும் அறிந்திருக்கவில்லை.' என்பது கருத்து; அவனுடைய வீரத்தால் வியப்படைந்ததால் இப்பாட்டு புதுமைகாரணமாக வந்த மருட்கை என்றும் சுவையினது. இவனுடன் போரிட்ட மன்னர்களை, "கொய் சுவல் புரவிக் கொடித் தேர்ச் செழியன், ஆலங்கானத்து அகன் தலை சிவப்ப, சேரல் செம்பியன் சினம் கெழு திதியன், போர் வல் யானை பொலம் பூண் எழினி, நார் அரி நறவின் எருமையூரன், தேம் அகலத்து புலர்ந்த சாந்தின், இருங்கோவேண்மான் இயல்தேர்ப் பொருநன் என்று எழுவர் நல் வலம் அடங்க, (அகம். 36.13 – 20) என்னும் அகப்பாட்டால் அறியலாம். "காண்தகு செல்வம்" என்னும் புகழ்ச்சி, 'பலர்புகழ் செல்வம் இனிது கண்டிகும்' (பதிற். 11) என்பது போன்றது.

அருஞ்சொற்பொருள் : அடுதல் – கொல்லுதல்; தொலைதல் – தோற்றோடுதல்; ஒலியல் – தழைத்த.

Koviloor Digital Library

77

கிண்கிணி களைந்த கால் ஒண் கழல் தொட்டு,
குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண் தளிர்
நெடுங் கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து,
குறுந் தொடி கழித்த கைச் சாபம் பற்றி,
நெடுந் தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார் கொல்? வாழ்க, அவன் கண்ணி, தார் பூண்டு,
தாலி களைந்தன்றும் இலனே; பால் விட்டு
அயினியும் இன்று அயின்றனனே; வயின் வயின்
உடன்று மேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும், இழிந்தன்றும், இலனே; அவரை
அழுந்தப் பற்றி, அகல் விசும்பு ஆர்ப்பு எழ,
கவிழ்ந்து நிலம் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும், மலிந்தன்றும், அதனினும் இலனே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : இளமையிலேயே போர் ஏற்ற பண்பினன்; 'வியந்தன்றும் இழிந்தன்றும் இலன்; மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் இலன்' எனச் செழியனின் பண்பு பாராட்டியமையால் அரசவாகை ஆயிற்று.

உரை : சதங்கையைக் கழற்றிய காலில் ஒளியுடைய வீரக் கழலைச் செறித்துப் புனைந்தான்; குடுமியை நீக்கிய உச்சியில் வேம்பின் ஒளி பொருந்திய தளிரையும் நெடிய கொடியாகிய உழிஞைக் கொடியைச் சூடினான்; அணிந்திருந்த சிறிய வளையல்களை நீக்கிய கையில் வில்லைப் பிடித்தனன். இவ்வாறு நெடிய தேரில் தாமரைப் பொகுட்டு போன்ற முன்பகுதி

Koviloor Digital Library

பொலிவுபெற நின்றவன் யாரோ? யாரே ஆயினும் அவனணிந்த கண்ணி வாழ்வதாக. மார்பில் மாலை பூண்டவன்; முன் அணிந்த ஐம்படைத்தாலியை இன்னும் அகற்றவில்லை; பாலருந்தலைவிட்டு இன்றுதான் உணவும் கொண்டனன். முறை முறையாகச் சினத்துடன் எதிர்த்து வரும் புதிய வீரரைக் கண்டு மதிப்பதும் அவமதிப்பதும் செய்யான்; அவ்வீரரை அழுந்தப்பற்றிப் பரந்த வானத்தில் ஒலியெழுமாறு, பிணம் கவிழ்ந்து நிலத்தில் விழுமாறு கொன்றனன்; அச்செயலைப் பெரியதாய்க் கருதித் தானே மகிழ்ந்ததும் இல்லை; அதனைவிடத் தன்னை உயர்வாக மதிப்பதும் செய்யான்.

உரை விளக்கம் : செழியன் தன் மிக்க இளம் பருவத்திலேயே போருக்கு எழுந்து, பகைவரைக் கொன்று வென்றான்; அவனுடைய மிகுதியான இளமையைக் 'கிண்கிணி களைந்தான், குறுந்தொடி கழித்தான், தாலியை இன்னும் நீக்கான்; இன்றே முதன் முதலாக பால் தவிர்த்து உணவுண்டான்' என்ற செய்திகள் உணர்த்தும்; இத்தகைய இளையனாயினும் போர் என்று வந்த வீரரைக் கண்டு வியக்கவும் இல்லை; தாழ்வாக எண்ணவும் இல்லை; பகைவரைக் கொன்று மகிழவும் தன்னையே புகழ்ந்து கொள்ளவும் செய்யவில்லை; இப்பண்புகள் அவன் இளமையிலேயே மதி நுட்பமும் மன முதிர்ச்சியும் பெற்றிருந்தான் என்பதை உணர்த்தும். அவன் வேம்பின் தளிர் சூடியமையைப் புறநானூற்றில் முன்னும் பின்னும் பல பாடல்களுணர்த்தும். 'யார் கொல்' என்பது வியப்புக் குறிப்பு; இளையனாயினும் பெருவீரனாய்ப் போருக்கு எழுந்தான்; இத்தகையவன் யார்? என்றது.

அருஞ்சொற்பொருள் : தொட்டு – செறித்து; பவர் – கொடி; சாபம் – வில்; கொடுஞ்சி – தேரில் தாமரை மொட்டு வடிவத்தில் அமைந்த இருக்கை; அயினி – உணவு.

Koviloor Digital Library

78

வணங்கு தொடைப் பொலிந்த வலி கெழு நோன் தாள்,
அணங்கு அருங் கடுந் திறல் என்னை முணங்கு நிமிர்ந்து,
அளைச் செறி உழுவை இரைக்கு வந்தன்ன
மலைப்பு அரும் அகலம் மதியார், சிலைத்து எழுந்து,
'விழுமியம், பெரியம், யாமே; நம்மின்
பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிது' என,
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர்; புறத்தில் பெயர,
ஈண்டு அவர் அடுதலும் ஒல்லான், ஆண்டு அவர்
மாண் இழை மகளிர் நாணினர் கழிய,
தந்தை தம் ஊர் ஆங்கண்,
தெண் கிணை கறங்கச் சென்று, ஆண்டு அட்டனனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : *'இங்கு கொல்ல உடன்படாது, அவர் நாட்டில் சென்று கொன்றவன்' என அவன் வீரமும் கருத்தும் கூறியமையால் அரசவாகையாயிற்று.*

உரை : *(1 – 2 & 4 – 12) வளைந்த சந்துகளால் ஆன வீரக்கழல்; அக்கழலால் பொலிவு பெற்றதும் வலிமை பொருந்தியதும் போரில் தளராத பொறுமை உடையதுமான காலும், வருத்துதற்கு அரிய பெரிய வலிமையும் உடையவன் என் இறைவன். அவனுடைய போரிடுவதற்கு அரிய மார்பை மதியாதவராய், ஆரவாரித்து எழுந்து 'நாங்கள் சிறப்புடையோம் படையினாலும் பெரியோம் நம்மோடு போர் செய்பவன் மிக இளையவன் எனவே நாம் கொள்ள இருக்கும் கொள்ளைப் பொருளும் பெரிது' என இகழ்ந்து புதிய, நிலையில்லாத*

Koviloor Digital Library

வீரர்கள் போரிட வந்தார்கள். ஒளியிழந்த கண்களை உடைய அப்பகைவர்களை நின்ற இடத்தில் நில்லாது புறத்தே ஓடச் செய்தான். அவர்களை போர்க்களத்தில் கொல்ல உடன்படாது. மாட்சிமை பொருந்திய அணிகளை அணிந்த அவர்களின் மனைவியர் நாணத்தினால் இறந்து போகுமாறு அவர்தம் தந்தையர்களின் ஊர்களாகிய தத்தம் ஊர்களில் தெளிந்த போர்ப்பறை ஒலிக்கச் சென்று அங்கே கொன்றான்.

(2 – 3) இச்செயல் குகையிலிருந்து எழுந்த புலி சோம்பல் முறித்து உடல் நிமிர்த்தித் தான் விரும்பிய இரையைத் தேடிச் சென்றது போல விளங்கிற்று.

உரை விளக்கம் : 'செழியனுடன் போரிட வந்தோர் அவனுடைய இளமையை எள்ளினர்; அவனை வெல்வதால் பெறும் பொருள் பெரிதெனக் கருதினர்; ஆயினும் அவ்வாறு எண்ணிய மன்னர்களை அவரவர் நாட்டில் சென்று அழித்த வீரமுடையவன் செழியன்' என்பது கருத்து. முந்தைய 72–ஆம் பாடலில் 'இளையவன் இவன்' என்றும் 'நெடுநல் யானையும் தேரும் மாவும் படையமை மறவரும் உடையம் யாம்' என்றும் பகை மன்னர்தம் கூற்று குறிப்பிடப்பெறும்; அதனை ஒட்டியே 'விழுமியம் ..... பெரிது' என்ற எள்ளல் மொழியும் அமைகின்றது. இத்தகு சொற்களைச் செழியன் 'சிறு சொல்' என வெறுத்தனன்.

புலி சோம்பல் முறித்து இரை வேண்டி எழுந்தமையைப் புறம் 54 -ஆம் பாட்டாலும் அறிக. செழியனை .எதிர்த்தோர் புறங் கொடுத்து ஓடினர் என்பது, "மறப் போர்ச் செழியன் ... பெரும் படை கலங்கத் தாக்கி, இரங்கு இசை முரசம் ஒழியப் பரந்து அவர் ஓடுபுறம் கண்ட ஞான்றை ..." (அகம். 116. 14 – 18) என்பதாலும் அறிக. புலியின் வேட்டையுடன் மன்னர் ஒப்புமை காட்டப்பெறுதல் முன்னும் (புறம். 52) வந்தது. தந்தை தம் ஊர் என்றது ஊரின் தொன்றுபட்ட நிலையைக் குறிப்பிடவாம். தந்தை முதலான முன்னோர் பலருக்கும் ஊராக அமைந்த ஊரில் சென்று அட்டான்

Koviloor Digital Library

என்றது அவ்வூர்களைச் சூழ்ந்து அழித்தனன் என்று குறிப்பில் கூறியதாகும். பகைவர் மதிலைச் சூழ்ந்து அழிப்பவர் உழிஞை சூடுதல் மரபு; அவ்வாறே இவனும் பகைவர் ஊரைச் சூழ்ந்து அழித்தனன் என்க. 'நாணினர் கழிய' என்றது தம் கணவர் இறந்தது கண்டு தாம் வருந்திச் சாகாமல் அவர்கள் புறங் கொடுத்து ஓடியமையால் தாம் வெட்கி உயிர் நீத்தனர் என்பதற்காம்.

என்னை – என் + ஐ, என் தலைவன்
அகலம் – அகலத்தை உடைய மார்பிற்கு ஆகிவந்தது.

அருஞ்சொற்பொருள் : வணங்கு – வளைந்த; உழுவை – புலி; முணங்கு நிமிர்தல் – (சோம்பல் முறித்தல்) வளைவு நிமிர்த்துதல்; புல்லெனல் – பொலிவழிதல்.

79

மூதூர் வாயில் பனிக் கயம் மண்ணி,
மன்ற வேம்பின் ஒண் குழை மலைந்து,
தெண் கிணை முன்னர்க் களிற்றின் இயலி,
வெம் போர்ச் செழியனும் வந்தனன்; எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே;
எஞ்சுவர் கொல்லோ, பகல் தவச் சிறிதே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : நெடுஞ்செழியனின் வீர இயல்பை, 'பகல் தவச்சிறிதாகிய பொழுதில் பகைவரும் எஞ்சுவரோ' என்றதால் எஞ்சாதபடி அழிக்கும் இயல்பு கூறினார். எனவே அரச வாகை ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : "தனது பழமையான நகரத்தின் வாயிலில் உள்ள குளிர்ந்த பொய்கையில் நெடுஞ்செழியன் மூழ்கி நீராடினான். பின் மன்றத்தில் அமைந்த வேப்ப மரத்தின் ஒளி பொருந்திய தளிரைச் சூடிக் கொண்டான். தெளிவான ஓசையையுடைய பறை முன் ஒலிக்கச் செல்லும் ஆண் யானையைப் போலப் பெருமையுடன், வெம்மையான போர் புரியும் நெடுஞ்செழியன் நடந்து வந்தான். அவனை எதிர்ந்து போர் புரிய வந்த பகை மறவர் மிகப் பலரே; ஆயினும் பகற்பொழுது மிகச் சிறிது; எனவே அவர்களுள் எஞ்சுபவரும் உளரோ."

உரை விளக்கம் : யானை வருகையைப் பறையறைந்துரைப்பது மரபு. யானையை ஒத்த செழியனும் பறையொலிக்க வந்தமை கருதி 'கிணை முன்னர்க் களிற்றின்' என்று உவமை செய்தார். 'எஞ்சுவர் கொல்லோ, பகல் தவச் சிறிதே' என்னும் தொடரைப் பகல் சிறிதாயினும் வம்ப மள்ளர் பலரும் அழிவர்; அவருள் எஞ்சுவாரும் உண்டோ' என்பதாகவும் கொள்க. வேம்பு பாண்டியனுக்குரிய தாகையால் அதன் குழையைச் சூடினான் என்க. முதற் போர் புரிகையில் பொய்கையில் நீராடல் மரபு. எனவே, 'பனிக்கயம் மண்ணி' என்றார் என்பது பழைய உரைக்கருத்து. பாண்டியன் வேம்பு சூடுதலைப் புலவர், 'மன்ற வேம்பின் மாச்சினை ஒண் தளிர் ... செறியத் தொடுத்த' (புறம். 76 : 4 – 6) என முன்னரும் கூறினார். பகைவர் ஒரு பகலில் அழிக்கும் ஆண்மையை, 'பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார், சூடாவாகைப் பறந்தலை ஆடுபெற, ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த பீடில் மன்னர் போல' என்று அகநானூற்றிலும் (அகம். 125 : 18 – 22) 'ஒன்ற நம் படைகள் எல்லாம் ஒரு பகல் பொழுதில் கொல்வான் நின்றனன்' என வில்லி பாரதத்தும் (படை எழுச்சி. 26) கூறியமை காண்க.

அருஞ்சொற்பொருள் : கயம் – பொய்கை; குழை – தளிர்; இயலி – நடந்து.

Koviloor Digital Library

80

இன் கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்,
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி,
ஒரு கால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால்
வரு தார் தாங்கிப் பின் ஒதுங்கின்றே;
நல்கினும் நல்கான் ஆயினும், வெல் போர்ப்
பொரல் அருந் தித்தன் காண்கதில் அம்ம –
பசித்துப் பணை முயலும் யானை போல,
இரு தலை ஒசிய எற்றி,
களம் புகு மல்லற் கடந்து அடு நிலையே.

திணை : தும்பை; துறை : எருமை மறம்.

சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி முக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது.

துறை விளக்கம் : போரில் தன் படை புறங்கொடுத்து ஓடினாலும் தான் அஞ்சாது எதிர்த்து நிற்றல் எருமைமறம் ஆகும். இப்பாடலில் மல்லனை அஞ்சாது வென்றி கொண்டதால் எருமை மறம் ஆயிற்று.

உரை : இனிய, கடுமையான கள்ளினையுடையது ஆமூர்; அவ்வூரிடத்தில் வலிமையுடைய மல்லனுடைய மிகுதியான வலிமையை அழித்து நின்றனன் பெருநற்கிள்ளி. அங்ஙனம் பொருத போது ஒரு காலை மடக்கி மண்டியிட்டு மல்லனின் மார்பில் வைத்தும் மற்றொரு காலை மல்லன் முயலும் தந்திரங்கட்கு விலக்கி முதுகின் பின்னர் வைத்தும் இருந்தனன்.

பசித்து மூங்கிலைத் தின்ன முயலும் யானையைப் போல தலையும் காலுமாகிய இரண்டிடமும் முறியுமாறு மோதினான்.

Koviloor Digital Library

களத்தில் போரில் எதிர்ப்பட்ட மல்லனை வென்று கொன்ற நிலையை, வெல்லும் போருடையவனும் போரிடுதற்கு அரியவனும் கிள்ளியின் தந்தையுமாகிய தித்தன் மனம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் காண்பானாக.

உரை விளக்கம் : மல் வெற்றிக்கு இளம்பூரணரும், நச்சரும் புறத்திணையியலில் இப்பாடலை உதாரணம் காட்டினர். பெருநற்கிள்ளி உறந்தை எனும் உறையூரை ஆண்ட தித்தன் என்பானுடைய மகன்; தந்தையுடன் பகைத்து, நாடிழந்து, வறுமையடைந்து இருந்தனன். பெருநற்கிள்ளியின் வீரத்தைக் கண்ட அளவில் தன்மகன் என்னும் பெருமிதத்தால் உவப்பான்; அன்றேல் தன்னொடு பகைத்தவன் என்று அச்சத்தால் இருப்பான். எனவே தான் புலவர் 'நல்கினும் நல்கானாயினும்' என்றனர்.

யானை மூங்கிலை வளைத்துண்ணும் செயல் குறிஞ்சிப்பாட்டு (35) நற்றிணை (116) குறுந்தொகை (179) முதலிய நூல்களிலும் கூறப்பட்டமை காண்க. மூங்கிலுண்ணுதலால் மூங்கில் அழிந்து நிற்றலைப் போல மல்லன் வலி கெட்டு நின்றான் என உவமித்தார்.

அருஞ்சொற்பொருள் : மைந்து - வலிமை; முருக்கி - அழித்து; பணை - மூங்கில்; ஒசிய - முறிய; எற்றி - மோதி.

81

ஆர்ப்பு எழு கடலினும் பெரிது; அவன் களிறே
கார்ப் பெயல் உருமின் முழங்கல் ஆனாவே;
யார்கொல் அளியர் தாமே - ஆர் நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவி கை மள்ளன் கைப்பட்டோரே

Koviloor Digital Library

திணை : வாகை; துறை : அரசவாகை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'மள்ளன் கைப்பட்டோர் அளியர்' எனப் பெருநற்கிள்ளியின் வீர இயல்பு குறித்தமையால் அரசவாகை ஆயிற்று.

உரை : பெருநற்கிள்ளியின் படையின் ஆரவாரம், ஆர்ப்பரித்து எழும் கடலின் பேரோசையை விடப் பெரிது. அவனுடைய களிறு மழைக்காலத்தில் மேகம் இடித்தலைப் போன்று முழங்கியதாய் இருக்கும். நாரால் தொடுத்த செறிந்த ஆத்தி மாலையையும் கொடுப்பதால் கவிந்த கையையும் உடைய வீரனாகிய கிள்ளியின் கையில் அகப்பட்டு அழிந்தவர்களுள் இரங்குதற்கு உரியார் யாரோ?

உரை விளக்கம் : எழுகடல் என்பதை எண்ணுத்தொகையாக்கி ஏழு கடலின் கூடி ஒலிக்கும் ஓசை என்பார் முன்னாசிரியர். கைப்பட்டோர் என்பது கிள்ளியின் கை வன்மையால் பட்டழிந்தோர் எனப் பொருள் தந்தது. மள்ளன், வீரன் என்ற பொருளில் வந்து மன்னனைக் குறித்தது. ஆர் நார் என்பதை ஆத்திநார் என்னாமல் முன்னுரையாளர் ஆத்திமாலை எனக் கொண்டதை உ.வே.சா. தம் குறிப்புரையில், ''பாட்டுடைத் தலைவன் சோழனாதலின், ஆர்க்கண்ணியென இயைத்து ஆத்திமாலையென்று பொருள் கூறினார்'' என்பதும் காண்க. கவிகை என்பது மன்னனின் கை வண்மையைக் குறித்தது. இவ்வாறே 'கவிவண்கையால்' என்று கூறினர் பிறரும் (புறம். 7 : 3) யானையின் முழக்கத்தைக் 'கார்ப் பெயலுருமிற் பிளிறி' (குறிஞ்சி. 162) என்று பிறரும் இடியின் முழக்கமாகக் கூறினர். சோழன் ஆத்தி புனைதல் 'ஆர்புனை தெரியல்' (புறம். 43 : 13; 82 – 5) எனப் பிறவிடத்து வந்தமையும் காண்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பெயல் – மழை; உரும் – இடி; ஆர் – ஆத்தி; மள்ளன் – வீரன், ஈண்டு மன்னனைக் குறித்தது.

82

சாறு தலைக்கொண்டெனப், பெண் ஈற்று உற்றென,
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று,
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ் தூண்டு ஊசியின் விரைந்தன்றுமாதோ –
ஊர் கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'பெருநற்கிள்ளி செய்த போர் ஊசியின் விரைந்தன்று' என அவன் போராற்றல் கூறியமையால் அரச வாகையாயிற்று.

உரை : ஊரில் விழா தொடங்கியது; மனைவியோ பிள்ளை பெறும் நிறைமாதம் அடைந்து நோவுற்றனள்; இவற்றைக் கருதியவனாய், மழை பொழிகின்ற கதிரவன் மறைந்த வேளையில் வாரால் பிணித்துக் கட்டில் பின்னுவோன்; அவன் கையில் உள்ள வாரைச் செலுத்தும் ஊசியானது விரைவாய் இயங்கும். அதனினும் விரைவுடையதாக, ஊரைக் கைப்பற்ற வந்த வீரனாகிய மல்லனுடன் பெருந்தகையாகிய பெருநற்கிள்ளி ஆத்தி மாலை சூடியவனாய் நிகழ்த்திய போர் விளங்கியது.

உரை விளக்கம் : இப்பாடல் உவமை தொல்காப்பியம் உவமவியலில் இளம்பூரணராலும் பேராசிரியராலும் விளக்கப் பெற்றுள்ளது (சூத்திரம் 3, 20); கட்டில் பின்னுவோன் குடியில்

Koviloor Digital Library

தாழ்ந்தவனாகக் கருதப்பட்டதால் இழிசினன் எனப் பெற்றான். விழா, மனைவியின் பேறுகால நோவு, மழை, கதிரொளி மறைவு ஆகியன அவனை விரைவாகச் செயல்படத் தூண்டிற்று என்க. பொருநன், ஈண்டு ஆமூர் மல்லனைக் குறித்தது.

விரைவு எனும் மெய்ப்பாட்டிற்கும் இப்பாடல் இளம்பூரணரால் மேற்கோளாகக் காட்டப்பெற்றது.

அருஞ்சொற்பொருள் : சாறு – விழா; ஞான்ற – மறைந்த; நிணக்கும் – பிணிக்கும்; போழ் – பிளவு; தெரியல் – மாலை.

83

அடி புனை தொடுகழல், மை அணல் காளைக்கு என்
தொடி கழித்திடுதல் யான் யாய் அஞ்சுவலே;
அடு தோள் முயங்கல் அவை நாணுவலே;
என் போல் பெரு விதுப்புறுக – என்றும்
ஒரு பாற் படாஅதாகி,
இரு பாற் பட்ட இம் மையல் ஊரே!

திணை : கைக்கிளை; துறை : பழிச்சுதல்.

அவனைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியது.

திணை விளக்கம் : கைக்கிளை என்பது ஒருதலைக் காமம்.; ஒருவரிடம் தான் கொண்ட காதலை அவரால் விரும்பப்படாத நிலையிலும் கூறி மகிழ்வதாகும்.

துறை விளக்கம் : இவ்வகையில் பெருநற்கிள்ளியைப் புகழ்ந்து தம் காதலை நக்கண்ணையார் புலப்படுத்தியது; (பழிச்சுதல் – புகழ்தல்).

Koviloor Digital Library

உரை : காலில் புனைந்த செறிந்த வீரக்கழலையுடையவன்; மைபோன்ற கரிய தாடியையுடையவன். அத்தகையவனுக்காக என் வளையல்கள் கழன்று போகின்றன. இதனால் நான் தாயை எண்ணி அஞ்சுவேன். பகையை வெல்லும் அவனுடைய தோளைத் தழுவுதற்கு எண்ணினேன்; அவைக் களத்தே உள்ளாரை எண்ணி நாணுவேன். எந்நாளும் ஒரு தன்மைத்தாய் இல்லாமல் இரு தன்மைத்தாய் மயக்கத்தையுடைய இவ்வூர் என்னைப் போல் மிக்க நடுக்கமுறுவதாக.

உரை விளக்கம் : தாயின்றேல், அவனை அடைய முடியாமைக்கு வளை கழன்று போதலுக்கு அஞ்ச வேண்டாம். அவைக்களமின்றேல் அவனைக் கூடுதற்கு அஞ்சவேண்டாம். இவ்வாறு பிரிவினைப் புலப்படுத்தவும் இயலாமல் கூடும் விருப்பத்தைக் கூறவும் இயலாதவளாய் இரண்டும் கெட இருப்பதால் இருபாற்பட்ட என்றனள். தன் துன்பத்தை ஊர் தருவதாய்க் கருதியமையால் இருபாற்பட்ட இம்மையல் ஊர் என்றனள்.

இப்பாடல் புறத்திணையில் அடங்கியதனை, நச்சினார்க்கினியர், 'இது பெருங்கோழி நாய்கன் மகளொருத்தி, ஒத்த அன்பினாற் காமமுறாதவழியும் குணச்சிறப்பின்றித் தானே காமமுற்றுக் கூறியது இதனின் அடக்குக' (தொல். புறத்திணை சூ. 28) என்பதால் அறியலாம். இப்பாடலில் புறச் செய்திக் குறிப்பு இல்லை; நக்கண்ணையார் பெருநற்கிள்ளியை விரும்பிப் பாடியமையால் சுட்டிப் பெயர் கொள்ளாவிடினும் தலைவன் தலைவி இவரெனப் புறத்தார் உணர்ந்தமையால் இது புறத்திணை சார்ந்த கைக்கிளை ஆயிற்று என்க. இவ்வாறே அடுத்த இரு பாடல்களுக்கும் கொள்க.

தன் துன்பத்திற்கு ஊரைக் குறை கூறுதலை, 'கண்டும் கண்ணோடாதிவ்வூர்'; 'உணர்ந்தும் உணராதிவ்வூர்'; 'அறிந்தும் அறியாதிவ்வூர்' எனக் கலித்தொகையிலும் 'உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே' எனக் குறுந்தொகையிலும் வந்தமை காண்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : அணல் – தாடி (கன்ன மயிர்); யாய் – என்தாய்; அடுதல் – அழித்தல்; விதுப்புறுதல் – நடுக்கம்.

84

என்னை, புற்கை உண்டும் பெருந் தோளன்னே;
யாமே, புறஞ் சிறை இருந்தும் பொன் அன்னம்மே;
போர் எதிர்ந்து என்னை போர்க் களம் புகினே,
கல்லென் பேர் ஊர் விழவுடை ஆங்கண்,
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு
உமணர் வெரூஉம் துறையன்னன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : கைக்கிளைக் காதலாய்ப் பெருநற்கிள்ளியை விரும்பும் நக்கண்ணையார், அவனைப் புகழ்ந்து தன் காதலைப் புலப்படுத்தியது.

உரை : என் தலைவன் நாடிழந்து, வறுமையால் கூழ் உண்டான்; ஆயினும் பகைவரும் அஞ்சும் பெருந்தோளையுடையவன்; யாம் அவனுடைய சிறைப்புறத்து இருந்து அவனைக் கண்டிருந்தபோதும் அவனை மெய்யுறத் தழுவாமையால் பொன் போலும் நிறத்தை அடைந்தனம். போரை ஏற்று என் தலைவன் போர்க்களம் புகுவான்; கல்லெனும் ஆரவாரத்துடன் விளங்கும் பெரிய ஊரில், போரின் பொருட்டு எடுத்த விழாவினையுடைய இடத்தில், தத்தம் வலிமையைப் பேசி இன்புற்று வீரர்கள் செல்வர். அத்தகைய வீரர்கட்கு, களம் புகும் பெருநற்கிள்ளி, உப்பு விற்கும் உமணருக்கு மேடு பள்ளம் நிறைந்த துறை அச்சம் தருவதுபோல் விளங்குவான்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தன் தலைவன் புற்கையுண்டும் பகையை வெல்வான். ஆனால், தலைவன் அருகிருந்தும் பகையாகிய பசலையை வெல்லாது நின்றனள். எனவே மேனி பசலையுற்றுப் பொன்னிறமாயிற்று என்க. தலைவனுக்குத் தோள் நலன் கூறியதால் தமக்கும் தோள் நலமே கூறித் தோள் பொன்னிறமடைந்தது என்றார் என்பதும் பொருந்தும். தலைவனியல்பை உவமையில் உட்பொருளாக அமைத்த தன்மையைப் பழைய உரை, ''ஆடவரையும் மகளிரையும் ஒக்க வருத்துவது அல்லது அருளுமாறு கற்றிலனோ என்னும் நினைவிற்றாக்குக'' என்கிறது. தாமேயன்றித் தம்மைப் போலப் பலரும் விரும்பும் தன்மையனாகப் பெருநற்கிள்ளி விளங்குவதனைக் கூற, 'யாமே' எனப் பன்மையால் கூறினார். இப்பாடல் தொல்காப்பியச் செய்யுளியலில் (160) கைக்கிளைக் கூற்றிற்கு மேற்கோளாக அமைந்தது.

தலைவனைக் கூடாது மேனி பசலை நிறம் அடைதலை, 'பன்னாளும் படரடப் பசலையால் உணப்பட்டாள் பொன்னுரை மணியன்ன மாமைக்கண்' (கலித். 48) என்பதாலும் உணரலாம்.

அருஞ்சொற்பொருள் : புற்கை – சோற்றுப்பருக்கைகளிட்ட நீர்த்த உணவு, கூழ்; புறஞ்சிறை – சிறைப்புறம், அருகே; ஏம் – வலிமை; உமணர் – உப்பு வணிகர்; வெரூஉம் – அஞ்சும்.

85

என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்,
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்
'ஆடு ஆடு' என்ப, ஒரு சாரோரே;
'ஆடு அன்று' என்ப, ஒரு சாரோரே;
நல்ல, பல்லோர் இரு நன் மொழியே;
அம் சிலம்பு ஒலிப்ப ஓடி எம் இல்,
முழா அரைப் போந்தை பொருந்தி நின்று,
யான் கண்டனன், அவன் ஆடு ஆகுதலே.

Koviloor Digital Library

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : பெருநற்கிள்ளியை விரும்பிய நக்கண்ணையார் கைக்கிளையாய்ப் புகழ்ந்து பாடியது.

உரை : என் தலைவனாகிய பெருநற் கிள்ளிக்கு ஊர் இஃதன்று; நாடும் இஃதன்று. எனவே அவனுக்கு இயல்பான வெற்றியை 'வெற்றி' என்று ஏற்றுக் கூறுவர் ஒரு திறத்தார். 'வெற்றியன்று' என்று மறுத்துக் கூறுவர் ஒரு திறத்தார். இவ்வாறு இருவகையாகவும் பலர் கூறிய நன்மொழி நல்லவாய் இருந்தன.

அழகிய சிலம்பொலிக்க ஓடிச்சென்று எம்முடைய இல்லத்தில் முழவினைப் போலும் அடியை உடைய பனை மரத்தைப் பொருந்தி நின்று அவனுடைய வெற்றியை யான் கண்டேன்.

உரை விளக்கம் : பெருநற்கிள்ளி வெற்றியடைந்தான்; அடையவில்லை என இருவகையாகக் கூறுகின்றனர். ஆனால் அவனைக் கண்டளவில் தம்முடைய நாண் மறந்து அவனைக் கூடக் கருதியமையாலும் (84.2) அணிகலன் நெகிழ்த்தமையாலும் (83.2) அவன் தம்மை ஆண்மையால் வென்றனன் என்றாள். அவன் தம்மை வருத்தி நின்று தம்முடைய நிறையழித்து வெல்கின்றான் என்பது உணராமல் ஊரவர் வெற்றி, வெற்றியன்று என ஆரவாரம் செய்தனர். எனவே 'நல்ல' என்று இகழ்ச்சிபடக் கூறினாள். 'தன் பெண்மை நலனழிய வெல்பவன்; இது அவனுக்குப் பெருமைதருமோ' எனும் கருத்தில் 'ஆடன்று' என்பதை நன்மொழியாய்க் கருதினள் என்பதும் அமையும். அயலவர் பால் இரக்கமும் இரக்கமின்மையும் என இருத்தல் ஊரவர் இயல்பு. எனவே இருநிலையில் கூறினர் என்க. இப்பாடலில் அவனுடைய வெற்றியைக் கூறித் தன் காதலைப் புலப்படுத்தினளாம். பனை முழவு போன்ற

Koviloor Digital Library

அடிப்பகுதியுடையது என்பது 'முழவு முதல் அரைய தடவு நிலைப் பெண்ணை' (குறுந். 301. 1) என்பதாலும் அறியலாம். 'என்னை' எனத் தலைவன் குறிக்கப்படுதலை, 'என்ஐ என்றலும் உளவே' எனவரும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா உணர்த்தும் (தொல். பொருள். 246).

அருஞ்சொற்பொருள் : ஆடு – வெற்றி; அரை – அடிமரம்; போந்தை – பனை.

86

சிற்றில் நல் தூண் பற்றி, 'நின் மகன்
யாண்டு உளனோ?' என வினவுதி; என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல,
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன்மாதோ, போர்க்களத்தானே.

திணை : வாகை; **துறை :** ஏறாண் முல்லை.

காவற் பெண்டின் பாட்டு.

துறை விளக்கம் : வீரம் செறிந்த குடியில் பிறந்த ஆண்மகனின் இயல்பைப் புகழ்தல் ஏறாண் முல்லையாகும். இப்பாடலில் 'போர்க்களத்துத் தோன்றுவன்' என்பதால் போரஞ்சா வீர இயல்பு கூறப்பெற்றமையால் ஏறாண் முல்லை எனப்பெற்றது.

உரை : "சிறிய வீட்டில் உள்ள நல்ல தூணைப் பற்றிய வண்ணம் 'உன் மகன் எங்கு உள்ளானோ?' என வினவுகிறாய். என் மகன் எங்கிருந்தாலும் நானறியேன்; புலி இருந்து பின் பெயர்ந்து சென்ற கற்குகை போல அவனைப் பெற்ற வயிறு இதுவேயாகும்.

Koviloor Digital Library

அவன் போர் நிகழும் களத்தில் தோன்றுமியல்புடையன் (அவனைக் காண்பதற்கு அங்குச் செல்)"

உரை விளக்கம் : போரெனின் வீரம் விளைக்கும் ஆற்றலை உடையவன் தன் மகன் எனப் பெருமிதத்தாற் கூறினள். இப்பாடற்கருத்து புறப்பொருள் வெண்பாமாலையில்,

வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடன் முதியாள் வயிற்றிடம் - கூடார்,
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த விடம்

என்ற சான்றுப்பாடலாய் நின்றது. காவற்பெண்டு, செவிலித்தாயைக் குறித்தது. 'காவற்பெண்டும்' (சிலம்பு. 29. உரைப்பாட்டு) 'குறுநடைப் புதல்வர்க்குக் காவற்பெண்டிர் கடிப்பகையெறிந்து' எனப் (மணி. 7.57 - 58) பிறரும் குறித்தனர். நற்றாய்க்கும் தனக்கும் வேறுபாடின்மையின் ஈன்றவயிறாகத் தன்வயிறு சுட்டினள். ஒரும், மாதோ ஆகியன அசைச்சொற்கள்.

அருஞ்சொற்பொருள் : அளை - முழை, குகை; யாண்டு - எவ்விடம்.

87

களம் புகல் ஓம்புமின், தெவ்விர்! போர் எதிர்ந்து,
எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே.

திணை : தும்பை; **துறை :** தானை மறம்.

அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : படைகளின் ஒத்த சிறப்புக் கூறி, அவை போரிடாது விலக்குதல் தானை மறம். (தானை - படை; மறம் - வீரம்); இப்பாடலில் 'களம்புகல் ஓம்புமின் எம்முளும் பொருநன் உளன்' என்று படை வீரர் மறம் கூறியதால் தானைமறம் ஆயிற்று.

உரை : பகைவீர்! போர்க்களம் புகுதலைத் தவிருங்கள். போரை எதிர்நோக்கியவனாய் எம்மிடத்தும் ஒரு வீரன் உள்ளான். அம்மறவன், ஒருநாளில் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன், ஒருமாதம் கூடிச் செய்த தேர்க்காலிற்கு ஒப்பானவன்.

உரை விளக்கம் : தேர்க்கால் என்பது தேரின் சக்கரம். 'தேர்க்கால் வைத்த ...' (புறம். 32.8); 'கால்வல் தேர் (கலித். 81.8) எனப் பிறவிடத்தும் வந்தன. ஒரு நாளில் எட்டுத்தேர் செய்யும் திறமை படைத்த தச்சனால் ஒருமாத அளவில் ஒரு தேர்ச்சக்கரம் மட்டுமே செய்வதற்கு இயன்றது என்பதால் தேர்க்காலின் மிகுதியான வன்மையை உணர்த்தினார். 'அத்தகைய ஆற்றல் பொருந்திய மறவன் எம்மிடம் உளன்; எனவே நீவிர் வீணே பொருது அழிய வேண்டா' எனக் கூறுவதற்கு 'களம்புகல் ஓம்புமின்' என்றார். வாகைத் திணையின் 'அரும்பகை தாங்கும் ஆற்றல்' என்ற துறைக்கு இப்பாடலைச் சான்று காட்டினர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

அருஞ்சொற்பொருள் : தெவ்விர் - பகைவீர்; வைகல் - நாள்; கால் - சக்கரம்.

88

யாவிர் ஆயினும், 'கூழை தார் கொண்டு
யாம் பொருதும்' என்றல் ஓம்புமின் - ஓங்கு திறல்
ஒளிறு இலங்கு நெடு வேல் மழவர் பெருமகன்,
கதிர்விடு நுண் பூண் அம் பகட்டு மார்பின்

Koviloor Digital Library

விழவு மேம்பட்ட நல் போர்
முழவுத் தோள் என்னையைக் காணா ஊங்கே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'என்னையைக் காணா ஊங்கு பொருதும் என்றல் ஓம்புமின்' என மன்னனின் வீரம் கூறிப் போரை விலக்கியமையால் தானை மறம் ஆயிற்று; மன்னன் வீரமும் படையினர் வீரமாகக் கூறப்பட்டது.

உரை : நீவிர் எத்தகைய வன்மையராயும் இருக்கலாம். உயர்ந்த வலிமையையும் ஒளியுடன் விளங்கிய நெடிய வேலையும் உடைய இளையோர்க்குத் தலைவன்; சுடர்விடும் நுண்ணிய வேலைப்பாடமைந்த பூணணிந்த அழகிய வலிய மார்பினையும் களவேள்வி முதலாகிய விழாவினால் சிறந்த நல்ல போரைச் செய்யும் முழவு போன்ற தோளினையும் உடைய என் இறைவன்; அத்தகையோனைக் காணும் முன், ''அணிப்படையையும் தூசிப் படையையும் கொண்டு அவனுடன் யாம் போரிடுவோம்'' எனக் கூறுதலைத் தவிருங்கள்.

உரை விளக்கம் : ''என் இறைவனைக் காணும் முன்பே 'போரிடுவோம்' என்பதைத் தவிருங்கள்'' என்பது பொருள் முடிபு. கண்ட அளவில் அவ்வாறு கூறுதலும் இயலாது அஞ்சி அகல்வர் என்பது அவாய் நிலையான் பெறப்பட்டது. பழைய உரைகாரர் 'கண்டால் அது செய்தல் அரிதாகலான்' என்பதும் அது. மேலும், 'கண்டால் அவ்வாறு கூறியபடி போர் புரிவது அரிதாகலான்' என்றும் கொள்க. யாவிர் ஆயினும் என்பது எத்தகையராயினும் எனநின்று வன்மையை உணர்த்தி நின்றது. மழவர் ஒருவகைப் படைவீரர் 'கழற்கால் மறவர்', 'பெருந்தோள் மழவர்' (மதுரைக். 395, 687) எனப் பிறவிடத்தும் வந்தன. அதியமான் மழவர் படையை உடையன்

Koviloor Digital Library

என்பதை ஒள்வையார், "வழுவில் வன்கை மழவர் பெரும" என்று பின்னும் குறித்தனர். அணி, தூசி ஆகியன காலாட் படையின் வகைகள். பகைவர்க்குத் தம் தலைவன் வீரமுணர்த்துதலை, 'என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை முன்னின்று கல்நின்றவர்' (குறள். 771) என்பதாலும் அறிக.

அருஞ்சொற்பொருள் : கூழை - படையின் பின் அணி; தார் - கொடிப்படை (தூசிப்படை); ஒளிறு - ஒளி; பகடு - வன்மை; இலங்குதல் - விளங்குதல்.

89

'இழை அணிப் பொலிந்த ஏந்து கோட்டு அல்குல்,
மடவரல், உண்கண், வாள் நுதல், விறலி!
பொருநரும் உளரோ, நும் அகன் தலை நாட்டு?' என,
வினவல் ஆனாப் பொருபடை வேந்தே!
எறி கோல் அஞ்சா அரவின் அன்ன
சிறு வல் மள்ளரும் உளரே; அதா அன்று,
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளி பொரு தெண் கண் கேட்பின்,
'அது போர்' என்னும் என்னையும் உளனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : முன் பாடல் போன்று இப்பாடலிலும் 'மள்ளரும் ஊர், என்னையும் உளன்' என்று படைமாட்சி கூறியமையால் தானை மறம் ஆயிற்று.

உரை : "அணியால் பொலிவு பெற்ற ஏந்திய பக்கத்தினையுடைய அல்குலினையும், மடப்பத்தினையும் மைதீட்டிய கண்ணினையும்

Koviloor Digital Library

ஒளியுடைய நெற்றியையும் உடைய விறலியே! நும்முடைய பெரிய இடம் அமைந்த நாட்டில் எம்மோடு போரிடுவாரும் உண்டோ'' என என்னை வினவுகின்றனை, அடங்காத போரினைச் செய்யும் படையையுடைய வேந்தனே! நீ போர் செய்யக் கருதினால் அடிக்கும் கோலினுக்கு அஞ்சாது சீறும் பாம்பினைப் போன்ற இளைய, வலிய வீரரும் எம் நாட்டில் உள்ளனர். அவரேயன்றிப் பொதுமன்றத்தில் தொங்குகின்ற இழுத்துக் கட்டப்பட்ட முழவினிடத்துக் காற்று மோதிக் கண்ணிடத்து தெளிந்த ஓசையை எழுப்புதலைக் கேட்ட அளவில் 'அது போர்ப் பறை முழக்கம்' என்று மகிழும் என் தலைவனும் உள்ளான்.

உரை விளக்கம் : பகை மன்னன் வினவுவானாக, அதற்கு விடையிறுக்கும் விறலி கூற்றாக ஔவையார் இப்பாடலை அமைத்துள்ளார். இப்பாடலமைதி ஔவையாரை விறலியருள் ஒருவர் என எண்ணவும் இடம் தருகிறது. உ.வே.சா. இதனை நினைந்து, ''ஆராய்வோர் அதனைக் கொண்டு, விறலி முதலியவர்களாக நினைந்து விரைந்து முடிவு செய்து விடுதல் மரபன்று; அங்ஙனம் பாடுதல் கவிமதமெனக் கொள்ளுதல் முறை'' எனத் தெளிவுறுத்துகின்றார் (புறநானூறு. முன். 32).

'முரசில் காற்று மோதும் ஓசையைக் கேட்ட அளவில் அது போர்ப் பறையின் முழக்கம் எனக் கருதுவன் அதியமான்' என்றது அவனுடைய போர் எதிரும் நாட்டத்தை உணர்த்தியது. குறிப்பால் பகை மன்னர்க்கு அவன் வீரம் குறித்தனர் என்க.. இழை அணி, ஈண்டு மணிக்கோவையாகிய மணிமேகலையைக் குறித்தது. தெண் கண், ஆகுபெயர்; 'ஏந்துகோட்டு அல்குல் முகிழ்நகை மடவரல் கூந்தல் விறலியர்' எனப் பிறரும் (பதிற். 19. 5 – 6) விறலியரைக் குறித்தனர். பகைக்கு அஞ்சாத படைவீரரை, 'கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே படை' (குறள். 765) எனக் குறள் கூறுதலும் நினையத்தக்கது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : தலை - இடம்; வாள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றி; ஆனா - அமையாத; தூங்கும் - தொங்கும்; தெண் கண் - தெளிந்த கண்ணிடம் எழுந்த ஓசை.

90

உடை வளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடை மல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப் புலி உடலின், மான் கணம் உளவோ?
மருளின விசும்பின் மாதிரத்து ஈண்டிய
இருளும் உண்டோ, ஞாயிறு சினவின்?
அச்சொடு தாக்கிப் பார் உற்று இங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய,
வரி மணல் ஞெமர, கல் பக, நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ?
எழுமரம் கடுக்கும் தாள் தோய் தடக் கை
வழு இல் வன் கை, மழவர் பெரும!
இரு நிலம் மண் கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ, நீ களம் புகினே?

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'நீ களம் புகின் பொருநரும் உளரோ' என்று மன்னனின் வீரச் சிறப்புக் கூறிப் போரை விலக்கும் குறிப்புப்பட அமைந்தமையால் தானை மறம் ஆயிற்று.

உரை : உடைந்த கை வளையலைப் போன்று மலர்ந்த வெண் காந்தள் தழை நிறைந்த மலை மல்லிகையுடன் மணக்கும் மலைச்சாரல்; அங்கு வீரத்தையுடைய புலி சீறினால் எதிர்த்து

Koviloor Digital Library

நிற்கும் மான் கூட்டமும் உளவோ? மயக்கமுற்ற வானத்திலும் திசைகளிலும் செறிந்த இருள், கதிரவன் சினந்து எழும்போது இருக்குமோ? சுமை மிகுதியால், வண்டியின் அடிப்பகுதியில் அமைந்த நெடிய மரச்சட்டம் அச்சு மரத்துடன் மோதி இருக்கும்; இதனால் நிலத்தின் கண் தங்கிய பண்டத்தினையுடையதாக வண்டி விளங்கும்; வண்டி ஆழமாய்ப் புதைதலைப் போக்கி நீரால் கொழிக்கப் பட்டமணல் பரக்கவும் கல்பிளவுபடவும் நடக்கவல்ல மிகுதியான மனச் செருக்குடைய காளைக்குப் போதற்கரிய துறையும் உண்டோ? இல்லை யன்றே;

கணைய மரத்தை ஒத்த முழங்காலில் பொருந்தும் பெரிய கைகளையும் குற்றமற்ற வலிமையையுடைய கைகளையும் உடைய மழவர் பெருமகனே! மேற் குறித்தவை போன்றே பெரிய நிலத்தின் கண் நின் மண்ணைக் கைக்கொண்டு ஆரவாரம் செய்யும் வீரர் நீ களம் புகுந்து போரிடும் காலத்திலும் உளரோ? இல்லை யன்றே.

உரை விளக்கம் : மான் கூட்டம், இருள், அச்சம் தரும் துறை ஆகியன பகைவராகிய பொருநருக்கு உவமைகள்; புலி, கதிரவன், செருக்குடைய ஆனேறு ஆகியன அதியமானுக்கு உவமைகள். மான் கூட்டத்தைப் புறங்காணும் புலியைப் போன்றும் இருளை அகற்றும் கதிரவன் போன்றும் அச்சம் தரும் துறையைக் கடக்கும் எருது போன்றும் வன்கண் படைத்தவன் அதியமான். இப்பாடலால் அவனுடைய வீரம் விளைக்கும் ஆற்றல் உணர்த்தப்படுகிறது. இப்பாடலைப் போருக்கென அவனை ஊக்கம் கொளச் செய்யப் பாடியது என்பாரும் உளர். கணைய மரத்தின் வலிமையை, 'எழூஉ நிவந்தன்ன ... முழவுத் தோள்' (பதிற். 31.20) எனப் பிறரும் உடல் வன்மைக்கு உவமையாக்கினர்; இல்லை என்பது அவாய் நிலையான் பெற்றது. புலியிடம் மான் அகப்பட்டு அழிதலை 'புலி நிழற்பட்ட மான் போல' எனப் பிறரும் உவமை கூறினர் (சீவக. 2946).

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : கடுப்ப – போல; அடை – இலை, தழை; குளவி – மலை மல்லிகை; மாதிரம் – திசை; பார் – வண்டியின் கீழமைந்த மரச்சட்டம்; ஞெமர – பரந்து செல்ல; இங்கல் – தங்குதல்; எழு மரம் – மதிற்கதவுக்குக் குறுக்கே இடப்படும் கணைய மரம்.

91

வலம் படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம் படக் கடந்த கழல் தொடித் தடக் கை,
ஆர் கலி நறவின், அதியர் கோமான்!
போர் அடு திருவின் பொலந் தார் அஞ்சி!
பால் புரை பிறை நுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும! நீயே, தொல் நிலைப்
பெரு மலை விடரகத்து அரு மிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல் நின் அகத்து அடக்கி,
சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே!

திணை : பாடாண்திணை; **துறை :** வாழ்த்தியல்.

அவ்வை அவர் நெல்லிப்பழம் பெற்றுப் பாடியது.

துறை விளக்கம் : 'நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக' என வாழ்த்தியமையால் வாழ்த்தியல் எனும் துறையில் அமைந்தது.

உரை : (1 – 3) வெற்றியைப் பொருந்திய தப்பாத வாளை ஏந்திப் பகைவர் போர்களத்தில் அழியுமாறு வென்றவனும் கழலுமாறு அமைந்த வீரவளை பொருந்திய பெரிய கைகளையுடையவனும் மிக்க ஆரவாரம் செய்யும் மதுவினையுடையவனுமான அதியர் கோமானே!

Koviloor Digital Library

(7 – 11) நீ தொன்மையான பெரிய மலையின் பிளவிடத்தில் அரிதான உச்சியில் சிறிய இலையையுடைய நெல்லியின் இனிய கனியைக் கொண்டாய்; அதனைப் பெறுவதற்கு அரியது என்று கருதாமல் அக்கனியின் அரும்பயனாக அமைந்த தன்மையை எனக்குக் கூறாமல் நின் மனத்து அடக்கினாய்; அவ்வரிய கனியை இறப்பு என்னை விட்டு அகலுமாறு எனக்கு அளித்தாய்.

(4 – 7) பகைவரைப் போரில் வெல்லும் வீரமாகிய செல்வமும் பொன்னாற் செய்த மாலையும் உடைய அஞ்சியே! பெரும! நீ பால் போன்று பிறையணிந்த நெற்றியுடன் பொலிவுற்ற திருமுடியையும் நீல மணி போலும் கரிய கழுத்தினையும் உடைய ஒருவனாகிய சிவபெருமான் போல நிலை பெறுவாயாக.

உரை விளக்கம் : கிடைத்தற்கரிய, வாழ்நாள் நீட்டிக்கும் அரிய நெல்லிக்கனியைத் தானுண்ணாமல் ஔவைக்குத் தந்தபோது அவர் உவந்து பாடியது. 'வலம்படு ... அஞ்சி' என்பது அதியமானின் வன்மையைக் குறித்தது. அத்தகு வன்மையன் பகைவர்க்கே; தமக்கு அருளுள்ளமுடையவனாய் அரு நெல்லி ஈந்தனன் என வியந்தார். அதியமானின் இவ்வியல்பைப் பாடல் 94இல் விளங்க உரைத்தனர். சிவபெருமானின் தோற்றமாக 'நீல மணி மிடற்று ஒருவன்' என்றார். கடிய விடமுண்டு, பிறருக்கு அருள் செய்கின்ற நிலையினை அதியமானுக்கு உவமை கூறினார். பெறலரிய கனியை அரிதின் முயன்று பெற்றுத் தானுண்ணாது ஔவைக்கு ஈந்தனன். இத்தன்மையை, உ.வே.சாமிநாதையர் தம் குறிப்புரையில் 'தன்னுடைய ஆக்கம் கருதாமல் விடத்தை உண்டு பல்லுயிர்களையும் காத்தருளிய பண்பினால் நீலமணி மிடற்று ஒருவனை உவமை கூறினார்' என்பது எண்ணத்தக்கது. அதியமானும் தன்னுடைய நலம் கருதாப் பண்பினன் என்பது உவமையால் பெறும் பயன். ஆதல் – கனியால் ஆகின்ற பயன்.

Koviloor Digital Library

இறைவன் திருத்தோற்றம் இந்நூலின் முதற்பாடலிலும் குறித்தமை காண்க; 'மிக்கொளிர் தாழ் சடை மேவரும் பிறைநுதல்' எனப் பிறரும் குறித்தனர். அதியமானின் அருங்கொடையை, 'நெல்லி, அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கு ஈந்த அதிகன்' (சிறுபாண். 99 – 103) 'இனிய கனிகள் என்றது ஔவையுண்ட நெல்லிக்கனி போல் (குறள். 100 பரிமேலழகர் உரை) முதலான நூல்களும் குறித்தன.

அருஞ்சொற்பொருள் : வலம் – வெற்றி; நறவு – மது, கள்; அதியர் – ஒரு குடியின் பெயர்; பொலம் – பொன்; மிடறு – கழுத்து.

92

யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;
பொருள் அறிவாரா; ஆயினும் தந்தையர்க்கு
அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை :
என் வாய்ச் சொல்லும் அன்ன – ஒன்னார்
கடி மதில் அரண் பல கடந்த
நெடுமான் அஞ்சி! நீ அருளன்மாறே.

திணை : அது; **துறை :** இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : அதியமான் ஔவையின் பாடலை ஏற்றுப் போற்றினான்; அவனுடைய அருளாகிய இயல்பினைக் கூறியமையால் இயன்மொழி ஆயிற்று.

உரை : யாழோசை தருவது போல இசையின்பம் தரா; காலத்துடன் பொருந்தி வாரா; பொருளும் அறிய இயலா; ஆயினும் தந்தையர்க்குத் தம் புதல்வர் மழலையிடம் அருளிருக்கும்.

Koviloor Digital Library

ஆகவே இன்புடன் ஏற்பர். என்னுடைய வாயிலிருந்து வெளிப்படும் சொற்களும் அத்தன்மையினவே; பகைவர்தம் காவலையுடைய மதிலமைந்த அரண் பலவற்றை வென்ற நெடுமான் அஞ்சியே! நீ என் சொற்களையும் அவ்வாறு அருள் செய்கின்றாய்.

உரை விளக்கம் : தம் புதல்வர் மழலையை அருளுடன் கேட்டும் தந்தையரைப் போலத் தன் சொற்களுக்கு அருளுடன் அதியமான் செவி மடுக்கின்றான் என்றுணர்த்தினார். கடிமதில் அரண் கடக்கும் வன்மையாளன் தம்மிடம் எளிமையுடன் அருள் செய்கின்றான் என்பது குறிப்பு. மழலை மொழியின் இயல்பை, ''குழலினிது, யாழினிது என்பதம் மக்கள், மழலைச் சொல் கேளாதவர்'' (குறள். 66); ''அவர் மழலை கேட்டல் அமிழ்தினும் இனிது'' (இனியவை நாற்பது, 15); ''எழுத்தின் உறழாது வழுத்து பொருளின்றிக், குறிப்பொடு படாஅது வெறித்த புன் சொல்லே ஆயினும் பயந்ததம் சேயவர் சொலும் மொழி குழலினும் யாழினும் அழகிதாம்'' (திருக் கழுமல மும்மணிக் கோவை. 28. 2- 5) எனப் பிற நூல்களும் குறித்தன. மழலை : 'மெய்பெறா எழுத்து உயிர்க்கும் மழலை (சீவக. 181) என்பதால் எழுத்து வடிவமில்லாது தோன்றும் குழந்தையின் மொழி என்க.

அருஞ்சொற்பொருள் : ஒன்னார் - பகைவர்; கடி - காவல்; கடத்தல் - வெல்லுதல்.

93

திண் பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்று, அமர் கடத்தல் யாவது? - வந்தோர்
தார் தாங்குதலும் ஆற்றார், வெடிபட்டு,
ஓடல் மரீஇய பீடு இல் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ,
காதல் மறந்து, அவர் தீது மருங்கு அறுமார்,

Koviloor Digital Library

அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம் புரி பசும் புல் பரப்பினர் கிடப்பி,
'மறம் கந்தாக நல் அமர் வீழ்ந்த
நீள் கழல் மறவர் செல்வுழிச் செல்க!' என
வாள் போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ -
வரி ஞிமிறு ஆர்க்கும் வாய் புகு கடாஅத்து
அண்ணல் யானை அடு களத்து ஒழிய,
அருஞ் சமம் ததைய நூறி, நீ,
பெருந் தகை! விழுப் புண் பட்ட மாறே.

திணை : வாகை; துறை : அரசவாகை.

அவன் பொருது புண்பட்டு நின்றோனை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'பெருந்தகையே; நீ விழுப்புண் பெற்ற வீரமுடையன்' எனப் பாராட்டி அவனியல்பு கூறியமையால் அரசவாகை ஆயிற்று.

உரை : (2 – 15) நின்னை எதிர்த்து வந்தோர், நின் தூசிப் படையைத் தாங்கிப் போரிடவும் இயலாது சிதறி ஓடினர். அவ்வாறு ஓடுதலைப் பொருந்திய பெருமையில்லாத மன்னர்கள் நோயால் இறந்தனர். அவருடைய உடம்பைத் தழுவிய வண்ணம் அவரிடம் கொண்ட பற்றினை மறந்து, போரில் வாளால் காயம் படாத குற்றம் நீங்குதற்குக் கருதிய, அறத்தை விரும்பிய கோட்பாட்டுடன் நான்கு வேதத்தையும் உடைய அந்தணர் நல்ல கூறுபட்ட தருப்பைப் புல்லினைப் பரப்பிக் கிடத்துவர். 'தமது வீரமே பற்றுக் கோடாகக் கொண்டு நல்ல போரிலே வீழ்ந்த நெடிய கழலணிந்த வீரர் செல்லும் உலகிற்குச் செல்லுக' என்று கூறி அவ்வந்தணர் வாளால் மார்பைப் பிளந்து அடக்கம் செய்யவும் மன்னர் உய்வை அடைந்தனர். வரியையுடைய தேனீ ஆரவாரிக்கும்படி, வாயில் புகும் வண்ணம் பெருகிய மதத்தினையுடைய தலைமை பொருந்திய யானை;

Koviloor Digital Library

அது போர்க்களத்தே வீழுமாறு பொறுத்தற்கரிய போரிலே சிதற வெட்டினாய்; பெரிய தகைமை பொருந்திய நீயும் அதனால் விழுப்புண் பெற்றனை.

(1 - 2) ஆகவே திண்மையாகப் பிணிக்கப்பட்ட முரசு இழுமென ஒலிக்கப் போர் மேற்சென்று வெற்றி பெறுதல் என்பது இனி ஏது?

உரை விளக்கம் : அதியமான் பேராற்றலால் வீரத்துடன் களத்தில் பொருது, புறங்கொடாது விழுப்புண் தாங்கினன்; பகைவர் அவனுடைய ஆற்றலுக்கு ஆற்றாது தோற்றோடினர். எனவே அவர்கள் விழுப்புண் பெறார் ஆயினர். இது அதியமானின் பெருமையையும் ஏனையோர் சிறுமையையும் ஒருங்குணர்த்தும். விழுப்புண் பெறாமையாலும் போர்க்களத்து வீரத்துடன் உயிரைக் கொடாமையாலும் சிறுமையடைந்த பகை மன்னர் நோயால் உயிரிழந்தனர்; இது அவருடைய சிறுமையை மிகுதியாக்கியது. அம்மன்னரை வீரத்துடன் போரில் உயிரிழந்த வீரர் புகும் வீரசுவர்க்கம் புகச் செய்ய மார்பில் வாளால் படுச் செய்தனர்; ஆகவே உய்ந்தனர். தானாய் வீரசுவர்க்கம் புகாது இறந்தபின்னும் சிறுமையடைந்தனர். 'இத்தகையோர் அழிந்தபிறகு அதியமான் போரிட்டு வெல்ல யாவர் உள்ளார்? எவருமிலையே' என்றவாறு. மேலும் இறந்தபின் வாளால் வடுப்பட்டதனால் மட்டுமே உனக்கு நிகராகும் தகைமை பெற்றனர் என்றார்; ஈண்டு உய்ந்தனர் என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

காயம் படாது இறந்தோரை வாளால் போழ்ந்து அடக்கும் தமிழர் மரபை, 'குழவியிறப்பினும் ஊன் தடி பிறப்பினும் ஆளன்று என்று வாளில் தப்பார்' (புறம். 74. 1 - 2) சேரமான் கணைக்கால் இரும்பொறையின் பாடலும் உணர்த்தும். தீது என்பது 'நோயால் இறந்தமையால் சுவர்க்கமின்று' எனும் பழியைக் குறித்தது.

விழுப்புண் பெற்றோர் பாராட்டப்பெறுதலை, 'எவ்வி மார்பின் எஃகுறு விழுப்புண் பல' என்பதாலும் (புறம். 233. 6 - 7) அறிக.

Koviloor Digital Library

இப்பாடல் 'அடுத்தூர்ந்து அட்டகொற்றம்' எனும் வஞ்சித் துறைக்கு மேற்கோளாய் அமைந்தது (தொல். புறத்திணை. 7).

அருஞ்சொற்பொருள் : தார் – தூசிப்படை, முன்பக்கத்துப் படை; வெடிபட்டு – சிதறி; பீடு – பெருமை; விளிந்த – இறந்த; கந்து – பற்றுக்கோடு; போழ்ந்து – பிளந்து; ததைய – சிதற.

94

ஊர்க் குறுமாக்கள் வெண் கோடு கழாஅலின்,
நீர்த் துறை படியும் பெருங் களிறு போல
இனியை, பெரும! எமக்கே; மற்று அதன்
துன் அருங் கடாஅம் போல
இன்னாய் பெரும! நின் ஒன்னாதோர்க்கே

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : அதியமானின் இருபண்புகள், 'இனியை எமக்கு'; 'இன்னாய் ஒன்னாதார்க்கு' எனக் கூறியமையால் அரசவாகையாயிற்று.

உரை : ஊரிலுள்ள சிறுவர்கள் தனது வெண்மையான தந்தத்தைக் கழுவுவதால் நீரையுடைய துறையில் எளிமையுடன் பெரிய களிறு படிந்து கிடக்கும்; பெருமானே! அவ்வாறே எங்களுக்கும் எளிமையுடையவனாய் இனியவனாக நீ விளங்குகின்றாய். மாறாக, அது நெருங்குதற்கு அரிதாக மதம் கொண்டால் மிகவும் இன்னாததாகும்; அவ்வாறே நீ நின் பகைவர்க்கு இன்னாதவனாக விளங்குகின்றாய்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : யானையின் எளிமையும் வன்மையும் அதியமானின் பண்பிற்கு உவமையாயின. யானை எளிமையாய் இருத்தல் அதியமானின் அருளுள்ளத்தையும் மதம் கொள்ளுதல் போர்க்களத்தே பகையரசரால் அணுக இயலாத பேராண்மையையும் உணர்த்தின. இருவேறு தன்மைகளும் ஒருங்கே பெற்றவன் அதியமான் என்க. இப்பாடலை இயன்மொழித் துறைக்கு இளம்பூரணரும் வேறுபட வந்த உவமத்திற்குப் பேராசிரியரும் எடுத்தோதினர்.

சிறுவர்கள் குறுமாக்கள் எனப் பெறுதலைப் புறம் (104.2) நற்றிணை (220.4), கலித்தொகை (82.9), மணிமேகலை (15.59) முதலிய நூல்களிலும் காணலாம். மதம் பெருகிய யானை அணுகுதற்கு அரிது என்பது "துன்னரும் திறல் கமழ்கடாஅத்து ....." என முன்னர்க் கூறப்பட்டது.

அருஞ்சொற்பொருள் : கோடு – தந்தம்; துன்னுதல் – நெருங்குதல்; கடாஅம் – மதம், மதநீர்.

95

இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,
கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,
கொல் துறைக் குற்றிலமாதோ – என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல் எம் கோமான், வைந் நுதி வேலே.

திணை : பாடாண்திணை; **துறை :** வாள் மங்கலம்.

Koviloor Digital Library

அவன் தூதுவிட, தொண்டை மானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட, அவர் பாடியது.

துறை விளக்கம் : மன்னவனின் வாள் முதலான படைக் கருவிகளின் சிறப்பைக் கூறுதல் 'வாண் மங்கலம்' ஆகும். இங்கு அதியமானின் படைக்கருவிகள் பாராட்டப்பட்டன. எனவே வாள் மங்கலமாயிற்று.

உரை : இவை தாம், மயிலின் தோகையால் அழகு செய்யப் பெற்றும் மாலை சூட்டப்பெற்றும் திரண்ட வலிய காம்பினிடத்து அழகுபடத் திருத்தியும் நெய் பூசப்பட்டும் காவலையுடைய அகன்ற மாளிகையிடத்தில் உள்ளன.

செல்வமுடையராய் இருக்கும்போது உணவு கொடுத்தும், இல்லாதபோது இருப்பதைப் பகிர்ந்து உடன் உண்ணும் வறியோர்; அவ்வறியோர் சுற்றத்திற்குத் தலைவனும், தலைமை சான்றவனுமாகிய எம் வேந்தன். அவனுடைய கூரிய நுனியையுடைய வேல் முதலான அவைதாம் பகைவரைக் குத்துதலால் பிடியும் நுனியும் சிதைந்து கொல்லனது குறுகிய பணிக் களரியில் எந்நாளும் கிடப்பனவாயின.

உரை விளக்கம் : பெண்டிரும் தூது சென்ற சிறப்புக்குரியர் என்பதை இப்பாடல் உணர்த்தும். தன்னுடைய வீரமுணர்ந்த நிலையில் தொண்டைமான்பால் இரங்கிய அதியமான் ஔவையை தூதாக விடுத்தனன். அவன் கருதியபடி தூது சென்று துணிவுடன் தம் கருத்துரைத்தனர் ஔவையார். இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு உறுதி பயக்கும் (குறள். 690) தூதுத் திறம் படைத்தவர் ஔவையார் என்பதுணர்த்திற்று. இப்பாடலில் தொண்டைமானைப் புகழ்ந்தது போலப் பழித்தும் அதியமானைப் பழித்தது போலப் புகழ்ந்தும் கூறினர். எனவே இப்பாடலை வஞ்சப் புகழ்ச்சியணிக்குரியதாகக் கருதுவர் (தண்டி. 64).

தொண்டைமான் படைக்கலங்கள் அழகுற விளங்கின என்னும் புகழ்ச்சி அவன் போர்க்களம் கண்டு போரிடாத

Koviloor Digital Library

தன்மையால் படைக்கலங்கள் பொலிவு மாறாமலிருந்தன என்பதுணர்த்திற்று. எனவே தொண்டைமான் போரில் ஈடுபடாதவன் என இகழ்ச்சி உணர்த்தப்பட்டது. அதியமான் படைக்கலங்கள் பொலிவிழந்து கொல்லன் பட்டறையுள் கிடந்தன எனும் இகழ்ச்சி, அவன் போர் பல கண்டு வென்றவன்; எனவே படைக்கலங்கள் நுனி சிதைந்து திருத்தப் படுவதற்கு வந்தன என்பதுணர்த்திற்று. எனவே அதியமானுடைய பேராற்றல் புகழ்ந்துரைக்கப்பட்டது. போரினால் படைக்கலம் சிதைதலை, 'கடிய உரற எறிந்து சிதைந்த வேல்' என்பதனாலும் (பதிற். 69. 4 – 5) அறியலாம்.

அருஞ்சொற்பொருள் : *இவ்வே – இவையே; பீலி – மயில்தோகை; காழ் – பிடி; நகர் – மாளிகை; பதம் – உணவு; ஒக்கல் – சுற்றம்.*

96

அலர் பூந் தும்பை அம் பகட்டு மார்பின்,
திரண்டு நீடு தடக்கை என்னை இளையோற்கு
இரண்டு எழுந்தனவால், பகையே : ஒன்றே,
பூப்போல் உண்கண் பசந்து, தோள் நுணுகி,
நோக்கிய மகளிர்ப் பிணித்தன்று; ஒன்றே
'விழவின்று ஆயினும், படு பதம் பிழையாது,
மை ஊன் மொசித்த ஒக்கலொடு, துறை நீர்க்
கைமான் கொள்ளுமோ' என,
உறையுள் முனியும், அவன் செல்லும் ஊரே.

திணை : *அது;* **துறை :** *இயன்மொழி*

அவன் மகன் பொகுட்டெழினியை அவர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : எழினியின் செயலை இயல்பாக மொழிந்து கூறியமையால் இயன்மொழி ஆயிற்று.

உரை : (1 – 3) மலர்ந்த பூவையுடைய தும்பை மாலையை அணிந்த அழகிய வலிமையான மார்பினையும், திரண்டு நெடிய பெரிய கையினையுமுடைய என் இறைவன் அதியமானின் மகனுக்கு இரண்டு பகை எழுந்தன.

(3 – 5) தம் பூப்போன்ற வடிவினையுடைய மைதீட்டிய கண்கள் பசலை பாய்ந்தும், தோள் மெலிந்து தோன்றவும் ஆகுமாறு தன்னைப் பார்த்த மகளிர்தம் உள்ளத்தைப் பிணித்ததால் அவர் கொண்ட ஊடலால் ஒருபகை நேர்ந்தது.

(5 – 9) அவன் படையெடுத்துச் செல்லும் ஊரில் விழா இல்லையாயினும் உண்டாக்கப்படும் உணவுடன் தவறாது செம்மறியாட்டுத் தசையையும் சுற்றத்தார் தின்பர். அந்தச் சுற்றத்தார் யாவருடனும் ஆறு குளம் முதலிய நீர்த்துறைகளில் படிந்து அவனுடைய யானைகள் நீருண்ணும் எனும் அச்சத்தால் அவ்வவ்வூர்களில் மக்கள் தங்குதலை வெறுத்தனர். இவ்வெறுப்பினால் ஒரு பகை நேர்ந்தது.

உரை விளக்கம் : எழினி போர் எதிர்ந்து செல்கையில், அவனைப் பிரியும் மகளிர் அவனுடன் ஊடினர்; எனவே அவர் செய்த பகை ஒன்று; பகைவர்தம் ஊர்களில் மக்கள் தங்குதலை வெறுத்தனர். அம்மக்கள் செய்த பகை ஒன்று; என்றதால் அவனுடைய அகச்சிறப்பும் புறச்சிறப்பும் குறித்தனர். ஊரில் விழாவிற்குக் கூடிய மக்களைப் போலப் பெருந்திரளாகப் படையினர் வருவர்; விழா இல்லையாயினும் படையின் ஆரவாரம் விழாவை ஒக்கும் என்று குறித்தனர். இங்கு சுற்றம் என்றது படைவீரரை; இனி அவ்வூர்கள் தங்கி இருக்கும் நாட்டுக்குரியன ஆகா; பாழும் காடாகுன என மக்கள் வெறுத்தகன்றனர் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

பகைவரால் அழிக்கப்பெறும் நாட்டில் வாழ்தலை வெறுத்து மக்கள் அகல்வர் என்பது, 'இனந்தோடு அகல ஊருடன் எழுந்து நிலங்கள் வாட ..... வாழ்தல் ஈயா வளன் அறு பைதிரம்' (பதிற். 19) எனப் பதிற்றுப்பத்தினுள்ளும் வந்தது.

அருஞ்சொற்பொருள் : பகடு - வலிமை; பதம் - உணவு; மை - செம்மறியாடு; கைமான் - யானை.

97

போர்க்கு உரைஇப் புகன்று கழித்த வாள்,
உடன்றவர் காப்புடை மதில் அழித்தலின்,
ஊன் உற மூழ்கி, உரு இழந்தனவே;
வேலே, குறும்பு அடைந்த அரண் கடந்து, அவர்
நறுங் கள்ளின் நாடு நைத்தலின்,
சுரை தழீஇய இருங் காழொடு
மடை கலங்கி நிலை திரிந்தனவே;
களிறே, எழூஉத் தாங்கிய கதவம் மலைத்து, அவர்
குழூஉக் களிற்றுக் குறும்பு உடைத்தலின்,
பரூஉப் பிணிய தொடி கழிந்தனவே;
மாவே, பரந்து ஒருங்கு மலைந்த மறவர்
பொலம் பைந் தார் கெடப் பரிதலின்,
களன் உழந்து அசைஇய மறுக் குளம்பினவே;
அவன் தானும் நிலம் திரைக்கும் கடல் தானைப்
பொலந் தும்பைக் கழல் பாண்டில்
கணை பொருத துளைத் தோலன்னே,
ஆயிடை, உடன்றோர் உய்தல் யாவது? தடந்தாள்,
பிணிக் கதிர், நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்கு உரித்தாகல் வேண்டின், சென்று அவற்கு
இறுக்கல் வேண்டும், திறையே; மறுப்பின்,
ஒல்வான் அல்லன், வெல்போரான்' எனச்

Koviloor Digital Library

சொல்லவும் தேறீர் ஆயின், மெல் இயல்,
கழற் கனி வகுத்த துணைச் சில் ஓதி,
குறுந் தொடி மகளிர் தோள் விடல்
இறும் பூது அன்று; அஃது அறிந்து ஆடுமினே

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமான் அஞ்சியை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'கணை பொருத துளைத்தோலன்', 'வெல்போரான்' என மன்னனின் செயல்களைப் புகழ்ந்தமையால் இயன்மொழி ஆயிற்று.

உரை : (1 – 17) போரைச் செய்ய விரும்பி உறையிலிருந்து அகன்று உலவிய வாள்கள் பகைகொண்டவருடைய காவல் பொருந்திய மதில்களை அழித்தலால், அந்தப் பகைவர்தம் தசையில் நன்கு தோய்ந்து வடு மிகுந்து வடிவிழந்தன; அதியமானுடைய வேல்கள், மணம் வீசும் கள்ளினையுடைய நாடுகளை, காவற்காடமைந்த அரண்களிலுள்ள பகைவரை வென்று வீழ்த்துவதால் சுரை பொருந்திய கரிய பிடியுடன் ஆணிகள் தளர்ந்து நிலை கெட்டன. அவனுடைய யானைகள், கணைய மரத்தால் தாங்கப் பெற்ற மதிற்கதவுகளுடன் மோதியும் அக்கதவுகளைத் தாங்கிய பகைவர்தம் யானைக்கூட்டமாகிய காவலை அழிக்கவும் செய்வதால், அணிந்திருந்த பூண்கள் சிதைந்து நீங்கின. அவன் குதிரைகள் பரந்து ஒன்றுகூடிப் போரிட்டு அழிந்த வீரர்களின் பொன்போன்ற பசிய மாலையணிந்த மார்பு வடிவிழக்குமாறு ஓடுவதால், அவற்றின் குளம்புகள் களத்தில் போரிட்டு வருந்திக் குருதிக்கறை படிந்தனவாயின. அவன் படைகளேயன்றி அவனும் நிலத்தைத் தன்னுள்ளே அடக்கும் கடல்போன்ற பெரும்படையுடன் பொன்னாற் செய்த தும்பைப்பூமாலையைச் சூடி, கழல் போன்றும் கிண்ணி போன்றும் அமைந்த அம்புகளுடன் போரிட்டதால் துளையடைந்த கேடயமுடையவன். அத்தகைய போர்க்களத்தில் அவனுடன் மாறுபட்டோர் உயிர் பிழைப்பது எங்ஙனம்?

Koviloor Digital Library

(18 - 25) ''வளைந்த தாளினையும் ஒன்றுடன் ஒன்று பிணித்தது போல் செறிந்து முற்றிக்கிடக்கும் நெல்மணிகளையும் உடைய நெற்கதிர்கள் நிறைந்த தலைமை பொருந்திய பழமையான ஊர்; அவ்வூர் உங்கட்கே உரிமையாக வேண்டுமெனில் அவனுக்குத் திறை தருதல் வேண்டும். மறுத்தால் உடன்பட்டு விட்டுவிடுபவன் அல்லன்; வெல்லும் போரினையுடையவன்'' என நான் கூறவும் தெளியீராயின், மெல்லிய இயல்புடையவரும் கழற்கனியால் கூறு செய்து சுருட்டப்பெற்று இனமாகிய சிலவாக அமைந்த கூந்தலை உடையவரும் சிறிய வளையலணிந்தவருமான நும் உரிமை மகளிர் தோளினை விட்டுப் பிரிந்துறைதல் வியப்பிற்குரியதன்று. எனவே, அதனை உணர்ந்து அவனுடன் போரிடுங்கள்.

உரை விளக்கம் : 'அதியமானின் வாள் வடிவிழந்தன; வேல்கள் நிலைகெட்டன; யானைகளின் பூண் நீங்கின; குதிரையின் குளம்புகளில் குருதிக்கறை படிந்தது; அவனும் வீரன்; இத்தகைய வீரம் செறிந்த படையையுடையவனுடன் போரிடுவதாயின் பிழைத்தல் அரிது; உம்மூர் உமக்கு உரிமையாக வேண்டுமெனில் திறை செலுத்திப் பணிவீர் அஃதொன்றே நன்று;' என்றார். அதியமானின் வீரம் அறியாது போர் செய்தால் உயிர் நீங்குதல் திண்ணம். எனவே அறிந்து ஆடுமின் என்றார். அறிந்தால் போர் செய்தலும் அரிது என்று குறிப்புப் பெறவைத்தார்; தார் ஆகுபெயராய் அதனை உடைய மார்பிற்கு ஆகிவந்தது. பகைவர்க்கு அறிவுரை கூறிப் போர் செய்யாது பிழைத்திருக்கக் கூறும் பாங்கு ஔவையாரின் புறப்பாடல் பிறவற்றிலும் (87 - 89) காணலாம்.

அருஞ்சொற்பொருள் : புகன்று - விரும்பி; குறும்பு - காவற்காடு; காழ் - கோல், வேலின் கைப்பிடி; பாண்டில் - கிண்ணி; தோல் - கேடயம்; இறும்பூது - வியப்பு.

Koviloor Digital Library

98

முனைத் தெவ்வர் முரண் அவியப்
பொரக் குறுகிய நுதி மருப்பின் நின்
இனக் களிறு செலக் கண்டவர்
மதிற் கதவம் எழுச் செல்லவும்,
பிணன் அழுங்கக் களன் உழக்கிச்
செலவு அசைஇய மறுக் குளம்பின் நின்
இன நல் மாச் செலக் கண்டவர்
கவை முள்ளின் புழை அடைப்பவும்,
மார்புறச் சேர்ந்து ஒல்காத்
தோல் செறிப்பு இல் நின் வேல் கண்டவர்
தோல் கழியொடு பிடி செறிப்பவும்,
வாள் வாய்த்த வடுப் பரந்த நின்
மற மைந்தர் மைந்து கண்டவர்
புண் படு குருதி அம்பு ஒடுக்கவும்,
நீயே, ஐயவி புகைப்பவும் தாங்காது, ஒய்யென,
உறுமுறை மரபின் புறம் நின்று உய்க்கும்
கூற்றத்து அனையை; ஆகலின், போற்றார்
இரங்க விளிவது கொல்லோ – வரம்பு அணைந்து
இறங்குகதிர் அலம்வரு கழனி,
பெரும் புனற் படப்பை, அவர் அகன் தலை நாடே!

திணை : வாகை; துறை : அரசவாகை; திணை : வஞ்சியும், துறை : கொற்றவள்ளையும் ஆம்.

அவனை அவர் பாடியது.

துறை விளக்கம் : *'கூற்றத்து அனையை' என்று அதியமானின் இயல்பு கூறியதால் அரசவாகையாகவும் பகைவர் நாட்டின் அழிவு கூறியதால் கொற்றவள்ளையாகவும் பாடல் அமைந்தது.*

Koviloor Digital Library

உரை : (1 – 14) போர் முனையில் பகைவர்களின் வலிமை அழியுமாறு போரிட்டதால் தேய்ந்து முனை மழுங்கிய தந்தங்களை உடைய உன் யானைக் கூட்டங்கள் செல்லக் கண்ட பகைவர்கள் தங்களுடைய மதில்வாயில் கதவுகளையும் அவற்றிற்கு இடும் கணையமரங்களையும் புதியனவாக அமைப்பதற்குப் பழையனவற்றை நீக்குகிறார்கள். பிணங்கள் அழுந்துபடுமாறு போர்க்களத்தை உழக்கிச் செல்வதால் வருந்தியனவும் குருதிக்கறை படிந்த குளம்பினை உடையனவுமான உன் நல்ல குதிரை இனங்கள் செல்லக்கண்ட பகைவர்கள் கிளைத்த வேலமுட்களால் காட்டரணின் வாயில்களை அடைக்கின்றனர். நின் பகைவர்மீது வீசியபோது அவர்களுடைய மார்பில் நிற்காது உருவிப் புறம்போனதும் உறையின்கண் வைக்கப்பட்டிராததும் ஆன நின் வேலைக் கண்ட பகைவர்கள் தம்முடைய கேடயத்தின்கண் காம்புடன் அமைந்த கைப்பிடியை இறுக அமைத்தனர். வாள் பிளத்தலால் வடுக்கள் நிறைந்து வீரம் பொருந்திய உன் வீரர்களின் வலிமை கண்ட பகைவர்கள் புண்ணினால் பட்ட குருதி படர்ந்த அம்பினைச் செலுத்தாது தூணியிலேயே அடக்குகின்றனர்.

(15 – 20) நீயோ வெண்சிறுகடுகைப் புகைக்கச் செய்து காவலுறச் செய்தாலும் அமையாதவனாய் விரைவாகப் பொருந்தி, புறத்தே நின்று உயிரைக் கொண்டு செல்லும் எமனை ஒத்து விளங்குகிறாய்; நின்படையின் சிறப்பாலும் நின் வீரத்தாலும் வரப்பை நெருங்கி வளையும் நெற்கதிர்கள் சுழலும் வயல்களுடன் மிகுதியான நீர்ப்பரப்பையுடைய அப்பகைவர்தம் நாடுகள் அவர் இரங்கி வருந்துமளவு அழிவனவே.

உரை விளக்கம் : இது, மலாடரை எதிர்த்து அவன் சென்றபோது பாடிய பாடல் என்பாரும் உளர். அதியமானின் நாற் படைச்சிறப்பு கூறப்பட்டது; 'இப்படையால் பகைவர் நாடு, காடாகிக் கண்டோர் இரங்குமாறு ஆகுமோ' என்றதும் 'அவ்வாறே அழியும்' எனும் தெளிவுப் பொருள் தந்தது. படையெடுப்பிற்கு முன் அது நாடாக அமையுமாற்றை 'வரம்பணைந்து ... அகன்

Koviloor Digital Library

தலை நாடே' என்னும் அடிகள் விளக்கும். இரங்கி விளிதல் என்பது நாடு பாழானதை எண்ணிப் புலம்புதல்; அது ''தொன்றோர் காலை நல்லமன் அளியதாம் எனச் சொல்லிக் காணுநர் கை புடைத்து இரங்க மாணாமாட்சிய மாண்டன பலவே' என்றது போல அமையும் (பதிற். 19).

பழந்தமிழர் வெண்சிறு கடுகின் புகைக்குத் தீயன விலகும்; குறிப்பாகப் புண்பட்டோர், ஈன்றமகவு ஆகியோரைப் பேய் அண்டாது எனக் கருதினர். எனவே அதியமான் பகைவர் வெண் சிறு கடுகினைப் புகைக்கச் செய்தனர். இந்நம்பிக்கையை 'நெய்யுடைக் கையர் ஐயவி புகைக்கவும்' (புறம். 296.2) என்று புறநானூறும் 'ஐயவி கடிப்பகை விரவிய மகளிர் ஏந்திய தூமத்து' என்று மணிமேகலையும் (மணி. 7.72 – 3) கூறின. அப்புகைக்கும் நில்லாத கூற்றுவன்போல் அதியமான் வந்தான். மன்னர்கள் வீரச்சிறப்பால் கூற்றுவனுடன் ஒப்பிடப்பெறுதலைப் புறப்பாடல் பிறவற்றாலும் (3. 13) அறியலாம்.

அருஞ்சொற்பொருள் : தெவ்வர் – பகைவர்; மா – விலங்கு, (குதிரை); மைந்து – வலிமை; ஐயவி – வெண்சிறு கடுகு.

99

அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
அரும் பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
நீர் அக இருக்கை ஆழி சூட்டிய
தொல் நிலை மரபின் நின் முன்னோர் போல,
ஈகை அம் கழற் கால், இரும் பனம் புடையல்,
பூ ஆர் காவின், புனிற்றுப் புலால் நெடு வேல்,
எழு பொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழு இன்று எய்தியும் அமையாய், செரு வேட்டு,
இமிழ் குரல் முரசின் எழுவரொடு முரணிச்

Koviloor Digital Library

சென்று, அமர் கடந்து, நின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கு அரியை; இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் - மற்று நீ
முரண் மிகு கோவலூர் நூறி, நின்
அரண் அடு திகிரி ஏந்திய தோளே!

திணையும் துறையும் அவை.

அவன் கோவலூர் எறிந்தானை அவர் பாடியது.

துறை விளக்கம் : அதியமானின் இயல்பினைப் 'பாடுநர்க்கு அரியை' எனக் கூறிப் பாராட்டியமையால் அரசவாகை ஆயிற்று.

உரை : *(1 - 11)* தொன்மையான மரபினையுடைய நின் முன்னோர் தேவர்களைப் போற்றிவழிபட்டும், அவர்கட்கு உரிய ஆவுதி எனும் அவிப்பலியுணவு அளித்தும் பெறுதற்கரிய முறையுடைய கரும்பைத் தேவருலகினின்று பூமிக்குக் கொண்டுவந்து தந்தும், கடலகப்படுத்திய பெரிய நிலத்தின்கண் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தியும் வாழ்ந்தனர். அம்முன்னோரைப் போன்றே, பொன்னாலாகிய வீரக்கழலணிந்த காலையும், பெரிய பனந் தோட்டினாலமைந்த மாலையையும் பூக்கள் செறிந்த சோலையையும், நாளும் புதிய ஈரம் புலராத புலாலையுடைய வேலையும், ஏழ் அரசர்க்குரிய அடையாளங்களை விருப்புடன் பெற்று, ஒருநாளும் நீங்காத அரசஉரிமையையும் தவறாமல் பெற்றதனை; அப்பொழுதும் அடங்காததன்மையை உடையாய்! போரை விரும்பி முழங்கும் ஒலியமைந்த முரசினையுடைய எழுவர்; அவருடன் மாறுபட்டுப் போர் மேற்சென்று, வென்று, நின் வலிமையைத் தோன்ற உணர்த்தினாய். அன்றைய நாளிலும் நின் வலிமையைப் பாடுவார்க்கு, அரியவனாக இருந்தாய்.

(11 - 14) நீ மாறுபாடு மிகுந்த கோவலூரை அழித்து, அரண்களைச் சிதைத்து வென்ற, சக்கரத்தைத் தாங்கும் நின்

Koviloor Digital Library

தோள்களை இன்றும் பரணன் மட்டுமே பாடினன்; அங்ஙனம் பாட நீ அரியவன் அன்றோ.

உரை விளக்கம் : தொன்மையான குடிச்சிறப்புடைய அதியமானின் வீரத்தைப் பாடுதல் அரிது. பரணன் ஒருவனாலேயே பாட இயன்றது என்று கூறியதால் அவனுடைய வீரம் முழுமையும் அடக்கிக் கூறுதல் எளிதன்று; பாடவல்ல புலவராகிய பரணர் போன்றவரால் அன்றிப் பிறரால் பாடுதல் இயலாது என்பது பெறப்படும். மேலும் பரணர் மீது ஔவையார் கொண்ட பெருமதிப்பும் புலனாகும். பரணரின் புலமைத் திறத்தை, 'கரணம் அமைந்த காசறு செய்யுள் பரணர்' எனப் பதிற்றுப்பத்தின் பதிகம் (பதிற். பதி. 5) பாராட்டும்.

தேவர்களை வணங்கி, ஆவுதி அளித்து, கரும்பினை விண்ணுலகினின்று நிலவுலகிற்குக் கொண்டு வந்தவர் அதியமானின் முன்னோர் என்பது 'அந்தரத்து ... கரும்பிவண் தந்தோன் பெரும்பிறங்கடையே' (புறம். 392. 19 – 21) என்பதாலும் அறியலாம். ஏழு பொறி பெற்றான் என்பது ஏழரசரை வென்று அவர் அடையாளங்களைத் தனதாகக் கொண்டான் என்று உணர்த்திற்று. இதனைப் பழைய உரை 'ஏழரசர் நாடும் கூடி ஒரு நாடாய் அவ்வேழ் அரசர் பொறியும் கூடிய பொறியோடு கூடி நின்று நன்மையும் தீமையும் ஆராய்தல்' என விளக்கும். இவன் சேரனுக்கு உறவுடையவன். எனவே பனம்பூச் சூடினான். பழைய உரை 'பூவார்கா' என்பதை 'வானோர் இவன் முன்னோர்க்கு வரம் தர வந்த சோலை' என்று கூறும்.

அருஞ்சொற்பொருள் : அருத்துதல் – உண்ணச் செய்தல், வழங்குதல்; புடையல் – மாலை; பொறி – அடையாளம்; நூறுதல் – சிதைத்தல்.

Koviloor Digital Library

100

கையது வேலே; காலன புனை கழல்;
மெய்யது வியரே; மிடற்றது பசும் புண்;
வட்கர் போகிய வளர் இளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண் தோட்டு,
வெட்சி மா மலர், வேங்கையொடு விரைஇ,
சுரி இரும் பித்தை பொலியச் சூடி,
வரிவயம் பொருத வயக் களிறு போல,
இன்னும் மாறாது சினனே; அன்னோ!
உய்ந்தனர் அல்லர், இவன் உடற்றியோரே;
செறுவர் நோக்கிய கண், தன்
சிறுவனை நோக்கியும், சிவப்பு ஆனாவே.

திணையும் துறையும் அவை; திணை : வஞ்சியும், துறை : கொற்றவள்ளையும் ஆம்.

அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது.

துறை விளக்கம் : 'சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாச் சினத்தன்' என அதியமான் இயல்பு கூறியமையால் அரசவாகை ஆயிற்று.

'உய்ந்தனர் அல்லர் இவனைப் பகைத்தவர்' என்று பகைவர் அழிவுக்கு இரங்கி, அதியமானைச் சிறப்பித்ததால் கொற்றவள்ளையும் ஆயிற்று.

உரை : (1 – 8) வேல் அதியமானின் கையகத்தது; புனைந்த வீரக்கழல்கள் கால்களில் இருப்பன; வியர்வை அவன் மேனியிடத்தது; கழுத்தினிடத்து ஈரம் காயாத பசிய புண் விளங்கும்; குற்றமற்று நன்கு வளர்ந்துள்ள இளைய பனையின் உச்சியிலிருந்து

Koviloor Digital Library

கொள்ளப்பெற்ற ஊசி போன்ற வெண்மையான தோட்டுடன் வெட்சியின் பெரிய மலர்களையும் வேங்கையின் மலர்களையும் விரவிய வண்ணம் சுருண்ட கரிய தலைமயிர் பொலிவுறச் சூடினான். இத்தகைய தோற்றமுடைய அதியமான் புலியுடன் பொருத வலிய யானையைப் போல இன்னமும் சினம் நீங்காமல் உள்ளான்.

(10 – 11) பகைவரை வெகுண்டு நோக்கிய அதியமானுடைய கண் தன் புதல்வனைக் கண்டபோதும் செம்மை நிறத்திலிருந்து மாறாவாயின.

(9) ஆதலால், அந்தோ! இவனைச் சினங் கொள்ளச் செய்தார் பிழைத்திரார்.

உரை விளக்கம் : போர்க்களம் சென்ற அதியமான் பகைவரை வீழ்த்தினான்; போரில் பெற்ற பசிய புண்ணுடன் வந்த அவன் தனக்கு மகன் பிறந்தமையறிந்து மகவினைக் காண வந்தான். பிள்ளையைக் கண்ட அளவிலும் போரில் கொண்ட சினம் தணியான். இதனால் போரில் அவன் கொண்ட சினத்தின் மிகுதி கூறப்பெற்றது. பனந்தோடு சூடுவதால் இவன் சேரர் உறவினன் என்பது முன்னும் கூறப்பெற்றது.

தன் மகவினைக் கண்டும் செம்மை படர்ந்த கண்ணுடன் வியர்த்த மேனியுடனும் மாறாது நின்றான் என்பதால் பகைவர் உறுதியாக அழிந்தனர் எனத் தெளிவு பெற்றனர் புலவர்.

விழுப்புண் வீரர்க்கு அடையாளம்; விழுப்புண் படாத நாளைக் குற்றமுடையது என்னும் திருக்குறள் (குறள். 776). மகன் பிறந்தவுடன் தந்தை காண்டல் மரபு; எனவே போர்க்களத்திலிருந்து நேரே வந்தனன் என்க.

அருஞ்சொற்பொருள் : வட்கர் – (வட்கார்) பகைவர்; போந்தை – பனை; பித்தை – மயிர்; வரிவயம் – புலி; செறுவர் – பகைவர்.

Koviloor Digital Library

101

ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்;
பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்,
தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ –
இழை அணி யானை இயல்தேர் அஞ்சி
அதியமான்; பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும், நீட்டாதுஆயினும், களிறு தன்
கோட்டு இடை வைத்த கவளம் போலக்
கையகத்தது; அது பொய் ஆகாதே;
அருந்த ஏமாந்த நெஞ்சம்!
வருந்த வேண்டா; வாழ்க, அவன் தாளே!

திணை : பாடாண்திணை; **துறை** : பரிசில் கடாநிலை.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது.

திணை விளக்கம் : பாடாண்திணை என்பது புகழ்ந்து பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு என்று பொருள்படும். ஒருவனுடைய புகழும், வலிமையும், கொடையும், அருளும் ஆகிய இவற்றைப் புகழ்ந்து பாடுதல். ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும், அளியும் என்றிவற்றைப் புனைந்து பாடுதல் பாடாணில் நிகழும். சங்கப் பாடல்களில் பாடாண் பாட்டே மிகுதி என்பது கருதத்தக்கது.

துறை விளக்கம் : பரிசில் கடாநிலை என்பது ஒரு துறை; 'யாவரும் பரிசில் பெற்றார்; யான் பெற்றிலன்' எனத் .தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை. பரிசில் தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்று உரைத்து, அதனைத் தருமாறு குறிப்பாக வேண்டுவதால் பரிசில் கடாநிலை ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : யாம் ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல; பலநாளும் மீளமீளப் பலரோடு கூடச் சென்றாலும், முதல் நாளினைப் போலவே விருப்பமுடன் உதவும் பண்புடையவன்; அணிகலம் அணிந்த யானையையும் தேரையுமுடையவன் அதியமான். அவன் பரிசில் தரக் காலம் சிறிது தாழ்ப்பினும், தாழ்த்தாவிடினும் அப்பரிசில் யானையினது கொம்பினிடையே வைக்கப்பட்ட கவளம்போல நம் கையகத்தது. அது தப்பாமல் கிடைக்கும். உண்ண ஆசைப்பட்ட நெஞ்சே! நீ பரிசிலுக்கு வருந்தவேண்டாம். அவன் தாள் வாழ்க.

உரை விளக்கம் : பரிசிலுக்கு வருந்திய புலவர் தனது நெஞ்சிற்குக் கூறும் தன்மையில் இப்பாடல் அமைந்துள்ளது. ஒருநாள், இருநாள், பலநாள் எனப் பலரொடு சென்றாலும் தலைநாள் போன்ற விருப்பினன் என்றதனால் அதியமானின் அன்பு உள்ளமும், முகம் சுருங்காத தன்மையும் கொடை மாண்பும் புலனாகின்றன. கோட்டிடை வைத்த கவளம் போல என்றதனால், யானை வாயில் கொண்டு உண்ணும் அளவும் கோட்டிடை வைத்த கவளம் போலப் பரிசில் கையகத்தது. அன்றியும் யானை கோட்டிடை வைத்த கவளத்தைச் சிறிது தாழ்த்ததாயினும், அக்கவளம் அதற்குத் தப்பாதவாறுபோல அதியமான் பரிசில் சிறிது தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்பது தோன்ற, ''பரிசில் பெறூஉம்காலம்'' என்றார்.

'தாள் வாழ்க' என்று வாழ்த்துதல் மரபாகும். இதனைப் புறநானூற்றின் (70, 103, 171) ஏனைய பாடல்களின் வாயிலாகவும் அறியலாம்.

''பன்னாள் நிற்பினும் சேர்ந்தனிர் செலினும்'' (மலை. 452), ''ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன், பன்னாள் வந்து'' (குறுந். 176), ''பெருவரை அடுக்கத்துக் கிழவன் என்றும் அன்றை அன்ன நட்பினன்'' (குறுந். 385), ''அன்றை அன்ன விருப்பொடு'' (குறிஞ்சி. 238).

Koviloor Digital Library

"தலைநா ளன்ன பேணலன்" (நற். 332), "தண்டாக் காதலுந் தலைநாட் போன்மே" (அக. 332), "தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து, பல நாள் நிற்பினும்" (மலைபடு. 565–566), "விழுமியோர் காண்டொறுந் செய்வர் சிறப்பு" (நாலடி. 159) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : தலைநாள் – முதல் நாள்; கோடு – கொம்பு; கவளம் – உணவு; ஏமாந்த – ஆசைப்பட்ட.

102

'எருதே இளைய; நுகம் உணராவே;
சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே;
அவல் இழியினும், மிசை ஏறினும்,
அவணது அறியுநர் யார்?' என உமணர்
கீழ்மரத்து யாத்த சேம அச்சு அன்ன,
இசை விளங்கு கவி கை நெடியோய்! திங்கள்
நாள் நிறை மதியத்து அனையை; இருள்
யாவணதோ, நின் நிழல் வாழ்வோர்க்கே?

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடியது.

துறை விளக்கம் : இயன்மொழியாவது, இயல்பைக் கூறுதல். இஃது இயன்மொழி வாழ்த்தெனவும் வழங்கும். தலைவனெதிர் சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன்மேலே ஏற்றிப் புகழ்தல் இயன்மொழி ஆகும். அச்சு முறிந்தவிடத்துச் சேமஅச்சு உதவினாற்போல இவன் காக்கின்ற நாட்டிற்கு ஓர் இடையூறுவரின், அதனை நீக்கிக் காத்தற்கு உரியன்

Koviloor Digital Library

என அவனது இயல்பைக் கூறினமையால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : இளைய எருதுகள் வண்டியில் நுகம் பூட்டி இழுத்தலை அறியா; அவ்வண்டியில் உப்பாகிய பண்டம் அதிகமாக ஏற்றப்பட்டது; அவ்வண்டி பள்ளத்தே சென்றாலும், மேட்டிலே ஏறினாலும் அவ்விடத்து வரும் இடையூற்றை நினைந்து உப்புவாணிகர் அச்சுமரத்தின் கண்ணே காவலாகிய சேமஅச்சைச் சேர்த்துக் கட்டியிருப்பர். அச்சேமவச்சுப் போன்ற புகழ் விளங்கிய, கொடையால் கவிந்த கையையுடைய உயர்ந்தோய்! நீ திங்களாகிய நிறைந்த முழு நிலாவிற்கு ஒப்பாவாய்; ஆதலால், நின் நிழலில் வாழ்பவர்களுக்குத் துன்பமாகிய இருள் எவ்விடத்தும் இல்லை.

உரை விளக்கம் : 'நாள் நிறை மதியத்து அனையை' என்றது, அறிவும், நிறைவும், அருளும் முதலாகிய குணங்களால் நிறைந்தவன் என்று பொருள்படும்; 'சேம அச்சு அன்ன' என்றது வண்டி மேடு, பள்ளத்தில் செல்கின்றபோது, அச்சு முறிந்துழிச் சேமவச்சு உதவினாற்போலத், தான் காக்கின்ற நாட்டிற்கு ஒரு துன்பம் வந்தாலும் அத்துன்பத்தை நீக்கிக் காத்தற்குரியன் பொகுட்டெழினி, என்பதை உணர்த்திற்று.

"ஆனாது ஈயும் கவிகை வண்மை" (புற. 54 : 7), "தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை" (மலை. 399), "பன்மீன் நாப்பண் திங்கள் போலப், பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை" (பதி. 90), "பன்மீன் நடுவண் பான்மதிபோல, இன்னகை ஆயமோடு இருந்தோற் குறுகி" (சிறு. 212 – 220), "பன்மீன் நடுவண் திங்கள் போலவும், பூத்த சுற்றமொடு பொலிந்து" (மது. 769 – 770), "பூண்மின்னும் மார்பன் பொலிந்தாங்கு இருந்தான் விசும்பிற், கோண்மின்னும் மீன்சூழ் குளிர் மாமதித் தோற்றம் ஒத்தே (சீவக. 882) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : சகடம் – வண்டி; பண்டம் – பொருள்; அவல் – பள்ளம்; மிசை – மேடு; உமணர் – உப்புவாணிகர்;

Koviloor Digital Library

சேமஅச்சு – அச்சு முறிந்தவிடத்து அதற்குப் பதிலாக உதவும் மற்றோர் அச்சு; கவிகை – இடக் கவிந்த கை; மதியம் – நிலவு.

103

ஒரு தலைப் பதலை தூங்க, ஒரு தலைத்
தூம்பு அகச் சிறு முழாத் தூங்கத் தூக்கி,
'கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்?' எனச்
சுரன்முதல் இருந்த சில் வளை விறலி!
செல்வை ஆயின், சேணோன் அல்லன்;
முனை சுட எழுந்த மங்குல் மாப் புகை
மலை சூழ் மஞ்சின், மழ களிறு அணியும்
பகைப் புலத்தோனே, பல் வேல் அஞ்சி;
பொழுது இடைப்படாஅப் புலரா மண்டை
மெழுகு மெல் அடையின் கொழு நிணம் பெருப்ப,
அலத்தற் காலை ஆயினும்,
புரத்தல் வல்லன்; வாழ்க, அவன் தாளே!

திணை : பாடாண்திணை; துறை : விறலியாற்றுப்படை.

அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

துறை விளக்கம் : அரசனுடைய புகழைப் பாடும் விறலியை வழிப்படுத்துதல் விறலியாற்றுப்படை எனப்படும். 'கூத்தரும் பாணரும், பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதால் அரசர்கள், வள்ளல்கள் ஆகியோரிடத்துப் பொருள் பெற்றோர் பொருள் பெறாதார்க்கு வழிகாட்டி நெறிப்படுத்துவர் என்பதை அறியலாம். இப்பாடற்கண், 'விறலி! செல்வையாயின் சேணோன் அல்லன்; புரத்தல் வல்லன்' என ஆற்றுப்படுத்தலின் விறலியாற்றுப்படைத்துறை ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : தோள் சுமையினது ஒருபுறத்தே பதலை என்னும் கருவி தொங்குகின்றது; மற்றொரு புறத்தே துளையுடைய சிறிய முழா தொங்குகின்றது; இவற்றைச் சுமந்தவாறே, எமக்கு உணவு இடுவார் யாருமிலராயினர்; எமக்கு உணவு இட்டு, கவிழ்ந்து கிடக்கும் உண்கலத்தை மலர்த்த வல்லார் யாரெனச் சொல்லிச் சுரத்திடையே வந்திருந்து வருந்தும் விறலியே! நீ அவனிடத்துச் செல்வையாயின், அவன் நெடுந்தொலைவிடத்தும் அல்லன்; பகைப்புலத்தை எரியூட்டியதால் எழுந்த கரிய புகை மலையைச் சூழும் முகில்போல, இளங்களிற்றைச் சூழும் பகைவர் தேயத்திருந்தான், பல வேற்படையையுடைய அதியமான்; ஒருபொழுதும் ஓயாமல் உண்ணவும் தின்னவும் படுதலால் ஈரம் காயாத உண்கலத்தில், மெழுகான் இயன்ற மெல்லிய அடை போலக் கொழுத்த நிணம் மிகும்படி அளித்தல்வல்லன்; உலகமே வறுமையுற்ற காலமாயினும் பாதுகாத்தலை வல்லன்; அவன் தாள் வாழ்க.

உரை விளக்கம் : பதலை என்பது ஒருதலை முகமுடைய தொரு தோற்கருவியைக் குறித்தது. பகைப்புலத்தோனே என்றது, பகைவரிடத்து திறை கொண்ட பொருளுடையனாதலின், நீ வேண்டியவெல்லாம் தருதல் அவனுக்கு எளிதென்பதாம். சேணோன் அல்லன் என்றதால், அவன் பரிசில் நீட்டிப்பான் அல்லன் என்று பொருள்படும். கவிழ்ந்த மண்டை என்றதால் உணவு இடுவோர் இன்மையின் கவிழ்த்து வைத்த உண்கலம் என்பதை உணர்த்திற்று. பொழுதிடைப்படாஅப் புலரா மண்டை எனக் குறிப்பிடுவது எந்நேரமும் அதியமான் உணவு அளித்து விருந்தோம்புவதால் உண்கலம் ஈரம் காயாமல் இருக்கும் தன்மையை உணர்த்தி நின்றது.

''நரம்பின் தீந்தொடை பழுனிய, வணரமை நல்யாழ் இளையர் பொறுப்பப், பண்ணமை முழவும் பதலையும் பிறவும், கண்ணறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கிக், காவிற்றகைத்த துறைகூடு கலப்பையர்'' (பதி. 41 : 1 – 5), ''திண் வார் விசித்த முழவொடு ஆகுளி, நுண்ணுருக்குற்ற விளங்கு அடர்ப்பாண்டில்,

Koviloor Digital Library

மின்னிரும் பீலி அணிதழைக் கோட்டொடு .... நொடிதரு பாணிய பதலையும் .... நேர்நீர் சுருக்கிக் காய கலப்பையிர்'' (மலைபடு. 3 - 13) ''பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்'' (புற. 115 : 2), ''ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை மலர்ப்போர் யார்?'' (புற. 179 : 2 - 3) ''ஒன்னார் நாடு சுடு கமழ் புகை எறித்தலானே'' (புற. 6 : 22), ''நனந்தலைப் பேர் ஊர் எரியும் நைக்க'' (புற. 57 : 7), ''நினைக்க வேண்டா, வாழ்க, அவன் தாளே!'' (புற. 70 : 19), ''வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே'' (புற. 101 : 10), என வரும் பகுதிகளோடு ஒப்பிட்டு எண்ணலாம்.

அருஞ்சொற்பொருள் : *தூம்பு - துளை; தூங்க - தொங்க; கவிழ்ந்த மண்டை - உணவு இடுவார் இன்மையின் கவிழ்த்து வைக்கப்பட்ட உண்கலம்; முனை - பகைப்புலம்; மஞ்சு - முகில்; மழகளிறு - இளங்களிறு; புலரா மண்டை - ஈரம் காயாத உண்கலம்; நிணம் - இறைச்சி; அலத்தல் - வறுமையுறுதல்; புரத்தல் - பாதுகாத்தல்.*

104

போற்றுமின், மறவீர்! சாற்றுதும், நும்மை;
ஊர்க் குறுமாக்கள் ஆடக் கலங்கும்
தாள் படு சில் நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்னை
நுண் பல் கருமம் நினையாது,
'இளையன்' என்று இகழின், பெறல் அரிது, ஆடே.

திணை : *வாகை;* **துறை :** *அரசவாகை.*

அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

திணை விளக்கம் : *வாகைப் பூவைத் தலையிலே சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தல் வாகைத் திணையாகும்.*

Koviloor Digital Library

வாகை என்னும் சொல் வெற்றி என்று பொருள்படும். வெற்றி பெற்றோர் வாகைப்பூவைச் சூடுதல் மரபு.

துறை விளக்கம் : அரசவாகையாவது, அரசனது இயல்பை, அரசனது வெற்றியைக் கூறுதல் எனப் பொருள்படும்.

உரை : வீரர்களே! நுமக்கு நாங்கள் அறிவிப்பேம்; ஊரின்கண் உள்ள இளஞ்சிறுவர் நீர் ஆடக் கலங்கும் முழங்காலளவான நீருடையதாயினும் அதனுள் வாழும் முதலை, யானையை கொன்று வீழ்த்தி விடும். அதுபோல எம் (இறைவனின்) மன்னனின் வலிமையையும், நுண்ணிய ஆற்றலையும் அறியாது அவனை 'இளையன்' என்று மதியாது போர் தொடுப்பின் நீங்கள் வெற்றி பெறுதல் அரிது. ஆகவே உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உரை விளக்கம் : தோற்ற வேந்தர்க்கு அறிவுறுக்கும் தன்மையில் ஔவையார் அதியமானின் வெற்றியைப் பாராட்டிப் பாடியது. பெரிய யானையை முதலை வீழ்க்கும் என்றதால், வலிமையுடைய மன்னர் போர் தொடுத்துவரினும், அவனை வீழ்க்கும் தன்மையன் அதியமான் என்பதை உணர்த்த, 'களிறட்டு வீழ்க்கும் ஈர்ப்புடைக் கராஅத் தன்ன என்னை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின், நீர்த்துறை படியும் பெருங்களிறு போல" (புற. 94 : 1 – 2), "உரவுக்களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி" (மலைபடு. 211), "என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை முன்னின்று கன்னின்றவர்" (குறள். 771) என வரும் பகுதிகளோடு ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஊர்க்குறுமாக்கள் – ஊரின்கண் உள்ள சிறுபிள்ளைகள், இளம்புதல்வர்கள்; தாள்படு சின்னீர் – தாள் மன்றயும் அளவிற்றான தண்ணீர்; கராஅம் – முதலை; என் ஐ – எம் இறைவன்; ஆடு – வெற்றி.

Koviloor Digital Library

105

சேயிழை பெறுகுவை – வாள் நுதல் விறலி!
தடவு வாய்க் கலித்த மா இதழ்க் குவளை
வண்டு படு புது மலர்த் தண் சிதர் கலாவப்
பெய்யினும், பெய்யாது ஆயினும், அருவி
கொள் உழு வியன் புலத்துழை கால் ஆக,
மால்புடை நெடு வரைக் கோடுதோறு இழிதரும்
நீரினும் இனிய சாயற்
பாரி வேள்பால் பாடினை செலினே.

திணை : பாடாண்திணை; துறை : விறலியாற்றுப்படை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

திணை விளக்கம் : பாடாண் திணை என்பது புகழ்ந்து பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு என்று பொருள்படும். ஒருவனுடைய புகழும், வலிமையும், கொடையும், அருளும் ஆகிய இவற்றைப் புகழ்ந்து பாடுதல். ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்றிவற்றைப் புனைந்து பாடுதல் பாடாணில் நிகழும். சங்கப் பாடல்களில் பாடாண்பாட்டே மிகுதி என்பது கருதத்தக்கது.

துறை விளக்கம் : அரசனுடைய புகழைப்பாடும் விறலியை வழிப்படுத்துதல் விறலியாற்றுப்படை எனப்படும். 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதால் அரசன், வள்ளலிடத்துப் பொருள் பெற்றோர் பொருள் பெறாதார்க்கு வழிகாட்டி நெறிப்படுத்துவர் என்பதை அறியலாம். இப்பாடற்கண், 'சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி! பாரி வேள்பால் பாடினை செலினே' என்று விறலியை ஆற்றுப்படுத்தலின் விறலியாற்றுப்படைத்துறை ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : ஒளி பொருந்திய நுதலினையுடைய விறலி! சுனைக்கண் தழைத்த கரிய இதழையுடைய நீலத்தின் புதுமலர்க்கண் வண்டு மொய்க்கும். அப்புதுமலரின்கண் குளிர்ந்த துளி கலக்க, மழை பெய்யினும், பெய்யாவிடினும் அருவி, கொள்ளிற்கு உழுத பரந்த நிலத்திடை நீரோடு காலாக ஓட, கண்ணேணியையுடைய மலையில் சிமையந்தோறும் வழிந்துகொண்டேயிருக்கும். அவ்வருவி நீரினும் மிக இனிய மென்மையுடைய வேள்பாரியைப் பாடி நீ செல்லின், சிவந்த அணிகலன்கள் பலவற்றைப் பரிசாகப் பெறுவாய்.

உரை விளக்கம் : மழை பெய்யினும், மழை பெய்யாதொழியினும் வேள்பாரியின் மலையில் எக்காலமும் அருவி கொட்டுவதை 'அருவி மால்புரை நெடுவரைக் கோடுதோறு இழிதரும்' என்று அவன் மலை வளத்தையும், 'நீரினும் இனிய சாயல்' என்றதால், அருவி நீரினும் இனிய சாயலுடையவன் என்று அவன் குணநலன்களையும் இப்பாடல் உணர்த்தி நின்றது. ''பாடினை செலினே சேயிழை பெறுகுவை'' என்பதால் பாரியின் கொடை உள்ளம் புலனாகின்றது.

''புறம் பெற்ற வயவேந்தன் மறம்பாடிய பாடினியும்மே ஏருடைய விழுக்கழஞ்சிற் சீருடைய இழை பெற்றிசினே'' (புற. 11 : 10 – 13), ''செல்லாயோதில் சில்வளை விறலி, மலர்ந்த வேங்கையின் வயங்கிழை அணிந்து'' (பதி. 40 : 21 – 22), ''பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்'' (குறு. 196), ''பாரி தீம்பெரும் பைஞ்சுனை பூத்த தேங்கமழ் புதுமலர்'' (அக. 78), ''வானி நீரினும் தீந்தண் சாயலன்'' (பதி. 86), ''தன் மலை, நீரினும் சாயலுடையன்'' (கலி. 42), ''வேனிற் புனலன்ன நுந்தை'' (கலி. 84), ''புனலஞ் சாயல் ..... நன்னன்'' (மலை. 61), ''விறலியர் பின்வர ஆடினிர் பாடினிர் செலினே, நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே'' (புற. 109 : 16 – 18), ''கிணைமகட்கு எளிதால் பாடினள் வரினே'' (புற. 111 : 4), ''கறங்கு வெள் அருவி கல் அலைத்து ஒழுகும் பறம்பு'' (புற. 158 : 3 – 4) என வரும் பகுதிகளோடு ஒப்பிட்டு நோக்கலாம்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சேயிழை - சிவந்த அணி; மா இதழ் - கரிய இதழ்; தண்சிதர் - குளிர்ந்த துளி; வியன்புலம் - பரந்தநிலம்; மால்புடை - கண்ணேணி; கணுக்களிலேயே அடி வைத்து ஏறிச் செல்லும்படி அமைந்துள்ள மூங்கில் ஏணி; வரை - மலை; கோடு - சிகரம், சிமையம்; சாயல் - மென்மை.

106

நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்
புல் இலை எருக்கம் ஆயினும், உடையவை
கடவுள் பேணேம் என்னா; ஆங்கு,
மடவர் மெல்லியர் செல்லினும்,
கடவன், பாரி கை வண்மையே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : இயன்மொழியாவது இயல்பைக் கூறுதல். இஃது இயன்மொழி வாழ்த்தெனவும் வழங்கும். தலைவனெதிர் சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே ஏற்றிப் புகழ்தல் இயன்மொழி ஆகும். பாரி கைவண்மை செயலைக் கடமையாக உடையவன் என அவனது இயல்பு கூறலின் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : நல்லனவென்றும், தீயனவென்றும் அல்லாத, குவிந்த பூங்கொத்தினையும், புல்லிய இலையினையும் உடைய எருக்கம் பூவாயினும், ஒருவன் சூட்டுவதைத் தெய்வங்கள் விரும்பேம் என்று கூறா. அதுபோல, அறிவில்லாதாரும், புல்லிய குணத்தாரும் சென்றாலும் பாரி உவந்து வழங்குதலைக் கடமையாகவுடையவன்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'புல்லிலை எருக்கமாயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா' என்றது, யாவரும் விரும்பாத எருக்கம்பூமாலையைச் சூட்டினும், கடவுள் அவற்றை விரும்பேம் என்று கூறாது என்பதை உணர்த்தும் பொருட்டாகும். 'மடவர் மெல்லியர் செல்லினும் கடவன் பாரி' என்றதால் அறிவாலும் குணம் செயல்களாலும்தாழ்ந்தவர் வரினும், கொடுத்தலை கடமையாக உடையவன் பாரி என்பதையும், 'கைவண்மை' என்றதால், கை, கொடைத்தன்மை பொருந்தியது என்பதையும் உணர்த்தி நின்றது. எருக்கம்பூவிற்குப் புல்லிய குணத்தாரும், கடவுளுக்குப் பாரியும் ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.

"பாரி ஒருவனும் அல்லன், மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே" (புற. 107 : 3 – 4), "இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே" (புற. 119 : 7) என வரும் பகுதிகள் நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : குவிஇணர் – குவிந்த பூங்கொத்து; பேணேம் – விரும்பேம்; மடவர் – அறிவில்லாதார்; மெல்லியர் – புல்லிய குணத்தர்; வறுமையுற்றவர்; கடவன் – கடமை, கடப்பாடு; வண்மை – கொடை, வள்ளன்மை.

107

'பாரி பாரி' என்று பல ஏத்தி,
ஒருவற் புகழ்வர், செந் நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே.

திணை : பாடாண் திணை; **துறை :** இயன்மொழி.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : இயன்மொழியாவது இயல்பைக் கூறுதல். இஃது இயன்மொழி வாழ்த்தெனவும் வழங்கும். தலைவனெதிர் சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே ஏற்றிப் புகழ்தல் இயன்மொழி ஆகும். பாரி, மாரியைப் போலக் கைம்மாறு கருதாது கொடுக்கும் கொடைத்தன்மையின் இயல்பைக் கூறினமையால் இஃது இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : செந்நாப் புலவர், பாரி பாரி என்று சொல்லி அவன் பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமல்லன்; இவ்விடத்து உலகைப் பாதுகாப்பதற்கு மழையும் (மாரி) உண்டு.

உரை விளக்கம் : உலகு புரத்தற்கு மாரியும் (மழையும்) உண்டாயிருக்கப் பாரி ஒருவனைப் புகழ்வர் செந்நாப்புலவர் எனப் பழிப்பதுப் போல மன்னனைப் புகழ்ந்துரைத்து மன்னனின் கொடைத்தன்மையை விளக்குதல்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என்னாற்றுங் கொல்லோ உலகு" (குறள். 211) என்னும் குறட்பா இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : ஏத்தி - வாழ்த்தி; மாரி - மழை; உலகு - உலகம்; புரப்பது - பாதுகாப்பது.

108

குறத்தி மாட்டிய வறல் கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின், அம் புகை அய்லது
சாரல் வேங்கைப் பூஞ் சினைத் தவழும்
பறம்பு பாடினரதுவே; அறம் பூண்டு,

Koviloor Digital Library

பாரியும், பரிசிலர் இரப்பின்,
'வாரேன்' என்னான், அவர் வரையன்னே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : 'பரிசிலர் இரப்பின் வாரேன் என்னான் அவர் வரையன்னே' எனப் பாரியின் இயல்பை உரைத்தலால் இஃது இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : குறத்தி அடுப்பில் வைத்து எரித்த வற்றிய கடைக்கொள்ளி சந்தனமரமாதலால், அதனின்றும் கமழ்ந்த நறும்புகை அருகில் உள்ள சாரற்கண், வேங்கையின் பூங்கொம்பின் ஊடே சென்று பரவி நிற்கும். அத்தகைய மலைச்சாரலினை உடைய பறம்பினைப் பாடுவார்க்கெல்லாம் பங்கிட்டுக் கொடுத்தான் பாரி. பரிசிலர் பரிசாக நீயே வேண்டும் என்று இரப்பாராயின் வாரேன் என்று கூடச் சொல்லாமல், அப்போதே அவர் உடைமையாகிவிடும் இயல்புடையவன் பாரி.

உரை விளக்கம் : சந்தனப்புகை வேங்கையின் மிசைத் தவழும் பறம்பு என்றதால், அவன் நாட்டில் இவையொழிய வேறு மரங்கள் இல்லாமையையும், பகைவர் சுடும் புகை அறியாத பறம்புநாட்டின் தன்மையும் புலப்படும். ''பறம்பு பாடினர் அதுவே'' என்றதால் பாடி வருவார்க்குத் தன் நாட்டையே (பறம்பு) கொடுக்கும் பண்பினன் என்பதும், போரிட்டு வருவார்க்கு பறம்புநாடு பெறல் அரிது என்பதையும் உணர்த்தக் காணலாம். குறத்தி மாட்டிய கொள்ளி சந்தன மரத்தினின்று பெறப்பட்டது. அதன் மணம் மலைச்சாரலில் உள்ள வேங்கை மரக்கிளைகளில் தவழும். இவ்வாறு கூறுவதில் உள்ள குறிப்பு மொழி எண்ணத் தக்கது. சேய்மைக்கண் வேங்கையென உயர்ந்து நிற்கும் வேந்தர்தம் செவிகளைப் பாரியின் புகழ் சென்றடைந்தது என்பதும், இத்தகு

Koviloor Digital Library

மணம் நமக்கிலையே என வேங்கை மனம் சலிக்குமாறு வேந்தர் பொறாதாயினர் என்பதும் உய்த்துணரத்தக்கன.

"சாந்த விறகின் உவித்த புன்கம்" (புற. 168 : 11), புனத்து, வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே" (நாலடி. 180), "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" (குறள். 72), என வரும் பகுதிகள் நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மாட்டிய - மடுத்தெரிக்கப்பட்ட; ஆரம் - சந்தனம்; சாரல் - மலைச்சாரல்; பூஞ்சினை - பூங்கொம்பு.

109

அளிதோதானே, பாரியது பறம்பே! -
நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்,
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே;
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே;
இரண்டே, தீம் சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே;
மூன்றே, கொழுங் கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே;
நான்கே, அணி நிற ஓரி பாய்தலின், மீது அழிந்து,
திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே.
வான் கண் அற்று, அவன் மலையே; வானத்து,
மீன் கண் அற்று, அதன் சுனையே; ஆங்கு,
மரம் தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்,
புலம்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்,
தாளின் கொள்ளலிர்; வாளின் தாரலன்;
யான் அறிகுவென், அது கொள்ளும் ஆறே;
சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர,
ஆடினிர் பாடினிர் செலினே,
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே.

Koviloor Digital Library

திணை : நொச்சி; **துறை :** மகள் மறுத்தல்.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

திணை விளக்கம் : மதிலைக் காக்கும் வீரர்கள் சூடிய (நொச்சி) போர்ப் பூவைப் புகழ்வது நொச்சித் திணையாகும். எயில் காத்தல் நொச்சியாகும். இதனை "நுவலரும் காப்பின் நொச்சி" என்றும் "ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம் காப்போர் சூடிய பூப்புகழ்ந்தன்று" என்றும் புறப்பொருள் வெண்பாமாலை கூறும். பகையரசனால் முற்றப்பட்ட தனது மதிலைப் பாதுகாக்கும் பொருட்டு, அம்மதிலகத்துள்ள அரசன், வீரர் ஆகியோர் நொச்சிப் பூவைச் சூடிப் போர் செய்வர்.

துறை விளக்கம் : ஒரு வீரன் திருமணம் செய்வதற்குத் தம் மகளை வேண்டச் சிற்றரண்களிலுள்ளோர் மறுத்துச் சொல்லுதல் மகள் மறுத்தல் எனப்படும். "வெம்முரணான் மகள் வேண்ட அம்மதிலோன் மறுத்துரைத்தன்று" என்று புறப்பொருள் வெண்பா மாலை குறிப்பிடுகின்றது. 'தாளின் கொள்ளலிர், வாளின் தாரலன்' எனப் பகை வேந்தரது கருத்துக்கு எதிராகத் தம் மகளைத் தர மறுத்துச் சொல்லுதலால் மகள் மறுத்தல் துறையாயிற்று.

உரை : பாரியின் பறம்புமலை உழவரால் உழுது விளைவிக்காத நான்கு விளையுளை உடைத்து; அவற்றுள் ஒன்று, சிறிய இலையையுடைய மூங்கிலினது நெல் விளையும்; இரண்டு, இனிய சுளையுடைய பலாவினது பழம் ஊழ்க்கும்; மூன்று, கொழுங்கொடியையுடைய வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்; நான்கு, அழகிய நிறத்தையுடைய ஓரி பாய்தலான் அதன்மேற் கொடி அழிந்து, நெடிய மலை தேன் சொரியும்; அவனது மலை, அகல நீள உயரத்தால் வானிடத்தை ஒக்கும்; அம்மலையின்கண் அமைந்த சுனை, அவ்வானத்தில் உள்ள விண்மீனை ஒக்கும்; அவ்விடத்து மரந்தோறும் கட்டப்பட்ட யானையை உடையீராயினும், இடந்தோறும் பரப்பப்பட்ட தேரையுடையீராயினும் உங்கள்

Koviloor Digital Library

முயற்சியால் பாரியை வெற்றி கொள்ள முடியாது. நுமது வாள்வலிமையாலும் வெல்ல இயலாது. பாரியின் பறம்பு பகைவர்க்கு எளிதன்று; முரசினையுடைய நீயிர் மூவேந்தரும் சூழினும் போரிட்டு அவனை வெற்றி கொள்ள இயலாது. அவனை வெற்றி கொள்ளும் வழியை யான் அறிவேன். வடித்து முறுக்கப்பட்ட நரம்பினையுடைய யாழை வாசித்து, மணம் பொருந்திய கூந்தலையுடைய நும் விறலியர் பின்வர, ஆடியும் பாடியும் செல்வீராயின், அவன் நுமக்கு நாட்டையும், மலையையும் பரிசிலாகத் தருவான்.

உரை விளக்கம் : பாரியின் பறம்பை அடைய நினைக்கும் பகை மன்னர்க்குப் புலவர் அறிவுறுத்தும் தன்மையில் இப்பாட்டைப் பாடியுள்ளார். மூவேந்தரும் வேந்தர் வடிவினை மாற்றிக் கூத்தர் வேடமும், மகளிர் விறலியர் வேடமும் கொண்டு பாரிமுன் ஆடிப் பாடிவீராயின், அவன் வியந்து மலையையும் நாட்டையும் அளிப்பான். பரிசிலாக அவன் நாட்டையும் மலையையும் அடையலாமே தவிரப் போரிட்டு அடைய முடியாது என்பதை மூவேந்தர்க்கும் உணர்த்துகின்றார். இவற்றால் பாரியின் மென்மையும் வன்மையும் புலனாகக் காணலாம். மலையை மூவேந்தர் சூழ்ந்து கொண்டாலும் அம்மலையில் வாழும் மக்கள் யாதொரு துன்பமும் அடையமாட்டார்கள் என்பதையும், அம்மலையில் விளையும் விளைபொருளைக் கொண்டே உயிர் வாழ முடியும் என்பதையும், அம்மலையின் வளத்தையும், எடுத்துரைக்கின்றார். 'வான்கண் அற்று அவன் மலையே' என்றது. மலையின் உயரத்தையும் பரப்பையும் உணர்த்தும் பொருட்டாகும். 'மீன் கண் அற்று அதன் சுனையே' என்றது வானத்து மீன்களினும் பலவாக சுனைகள் இருந்தன என்பதை எடுத்துக்காட்டும் தன்மையாகும். மரந்தொறும் பிணித்த களிறு, புலந்தொறும் பரப்பிய தேர் என்றதால் பனை மன்னர்களின் படைப்பெருக்கத்தை அறியலாம். தாளிற்கொள்ளலிர் வாளில் தாரலன் என்றதால், படை வலியாலோ, கருவிகளாலோ, முயற்சியாலோ, வாள்வலியாலோ பாரியது பறம்பை வெல்ல முடியாது என்பதை உணர்த்தும் பொருட்டாகும்.

Koviloor Digital Library

''கடந்தடு தானை மூவிருங்கூடி உடன்றனிராயினும் பறம்பு கொளற்கு அரிதே'' (புற. 110 : 1 – 2), ''ஆளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி, ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய, கடும்பரிப் புரவிக் கைவண் பாரி'' (அக. 78), ''புல்லிலை வெதிர நெல்விளை காடே'' (அக. 367 : 16), ''நெற் கொள் நெடுவெதிர்க் கணந்த யானை'' (குறி. 35) ''பல்கோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி'' (கலி. 50), ''வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்தொடா'' (கலி. 39), கீழ் செல வீழ்ந்த கிழங்கொடு'' (மது. 534), ''வயவுப் பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை'' (மலை. 127), ''பேரிசை உருமொடு மாரி முற்றிய, பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப்பாரி, பலவுறு குன்றம் போலப், பெருங்கவின் எய்திய அருங்காப்பினளே'' (நற். 253), என வரும் பகுதிகளோடு ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அளிது – இரங்கத்தக்கது; நளி – பெருமை; மூவிர் – மூவேந்தர்; வெதிரி – மூங்கில்; ஓரி – தேன்; ஆண் குரங்கு எனினும் அமையும்; பவர் – கொடி; மீன் – விண்மீன்; தாள் – முயற்சி; விரை – மணம்; ஈயும் – தரும்.

110

கடந்து அடு தானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும், பறம்பு கொளற்கு அரிதே;
முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல் நாடு;
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;
யாமும் பாரியும் உளமே;
குன்றும் உண்டு – நீர் பாடினிர் செலினே.

திணை : நொச்சி; துறை : மகள் மறுத்தல்.

மூவேந்தரும் பறம்பு முற்றியிருந்தாரைக் கபிலர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே என்றதால் மகள் மறுத்தல் துறையாயிற்று.

உரை : வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படையினையுடைய மூவேந்தரும் ஒன்றுகூடிப் போர் செய்தீராயினும் பறம்பு கொள்ளற்கு அரிது; குளிர்ச்சி பொருந்திய நன்னாடாகிய பறம்பு நாடு முந்நூறு ஊர்களையுடைத்து. அம்முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். நீயிர் பாடினிராய் வரின், யாமும் பாரியும் உள்ளேம்; அதுவேயன்றி மலையும் உண்டு.

உரை விளக்கம் : பாரியின் பறம்பை கொள்ள நினைக்கும் மூவேந்தர்க்கு அறிவுறுத்தும் தன்மையில் இப்பாடல் அமைந்துள்ளது. 'கடந்தடு தானை மூவிரும் கூடி' என்றதால் வஞ்சனையால் அடைய நினையாது எதிர்நின்று போரிட்டு வெல்லும் படையினையுடையவர் மூவேந்தர் என்று அவரது இயல்பை உணர்த்தி நின்றது. முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர் என்று குறிப்பிடுவதால் நீர் பாடிவரினும் பறம்புநாடு பரிசிலர் முன்னே பெற்றுவிட்டமையால், அது நுமக்கு அடைய இயலாது என்பதையும், எஞ்சி இருப்பது யாமும் பாரியுமே என்றதால் பாரியின் உடைமைப் பொருளாகப் புலவர் தன்னைச் சேர்த்துரைத்த மாண்பையும் உணரலாம்.

"தாளின் கொள்ளலிர் வாளின் தாரலன்" (புற. 109 : 13), "வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே" (புற. 111 : 2), "ஆடினிர் பாடினிர் செலினே, ... குன்றும் ஒருங்கு ஈயும்மே" (புற. 109 : 18) "கிணைமகட்கு எளிதால் பாடினள் வரினே" (புற. 111 : 4) என வரும் பகுதிகள் நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கடந்தடு – வஞ்சியாது எதிர்நிற்றல்; உடன்றல் – போர் செய்தல்; தண் – குளிர்ந்த.

Koviloor Digital Library

111

அளிதோ தானே, பேர் இருங் குன்றே!
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே;
நீலத்து இணைமலர் புரையும் உண்கண்
கிணை மகட்கு எளிதால், பாடினள் வரினே.

திணை : நொச்சி; **துறை** : மகள் மறுத்தல்.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : 'வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே' என்றதால் மகள் மறுத்தல் துறையாயிற்று.

உரை : பறம்பாகிய இக்குன்றம் இரங்கத்தக்கது. அக்குன்றம் வேலால் வெல்லும் மன்னர்க்கோ அரிது; நீலத்தினது இணைந்த மலரையொக்கும் மையுண்ட கண்ணையுடைய விறலி, கிணையுடன் பாடினளாய் வரின் எளிது.

உரை விளக்கம் : கபிலர், மூவேந்தரையும் நோக்கிப் பாரியின் தோளாண்மையைப் புகழ்ந்துரைக்கும் தன்மையில் இப்பாடலை பாடியுள்ளார். பறம்பு கொள்ளல் வேந்தர்க்கு அரிதாகவும், பாடி வரும் (கிணைமகட்கு) விறலிக்கு எளிதாகவும் இருக்கக் காரணம் பாரி போரால் வெல்ல முடியாதவனாகவும், பரிசிலால் வெல்லக் கூடியவனாகவும் இருக்கின்ற தன்மையை உணர்த்தும் பொருட்டாகும்.

"தாளின் கொள்ளலிர் வாளின் தாரலன்" (புற. 109 : 13), "உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே" (புற. 110 : 2), "எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்" (கலி. 96), "ஆடினிர் பாடினிர் செலினே, நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே" (புற. 109 : 17 – 18), என வரும் பகுதிகளுடன் நோக்கத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : இருங்குன்றம் - கரியகுன்றம்; வேறல் - வெல்லுதல்; புரையும் - ஒக்கும்; உண்கண் - மையுண்ட கண்; கிணை - தடாரிப்பறை.

112

அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்
எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொளார்;
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்,
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!

திணை : பொதுவியல்; **துறை :** கையறுநிலை.

பாரி மகளிர் பாடியது.

துறை விளக்கம் : அரசன் இறப்ப, அவனைச் சார்ந்தோர் அவ்விறந்து பாட்டை உரைத்துத் தளர்தல் கையறு நிலையாகும். "செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர், கையற உரைத்துக் கை சோர்ந்தன்று" என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும். கழிந்து போன பொருளைக் குறித்து இரங்குதலும் கையறுநிலையைச் சாரும். 'வென்று எறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே' என்று இரங்குவதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : மூவேந்தரும் முற்றியிருந்த வெண்ணிலா காயும் அன்றைய திங்களில் (மாதத்தில்) எம் தந்தையையும் உடையேம்; எம் மலையையும் பிறர் கொள்ளார்; இன்றைய திங்களில் இவ்வெண்ணிலவில், வென்றெறி முரசினையுடைய வேந்தர் எம்மலையையும் கொண்டார்; யாம் எம் தந்தையையும் இழந்தேம்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தந்தை இருந்தபோது வாழ்ந்த இன்ப நிலையையும், தந்தையை இழந்துநின்ற போது ஏற்பட்ட துன்ப நிலையையும் ஒப்புநோக்கி எண்ணும் தன்மையில் பாரி மகளிர் இப்பாடலைப் பாடியுள்ளனர். தனி ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும், வஞ்சித்தும் கொன்றமையின் 'வென்றெறி முரசின் வேந்தர்' என்று இகழ்ச்சி பொருள்படக் கூறப்பட்டது. பாரியை இழந்த துயரமும், பறம்பினை துறந்த வருத்தமும் இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

ஒப்புமைப்பகுதி : "கடல் கண்டன்ன கண் அகன் தானை, வென்று எறி முரசின் வேந்தர்" (புற. 351 : 4 – 5), "வேந்தர், வென்றெறி முரசி னன்பல முழங்கி" (குறு. 380 : 1 – 2), "நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்" (புற. 109 : 2) என வரும் பகுதிகள் நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அற்றை என்பது நெஞ்சறி சுட்டு; திங்கள் – மாதம்; எந்தை – தந்தை.

113

மட்டு வாய் திறப்பவும், மை விடை வீழ்ப்பவும்,
அட்டு ஆன்று ஆனாக் கொழுந் துவை ஊரன் சோறும்
பெட்டாங்கு ஈயும் பெரு வளம் பழுனி,
நட்டனை மன்னோ, முன்னே; இனியே,
பாரி மாய்ந்தென, கலங்கிக் கையற்று,
நீர் வார் கண்ணேம் தொழுது நிற் பழிச்சிச்
சேறும் – வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே!
கோல் திரள் முன் கைக் குறுந் தொடி மகளிர்
நாறு இருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே.

திணை : பொதுவியல்; **துறை :** கையறுநிலை.

Koviloor Digital Library

பாரிமகளிரைப் பார்ப்பார் படுக்கக் கொண்டு போவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''பாரி மாய்ந்தென கலங்கிக் கையற்று நீர் வார் கண்ணேம் தொழுது நிற் பழிச்சி'' என்று கையற்று உரைப்பதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : பெரும் புகழுடைய பறம்பு மலையே! மது இருந்த சாடியை வாய் திறப்பவும், ஆட்டுக் கிடாயை வெட்டிச் சமைத்த கொழுந் துவையையும், ஊன் சோற்றையும் விரும்பியவாறே தந்தும், செல்வத்தால் நிறைந்தும் முன்பு எம்மோடு நட்புச் செய்தாய்; இப்பொழுது பாரி இறந்தானாக, கலங்கிக் கையற்று, கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க நின்னைத் தொழுது வாழ்த்திச் செல்கின்றேம். குறிய வளையணிந்த கையினையுடைய பாரி மகளிரது மணம் கமழும் கூந்தலைத் தீண்டுதற்குரிய தலைவனைத் (கணவனை) தேடிச் செல்லுகின்றேம்.

உரை விளக்கம் : கபிலர் பறம்புநாட்டைப் பிரியுங்கால் தமக்கு இதுகாறும் உணவும், உறையுளும் தந்து இன்புறுவித்த பறம்பினது நன்றியை நினைத்து புலம்பிய நிலையை இப்பாடல் காட்டுகின்றது. ''பெட்டாங்கீயும் .... நட்டனை மன்னோ முன்னே'' என்றும், ''இனியே தொழுது நிற் பழிச்சிச் சேறும் வாழியோ'' என்றும் கூறியது முன்னைய இன்ப நிலையையும், பின்னைய துன்ப நிலையையும் எடுத்துக்காட்டும் தன்மையினாலாகும். வேள்பாரியின் பெருமையும், புகழும், கொடையும் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும்படி செய்ததால் பறம்பு மலையை ''வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே'' என்று வாழ்த்தினார். தாம் பறம்பை விட்டுச் செல்லுவதற்குரிய காரணத்தையும், மணந்த கணவனாலான்றி மகளிர் கூந்தல் பிறரால் தீண்டப்படாத மரபையும் சுட்டும் வகையில், ''மகளிர் நாறிருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே'' என்று குறிப்பிட்டார்.

Koviloor Digital Library

"நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்" (புற. 262 : 1), "வாயில் மாடந்தொறும் மை விடை வீழ்ப்ப" (புற. 33 : 21), "கலிமயிற் கலாவத்து அன்ன இவன் ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே" (குறுந். 225 : 6 – 7), "கூந்தல் அணை கொடுப்பேம் யாம்" (கலி. 101) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மட்டு – மது; மைவிடை – செம்மறிக்கிடாய்; அட்டு – சமைத்து; ஊன்சோறு – கறிசோறு; பெட்டாங்கு – விரும்பியாங்கு; வளம் – செல்வம்; பழுனி – முதிர்ந்து; நட்டனை – நட்புச் செய்தனை; பழிச்சி – வாழ்த்தி; பெயர் – புகழ்.

114

ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும்; சிறு வரை
சென்று நின்றோர்க்கும் தோன்றும், மன்ற –
களிறு மென்று இட்ட கவளம் போல,
நறவுப் பிழிந்து இட்ட கோதுடைச் சிதறல்.
வார் அசும்பு ஒழுகும் முன்றில்,
தேர் வீசு இருக்கை, நெடியோன் குன்றே.

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

பாரி மகளிரைக் கொண்டுபோம் கபிலர் பறம்பு நோக்கி நின்று பாடியது.

துறை விளக்கம் : "ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் புகழுடைய மலை, இப்பொழுது ஏனைய மலைகளைப் போலக் கண்ணுக்கு புலனாகும் மலையாகத் தோன்றிற்று" என்று கையற்று உரைப்பதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : அருகில் நின்று பார்ப்பவருக்கும் தோன்றும்; சிறிது தொலைவு சென்று நின்று பார்ப்பவர்க்கும் தோன்றும்; யானை மென்று போட்ட உணவினது சக்கை போல, மதுப் பிழிந்து போட்ட சக்கையிலிருந்து மதுச்சேறு ஒழுகும் முற்றத்தையுடையது தேர் வழங்கும் இருப்பையுடைய பாரியின் பறம்புமலை.

உரை விளக்கம் : ''ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற'' என்றது, பாரி இருந்தபோது எங்கிருந்து பார்ப்பார்க்கும் பறம்புமலை புகழ்வடிவாய்க் காட்சி அளித்தது என்றும், பாராதவர்க்குச் செவி வழிச் செய்தியால் தெரிந்தது என்றும், இப்பொழுது அவன் இல்லாததால் பறம்புமலை பிறமலைபோலக் கண்ணுக்குப் புலனாகக் கூடிய மலையாகக் காட்சி அளிக்கின்றது என்றும் உணர்த்தும் பொருட்டாகும். 'தேர்வீசு இருக்கை நெடியோன்' என்றது அவனது கொடையை நினைந்து வியந்துரைத்தது.

''தேர்வண் பாரி தண்பறம்பு நாடே'' (புற. 118 : 5), ''தேர்வீசு கவிகை'' (மலை. 399), ''யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல'' (புற. 101 : 6 – 7) என வரும் பகுதிகள் ஒப்பிடும் தன்மையின.

அருஞ்சொற்பொருள் : சிறுவரை – சிறிது எல்லை, தொலைவு; கவளம் – கவளத்தினது கோது; அசும்பு – மதுச்சேறு; முன்றில் – முற்றம்; நெடியோன் – உயர்ந்தோன் (பாரி).

115

ஒரு சார் அருவி ஆர்ப்ப, ஒரு சார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்,
வாக்க உக்க தேக் கட் தேறல்,
கல் அலைத்து ஒழுகும் மன்னே! – பல் வேல்,

Koviloor Digital Library

அண்ணல் யானை, வேந்தர்க்கு
இன்னான் ஆகிய இனியோன் குன்றே.

திணை : பொதுவியல்; **துறை :** கையறுநிலை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''வேந்தர்க்கு இன்னான் ஆகிய இனியோன் குன்றே'' என்றதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : ஒரு பக்கம் அருவி ஆரவாரித்து ஒழுகும்; ஒரு பக்கம் பாணர் உண்கலம் நிரம்ப வார்க்க வேண்டி, கள்ளாகிய தேறல் கல்லை உருட்டி ஒழுகும். வேற்படையும் யானைபடையும் உடைய மன்னர்க்குக் கொடியவனும், எமக்கு இனியவனும் ஆகிய புகழ்மிக்க பாரியின் பறம்புமலை. இனி அது கழிந்தது.

உரை விளக்கம் : வேள்பாரி பகைவேந்தர்க்கு இன்னாதவனாகவும், இரவலர்க்கு இனியவனாகவும் ஒழுகினான் என்பது தோன்ற, ''இன்னான் ஆகிய இனியோன் குன்றே'' எனக் குறிப்பிட்டார். பாணர் மகிழ்ச்சியுடன் இருந்த காட்சியையும், தேறலின் மிகுதியையும் காட்ட, ''பாணர் மண்டை நிறைய .... தேறல் கல் அலைத்து ஒழுகும்'' என்றார்.

''கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார் என'' (புற. 103 : 3), ''வண்டுபடு நறவின் தண்டா மண்டையொடு'' (புற. 261 : 2), ''இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு'' (புற. 12 : 4), ''ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு'' (புற. 59 : 6), ''நறவுப் பிழிந்து இட்ட கோதுடைச் சிதறல், வார் அசும்பு ஒழுகும் முன்றில்'' (புற. 114 : 4 – 5) என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கற்குரியன.

அருஞ்சொற்பொருள் : மண்டை – உண்கலம்; பிச்சைப் பாத்திரம்; இன்னான் – கொடியவன்.

Koviloor Digital Library

116

தீம் நீர்ப் பெருங் குண்டு சுனைப் பூத்த குவளைக்
கூம்பு அவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல்,
ஏந்து எழில் மழைக் கண், இன் நகை, மகளிர்
புல் மூசு கவலைய முள் மிடை வேலி,
பஞ்சி முன்றில், சிற்றில் ஆங்கண்,
பீரை நாறிய சுரை இவர் மருங்கின்,
ஈத்து இலைக் குப்பை ஏறி, உமணர்
உப்பு ஒய் ஒழுகை எண்ணுப மாதோ;
நோகோ யானே; தேய்கமா, காலை! –
பயில் பூஞ் சோலை மயில் எழுந்து ஆலவும்,
பயில் இருஞ் சிலம்பில் கலை பாய்ந்து உகளவும்,
கலையும் கொள்ளாவாக, பலவும்
காலம் அன்றியும் மரம் பயம் பகரும்
யாணர் அறாஅ வியல் மலை அற்றே
அண்ணல் நெடு வரை ஏறி, தந்தை
பெரிய நறவின், கூர் வேற் பாரியது
அருமை அறியார், போர் எதிர்ந்து வந்த
வலம் படு தானை வேந்தர்
பொலம் படைக் கலிமா எண்ணுவோரே.

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''ஈத்து இலைக் குப்பை ஏறி உமணர் உப்புஒய் ஒழுகை எண்ணுப, மாதோ, நோகோ யானே, தேய்கமா காலை'' என்று இரங்கியதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : இனிய நீரையுடைய ஆழ்ந்த சுனைக்கண் பூத்த குவளையின் மொட்டு அவிழ்ந்து புறஇதழ் ஒடித்த முழுப்பூவால்

Koviloor Digital Library

செய்யப்பட்ட தழையசையும் அல்குலையும் (உயிர் உறுப்பு), மிக்க அழகுடைய குளிர்ந்த கண்ணினையும் இனிய முறுவலையுமுடையவர் பாரி மகளிர். பூஞ்சோலையில் மயில் ஆடவும், மலையில் ஆண் குரங்குகள் ஏறித் தாவி விளையாடவும், அக்குரங்குகள் உண்டு வெறுத்தலால் கொள்ளாவாம்படி உரிய காலமன்றியும் மரங்கள் பலவும் காயும் பழமும் முதலாயினவற்றை விளைந்து கொடுக்கும் புதுவருவாய் ஒழியாத அகன்ற மலையை உடையது பறம்புமலை. அம்மலையின் உயர்ந்த சிகரத்தில் ஏறி நின்று பாரி மகளிர் தம் தந்தையாகிய மிக்க மதுவினையும், கூரிய வேலினையும் உடைய பாரியின் அருமையை அறியாதவராய்ப் போர் செய்யும் பொருட்டு வந்த வெல்லும் படையுடைய அரசரது பொன்னாற் செய்யப்பட்ட அணிகலன் அணிந்த மனம் செருக்கிய குதிரையை எண்ணுவர். இப்பொழுது புல் மொய்த்த கவர்த்த வழியையும், முள்ளால் நெருங்கிய வேலியையும், பஞ்சு பரந்த முற்றத்தையும் உடைய சிறிய மனையிடத்தின்கண் பீர்க்கு முளைத்த சுரைபடர்ந்த இடத்தில், ஈச்சமரத்தின் இலையுடைய குப்பையின் மீது ஏறி உப்புவாணிகர் உப்புச்செலுத்தும் வண்டியை எண்ணுவர். இதனைக் கண்டு மனம் வருந்துகிறேன். எனது வாழ்நாள் கெடுவதாக.

உரை விளக்கம் : பாரி இருந்த காலத்தில் பாரியோடு போர் வேட்டு வந்த வேந்தரின் போர்க்குதிரைகளை எண்ணி விளையாடிய பாரி மகளிர், இப்பொழுது உப்பு வண்டிகளை எண்ணி விளையாடுதல் கண்டு கபிலர் மனம் இரங்கிப் பாடிய பாடல். சோலையில் மயில் எழுந்து ஆட, மலையில் குரங்குகள் தாவி விளையாட, மரங்கள் உரிய காலமன்றியும் பயன் தரும் புது வருவாய் ஒழியாத அகன்ற மலை என்று பறம்பு மலையின் சிறப்பு இப்பாடற்கண் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உயர்ந்த மலையில் ஏறி குதிரை எண்ணியோர், இப்பொழுது ஈத்திலைக் குப்பையேறி உப்பு வண்டி எண்ணுவர் என்றதால் உயர்வும், இழிவும் எடுத்தோதினார். இதனை, ''வேந்தர் பொலம்படைக்கலிமா எண்ணுவோரே, ஈத்திலைக் குப்பை ஏறி உமணர் உப்பு ஒய் ஒழுகை எண்ணுப மாதோ'' எனக் கையறுநிலையாகக் குறிப்பிட்டுள்ளார்.

Koviloor Digital Library

"தடவுவாய்க் கலித்த மா இதழ்க் குவளை" (புற. 105 : 2), "குவளை பைஞ்சுனை" (புற. 132 : 5), "கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர்" (புற. 61 : 1), "அணித் தழை நுடங்க ஓடி" (புற. 340 : 1), "மணிப்பூம் பைந்தழை தைஇ", மனைநகு வயலை மரனிவர் கொழுங்கொடி அரிமலர் ஆம்பலோடு தார்தழை தைஇ, விழவாடு மகளிர்" (அக. 20, 176), "கிளையிதழ் பறியாப் பைவிரி அல்குல், கொய்தழை தைஇ" (குறிஞ்சி, 101 – 102), "பைந்தழைமா மகளிரொடு" (பட். 91), "முழுநெறிக் குவளை" (சிலப். 2 : 14), "பைஞ்சுனைக் குவளைத் தண்டழையிவள் (குறு. 342), நிலவுக் குவித்தன்ன மோட்டு மணல் இடிகரைக், கோடுதுணர்ந்து அன்ன குருகு ஒழுக்கு எண்ணி" (நற். 159), "மடநோக்கு ஆயமொடு உடனுப்பேறி, எந்தை திமில் இது நுந்தை திமிலென வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர், திண்திமில் எண்ணும் தண்கடல் சேர்ப்ப" (நற். 331), "ஊசன் மேவற் சேயிழை மகளிர் .... பெருங்கை மதமாப் புகுதரின் அவற்றுள் விருந்தின் வீழ்பிடி எண்ணுமுறை பெறாஅ" (பதி. 43), "திரையுழந்து அசைஇய நிரைவளை ஆயமொடு, உப்பின் குப்பை ஏறி ஏற்பட, வருதிமில் எண்ணும் துறைவனொடு" (அக. 190), "காலம் அன்றியும் மரம்பயன் கொடுத்தலின்" (மலை. 134), பருவம் அன்றியும் பயங்கொடுப் பறாஅப், பலவு மாவுங் குலைவளர் வாழையும் இருங்கனி நாவலும் இளமா துளமும்" (பெருங். 2 : 20, 61 – 63), "ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" (அக. 78), "பொலம்படைக் கலிமா" (புற. 359 : 14), "பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (மலை. 574), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : தீநீர் – இனிய நீர்; கூம்பு – முகை; முழுநெறி – புறவிதழ் ஒடித்த முழுப்பூ; அல்குல் – உயிர்நிலை; மறை உறுப்பு; எழில் – அழகு; மழைக்கண் – குளிர்ந்த கண்; நகை – முறுவல்; கவலை – கவர்த்த வழி; முன்றில் – முற்றம்; சிற்றில் – சிறுமனை; பீரை – பீர்க்கு; சுரை – சுரைக்கொடி; ஈத்திலை – ஈச்சமரத்தின் இலை; உமணர் – உப்பு வாணிகர்; ஒழுகை – வண்டி ஒழுங்கு;

Koviloor Digital Library

கலை – முசுக்கலை; ஆண்குரங்கு; பயம் – பயன்; யாணர் – புதுவருவாய்; அறாஅ – ஒழியாத; வியன்மலை – அகன்றமலை; அண்ணல் – தலைமை; வரை – மலை; நறவு – மது; வலம்படு – வெற்றியுடைய; தானை – படை; பொலம் – பொன்; கலிமா – மனம் செருக்கிய குதிரை.

117

மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்,
வயலகம் நிறைய, புதல் பூ மலர,
மனைத்தலை மகவை ஈன்ற அமர்க் கண்
ஆமா நெடு நிரை நன் புல் ஆர,
கோஒல் செம்மையின் சான்றோர் பல்கி
பெயல் பிழைப்பு அறியாப் புன்புலத்ததுவே –
பிள்ளை வெருகின் முள் எயிறு புரையப்
பாசில் முல்லை முகைக்கும்
ஆய் தொடி அரிவையர் தந்தை நாடே.

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''ஆய்தொடி அரிவையர் தந்தை நாடு பெயல் பிழைப்பு அறியாப் புன்புலத்ததுவே'' என்று இரங்கிக் கூறியதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : நுண்ணிய தொழிலையுடைய வளையணிந்த மகளிரின் தந்தையாகிய வேள்பாரியது நாட்டில் பசிய இலை உடைய முல்லை, இளைய காட்டுப் பூனையின் கூரிய பல்லை போன்று மலரும். அவன் உயிருடன் இருந்த காலத்தில், சனி ஆகிய

Koviloor Digital Library

விண்மீன் புகைகளோடு கூடிப் புகையினும், எல்லாத் திசையினும் புகை தோன்றினும், தென் திசைக் கண்ணே வெள்ளிமீன் செல்லினும் மழை பிழைப்பறியாது; வயலிடத்து விளைச்சல் மிகுந்திருந்தது; புதலிடத்துப்பூ மலர்ந்தது; மனையிடத்துக் கன்றை ஈன்ற பசுக்கூட்டம் நல்ல புல்லை மேய்ந்தது. செங்கோல் ஆட்சித்திறத்தால் சான்றோர் பலர் நிறைந்திருந்தனர். அத்தகைய நாடு இன்று அவனை இழந்து நலம் அனைத்தும் கெட்டுப் புன்புலமாயிற்று.

உரை விளக்கம் : பாரி மகளிரின் தந்தை நாடு வளமையுடையதாய் இருந்த நிலையையும், இன்று அதனை இழந்து நிற்கும் நிலையையும் கண்டு வருந்திப் பாடியது. சனி மீன் புகைதலாவது இடபம், சிங்கம், மீனம் இவற்றொடு மாறுபடுதல்; இவற்றுள் சனி தனக்குப் பகைவீடாகிய சிங்கராசியில் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளையும். தூமம் புகைக்கொடி என்றும் கூறப்படும்; தூமகேது என்பதும் இதுவே. இது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் மறைந்துறையும் கோட்கள் நான்கனுள் ஒன்று; தூமகேதுவின் தோற்றம் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பர். தென்திசைக்கண் வெள்ளிமீன் சென்றால் மழை இராது. "மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும் வெள்ளி ஓடினும் கோல் செம்மையிற் பெயல் பிழைப்பறியாது" என்று பல்வேறு கோள்களின் தோற்றத்தால் தீங்குவரினும், அத்தீங்கு வராமல் காத்தற்குரியவன் வேள்பாரி என்று அவன் செங்கோன்மை திறத்தை வியந்து உரைத்தார். செங்கோன்மை திறத்தால் மாதம் மும்மாரி பொழிந்தது. அதனால் விளைச்சல் மிக, புதல் பூ மலர, பசுநிரை மேய, சான்றோர் பெருகக் காரணமாய் இருந்தது அவனது நாடு. இன்று அது கழிந்ததே என்று அவன் நாட்டைக் கண்டு இரங்கினார். முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்தவன் பாரி என்பதால், "முல்லை முகைக்கும் ஆய்தொடி அரிவையர் தந்தை நாடு" எனக் குறிப்பிட்டார். அம்முல்லை அரும்பின் தோற்றம் காட்டுப் பூனையின் கூரிய பல்லையொப்ப இருக்குமாதலின், அதற்கு உவமையாகப், "பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப் பாசிலை முல்லை முகைக்கும்" என்றார்.

Koviloor Digital Library

''அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும் இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும், அம்தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட'' (புற. 35 : 6 – 8), ''வெள்ளி தென் புலத்து உறைய, விளைவயல் பள்ளம் வாடிய'' (புற. 388 : 1 – 2) ''இருவானம் பெயல் ஒளிப்பினும், வரும் வைகன்மீன் பிறழினும் வெள்ளமாறாது'' (மது. 106 – 109), ''வசையில் புகழ் வயங்கு வெண்மீன், திசை திரிந்து தெற்கு ஏகினும், புள் தேம்பப் புயன் மாறி, வான் பொய்ப்பினும் தான் பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி'' (பட். 1 – 6), ''கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும் ... காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை'' (சிலப். 10 : 102 – 108), ''வேந்தனும், அல்லவை செய்யான், காக்கும் அதனஞ் தலை, ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'' (புற. 191 : 4 – 7), ''இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை, வெருகு சிரித்தன்ன பசுவீ மென்பிணிக் குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவு,'' (குறு. 220), ''வெருக்குப் பல் உருவின் முல்லை'' (குறு. 240) ''வெருகு வேட்பச் சிரிப்பனபோல் முகைத்த முல்லை'' (சீவக. 1651), ''முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்'' (குறள். 559), ''ஆ பயன் குன்றும் அறு தொழிலோர் நூன் மறப்ர், காவலன் காவான் எனின்'' (குறள். 560) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மைம்மீன் – சனிமீன்; தூமம் – தூமகேது; வெள்ளி – வெள்ளிமீன்; மனை – இல்லம்; மகவை – கன்றை; ஆமாநிரை – பசுக்கூட்டம்; கோஒல் செம்மை – செங்கோன்மை; பெயல் – மழை; வெருகு – காட்டுப்பூனை; எயிறு – பல்; தொடி – வளையல்; அரிவையர் – ஈண்டு பாரி மகளிர்.

118

அறையும் பொறையும் மணந்த தலைய,
எண் நாள் திங்கள் அனைய கொடுங் கரைத்

Koviloor Digital Library

தெள் நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரி தண் பறம்பு நாடே!

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''தெள்நீர்ச் சிறுகுளும் கீள்வது மாதோ'' என்று இரங்கிப் பாடியதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : வேள்பாரி, கூரிய வேலை ஏந்தியவன்; திரண்ட தோளினை உடையவன்; தேரினைக் கொடையாக அளிக்கும் இயல்பினன்; இத்தகைய தன்மை பொருந்திய பாரியின் குளிர்ந்த பறம்புநாடு, பாறையும் சிறுமலையும் கூடிய தலையையும், எட்டாம் நாள் பிறைபோலும் வளைந்த கரைகளையும் உடைத்தாகிய தெளிந்த நீரையுடைய சிறுகுளம் பாதுகாப்பார் இல்லாமையால் உடைவது போலும்.

உரை விளக்கம் : வேள்பாரி இருந்த காலத்து அவன்நாடு இருந்த இன்பநிலையையும், அவன் மறைந்த காலத்து அவன் நாடு உற்ற அவலநிலையையும் கண்டு புலவர் மனம் வருந்திப் பாடியது. பாறைகளையும், சிறுமலைகளையும் இடை இடையே அமைய இணைத்து, பிறை வடிவில் ஏரிகளுக்குக் கரையமைக்கும் முறை பண்டு தொட்டே இருந்து வருகின்றது. சிறுகுளங்களில் நீர் மிகுதியாக நிரம்பும் காலத்து, அதன் கரை உடையாதவாறு காவலர் இருந்து பாதுகாக்கும் மரபு பண்டு தொண்டு இன்று வரை இருந்து வருவதை இப்பாடல் உணர்த்துகின்றது. பாதுகாக்கும் காவலர் இல்லையாயின், சிறுகுளம் உடைந்து அழிவது போல், பல்வகைக் குடிகள் நிறைந்து பாரியால் காக்கப்பட்டிருந்த பறம்பு நாடு, அவன் இறந்ததும் கெட்டழிந்து போயிற்று என்பதை, ''தெள் நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ'' என்று குறிப்பிட்டார்.

Koviloor Digital Library

"தேய்பிறை உருவக் கேணி" (சீவக. 2998), "ஏரி அளாவிக் கிடந்தது போலும் இளம் பிறையே" (திருநா. தேவா.), "சிறு கோட்டுப் பெருங்குளம் காவலன் போல, அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே" (அக. 252), "தேர்வீசு இருக்கை நெடியோன் குன்றே" (புற. 114 : 6), "கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த" (புற. 200 : 11), "தேருடன் முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப் படுமணி யானைப் பறம்பிற் கோமான்" (புற. 201 : 2 – 4), "முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல், பறம்பிற் கோமான் பாரியும்" (சிறு. 87 – 91), "முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்" (பழ. 74) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கற்குரியன.

அருஞ்சொற்பொருள் : அறை – பாறை; பொறை – சிறுகுவடு, சிறுமலை; வண் – வண்மை, கொடை; எண்நாள் திங்கள் – எட்டாம் பக்கத்துப்பிறை.

119

கார்ப் பெயல் தலைஇய காண்பு இன் காலை,
களிற்று முக வரியின் தெறுழ் வீ பூப்ப,
செம் புற்று ஈயலின் இன் அளைப் புளித்து;
மென் தினை யாணர்த்து; நந்தும் கொல்லோ –
நிழல் இல் நீள் இடைத் தனி மரம் போல,
பனை கெழு வேந்தரை இறந்தும்
இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே!

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : ''நிழலில் நீளிடைத் தனிமரம் போலப், பணை கெழு வேந்தரை இறந்தும், இரவலர்க்கு ஈயும்'' என்று இரங்கிப் பாடியதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : நிழலில்லாத நெடிய வழிக்கண் நின்ற தனிமரத்தை ஒப்ப, முரசுடைய வேந்தரைக் காட்டிலும் மிகுதியாக இரவலர்க்கு வழங்கும் வண்மையுடையவன் வேள்பாரி. அவனது நாடு, கார்காலத்தில் மழை பெய்ததால், காட்சிக்கு இனிய காலமாயிற்று. யானை முகத்தின்கண் உள்ள புள்ளிபோலத் தெறுழ்மலர் பூத்தது. செம்புற்றின் ஈசலை, இனிய மோரோடு கூட்டிச் சமைத்த புளிங்கறியை உடைத்து பாரி நாடு. மேலும் சிறு தினையாகிய புதுவருவாயும் முன்பு உடைத்தாயிருந்தது. இனி அது கெட்டழிந்தது.

உரை விளக்கம் : 'நிழலின் நீளிடைத் தனிமரம் போல' என்றது, பாரியின் வள்ளல் தன்மைக்கு ஒப்பாகக் கூறப்பட்ட உவமையாகும். அவன் பிற வேந்தர்களைக் காட்டிலும் மிகுதியாக. இரவலர்க்கு கொடை வழங்கும் தன்மையால், ''வேந்தரை இறந்தும் இரவலர்க்கு ஈயும்'' என்றார். அவன் நாடு புளிங்கறியையும், தினையாகிய புதுவருவாயையும் உடைத்தாயிருந்தது என்று அந்நாட்டின் வளமையைச் ''செம்புற்று ஈயலின் இன் அளைப் புளித்து, மென்தினை யாணர்த்து'' என்று குறிப்பிட்டார். அவன் இறந்த பிறகு நாட்டின் வளமை கெட்டழிந்ததோடு, இரவலர்க்குக் கொடுப்பவரும் இல்லை என்று கையற்று இரங்கி உரைத்தார்.

''தலைப்பெயல் தலைஇய'' (முரு. 9), ''அரும்பு அவிழ்ந்து ஈர்ந்தண் புறவில் தெறுழ்வீ மலர்ந்தன'' (கார். நா. 25), ''நறைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ'' (நற். 302), ''சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர், இதைப்புன வரகின்வைப்புமாண் அரிசியொடு, கார்வாய்த் தொழிந்த ஈர்வாய்ப் புற்றத்து, ஈயல் பெய்தட்ட இன்புளி வெஞ்சோறு'' (அக. 394 : 2 – 5), ''செம்புற்று ஈயல்'' (புற. 51 : 10), ''அழன்மண்டு போழ்தில் அடைந்தவர்கட்கெல்லாம்,

Koviloor Digital Library

நிழன்மரம் போல் நேரொப்பத் தாங்கி" (நாலடி. 202), ''அருஞ்சுரத்தின் மரம்போல் அடைந்தார்க்கு அளித்தல் அவற்கியல்பு'' (சீவக. 3) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : *கார் – கார்காலம்; பெயல் – மழை; வரி – புகர், புள்ளி; தெறுழ் – காட்டகத்ததொரு கொடி; வீ – மலர்; ஈயல் – ஈசல்; யாணர் – புதுவருவாய்.*

120

வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்
கார்ப் பெயல் கலித்த பெரும் பாட்டு ஈரத்து,
பூழி மயங்கப் பல உழுது, வித்தி,
பல்லி ஆடிய பல் கிளைச் செவ்விக்
களை கால் கழாலின், தோடு ஒலிபு நந்தி,
மென் மயில் புனிற்றுப் பெடை கடுப்ப நீடி,
கருந் தாள் போகி, ஒருங்கு பீள் விரிந்து,
கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து,
வாலிதின் விளைந்த புது வரகு அரிய,
தினை கொய்ய, கவ்வை கறுப்ப, அவரைக்
கொழுங் கொடி விளர்க் காய் கோட் பதம் ஆக,
நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்.
புல் வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து,
நறு நெய்க் கடலை விசைப்ப, சோறு அட்டு
பெருந்தோள் தாலம் பூசல் மேவர,
வருந்தா யாணர்த்து; நந்தும் கொல்லோ –
இரும் பல் கூந்தல் மடந்தையர் தந்தை
ஆடு கழை நரலும் சேட் சிமை, புலவர்
பாடி ஆனாப் பண்பின் பகைவர்
ஓடு கழல் கம்பலை கண்ட
செரு வெஞ் சேஎய் பெரு விறல் நாடே!

Koviloor Digital Library

திணை : பொதுவியல்; துறை : கையறுநிலை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடு வருந்தா யாணர்த்து நந்துங்கொல்லோ'' என்று இரங்கிப் பாடியதால் கையறுநிலைத்துறை ஆயிற்று.

உரை : கருங்கூந்தலையுடைய (பாரி) மகளிரின் தந்தையாகிய வேள்பாரியது நாடான பறம்பு, அசைந்த மூங்கில் இழைந்து ஒலிக்கும் உயர்ந்த உச்சியை உடையது. பாரி, புலவரால் பாடப்பட்டு அமையாத தன்மையை உடையவன். பகைவரது புறங்கொடுத்து ஓடும் வீரக்கழல்களின் ஆரவாரத்தைக் கேட்டு நாணிப் பின் செல்லாது போரிடுதலை விரும்பி எதிர்நின்று பொரும் இயல்புடையவன் பாரி. முருகக்கடவுளுக்கு ஒப்பானவன். அவனது வென்றியை உடையது பறம்புநாடு. வெம்மை முதிர்ந்த வேங்கை மரத்தையுடைய சிவந்த மேட்டு நிலத்தே கார்காலத்து மழை பெய்தது. அம்மழையால் பதமாகிய ஈரநிலத்தில், புழுதி கலக்கும்படி பலசால்பட உழுது விதைக்கப்பட்டது. தாளியடிக்கப்பட்ட பல கிளையையுடைய செவ்வியின்கண் களையை அடியினின்றும் களைதலான், இலை தழைத்துப் பெருகி, மகவீன்ற மயிலினது பேடையை ஒப்ப ஓங்கி வளர்ந்தது. அதன் கரிய தண்டு நீண்டு, எல்லாம் ஒருங்கே சேர்ந்து சூல் விரிந்து, கதிரின் அடியும் தலையும் ஒழியாமல் வரகானது மிகக் காய்த்துச் சீரிதாக விளைந்தது. அவ்வாறு விளைந்த புதிய வரகை அறுக்கவும், தினையை அரியவும், எள்ளிளங்காய் கறுக்கவும், கொடி அவரையின் வெள்ளைக்காய் அறுக்கவுமாக அந்நாடு ஆரவாரம் உடையதாயிருந்தது. நிலத்தில் புதைக்கப்பட்டு முற்றிய மதுவைப் புல்லால் வேய்ந்த சிறுமனையின்கண் உள்ள மலைவாழ் மக்கள் குடியுள்ள இடந்தோறும் உண்ணக் கொடுப்பர். நறு நெய்யிலே கடலையை வறுத்து, அதனோடு சோறும் சமைத்து உண்பிப்பதற்குப் பெருந்தோளையுடைய மனையாள் (இல்லத் தலைவி) பாத்திரங்களைக் கழுவுவர்.

Koviloor Digital Library

இவ்வாறெல்லாம் வளமுடன் விளங்கிய புதுவருவாயை முன்பு உடையதாயிருந்தது பறம்பு நாடு. இப்போது அது கழிந்தது.

உரை விளக்கம் : பாரி மகளிரைக் கொண்டு செல்லும் கபிலர் பறம்பு நாட்டின் பல வளத்தையும் நினைந்து வருந்திப் பாடியது. பாரி இருக்கும்போது வளம் சிறந்த பறம்பு நாடு, பாரி இறந்த பிறகுக் காப்பாரின்றிக் கெட்டழியும் என்பதை இப்பாடற்கண் வெளிப்படுத்தியுள்ளார். நிலத்தைப் பல சால்பட உழுதலால் புழுதி தோன்றி, எரு வேண்டாதே மிக்க பயனை விளைவிக்குமாதலின் "பூழி மயங்கப் பலவுழுது வித்தி" என்றார். வரகுக் கொல்லைகளில் உண்டாகும் ஒருவகைக் களையைப் 'பல்லி' என்று கூறுதல் வழக்காகும். வரகின் களை நீக்கப்பட்டு, இலையால் தழைத்து நின்ற காட்சி, மயிற்பேடையை ஒத்துக் காணப்பட்டதால், "மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடி" என்று குறிப்பிட்டார். அம்மலைநாட்டில் வயல்களில் வேலை செய்வோர் செய்யும் ஆரவாரமும், குடியிருப்புகளில் ஆடவர் மது தந்தும், பெண்டிர் உணவுச் சமைத்து விருந்தோம்பிச் செய்யும் ஆரவாரமும் மிக்கு இருந்தது என்று குறிப்பிடுவதன் மூலம் அந்நாட்டின் வளத்தை எடுத்துரைத்துள்ளார். பாரி புலவர் புகழும் எல்லையைக் கடந்தவனாகலின், "புலவர் பாடி ஆனாப் பண்பின்" என்றார். பகைவரின் போரைக் கண்டு நாணிப் பின் செல்லாது எதிர்நின்று பொரும் தன்மையால், "பகைவர் ஓடுகழற் கம்பலை கண்ட செருவெஞ் சேஎய்" எனப் புகழ்ந்துரைத்தார்.

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும், வேண்டாது சாலப்படும்" (குறள். 1037), "சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்ப" (மது. 271), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வெப்புள் – வெம்மை; சுவல் – மேட்டுநிலம்; கார்ப்பெயல் – கார்கால மழை; பூழி – புழுதி; கவ்வை – எள்ளின் இளங்காய்; விளர்க்காய் – வெள்ளைக்காய்; குரம்பை – சிறியமனை; அட்டு – சமைத்து; பூசல் – பூசுதல்;

Koviloor Digital Library

யாணர் - புதுவருவாய்; கழை - மூங்கில்; கழல் - வீரக்கழல்; கம்பலை - ஆரவாரம்; செரு - போர்; சேஎய் - முருகன்.

121

ஒரு திசை ஒருவனை உள்ளி, நால் திசைப்
பலரும் வருவர்; பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!
அது நற்கு அறிந்தனை ஆயின்,
பொது நோக்கு ஒழிமதி, புலவர் மாட்டே!

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : முனிவர், தெளிந்த பொருளைச் சொல்லுதல். உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதி தருகிற பொருளை ஒருவனுக்குக் கூறுதல். ''பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே'' என்று உறுதிப்பொருள் உரைத்தலால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித்துறை ஆயிற்று.

உரை : பெருங்கொடை பொருந்திய தலைவ! ஒரு திசைக்கண் வள்ளன்மையோனாகிய ஒருவனை நினைந்து, நான்கு திசையிலுமுள்ள பரிசின்மாக்கள் (பரிசிலர்) பலரும் வருவர்; அவர் வரிசை (தகுதியை) அறிதல் அரிது; கொடுத்தல் மிகவும் எளிது; அவ்வரிசை அறிதலை நீ நன்றாக அறிந்தாயாயின் புலவரிடத்து வரிசை கருதாது பொதுநோக்காகப் பார்த்தலைத் தவிர்வாயாக.

உரைவிளக்கம் : ஏனைப் புலவரோடு தன்னையும் ஒப்பாகக் கருதிச் சிறப்புச் செய்த மலையமான் திருமுடிக்காரிக்கு வரிசை

Koviloor Digital Library

கருதாது பொதுநோக்கு ஒழிவாயாக என்று கபிலர் இப்பாட்டின்கண் வற்புறுத்திப் பாடியுள்ளார். ''ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப் பலரும் வருவர்'' என்றதனால், வள்ளலை நாடியே பலரும் வருவர், பொருள் கொடாதவனை யாரும் நாடிச் செல்லார் என்பதை உணர்த்தினார். 'பரிசின் மாக்கள் பலரும் வருவர்' என்றவிடத்துப் 'பலரும்' என்றதனால்அறிவுடை புலரும், அறிவில்லாத ஏனையோரும் வருவர் எனப் பொருள்படும். அறிவுடையோர் வரிசை (தகுதி) அறிந்து ஈதல் வேண்டும் என்பதை, ''ஈதல் எளிது; வரிசை அறிதல் அரிது'' என்று குறிப்பிடுகின்றார். புலமிக்கவரைப் புலமை அறிதல், புலமிக்கவர்க்கே இயலுமாதலின் வரிசை அறிவது அரிதாயிற்று என்றார்.

'' பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கி'' (புற. 6 : 16), ''இரவல் மாக்கள் ஈகை நுவல'' (புற. 24 : 30), ''வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை'' (புற. 47 : 6), ''வரிசை அறிதலும்'' (சிறு. 217), ''பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின், அது நோக்கி வாழ்வார் பலர்'' (குறள். 528), ''தத்தம், வரிசையான் இன்புறுஉமேல்'' (நான்மணி. 67), ''அது நற்கு அறிந்தனை ஆயின் நீயும், நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது'' (புற. 35 : 30 – 31) என வரும் பகுதிகள் நோக்கற்குரியன.

அருஞ்சொற்பொருள் : உள்ளி – நினைந்து; நாற்றிசை – நான்குதிசை; பரிசின் மாக்கள் – பரிசிலர், இரவலர்; வரிசை – தகுதி; ஈதல் – கொடுத்தல்; வண் – வண்மை, கொடை; தோன்றல் – தலைவன்.

122

கடல் கொளப்படாஅது, உடலுநர் ஊக்கார்,
கழல் புனை திருந்து அடிக் காரி! நின் நாடே;
அழல் புறந்தரூஉம் அந்தணரதுவே;

Koviloor Digital Library

வீயாத் திருவின் விறல் கெழு தானை
மூவருள் ஒருவன், 'துப்பு ஆகியர்' என,
ஏத்தினர் தரூஉம் கூழே, நும்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவலரதுவே;
வடமீன் புரையும் கற்பின், மடமொழி,
அரிவை தோள் அளவு அல்லதை,
நினது என இலை நீ பெருமிதத்தையே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : இயன்மொழியாவது இயல்பைக் கூறுதல். இஃது இயன்மொழி வாழ்த்தெனவும் வழங்கும். தலைவனெதிர் சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே ஏற்றிப் புகழ்தல் இயன்மொழி ஆகும். "நின் நாடு அந்தணரது; நின் பொருள் இரவலரது; அரிவை தோள் அளவு அல்லதை நினது என இலை" என அரசனது இயல்புகளை வியந்து பாடியதால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : வீரக்கழல் அணிந்த இலக்கணத்தால் பொருந்திய அடியையுடைய காரி! நின் நாடு கடல் நீராலும் கொள்ளப்படாது; பகைவர் போரிட்டும் கைக்கொள்ளப்படாது; ஆயினும் அந்நாடு வேள்வித்தீயை ஓம்பும் அந்தணர்க்கு உரிமை உடையது; கெடாத செல்வத்தினையும், வென்றி பொருந்திய படையையுமுடைய மூவேந்தருள் ஒருவனுக்கு வலியாக வேண்டுமென்று, அம்மூவரிடத்தினின்றும் வந்தோர், தனித்தனியாகப் புகழ்ந்து நினக்குத் தரும் பொருள், நும் குடியை வாழ்த்தினராய் வரும் பரிசிலருடையது. ஆதலால் வடதிசைக்கண் தோன்றும் அருந்ததி மீனை (நட்சத்திரம்) ஒக்கும் கற்பினையும், மென்மொழியினையுமுடைய நின் மனைவியின் தோள் மட்டுமே நினக்கு உரியது; நின்னுடையது என்று சொல்ல ஒன்றுமில்லையாயிருக்கவும், நீ பெருஞ்செருக்குடன் விளங்குகின்றாய். இதற்குக் காரணம் என்னையோ?

Koviloor Digital Library

உரை விளக்கம் : காரியின் மலைநாடு உள்நாட்டதாகலின் (மலையும் மலைசார்ந்த இடமுமாதலின்) 'கடல் கொளப்படாது' என்றும், முடிவேந்தர் மூவரும் துணையாக விரும்பும் பெருவலிமை படைத்தவனாதலின், "உடலுநர் ஊக்கார்" என்றும் கூறினார். துணையாக வேண்டும் என வேந்தரிடமிருந்து வந்தோர் தரும் பொருளைக் கொண்டு இரவலர் பசிப்பிணி தீர்த்தலின் "கூழ் இரவலரதுவே" என்றார். மகளிரின் கற்பினுக்கு, வடதிசைக்கண் தோன்றும் அருந்ததி என்ற விண்மீனை ஒப்பாகக் காட்டுதல் தமிழர் வழக்காகும். அதனாலேயே காரியின் மனைவியைக் குறிப்பிடும் போது, "வடமீன் புரையும் கற்பின்" என்று அவனது மனைவியைச் சிறப்பித்துள்ளார். மகளிர் மனைக்கு உரியவராகவும், வாழ்க்கைத் துணையாகவும் கருதப்பட்டமையால் கொடைக்கு உரியவராகார் என்பது தமிழர் மரபு. அதனால் "அரிவை தோள் அளவு அல்லதை நினதென இலை" என்று குறிப்பிட்டார். வடநூல் மரபுப்படி மனைவியை விலைப்பொருளாகக் கருதி விற்றலும், பிறர்க்குக் கொடுத்தலும் உண்டு.

"துஞ்சா முழவின் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப், பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல்" (அக. 35), "கறங்குமணி வாலுளைப் புரவியொடு வையகம் அருள, ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த, அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல், கழல் தொடித் தடக்கைக் காரியும்" (சிறு. 91 – 95), "முரண் கொடு துப்பின் செவ்வேள் மலையன்" (குறு. 313 : 2), "வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும், அருகாது ஈயும் வண்மை, உரைசால் நெடுந்தகை" (புற. 320 : 16 – 18), "பெருநல் வானத்து வடவயின் விளங்கும், சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்" (பெரு. 302 – 303), "வடமீன்போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்" (கலி. 2), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : உடலுநர் – பகைவர்; கழல் – வீரக்கழல்; அழல் – வேள்வித்தீ, யாகத்தீ; அந்தணர் – பார்ப்பார்; வீயா – கெடாத; திரு – செல்வம்; விறல் – வெற்றி; தானை – படை;

Koviloor Digital Library

மூவர் - மூவேந்தர்; கூழ் - பொருள்; இரவலர் - பரிசிலர்; வடமீன் - கற்பிற்சிறந்த அருந்ததியாகிய விண்மீன்.

123

நாள் கள் உண்டு, நாள் மகிழ் மகிழின்,
யார்க்கும் எளிதே, தேர் ஈதல்லே;
தொலையா நல்இசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழை அணி நெடுந் தேர்
பயன் கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

துறை விளக்கம் : "மகிழாது ஈத்த இழை அணி நெடுந்தேர்... முள்ளூர் மீமிசைப் பட்ட மாரி உறையினும் பலவே" என்று அரசனது கொடை வளத்தை வியந்து பாடியமையால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : நாட்காலையில் மதுவை உண்டு, நாளோலக்கத்திலே (யாவரும் தன்னைக் காணும்படி நாளவையில் வீற்றிருத்தல்) மகிழ்ச்சியுடன் இருக்கும்போது, தேர் வழங்குதல் யாவர்க்கும் எளிது; கெடாத நற்புகழுடைய மலையன் மது உண்டு மகிழாது (மது அருந்தாமல் இருக்கும் வேளையிலே) விருப்பமுடன், பொன் அணிகலன் அணிந்த நெடுந்தேரினைக் கொடையாக வழங்கினான். அவ்வாறு வழங்கிய தேர்கள், பயன் பொருந்திய முள்ளூர் மலை உச்சியின் கண் பெய்த மழைத்துளியினும் பலவாகும்.

உரை விளக்கம் : மலையமான் திருமுடிக்காரியின் கொடை இயற்கை என்பதை உணர்த்த, 'மகிழாது ஈத்த இழையணி

Koviloor Digital Library

நெடுந்தேர்' என்றும், மது மயக்கத்தில் வழங்கிய ஏனையோர் கொடை செயற்கை என்பதை உணர்த்த, "நாள் கள் உண்டு நாள் மகிழ் மகிழின் யார்க்கும் எளிதே" என்றும் கூறினார். இதன்மூலம் மலையமானின் கொடைக்குணத்தை வியந்துரைத்தார். அவன் வரையாது வழங்கிய தேர்கள் மழைத்துளியினும் பலவாகும் என்றதால் கொடையின் மிகுதியைக் காட்டவேண்டி, "மாரி உறையினும் பல" என்று போற்றுகின்றார்.

"துளங்கு தசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல், இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்" (மலை. 463 – 464), "பாண் முற்றுக நின் நாள் மகிழ் இருக்கை" (புற. 29 : 5), "செம்மல் நாள் அவை அண்ணாந்து புகுதல்" (புற. 54 : 3), "தேர் வீசு இருக்கை நெடியோன் குன்று" (புற. 114 : 6), "இழை கிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது" (புற. 359 : 15), "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப் பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது" (நற். 170), "முரண்கொடு துப்பின் செவ்வேல் மலையன், முள்ளூர்க் கானம்" (குறு. 312), "முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி" (அக. 209), "கொமண்டல் மா மழை பொழிந்த, நுண் பல் துளியினும் வாழிய பலவே" (புற. 34 : 22 – 23), "பெரு மழைக்கு இருக்கை சான்ற உயர்மலை" (புற. 125 : 18 – 19), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : நாள் கள் – காலையில் உண்ணும் மது; நாள் மகிழ் – நாளவை; (காலையில் யாவரும் தன்னைக் காணும்படி காட்சிக்கு எளியனாய் வீற்றிருத்தல்.) நல்லிசை – நற்புகழ்; மகிழாது – மது நுகர்ந்து மகிழாது; மாரிஉறை – மழைத்துளி.

124

நாள் அன்று போகி, புள் இடை தட்ப,
பதன் அன்று புக்கு, திறன் அன்று மொழியினும்,
வறிது பெயர்குநர் அல்லர் – நெறி கொளப்

Koviloor Digital Library

பாடு ஆன்று, இரங்கும் அருவிப்
பீடு கெழு மலையற் பாடியோரே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

திணை விளக்கம் : பாடாண்திணை என்பது புகழ்ந்து பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு என்று பொருள்படும். ஒரு மன்னனுடைய புகழும், வலிமையும், கொடையும், அருளும் ஆகிய இவற்றைப் புகழ்ந்து பாடுதல் பாடாண் திணையாகும். ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்றிவற்றைப் புனைந்து பாடுதல் பாடாணில் நிகழும். சங்கப் பாடல்களில் பாடாண்பாட்டே மிகுதி என்பது கருதத்தக்கது.

துறை விளக்கம் : இயன்மொழியாவது இயல்பைக் கூறுதல். இஃது இயன்மொழி வாழ்த்தெனவும் வழங்கும். தலைவனெதிர் சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே ஏற்றிப் புகழ்தல் இயன்மொழி ஆகும். "திறன் அன்று மொழியினும் வறிது பெயர்குநர் அல்லர்" என்று அரசனின் கொடைமேம்பாட்டைப் பாடிப் போற்றுதலால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : நாளும் நல்ல நாள் அன்று; புள் நிமித்தமும் (பறவைச் சகுனமும்) தீதாகத் தோன்றி இடைநின்று தடுக்கும்; மன்னனைச் சென்று காண்பதற்குரிய காலமும் (செவ்வி) அன்று; இவ்வாறு இருந்தும், அவனிடத்துச் சென்று கூறத்தகுதியற்ற சினம் உண்டாக்கும் வார்த்தைகளைக் கூறினாலும் மனம் வருந்தான்; ஒழுங்குபட ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவியையுடைய, பெருமை பொருந்திய மலைக்குரிய மலையமானைப் பாடியவர்கள், பரிசில் பெறாமல் வெறுங்கையுடன் திரும்பமாட்டார்கள்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : இரவலர் மன்னனை நாடிப் புறப்படும் போது நல்லநாள் பார்த்தலும், புள்நிமித்தம் காண்டலும் வழக்கமாகும். நாளும், புள்ளும் நன்னிமித்தமாக இல்லையாயின் பெறக் கருதும் பரிசில், பயணம் வெற்றி அடையாது. நிமித்தம் என்பதற்கு அறிவிப்பது என்று பொருள். சகுனம் பார்த்தல் என வழக்கில் கூறுவர். பின்வரும் நன்மை, தீமைகளை முன்கூட்டி அறிவிப்பது. அதனாலேயே 'நாளன்று போகிப் புள்ளிடை தட்ப' என்று மொழிந்தார். சமூகத்தில் காணப்பட்ட வாழ்க்கை மரபினைக் கபிலர் இப்பாடலில் சுட்டியுள்ளார். ஆனால் மலையமானை நாடிச் செல்பவர்கள், நாளும், புள்ளும் செவ்வியும் (காலமும்) நோக்க வேண்டியதில்லை; சினம் உடைய வார்த்தை கூறினும், மனதில் வைத்துக் கொள்ளாமல் பரிசில் வழங்கும் இயல்புடையவன்.

''புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்'' (மலை. 448), ''நாளும் புள்ளும் கேளா ஊக்கமோடு எங்கோ னேயினன் ஆதலின் யாமத்துச் செங்கால் வெட்சியும் தினையும் தூஉய், மறிக்குரல் குருதி மன்று துகள் அவிப்ப, விரிச்சி ஓர்த்தல் வேண்டா, எயிற்புறந்தருதும் யாம் பகைப்புல நிரையே'' (தகடூர் யாத்திரை), ''புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை'' (புற. 204 : 10) ''புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்'' (குறு. 218), ''திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும், பொருளும் அதனினூஉங் கில்'' (குறள். 644) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : புள் – பறவை; பதன் – செவ்வி; திறன் – கூறுபாடு; இரங்கும் – ஒலிக்கும்; பீடு – பெருமை.

125

பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன,
நெருப்புச் சினம் தணிந்த நிணம் தயங்கு கொழுங் குறை,
பரூஉக் கள் மண்டையொடு, ஊழ் மாறு பெயர

Koviloor Digital Library

உண்கும், எந்தை! நிற் காண்கு வந்திசினே,
நள்ளாதார் மிடல் சாய்த்த
வல்லாள! நின் மகிழ் இருக்கையே,
உழுத நோன் பகடு அழி தின்றாங்கு
நல் அமிழ்து ஆக, நீ நயந்து உண்ணும் நறவே;
குன்றத்து அன்ன களிறு பெயர,
கடந்து அட்டு வென்றோனும், நிற் கூறும்மே;
'வெலீஇயோன் இவன்' என,
'கழல் அணிப் பொலிந்த சேவடி நிலம் கவர்பு
விரைந்து வந்து, சமம் தாங்கிய,
வல் வேல் மலையன் அல்லன் ஆயின்,
நல் அமர் கடத்தல் எளிது மன், நமக்கு' எனத்
தோற்றோன் தானும், நிற் கூறும்மே;
'தொலைஇயோன் இவன்' என,
ஒரு நீ ஆயினை – பெரும! பெரு மழைக்கு
இருக்கை சான்ற உயர் மலைத்
திருத் தகு சேஎய்! நிற் பெற்றிசினோர்க்கே.

திணை : வாகை; துறை : அரசவாகை.

சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழி, சோழற்குத் துப்பாகிய தேர்வண் மலையனை வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது.

திணை விளக்கம் : வாகைப்பூவைத் தலையிலே சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தல் வாகைத் திணையாகும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை, "இலை புனை வாகை சூடி இகல் மலைந்து, அலைகடல் தானை அரசு அட்டு ஆர்த்தன்று" எனக் குறிப்பிடும்.

Koviloor Digital Library

துறை விளக்கம் : அரசனது இயல்பைக் கூறுதல் அரசவாகையாகும். அரசனது வெற்றியைக் கூறுதல் எனவும் பொருள்படும். ''பகலன்ன வாய்மொழி இகல்வேந்தன் இயல்பு உரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும். ''வென்றோனும் வெலீஇயோன் இவன் எனத், தோற்றோனும் தொலைஇயோன் இவன் என, நிற் கூறும்மே ஒரு நீ ஆயினை பெரும!'' எனத் தேர்வண் மலையனின் வெற்றியைப் பாராட்டிப் பாடியதால் அரசவாகைத்துறை ஆயிற்று.

உரை : எம்முடைய தலைவ! பகைவரது வலியைத் தொலைத்த வலிய ஆண்மையுடையோய்! மலை போன்ற யானை இறந்துபட எதிர் நின்று கொன்று வெற்றிபெற்றவனும், நம்மை வெற்றி பெறச் செய்தவன் இவனென நின்னையே புகழ்ந்து போன்றுவன்; வீரக்கழல் அணிந்த சேவடியால், போர்க்களத்தில் சோழனுக்குத் துணையாக விரைந்து வந்து, போரைத் தடுத்த வலிய வேலினையுடைய மலையன் இல்லையாயின், போரை வெல்லுதல் நமக்கு எளிதெனத் தோற்றுவனும், நம்மைப்போரில் தோல்வி அடையச் செய்தவன் இவனென நின்னையே புகழ்ந்து போற்றுவன்; ஆதலால் போரில் வென்றவனும், தோற்றவனும் புகழ்ந்து போற்றும் தன்மையில் நீ ஒருவனாயினாய்; பெரும! நினது மகிழ்ச்சியுடைய இருக்கைக்கண் (நாளவை) நின்னைக் காண வந்தேன். பருத்தி நூற்கும் பெண்டின் பஞ்சு போன்றதும் சூடு தணிந்த நெருப்பின் வெம்மை போன்ற கொழுப்பு படர்ந்ததும் ஆன இறைச்சியைக் (ஊனை) கள் வார்த்த மண்டையோடு (உண்கலத்தில்) முறை முறையாக ஒன்றற்கொன்று மாறுபட உண்பேமாக; நிலத்தை உழுத வலிய எருது, பின் வைக்கோலைத் தின்றாற்போல, நினது முயற்சியால் செய்த பொருளை யாவர்க்கும் அளித்துப் பின்னர் நீ விரும்பி உண்ணும் கள் நல்ல அமிழ்தமாவதாக; நின்னை நட்பாகவும், பகையாகவும் பெற்றோர்க்கு, பெருமழைக்கு இருப்பிடமாக அமைந்த, உயர்ந்த மலையையுடைய திருத்தக்க முருகக் கடவுளுக்கு ஒப்பாவாய்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தேர்வண் மலையன், சோழனுக்குப் போரில் உதவி புரிந்து வெற்றியோடு வந்திருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியுடன் பெருஞ்சாத்தனார், "நீ உண்ணும் உணவு அமிழ்தமாய் நீண்ட வாழ்நாளை நினக்கு நல்குவதாக' எனப் பாராட்டிப் பாடியது. பருத்திப் பெண்டின் சுகிர்ந்த பஞ்சு போன்ற தன்மையது நிணம் என்பதால், பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன" என்றார். அவ்விறைச்சியின் மேல் படர்ந்த வெண்மை நிறமுடைய கொழுப்பு, எரியாது பூத்துக்கிடக்கின்ற நெருப்புப் போன்றது என்பதால், "நெருப்புச் சினம் தணிந்த நிணம் தயங்கு கொழுங்குறை" என்றார். இறைச்சியும், கள்ளையும் மாறி மாறி உண்பதால், "பருஉக் கள் மண்டையொடு ஊழ் மாறு பெயர உண்கும்" எனக் குறிப்பிட்டார். உழவு செய்த எருது பின் வைக்கோலைத் தின்று அசை போட்டாற் போலப் போரில் வெற்றிப் பெற்ற மலையமான் கள் உண்டு மகிழ்ந்தான் என்பதை, "உழுத நோன் பகடு அழி தின்றாங்கு, நல் அமிழ்து ஆக நீ நயந்து உண்ணும் நறவே" என்று வலிய ஆண் எருதினை மலையனுக்கு ஒப்பாகக் காட்டினார். வென்றோன் நன்றியறிவால் நின்னைப் பாராட்டுதல் ஒருபுறமிருக்க, தோன்றோன் நின் போராண்மையை வியந்து போற்றுவன் என்று நண்பரும், பகைவரும் ஒப்பப் பாராட்டுதல் பற்றி, "ஒரு நீ ஆயினை பெரும!" என்றார். நண்பரும், பகைவரும் ஒப்பப் பாராட்டும் சிறப்பு முருகனுக்குரியதாகலின், "நிற் பெற்றிசினோர்க்கே திருத் தகு சேஎய்!" என்றார். சேஎய் மலையை இருப்பிடமாக உடையவனாதலின், "இருக்கை சான்ற உயர்மலை" என்று குறிப்பர்.

"பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கத்து" (புற. 326 : 5), "ஆளில் பெண்டிர் தாளிற் செய்த, நுணங்கு நுண் பனுவல் போலக் கணங்கொள" (நற். 353), "கோடைப் பருத்தி வீடு நிறை பெய்த, மூடைப் பண்டம் மிடை நிறைந்தன்ன வெண் நிண மூரி அருள" (புற. 393 : 12 – 14), "இழுதின் அன்ன வானிணம்" (மலை. 244), "உழவு ஒழி பெரும் பகடு அழி தின்றாங்கு" (புற. 366 : 14), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பருத்திப் பெண்டு – பருத்தி நூற்கும் பெண்; பனுவல் – பஞ்சு; கள் மண்டை – கள் வார்க்கும் கலம்; நள்ளாதார் – பகைவர்; மிடல் – வலி; மகிழ் இருக்கை – நாளிருக்கை; நாளவை; பகடு – எருது; அழி – வைக்கோல்; நறவு – கள்; வெலீஇயோன் – வெல்வித்தோன்; சமம் – போர்; தொலைஇயோன் – தொலைவித்தோன்; இருக்கை – இருப்பிடம்; சேஎய் – முருகன்.

—

126

ஒன்னார் யானை ஓடைப் பொன் கொண்டு,
பாணர் சென்னி பொலியத் தைஇ,
வாடாத் தாமரை சூட்டிய விழுச் சீர்
ஓடாப் பூட்கை உரவோன் மருக!
வல்லேம் அல்லேம் ஆயினும், வல்லே
நின்வயின் கிளக்குவம் ஆயின், கங்குல்
துயில் மடிந்தன்ன தூங்கு இருள் இறும்பின்,
பறை இசை அருவி, முள்ளூர்ப் பொருந! –
தெறல் அரு மரபின் நின் கிளையொடும் பொலிய,
நிலமிசைப் பரந்த மக்கட்கு எல்லாம்
புலன் அழுக்கு அற்ற அந்தணாளன்,
இரந்து செல் மாக்கட்கு இனி இடன் இன்றி,
பரந்து இசை நிற்கப் பாடினன்; அதற்கொண்டு
சினம் மிகு தானை வானவன் குட கடல்,
பொலம் தரு நாவாய் ஓட்டிய அவ் வழி,
பிற கலம் செல்கலாது அனையேம் அத்தை,
இன்மை துரப்ப, இசை தர வந்து, நின்
வண்மையின் தொடுத்தனம், யாமே – முள் எயிற்று
அரவு எறி உருமின் முரசு எழுந்து இயம்ப,
அண்ணல் யானையொடு வேந்து களத்து ஒழிய,
அருஞ் சமம் ததையத் தாக்கி, நன்றும்

Koviloor Digital Library

நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணை அம் படப்பை நாடு கிழவோயே!

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் துறை.

மலையமான் திருமுடிக்காரியை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

துறை விளக்கம் : அரசன் முன்னே பரிசிலர் (இரவலர்) தாம் பெறக் கருதிய பொருள் இதுவெனச் சொல்லுதல் பரிசில் துறையாகும். ''மண்ணகங் காவல் மன்னர் முன்னர் எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை இதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ''இன்மை துரப்ப இசைதர வந்து நின் வண்மையின் தொடுத்தனம் யாமே'' எமக்கும் பரிசில் வழங்குக என்று பாடியதால் பரிசில் துறையாயிற்று.

உரை : பகைவர் யானையின் நெற்றிப் பட்டத்துப் பொன்னைக் கொண்டு பாணர் தலை பொலியும்படி, வாடாத பொற்றாமரைப் பூவைச் சூட்டிய சிறந்த தலைமையினையும், புறங்கொடுத்து ஓடாத மேற்கோளினையும் உடைய முன்னோர் வழிவந்த மரபினனே! இராப்பொழுது தான் ஓரிடத்தே உறங்குவது போன்ற செறிந்த இருளுடைய சிறுகாட்டையும், பறையொலி போல் முழங்குகின்ற அருவியுமுடைய முள்ளூர் மலைக்கு வேந்தே! முள் போன்ற பல்லினையுடைய பாம்பை எறியும் இடியேறு போல முரசுகள் முழங்க, போர்க்களத்தில் பகையரசன் தலைமையுடைய யானையுடன் இறந்துபடப், போரில் பகைவர்களைச் சிதற வெட்டி, அவர்களைத் தடுத்து வெற்றி கொண்டவனே! பெண்ணையாற்றங்கரை நாட்டின் தலைவனே! ஒன்றைக் கற்று அறியேம் ஆயினும், அறிவேம் ஆயினும், யாமும் நின்னிடத்துப் புகழைச் சொல்லத் தொடங்கினேம்; நிலத்தின்மேல் மிக்க மாந்தர் எல்லாரினும், அறிவில் மாசற்ற அந்தணாளன் கபிலன். அவன் அழித்தற்கரிய மரபினையுடைய நீயும், நின் சுற்றமும் பெருக, இரந்து செல்லும்

Koviloor Digital Library

புலவர்க்கு இனிப் புகழ்தற்கு இடம் இல்லையெனும்படி, நின் புகழ் உயர்வுடன் நிலைபெற்று நிற்கப் பாடினான்; சினம் மிக்க படையுடைய சேரன் மேலைக் கடலில் பொன்னைத் தரும் மரக்கலம் (கப்பலைச்) செலுத்துமிடத்து இடையில் வேறு சிலர் மரக்கலம் செலுத்த முடியுமோ? கபிலன் பாடிய நின்னை எங்களால் பாட முடியுமோ? நாங்களும் அத்தன்மை உடையேம் ஆயினேம்; ஆயினும் எமது வறுமை துரத்த, நின் புகழை நினைந்து வந்து, நின் கொடைத் தன்மையில் சிலவற்றை யாம் புகழ்ந்து பாடினோம்.

உரை விளக்கம் : மலையமான் திருமுடிக்காரி கபிலரால் புகழ்ந்து பாடப்பட்டதையும், அவன் முன்னோர் பாணருக்குச் செய்த சிறப்பையும், மாறோக்கத்து நப்பசலையார் இப்பாடற்கண் புகழ்ந்துரைத்துள்ளார். பகைவருடைய யானைகளைக் கொன்று, அவற்றின் நெற்றிப்பட்டத்துப் பொன்னைக் கொண்டு தாமரைப் பூக்கள் செய்து பாணர்க்கு வழங்குவது பண்டைத் தமிழர் மரபு. இதனை இவனுடைய முன்னோரும் செய்தனர் என்பதால், ''வாடாத் தாமரை சூட்டிய உரவோன் மருக!'' என்றார். கபிலரைப் போலக் கற்று வல்லவர் இல்லை என்பதைத் தன்னடக்கம் தோன்ற, ''வல்லேம் அல்லேம் ஆயினும்'' என்றார். முள்ளூரின் மிக்க இருளுடைய சிறு காட்டிற்கு இரவு துயில் கொள்ளுவதையும், அருவி ஓசைக்குப் பறை ஓசையையும் ஒப்பாகக் காட்டும் முறையில் ''கங்குல் துயில் மடிந்தன்ன தூங்கு இருள் இறும்பின், பறை இசை அருவி முள்ளூர்'' என்று குறிப்பர்.

மன்னனை வாழ்த்தும்போது, சுற்றம், குழந்தைகள், மனைவி ஆகியோரையும் சேர்த்துப் புலவர் வாழ்த்துதல் மரபாகும். அதனை, ''தெறல் அரு மரபின் நின் கிளையொடும் பொலிய'' என்றார். ஒரு புலவர், மற்றொரு புலவரைப் பாராட்டுதற்குப் பரந்த உள்ளம் வேண்டும். அம்மாண்பை இப்பாடலில் உணர்த்துகின்றார் நப்பசலையார். மலையமானைக் கபிலர் மிகுதியாகப் புகழ்ந்து பாடியதையும், கபிலர் தெளிந்த, குற்றமற்ற அறிவினை உடையவர் என்பதையும், ''புலன் அழுக்கு அற்ற அந்தணாளன், இரந்துசெல்

Koviloor Digital Library

மாக்கட்கு இனி இடன் இன்றி, பரந்து இசை நிற்கப் பாடினன்'' என்று போற்றுவர். போர்க்களத்தில் முரசு இடியைப் போல முழங்க, பகை மன்னன் யானையோடு போர்க்களத்தில் இறந்துபட மலையமான் போர் செய்த நிகழ்ச்சியை, ''உருமின் முரசு எழுந்து இயம்ப, அண்ணல் யானையொடு வேந்து களத்து ஒழிய, அருஞ்சமம் ததையத் தாக்கி'' என்று போற்றுவர்.

''பாணர் தாமரை மலையவும்'' (புற. 12 : 1), ''பாண் மகனும்மே .... ஒள் அழல் புரிந்த தாமரை வெள்ளி நாரால் பூப் பெற்றிசினே'' (புற. 11 : 15 – 18), '' பூவின் ஆடு வண்டு இமிராத் தாமரை சூடாயாதல் அதனினும் இலையே'' (புற. 69 : 20 .– 21) ''பாடினி மாலை அணிய, வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே'' (புற. 319 : 14 – 15), ''ஓடாப் பூட்கை உரவோர் மருக'' (புற. 139 : 7), ''ஓடாப் பூட்கை'' (முரு. 247), ''பறைக்குரல் அருவி'' (பதி. 70), பறையிசை அருவி (சிலப். 25 : 28), ''நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி, வளி தொழில் ஆண்ட உரவோன் மருக'' (புற. 66 : 1 – 2), ''பொய்யா நாவின் கபிலன் பாடிய மை அணி நெடுவரை'' (புற. 174 : 10 – 11) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஒன்னார் – பகை; ஓடை – யானையின் நெற்றிப்பட்டம்; சென்னி – தலை; வாடாத் தாமரை – பொன்னால் செய்த தாமரைப்பூ; ஓடாபூட்கை – புறமுதுகிடாத வீரம்; மேற்கோள்; உரவோன் – பெரியோன்; கிளக்குவம் – சொல்லுவேம்; கங்குல் – இரவு; இராப்பொழுது; துயில் – உறக்கம், தூக்கம்; இறும்பு – சிறுகாடு; பறை – இசைக்கருவி; கிளை – சுற்றம்; புலன் – அறிவு; அழுக்கு – மாசு; அந்தணன் – பார்ப்பான்; குடகடல் – மேற்குக்கடல், மேலைக் கடல்; பொலம் – பொன்; நாவாய் – மரக்கலம்; இன்மை – வறுமை; இசை – புகழ்; வண்மை – கொடை; உருமின் – இடியேறு; அண்ணல் – தலைமை; வேந்து – வேந்தர் (ஈண்டு பகை மன்னர்); களம் – போர்க்களம்; தெவ்வர் –பகைவர்.

Koviloor Digital Library

127

'களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடு இன் பனுவற் பாணர் உய்த்தென,
களிறு இலவாகிய புல் அரை நெடு வெளில்,
கான மஞ்ஞை கணனொடு சேப்ப,
ஈகை அரிய இழை அணி மகளிரொடு
சாயின்று' என்ப, ஆஅய் கோயில்;
சுவைக்கு இனிது ஆகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கு ஈவு இன்றித் தம் வயிறு அருத்தி,
உரைசால் ஓங்கு புகழ் ஓரிஇய
முரைசு கெழு செல்வர் நகர் போலாதே.

திணை : பாடாண்திணை; **துறை** : கடைநிலை.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : தலைவன் வாயிற்கண் நின்று விடை கூறுதல். விடை விடுத்தலும், பெறுதலும் கடைநிலையாகும். ''முரைசுகெழு செல்வர் நகர் போலாதே, ஈகை அரிய இழை அணி மகளிரொடு சாயின்று என்ப ஆஅய் கோயில்,'' எனவும், ''பாடு இன் பனுவற் பாணர் உய்த்தென களிறு இலவாகிய'' எனவும் கூறியதால் கடைநிலைத்துறை ஆயிற்று.

உரை : சுவைக்கு இனிதாகிய தாளிப்புடைய உணவை வேந்தர் பிறர்க்கு வழங்காமல் தாமே உண்டு, தம் வயிற்றை நிறைத்துக் கொள்வர். அத்தகைய சொல்லுதற்கு அமைந்த மேம்பட்ட புகழை நீங்கிய, முரசு பொருந்திய செல்வத்தினையுடைய பிற அரசனின் அரண்மனை, ஆய் அண்டிரனின் அரண்மனைக்கு ஒப்பாகாது. ஏனெனில், களாப்பழத்தின் நிறத்தை ஒப்ப கரிய கோட்டையுடைய சிறிய யாழைக் கொண்டு, இனிய பாட்டைப் பாடுவதில் வல்ல பாணர் நின்னைப் பாடி யானையைப் பரிசாகப் பெற்றுச் சென்றனர்;

Koviloor Digital Library

அதனால் களிறுகள் இல்லையாகிய, புல்லிய பக்கத்தையுடைய யானைகட்டும் தறியில் காட்டு மயில்கள் தத்தம் இனத்தோடு தங்கும்; பிறிதோர் அணிகலமின்றிக் கொடுத்தற்கரிய மங்கலநாணை அணிந்த மகளிருடன் நின் (ஆய் அண்டிரன்) அரண்மனை பொலிவழிந்து காணப்பட்டது என்று சொல்லுவர்.

உரை விளக்கம் : ஏனைய அரசர் அரண்மனைகளில் காணப்படும் ஆரவாரமும் பொலிவும் ஆய் அண்டிரன் அரண்மனைக்கண் காணப்படாவிடினும் இதுவே சிறந்தது என்று அவனது கொடை நலத்தை வியந்து பாடியது. களாப்பழத்தின் நிறத்தை ஒத்ததால், ''களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்'' என்றார். யானை கட்டும் தறிகளில் யானை இல்லாதபோது அவை பொலிவழிந்து தோன்றுமாதலின், ''புல்லரை நெடுவெளில்'' என்றார். மகளிர்க்கு மங்கல அணி ஒழியப் பிறவெல்லாம் நீக்குதற்கு உரியதாதலின், ''ஈகை அரிய இழை அணி'' என்றார். பிறர்க்கு உதவாமல், தம் வயிறு நிறைக்கும் வேந்தரை, ''உரைசால் ஓங்கு புகழ் ஒரீஇய செல்வர்'' என்றார்.

''களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்'' (புற. 145 : 5), ''மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்'' (மலை. 534), ''கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப'' (நெடு. 70), ''ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து'' (குறள். 220), ''வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன் நல்குரவே போலு நனிநல்ல'' (நீதிநெறி. 67), ''ஆஅய் அண்டிரன், அடுபோர் அண்ணல் இரவலர்க்கு ஈத்த யானையின்'' (புற. 129 : 5 – 6), ''பாடிவருநர்க்கு இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த அண்ணல் யானை எண்ணின்'' (புற. 130 : 3 – 5), ''பரிசிலர்க் காணின் கன்றொடு கறை அடி யானை இரியல் போக்கும்'' (புற. 135 : 11 – 12), ''திருந்துமொழி மோசி பாடிய ஆயும்'' (புற. 158 : 12 – 13), ''அரண் பல நூறி நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன், சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய்'' (அக. 69), ''தெனாஅது ஆஅய் நன்னாட்டு அணங்குடைச்

Koviloor Digital Library

சிலம்பிற், கவிரம் பெயரிய உருகெழு கவான்'' (அக. 168), ''வியப்படை இரவலர் வரூஉம் அளவை அண்டிரன், புரவெதிர்ந்து தொகுத்த யானை'' (நற். 237) எனவரும் பகுதிகள் ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : களங்கனி – களாப்பழம்; பனுவல் – பாட்டு; புல்லரை – புல்லிய பக்கம்; வெளில் – தறி; ஈகை அரிய இழையணி – கொடுத்தற்கரிய மங்கல அணி; (ஈண்டு தாலி); குய்யுடை அடிசில் – தாளிப்பையுடைய உணவு; நகர் – அரண்மனை, கோயில்.

128

மன்றப் பலவின் மாச் சினை மந்தி
இரவலர் நாற்றிய விசி கூடு முழவின்
பாடுஇன் தெண் கண், கனி செத்து, அடிப்பின்,
அன்னச் சேவல் மாறு எழுந்து ஆலும்,
கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில் –
ஆடுமகள் குறுகின் அல்லது
பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே.

திணை : பாடாண் திணை; துறை : வாழ்த்து; இயன்மொழியும் ஆம்.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : தலைவனை வாழ்த்துதல் வாழ்த்தியல் ஆகும். தலைவனது கொடையையும், வெற்றியையும் கூறிப் பாராட்டுதல் ஆகும். ''ஆடுமகள் குறுகின் அல்லது பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே,'' என மன்னனது கொடைச் சிறப்பும் வென்றியும் கூறப்பட்டதால் இயன்மொழித்துறை ஆயிற்று.

Koviloor Digital Library

'அச்சிறப்போடு அவன் நெடிது வாழ்க' என்று வாழ்த்துவதைக் குறிப்புப் பொருளாகச் சுட்டியதால் வாழ்த்தும் ஆயிற்று.

உரை : ஊர்ப் பொதுவிடத்தில் இருந்த பலாமரத்தின் பெரிய கிளையில் வாழும் மந்தி, அம்மரத்தில் இரவலர் கட்டியிருந்தவோர் முழவினைப் பலாப்பழம் என்று கருதித் தட்டியது. அம்மரத்தில் வாழும் அன்னச்சேவல் அவ்வோசைக்கு மாறாகப் பறந்து ஒலி எழுப்பும் வளமுடையது ஆய் அண்டிரனின் பொதியின் மலை. கழல் இடப்பட்ட வீரவளையுடைய ஆய் அண்டிரனின் முகில்படியும் பொதியின் மலை, ஆடச்செல்லும் மகள் (விறலி) அணுக இயலுமேயன்றி போர் வேட்டு வரும் பெருமை பொருந்திய மாற்றரசர் அணுகுதல் அரிது.

உரை விளக்கம் : ஆய் அண்டிரனின் கொடையையும், வென்றிச் சிறப்பையும் வியந்து ஏணிச்சேரி முடமோசியார் பாடியது. போரிடக் கருதும் பகை மன்னர்க்கு அறிவுறுத்தும் தன்மையில் இப்பாடலைப் பாடியுள்ளார். ஊர் மன்றத்தே உள்ள பலாமரத்தில் பரிசிலர் கட்டியிருந்த மத்தளத்திற்குப் பலாப்பழத்தை ஒப்புமைப்படுத்துவதோடு, அதனை உண்ணும் பொருட்டு மந்திகள் அப்பழத்தைத் தட்டிப் பார்த்தன என்பதை, ''மன்றப் பலவின் தெண்கண் கனி செத்து அடிப்பின்'' என்றார். இதன்மூலம் ஆயின் பொதியின்மலையை அணுகமுடியும் என்று கருதித் தட்டிப் (போர் செய்ய) பார்க்க நினைக்கும் பகைமன்னர், மந்தி பழமென்று கருதி ஏமாந்து நின்ற நிலையைப் போல ஏமாந்துப் போவர் என்பதை உள்ளுறையாகக் காட்டுகிறார். விறலியாக ஆடிப்பாடிச் செல்லும் பரிசிலர்க்கு எளியனாகவும், பகைமன்னர்க்கு வலியனாகவும் காட்சி அளிக்கும் ஆயின் இயல்பை, ''ஆடுமகள் குறுகின் அல்லது பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே'' எனக் காட்டுகிறார்.

''மன்றப் பலவின் மால்வரை பொருந்தி என், தெண் கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி'' (புற. 374 : 5 – 6), ''பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை'' (புற. 89 : 7), ''கலை உணக் கிழிந்த,

Koviloor Digital Library

முழவு மருள் பெரும்பழம்'' (புற. 236 : 1), ''இரவலர்க்கு எண்மை அல்லது, துப்பு எதிர்ந்து எழுந்த ... நெடுமொழி மன்னர் நினைக்கும் காலை .... புலிதுஞ்சு வியன் புலத்தற்றே, வலி துஞ்சு தடக்கை அவனுடை நாடே'' (புற. 54 : 4 – 14), ''சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி, விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர, ஆடினிர் பாடினிர் செலினே, நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே'' (புற. 109 : 15 – 18), ''பேர் இருங்குன்றே, வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே; கிணை மகட்கு எளிதால் பாடினள் வரினே'' (புற. 111 : 1 – 4), ''பொருநர்க்காயினும் புலவர்க்காயினும் அருமறை நாவின் அந்தணர்க்காயினும் .... அடையாவாயிலவனருங் கடைகுறுகி'' (சிறு. 203 – 206) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மன்றம் – ஊர்ப்பொதுவிடம்; விசி – பிணிப்பு; பாடு – ஓசை; செத்து – கருதி; ஆலும் – ஒலிக்கும்; ஆடுமகள் – விறலி; பீடு – பெருமை.

129

குறி இறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கு அமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து,
வேங்கை முன்றில் குரவை அயரும்,
தீம் சுளைப் பலவின், மா மலைக் கிழவன் –
ஆஅய் அண்டிரன், அடு போர் அண்ணல் –
இரவலர்க்கு ஈத்த யானையின், கரவு இன்று,
வானம் மீன் பல பூப்பின், ஆனாது
ஒரு வழிக் கரு வழி இன்றிப்
பெரு வெள்ளென்னின் பிழையாது மன்னே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : ''ஆஅய் அண்டிரன் அடுபோர் அண்ணல், இரவலர்க்கு ஈத்த யானையின், கரவு இன்று, வானம் மீன் பல பூப்பின் ஆனாது'' என்று ஆயின் கொடைத்தன்மையை வியந்து பாடியதால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : ஆஅய் அண்டிரன் கொல்லும் போரைச் செய்யும் தலைவன்; இனிய சுளைகளையுடைய பலாமரங்கள் செறிந்த பொதியின் மலைக்கு உரிமை உடையவன்; அம்மலையிடத்தே, குறிய இறப்பையுடைய சிறுமனையின்கண் குறவர் மூங்கிற்குழாயிலே வைத்திருந்து முதிர்ந்த மதுவை உண்டு வேங்கை மரமுற்றத்தே குரவைக் கூத்தை ஆடுவர். அத்தகைய மகிழ்ச்சி பொருந்திய நாட்டுக்கு உரியவனாகிய ஆய், இரப்போர்க்குக் கொடுத்த யானைத்தொகை பலவாகும். மேகம் மறைத்தலின்றி வானும்பல விண்மீனையும் பூக்குமாயின் அவ்யானைத் தொகைக்கு நிகராகாது. ஓரிடத்தும் கரிய இடம் இல்லையாகப் பெருக வெள்ளொளி பரந்து வெண்மையைச் செய்யுமாயினும் அவ்விண் மீன் தொகையும் யானைக்கு நிகராகாது.

உரை விளக்கம் : ஆய் அண்டிரன் தன்பால் வரும் பரிசிலர் யாவர்க்கும் மிகுதியான யானைகளை வழங்குவது கண்டு வியந்து பாடியது, இப்பாடல். மனம் மகிழ்ந்திருக்கும் வேளையில் கூத்தாடுதல், பாட்டு இசைத்தல் இயல்பு. அம்மலை நாட்டில் வாழும் குறவர் மதுவுண்டு குரவையாடி மகிழ்ந்த நிலையை, ''குறவர் மாக்கள் ... தேறல் மகிழ்ந்து .... குரவை அயரும்'' என்று குறிப்பிட்டார். மதுவை மூங்கிற் குழாயில் இட்டு களிப்பு மிகும்பொருட்டு சிறிது நாட்கள் வைத்திருந்து உண்ணுதல் பண்டைய வழக்கம். அம்மரபை உணர்த்தும் பொருட்டு, ''வாங்கு அமைப் பழுனிய தேறல்'' என்றார். இரவலர்க்குக் கொடுத்த யானைத் தொகை விண்மீன் தொகையினும் மிகுதியாகும் என்று அவன் கொடை மேம்பாட்டைச் சிறப்பிக்கவேண்டி, ''இரவலர்க்கு ஈத்த யானையின் கரவு இன்று, வானம் மீன் பல பூப்பின் ஆனாது ... பெரு வெள்ளென்னின் பிழையாது மன்னே'' என்றார்.

Koviloor Digital Library

''தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்தி'' (பதி. 81 : 21), ''நெடுங்கண் ஆடமைப் பழுநிக் கடுந்திறல், பாப்புக் கடுப்பன்ன தோப்பி'' (அக. 348), ''அம்பணை விளைந்த தேக்கட் டேறல்'' (அக. 368), ''நீடமை விளைந்த தேக்கட் டேறல்'' (முரு. 195), ''பரதவர் வெப்பு உடைய மட்டு உண்டு தண் குரவைச் சீர் தூங்குந்து'' (புற. 24 : 4 – 6), ''மன்ற வேங்கை மணநாட் பூத்த மணியேர் அரும்பின் பொன்வீ தாஅய், வியலறை வரிக்கு முன்றிற் குறவர் மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்'' (அக. 232 : 6 – 10), ''வாங்கமைப் பழுனிய நறவுண்டு, வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே'' (நற். 276 : 9 – 10), ''நறவு நாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு, மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென, வான்தோய் மீமிசை அயருங் குரவை'' (மலை. 320 – 322), ''நின்னும் நின் மலையும் பாடி வருநர்க்கு, இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த அண்ணல் யானை'' (புற. 130 : 3 – 5), ''அண்டிரன் குன்றம் பாடின கொல்லோ, களிறு மிக உடைய இக்கவின் பெறு காடே'' (புற. 131 : 3 – 5), ''பரிசிலர்க் காணின் கன்றொடு கறை அடி யானை இரியல் போக்கும்'' (புற. 135 : 11 – 12), ''குன்றத்து அன்னது ஓர் பெருங்களிறு நல்கியோனே'' (புற. 140 : 7 – 8), ''புன் தலை மடப்பிடி பரிசிலாக'' (புற. 151 : 4), ''இரவலர் வரூஉம் அளவை அண்டிரன், புரவெதிர்ந்து தொகுத்த யானை போல'' (நற். 237), ''துடியடி அன்ன தூங்கு நடைக் குழவியொடு, பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென'' (பொரு. 125 – 126), போன்ற பாடற்பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : குறி இறைக்குரம்பை – குறிய இறப்பையுடைய சிறியமனை; அமை – மூங்கில்; தேறல் – மது; கள்; முன்றில் – முற்றம்; குரவை – கூத்து வகையுள் ஒன்று; கரவு இன்று – மறைத்தல் இன்றி.

Koviloor Digital Library

130

விளங்கு மணிக் கொடும் பூண் ஆஅய்! நின் நாட்டு
இளம் பிடி ஒருசூல் பத்து ஈனும்மோ?
நின்னும் நின் மலையும் பாடி வருநர்க்கு,
இன்முகம் கரவாது, உவந்து நீ அளித்த
அண்ணல் யானை எண்ணின், கொங்கர்க்
குட கடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப் பெயர்த்திட்ட வேலினும் பலவே!

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : அரசனது கொடைச் சிறப்பும், வென்றிச் சிறப்பும் கூறினமையால் இப்பாடல் இயன்மொழி ஆயிற்று. ''நின் நாட்டு இளம் பிடி ஒரு சூல் பத்து ஈனும்மோ? உவந்து நீ அளித்த அண்ணல் யானை எண்ணின், கொங்கர்த் தலைப்பெயர்த்திட்ட வேலினும் பலவே'' என்று அரசனின் கொடை இயல்பை கூறியதால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : விளங்கிய மணிகளான் இயன்ற, வளைந்த பூணாகிய ஆரம் பூண்ட ஆயே! நின் நாட்டில் இளையபிடி ஒரு சூலிற்குப் (கருப்பம்) பத்துக்கன்றுகள் ஈனுமோ; நின்னையும், நின் மலையையும் பாடி வரும் பரிசிலர்க்கு இன்முகத்தோடு, அன்புடன் காதலித்து, நீ கொடுத்த தலைமை பொருந்திய யானைகள் பலவாகும். அவற்றை எண்ணின், நீ கொங்கரை மேல்கடற் கண்ணே போரிட்டுத் துரத்தி ஓட்டியபோது, அவர் புறங்கொடுத்தலால் தம்மிடத்தினின்றும் பெயர்த்துப் போட்ட வேலினும் பலவாகும்.

உரை விளக்கம் : தன்பால் வரும் பரிசிலர்க்கு, ஆய் அண்டிரன் களிறுகளை மிகுதியாக வழங்குவதைக் கண்டு,

Koviloor Digital Library

பெருவியப்புற்ற புலவர் அவன் கொடைத்திறத்தையும், போர் வென்றியையும் புகழ்ந்துரைத்தது. யானை ஒரு சூலுக்கு ஒரு கன்றுதான் ஈனுமே தவிர பல கன்றுகளை ஈனாது; அவ்வாறிருக்க களிறுகள் பலவற்றைக் கொடையாக அளித்த தன்மையை, ''இளம் பிடி ஒரு சூல் பத்து ஈனும்மோ'' என்று போற்றுகின்றார். இரவலர்க்குப் பரிசில் அளிக்கும் போது, அவன் முகமும், மனமும் இருந்த காட்சியை, ''இன்முகம் கரவாது உவந்துநீ அளித்த'' என்றும், கொடுக்கப்பட்ட யானைகளின் இயல்பை, ''அண்ணல் யானை'' என்றும் குறிப்பிடுவர். யானைக் கொடையைக் கூறும் வாயிலாக, அண்டிரன் கொங்கரை வென்ற திறத்தையும் குறிக்கக் கருதலின், ''கொங்கர்க் குடகடல் ஓட்டிய ஞான்றைத் தலைப் பெயர்த்திட்ட வேலினும் பலவே'' என்றார்.

''விளங்கு மணிக் கொடும்பூண் விச்சிக்கோவே!'' (புற. 200 : 8), ''குன்றம் பாடினகொல்லே'' (புற. 131 : 3), ''நின்னும் நின் மலையும் பாட'' (புற. 143 : 12), வான்பொரு நெடுவரை வளனும் பாடி'' (சிறு. 127 – 128), இரவலர் வரூஉம் அளவை அண்டிரன், புரவு எதிர்ந்து தொகுத்த யானை'' (நற். 237) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : *பூண் – பூண்ஆரம்; சூல் – கருப்பம்; கரவாது – மறையாது; ஒளியாது; உவந்து – காதலித்து; குடகடல் – மேல்கடல்.*

131

மழைக் கணம் சேக்கும் மா மலைக் கிழவன்,
வழைப் பூங் கண்ணி வாய் வாள் அண்டிரன்,
குன்றம் பாடினகொல்லோ –
களிறு மிக உடைய இக்கவின் பெறு காடே?

Koviloor Digital Library

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : அரசனது கொடைச் சிறப்பும், வென்றிச் சிறப்பும் கூறினமையால் இப்பாடல் இயன்மொழி ஆயிற்று. ''அண்டிரன் குன்றம் பாடின கொல்லோ; களிறு மிக உடைய இக்கவின் பெறு காடே?'' என அரசனது கொடைச் சிறப்பைப் போற்றியதால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : முகிற் கூட்டம் (மழை மேகம்) சென்று தங்கும் உயர்ந்த மலைக்குத் தலைவன் ஆஅய் அண்டிரன்; சுரபுன்னைப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினையும், தப்பாத வாளினையும் உடையவன்; அண்டிரனது மலையை (எம்மையுமன்றிக்) களிறுகள் மிக உடைய, இந்த அழகையுடைய காடும் பாடினவோ.

உரை விளக்கம் : யானைக்குப் பிறப்பிடமாயிருக்கிற காட்டைக் காட்டிலும், அண்டிரனைப் பாடினோர் யானை மிகவும் உடையரென்று அவனது கொடைச் சிறப்பை வியந்துப் பாடியது. கவின் உடைய காடும் அண்டிரனைப் பாடிக் களிறுகளை மிகுதியாகப் பெற்றனவோ என்னும் கருத்தில், ''குன்றம் பாடின கொல்லோ, களிறு மிக உடைய இக்கவின் பெறு காடே'' என்று குறிப்பிட்டார். அண்டிரனைப் பாடிய பரிசிலர் அவன் நல்கும் உணவாலும், அணிகலன்களாலும், கவின் பெறுவதோடு களிறுகளையும் மிகப் பெற்றுச் செல்வது பற்றி, 'கவின்பெறு காடு' என்று சிறப்பித்தார். மேலும், பசுந்தழை போர்த்துப் பூவும் காயும் கனியும் தாங்கி நிற்பது விளங்க, ''கவின்பெறு காடு'' எனவும் சிறப்பிக்கப்பட்டது.

''ஆஅய் அண்டிரன் அடுபோர் அண்ணல், இரவலர்க்கு ஈத்த யானை'' (புற. 129 : 5 – 6), ''அண்ணல் யானை எண்ணின்'' (புற. 130 : 5), ''கன்றொடு கறையடி யானை இரியல் போக்கும்'' (புற. 135 : 11 – 12) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : மழைக்கணம் – முகிற்கூட்டம்; சேக்கும் – தங்கும்; வழை – சுரபுன்னை; கவின் – அழகு.

132

முன் உள்ளுவோனைப் பின் உள்ளினேனே!
ஆழ்க, என் உள்ளம்! போழ்க, என் நாவே!
பாழ் ஊர்க் கிணற்றின் தூர்க, என் செவியே! –
நரந்தை நறும் புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ் சுனை பருகி, அயல
தகரத் தண் நிழல் பிணையொடு வதியும்
வட திசையதுவே வான் தோய் இமயம்
தென் திசை ஆஅய் குடி இன்றாயின்,
பிறழ்வது மன்னோ, இம் மலர் தலை உலகே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : அரசனது கொடைச் சிறப்பும், வென்றிச் சிறப்பும் கூறினமையால் இப்பாடல் இயன்மொழி ஆயிற்று. "வட திசையதுவே வான் தோய் இமயம்; தென் திசை ஆஅய் குடி இன்றாயின் பிறழ்வது மன்னோ, இம் மலர் தலை உலகே", என அண்டிரனது குடிச் சிறப்பின் இயல்பை வியந்துப் போற்றியதால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : நரந்தையையும், நறிய புல்லையும் மேய்ந்த கவரிமான், குவளைப்பூவுடைய சுனைநீரைப் பருகி, அதன் பக்கத்தில் இருந்த தகரமரத்தின் குளிர்ந்த நிழலில் தனது பிணையுடன் (பெட்டை) தங்கும் வடதிசைக் கண்ணதாகிய வானைப் பொருந்தும் இமயமலையும், தென்திசைக் கண் ஆய் அண்டிரன் குடியும்

Koviloor Digital Library

இல்லையாயின், இந்த பரந்த இடத்தையுடைய உலகம் கீழ்மேலதாகிக் கெடும். அத்தகைய சிறப்புடைய நின்னை, யான் யாவரினும் முன்னே நினைக்கப்படுமவனைப் பின்பே நினைத்தேன்; அவ்வாறு நினைந்த குற்றத்தால் என் உள்ளம் அமிழ்ந்திப் போவதாக; அவனையன்றிப் பிறரைப் புகழ்ந்த என் நாவும் கருவியால் பிளக்கப்படுவதாக; அவன் புகழன்றிப் பிறர் புகழைக் கூறக்கேட்ட என் செவியும் பாழ்பட்ட ஊரின் கிணறு போலத் தூர்வதாக.

உரை விளக்கம் : 'முன் உள்ளுவோனைப் பின் உள்ளினேன்' என உள்ளம் ஆழ்தற்குக் காரணம் கூறினமையால், பிறரைப் புகழ்ந்த நா எனவும், பிறர் புகழ்கேட்ட செவி எனவும் ஏனையவற்றிற்கும் காரணம் வருவித்து உரைக்கப்பட்டது. பிறரைப் புகழ்ந்ததாலும், பிறர் புகழைக் கேட்டதாலும் "போழ்க என் நாவே", "தூர்க என் செவியே" எனக் கூறினார். வடதிசை தேவர் உலகோடு ஒத்தலால் இமயத்தால் தாங்க வேண்டுவதில்லை; ஆனால் தென்திசைக் கண் ஆய்குடி தாங்கவில்லையாயின் இவ்வுலகு பிறழும் என்று இமயத்தைக் காட்டிலும் ஆய் அண்டிரனின் குடிச் சிறப்பை, "தென் திசை ஆஅய் குடி இன்றாயின் பிறழ்வது மன்னோ, இம் மலர் தலை உலகே" என்று சிறப்பித்தார்.

"கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி, பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும், ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்" (பதி. 11 : 21 – 23) என வரும் பகுதி ஒப்புநோக்கத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : நரந்தை – ஒரு வகைப்புல்; கவரி – கவரிமான்; தகரம் – தகரமரம்; பிணை – பெட்டை (பெண்மான்); பிறழ்வது – கெடுதல்; மலர்தலை உலகு – பரந்த இடத்தையுடைய உலகம்.

Koviloor Digital Library

133

மெல் இயல் விறலி! நீ நல் இசை செவியின்
கேட்பின் அல்லது, காண்பு அறியலையே;
காண்டல் வேண்டினை ஆயின் - மாண்ட நின்
விரை வளர் கூந்தல் வரை வளி உளர,
கலவ மஞ்ஞையின் காண்வர இயலி,
மாரி அன்ன வண்மைத்
தேர் வேள் ஆயைக் காணிய சென்மே!

திணை : பாடாண்திணை; துறை : விறலியாற்றுப்படை.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : அரசனுடைய புகழைப் பாடும் விறலியை வழிப்படுத்துதல் விறலியாற்றுப்படை எனப்படும். 'கூத்தரும் பாணரும், பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதால் அரசர்கள், வள்ளல்கள் ஆகியோரிடத்தில் பொருள் பெற்றோர் பொருள் பெறாதார்க்கு வழிகாட்டி நெறிப்படுத்துவர் என்பதை அறியலாம். ''மெல்லியல் விறலி! .... தேர் வேள் ஆயைக் காணிய சென்மே'', என விறலியை ஆற்றுப்படுத்தியமையின் விறலியாற்றுப்படைத்துறை ஆயிற்று.

உரை : மெல்லிய இயல்பினையுடைய விறலி! நீ வேள் ஆயின் நல்லபுகழைச் செவியாற் கேட்டல் அன்றி, அவன் வடிவைக் காண்டல் அறியாய்; அவனைக் காண விரும்பினாயாயின், மாட்சிமைப்பட்ட நின் மணம் வளரும் கூந்தலில், மலையின் காற்று வந்தசைப்ப, பீலியையுடைய மயில்போலக் காட்சி உண்டாக நடந்து, மழை போன்ற கொடையையும் தேரினையும் உடைய வேள் ஆயைக் காணச் செல்வாயாக.

Koviloor Digital Library

உரை விளக்கம் : மலைக்காற்றால் உளரப்பட்ட கூந்தல், மயில்தோகை போல் விளங்குதலால், ''விரை வளர் கூந்தல் வரை வளி உளர கலவ மஞ்ஞையின் காண்வர இயலி'' என்று கூறினார். பயனோக்காது வேண்டுமிடத்து நீரைச் சொரியும் மாரிபோல, ஆஅய் அண்டிரனும் இரப்பார்க்கு ஈதல் தன் கடனெனக் கருதி ஒழுகினான் என்பதை, ''மாரி அன்ன வண்மை'' எனக் கூறினார். கொடைத் திறத்திற்கு மாரியை உவமையாகக் கூறுதல் மரபாகும். ஆய், மாரியன்ன வண்மையனாதலின், விறலி அம்மாரியைக் கண்ட மயில் போலவும், கூந்தல் பரத்தலுக்கு, தோகை விரித்தலும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

''உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு ஐதுவரல் அசைவளி ஆற்றக் கைபெயரா ஒலியல் வார்மயிர் ஊரினள் கொடிச்சி'' (அக. 102 : 3 – 5), ''மயில் கண்டன்ன மடநடை மகளிர்'' (முரு. 205), ''நன்மா மயிலின் மென்மெல இயலி'' (மது. 608), ''அணிகிளர் கலாவ மைதுவிரித்து இயலும், மணிபுரை எருத்தின் மஞ்ஞை போல நின், வீபெய் கூந்தல் வீசுவளி உளர, ஏகுதி மடந்தை'' (நற். 264 : 3 – 6), ''கொடிச்சி கூந்தல் போலத் தோகை அருஞ்சிறை விரிக்கும்'' (ஐங். 300), ''வானம் நாண வரையாது சென்றோர்க்கு ஆனாது ஈயும் கவிகை வண்மை'' (புற. 54 : 6 – 7), ''வானத்து அன்ன வண்மையும்'' (புற. 55 : 15), ''நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள'' (பரி. 4 : 27), ''வண்மை போல் வானம் பொழிந்த நீர்'' (பரி. 22 : 8), ''வரையா மரபின் மாரி போல'' (புற. 142 : 3), ''மாரி அன்ன வண்மையின் சொரிந்து'' (புற. 397 : 16), எனவரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : நல்இசை – நல்ல புகழ்; மாண்ட – மாட்சிமைப்பட்ட; விரை – மணம்; வரைவளி – மலை காற்று; கலவ மஞ்ஞை – தோகை விரித்த மயில்; மாரி – மழை; வண்மை – கொடை.

Koviloor Digital Library

134

'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்
அற விலை வணிகன் ஆஅய் அல்லன்;
பிறரும் சான்றோர் சென்ற நெறி என,
ஆங்குப் பட்டன்று, அவன் கைவண்மையே.

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

ஆயை, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : ஆய், இம்மை மறுமை என்னும் இரண்டு இடத்தும் பெறக் கருதிய புகழ், துறக்கம் ஆகிய பயனைக் கருதாது ஈதலில் சிறந்ததாலும், 'அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்' என அவன் கொடை மேம்பாட்டின் இயல்பைச் சிறப்பித்ததாலும் இப்பாடல் இயன்மொழித் துறையைச் சார்ந்ததாயிற்று.

உரை : இப்பிறப்பின்கண் செய்ததொன்று (அறச்செயல்), மறுபிறப்பிற்கு உதவும் என்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து, அதற்கு ஈடாக அறம் கொள்ளும் வணிகன் ஆய் அல்லன்; அவனது கொடை, சான்றோரும், பிறரும் சென்ற நெறி என்று உலகத்தார் கருத, நற்செய்கையின் பாற்பட்டதாகும்.

உரை விளக்கம் : மறுமைப்பயன் அறப்பயனாதலின், இம்மையில் நலம் செய்து மறுமையில் இன்பம் கருதுவோரை ''அறவிலை வணிகன்'' என்றார். உலகத்துச் செல்வர் பலரும் செல்வத்தைப் பரிசிலர்க்கு வழங்குவது இம்மையில் புகழும், மறுமையில் துறக்க இன்பமும் பெற வேண்டும் என்னும் கருத்தேயாகும். ஆய் அவ்வாறு எண்ணிலன்; அவன் கொடைச் செய்கை, சான்றோரும் பிறரும் சென்ற அறநெறியின் பாற்பட்டதாகும் என்பதை உணர்த்த, ''பிறரும் சான்றோர் சென்ற நெறியென ... அவன் கைவண்மையே'' என்றார்.

Koviloor Digital Library

"மறுமை நோக்கின்றோ அன்றே, பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே" (புற. 141 : 14 – 15), "ஏற்ற கை மாற்றாமை யென்னானும் தாம் வரையாது, ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்" (நாலடி. 98), "இம்மையாற் செய்ததை இம்மையே யாம் போலும், உம்மையே யாமென்பார் ஓரார்காண்" (திணைமாலை. 123), "வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரதுடைத்து" (குறள். 221), "வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிகன்" (சிறுபஞ். 34), "ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்" (மணி. 11 : 92) என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : இம்மை – இப்பிறப்பு; மறுமை – மறுபிறப்பு; அறவிலை வணிகன் – பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு ஈடாக அறம் கொள்ளும் வணிகன்; சான்றோர் – அமைந்தோர்; நெறி – வழி; கைவண்மை – கொடை.

135

கொடுவரி வழங்கும் கோடு உயர் நெடுவரை,
அரு விடர்ச் சிறு நெறி ஏறலின், வருந்தி,
தடவரல் கொண்ட தகை மெல் ஒதுக்கின்,
வளைக் கை விறலி என் பின்னள் ஆக,
பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
வரி நவில் பனுவல் புலம் பெயர்ந்து இசைப்ப,
படுமலை நின்ற பயம் கெழு சீறியாழ்
ஒல்கல் உள்ளமொடு ஒரு புடைத் தழீஇ,
புகழ்சால் சிறப்பின் நின் நல் இசை உள்ளி,
வந்தனென் எந்தை! யானே; என்றும்,
மன்று படு பரிசிலர்க் காணின் கன்றொடு
கறை அடி யானை இரியல் போக்கும்
மலை கெழு நாடன்! மா வேள் ஆஅய்! –

Koviloor Digital Library

களிறும் அன்றே; மாவும் அன்றே;
ஒளிறு படைப் புரவிய தேரும் அன்றே;
பாணர், பாடுநர், பரிசிலர், ஆங்கு அவர்,
தமது எனத் தொடுக்குவர் ஆயின், 'எமது' எனப்
பற்றல் தேற்றாப் பயங் கெழு தாயமொடு,
அன்ன ஆக, நின் ஊழி; நின்னைக்
காண்டல் வேண்டிய அளவை - வேண்டார்
உறு முரண் கடந்த ஆற்றல்
பொது மீக்கூற்றத்து நாடு கிழவோயே!

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் துறை.

ஆயை, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

துறை விளக்கம் : அரசன் முன்னே பரிசிலர் (இரவலர்) தாம் பெறக் கருதிய பொருள் இதுவெனச் சொல்லுதல் பரிசில் துறையாகும். ''மண்ணகங் காவல் மன்னர் முன்னர் எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை இத்துறைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ''நின் நல்லிசை உள்ளி வந்தனென் எந்தை! யானே ..... களிறும் அன்றே; மாவும் அன்றே; நின்னைக் காண்டல் வேண்டிய அளவை" எனத் தான் பெறக் கருதிய பரிசில் இதுவென உரைத்தலால் பரிசில் துறையாயிற்று.

உரை : புலி இயங்கும் சிகரம் உயர்ந்த நெடுமலையிலே, ஏறுதற்கரிய பிளப்பின் சிறுவழியில் ஏறிவருவதால் வருத்தமுற்று, உடல் வளைந்து, மெல்ல அடியிட்டு நடக்கின்ற நடையினையும், வளையணிந்த கையினையும் உடையவள் விறலி. அவள் என் பின்னே வரப், பொன்னைக் கம்பியாகச் செய்தாற்போன்ற முறுக்கடங்கிய நரம்பினையும், வரிப் பொருண்மையோடு பாடப்படும் இசைப்பாட்டு நிலந்தோறும் மாறி மாறி ஒலிக்கவும், படுமலைப் பாலை நிலைப்பெற்ற பயன்பொருந்திய சிறிய யாழை, தளர்ந்த

Koviloor Digital Library

நெஞ்சத்துடன் ஒரு மருங்கிலே அணைத்துக் கொண்டு புகழ்த்தற்கமைந்த நின் நல்ல புகழை நினைந்து, என்னுடைய இறைவா! யான் வந்தேன்; எந்நாளும் மன்றத்தின்கண் வந்த பரிசிலரைக் காணின், கன்றுடனே கறை பொருந்திய அடியுடைய யானையை அணிஅணியாகக் கொடுக்கும் மலைகெழு நாடனே! மாவேளாகிய ஆயே! யாம் வேண்டியது யானையும் அன்று; குதிரையும் அன்று; பொற்படையுடைய குதிரையில் பூட்டப்பட்ட தேரும் அன்று; நின் பொருளைத் தம் பொருள் என உரிமையால் பாணரும், புலவரும், கூத்தரும் முதலாயினோர் வளைத்துக் கொள்வாராயின், அதனை எம்முடையதென்று மீண்டும் கைக்கொள்ளாமல், பயன்பொருந்திய உரிமைச் சுற்றமுடன் கூடி வாழும் வள்ளன்மை பொருந்தியவன்; நின் வாழ்நாட்களும் அவ்வாறே நின் வள்ளன்மைபோலப் பெருகுவதாக; பகைவரை வென்ற வலிமையும், யாவரும் ஒப்பப் புகழும் நாட்டையும் உடையவனே! யான் வந்தது நின்னைக் காணும் பொருட்டேயாகும்.

உரை விளக்கம் : பாணர் மன்னனை நாடிப் பரிசில் பெறச் செல்லும்போது விறலியை உடன் அழைத்துச் செல்லுதல் வழக்கம். காடும், மலையும் கடந்து வரும்போது பற்பல துன்பங்கள் அவர்களுக்கு நேரும் என்பதால், "கொடுவரி வழங்கும் கோடு உயர் நெடு வரை, அருவிடர்ச் சிறுநெறி ஏறலின் வருந்தி, தடவரல் கொண்ட தகைமெல் ஒதுக்கின், வளைக் கை விறலி என் பின்னள் ஆக" என்றார். பாணர் யாழைக் கைக்கொண்டு நிலத்திற்கேற்ற பண்ணை வாசித்துச் செல்வர். ஐந்து திணைகளுக்கும் உரியனவாக ஐந்து யாழும் பண்களும் உளதாதலின், "வரிநவில் பனுவல் புலம் பெயர்ந்து இசைப்ப, படுமலை நின்ற பயம்கெழு சீறியாழ்" என்றார்.

படுமலைப் பாலை என்றது, பாலைப்பண் பன்னிரண்டனுள் ஒன்றாகும். அது கைக்கிளைக் குரலாகத் தோன்றுவது. பாணர், பாடுநர், பரிசிலர் ஆகிய அனைவர்க்கும் இவன் மிக்க உரிமையுடையவன் என்பதை, "பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கு அவர், தமது எனத் தொடுக்குவர் ஆயின் எமது எனப் பற்றல்

Koviloor Digital Library

தேற்றா" என்று குறிப்பிட்டார். பாணர் பரிசில் வேண்டி செல்லும் துறையில் அமைந்த பரிசில்துறை பாடல்களில் இப்பாடல் சிறந்து விளங்குகின்றது. தான் பெறக் கருதும் பரிசிலாகப் புலவர், வேள் ஆயைக் காணல் ஒன்றே போதும் என்பதை, "நின்னைக் காண்டல் வேண்டிய அளவை" என்றார். எனினும் அவன் பரிசில் கொடுக்காமல் அனுப்பமாட்டான் என்பது குறிப்பாகும்.

"அடி வருந்த நெடிது ஏறிய, கொடி மருங்குல் விறலியருமே" (புற. 139 : 3 – 4), "உயர்ந்தோங்கு பெருமலை ஊறின்று ஏறலின், மதந்தபு ஞமலி நாவின் அன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக், கணங்கொல் தோகையிற் கதுப்பிகுத் தசைஇ, ... சேயரி நாட்டத்து இலங்குவளை விறலியர்" (மலை. 41 – 46), "வயிரிய மாக்கள் ..... மன்ற நண்ணி" (பதி. 29), "மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்" (மலை. 492), "ஆஅய் அண்டிரன் .... இரவலர்க்கு ஈத்த யானையின்" (புற. 129 : 5 – 6), "இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த, அண்ணல் யானை எண்ணின்" (புற. 130 : 4 – 5), என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கொடுவரி – புலி; கோடு – சிகரம்; விடர் – மலையின் பிளப்பு; நெறி – வழி; தடவரல் – வளைவு; வரி – வரிப்பொருண்மை; பனுவல் – இசைப்பாட்டு; புலம்பெயர்ந்து – நிலந்தோறும் மாறுதல்; படுமலை – படுமலைப்பாலைப்பண்; மன்று – மன்றம், பொதியில்; மா – குதிரை; பற்றல் – கைக்கொள்ளுதல்; தாயம் – உரிமை; ஊழி – வாழ்நாட்கள்; முரண் – மாறுபாடு; மீக்கூற்றம் – புகழ்.

136

யாழ்ப் பத்தர்ப் புறம் கடுப்ப
இழை வலந்த பல் துன்னத்து

Koviloor Digital Library

இடைப் புரை பற்றி, பிணி விடாஅ
ஈர்க் குழாத்தோடு இறை கூர்ந்த
பேஎன் பகை என ஒன்று என்கோ?
உண்ணாமையின் ஊன் வாடி,
தெண் நீரின் கண் மல்கி,
கசிவுற்ற என் பல் கிளையொடு
பசி அலைக்கும் பகை ஒன்று என்கோ?
அன்ன தன்மையும் அறிந்தீயார்,
'நின்னது தா' என, நிலை தளர,
மரம் பிறங்கிய நளிச் சிலம்பில்,
குரங்கு அன்ன புன் குறுங் கூளியர்
பரந்து அலைக்கும் பகை ஒன்று என்கோ?
'ஆ அங்கு, எனைப் பகையும் அறியுநன் ஆய்'
எனக் கருதி பெயர் ஏத்தி,
வாய் ஆர நின் இசை நம்பி,
சுடர் சுட்ட சுரத்து ஏறி,
இவண் வந்த பெரு நசையேம்;
எமக்கு ஈவோர் பிறர்க்கு ஈவோர்;
பிறர்க்கு ஈவோர் தமக்கு ஈப' என,
அனைத்து உரைத்தனன் யான் ஆக,
நினக்கு ஒத்தது நீ நாடி,
நல்கினை விடுமதி, பரிசில்! அல்கலும்,
தண் புனல் வாயில் துறையூர் முன்துறை
நுண் பல மணலினும் ஏத்தி,
உண்குவம், பெரும! நீ நல்கிய வளனே.

திணை : *பாடாண்திணை;* துறை : *பரிசில் கடாநிலை.*

ஆயைத் துறையூர் ஓடைகிழார் பாடியது.

துறை விளக்கம் : *பரிசில் கடாநிலை என்பது ஒரு துறை; 'யாவரும் பரிசில் பெற்றார்; யான் பெற்றிலன்' எனத் தனது பரிசில்*

Koviloor Digital Library

பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை. ''நினக்கு ஒத்தது நீ நாடி, நல்கினை விடுமதி பரிசில்'' எனக் கேட்டலின் பரிசில் கடாநிலைத்துறை ஆயிற்று.

உரை : பெரும! யாழ்ப் பத்தரினது புறத்தை ஒப்ப இழை சூழ்ந்த பல தையலை உடைய ஆடை இடைக்கண்ணது; அந்த இடைக்கண் உள்ள புண்களைப் பற்றிப் பிணிப்பு விடாதே கிடக்கின்ற ஈர்த்திரளோடு தங்குதல் மிக்க பேன் ஆகிய (சீலைப்பேன்) பகையை ஒரு பகை என்பேனோ; உண்ணாமையின் உடம்பு வாடி, கண் நீரால் நிறைந்து, வியர்ப்புற்ற எனது பல சுற்றத்தோடு பசிநோய் வருத்தும் பகையை ஒரு பகை என்பேனோ; அத்தகைய துன்பத்தையுடைய என் இயல்பையும் அறியாராய், நின் கைப்பொருளைத் தாவென்று சொல்லி, எம் நிலை தளரும்படி, மரங்கள் செறிந்த மலையிடத்தே மறைந்து நின்று குரங்குபோலப் பறித்துக் கொள்ளும் ஆறலைகள்வர் பரந்து வந்து அலைக்கும் பகையை ஒரு பகை என்பேனோ; எல்லாப் பகையும் அறிபவன் வேள் ஆயே எனக் கருதி, வாயார நின் பெயரை வாழ்த்தி, நின்புகழை ஏத்தி, ஞாயிறு காயும் சுரத்தின் கண் ஏறி இவ்விடத்து வந்த பெரும் விருப்பத்தையுடையேம்; வறுமையுற்ற எங்களுக்கு ஒன்றை ஈவோர் (கொடுப்போர்) பயன் கருதாது பிறர்க்குக் கொடுப்பார். எம்மை அன்றிப் பிறர்க்குக் கொடுப்போர் பயன்கருதிக் கொடுத்தலால் தமக்கே ஈபவர்; அவ்வாறு யான் சொன்னேனாக, நினக்குப் பொருந்தியது நீ ஆராய்ந்து எமக்குப் பரிசில் தந்து விடுவாயாக; நீ தந்த செல்வத்தை நாள்தோறும் குளிர்ந்த நீரோடும் வாய்த்தலைகளையுடைய துறையூரின் துறையிடத்து, நுண்ணிய பல மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி உண்பேம்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : பாணர்களின் வறுமை நிலை (பல்வேறு பகைகள்) இப்பாடலில் விரிவாக எடுத்துரைத்துள்ளார். தன் அனுபவமாகவும், தன்னுணர்ச்சியாகவும் இப்பாடல் அமைந்துள்ளது. பல பகைகள் (துன்பங்கள்) இருந்தாலும், அப்பகையைப் போக்கக் கூடியவனும் அறிந்தவனும் வேள் ஆயே என்பதை, ''எனைப் பகையும் அறியுநன் ஆய்'' என்றார். உண்ணாமையால் உடல்வாடுதலும், சுரநெறியில் நடத்தலால் வியர்த்தலும் இயல்பாதலின், ''உண்ணாமையின் ஊன் வாடி கசிவுற்ற என் பல் கிளை'' என்றார். ஆறலைகள்வர் வழிச்செல்வோரின் பொருளைக் கவர்ந்து வாழ்பவர்; அவர்கள் மலைகளில் குரங்குபோல மறைந்திருந்து வழிப்பறிசெய்வர் என்பதை, ''குரங்கு அன்ன புன்குறுங் கூளியர் பரந்து அலைக்கும் பகை'' என்றார். புலவர் தன் ஊராகிய துறையூரை இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். புலவர்கள் மன்னனை வாழ்த்தும்போது, ஆற்று மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துதல் மரபாகும். அதனை அடியொற்றி, ''துறையூர் முன்துறை நுண் பல மணலினும் ஏத்தி'' எனக் குறிப்பிட்டார்.

''வேற்று இழை நுழைந்த வேர் நனைசிதாஅர் ஓம்பி உடுத்த உயவற் பாண'' (புற. 69 : 3 – 4), ''சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண'' (புற. 138 : 5), ''வரிசை அறிதலின், தன்னும் தூக்கி, இருங் கடறு வளைஇய குன்றத்து அன்னது ஓர் பெருங்களிறு நல்கியோனே'' (புற. 140 : 6 – 8), ''செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக், கடுவெளி தொகுப்ப ஈண்டிய, வடுவாழ் எக்கர் மணலினும் பலவே'' (புற. 55 : 18 – 21), ''முந்நீர் விழவின் நெடியோன், நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே'' (புற. 24 : 22 – 23), ''யாண்டும் நாளும் பெருகி, ஈண்டு திரைப் பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும் ... நீடு வாழிய! நெடுந்தகை'' (புற. 198 : 18 – 19), ''மண்ணாள் வேந்தே நின் வாணாட்கள், தண் ஆன் பொருநை மணலினும் சிறக்க'' (சிலப். 28 : 125 – 126), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : துன்னல் - தையல்; இடை - இடுப்புப் பகுதி; புரை - புண்; பிணி - பிணிப்பு; ஈர்க்குழாம் - ஈரினது திரள் (பேனின் முட்டை); இறை - தங்குதல்; ஊன் - உடல்; கிளை - சுற்றம்; சிலம்பு - மலை; கூளியர் - ஆறலைக்கள்வர்; இசை - புகழ்; நசை - விருப்பம்; புனல் - நீர்; வளன் - செல்வம்.

137

இரங்கு முரசின், இனம் சால் யானை,
முந்நீர் ஏணி விறல் கெழு மூவரை
இன்னும் ஓர் யான் அவா அறியேனே;
நீயே, முன் யான் அறியுமோனே - துவன்றிய
கயத்து இட்ட வித்து வறத்தின் சாவாது,
கழைக் கரும்பின் ஒலிக்குந்து,
கொண்டல் கொண்ட நீர் கோடை காயினும்,
கண் அன்ன மலர் பூக்குந்து,
கருங் கால் வேங்கை மலரின், நாளும்
பொன் அன்ன வீ சுமந்து,
மணி அன்ன நீர் கடற் படரும்;
செவ் வரைப் படப்பை நாஞ்சில் பொருந!
சிறு வெள் அருவிப் பெருங் கல் நாடனை!
நீ வாழியர்! நின் தந்தை
தாய் வாழியர், நிற் பயந்திசினோரே!

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி; பரிசில் துறையும் ஆம்.

நாஞ்சில் வள்ளுவனை ஒரு சிறைப் பெரியனார் பாடியது.

துறை விளக்கம் : ''நீயே முன் யான் அறியுமோனே - துவன்றிய கயத்திட்ட வித்து வறத்தின் சாவாது, கழைக் கரும்பின்

Koviloor Digital Library

ஒலிக்குந்து'' என அரசனது இயல்பைக் கூறுதலின் இயன்மொழித்துறை ஆயிற்று. ''நீ வாழியர்! நின் தந்தை தாய் வாழியர்'' என்று வாழ்த்துதல், பரிசில் பெறும் குறிப்பாதலின் பரிசில் துறையும் ஆயிற்று.

உரை : செவ்விய மலைப்பக்கத்தையுடைய நாஞ்சில் என்னும் மலையையுடைய பொருந! கடலை எல்லையாக உடைய நிலத்தின்கண், ஒலிக்கும் முரசினையும் இனம் அமைந்த யானையையும் உடைய வென்றி பொருந்திய மூவேந்தரை இன்னமும் யான் ஒருவனே பாடும் விருப்பத்தை அறியாதவன்; யான் முன்னர்த் தொடங்கி அறிந்தவன் நீ ஒருவனே! நீர் நிறைந்த பள்ளத்தில் விதைத்த வித்து (விதை), நீரின்மையால் சாவாது, கரும்புபோலத் தழைக்கும்; மழையால் முகந்து சொரியப்பட்ட நீர் வற்றிக் கோடையாயினும், மகளிர் கண் போன்ற குவளை முதலிய மலர்கள் பூக்கும்; கரிய தாள் பொருந்திய வேங்கை மலரின் பொன்போன்ற பூவைச் சுமந்து பளிங்கு மணி போன்ற நீர் நாள்தோறும் கடலில் சென்று கலக்கும்; அத்தகைய வளம் பொருந்திய சிறுவெள் அருவியுடைய மலைநாடனே! நீ வாழ்வாயாக; நின்னைப் பெற்றோராகிய நின் தந்தையும் தாயும் வாழ்க.

உரை விளக்கம் : புலவர் அனைவர்க்கும் தமிழ் மூவேந்தரைப் பாடுதற்கு இயல்பாகவே விருப்பம் உண்டாகும்; யான் ஒருவனே அவ்வாறு விரும்பாதவன் என்பதை ''இன்னும் ஓர் யான் அவா அறியேனே'' என்றார். அவன் நாட்டின் வளத்தைக் கூறும்பொழுது, விதைத்த வித்து நீரின்றிச் சாவாமல் கரும்புபோல் தழைக்கும்; கோடையாயினும் குவளை பூக்கும்; வேங்கை மலர் நீரில் கலந்து சென்று கடலில் கலக்கும்'' என்றதால் வறுமை அறியாத நாடு என்பதும், அவன் செங்கோல் ஆட்சித் திறத்தால் நாடு செழிப்பாக விளங்கியது என்பதும் உணர்த்துகின்றார். இவனை மகனாகப் பெறுவதற்கு இவன் தந்தை தாய் செய்த தவத்தைப் பாராட்டி ''நின் தந்தை தாய் வாழியர், நிற் பயந்திசினோரே!'' என்று கூறினார்.

Koviloor Digital Library

"நளியிரு முந்நீர் ஏணியாக" (புற. 35), "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்" (குறள். 70), பளிங்கு வகுத்தன்ன தீநீர்" (புற. 150), "முன் உள்ளுவோனைப் பின் உள்ளினேனே" (புற. 132 : 1) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : இரங்கு - ஒலிக்கும்; முந்நீர் - கடல்; ஏணி - எல்லை; விறல் - வென்றி; அவா - விருப்பம்; கயம் - நீர் நிறைந்த பள்ளம்; வித்து - விதை; வீ - மலர்.

138

ஆனினம் கலித்த அதர் பல கடந்து,
மானினம் கலித்த மலை பின் ஒழிய,
மீனினம் கலித்த துறை பல நீந்தி,
உள்ளி வந்த, வள் உயிர்ச் சீறியாழ்,
சிதாஅர் உடுக்கை, முதாஅரிப் பாண!
நீயே, பேர் எண்ணலையே; நின் இறை,
'மாறி வா' என மொழியலன்மாதோ;
ஒலி இருங் கதுப்பின் ஆயிழை கணவன்
கிளி மரீஇய வியன் புனத்து
மரன் அணி பெருங் குரல் அனையன் ஆதலின்,
நின்னை வருதல் அறிந்தனர் யாரே?

திணை : பாடாண்திணை; **துறை :** பாணாற்றுப்படை.

நாஞ்சில் வள்ளுவனை மருதன் இளநாகனார் பாடியது.

துறை விளக்கம் : பாணாற்றுப்படையாவது, மலைவழியில் பாணனை அரசர், வள்ளல் ஆகியோரிடத்து பரிசில் பெற்றுவர வழிப்படுத்துதல். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்,

Koviloor Digital Library

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்'' என்று தொல்காப்பியமும், ''சேணோங்கிய வரையதரிற் பாணனை ஆற்றுப்படுத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலையும் பாணாற்றுப்படைக்குப் பொருள் கூறுகின்றன. ''முதாஅரிப் பாண! நின் இறை 'மாறிவா' என மொழியலன் மாதோ'' என்று கூறி ஆற்றுப்படுத்தலின் பாணாற்றுப்படைத் துறையாயிற்று.

உரை : பசுவின் நிரை மிக்க வழிபலவும் கடந்து வந்து, மான் கூட்டம் மிக்க மலை பின்னே கழிய, மீனினம் தழைத்த துறை பலவற்றையும் நீந்தி, நாஞ்சில் வள்ளுவனை நினைத்து வந்த, வள்ளிய ஓசையையுடைய சிறிய யாழையும், கந்தை உடையையும் உடைய மூத்த பாணனே! நீதான் அவன்பால் பரிசு பெறக் கருதிப் போகின்றாயாதலின், பெரிய எண்ணத்தை உடையை; நின் தலைவன் இப்பொழுது போய், பின் ஒருநாள் பரிசிலுக்கு வாவென்று சொல்லாதவன்; தழைத்த கருங்கூந்தலையுடைய ஆயிழைக்குத் (மனைவி) தலைவன்; அகன்ற புனத்தில் (காடு) வாழும் கிளி, மரப்பொந்திலே சேர்த்து வைத்த பெரிய கதிரை ஒப்பவன்; ஆதலின் நீ அவன்பால் பரிசில் பெற்று வரும்போது, நின்னைப் பழைய பாணன் என்று அறிபவர் யார்?

உரை விளக்கம் : வறுமை நிலையில் உள்ள மூத்த பாணனை, நாஞ்சில் வள்ளுவனிடம் பரிசில் பெற்று வர வழிப்படுத்தும் தன்மையில் இப்பாடல் அமைந்துள்ளது. பாணன் மலை, காடு, நீர்நிலை எனப் பலவற்றையும் கடந்து வரும் தன்மையால், அவ்விடங்களில் வாழும் உயிரினங்களான, ''ஆனினம், மானினம், மீனினம்'' ஆகியவற்றைக் குறிப்பிட்டார். பரிசில் தருவான் என நினைத்து வந்தமையை, ''உள்ளி வந்த'' எனவும் ''பேர் எண்ணலையே'' எனவும், நினக்கு அவன் பரிசில் தப்பாமல் தருவான் என்பதால், ''நின் இறை'' எனவும் கூறினார். பாணனது வறுமையுடைய முதுமைத் தோற்றத்தை, ''சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண'' எனவும், பரிசில் பெற்றவழி, இப்பாணனது

Koviloor Digital Library

பண்டைநிலை செல்வத்தால் மறைந்துபோம் என்பது தோன்ற, "நின்னை வருதல் அறிந்தனர் யாரே" எனவும் கூறினார்.

"அரையது வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்" (புற. 69 : 2 – 3), "என் அரை நீல் நிறச் சிதாஅர் களைந்து" (புற. 385 : 5 – 6), "தொன்று படு சிதாஅர் துவர நீக்கி" (புற. 393 : 15), "என் அரைத் துரும்பு படு சிதாஅர் நீக்கி" (புற. 398 : 19), "தொன்றுபடு சிதாஅர் மருங்கு நீக்கி" (புற. 400 : 10), "ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினும்" (புற. 101 : 1 – 2), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஆனினம் – பசுக்கூட்டம், பசுவின்நிரை; அதர் – வழி; மானினம் – மான் திரள், மான்கூட்டம்; மீனினம் – மீன்கூட்டம்; உள்ளி – கருதி, நினைத்து; சிதாஅர் – கந்தை; உடுக்கை – உடை; முதாரி – முதுமை; இறை – தலைவன்; கதுப்பு – கூந்தல்; புனம் – காடு; மரன்அணி – மரப்பொதும்பு, மரப்பொந்து.

139

சுவல் அழுந்தப் பல காய
சில் ஓதிப் பல் இளைஞருமே,
அடி வருந்த நெடிது ஏறிய
கொடி மருங்குல் விறலியருமே,
வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன்; மெய் கூறுவல்;
ஓடாப் பூட்கை உரவோர் மருக!
உயர் சிமைய உழாஅ நாஞ்சில் பொருந!
மாயா உள்ளமொடு பரிசில் துன்னி,
கனி பதம் பார்க்கும் காலை அன்றே;
ஈதல் ஆனான், வேந்தே; வேந்தற்குச்

Koviloor Digital Library

சாதல் அஞ்சாய், நீயே; ஆயிடை,
இரு நிலம் மிளிர்ந்திசினாஅங்கு, ஒரு நாள்,
அருஞ் சமம் வருகுவது ஆயின்,
வருந்தலும் உண்டு, என் பைதல் அம் கடும்பே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

நாஞ்சில் வள்ளுவனை மருதன் இளநாகனார் பாடியது.

துறை விளக்கம் : பரிசில் கடாநிலை என்பது ஒரு துறை; 'யாவரும் பரிசில் பெற்றார்; யான் பெற்றிலன்' எனத் தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை. ''பரிசில் துன்னி, கனி பதம் பார்க்கும் காலை அன்றே ..... ஒருநாள் அருஞ்சமம் வருகுவது ஆயின் வருந்தலும் உண்டு, என் பைதல் அம் கடும்பே'' என்று நாஞ்சில் வள்ளுவனின் சிறப்பை வியந்து கூறிப் பரிசில்வேட்டலின் பரிசில் கடாநிலைத்துறை ஆயிற்று.

உரை : போரில் புறங்கொடாத மேற்கோளையுடைய வலியோர் மரபினனே! உயர்ந்த உச்சியையும், உழவரால் உழப்படாத நாஞ்சில் என்னும் பெயரையும் உடைய மலைக்கு வேந்தனே! தோள் வடுப்படப் பல முட்டுக்களையும் சுமந்த, சிலவாய மயிரையுடைய இளைஞர்களோ பலர்; அடி வருந்தும்படி நெடும்பொழுது ஏறியதால் களைத்த கொடிபோலும் இடையினை உடையவர் விறலியர்; இவர்கள் உயிர் வாழ்தலை விரும்பிப் பொய் சொல்லேன்; உண்மையே சொல்லுவேன்; மறவாத நினைவுடனே பரிசில் பெறப் பொருந்தி நின்று, நின் மனம் நெகிழும் செவ்வி (தருணம்) பார்க்கும் காலமன்று, யான் வறுமையுற்று நிற்கின்ற நிலைமை; நின் அரசன் (சேரன்) நினக்கு வேண்டியவற்றை அளித்தனன்; அவனுக்காகப் போரில் நீ சாதலுக்கும் அஞ்சாய்;

Koviloor Digital Library

அவ்விடத்து பெரிய நிலம் பிறழ்ந்தாற்போல ஒருநாள் பொறுத்தற்கு அரிய போர் வருமாயின், போர் செய்யப் புறப்பட்டுவிடுவாய்; அதனால், பசித்துன்பத்தையுடைய என் சுற்றம் வருந்தநேரிடும்.

உரை விளக்கம் : போர் வருமுன்னரே பரிசில் தந்துவிடுவாயாக என்னும் கருத்துத் தோன்ற புலவர் பாடியது. கொடிய வறுமை வந்துற்றபோதும் சான்றாமை தவறாத பாணர்களின் வாழ்க்கையை, ''பல இளையோரும் விறலியரும் வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்'' எனக் காட்டுகின்றார். நாஞ்சில் உழுகின்ற கலப்பைக்கும் பெயராதலின், நாஞ்சில் மலையை, ''உயர்சிமைய உழாஅ நாஞ்சில்'' என்றார். பரிசில்தர மன்னன் அருளால் கனிந்து நெகிழும் காலமாதலின், ''கனிபதம் பார்க்கும் காலை'' என்றார். ''ஈதலானான் வேந்தே வேந்தற்குச் சாதல் அஞ்சாய்'' என்றதால், நாஞ்சில் வள்ளுவன் குறுநிலமன்னன் என்பதும், இவனுக்குத் தலைமை வேந்தன் சேரன் என்பதும், அவன் பொருட்டுப் போரில் ஈடுபட்டுத் துணை செய்வான் என்பதும் அறியப்படும். நீ போருக்குப் புறப்பட்டுவிட்டால் என் சுற்றம் வருந்த நேரிடும்; ஆதலால் போர் வருமுன்னர் பரிசில் தந்து என் சுற்றத்தைக் காப்பாயாக என்பதை, ''வருந்தலும் உண்டு என் பைதல் அம் கடும்பே'' என்றார்.

''கொடுவரி வழங்கும் கோடு உயர் நெடுவரை, அருவிடர்ச் சிறுநெறி ஏறலின் வருந்தி, தடவரல் கொண்ட தகை மெல் ஓதுக்கின் வளைக்கை விறலி என் பின்னள் ஆக'' (புற. 135 : 1 – 4), ''மடமா னோக்கின் வாணுதல் விறலியர், நடை மெலிந்து அசைஇய நன்மென் சீறடி, கல்லா இளைஞர் மெல்லத் தைவர'' (சிறு. 31 – 33), ''ஓடாப் பூட்கை உரவோன் மருக'' (புற. 126 : 4), ''பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி, செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று எம் சிறு செந் நாவே'' (புற. 148 : 5 – 6), ''தடவு நிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்'' (புற. 140 : 1), ''தீம் சுளைப் பலவின் நாஞ்சில் பொருநன்'' (புற. 380 : 9) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சுவல் – தோள்; காய – சுமந்த; ஓதி – கூந்தல்; மயிர்; மருங்குல் – இடை; கனிபதம் – மனம் நெகிழும் செவ்வி; இருநிலம் – பெரிய நிலம், அகன்ற நிலம்; சமம் – போர்; பைதல் – துன்பம்; கடும்பு – சுற்றம்.

140

தடவு நிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன், மன்ற; செந் நாப் புலவீர்!
வளைக் கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறையாக யாம் சில
அரிசி வேண்டினேமாக, தான் பிற
வரிசை அறிதலின், தன்னும் தூக்கி,
இருங் கடறு வளைஇய குன்றத்து அன்னது ஓர்
பெருங் களிறு நல்கியோனே; அன்னது ஓர்
தேற்றா ஈகையும் உளதுகொல்?
போற்றார் அம்ம, பெரியோர் தம் கடனே?

திணை : பாடாண்திணை; துறை : பரிசில்விடை.

நாஞ்சில் வள்ளுவனை ஔவையார் பாடியது.

துறை விளக்கம் : பரிசில் பெறவந்தவன் அதனைப் பெற்றாயினும், பெறாமல் ஆயினும் பரிசில் அளிப்பவனை நோக்கிக் கூறும் விடை. அரசன் தன் உள்ளம் மகிழும்படி தனது வெற்றியால் உண்டாய புகழைக் கூறிய பரிசிலர்க்கு பரிசிற்பொருளை வழங்கி, அவர் இன்புறும்படி விடை கொடுத்து அனுப்புதல். "வேந்தன்உள் மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு, ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று" என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும். "அரிசி வேண்டினேமாக ..... குன்றத்து அன்னது ஓர் பெருங் களிறு நல்கியோனே" என்று பரிசில் பெற்ற புலவர் மன்னனது ஈகைத் திறனை வியந்து பாடுதலால் பரிசில் விடையாயிற்று.

Koviloor Digital Library

உரை : செந்நாப் புலவீர்! பலாமரங்கள் மிகுந்த நாஞ்சில் மலைக்கு வேந்தன் ஆகிய நாஞ்சில் வள்ளுவன் அறிவு மெல்லியன் (அறியாமை உடையன்) போலும்; வளையணிந்த கையராகிய விறலியர், மனைப் பக்கத்தில் பறித்துச் சமைத்த இலையின் மேல் தூவும்பொருட்டு யாம் சில அரிசி (துவரை) வேண்டினேம்; அவன் பரிசிலர்க்கு உதவும் வரிசை அறிந்தவன்; ஆதலால் எம் வறுமையைப் பார்த்தலே அன்றித் தனது மேம்பாட்டையும் சீர்தூக்கி சுரம் சூழ்ந்த மலை போன்றதொரு யானையை அளித்தான்; இவ்வாறு தெளியாது கொடுக்கும் கொடையும் உலகில் உளதோ? பெரியோர் தாம் செய்யும் கடனை முறையறிந்து செய்யாரோ.

உரை விளக்கம் : ஔவையார், அரசனைக் குறை கூறுவதுபோல அவனது கொடை தன்மையைப் புகழ்ந்துப் பாடியது. மறந்தும் பொய் கூறாத நாவினராகலின், புலவரைச் "செந்நாப் புலவீர்" என்றார். அரசன் புலவர்க்கு அளிக்கும் வரிசையும் அறிந்தவன்; தன் தகுதிப்பாட்டையும் உணர்ந்தவன். ஆதலின் "தான் பிற வரிசை அறிதலின் தன்னும் தூக்கி" என்றார். அரிசி வேண்ட பெருங்களிறு நல்கினான் என்பதால், "தேற்றா ஈகை" எனவும், தேற்றா ஈகை பெரியோர்பால் உண்டு என்பதால், "போற்றார் அம்ம பெரியோர் தம் கடன்" எனவும் கூறினார்.

"உயர் சிமைய உழாஅ நாஞ்சில் பொருந" (புற. 139 : 8), "தீஞ்சுளைப் பலவின் நாஞ்சில் பொருநன்" (புற. 380 : 9), "எமக்கு ஈவோர் பிறர்க்கு ஈவோர், பிறர்க்கு ஈவோர் தமக்கு ஈப என, அனைத்து உரைத்தனன் யான் ஆக, நினக்கு ஒத்தது நீ நாடி, நல்கினை விடுமதி பரிசில்" (புற. 136 : 20 – 24), "வெஞ்சின வேழம் நல்கினன் அஞ்சி யான் அது பெயர்த்தனெனாக, தான் அது, சிறிது என உணர்ந்தமை நாணி பிறிதும் ஓர் பெருங்களிறு நல்கியோனே" (புற. 394 : 12 – 15), "பலரும் வருவர் பரிசில் மாக்கள், பரிசை அறிதலோ அரிதே" (புற. 121 : 2 – 3), என வரும் பாடற்பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : தடவு - பெருமை; மடவன் - அறிவில்லாதவன்; படப்பை - மனைப்பக்கம்; அடகு - இலை; கண்ணுறை - மேலீடு; கடறு - சுரம்; குன்றம் - மலை; தேற்றா - தெளியா.

141

பாணன் சூடிய பசும் பொற் தாமரை
மாண் இழை விறலி மாலையொடு விளங்க,
கடும் பரி நெடுந் தேர் பூட்டு விட்டு அசைஇ,
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்!
யாரீரோ? என, வினவல் ஆனா,
காரென் ஒக்கல், கடும் பசி, இரவல!
வென் வேல் அண்ணற் காணா ஊங்கே,
நின்னினும் புல்லியேம் மன்னே; இனியே,
இன்னேம் ஆயினேம் மன்னே; என்றும்
உடாஅ, போரா ஆகுதல் அறிந்தும்,
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ,
கடாஅ யானைக் கலி மான் பேகன்,
'எத் துணை ஆயினும் ஈத்தல் நன்று' என,
மறுமை நோக்கின்றோ அன்றே,
பிறர், வறுமை நோக்கின்று, அவன் கை வண்மையே.

திணை : பாடாண்திணை; துறை : பாணாற்றுப்படை; புலவராற்றுப்படையும் ஆம்.

வையாவிக்கோப்பெரும் பேகனைப் பரணர் பாடியது.

துறை விளக்கம் : "எம் கோ பேகன் ... அவன் கைவண்மை மறுமை நோக்கிற்று அன்று; பிறர் வறுமை நோக்கிற்று" எனக் கூறிப் பாணனை ஆற்றுப்படுத்தியதால் பாணாற்றுப் படையாயிற்று. புலவரை ஆற்றுப்படுத்தியதால் புலவர் ஆற்றுப்படையும் ஆயிற்று.

Koviloor Digital Library

உரை : பாணன் சூடிய பொற்றாமரைப்பூ, மாட்சிமைப்பட்ட அணியுடைய விறலி அணிந்த பொன்னரி மாலையுடன் விளங்க, விரைந்து செல்லும் குதிரை பூட்டிய தேரைக் கட்டு அவிழ்த்து விட்டு, ஊரின்கண் இருந்ததைப் போலச் சுரத்திடை இளைப்பாறி இருந்தீர்! நீர் யாவீர் பாணரோ' என எம்மைக் கேட்ட வறுமையுடைய சுற்றத்தையும், மிக்க பசியையும் உடைய இரவலனே! வென்றிவேலுடைய தலைவனைக் (பேகன்) காண்பதற்குமுன் யாம் நின்னினும் வறுமை உடையேம்; இப்பொழுது அவ்வறுமை நீங்கி வளமாயினேம்; மதமிக்க யானையும், மனம் செருக்கிய குதிரையும் உடையவன் பேகன்; எந்நாளும் போர்த்துத் திரியாதென அறிந்தும் மயிலுக்குப் போர்வை அளித்த அருளாளன் எம் தலைவன். அவன் அளவில்லாமல் கொடுத்தல் மறுமைப்பயன் நோக்கியது அன்று; அவனது கைவண்மை (வள்ளல் தன்மை) பிறரது வறுமைத் துன்பத்தைப் போக்குவதை மட்டும் நோக்கியது.

உரை விளக்கம் : பேகனிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன், வழியில் எதிர்ப்பட்ட மற்றொரு பாணனிடம் பேகனின் கொடைச் சிறப்பைக் கூறி, அவனிடம் பரிசில் பெற்றுவர வழிப்படுத்திப் பாடியது. பேகனின் புகழைப் பாராட்டுகின்றவன், தம்மையும் பாணனாகக் காட்டிக்கொள்வதோடு, பாணன் சூடிய தாமரைப் பூவும், விறலி அணிந்த பொன்னரிமாலையும் விளக்கமுற இருப்பதை எடுத்துக் காட்டினார். சுரத்திடத்தே இருந்தாராயினும் வேண்டுவன நிரம்பப் பெற்று சொந்த ஊரில் இனிதிருப்பது போல் இருந்த நிலையை, "ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்" என்று கூறினார். வறுமை, பசியால் உடல் சுருங்கி, முகம் வாடி இருத்தலை, "காரென் ஒக்கல் கடும்பசி இரவல" என்றார். மயிலுக்குப் படாஅம் (துகில்) நல்கிய பேகனின் கொடை நலம் விளங்க, "உடாஅ போரா ஆகுதல் அறிந்தும் படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ" என்றும் "ஈத்தல் நன்றென மறுமை நோக்காது வறுமை நோக்கின்று அவன் கைவண்மை" என்றும் சிறப்பிப்பர்.

Koviloor Digital Library

''மறம் பாடிய பாடினியும்மே ..... சீர் உடைய இழை பெற்றிசினே, ... கொளை வல் பாண் மகனும்மே .... ஒள் அழல் புரிந்த தாமரை வெள்ளி நாரால் பூப் பெற்றிசினே'' (புற. 11 : 11 – 17), ''மடத் தகை மாமயில் பணிக்கும் என்று அருளி, படாஅம் ஈத்த கெடாஅ நல் இசை, கடாஅ யானைக் கலிமான் பேக!'' (புற. 145 : 1 – 3), ''கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் பேகனும்'' (சிறு. 85 – 87), ''இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்'' (புற. 134 : 1), ''வறியார்க் கொன்று ஈவதே ஈகை'' (குறள். 221), ''நல்லாறெனினும் கொளல்தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'' (குறள். 222), ''அற்றார் அழிபசி தீர்த்தல்'', ''ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்'' ''ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்'' (குறள். 226, 225, 228), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : பசும்பொன் தாமரை – ஓட்டற்ற பொன்னால் செய்யப்பட்ட தாமரைப்பூ; இழை – அணி; மாலை – பொன்னரி மாலை; பரி – குதிரை; பூட்டு – பிணிப்பு; அசைஇ – இளைப்பாறி; ஒக்கல் – சுற்றம்; புல்லியேம் – வறியேம்; படாஅம் – போர்வை, துணி; துகில்; மஞ்ஞை – மயில்; கலி – செருக்கு; மான் – குதிரை; ஈத்தல் – கொடுத்தல்; கைவண்மை – கொடை.

142

அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,
உறும் இடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரிபோல,
கடாஅ யானைக் கழற் காற் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது,
படைமடம் படான், பிறர் படை மயக்குறினே.

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : ''கொடைமடம் படுதல் அல்லது, படைமடம் படான்'' என அரசனது இயல்பு மிகுதி தோன்றக் கூறுதலால் இயன்மொழித்துறை ஆயிற்று.

உரை : எவ்விடத்தும் வரையாத மரபினையுடைய மழை, (குறிப்பிட்ட இடத்தை வரையறை செய்யாமல்) வற்றிய குளத்திலும் பெய்தது; அகன்ற விளைநிலத்திலும் பொழிந்தது; இவ்வாறு குளத்தும் விளை நிலத்தும் பெய்யாது களர் நிலத்திலும் பெய்தது; அம்மழை போல மதமிக்க யானையும், கழல் அணிந்த காலையும் உடைய பேகன், பிறர்க்குக் கொடை அளிக்கும் போது அறியாமை உடையவன்; அதுவல்லது பிறர் படை வந்து போர் செய்யின், அப்படையிடத்து தான் அறியாமை படான்.

உரை விளக்கம் : பேகனின் கொடை நலத்தை வியந்து பாடியது. வேண்டும் இடம், வேண்டா இடம் என்று வரையறை செய்யாது எல்லா இடங்களிலும் மழை பொழியும் என்பதை, ''அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும், உவர்நிலம் ஊட்டியும் வரையா மரபின் மாரி'' என்றார். அம்மாரி போலப் பேகன் தன்னிடத்துப் பரிசில் பெற வருபவரை வேண்டியவர், வேண்டாதவர், வலியோர், மெலியோர், புதியோர், பழையோர் எனக் கருதாது யாவர் மாட்டும் வரையாது வழங்குபவனாதலின், ''கொடைமடம் படுதல்'' என்றார். 'படைமடம்' என்றது வீரர் அல்லாதார், புறமுதுகிட்டார், புண்பட்டார், மூத்தோர், இளையோர் மேல் போர் தொடுக்காது, எதிர் நின்று பொரும் வீரரிடத்துப் போர் செய்யும் தன்மை உடையவன் என்பதை குறித்தற்காம்.

''மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே'' (புற. 107 : 4), ''மாரி தான் சிலரை வரைந்து பெய்யுமோ'' (கபிலரகவல்), ''கடாஅ யானை கலிமான் பேக!'' (புற. 145 : 3), ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை'' (குறள். 12), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : அறுகுளம் - வற்றிய குளம்; உவர் நிலம் - களர் நிலம்; மடம் படுதல் - அறியாமை உடைமை; மடம்படான் - அறியாமைப்படான்.

143

'மலை வான் கொள்க!' என, உயர் பலி தூஉய்,
'மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க!' எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்,
பெயல் கண் மாறிய உவகையர், சாரற்
புனத் தினை அயிலும் நாட! சினப் போர்க்
கை வள் ஈகைக் கடு மான் பேக!
யார் கொல் அளியள் தானே - நெருநல்,
சுரன் உழந்து வருந்திய ஒக்கல் பசித்தென,
குணில் பாய் முரசின் இரங்கும் அருவி
நளி இருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்,
வாயில் தோன்றி, வாழ்த்தி நின்று,
நின்னும் நின் மலையும் பாட, இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்,
முலையகம் நனைப்ப, விம்மி,
குழல் இனைவது போல் அழுதனள், பெரிதே?

திணை : பெருந்திணை; துறை : குறுங்கலி; தாபதநிலையும் ஆம்.

பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக, வையாவிக் கோப்பெரும் பேகனைக் கபிலர் பாடியது.

திணை விளக்கம் : பெருந்திணையாவது பொருந்தாக் காமம். "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" என்று தொல்காப்பியம் குறிப்பிடும்.

Koviloor Digital Library

துறை விளக்கம் : வேறு மகளிரை விரும்பிய ஒருவனுடைய காதல் கெடும்படி சொல்லுதல் குறுங்கலியாகும். ஒருவனால் துறக்கப்பட்ட அவன் மனைவியை அவனோடு சேர்க்கும் பொருட்டு, நீ இவள்பால் அருள் செய்தல் வேண்டுமென வேண்டுதல். ''நாறிருங் கூந்தல் மகளிரை நயப்ப, வேறுபடு வேட்கை வீயக் கூறின்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை இத்துறையைப் பற்றிக் குறிப்பிடும். கணவனைப் பிரிந்த மனைவியின் நிலையைக் கூறியமையின் தாபதநிலையும் ஆயிற்று. பேகனால் துறக்கப்பட்ட கண்ணகிக்கு அருள் புரிய வேண்டும் என்று புலவர் இரந்து வேண்டியதால் குறுங்கலி ஆயிற்று. ''யார் கொல் அளியள் தானே .... குழல் இனைவது போல் அழுதனள்'' என்று குறிப்பிட்டதால் இப்பாடல் குறுங்கலித்துறை ஆயிற்று.

உரை : தெய்வத்தைப் போற்றும் குறமாக்கள், மழையற்ற காலத்து, மலையை மழை வந்து சூழ்க என்று, பலியைத் தூவி வேண்ட, மிகுதியான மழை பெய்தது; மழை மிகுதியாகப் பெய்ததால் அதனை நிறுத்தல் வேண்டி, முகில் (மழை) மேலே போவதாக என்று வேண்ட, மழை இடம் மாறி பெய்தது. அதனால் உவகை எய்திய குறமாக்கள் புனத்தில் விளைந்த தினையை உண்ணுதற்கு இடனான நாட்டை உடையவனே! சினத்தினால் செய்யும் வெல்போரையும், கைவண்மையால் கொடுக்கும் கொடையையும், விரைந்த குதிரையையும் உடைய பேகனே! அருளத்தக்க அவள்தான் யாரோ? நேற்று சுரத்தில் நடந்து வருந்திய என் சுற்றம் பசியால் வாட, கடிப்பு அறைந்த முரசு போல ஒலிக்கும் அருவியையுடைய உயர்ந்த மலைச்சாரலில் உள்ள சிற்றூராகிய அவ்விடத்து வந்து சேர்ந்தோம். அவ்வூரில் ஒரு வீட்டின் வாயிற்கண் தோன்றி வாழ்த்தி நின்று நின்னையும், நின் மலையையும் பாடினேம்; அப்பொழுது இன்னாதாகச் சொரிந்த கண்ணீரை நிறுத்தமாட்டாதவளாய், முலையிடம் நனைப்பப் பொருமி, குழல் இரங்கி ஒலிப்பதுபோல் ஒருத்தி மிகவும் அழுதாள்.

உரை விளக்கம் : அரசன் நெறி மாறிச் சென்றவிடத்து, புலவர் அவனை இடித்துரைத்து நன்னெறிப்படுத்திப் பாடியது.

Koviloor Digital Library

பரிசில் பெறுவது மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், பொதுநலம் சார்ந்து, மன்னனது அகவாழ்விலும் நெறிப்படுத்திய பெருமை, புலமை சங்ககாலப் புலவர்களுக்கு இருந்துள்ளது என்பதை இப்பாடல் காட்டுகின்றது. மழை இல்லாத காலத்தில் மழை பெய்யும் பொருட்டுக் கடவுளை வேண்டி பலி தூவி வழிபட்ட மரபையும், மழை மிகுதியான விடத்து, குறைவதற்காக வழிபட்ட மரபையும் குறவர்மாக்களின் செயலால் தெரியவருகின்றது. குறமாக்கள் வேண்டியதை வேண்டியவாறு பெற்று உணவு உண்டாற் போல, இவளும் (கண்ணகி) நின் அருள் பெற்று இன்பம் நுகர வேண்டும் என்பதனை, ''கடவுட் பேணிய குறவர்மாக்கள் பெயல் கண் மாறிய உவகையர் சாரல் புனத்தினை அயிலும் நாட'' என்று குறிப்பிட்டார். கண்ணகி அழுத கண்ணீர் இன்னாமையை விளைவிப்பதால், ''இன்னாது இகுத்த கண்ணீர்'' என்றார். நின்னையும், நின் மலையையும் வாழ்த்திப் பாடக் கேட்டு மகிழவேண்டிய கண்ணகி இன்னாது அழுவ, யாம் அதனை நிறுத்துமாறு வேண்டியும், நிறுத்தாது அழுதனள் என்பார், ''குழல் இனைவது போல அழுதனள்'' என்றார். மயிலுக்குக் கொடை நல்கிய பேகன், மனைவியை அழுமாறு துன்பப்படவிடலாமா என்னும் கருத்தை மறைபொருளாக வைத்துப் புலவர் அறிவுறுத்துகின்றார்.

''குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி, நுண்பல் அழிதுளி பொழியும் நாட'' (ஐங். 251), ''பறையிசை அருவி'' (புற. 126 : 8 சிலப். 25 : 28), ''பறைக்குரல் அருவி'' (பதி. 70), ''புணரி, குணில்பாய் முரசின் இரங்கும் துறைவன்'' (குறு. 328), ''நின்னும் நின் மலையும் பாடி வருநர்'' (புற. 130 : 3), ''கருங்கால் வெண்குருகு மேயும் பெருங்குளம் ஆயிற்றென்இடை முலை நனைந்தே'' (குறு. 325 : 5 – 6), ''அரிமதர் மழைக்கண்ணீர் அலர் முலைமேல் தெறிப்பபோல்'' (கலி. 77 : 4), ''நெய்தல் உண்கண் பைதல் கூரப், பின்னிருங் கூந்தன் மறையினள் பெரிதழிந்து உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின் இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும், ஆம்பலங் குழலின் ஏங்கிக் கலங்கஞர் உறுவோள்'' (நற். 113), ''குழலினும் இனைகுவள் பெரிதே'' (ஐங். 306), ''சிறுகுழல் .... இனைதியோ எம்போல'' (கலி. 129 : 16 – 18),

Koviloor Digital Library

"குழலேங்கு மாறேங்கி அழுதார் கோதை மடவாரே" (சீவக. 2945), "வேய்ங்குழல் விளிகொல் நல்யாழ் வீணையென்று இனைய நாண வேங்கினள்" (கம்ப. கிட்கிந்தா. அரசியல். 3), போன்ற பகுதிகள் ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மாரி – மழை; மழை – முகில்; பெயல் – மழை; அளியள் – இரங்கத்தக்காள்; நெருநல் – நேற்று; ஒக்கல் – சுற்றம்; குணில் – முரசடிக்கும் குறுந்தடி; இரங்கும் – ஒலிக்கும்; சிலம்பு – மலை.

144

அருளாய் ஆகலோ கொடிதே; இருள் வர,
சீறியாழ் செவ்வழி பண்ணி, யாழ நின்
கார் எதிர் கானம் பாடினேமாக,
நீல் நறு நெய்தலின் பொலிந்த உண்கண்
கலுழ்ந்து, வார் அரிப் பனி பூண் அகம் நனைப்ப,
இனைதல் ஆனாளாக, இளையோய்!
கிளையைமன், எம் கேள் வெய்யோற்கு?' என,
யாம் தற் தொழுதனம் வினவ, காந்தள்
முகை புரை விரலின் கண்ணீர் துடையா,
'யாம் அவன் கிளைஞரேம் அல்லேம்; கேள், இனி;
எம் போல் ஒருத்தி நலன் நயந்து, என்றும்,
வருஉம்' என்ப – வையங்கு புகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்கும் தேரொடு,
முல்லை வேலி, நல் ஊரானே.

திணை : பெருந்திணை; துறை : குறுங்கலி; தாபத நிலையும் ஆம்.

வையாவிக்கோப் பெரும்பேகனைக் கண்ணகி காரணமாகப் பரணர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : "அருளாய் ஆகலோ கொடிதே .... நல்லூரானே" என்று பேகன் செயலைச் சுட்டி அருள் செய்யும்படி இரந்து கூறியதால் குறுங்கலியாயிற்று. இப்பாடல் கண்ணகி காரணமாக வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடிய கைக்கிளை வகைப் பாடாண்பாட்டு.

உரை : பேக! மாலைக் காலம் வரச் சிறிய யாழில் இரங்கற் பண்ணாகிய செவ்வழி என்னும் பண்ணை இசைத்து, மழையை ஏற்றுக் கொண்ட நின் காட்டைப் பாடினேம். அதுகேட்டு, நீலநறு நெய்தல் போன்று பொலிந்த மையுண்ட கண்கள் கலங்கிச் சொரிந்த கண்ணீர்துளிகள், பூண் அணிந்த மார்பை நனைக்க, ஒருத்தி வருந்தி அழுதனள்; யாம் அவளை வணங்கி, 'இளையோய்! எம்முடைய நட்பை விரும்புவோனுக்கு நீ உரிமை உடையையோ?' எனக் கேட்டனம்; அவள் காந்தள் மொட்டு போலும் விரலால் தன் கண்ணீரைத் துடைத்து, யாம் அவனுடைய கிளைஞரேம் அல்லேம்; நீ இப்பொழுது கேட்பாயாக; 'எம்மை ஒப்பாள் ஒருத்தியின் அழகைக் காதலித்து, விளங்கிய புகழுடைய பேகன், ஒல்லென முழங்கும் தேருடன் முல்லை வேலி பொருந்திய நல்லூருக்கு எந்நாளும் சென்று வருவன் என்று பலரும் சொல்லுவர்' எனக் கூறினாள். அத்தன்மையாளுக்கு நீ அருள் செய்யாதிருத்தல் கொடிது ஆகும்.

உரை விளக்கம் : மாலைக்காலத்தில், இரங்கற்பண்ணாகிய செவ்வழிப் பண்ணை வாசிப்பர். இதனை, 'இருள்வரச் சீறி யாழ் செவ்வழி பண்ணி" என்றார். கார்காலத்தில் மழையால் கானம் கவின் பெறுமாதலால், அதன் அழகில் மனம் ஈடுபட்டுப் பாடுதலைக், "கார் எதிர் கானம் பாடினேம்" என்றார். கண்ணகியின் கண்களுக்கு நீலநிற நெய்தல் மலரையும், விரல்களுக்குக் காந்தள் மொட்டினையும் உவமைப்படுத்தி, "நீலநறு நெய்தலின் பொலிந்த உண்கண்" எனவும், "காந்தள் முகைபுரை விரலின்" எனவும் காட்டியுள்ளார். 'எம்போல் ஒருத்தி' என்றது, எம்மைப் போலும் பொதுமகள் ஒருத்தி என அவளை இழித்துக் கூறியதாகும். நல்லூர்ப் பரத்தையின் நலம்,

Koviloor Digital Library

கண்ணகியின் நலத்தைக் காட்டிலும் சிறப்புடையதன்று என்பதையும் இதன் மூலம் உணர்த்தினார். கண்ணகிக்கு அருள் செய்யவேண்டும் என்பதைப் பேகனுக்கு உணர்த்தும் பொருட்டு, பாட்டின் தொடக்கத்திலேயே ''அருளாய் ஆகலோ கொடிதே'' என்றார். பேகன் அருள் செய்யாவழி கண்ணகி உயிர்இழத்தலும், பேகனுக்குப் பழி உண்டாதலும் ஏற்பட்டுக் கொடுமையாய் முடியும் என்பதைப் புலவர் தன் நட்பின் நெருக்கத்தால் அரசனுக்கு இடித்துரைத்து கண்ணகியிடம் செல்ல அறிவுறுத்துகின்றார்.

''சீறியாழ் செவ்வழி பண்ணி'' (புற. 146 : 3; 147 : 2), ''மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி, வரவு எமர் மறந்தனர்'' (புற. 149 : 2 – 4), ''இன்னாது இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள், முலையகம் நனைப்ப விம்மி'' (புற. 143 : 12 – 14), ''செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்'' (சிறு. 167), ''வேலி சுற்றிய வால்வீ முல்லை'' (அக. 314 : 19), ''முல்லை தலையணிந்த முஞ்ஞை வேலி'' (பெருங். 4.2 : 63), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : செவ்வழி – இரங்கற்பண்; கானம் – காடு; உண்கண் – மையுண்ட கண்; கேள் – கேண்மை, நட்பு; முகை – மொட்டு; புரை – ஒத்திருத்தல்; நலன் – அழகு; நயந்து – விரும்பி, காதலித்து.

145

'மடத் தகை மா மயில் பனிக்கும்' என்று அருளி,
படாஅம் ஈத்த கெடாஅ நல் இசை,
கடாஅ யானைக் கலி மான் பேக!
பசித்தும் வாரேம்; பாரமும் இலமே;
களங்கனி அன்ன கருங் கோட்டுச் சீறியாழ்
நயம் புரிந்து உறையுநர் நடுங்கப் பண்ணி,

Koviloor Digital Library

'அறம் செய்தீமோ, அருள் வெய்யோய்!' என,
இஃது யாம் இரந்த பரிசில்; அஃது இருளின்,
இன மணி நெடுந் தேர் ஏறி,
இன்னாது உறைவி அரும் படர் களைமே!

திணை : பெருந்திணை; துறை : குறுங்கலி; தாபதநிலையும் ஆம்.

வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாகப் பரணர் பாடியது.

துறை விளக்கம் : "அறம் செய்தீமோ அருள் வெய்யோய்! என, இஃது யாம் இரந்த பரிசில், ... இன்னாது உறைவி அரும்படர் களைமே" என்று அருள் செய்யும்படி இரந்து கூறியதால் குறுங்கலியாயிற்று. பேகனைப் பிரிந்து வருந்தும் கண்ணகியின் நிலையை எடுத்துரைத்தலால் தாபதநிலையும் ஆயிற்று.

உரை : மெல்லிய தகைமை பொருந்திய கரிய மயில் குளிரால் நடுங்குமென்று அருள் செய்து போர்வை கொடுத்த, அழியாத நற்புகழினையும், மதமுடைய யானையையும், மனம் செருக்கிய குதிரையையும் உடைய பேக! யாங்கள் பசித்தும் வந்தோம் இல்லை; எம்மால் புரக்கப்படும் (பாதுகாக்கப்படும்) சுற்றமும் எம்பால் உடையேம் இல்லை; களாப் பழம் போன்ற கரிய கோடுடைய சிறிய யாழை, இசை இன்பத்தை விரும்பி உறைவார் அவ்விசையின்பத்தால் தலையசைத்துக் கொண்டாடும்படி வாசிப்பேம்; அருள் வெய்யோய்! அறத்தைச் செய்வாயாக; இன்று இரவே இனமாகிய மணியையுடைய உயர்ந்த தேரேறிச் சென்று, காண்பதற்கு இன்னாதாக உறைகின்றவள், பொறுத்தற்கரிய நின் நினைவால் உண்டாகிய மனைவியின் நோயைத் தீர்ப்பாயாக; இதுவே யாம் நின்னிடத்து இரந்துவேண்டும் பரிசிலாகும்.

உரை விளக்கம் : "மடத் தகை மாமயில் பனிக்கும் என்று அருளிப் படாஅம் ஈத்த .... பேக" என்றது, ஒரு காரணமின்றியும்

Koviloor Digital Library

அருள் பண்ணுகின்ற நீ, நின்னால் வருந்துகின்ற இவளுக்கு (கண்ணகி) அருள் செய்யாதிருத்தல் தகாது என்பதை உணர்த்தும் பொருட்டாகும். அதுமட்டுமின்றி யாங்கள் பசிக்காகவோ, சுற்றத்தைப் பாதுகாக்கும் பொருட்டாகவோ பரிசில் கேட்டு வரவில்லை என்பதைப் பேகனுக்கு உணர்த்தும் தன்மையில், ''பசித்தும் வாரேம் பாரமும் இலமே'' என்றார். நீ, நின் மனைவியுடன் சேர்ந்து வாழ்தலே யாம் வேண்டும் பரிசில் என்றதால், மன்னனின், அரசியின் வாழ்க்கையில் புலவர்களுக்கு இருந்த பற்றுள்ளம் புலனாகின்றது. யாம் நின்னைக் காண வந்ததன் நோக்கம் யாதெனில், ''அருள் வெய்யோய்! அறம் செய்தீமோ .... இன்னாது உறைவி அரும்படர் களைமே; இஃது யாம் இரந்த பரிசில்'' எனக் காரணத்தைப் புலப்படுத்துகிறார். இசையை விரும்பிக் கேட்பவர், அவ்விசை இன்பத்தால் தலையாட்டி மகிழ்தல் இயல்பு; அத்தன்மையில் பாணர் இனிய இசைநயம் தோன்ற, யாழை வாசித்த தன்மையை, ''நயம் புரிந்து உறையுநர் நடுங்கப் பண்ணி'' எனக் குறிப்பிட்டார்.

உடாஅ போரா ஆகுதல் அறிந்தும், படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ, கடாஅ யானைக் கலிமான்பேக'' (புற. 141 : 10 - 12), ''வரையா மரபின் மாரிபோல, கடாஅ யானைக் கழற்காற் பேகன்'' (புற. 142 : 3 - 4), ''களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ் பாடுஇன் பனுவற் பாணர்'' (புற. 127 : 1 - 2), ''மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்'' (மலை. 534), ''பரிசில் நல்குவை ஆயின் குரிசில் நீ நல்காமையின் நைவரச் சாஅய், அருந்துயர் உழக்கும் நின் திருந்து இழை அரிவை, ... கோதை புனைய வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே'' (புற. 146 : 5 - 10) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : பனிக்கும் - குளிரால் நடுங்கும்; படாஅம் - போர்வை; கடாஅ - மதம்; களங்கனி - களாப்பழம்; வெய்யோய் - விரும்புவோய்; உறைவி - உறைகின்றவள்; அரும்படர் - பொறுத்தற்கரிய துன்பம்.

Koviloor Digital Library

146

அன்ன ஆக : நின் அருங் கல வெறுக்கை
அவை பெறல் வேண்டேம்; அடு போர்ப் பேக!
சீறியாழ் செவ்வழி பண்ணி, நின் வன் புல
நம் நாடு பாட, என்னை நயந்து
பரிசில் நல்குவை ஆயின், குரிசில்! நீ
நல்காமையின் நைவரச் சாஅய்,
அருந் துயர் உழக்கும் நின் திருந்து இழை அரிவை
கலி மயில் கலாவம் கால் குவித்தன்ன,
ஒலி மென் கூந்தற் கமழ் புகை கொளீஇ,
தண் கமழ் கோதை புனைய,
வண் பரி நெடுந்தேர் பூண்க, நின் மாவே!

திணை : பெருந்திணை; துறை : குறுங்கலி; தாபதநிலையும் ஆம்.

வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாக அரிசில் கிழார் பாடியது.

துறை விளக்கம் : "நின் அருங்கல வெறுக்கை அவை பெறல் வேண்டேம் ..... நின் திருந்து இழை அரிவை .... தண்கமழ் கோதை புனைய ..... நெடுந்தேர் பூண்க நின் மாவே" என்று இரங்கிப் பாடியதால் குறுங்கலியாயிற்று. பேகனைப் பிரிந்த கண்ணகியின் துயரை, "நீ நல்காமையின் நைவரச் சாஅய்" எனக் கூறியதால் தாபதநிலையாயிற்று.

உரை : அடுபோர்ப் பேக! நின்னால் தரப்பட்ட பெறுதற்கரிய அணிகலமும், செல்வமும் ஆகிய அவை பெறுதலை யாம் விரும்பேம்; சிறிய யாழில் செவ்வழிப் பண்ணை வாசித்து, நின் வலிய நிலமாகிய மலைநாட்டைப் பாடுவேம்; அதனைக் கேட்டு, விரும்பி நீ பரிசில் தருகுவையாயின், தலைவனே! நீ அருளாமையால் கண்டார்

Koviloor Digital Library

இரங்க மெலிந்து, அருந்துயரத்தால் வருந்துகின்ற நின் அரிவையைக் காணச் செல்வாயாக; மயிலின் பீலியை ஒருங்கே குவித்தாற்போன்ற தழைத்த மெல்லிய கூந்தலில் மணங்கமழும் அகிற்புகையைக் காட்டி, மாலையைச் சூடி, விரைந்த வேகம் கொண்ட உயர்ந்த தேரை நின் குதிரைகள் பூண்பனவாக. இதுவே யாம் வேண்டும் பரிசில்.

உரை விளக்கம் : எமக்குப் பரிசில் நல்குகின்ற நீ, நின் அரிவைக்கு நல்காதிருத்தல் தகுமோ என்று புலவர் மன்னனை இடித்துரைத்துப் பாடியது. நீ அருளாதிருப்பதால் மெய்யின்கண் துயரம் வெளிப்பட்டுத் தோன்றும் என்பதை, ''நல்காமையின் நைவரச் சாஅய்'' என்றார். மகளிர் கூந்தலுக்கு மயிற்பீலியை உவமை கூறுதல் மரபு. அதனால் ''கலிமயில் கலாவம் கால் குவித்தன்ன ஒலிமென் கூந்தல்'' என்றார். கணவனைப் பிரிந்த மகளிர் தம்மை ஒப்பனை செய்து கொள்ளமாட்டார். இதனை நெடுநல்வாடையில் வரும் அரசி, கணவன் பிரிந்த காலத்தில் ஒப்பனை இன்றி இருந்தால் என்று கூறுவதன் மூலமும் அறியலாம். அதனாலேயே ''நின் அரிவை கூந்தற் கமழ் புகை கொளீஇத் தண்கமழ் கோதை புனைய செல்வாயாக'' என்று பேகனுக்கு அறிவுறுத்துகின்றார்.

''மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை, தாங்காது பொழிதந்தோனே'' (புற. 378 : 11 – 12), ''சீறியாழ் செவ்வழி பண்ணி'' (புற. 144 : 2; 147 : 2), ''கலிமயிற் கலாவத் தன்ன இவள் ஒலிமென் கூந்தல்'' (நற். 265 : 8 – 9), கலிமயிற் கலாவத் தன்னஇவள் ஒலிமென் கூந்தல் (குறு. 225), ''கதுப்பென மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன் மயின்மயிற் குளிக்கும்'' (சிறு. 14 –16), ''நெய்யோடு துறந்த மையிருங் கூந்தல், மண்ணுறு மணியின் மாசுஅற மண்ணிப் புதுமலர் கஞல'' (புற. 147 : 6 – 8), ''புணர்ந்தோர் பூவணி அணிய'' (புற. 194 : 3), ''பெறுக நின் செவ்வி, பெருமகன் வந்தான், நறுமலர்க் கூந்தல் நாளணி பெறுகென'' (சிலப். 27 : 215 – 216), ''மாணிழை அரிவை காணிய ஒருநாள், பூண்க மாள நின் புரவி நெடுந்தேர்'' (பதி. 81 : 31 – 32), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : அருங்கலம் – ஆபரணம் அணிகலங்கள்; வெறுக்கை – செல்வம்; வன்புலம் – வன்னிலம்; வலிய நிலம்; நைவரச் சாஅய் – கண்டார் இரங்க மெலிந்து; அருந்துயர் – அரிய துன்பம்; உழக்கும் – வருந்தும்; இழை – அணி; கலாவம் – மயிற்பீலி; கோதை – மாலை; வண்பரி – விரைந்த செலவு (வேகம்); மா – குதிரை;

147

கல் முழை அருவரிப் பல் மலை நீந்தி,
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததை,
கார் வான் இன் உறை தமியள் கேளா,
நெருநல் ஒரு சிறைப் புலம்புகொண்டு உறையும்
அரி மதர் மழைக் கண், அம் மா அரிவை
நெய்யொடு துறந்த மை இருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசு அற மண்ணி,
புது மலர் கஞல, இன்று பெயரின்,
அதுமன், எம் பரிசில் – ஆவியர் கோவே!

திணை : பெருந்திணை; துறை : குறுங்கலி; தாபதநிலையும் ஆம்.

வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாகப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

துறை விளக்கம் : ''அம்மா அரிவை மையிருங் கூந்தல் ... புதுமலர் கஞல இன்று பெயரின் அதுமன் எம் பரிசில்'' என்று இரங்கிப் பாடியதால் குறுங்கலி ஆயிற்று. ''தமியள் கேளா நெருநல் ஒரு சிறைப் புலம்பு கொண்டு உறையும்'' என்று பேகனைப் பிரிந்த கண்ணகியின் துயரைக் கூறியதால் தாபதநிலையாயிற்று.

உரை : ஆவியருடைய வேந்தே! கல் முழையிலிருந்து (இடுக்கு) விழும் அருவியுடைய பல மலைகளையும் அரிதிற்

Koviloor Digital Library

கடந்துவந்து, சிறிய யாழில் செவ்வழி பண்ணை இசைத்து வந்தனம்; கார்கால மழையின் துளி வீழ்கின்ற ஓசையைத் தமியளாகக் கேட்டு, ஒரு பக்கத்துத் தனிமை கொண்டு வருந்தினள் ஒருத்தி; செவ்வரி பரந்த, மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்ணினையும், மாமை நிறத்தினையும் உடையவள்; அவ்வரிவையது நெய்யால் துறக்கப்பட்ட மை போன்ற கரிய மயிரை, நீலமணியினும் அழுக்குப் போகக் கழுவிப், புதுமலர் சூட்டும்படி, இன்றே நீ எம்மொடும் வருவையாயின், அதுவே எம் பரிசிலாகும்.

உரை விளக்கம் : பேகனைத் தன்னுடன் வருமாறு பாணன் கூற்றில் வைத்துப் பாடியது. காதலன்புடைய மனைவியும் கணவனும் பிரிந்திருப்பின், இருவரையும் ஒன்றுபடுத்தி வாழ்வு இனிது நடக்குமாறுச் செய்தல் பண்டைத் தமிழ்ச் சான்றோராகிய புலவர்களின் இயல்பு. அச்செயலையே பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் போன்ற புலவர்கள் செய்து, அரசனை நல்வழிப்படுத்தினர். அகவாழ்வாயினும், புறவாழ்வாயினும் அரசன் நெறி தவறுகின்ற போது, அவனை இடித்துரைத்து, அறிவுரை கூறுவதில் புலவர்கள் வல்லவர்களாக விளங்கினர். அரசனும் புலவர்களின் அறிவுரை ஏற்று, அதன்படி ஒழுகினர். புலவர்கள் தம் சொந்த நலனை மட்டும் பார்க்காமல், நாட்டு நலனிலும் அக்கறை உடையவர்களாகத் திகழ்ந்தனர்.

பேகனுடைய மலைநாடு குன்றுகளால் சூழப்பட்டிருத்தலின், "கன்முழை அருவிப் பன்மலை நீந்தி" என்றார். கார்காலத்தில் மகளிர் தம் காதலரைப் பிரிந்திருத்தலை ஆற்றாராகலின், "கார் வான் இன்னுறை தமியள் கேளா" என்றார். தனிமைத் துன்பத்தால் கூந்தல் நெய்யற்றும், பூச் சூடாமலும் பொலிவழிந்திருக்குமாதலின், "நெய்யொடு துறந்த மை இருங்கூந்தல்" என்றார். "கூந்தல் மண்ணுறு மணியின் மாசு அற மண்ணிப், புதுமலர் கஞல" நீ அருள் செய்வாயாக, அதுவே எம் பரிசில் என்று பேகனால் கண்ணகி அடையும் நலத்தை எடுத்துரைத்து வேண்டுகிறார். யாம் செவ்வழிப் பண் இசைத்து வந்தது, நீ எம்முடன் வரவேண்டும் என்பதைக் கருதியேயாகும்.

Koviloor Digital Library

இதனைச், ''சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததை ... புதுமலர் கஞல இன்று பெயரின்'' என்று குறிப்பர்.

''சீறியாழ் செவ்வழி பண்ணி'' (புற. 144 : 2; 146 : 3), ''முடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவி, இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்'' (முல். 87 - 88), ''வாச வெண்ணெய் இன்றி மாசொடு, பிணங்குபு கிடந்த பின்னுச்சேர் புறத்தொடு'' (பெருங். 4.7 : 103 - 104), ''புணர்ந்தோர் பூ வணி அணிய'' (புற. 194 : 3), ''ஒலிமென் கூந்தற் கமழ் புகை கொளீஇ, தண்கமழ் கோதை புனைய'' (புற. 146 : 9 - 10), ''மாசற மண்ணுற்ற மணியேசும் இருங்கூந்தல், வீ சேர்ந்து வண்டார்க்கும் கவின் பெறல்'' (கலி. 77 : 16 - 17), ''ஆவியர் பெருமகன் பெருங்கல் நாடன் பேகனும்'' (சிறு. 86 - 87), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : முழை - முழைஞ்சு; கார்வான் - கார் காலத்து மழை; உறை - துளி; நெருநல் - நேற்று; சிறை - பக்கம்; மழைக்கண் - குளிர்ச்சியுடைய கண்; மா - மாமைநிறம்; மணி - நீலமணி; மாசு - அழுக்கு; மண்ணி - கழுவி.

148

கறங்கு மிசை அருவிய பிறங்கு மலை நள்ளி! நின்
அசைவு இல் நோன் தாள் நசை வளன் ஏத்தி,
நாள்தொறும் நன் கலம் களிற்றொடு கொணர்ந்து,
கூடு விளங்கு வியல் நகர், பரிசில் முற்று அளிப்ப;
பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி,
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யாதாகின்று, எம் சிறு செந் நாவே.

திணை : பாடாண்திணை; **துறை :** பரிசில் துறை.

கண்டீரக் கோப்பெருநள்ளியை வன்பரணர் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : அரசன் முன்னே பரிசிலர் (இரவலர்) தாம் பெறக் கருதிய பொருள் இதுவெனச் சொல்லுதல் பரிசில் துறையாகும். ''மண்ணகங் காவல் மன்னர் முன்னர் எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை இதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ''நாள் தொறும் நன் கலம் களிற்றொடு கொணர்ந்து, ... வியல்நகர் பரிசில் முற்று அளிப்ப'' என்று கூறியதால் பரிசில் துறையாயிற்று.

உரை : உச்சியினின்றும் ஒலித்து இழிதரும் அருவியினையுடைய, உயர்ந்த மலைக்குரிய நள்ளியே! நாள்தொறும் நல்ல அணிகலங்களைக் களிற்றோடு கொண்டு வந்து, நெற்கூடு விளங்கும் அகன்ற நகரத்தில் இருந்து, சூழ்ந்திருந்த பரிசிலர்க்கு அளித்து விடுகின்றாய்; ஆதலால், நினது தளர்ச்சி இல்லாத வலிய முயற்சியால் ஈட்டப்படும் செல்வத்தை எம் செந்நாவால் வாழ்த்தி வந்தேம்; நீ இவ்வாறு இருக்கப் பிறர்க்கு ஈயும் பெருமை இல்லாத அரசரைப் புகழும் புகழ்ச்சியை விரும்பி, அவ்வரசர் செய்யாதனவற்றைச் சொல்லி, அவர் குணங்களைக் கூறுதலை அறியாதது ஆயிற்று, எம்முடைய சிறிய செவ்விய நா.

உரை விளக்கம் : வன்பரணர், நள்ளியின் வென்றியையும், கொடையையும் பாராட்டிப் பாடியது. பொய் கூறாமையின் ''செந்நா'' என்றார். தற்புகழ்ந்தார் என்ற குற்றம் வரக்கூடாது என்பதால் தன்னடக்கத்துடன் ''எம் சிறு செந்நா'' என்றார். முயற்சியால் பெற்ற செல்வத்தை, அணிகலங்களைக், களிற்றைத் தன்னைச் சூழ்ந்து இருக்கும் பரிசிலர்க்கு நள்ளி நாடோறும் அளித்து விடுப்பனாதலால் அவனைப் பாராட்டிய என் நாவானது, பெருமையற்ற அரசரைப் புகழ்ந்து கூறிப் பாராட்டற்கு அறியாது என்பதைப், ''பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி, செய்யா கூறிக் கிளத்தல்'' என்று குறிப்பிட்டார்.

''கறங்கு வெள் அருவி கல் அலைத்து ஒழுகும்'' (புற. 158 : 3), ''நளிமலை நாடன் நள்ளியும்'' (சிறு. 107), ''கண் பொறி போகிய கசிவொடு உரன் அழிந்து, அருந்துயர்

Koviloor Digital Library

உழக்கும் என் பெருந் துன்புறுவி'' (புற. 161 : 14 – 15), ''மடியிலான் செல்வம் போல் மரனந்த'' (கலி. 35), ''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா, ஊக்கம் உடையான் உழை'' (குறள். 594), ''ஊக்க வேந்தன் ஆக்கம்போல'' (பெருங். 3.5 : 21), ''வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த, இரவன் மாக்கள் ஈகை நுவல'' (புற. 24 : 29 – 30), ''அருங் கலம் களிற்றொடு வேண்டினும்'' (புற. 171 : 10), வால் நார்த் தொடுத்த கண்ணியும் கலனும், யானை இனத்தொடு பெற்றனர்'' (புற. 153 : 8 – 9), ''நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி'' (அக. 124 :1), ''வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்'' (புற. 139 : 5 – 6) என வரும் பகுதிகள் ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அசைவு – தளர்ச்சி; நோன்தாள் – வலியமுயற்சி; வளன் – செல்வம்; கலம் – அணிகலம்; கூடு – நெற்கூடு; வியல்நகர் – அகன்ற நகர்; பீடு – பெருமை; கிளத்தல் – சொல்லுதல்.

149

நள்ளி! வாழியோ; நள்ளி! நள்ளென்
மாலை மருதம் பண்ணி, காலை
கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி,
வரவு எமர் மறந்தனர் – அது நீ
புரவுக் கடன் பூண்ட வண்மை யானே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

கண்டீரக் கோப் பெருநள்ளியை வன்பரணர் பாடியது.

துறை விளக்கம் : ''நீ புரவுக்கடன் பூண்ட வண்மையானே ..... வரவு எமர் மறந்தனர்'', என்று நள்ளியின் கொடை இயல்பை வியந்து போற்றியதால் இயன்மொழித் துறையாயிற்று.

Koviloor Digital Library

உரை : நள்ளி! வாழ்வாயாக; நள்ளி! நள் என்னும் ஓசையை உடைய மாலைப் பொழுதில் மருதப் பண்ணை வாசித்தும், காலைப் பொழுதில் கைவழியாகிய யாழில் செவ்வழி பண்ணை வாசித்தும் வரலாற்று முறைமையை (முறைமாற்றி) எம் பாணர் சாதியிலுள்ளோர் மறந்தனர்; நீ கொடுத்து ஓம்புதலைக் கடனாக மேற்கொண்ட கொடைத்தன்மையால் அவ்வாறு பண்ணை முறைமாற்றி மறந்தனர்.

உரை விளக்கம் : காலையில் மருதப்பண்ணும், மாலையில் செவ்வழிப்பண்ணும் பாடுதல் இசைநூல் வரலாற்றுமுறை. நள்ளி, பாணர்க்கு வறுமை தோன்றா வண்ணம் வேண்டுவன நிரம்ப அளித்து பாதுகாத்தலால் அம்முறைமையினை மறந்தனர் என்ற கருத்தைப் புலவர் இப்பாடலில் புலப்படுத்துகின்றார். இதனால், ''மாலை மருதம் பண்ணிக் காலைக் கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி'' என்று பாணர் இசைநூன் முறையை மறந்தனர் என்றார். அதற்குக் காரணமும் நீயே என்பார், ''புரவுக் கடன் பூண்ட வண்மையைச்'' சுட்டுகின்றார்.

''ஆர்வம் உற்று, உள்ளி வருநர் உலைவு நனிதீர, தள்ளாது ஈயும் தகைசால் வண்மை, கொள்ளார் ஓட்டிய நள்ளியும்'' (புற. 158 : 13 – 16), ''மாரி வண் கொடை காணிய .... எம் கண்ணுளங் கடும்பே ..... ஆடலும் ஒல்லார் தம் பாடலும் மறந்தே'' (புற. 153 : 5 – 12), ''சாய வெண் கிளவிபோற் செவ்வழி யாழிசை நிற்ப ... மாலையும் வந்தன்றினி'' (கலி. 143 : 38 – 41), ''திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி'', யாழோர் மருதம் பண்ண'' (மது. 604, 658) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மருதம் – மருதப்பண் (காலைப்பண்); செவ்வழி – இரங்கற்பண் (மாலைநேரப் பண்); வரவு – வரலாற்று முறைமை; புரவு – கொடுத்தல்; கடன் – கடமை; வண்மை – கொடை.

Koviloor Digital Library

150

கூதிர்ப் பருந்தின் இருஞ் சிறகு அன்ன
பாறிய சிதாரேன், பலவு முதல் பொருந்தி,
தன்னும் உள்ளேன், பிறிது புலம் படர்ந்த என்
உயங்கு படர் வருத்தமும் உலைவும் நோக்கி,
மான் கணம் தொலைச்சிய குருதி அம் கழற் கால்,
வான் கதிர்த் திருமணி விளங்கும் சென்னி,
செல்வத் தோன்றல், ஓர் வல் வில் வேட்டுவன்,
தொழுதனென் எழுவேற் கை கவித்து இரீஇ,
இழுதின் அன்ன வால் நிணக் கொழுங்குறை,
கான் அதர் மயங்கிய இளையர் வல்லே
தாம் வந்து எய்தா அளவை, ஒய்யெனத்
தான் ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, 'நின்
இரும் பேர் ஒக்கலொடு தின்ம்' எனத் தருதலின்,
அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி,
நல் மரன் நளிய நறுந் தண் சாரல்,
கல் மிசை அருவி தண்ணெனப் பருகி,
விடுத்தல் தொடங்கினேனாக, வல்லே,
'பெறுதற்கு அரிய வீறுசால் நன் கலம்
பிறிது ஒன்று இல்லை; காட்டு நாட்டேம்' என,
மார்பில் பூண்ட வயங்கு காழ் ஆரம்
மடை செறி முன்கைக் கடகமொடு ஈத்தனன்;
'எந் நாடோ?' என, நாடும் சொல்லான்;
'யாரீரோ?' என, பேரும் சொல்லான்;
பிறர் பிறர் கூற வழிக் கேட்டிசினே
'இரும்பு புனைந்து இயற்றாப் பெரும் பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணி நெடுங் குன்றின்
பளிங்கு வகுத்தன்ன தீம் நீர்,
நளி மலை நாடன் நள்ளி அவன்' எனவே.

Koviloor Digital Library

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

கண்டீரக் கோப் பெருநள்ளியை வன்பரணர் பாடியது.

துறை விளக்கம் : 'காட்டு நாட்டேம் என, மார்பில் பூண்ட வயங்கு காழ் ஆரம், மடை செறி முன்கைக் கடகமொடு ஈத்தனன், என்று அவனது கொடை மேம்பாடும், பண்பு மேம்பாடும் எடுத்தரைக்கப்படுவதால் இப்பாடல் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : கூதிர்க்காலத்துப் பருந்தின் கரிய சிறகைப் போன்ற கந்தலாகிய ஆடையை உடையேனாய், வேற்று நாட்டின்கண் சுற்றிய வருத்தத்துடன், தன்னையும் மறந்து, பலாமரத்தடியின் கீழ் இருந்தேன்; ஓய்ந்திருந்த என் வருத்தத்தையும், வறுமையையும் பார்த்து, மான் கூட்டத்தை வேட்டையாடிய இரத்தம் தோய்ந்த வீரக் கழல் உடைய காலினையும், ஒளி பொருந்திய நீலமணி விளங்கும் உச்சியையும் உடைய, செல்வத்தோன்றலாகிய வலிய வில்லினையுடைய வேட்டுவன் ஒருவன் வந்தனன்; அவனைக் கண்டு வணங்கி எழ முயன்றேனாகக் கைகவித்து இருத்தினான்.

காட்டு வழியில் வழிமயங்கிய இளையர், விரைய வந்து சேருவதற்கு முன்னே, நெய் இழுது போன்ற வெள்ளிய நிணமுடைய இறைச்சியை விரைவாகத் தீக்கடைகோலால் தானே மூட்டிய தீயில் சுட்டனன்; சுட்ட அவ்விறைச்சியை 'நின் மிகப் பெரிய சுற்றத்துடன் தின்னுங்கள்' என்று தந்தனன்; அதனை யாங்கள் அமிழ்து போலத் தின்று, சுடுகின்ற பசி தீர்ந்தோம்; மரச்செறிவுடைய குளிர்ந்த மலைச் சாரலில் மலை உச்சியினின்றும் வீழ்கின்ற அருவிநீரைக் குளிரக் குடித்து விடை கொள்ளத் தொடங்கினேம்; அப்பொழுது அவன் விரைய வந்து, பெறுதற்கரிய பெருமையமைந்த நல்ல அணிகலங்களைத் தருதற்கு வேறொன்றுமில்லை; யாம் காட்டு நாட்டில் இருக்கின்றோம் என்று சொல்லித், தன் மார்பில் அணிந்த முத்துவட ஆரத்தை, முன் கையில் அணிந்த கடகத்துடன் (வளை) தந்தனன்; 'நும் நாடு எந்நாடோ' என்று கேட்ப, நாடும் சொல்லிற்று இலன்;

Koviloor Digital Library

'நீர் யாரெனக்' கேட்பப் பெயரும் சொல்லிற்று இலன்; இரும்பாற் புனைந்து செய்யப்படாத மிக்க புகழுடைய தோட்டியாகிய மலையைக் காக்கும் பெரிய பக்க மலையினையும், பளிங்கு போன்ற இனிய நீரையும் உடைய பெருமலை நாட்டுக்குரிய நள்ளி அவன் என, அவன் நாடும் பெயரும் பிறர் பிறர் வழியின்கண் சொல்லக் கேட்டேம்.

உரை விளக்கம் : காட்டில் தமக்கு அருள் செய்த வள்ளலாகிய, தோட்டிமலைக்குரிய கண்டீரக் கோப் பெருநள்ளியைப் பாராட்டிப் பாடியது. இப்பாட்டில் நள்ளி என்னும் வள்ளலின் கம்பீரமும், அன்பும், குறிப்பறிந்து ஈதல் முதலிய நற்குணங்களும் புலப்படக் காணலாம். அழுக்கேறிக் கிழிந்திருக்கும் உடை, நீரில் நனைந்த பருந்தின் சிறகுபோல இருக்குமாதலால், ''கூதிர்ப் பருந்தின் இருஞ் சிறகு அன்ன, பாறிய சிதாரேன்'' என்றார். இரவலர் வழிநடை வருத்தம் தீரப் பலாமரத்தின் நிழலின்கீழ் தங்குதல் இயல்பு. அதனால், ''பலவு முதல் பொருந்தி'' என்றார். செல்வத் தோன்றலைக் கண்டு தொழுதற்கு எழுந்த என்னை, வருத்தமும், மிடியும் பார்த்து அருள் கொண்டு எழாதவாறு தடுத்து இருக்கச் செய்தான் என நள்ளியின் அன்பு உள்ளத்தைக், ''கை கவித்து இரீஇ'' என்றார். வேட்டையாடும் பொருட்டு பல்வேறு இடங்களில் சிதறிச் சென்றிருந்த இளையர் (வீரர்) வந்து சேர்ந்தவழி, தன் பெயரும் நாடும் வெளிப்படும் எனக் கருதி, ''இளையர் வல்லே, தாம் வந்து எய்தா அளவை ஒய்யெனத் தான் ஞெலி தீயின் விரைவனன்'' என்றார்.

காட்டில் பசித்துயர் போக்கி, அணிகலம் தந்தவனைப் பெயரும் நாடும் கூறுமாறு கேட்க, அவன் கூறிற்றிலன் என்பார், அவன் செல்வப் பணிவும், தற்புகழாத தன்மையும் புலப்பட, ''எந்நாடோ? என நாடும் சொல்லான்; யாரீரோ? எனப் பேரும் சொல்லான்'' என்றார். பின்னர் வரும் வழியில் பிறமக்கள் தம்முள் பேசிக்கொண்ட சொற்களால் அவன் பெயரும், நாடும் தெரிந்து மகிழ்வடைந்தோம் என்பதனைப், ''பிறர் பிறர் கூற வழிக் கேட்டிசினே'' என்றார்.

Koviloor Digital Library

''நீர்ப்படு பருந்தின் இருஞ் சிறகு அன்ன நிலந்தின் சிதாஅர்'' (பதி. 2 : 19 – 20), ''வேற்று இழை நுழைந்த வேர் நனை சிதாஅர்'' (புற. 69 : 3), ''சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண'' (புற. 138 : 5), ''தொன்று படு சிதாஅர்'' (புற. 393 : 16), ''துரும்பு படு சிதாஅர்'' (புற. 398 : 19), ''மன்றப் பலவின் ..... இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்'' (புற. 128 : 1 – 2), ''முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி, மின்னுறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப'' (முரு. 84 – 85 'வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்'' (புற. 152 : 6), இழுதின் அன்ன வானிணஞ் செருக்கி'' (மலை. 244), ''கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கம்'' (புற. 247 : 2), ''இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு இனிது அருந்தி'' (புற. 320 : 14), ''என் இரும்பேர் ஒக்கல் கூர்ந்த எவ்வம் விட'' (புற. 393 : 10 – 11), ''வன்புலக் காட்டு நாட்டதுவே'' (நற். 59), ''மடைசெறி கடகத் தோளான்'' (சூடாமணி. 9 : 10), ''மணியன்ன நீர்'' (புற. 137 : 11), ''நளிமலை நாடன் நள்ளியும்'' (சிறு. 107) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கூதிர் – குளிர்; சிதார் – கந்தை; வருத்தம் – துன்பம்; உலைவு – மிடி, வறுமை; மான் கணம் – மான்திரள், மான் கூட்டம்; குருதி – இரத்தம்; கதிர் – ஒளி; திருமணி – நீலமணி; சென்னி – உச்சி; தொழுதனன் – வணங்கினன்; ஞெலிதீ – கடைந்த தீ; ஒக்கல் – சுற்றம்; வீறு – பெருமை; கலம் – அணிகலம்; காழ் – முத்துவடம்; கடகம் – வளை.

151

பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப,
விண் தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்,
கிழவன் சேட் புலம் படரின், இழை அணிந்து,
புன் தலை மடப் பிடி பரிசிலாக,
பெண்டிரும் தம் பதம் கொடுக்கும் வண் புகழ்க்

Koviloor Digital Library

கண்டீரக்கோன் ஆகலின், நன்றும்
முயங்கல் ஆன்றிசின், யானே; பொலந் தேர்
நன்னன் மருகன் அன்றியும், நீயும் முயங்கற்கு
ஒத்தனை மன்னே; வயங்கு மொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின், ஆடு மழை
அணங்கு சால் அடுக்கம் பொழியும் நும்
மணம் கமழ் மால் வரை வரைந்தனர், எமரே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

இளங் கண்டீரக்கோவும் இள விச்சிக்கோவும் ஒருங்கு இருந்தவழி, சென்ற பெருந்தலைச் சாத்தனார் இளங் கண்டீரக் கோவைப் புல்லி, இள விச்சிக்கோவைப் புல்லாராக 'என்னை என் செயப் புல்லீராயினீர்?' என, வன்பரணர் பாடியது.

துறை விளக்கம் : இருமன்னரது குடிஇயல்புகளையும் கூறிப் பாடுதலால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : முன்பேயும் முன்பேயும் பாடுவார் விரும்ப, விசும்பைப் பொருந்திய உச்சியையுடைய மலைப்பக்கத்துத் தம் கணவர் நெடுந்தூரம் செல்லின், அணிகலன் அணிந்த மகளிர் பாடுவார்க்குப் பரிசிலாகப் பிடியானைகளைத் தம் தகுதிக்கேற்ப கொடுக்கும் வண்புகழ் நிறைந்தவன் கண்டீரக்கோன்; ஆதலால் யாம் பெரிதும் தழுவிக்கொள்ளுதலை விரும்பினேம்; நீயோ பொன்னாற் செய்யப்பட்ட தேருடைய நன்னன் மரபின் வழிவந்தவன்; நீயும் தழுவுதற்குப் பொருந்தினாய்; ஆயினும் விளங்கும் மொழியையுடைய (எம்போல்) பாடுவார்க்கு அடைத்த கதவு காரணமாக, தெய்வம் உறையும் அரை மலைக்கண் பொழியும் மணநாறும் நும் உயர்ந்த மலையைப் பாடுதலை நீக்கினார் எம் சுற்றத்தார்; ஆதலால் நின்னைத் தழுவவில்லை.

Koviloor Digital Library

உரை விளக்கம் : பெருந்தலைச் சாத்தனார், இளவிச்சிக்கோவைத் தழுவாததற்குரிய காரணத்தைப் பாடியது. கண்டீரக்கோன் நாட்டில் மனைக்கிழவன் தொலைவில் செல்லினும், மனைக்கிழத்தி இரவலர்க்குப் பிடிகளை நல்கிச் சிறப்புச் செய்வர். ஆதலால் அவனைத் தழுவினேன். நின் முன்னோர் பெண்கொலை புரிந்த நன்னன் ஆவான்; நின் நாடு பாடி வருவார்க்கு கதவு அடைத்து மறுக்கும் தன்மையது; ஆதலால் எம்போல்வார் நின் விச்சிமலையைப் பாடுதல் ஒழிந்தனர்; அதனாலேயே நின்னைப் புல்லேன் என்றார். ''மடப்பிடி பரிசிலாகப் பெண்டிரும் தம் பதம் கொடுக்கும்'' என்றதால் ஆடவரும் தம் தரத்திற்கேற்பப் பரிசிலர்க்குக் களிற்றைக் கொடுப்பர் என்பதை உணர்த்தினார்.

''மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்'' (நற். 32), ''மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்'' (பட். 138), ''இரும்பிடிப் பரிசிலர் போல'' (அக. 311), ''பிடிக்கணம் சிதறும் பெயன்மழைத் தடக்கை'' (சிறு. 124), ''ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை, அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை'' (புற. 158 : 10 – 11), ''அணங்குடைச் சாரல் ... இறும்பில்'' (பெரு. 494 – 495), ''பீடு இன்று பெருகிய, திருவின் பாடுஇல் மன்னரைப் பாடன்மார் எமரே'' (புற. 375 : 20 – 21), ''மனையோள் பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும், ஊண் ஒலி அரவமொடு கைதூவாளே ... பரிசில் பரிசிலர்க்கு ஈய, உரவுவேல் காளையும் கைதூவானே'' (புற. 334 : 5 – 10) ''பெண் கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலியரோ அன்னை'' (குறு. 292), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வரைக் கவாஅன் – மலைப்பக்கம்; சேட்புலம் – நெடுந்தொலைவு இழை – ஆபரணம்; பிடி – பெண் யானை; பதம் – பரிசில்; மழை – முகில்; அணங்கு – தெய்வம்; அடுக்கம் – அரைமலை; வரைந்தனர் – நீக்கினார்; மால்வரை – உயர்ந்தமலை; எமர் – எம் இனத்தாரான புலவர்.

Koviloor Digital Library

152

வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ் வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ,
புழல் தலைப் புகர்க் கலை உருட்டி, உரல் தலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்,
வல் வில் வேட்டம் வலம் படுத்து இருந்தோன்,
புகழ்சால் சிறப்பின் அம்பு மிகத் திளைக்கும்
கொலைவன் யார் கொலோ? கொலைவன் மற்று இவன்
விலைவன் போலான்; வெறுக்கை நன்கு உடையன்;
ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின்,
சாரல் அருவிப் பய மலைக் கிழவன்,
ஓரிகொல்லோ? அல்லன்கொல்லோ?
பாடுவல், விறலி! ஓர் வண்ணம்; நீரும்
மண் முழா அமைமின்; பண் யாழ் நிறுமின்;
கண் விடு தூம்பின் களிற்று உயிர் தொடுமின்;
எல்லரி தொடுமின்; ஆகுளி தொடுமின்;
பதலை ஒருகண் பையென இயக்குமின்;
மதலை மாக் கோல் கைவலம் தமின்' என்று,
இறைவன் ஆகலின், சொல்லுபு குறுகி,
மூ ஏழ் துறையும் முறையுளிக் கழிப்பி,
'கோ' எனப் பெயரிய காலை, ஆங்கு அது
தன் பெயர் ஆகலின் நாணி, மற்று 'யாம்
நாட்டிடன் நாட்டிடன் வருதும்; ஈங்கு ஓர்
வேட்டுவர் இல்லை, நின் ஒப்போர்' என,
வேட்டது மொழியவும் விடாஅன், வேட்டத்தில்
தான் உயிர் செகுத்த மான் நிணப் புழுக்கோடு,
ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கி,
தன் மலைப் பிறந்த தாஇல் நன் பொன்,
பல் மணிக் குவையொடும் விரைஇ, 'கொண்ம்' என,
சுரத்திடை நல்கியோனே – விடர்ச் சிமை

Koviloor Digital Library

ஓங்கு இருங் கொல்லிப் பொருநன்,
ஓம்பா ஈகை விறல் வெய்யோனே!

திணை : பாடாண்திணை; துறை : பரிசில்விடை.

வல்வில்ஓரியை வன் பரணர் பாடியது.

துறை விளக்கம் : பரிசில் பெறவந்தவன் அதனைப் பெற்றாயினும், பெறாமல் ஆயினும் பரிசில் அளிப்பவனை நோக்கிக் கூறும் விடை. அரசன் தன் உள்ளம் மகிழும்படி தனது வெற்றியால் உண்டாய புகழைக் கூறிய பரிசிலர்க்கு பரிசிற்பொருளை வழங்கி, அவ்ர் இன்புறும்படி விடை கொடுத்து அனுப்புதல். ''வேந்தன்உள் மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு, ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும். ''மான் நிணப் புழுக்கோடு ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கி, தன் மலைப் பிறந்த தாஇல் நன்பொன் பல் மணிக்குவையொடு விரைஇ கொண்ம் என சுரத்திடை நல்கியோனே'' எனக் கூறியதால் பரிசில் விடைத் துறையாயிற்று.

உரை : யானையைக் கொன்று வீழ்த்திய சிறந்த தொடையையுடைய அம்பு, புலியின் அகன்ற வாயில் ஊடுருவிச் சென்று இறந்துபாட்டைச் செய்தது; பின் துளை பொருந்திய கொம்பையுடைய கலைமானை வீழ்த்தியது; பின் உரல்போலும் தலையையுடைய கேழலாகிய பன்றியைக் கொன்றது; பின் அதற்குப் பக்கத்தில் உள்ளதாகிய புற்றில் உள்ள உடும்பில் சென்று தைத்தது; அத்தகைய வலிய வில்லால் உண்டாகிய வேட்டத்தை வென்றிப்படுத்தியிருந்தவன், புகழமைந்த சிறப்பினையுடைய அம்பு ஏவும் தொழிலில் மிகச் சரியாக எய்துதற்குக் காரணமாகிய கொலைவன் யாரோ? அக்கொலைவன், விலை பொருட்டாக அவ்வுயிர்களைக் கொல்பவன் அல்லன்; அவன் செல்வம் மிக்குடையன்; சந்தனம் பூசிப் புலர்த்திய பரந்த மார்பினையுடையவன்; சாரலில் அருவிலையுடைய பயன்படுமலைக்குத் தலைவனாகிய

Koviloor Digital Library

ஓரியோ? அல்லனோ? அவனாகத்தான் இருத்தல் வேண்டும். யான் அவனைப் பாடுவேன்; விறலி! நீயும் ஒன்று பாடுவாயாக; நீங்களும் முழாவில் மார்ச்சனையை இடுமின்; யாழிலே பண்ணை நிறுத்துமின்; கண் திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை இசைமின்; சல்லியை வாசியுமின்; சிறுபறையை அறையுமின்; பதலையில் ஒருமுகத்தை மெல்லெனக் கொட்டுமின்; நமது பிறப்புணர்த்தும் கரியகோலைக் கையின்கண் தாருங்கள் என்று சொல்லி அணுகித் தலைவனாதலாலே இருபத்தொரு பாடற் துறையையும் முறையால் அவனைப் பாடி முடித்தேன்; முழை பொருந்திய உச்சியுடைய உயர்ந்த கொல்லிமலைக்குத் தலைவன்; பாதுகாவாத கொடைபொருந்திய வென்றியை விரும்புவோன்; பின்னர் வேந்தே! (கோவே) என்று அவன் பெயர் கூறிய காலத்து, அவ்விடத்து அவ்வார்த்தை தன் பெயராதலால் நாணி நின்றான். அவனிடத்து யாங்கள் 'நாட்டிடந்தோறும் நாட்டிடந்தோறும் சென்று வருவேம்; இவ்விடத்து ஒரு வேட்டுவரில்லை, நின்னை ஒப்போர்' என யாம் விரும்பியது கூறவும் அதற்கு இடந்தரானாய் நின்றான்; வேட்டையில் தான் எய்த மான் தசையினது புழுக்குடனே, பசு நெய்யை உருக்கினாற் போன்ற மதுவைத் தந்தனன்; தன் மலையில் பிறந்த வலியில்லாத நல்ல பொன்னைப் பல மணித்திரளுடன் கலந்து இதனைக் கொள்வீராக என்று சொல்லிச் சுரத்திடத்தே எமக்குத் தந்தனன்; அவன் வாழ்வானாக.

உரை விளக்கம் : வன்பரணர், தம் பாண் சுற்றத்துடன் கொல்லிமலையைச் சார்ந்த சுரத்தே சென்றபோது, வேட்டையாடும் பொருட்டு அங்கு வந்திருந்த வல்வில் ஓரியைக் கண்டு பரிசில் பெற்ற திறத்தை இப்பாடலில் பாடியுள்ளார். யானையை வீழ்த்த அம்பாகலின், 'விழுத்தொடை பகழி' என்றார். இதனை விடுத்த ஓரியை, 'வல்வில் வேட்டுவன்' என்றார். அதாவது மிக்க வன்மை உடையதும், ஒரே நேரத்தில் பலவற்றை ஊடுருவிச் செல்லும்படி அம்பை விரைவில் செலுத்துவதுமாகிய வில்வேட்டம். ஒரு தொடையில் எய்த அம்பு புலியைக் கொன்று, மானை உருட்டி,

Koviloor Digital Library

பன்றியை வீழ்த்தி, உடும்பில் சென்று செறிதலின், ''கொலைவன் யார் கொலோ கொலைவன் மற்றிவன்'' என்றார். ஓரியின் தோற்றத்தைக் கொண்டு, 'விலைவன் போலான் வெறுக்கை நன்குடையன்' என்று கூறினார். 'பாடுவல் விறலி! ஓர் வண்ணம்' என்றது, தன்னுடன் வந்த விறலியும் பாட்டு ஒன்றைப் பாடுவாயாக என்பதை உணர்த்தும் பொருட்டாகும்.

மேலும் தம்முடன் வந்த பாண் சுற்றமும் முழா, யாழ், பெருவங்கியம், சல்லி, சிறுபறை, பதலை போன்ற இசைக்கருவிகளைக் கொண்டு ஓரியின் புகழைப் பாடச் சொல்வதன் மூலம், அவர்கள் கொண்டு வந்த இசைக்கருவிகளின் பட்டியலை உணர்த்தியுள்ளார். ''மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி'' என்றது, வலிவு, மெலிவு சமம் என்னும் மூன்று தாளத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தாளம் முடித்துப் பாடும் பாடல்துறையை குறித்து நின்றது. அதுவன்றியும், இருபத்தொரு நரம்பால் தொடுக்கப்படும் பேரியாழ் எனினும் அமையும். 'களிற்றுயிர்' என்றது, ஆகுபெயரால் களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை குறித்தது. தன்பால் பேரன்பு கொண்டு, தனது புகழைத் தன்முன்னே பாடிய பரிசிலரை வறிதே அனுப்புதல் தகாது என உணர்ந்து, காட்டிடத்தே இருந்தாலும், வேட்டையாடிய மான் தசையும், மதுவும், பொன்னும், மணியும் தந்து அனுப்பிய வல்வில் ஓரியின் ஈகைத் திறத்தை, 'ஓம்பா ஈகை விறல் வெய்யோன்' எனப் பாராட்டினார்.

''செல்வத் தோன்றல் ஓர் வல்வில் வேட்டுவன்'' (புற. 150 : 7), அலையுருவக் கடலுருவத் தாண்டகை தன் னீண்டுயர்ந்த, நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா, உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி, மலையுருவி மரமுருவி மண்ணுருவிற்று ஒரு வாளி'' (கம்ப. குலமுறை. 26), ''கண்ணறுத்து இயற்றிய தூம்பு'' (பதி. 41 : 3), ''கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்'' (மலை. 6), ''நொடிதரு பாணிய பதலையும்'' (மலை. 11), ''வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்'' (குறு. 298), ''தேமுதிர்

Koviloor Digital Library

சிமையக் குன்றம் பாடும் நுண்கோல் அகவுநர் வேண்டின்'' (அக. 208 : 2 – 3), ''திண்வார் விசித்த முழவோடு ஆகுளி, நுண் உருக்குற்ற விளங்குஅடர் பாண்டில் ... கடி கவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி'' (மலை. 3 – 10), ''எந்நாடோ என நாடும் சொல்லான், யாரீரோ எனப் பேரும் சொல்லான்'' (புற. 150 : 22 – 23), ''பிறர் தன்னைப் பேணுங்கால் நாணலும்'' (திரி. 6), ''கொல்லி ஆண்ட வல்வில் ஓரி'' (புற. 158 : 5), ''ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி'', ''செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி'' (அக. 208 : 21 – 22. 209 : 15), ''தேற்றா ஈகையும் உளதுகொல்'' (புற. 140 : 9) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : பகழி – அம்பு; உழுவை – புலி; புகர்க்கலை – புள்ளிமான்; வெறுக்கை – செல்வம்; வண்ணம் – பாட்டு; களிற்றுயிர் – பெருவங்கியம்; எல்லரி – சல்லரி; ஆகுளி – சிறுபறை; மதலை மாக்கோல் – பிறப்புணர்த்தும் கோல், நுண்கோல்; மூவேழ்துறை – இருபத்தொரு பாடற்றுறை; கோ – வேந்து, அரசன்; வேட்டது – விரும்பியது; ஆன் – பசு; வேரி – மது; குவை – திரள்.

153

மழை அணி குன்றத்துக் கிழவன், நாளும்,
இழை அணி யானை இரப்போர்க்கு ஈயும்,
சுடர் விடு பசும் பூண், சூர்ப்பு அமை முன் கை,
அடு போர் ஆனா, ஆதன் ஓரி
மாரி வண் கொடை காணிய, நன்றும்
சென்றதுமன், எம் கண்ணுளங் கடும்பே;
பனி நீர்ப் பூவா மணி மிடை குவளை
வால் நார்த் தொடுத்த கண்ணியும், கலனும்,
யானை இனத்தொடு பெற்றனர், நீங்கி,
பசியாராகல் மாறுகொல் – விசி பிணிக்

Koviloor Digital Library

கூடு கொள் இன் இயம் கறங்க,
ஆடலும் ஒல்லார், தம் பாடலும் மறந்தே?

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

வல்வில் ஓரியை வன்பரணர் பாடியது.

துறை விளக்கம் : "நாளும் இழையணி யானை இரப்போர்க்கு ஈயும் ... அடுபோர் ஆனா ஆதன் ஓரி, மாரி வண்கொடை காணிய ... ஆடலும் ஒல்லார் தம் பாடலும் மறந்தே" என ஓரியின் கொடை இயல்பைக் கூறியமையால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : முகில் சூழ்ந்த மலைக்குத் தலைவன்; நாள்தோறும் பட்டம் முதலாகிய பூண்களை அணிந்த யானையை இரப்போர்க்கு வழங்குபவன்; சுடர் விடுகின்ற பசும்பொன்னால் செய்த பூணினையும், கடகம் அணிந்த முன்கையினையும் உடையவன்; கொல்லும் போரைச் செய்யும் தலைவன்; அத்தகைய ஆதன் ஓரியின் மழைபோலும் வண்கொடையைக் காண்பதற்காக எம்முடைய கூத்தச் சுற்றம் சென்றது. அச்சுற்றத்தார், குளிர்ந்த நீரில் பூக்காத மணி மிடைந்த குவளைப் பூவை, வெள்ளி நாரால் தொடுத்த பொன்னரி மாலையினையும், பிற அணிகலங்களையும், யானை இனத்தொடு பெற்றனர்; பரிசில் பெற்றதோடு பசியும் தீர்ந்தனர்; ஆகையினால் தம் தொழிலாகிய பாடுதலையும் மறந்தனர்; வாரால் வலித்துப் பிணிக்கப்பட்ட பல கருவிகளும் தொகுதி கொண்ட இன்னியங்கள் ஒலிப்ப ஆடுதலையும் மறந்தனர்.

உரை விளக்கம் : 'நாளும் இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்' என்றதால், ஓரியின் கொடைத் தன்மையைச் சிறப்பித்தார். மணிகளைக் கொண்டு பொன்னால் செய்யப்பட்ட குவளையை 'மணிமிடை குவளை' என்றும், ஏனைக் குவளைப் பூவினின்றும் பிரித்தறியும் பொருட்டு, 'பனிநீர்ப் பூவா ... குவளை' என்றும் கூறினார். பிறர்பால் சென்று இரக்கும் வறுமை உள்ளவிடத்து, தாம் கற்ற பாடலை, ஆடலை நாளும் பயில வேண்டும்;

Koviloor Digital Library

இவர்கள் வறுமை தீர்ந்து வளமுடையராயினர் என்பதால், ''பசியாராகல் ... ஆடலும் ஒல்லார் தம் பாடலும் மறந்தே'' எனத் தம் தொழிலையே மறந்து மாறிவிட்டனர் என்றார்.

''உயர் மருப்பு யானைப் புகர் முகத்து அணிந்த, பொலம் ... பரிசில் பரிசிலர்க்கு ஈய உரவுமேல் காளையும் கை தூவானே'' (புற. 334 : 8 – 11), ''நாடொறும் நன்கலம் களிற்றொடு கொணர்ந்து'' (புற. 148 : 3), ''நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி'' (அக. 124 : 1), ''சூர்ப்புறு கோல்வளை செறிந்த முன்கை'' (அக. 142 : 17), ''மாரி அன்ன வண்மை'' (புற. 133 : 6), ''வரையா மரபின் மாரி போல'' (புற. 142 : 3), ''பாணன் சூடிய பசும்பொன் தாமரை, மாண்இழை விறலி மாலையொடு விளங்க'' (புற. 141 : 1 – 2), ''வாடா மாலை பாடினி அணியப், பாணன் சென்னிக் கேணி பூவா, எரி மருள் தாமரை பெருமலர் தயங்க'' (புற. 364 : 1 – 3) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மழை – முகில்; சூர்ப்பு – வளைவு; ஆகுபெயராய் கடகத்திற்கு ஆயிற்று; கடும்பு – சுற்றம்; வால் – வெண்மை (வெள்ளிக்கு ஆகுபெயர்); இன்னியம் – இனிய இசைக்கருவிகள்; கறங்க – ஒலிக்க.

154

திரை பொரு முந்நீர்க் கரை நணிச் செலினும்,
அறியுநர்க் காணின், வேட்கை நீக்கும்
சில் நீர் வினவுவர், மாந்தர்; அது போல்,
அரசர் உழையராகவும், புரை தபு
வள்ளியோர்ப் படர்குவர், புலவர்; அதனால்,
யானும், 'பெற்றது ஊதியம்; பேறு யாது?' என்னேன்;
உற்றனென் ஆதலின் உள்ளி வந்தனனே;
'ஈ' என இரத்தலோ அரிதே; நீ அது

Koviloor Digital Library

நல்கினும், நல்காய் ஆயினும், வெல் போர்
எறி படைக்கு ஓடா ஆண்மை, அறுவைத்
தூ விரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண் பல இழிதரும் அருவி நின்
கொண் பெருங் கானம், பாடல் எனக்கு எளிதே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் துறை.

கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது.

துறை விளக்கம் : "உற்றனென் ஆதலின் உள்ளி வந்தனனே, ஈயென இரத்தலோ அரிதே, நீ அது நல்கினும்" எனப் பரிசில் வேண்டி உரைத்தலால் பரிசில் துறையாயிற்று.

உரை : திரை அலைக்கும் கடலின் கரைப்பக்கத்தே செல்லினும், உண்ணு நீர் இருக்கும் இடத்தை அறிந்த அறிவாரைக் கண்டால், உலகத்து மக்கள் நீர் வேட்கையைத் தணிக்கும் சிறிய நீரைக் கேட்பர்; அதுபோல அறிவுடையோர் வேந்தர் பக்கத்தே இருந்தாலும், குற்றம் தீர்ந்த வள்ளியோராகிய கொடை வள்ளலை நினைத்துச் செல்வர்; யான் வறுமையுற்றேன்; ஆதலின் யானும் பெற்றதனைப் பயனாகக் கொண்டு பெற்ற பொருள் சிறிதாயினும், இவன் செய்தது என்னென்று இகழேன்; நின்னை நினைத்து வந்தேன்; எனக்கு ஈயாய் என்று இரத்தல் அரிது; அது கண்டு நீ பரிசில் தரினும், தாராதிருப்பினும் போர்க்களத்தில் புறக்கிடாத ஆண்மையையும், துகிலின் தூயவிரியை ஒப்ப, உச்சியினின்றும் பலவாய் இழியும் குளிர்ந்த அருவியுடைய நினது நாடான கொண்கானத்தையும் பாடுதல் எனக்கு எளிது.

உரை விளக்கம் : கடற்கரையின் அருகில் இருப்பினும் கடல்நீர் வேட்கை தணிவிக்காது; இனிய நீர்நிலை இருக்குமிடத்தை அறிந்தவரைக் காணின், அதனை அடைவதற்குரிய நெறியைக் கேட்டுச் சென்று நீர்வேட்கை தணிப்பர். ஆதலின் "அறியுநர்க்

Koviloor Digital Library

காணின் வேட்கை நீக்கும் சின்னீர் வினவுவர்'' என்றார். மிகப் பெரும் செல்வமுடைய வேந்தர் பக்கத்தே இருப்பினும் அவரிடத்து வண்மை இல்லையாயின் அச்செல்வத்தால் பயனொன்றும் இல்லை; அதனால் புலவர் கொடை வள்ளலை நாடியே செல்வர். இதனைப் ''புரைதபு வள்ளியோர்ப் படர்குவர் புலவர்'' எனக் கூறினார். பயன் தராத உப்பு நீரையுடைய பரந்த கடற்கரைக்குப் பயன் தராத அரசரையும், பயன் தரும் சிறிய நீரையுடைய நீர் நிலைக்குக் கொடைத் தன்மை பொருந்திய வள்ளியோரையும், நீர்வேட்கையால் தவிப்போர்க்கு வறுமையால் தவிக்கும் புலவரையும் ஒப்பாகக் காட்டுவர். பெற்றது சிறிதாயினும் அதன் நிறைவு குறைவு காணேன் என்பார், ''பேறு யாது என்னேன்'' என்றார். அவ்வாறு காணாமைக்குக் காரணம் தானுற்ற வறுமையே என்பதை, ''உற்றெனன் ஆதலின்'' என்றார். ஈயென இரத்தல் எனக்கு அரிது; நின்னையும், நின் கொண்கானத்தையும் பாடுதல் எனக்கு எளிது என்பார், ''ஈயென இரத்தலோ அரிதே ... கொண்பெருங்கானம் பாடல் எனக்கு எளிதே'' என்றார்.

''தெண் நீர்ப் பரப்பின் இமிழ் திரைப் பெருங்கடல், உண்ணார் ஆகுப நீர் வேட்டோரே, ஆவும் மாவும் சென்று உண கலங்கி, சேற்றொடு பட்ட சிறுமைத்து ஆயினும் உண்நீர் மருங்கின் அதர் பலவாகும்'' (புற. 204 : 5 – 9), ''கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலை சார்ந்தும் உப்பு ஈண்டு உவரி பிறத்தலால்'' (நாலடி. 245), ''கடல் பெரிது, மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல், உண்ணீரும் ஆகிவிடும்'' (மூதுரை. 12), ''வள்ளியோர் படர்ந்து புள்ளின் போகி'' (புற. 47 : 1), ''ஈயென இரத்தல்'' (புற. 204 : 1), ''ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே'' (புற. 165 : 15), ''ஓடாப் பூட்கை மறவர்'' (பதி. 34, 57), ''ஓடாப் பூட்கை வேந்தன்'' (அக. 100 : 8), ''வேறுபஃறுகிலின் நுடங்கி ... இழிதருமருவி'' (முரு. 296 – 316), ''அவிர் துகில் புரையும் அவ்வெள்ளருவி'' (குறி. 55), ''பொன்படு கொண்கான நன்னன்'' (நற். 391 : 6) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : முந்நீர் – கடல்; உழையர் – அருகிருப்பவர்; புரை – குற்றம்; வள்ளியோர் – கொடையாளர்; ஊதியம் – பொருள்; உள்ளி – நினைத்து; அறுவை – துகில், ஆடை; ஓடா ஆண்மை – போரில் புறக்கொடாத ஆண்மை.

155

வணர் கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ,
'உணர்வோர் யார், என் இடும்பை தீர்க்க?' என,
கிளக்கும், பாண! – கேள், இனி – நயத்தின்
பாழ் ஊர் நெருஞ்சிப் பசலை வான் பூ
ஏர் தரு சுடரின் எதிர்கொண்டாஅங்கு,
இலம்படு புலவர் மண்டை விளங்கு புகழ்க்
கொண் பெருங் கானத்துக் கிழவன்
தண் தார் அகலம் நோக்கின, மலர்ந்தே.

திணை : பாடாண்திணை; **துறை :** பாணாற்றுப்படை.

கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது.

துறை விளக்கம் : "இடும்பை தீர்க்க என கிளக்கும் பாண! ... இலம்படுபுலவர் மண்டை விளங்கு புகழ்க் கொண்பெருங் கானத்துக் கிழவன் தண்தார் அகலம் நோக்கின மலர்ந்தே" எனப் பாணனை ஆற்றுப்படுத்தியதால் பாணாற்றுப்படைத் துறையாயிற்று.

உரை : வளைந்த கோட்டையுடைய சிறிய யாழை வறுமையால் வாடிய இடையின் ஒரு பக்கத்தே தழுவி, எனது துன்பத்தைத் தீர்க்கவல்ல அறிவோர் யார் எனக் கேட்கும் பாணனே! யான் சொல்வதை இப்பொழுது கேட்பாயாக; பாழூரில் நெருஞ்சியின் பொன்னிறப்பூ, எழுஞாயிறை எதிர்கொண்டு மலரும்; அதுபோல வறுமையுற்ற யாழ்ப் புலவரது ஏற்கும் உண்கலம்,

Koviloor Digital Library

விளங்கிய புகழையுடைய கொண்பெருங்கானங்கிழானது குளிர்ந்த மாலை அணிந்த மார்பகத்தை மலர்ந்து நோக்கின.

உரை விளக்கம் : கொண்கானங் கிழானது கொடை நலத்தைப் பாணனுக்கு எடுத்துரைத்துப் பாடியது. அவன் பாணர் கூட்டத்துக்கு வேண்டுவன நல்கி, அவரது வறுமையைப் போக்கி ஆதரிக்கும் சிறப்பினை உடையவன். இதனை உணர்த்த நெருஞ்சிப்பூவையும், எழுஞாயிற்றையும் உவமைப்படுத்திக் காட்டுகிறார். எழுஞாயிறு அரசனுக்கும், நெருஞ்சிப்பூ வறுமையால் வாடிய பாணர்க்கும் ஒப்புமையாயின. ஞாயிற்றைக் கண்டு பூ மலரும். அதைப்போல மன்னனைப் பார்த்து வறுமை தீர்த்த பாணரின் முகமும் மலரும். இதனை உணர்த்த, ''பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ ஏர் தரு சுடரின் எதிர் கொண்டாங்கு'' எனக் கூறினார். ''மண்டை ... அகலம் நோக்கின மலர்ந்தே'' என்பதன் கருத்து, மன்னன் கொடை அளிக்கும் பொருள் அவன் மார்பின் வலிமையால், முயற்சியால் உளதாகலின் அவ்வாறு கூறினார்.

''வணரமை நல்யாழ்'' (பதி. 41 : 2), ''ஓங்கு மலைநாடன் ஞாயிறு அனையனென் தோழி, நெருஞ்சி அனைய என் பெரும் பணைத் தோளே'' (குறு. 315) வானிடை சுடரொடு திரிதரு நெருஞ்சி போல'' (அக. 336), ''நீள் சுடர் நெறியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்'' (சீவக. 461), ''இலம்படு புலவர் ஏற்றகை ஞெமர'' (பரி. 10 : 126), ''இலம்படு புலவர் ஏற்றகை நிறைய'' (மலை. 576), ''கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரென்'' (புற. 103 : 3), ''ஏலாது கவிழ்ந்த என் இரவன் மண்டை மலர்ப்போர் யாரென வினவலின்'' (புற. 179 : 2 – 3), ''அடல் நசை மறந்த எம் குழிசி மலர்க்கும் கடனறியாளர் ... வள்ளன்மையின் எம் வரைவோர் யார் என'' (புற. 393 : 4 – 6) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வணர் – வளைவு; புடை – இடை; இடும்பை – துன்பம்; சுடர் – ஞாயிறு; இலம்படு – வறுமை; மண்டை – உண்கலம்; தார் – மாலை; அகலம் – மார்பு.

Koviloor Digital Library

156

ஒன்று நன்கு உடைய பிறர் குன்றம்; என்றும்
இரண்டும் நன்கு உடைத்தே கொண் பெருங் கானம்;
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்து உணக் கிடப்பினும் கிடக்கும்; அஃதான்று
நிறை அருந் தானை வேந்தரைத்
திறை கொண்டு பெயர்க்கும் செம்மலும் உடைத்தே.

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது.

துறை விளக்கம் : ''என்றும் இரண்டு நன்கு உடைத்தே கொண்பெருங்கானம்'' என்று கொண்கானத்தின் சிறப்பைக் கூறுவதன்மூலம், அம்மலைக்கு உரியோனின் கொடை இயல்பைக் கூறினமையால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : பிறருடைய மலைகள் வண்மை, வலிமை ஆகிய இரண்டு நன்மைகளில் ஒன்றை மட்டும் உடையன. ஆனால் கொண் பெருங்கானம் மலை எந்நாளும் வண்மை, வலிமை ஆகிய இரண்டு நன்மைகளும் உடைத்து; ஒன்று, தன்பால் பரிசில் விரும்பிப்போன இரப்போர் காரணமாக, தான் அவர்க்கு முன்பு கடன் கொடுத்தாரால் வளைப்புண்டுக் கிடப்பினும் கிடக்கும்; மற்றொன்று கொண்கானங் கிழானுக்குத் திறை செலுத்தி மீளும் சிற்றரசர்களால் சூழப்பட்டிருக்கும்.

உரை விளக்கம் : கொண்கானங்கிழானின் கொடைச் சிறப்பையும், வென்றிச் சிறப்பையும் போற்றிப் பாடியது. கொண் பெருங்கானக் குன்றத்துக்கும், ஏனைக் குன்றங்களுக்கும் உள்ள வேற்றுமையை இதில் கூறியுள்ளார். கொண்பெருங்கானக் குன்றம் வண்மை, வலிமை ஆகிய இரு நன்மைகளை உடைத்து என்பதை, ''இரண்டு நன்குடைத்தே கொண்பெருங்கானம்'' என்றார்.

Koviloor Digital Library

ஏனைக் குன்றங்கள் ஒரு நன்மை உடைத்து என்பதை ''ஒன்று நன்கு உடைய பிறர் குன்றம்'' என்று கூறினார். ''இரவலர் சுட்டி'' என்றதால், இரவலர் புகழ்ந்துப் பாடத் தொடுத்துண்ணக் கிடக்கினும் கிடக்கும் எனவும், இரவலர் எமது எமது என்று கூறுபோட்டு உண்ணக் கிடக்கினும் கிடக்கும் எனவும் பொருள்படும்.

''நிறையருந் தானை வெல்போர் மாந்தரன் பொறையன்'' (அக. 142 : 4 – 5), ''நிறையருந்தானை வேந்தனும் நேர்ந்து'' (சிலப். 25 : 178), ''நிறையருந் தானையொடு ... நீங்கி'' (மணி. 9 : 26 – 27), ''பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கவர் தமது எனத் தொடுக்குவர் ஆயின்'' (புற. 135 : 16 – 17) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : நச்சி – விரும்பி; தானை – படை; திறை – கப்பம்; செம்மல் – தலைமை.

157

தமர் தற் தப்பின் அது நோன்றலும்,
பிறர் கையறவு தான் நாணுதலும்,
படைப் பழி தாரா மைந்தினன் ஆகலும்,
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்,
நும்மோர்க்குத் தகுவன அல்ல; எம்மோன்,
சிலை செல மலர்ந்த மார்பின், கொலை வேல்,
கோடற் கண்ணி, குறவர் பெருமகன் –
ஆடு மழை தவிர்க்கும் பயம் கெழு மீமிசை,
எல் படு பொழுதின், இனம் தலைமயங்கி,
கட்சி காணாக் கடமான் நல் ஏறு
மட மான் நாகு பிணை பயிரின், விடர் முழை
இரும் புலிப் புகர்ப் போத்து ஓர்க்கும்
பெருங் கல் நாடன் – எம் ஏறைக்குத் தகுமே.

Koviloor Digital Library

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

ஏறைக் கோனைக் குறமகள் இளவெயினி பாடியது.

துறை விளக்கம் : "தமர் தற் தப்பின் அது நோன்றலும் ... நும்மோர்க்குத் தகுவன அல்ல" என்று ஏறைக்கோனின் இயல்புகளை எடுத்துரைத்தலால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : தனக்குரியோராகிய தமர் பிழை செய்தால் அதனைப் பொறுத்தலும், பிறர் வறுமை கண்டு தான் நாணுதலும், படையிடத்துப் பிறர் பழிக்கப்படாத வலியனாதலும், வேந்தர் அவைக்களத்தில் மேம்பட்டு நடத்தலும் ஆகிய பண்புகள் நும்மால் மதிக்கப்படும் தலைவர்களுக்குத் தகுவன அல்ல; எம் தலைவன் வில்லை முழுமையாக வலித்தலான் அகன்ற மார்பினையும், கொல்லும் வேலினையும், காந்தட்பூக் கண்ணியையும் உடையவன்; குறவர்க்குத் தலைவன்; இயங்குகின்ற முகிலைத் தனது உயரத்தால் தடுக்கும் பயன்பொருந்திய மலையை உடையவன்; அம்மலை உச்சிக்கண் ஞாயிறு மறைகின்ற, மாலைக் காலத்தில் காட்டகத்தே இனத்தினின்றும் பிரிந்து, தான் சேரும் சேர்க்கையைக் காணாத கலைமான் பெண்மானைக் (பிணையை) குரலால் அழைக்கும். அவ்வோசையை மலைக்குகையில் கிடக்கும், புகர் நிறத்தினையுடைய ஆண் புலி செவி தாழ்த்துக் கேட்கும். அத்தகைய தன்மை உடைய மலைநாடன் ஆகிய எம் ஏறைக்கோனுக்கே அப்பண்புகள் பொருந்தும்.

உரை விளக்கம் : ஏறைக்கோனின் பண்புகளைச் சிறப்பித்துப் பாடியது. தமக்கு வேண்டிய சுற்றத்தார் பிழை செய்யின் அதனைப் பொறுத்தல் சிறந்த பண்பாகும் என்பதால், "தமர் தற் தப்பின் அது நோன்றல்லும்" என்றார். பிறர் வறுமை கண்டவிடத்து, அதனை முன்பே கண்டு தீர்க்காமை தமது குற்றமாகக் கருதி நாணுதல் சான்றோர்க்கு இயல்பாதலின், "பிறர் கையறவு தான் நாணுதலும்" என்றார். போர்க்களத்தில் புறக்கிடாத ஆண்மை உடையனாதலால், "படைப்பழி தாரா மைந்தினன்" என்று குறித்தார்.

Koviloor Digital Library

அறிவு ஆண்மை, பொருள், படைத்திறனால் சிறந்தவர்களுக்கு அல்லது ஏனையோர்க்கு வேந்துடை அவைக்கண் பெருமித நடை தோன்றாது. ஆகையால் அச்சிறப்புடைய ஏறைக்கோனின் பெருமிதத்தைச் சிறப்பித்து, ''வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்'' என்றார்.

''அன்பெனப்படுவது தன் கிளை செறாமை'' (கலி. 133), ''குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை'' (கொன்றைவேந்தன். 18), ''குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை'' (வில்லிபாரதம், கிருட்டினன் தூது. 17), ''நண்பொன்றித் தம்மாலே நாட்டப் பட்டார்களைக் கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார், பண் கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்! யாருளரோ, தங்கன்று சாக்கறப்பார்'' (பழ. 16), ''சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்'' (குறள். 524), ''கோடல் நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ'' (நெடு. 5 – 6), ''மழை அண்ணாப்ப நீடிய நெடுவரை'' (புற. 166 : 32), ''மழை மிசை அறியா மால்வரை அடுக்கம்'' (புற. 200 : 4), எனவரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : தமர் – தனக்குச் சிறந்தோர் (உறவினர், சுற்றத்தார்); நோன்றல் – பொறுத்தல்; கையறவு – வறுமை, மிடிமை; நாணுதல் – வெட்கப்படுதல்; மைந்து – வலிமை; அவை – அவைக்களம், சபை; சிலை – வில்; கோடல் – காந்தள்; மீமிசை – மலைஉச்சி; எற்படுபொழுது – ஞாயிறு மறையும் மாலைக்காலம்; பிணை – பெட்டை.

158

முரசு கடிப்பு இகுப்பவும், வால் வளை துவைப்பவும்,
அரசுடன் பொருத அண்ணல் நெடு வரை,
கறங்கு வெள் அருவி கல் அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும்; பிறங்கு மிசைக்

Koviloor Digital Library

கொல்லி ஆண்ட வல் வில் ஓரியும்;
காரி ஊர்ந்து பேர் அமர்க் கடந்த,
மாரி ஈகை, மறப் போர் மலையனும்;
ஊராது ஏந்திய குதிரை, கூர் வேல்,
கூவிளங் கண்ணி, கொடும் பூண், எழினியும்;
ஈர்ந் தண் சிலம்பின் இருள் தூங்கு நளி முழை,
அருந் திறல் கடவுள் காக்கும் உயர் சிமை,
பெருங் கல் நாடன் பேகனும்; திருந்துமொழி
மோசி பாடிய ஆயும்; ஆர்வம் உற்று
உள்ளி வருநர் உலைவு நனி தீர,
தள்ளாது ஈயும் தகைசால் வண்மை,
கொள்ளார் ஓட்டிய, நள்ளியும் - என ஆங்கு
எழுவர் மாய்ந்த பின்றை, 'அழிவரப்
பாடி வருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கு என, விரைந்து, இவண்
உள்ளி வந்தனென், யானே; விசும்புறக்
கழை வளர் சிலம்பின் வழையொடு நீடி,
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று,
முட் புற முது கனி பெற்ற கடுவன்
துய்த் தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்,
அதிரா யாணர், முதிரத்துக் கிழவ!
இவண் விளங்கு சிறப்பின், இயல் தேர்க் குமண!
இசை மேந் தோன்றிய வண்மையொடு,
பகை மேம்படுக, நீ ஏந்திய வேலே!

திணை : பாடாண்திணை; துறை : வாழ்த்தியல்; பரிசில் கடாநிலையும் ஆம்.

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

துறை விளக்கம் : *அரசனை, தலைவனை வாழ்த்துதல் வாழ்த்தியல் எனப்படும். "இயல்தேர்க் குமண! இசை மேந்தோன்றிய வண்மையொடு பகைமேம்படுக நீ ஏந்திய வேலே" என வாழ்த்தியதால்*

Koviloor Digital Library

வாழ்த்தியல் துறையாயிற்று. ''பாடி வருநரும் பிறரும் கூடி, இரந்தோர் அற்றம் தீர்க்கு என'', பரிசில் வேண்டியதால் பரிசில் கடாநிலைத் துறையுமாயிற்று.

உரை : முரசு அறையவும், வெண்சங்கு முழங்கவும், மூவேந்தருடன் பொருத தலைமையையும், நெடிய மலையில் ஒலிக்கும் வெள்ளருவி கல்லை உருட்டி ஒழுகும் பறம்பு மலையையும் உடைய வேந்தன் பாரி; உயர்ந்த உச்சி பொருந்திய கொல்லி மலையை ஆட்சிப்புரிந்தவன் வல்வில்ஓரி; காரி என்னும் பெயருடைய குதிரையைச் செலுத்திப் பெரும்போரை வென்ற, மாரி போலும் கொடையையும், மறப்போரினையும் உடையவன் மலையமான் திருமுடிக்காரி; ஊராத குதிரையென்னும் மலையையும், கூர்வேலையும், கூவிளங்கண்ணியையும் (வில்வமாலை), வளைந்த பூணினையும் உடையவன் எழினி அதியமான்; மிகக் குளிர்ந்த மலையின்கண் இருள் செறிந்த பெருங்குகையினையும், அருந்திறலையும், தெய்வம் காக்கும் உயர்ந்த சிகரங்களையும் உடைய மலைநாட்டுக்குரியவன் பேகன்; திருந்திய சொல்லையுடைய மோசி என்னும் புலவனால் பாடப்பட்டவன் ஆய்அண்டிரன்; ஆசைப்பட்டுத் தன்னை நினைந்து வருவாரின் வறுமை மிகவும் நீங்கத் தவிராது கொடுக்கும் தகை சான்ற கொடையினையும், பகைவரைத் துரத்திய வெற்றியுமுடையவன் கண்டீரக்கோப்பெரு நள்ளி; மேற்சொல்லப்பட்ட ஏழு வள்ளல்களும் இறந்தபின்பு கண்டார்க்கு இரக்கம் வரப் பாடி வருவாரும் பிறரும் கூடி இரந்தோரது துன்பத்தைத் தீர்ப்பவன் யானென்று நீ இருத்தலால் விரைந்து இவ்விடத்து பரிசு பெற நினைந்து வந்தேன் யான்; வானத்தைப் பொருந்தும்படி மூங்கில் வளர்ந்த மலையில், சுரபுன்னையோடு ஓங்கி, ஆசினி மரத்தோடு அழகுபெற்ற பலாமரத்தைக் கண்டது ஆண்குரங்கு; பலாவிற்கு ஆசைப்பட்டு முள்ளைப் புறத்தேயுடைய முதிர்ந்த பலாப்பழத்தைப் பெற்ற ஆண் குரங்கு, பஞ்சுபோலும் மயிருடைய தலையினையுடைய பெண்குரங்கைக் கையால் குறிசெய்து அழைத்தது; அத்தகைய இடையறாத புதுவருவாயினையுடைய முதிரம் என்னும் மலைக்குத் தலைவனே!

Koviloor Digital Library

உலகம் முழுவதிலும் விளங்குகின்ற தலைமையினையும், இயற்றப்பட்ட தேரினையும் உடைய குமணனே! நீ ஏந்திய வேல், புகழ் மேம்பட்ட கொடையுடனே பகைவரிடத்து உயர்வதாக.

உரை விளக்கம் : கடையெழு வள்ளல்களுக்குப் பிறகு, இரப்போரின் வறுமை தீர்த்தற்குக் காரணமாக உள்ள குமணனைப் பெருஞ்சித்திரனார் வாழ்த்திப் பாடியது. முரசும், சங்கும் முழங்கப் பாரியுடன் போர் செய்தவர் மூவேந்தராதலின், ''அரசுடன் பொருத அண்ணல்'' என்று பாரியைக் குறிப்பிட்டார். கொல்லிமலைக்குரிய ஓரியை, ''கொல்லி ஆண்ட வல்வில் ஓரி'' என்றார். காரி என்னும் குதிரையை உடைய மலையமான் திருமுடிக்காரியை, ''காரி ஊர்ந்து ... மறப்போர் மலையனும்'' என்றார். ''ஊராது ஏந்திய குதிரை ... எழினியும்'' என்றது, எழினி அதியமானுக்குரிய குதிரைமலையைக் குறித்தது. ''அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப் பெருங்கல் நாடன் பேகன்'' என்றதால், பேகனது பொதினிமலையில் (பழனி) முருகன் கோயில் கொண்டிருப்பதைக் குறிப்பால் உணர்த்தினார். ''திருந்து மொழி மோசி பாடிய ஆயும்'' என்றது, உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரைக் குறித்தது. இவர் ஆய்அண்டிரனைப் பலபாடல்களில் போற்றிப் பாடியுள்ளார்.

''நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்'' (புற. 109 : 2), ''கடந்தடு தானை மூவிரும் கூடி'' (புற. 110 : 1), ''முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை, படுமணி யானை பறம்பின் கோமான்'' (புற. 201 : 4 – 5), ''வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன் ... ஓங்கு இருங்கொல்லிப் பொருநன், ஓம்பா ஈகை விறல் வெய்யோனே'' (புற. 152 : 31 – 32), ''முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில் ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி'' (அக. 209 : 12 – 16), ''புரவு எதிர்ந்து, வானம் நாண வரையாது சென்றோர்க்கு, ஆனாது ஈயும் கவிகை வண்மைக் கடுமான் கோதை'' (புற. 54 : 6 – 7), ''ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும், திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும், வானத்து அன்ன வண்மையும் மூன்றும் உடையை ஆகி இல்லோர் கையற'' (புற. 55 : 13 – 15),

Koviloor Digital Library

''ஊராக் குதிரைக் கிழவ'' (புற. 168 : 14), ''நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி'' (அக. 372 : 9), ''உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல், அரவக் கடல்தானை அதிகன்'' (சிறு. 102 – 103), ''கங்குல் துயில் மடிந்தன்ன தூங்கு இருள் இறும்பு'' (புற. 126 : 7), ''ஆடு மழை, அணங்கு சால் அடுக்கம் பொழியும் நும், மணங்கமழ் மால்வரை'' (புற. 151 : 10 – 12), ''வானம் வாய்த்த வளமலைக் கவா அன், கான மஞ்ஞைக்குக் களங்கம் நல்கிய, அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் பேகனும் ... காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரிக்குதிரை ஓரியுமென வாங்கு ... எழுவுறழ் திணிதோள் எழுவர்'' (சிறு. 84 – 113), ''நின் நசை வேட்கையின் இரவலர் வருவர் அது, முன்னம் முகத்தின் உணர்ந்து அவர், இன்மை தீர்த்தல் வன்மையானே'' (புற. 3 : 24 – 26), ''நல்லிசைக் குமணன் மட்டு ஆர் மறுகின் முதிரத்தோனே'' (புற. 160 : 13), ''பழம் தூங்கு முதிரத்துக் கிழவன், திருந்துவேல் குமணன் நல்கிய வளனே'' (புற. 163 : 8 – 9), ''வென்று வென்று அடு களத்து உயர்க நும் வேலே'' (புற. 58 : 29), என வரும் பாடற்பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : இகுப்பவும் – அறையவும்; துவைப்பவும் – முழங்கவும்; பேரமர் – பெரும்போர்; ஈகை – கொடை; மாரி – மழை; ஊராது ஏந்திய குதிரை – குதிரைமலை; கூவிளங்கண்ணி – வில்வமாலை; உலைவு – வறுமை; தகைசால் – கூறுபாடு; விசும்பு – வானம்; கழை – மூங்கில்; சிலம்பு – மலை; வழை – சுரபுன்னை; ஆசினி – ஆசினிமரம்; கடுவன் – ஆண்குரங்கு; மந்தி – பெண்குரங்கு; யாணர் – புது வருவாய்; இசை – புகழ்.

159

'வாழும் நாளோடு யாண்டு பல உண்மையின்,
தீர்தல் செல்லாது, என் உயிர்' எனப் பல புலந்து,

Koviloor Digital Library

கோல் காலாகக் குறும் பல ஒதுங்கி,
நூல் விரித்தன்ன கதுப்பினள், கண் துயின்று,
முன்றில் போகா முதிர்வினள் யாயும்;
பசந்த மேனியோடு படர் அட வருந்தி,
மருங்கில் கொண்ட பல் குறுமாக்கள்
பிசைந்து தின, வாடிய முலையள், பெரிது அழிந்து,
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந் தளிர் கொய்துகொண்டு, உப்பு இன்று,
நீர் உலையாக ஏற்றி, மோர் இன்று,
அவிழ்ப் பதம் மறந்து, பாசடகு மிசைந்து,
மாசொடு குறைந்த உடுக்கையள், அறம் பழியா,
துவ்வாளாகிய என் வெய்யோளும்;
என்றாங்கு, இருவர் நெஞ்சமும் உவப்ப - கானவர்
கரி புனம் மயக்கிய அகன் கண் கொல்லை,
ஐவனம் வித்தி, மையுறக் கவினி,
ஈனல் செல்லா ஏனற்கு இழுமெனக்
கருவி வானம் தலைஇ யாங்கும்,
ஈத்த நின் புகழ் ஏத்தி, தொக்க என்,
பசி தினத் திரங்கிய, ஒக்கலும் உவப்ப -
உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்,
தவிர்ந்து விடு பரிசில் கொள்ளலென்; உவந்து, நீ
இன்புற விடுதி ஆயின், சிறிது
குன்றியும் கொள்வல், கூர் வேற் குமண!
அதற்பட அருளல் வேண்டுவல் - விறற் புகழ்
வசை இல் விழுத் திணைப் பிறந்த
இசை மேந் தோன்றல்! நிற் பாடிய யானே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : பரிசில் கடாநிலை என்பது ஒரு துறை; 'யாவரும் பரிசில் பெற்றார்; யான் பெற்றிலன்' எனத் தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை. ''பசிதினத் திரங்கிய ஒக்கலும் உவப்ப ... உவந்து நீ இன்புற விடுதியாயின் சிறிது குன்றியும் கொள்வல் ... குமண!'' எனப் பரிசில் கேட்டுப் பாடியதால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : கூரிய வேலையுடைய குமண! வென்றிப் புகழுடைய, பழிஇல்லாத சிறந்த குடியில் பிறந்த இசை மேம்பட்ட அண்ணலே! என் தாய், தனக்குச் சென்ற ஆண்டுகள் பலவாதலின், எனது உயிர் இன்னும் போகாமல் இருக்கின்றதே என்று சொல்லி, வாழும் நாளோடு பலவாக வெறுத்துப் பேசுகிறாள். தான் கையில் பிடித்த கோல்தடியைக் காலாகக் கொண்டு மெதுவாகச் சிறுக அடியிட்டு நடக்கிறாள்; நூலை விரித்தாற் போன்ற நரைத்த மயிரினை உடையவள்; கண் பார்வை மறைந்து முற்றத்தே இருந்துப் புறப்பட மாட்டாத மூப்பையுடையவள்.

என்னை விரும்பியோளாகிய மனைவி, பசப்புற்ற உடம்புடன் நினைவு வருத்த வருந்தி, இடையில் வைத்த பல சிறுபிள்ளைகள் பிசைந்து மெல்லுதலால் உலர்ந்த முலையினையுடையவள்; மிகவும் வருந்தி குப்பையில் விளைந்த கீரையின் முற்றாத இளந்தளிரைப் பறித்துவந்து, உப்பின்றி நீரை உலையாக ஏற்றிக் காய்ச்சி, மோரின்றிச் சோறாகிய உணவை மறந்து, பசிய இலையைத் தின்று வாழ்கிறாள்; அழுக்கேறிய இழிந்த உடையினை உடையவள்; தன்னுடைய இத்தகைய நிலைக்கு அறக்கடவுளைப் பழிப்பவள். சுடப்பட்டுக் கரிந்த புனத்தை உழுத அகன்ற இடமுடைய கொல்லையில் வேடர் ஐவன நெல்லோடு விதைத்து இருட்சியுற அழகுபெற்றுக் கோடை மிகுதியால் வாடிய கதிர் ஈனாத தினைக்கு இழுமெனும் ஒலியுடன், மின்னும் இடியும் முதலாகிய

Koviloor Digital Library

தொகுதியையுடைய மழை துளியைச் சொரிந்தது. அதுபோல வறுமையால் வாடிய இரவலர்க்குப் பரிசில் தந்த நினது புகழை வாழ்த்தி வந்தேன். உயர்ந்த கொம்பையுடைய கொல்யானையைப் பெற்றாலும், முகம் மாறித் தரும் பரிசினை யான் ஏற்கமாட்டேன்; என் தாய், மனைவி ஆகிய இருவருடைய நெஞ்சமும் விருப்பமுறும்படி, பசி தின்பதால் வருத்தமுற்ற எனது சுற்றமும் மகிழும்படி மலர்ந்த முகத்துடன் நீ, யான் இன்புற விரைவில் பரிசில் தந்து விடுவையாயின், சிறிதாகிய குன்றி என்னும் அளவையுடைய பொருளாயினும் அதனைக் கொள்வேன்; நின்னைப் பாடிய யான் இன்புறுமாறு அருள் செய்ய வேண்டுகிறேன்.

உரை விளக்கம் : வாழு நாளோடு யாண்டு பல உண்மையின் என்பதற்கு, இன்ப நுகர்ந்து கழிந்த இளமை நாளுடனே மூப்பு வந்து துன்பமுற்ற யாண்டு பல உண்மையின் எனினும் பொருந்தும் என்பர். தாய், மனைவி, சுற்றம் என அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்த கூட்டுக் குடும்ப வாழ்வை இதில் எடுத்துரைக்கிறார். பெருஞ்சித்திரனார் குமணனிடம் தம் வறுமை நிலையை எடுத்துரைத்துப் பரிசில் வேண்டிப் பாடியது. இப்பாடலில் பரிசிலின் இன்றியமையாமையும், அதனைப் பெறத் தாம் கொண்ட கருத்தையும் எடுத்துரைக்கிறார். ஈன்ற தாய் முதுமை அடைந்து, மயிர் நரைத்துக், கண்ணொளி கெட்டுக் கோல் காலாகக் கொண்டு, முன்றிலில் கிடந்து போகமாட்டாத நிலையினளாதலை, ''வாழுநாளோடு யாண்டு பல உண்மையின் தீர்தல் செல்லாது என் உயிர்'' என்றார். தம் காதலன்பு வாழ்க்கையின் பரிசாகப் பல குழந்தைகள் பெற்றதை, ''மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்'' என்றார்.

இருப்பதைக் கொண்டு மனைவி மனையறவாழ்வு நடத்திய பாங்கை, ''குப்பைக் கீரை கொய் கண் அகைத்த, முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு உப்பு இன்று, நீர் உலையாக ஏற்றி அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து'' என்று கூறினார். சரியான உணவு இல்லாததால் குழந்தைகள் குடிக்க முலைப்பால் ஊறாத நிலையை, ''பல்குறுமாக்கள் பிசைந்து தின வாடிய முலையள்'' எனக் காட்டுகிறார். பல பிள்ளைகளைப் பெற்றுக் கணவனோடு சினந்து

Koviloor Digital Library

பேசும் உரிமையிருந்தும், தன் மனைவி தன்னைக் கோபிக்காமல், ''அறம் பழியாத் துவ்வாள்'' ஆகி நின்றாள். கொடிய வறுமை வந்துற்றபோதிலும் என்மேல் கொண்ட அன்பு மாறாதவள் என்பதை ''என் வெய்யோள்'' எனக் கூறினார். இருவர் நெஞ்சமும் உவப்ப ஒக்கலும் உவப்ப நல்குக என்றதால், மனை வாழ்வு இன்பமாதற்பொருட்டு, இவ்வறுமை நிலையினும் ஒக்கல் சூழ வாழுமாறு தோன்ற, ''தொக்க என் பசி தினத் திரங்கிய ஒக்கல்'' என்றார். எவ்வளவு வறுமையுற்றபோதும் முகம் மாறி தரும் பரிசில் பெரிதாயினும் அதனை விரும்பேன்; அளவில் சிறியதாயினும் அன்புடன் முகமலர்ந்து கொடுக்கும் பரிசிலையே ஏற்பேன் எனப் புலவர் தம் பெருமிதம் தோன்ற ''உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும், தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ இன்புற விடுதியாயின் சிறிது, குன்றியும் கொள்வல்'' எனத் தம் கருத்தை மன்னனுக்கு வெளிப்படுத்துகிறார்.

''புல் உளைக் குடுமிப் புதல்வன் பல்மாண், பால்இல் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்'' (புற. 160 : 18 – 19), ''வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த, குப்பை வேளை உப்பிலி வெந்ததை, மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து, இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும் அழிபசி'' (சிறு. 136 – 140), ''ஈன்றாள் பசி காண்பாள் ஆயினும் செய்யற்க, சான்றோர் பழிக்கும் வினை'' (குறள். 656), ''கருவி வானம் தூளி சொரிந்தாங்கு'' (பெரு. 24), ''கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென'' (சீவக. 2752), ''முளி புற் கானம் குழைப்ப, கல்லென அதிர்குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு'' (புற. 160 : 2 – 3), ''பசி தினத்திரங்கிய கசிவுடை யாக்கை'' (புற. 160 : 4), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : யாண்டு – ஆண்டுகள்; வாழுநாள் – வாழ்நாட்கள்; கோல் – கைத்தடி; கதுப்பு – மயிர், கூந்தல்; முன்றில் – முற்றம்; முதிர்வினள் – முதியவள்; மேனி – உடம்பு; மருங்கு – இடை, ஒக்கலை; குறுமாக்கள் – சிறுபிள்ளைகள்; அவிழ்ப்பதம் – சோறு;

Koviloor Digital Library

பாசடகு - பச்சை இலை; மாசு - அழுக்கு; உடுக்கை - உடை; வெய்யோள் - விரும்பியோள்; புனம் - காடு; ஐவனம் - மலைநெல்; ஏனல் - தினை; ஒக்கல் - சுற்றம்; மருப்பு - கொம்பு; வசை - பழி, குற்றம்; திணை - குடி.

160

‘உரு கெழு ஞாயிற்று ஒண் கதிர் மிசைந்த
முளி புற் கானம் குழைப்ப, கல்லென
அதிர் குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு,
பசி தினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ் புகுவு அறியாது ஆகலின், வாடிய
நெறி கொள் வரிக் குடர் குளிப்பத் தண்ணென,
குய் கொள் கொழுந் துவை நெய்யுடை அடிசில்,
மதி சேர் நாள் மீன் போல, நவின்ற
சிறு பொன் நன் கலம் சுற்ற இரீஇ,
“கேடு இன்றாக, பாடுநர் கடும்பு” என,
பல் புகழ் நுவலுநர் கூற, வல் விரைந்து,
உள்ளம் துரப்ப வந்தனென்; எள்ளுற்று,
இல் உணாத் துறத்தலின், இல் மறைந்து உறையும்
புல் உளைக் குடுமிப் புதல்வன் பல் மாண்
பால் இல் வறு முலை சுவைத்தனன் பெறாஅன்,
கூழும் சோறும் கடைஇ, ஊழின்
உள் இல் வறுங் கலம் திறந்து, அழக் கண்டு,
மறப் புலி உரைத்தும், மதியம் காட்டியும்,
நொந்தனளாகி, ‘நுந்தையை உள்ளி,
பொடிந்த நின் செவ்வி காட்டு’ எனப் பலவும்
வினவல் ஆனாளாகி, நனவின்
அல்லல் உழப்போள் மல்லல் சிறப்ப,
செல்லாச் செல்வம் மிகுந்தனை, வல்லே
விடுதல் வேண்டுவல் அத்தை; படு திரை

Koviloor Digital Library

நீர் சூழ் நிலவரை உயர, நின்
சீர் கெழு விழுப் புகழ் ஏத்துகம் பலவே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

துறை விளக்கம் : "செல்லாச் செல்வம் மிகுத்தனை வல்லே, விடுதல் வேண்டுவல் அத்தை" எனப் பரிசில் வேண்டிப் பாடியதால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : ஞாயிற்றின் கதிர் சுடுதலால் காய்ந்த புல்லையுடைய காடு தளிர்க்கும்படி, நடுக்கத்தைச் செய்யும் கல்லென்னும் ஓசை பொருந்திய இடியேறு இடித்து மழையைப் பொழிந்தது; அதைப் போலப் பசி தின்னப்பட்டு உலர்ந்த வேர்ப்புடைய உடம்பு, சோற்றை அறியாதாகலால் வாட்டமுற்றது; முடக்கம் கொண்ட குடர் நிறையும்படி, தாளிப்புச் செய்த கொழுந்துவையோடு கூடிய நெய்யுடை உணவை, நிலவைச் சேர்ந்த நாளாகிய விண்மீனை ஒப்பப் பொன்னாற் செய்யப்பட்ட சிறிய நல்ல கலங்களைச் சூழ வைத்தது இருத்தி ஊட்டினான் குமணன்; பின் கேடில்லையாக, பாடுவாரது சுற்றமெனச் சொல்லிப் பெறற்கரிய பொன் அணிகலன்களை எளிதாக வழங்கித் தன்னுடைய நட்டாரினும் எம்மோடு நட்புச் செய்த நல்ல புகழை உடையவன் குமணன்; மது நிறைந்த தெருவினையுடைய முதிரமலைக்குத் தலைவன்; 'நீ அவன்பாற் செல்வையாயின் நினக்கு மிகவும் பரிசில் தருவான் என நினது பல புகழையும் சொல்லுவார் சொல்ல', அது கேட்டு விரைந்து எனது உள்ளம் செலுத்த வந்தேன்.

எனது இல்லம் உண்ணப்படுவனவற்றைக் கைவிடுதலால் அவ்வில்லத்தை இகழ்ந்து நினையாது உறைகின்றான் எம் புதல்வன்; புல்லிய உளைமயிர் போலும் குடுமியையுடைய இளம்புதல்வன் பலபடியாக பாலில்லாத வறிய முலையைச் சுவைத்துப் பால்

Koviloor Digital Library

பெறானாய்க் கூழையும் சோற்றையும் வேண்டி, உள்ளே ஒன்றுமில்லாத வறிய சோற்றடு கலத்தைத் திறந்துப் பார்த்து அங்கே உணவைக் காணாது வருந்தி அழுகிறான்; அதனைப் பார்த்து அழுகையை நிறுத்த காட்டில் உறையும் மறப்புலி வருகின்றது என்று சொல்லி அச்சமுறுத்தியும், நிலாவைக் காட்டியும் அவற்றால் தணிக்க இயலாது வருந்தினாள் என் மனைவி; நின் தந்தையை நினைந்து வெறுத்த நின் முகத்தைக் காட்டுக என்று சொல்லிக் கேட்க, அவனும் முகம் சுளித்துக் காட்ட, அது கண்டு 'நனவின் கண்ணும் உண்மையிலேயே வருந்துபவள் ஆயினாள்; அவ்வாறு வருந்தித் துயருறுகின்ற என் மனைவி வளப்பம் அடையும்படி, மிகத் தொலையாத செல்வத்தை மிகுதியாக விரைவில் பரிசில் தந்து விடுவதை யாம் விரும்புவேம்; ஒலிக்கும் அலையுடைய நீரால் சூழப்பட்ட நில எல்லையில் ஓங்கும்படி, நின் சீர்மை பொருந்திய சிறந்த புகழைப் பலவாறாக யாம் வாழ்த்துவேம்.

உரை விளக்கம் : குமணனின் வள்ளன்மையைச் சான்றோர் தமக்குத் தெரிவித்து ஆற்றுப்படுத்த, அதனால் அவனை நாடி பரிசில் பெறும் பொருட்டு வந்ததாகப் பெருஞ்சித்திரனார் பாடியது. வறண்ட காடு, மழை பெற்றுப் பொழிவடைந்ததுபோலப், பசியால் வாடிய தமது உள்ளமும் உடலும் குளிர உணவும், அணிகலன்களும் வழங்கினான் குமணன் என்பதை உணர்த்த மழை முகிலை உவமம் காட்டி "முளிபுற் கானம் குழைப்ப கல்லென, அதிர்குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு ... வாடிய நெறிகொள் வரிக்குடர் குளிர்ப்பத் தண்ணென" எனக் கூறினார். உணவிற்கு மணமும் சுவையும் கூட்டத் தாளிக்கும் பழக்கமுள்ளதை, "குய்கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்" எனக் கூறினார்.

நிலவைச் சுற்றி விளங்கும் விண்மீனைப் போலப் பொன்னாற் செய்யப்பட்ட சிறுசிறு உண் கலங்களைச் சூழ வைத்திருந்து பரிசிலர்க்கு உணவு ஊட்டினான் குமணன் என்ற அழகிய காட்சியைக் காட்ட, "மதிசேர் நாண்மீன் போல நவின்ற சிறு பொன் நன்கலம் சுற்ற இரீஇ" என்று ஒப்புமைப்படுத்தினார்.

Koviloor Digital Library

அவனது நட்பின் கேண்மையை உணர்த்த, ''நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்'' என்றார். வீட்டில் குழந்தை, மனைவி, சுற்றம் ஆகியோர்படும் வறுமைத் துன்பத்தை, ''இல்உணாத் துறத்தலின் ... புதல்வன் பல்மாண் பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன், கூழும் சோறும் கடைஇ ஊழின் உள்இல் வறுங்கலம் திறந்தழக்'' எனக் காட்டினார். குழந்தையின் அழுகையை நிறுத்தத் தாய்மார்கள் புலிவருகிறது என்று அச்சுறுத்தியும், நிலாவைக் காட்டியும் ஆறுதல் கூறும் பண்டை வழக்கத்தை, ''மறப்புலி உரைத்தும் மதியம் காட்டியும்'' என எடுத்துரைப்பர். மனைவியின் துன்பநிலை கூறிப் பரிசில் விரைய தந்து விடுதல் வேண்டும் என்பார், ''நனவின் அல்லல் உழப்போள் மல்லல் சிறப்ப செல்லாச் செல்வம் மிகுத்தனை'' என்று கூறினார்.

''கருவி வானம் தலைஇ யாங்கும்'' (புற. 159 : 19), ''பசி தினத் திரங்கிய ஒக்கலும் உவப்ப'' (புற. 159 : 21), ''பெருவறங் கூர்ந்த கானம் கல்லெனக் கருவி வானம் துளி சொரிந்தாங்குப், பழம் பசி கூர்ந்த எம் இரும்பேர் ஒக்கல்'' (பெரு. 23 – 25), ''கவலை நெஞ்சத்து அவலம் தீர ... கல் கண் பொடிய கானம் வெம்ப, மல்கு நீர் வரைப்பின் கயம் பல உணங்க, கோடை நீடிய பைதறு காலை, இருநிலம் நெளிய ஈண்டி, உரும் உரறு கருவிய மழை பொழிந்தாங்கே'' (புற. 174 : 22 – 28), ''திங்கள் நலஞ் சூழ்ந்ததிரு மீன்களெனச் செம்பொற், பொங்கு கதிர் மின்னுபுகழ்க் கலங்கள்பல பரப்பி'' (சீவக. 2025), ''செலல் நசைஇ உற்றனென் – விறல்மிகு குருசில், இன்மை துரப்ப இசைதர வந்து நின், வண்மையின் தொடுத்த'' (புற. 161 : 20 – 22), ''புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து'' (அக. 176 : 19), ''மருங்கில் கொண்ட பல் குறுமாக்கள், பிசைந்து தினவாடிய முலையள்'' (புற. 159 : 7 – 8), ''பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி, இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை, சுவைத்தொறு அழூஉம் தன் மகத்து முகம் நோக்கி, நீரொடு நிறைந்த ... என் மனையோள் எவ்வம் நோக்கி'' (புற. 164 : 3 – 7), ''பாஅல் இன்மையின் பல் பாடு சுவைத்து, முலைக்கோள் மறந்த புதல்வனொடு'' (புற. 210 : 20 – 21).

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : கானம் - காடு; ஏறு - உருமேறு, இடி; துளி - மழை; திரங்கிய - உலர்ந்த; யாக்கை - உடம்பு; அவிழ் - சோறு; குய் - தாளிப்பு; துவை - துவையல்; அடிசில் - உணவு; மதி - நிலவு; நாண்மீன் - விண்மீன்; கடும்பு - சுற்றம்; நட்டோர் - கேளிர்; நல்இசை - நல்ல புகழ்; மட்டு - மது; மறுகு - தெருவு; நல்குவன் - கொடுப்பவன்; இல் - வீடு, இல்லம், மனை; உணா - உணவு; மறப்புலி - காட்டுப்புலி; நுந்தை - தந்தை; அல்லல் - துன்பம்; மல்லல் - வளப்பம்.

161

நீண்டு ஒலி அழுவம் குறைபட முகந்துகொண்டு,
ஈண்டு செலல் கொண்மூ வேண்டுவயின் குழீஇ,
பெருமலை அன்ன தோன்றல, சூல் முதிர்பு,
உரும் உரறு கருவியொடு, பெயல் கடன் இறுத்து,
வள மழை மாறிய என்றூழ்க் காலை,
மன்பதை எல்லாம் சென்று உண, கங்கைக்
கரை பொரு மலி நீர் நிறைந்து தோன்றியாங்கு,
எமக்கும் பிறர்க்கும் செம்மலை ஆகலின்,
'அன்பு இல் ஆடவர் கொன்று, ஆறு கவர,
சென்று தலைவருந அல்ல, அன்பு இன்று,
வன் கலை தெவிட்டும், அருஞ் சுரம் இறந்தோர்க்கு,
இற்றை நாளொடும் யாண்டு தலைப் பெயர' எனக்
கண் பொறி போகிய கசிவொடு உரன் அழிந்து,
அருந் துயர் உழக்கும் என் பெருந் துன்புறுவி நின்
தாள் படு செல்வம் காண்தொறும் மருள,
பனை மருள் தடக் கையொடு முத்துப் பட முற்றிய
உயர் மருப்பு ஏந்திய வரை மருள் நோன் பகடு,
ஒளி திகழ் ஓடை பொலிய, மருங்கில்
படு மணி இரட்ட, ஏறிச் செம்மாந்து,
செலல் நசைஇ உற்றனென் - விறல் மிகு குரிசில்!

Koviloor Digital Library

இன்மை துரப்ப, இசைதர வந்து, நின்
வண்மையின் தொடுத்த என் நயந்தனை கேண்மதி!
வல்லினும், வல்லேன் ஆயினும், வல்லே,
என் அளந்து அறிந்தனை நோக்காது, சிறந்த
நின் அளந்து அறிமதி, பெரும! என்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன்; சாந்து அருந்திப்
பல் பொறி கொண்ட ஏந்து எழில் அகலம்
மாண் இழை மகளிர் புல்லுதொறும் புகல,
நாள் முரசு இரங்கும் இடனுடை வரைப்பில் நின்
தாள் நிழல் வாழ்நர் நன் கலம் மிகுப்ப,
வாள் அமர் உழந்த நின் தானையும்,
சீர் மிகு செல்வமும், ஏத்துகம் பலவே.

திணை : பாடாண்திணை; **துறை** : பரிசில் துறை.

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிப் பகடு பெற்றது.

துறை விளக்கம் : ''உயர் மருப்பு ஏந்திய வரைமருள் நோன்பகடு ... படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து செலல் நசைஇ உற்றனென்'' எனத் தாம் பெறக் கருதிய பரிசில் இதுவெனக் கூறினமையால் பரிசில் துறையாயிற்று.

உரை : பெரிதாய் ஒலிக்கின்ற பரப்பினையுடைய கடல் நீர் குறைபட நீரை முகந்து கொண்டு, விரைந்து செல்லும் மழை மேகங்கள் வேண்டிய இடத்தே திரண்டு பெரிய மலைபோலும் தோற்றத்தையுடையவாய் விளங்கின; சூல் முதிர்ந்து உருமேறு (இடி) இடிக்கும் மின்னல் முதலாகிய தொகுதியுடன் கூடி மழையை முறைமையாகப் பெய்தது; அவ்வாறு வளத்தைத் தரும் மழை நீங்கிய கோடைக்காலத்தில் உயிர்ப்பன்மைகள் (மன்பதை) எல்லாம் சென்று நீருண்டற்குக் கங்கையினது கரையைப் பொரும் வெள்ளம் நிறைந்து தோன்றியது. உயிர்கள் நீர் உண்ணற்குக் காரணமான கங்கை பெருவெள்ளத்தைப் போல நீ எங்களுக்கும் பிறர்க்கும் தலைமையாக நின்று காக்கின்றாய். யாவரோடும் உறவில்லாத

Koviloor Digital Library

ஆறலைகள்வர், வழிச்செல்வோரைக் கொன்று, பொருளை அடித்துப் பறித்தலால் அரிய பாலைவழி செல்லுதற்கு அரியதாய் இருக்கின்றது; அச்சுரத்தில் தம் உயிர்மேல் அன்பின்றி வலிய கலைமான் கிடந்து அசையிடும்; போதற்கரிய அச்சுரத்தில் அன்பின்றிப் பிரிந்தவர்க்கு இற்றை நாளொடும் கூடி யாண்டு கழிகவெனச் சொல்லிக் கண்ணொளி மழுங்கிய இரக்கத்துடன், வலி கெட்டு பெருந்துன்பம் அடைந்தனள் என் மனைவி.

அவள், நின் முயற்சியால் உண்டாகிய செல்வத்தைக் காணுந்தோறும் வியக்கும்படி, பனையை ஒக்கும் கையும், முத்துப்படும்படி முதிர்ந்த கொம்பும் உடைய, மலையை ஒக்கும் களிற்றை ஒளி விளங்கும் பட்டம் பொலியப், பக்கத்தே ஒலிக்கும் மணி ஒன்றற்கொன்று மாறி ஒலிப்ப, அக்களிற்றின் மீதேறித் தலைமை தோன்றச் செல்லுதலை விரும்பினேன்; வென்றி மிக்க தலைவனே! என் வறுமை பின்னே நின்று துரத்த, நின் புகழை நினைந்து வந்து, நின் கொடைப் பண்பில் சிலவற்றைத் தொடுத்துப் பாடினேம்; அதனை நீ விரும்பிக் கேட்பாயாக; சிலவற்றைச் சொல்ல அறிவேனாயினும், அறியேனாயினும் விரைய என் கல்வியறிவை ஆராய்ந்து அறிந்தனையாய், ஆராயாது சிறந்த நின் கொடை அளவை அளந்தறிவாயாக; பெருமானே! எந்நாளும் நின்னால் பெற்ற என் செல்வமிகுதியைக் கண்டு பிற அரசர் நாணும்படி பெயர்வேன்; சந்தனம் பூசப்பட்டுப் பல நல்ல இலக்கணத்தைப் பொருந்திய மேம்பட்ட அழகுடைய நின் மார்பை, மாட்சிமைப்பட்ட அணிகள் அணிந்த மகளிர் தழுவுந்தோறும் விரும்புவாய்; நாட்காலையில் (விடியல்) முரசு முழங்கும் இடனுடைய எல்லைக்கண், நின் தாள்நிழலில் வாழ்வார் நன்கலங்களை மிகுதியாகக் கொடுப்ப, வாட்போரில் வெற்றி அடைந்த நின் படையையும், நின் சீர்மிக்க செல்வத்தையும் பலவாறாகப் புகழ்ந்து பாடுவேம்.

உரை விளக்கம் : குமணனின் வள்ளன்மையைக் கண்டு பிற வேந்தர் நாணும்படியும், மனைவி வியக்கும்படியும், களிற்றின்மேல்

Koviloor Digital Library

ஊர்ந்து செல்லுமாறு பகடு அளித்து விடுக என்று பெருஞ்சித்திரனார் பாடியது. மழை நீங்கிய கோடைக்காலத்தில் உயிர்களின் வருத்தத்தை தீர்க்க, கங்கையாறு உதவினாற்போல, வறுமையால் வாடிய, பரிசிலர்க்கு குமணன் செல்வம் பயன் தருதலை ஒப்புமைப்படுத்தி, ''மன்பதை எல்லாம் சென்று உணக் கங்கை ... நிறைந்து தோன்றியாங்கு, எமக்கும் பிறர்க்கும் செம்மலை'' என்றார். சுரவழியின் கொடுமையை உணர்த்தும்போது ''அன்பில் ஆடவர் கொன்று ஆறு கவரச், சென்று தலைவருந அல்ல அன்பு இன்று வன்கலை தெவிட்டும்'' என்று கூறினார்.

கொடிய பாலைவழியில் நெடிது சென்றவர்க்குக் கேடு உண்டாகும் என மனைவி அஞ்சும் திறத்தை, ''இற்றை நாளொடும் யாண்டு தலைப்பெயர எனக், கண்பொறி போகிய கசிவொடு உரன் அழிந்து அருந்துயர் உழக்கும் என் பெருந்துன்புறுவி'' என்றார். அத்தகைய துயருக்கு ஆளான மனைவி இன்புறும்படி குமணன் பரிசில் நல்கி விடுத்ததை, ''நின் தாள்படு செல்வம் காண்தொறும் மருள ... பகடு ஏறிச் செம்மாந்து செலன் நசைஇ உற்றனென்'' என்று கூறினார். பரிசில் பெறுதற்குரிய தகுதி உளதாயினும் இலதாயினும், பரிசிலர் தகுதி நோக்காது, தன் தகுதி நோக்கி விடுத்தனன் என்பதை, ''என் அளந்து அறிந்தனை நோக்காது சிறந்த நின் அளந்தறிமதி'' என்றார். சிறிது பொருள் கொடுத்து எள்ளிய இளவெளிமான் கண்டு நாணச், செல்ல வேண்டுமென்ற வேட்கையால், ''என்றும் வேந்தர் நாணப் பெயர்வேன்'' என்றும், குமணன் செய்த போர்களால் விளைந்த நலத்தை, ''தாள் நிழல் வாழ்நர் நன்கலம் மிகுப்ப'' என்றும் கூறினார். குமணன் இல்லற வாழ்க்கையிலும் இன்புற்று விளங்கும் திறத்தை, ''ஏந்தெழில் அகலம் மாண்இழை மகளிர் புல்லுதொறும் புகல'' என்றார். இப்பாடல்மூலம் குமணனின் கொடையையும், படைத்திறத்தையும், செல்வத்தையும், இல்லற மாண்பையும் பாராட்டியுள்ளார்.

''கடல்குறை படுத்தநீர் கல்குறை படவெறிந்து'' (பரி. 20 : 1), ''உருமுரறு கருவிய பெருமலை பிற்பட'' (மலை. 357), ''கழிந்தது பொழிந்தது என வான் கண் மாறினும்'' (புற. 203 : 1),

Koviloor Digital Library

''நின்னது தா என நிலை தளர, மரம் பிறங்கிய நளிச் சிலம்பில், குரங்கன்ன புன்குறுங் கூளியர் பரந்து அலைக்கும்'' (புற. 136 : 11 – 14), அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர்தாம், கொள்ளும் பொருள் இலராயினும் வம்பலர்; துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர் வௌவலின், புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை'' (கலி. 4 : 3 – 6), ''அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவை'' (புற. 146 : 7), ''அசைவு இல் நோன்தாள் நசைவளன் ஏத்தி'' (புற. 148 : 2), ''இருங் கடறு வளைஇய குன்றத்து அன்னதோர் பெருங்களிறு'' (புற. 140 : 7 – 8), ''யானை வெண்கோடு பயந்த ஒளி திகழ் முத்தம்'' (புற. 170 : 10 – 11), ''வல்லினும் வல்லார் ஆயினும் சென்றோர்க்கு ... நிறைய வீசு, மாஅல் யானை'' (அக. 152), ''வல்லாராயினும் வல்லுநராயினும் வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி'' (புற. 27 : 15 – 16), ''வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும் புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன'' (புற. 57 : 1 – 2), ''அம்பகட்டு எழினிய செம்பொறி ஆகத்து மென்மையின் மகளிர்க்கு வணங்கி'' (புற. 68 : 5 – 6), ''தழங்குரன் முரசம் காலை இயம்ப'' (ஐங். 448 : 1), ''படுகண் முரசம் காலை இயம்ப'' (மது. 232), ''வாளின் வாழ்நர் தாள் வலம் வாழ்த்த'' (புற. 24 : 29), ''சீர்கெழு விழுப்புகழ் ஏத்துகம் பலவே'' (புற. 160 : 30) போன்ற பாடற்பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அழுவம் – பரப்பு; கொண்மூ – முகில்; பெயல் – மழை; கடன் – முறைமை; மன்பதை – உயிர்ப்பன்மை; செம்மலை – தலைமை; கலை – கலைமான்; சுரம் – பாலைவழி; கண்பொறி – கண்ணொளி; கசிவு – இரக்கம்; உரன் – வலி; தாள் – முயற்சி; மருப்பு – யானைக்கொம்பு, தந்தம்; வரை – மலை; பகடு – களிறு; ஓடை – நெற்றிப்பட்டம்; மருங்கு – பக்கம்; செம்மாந்து – தலைமை தோன்ற; நசைஇ – விருப்பம்; குரிசில் – தலைவன்; இன்மை – வறுமை; இசை – புகழ்; வண்மை – கைவண்மை, கொடை; சாந்து – சந்தனம்; பொறி – உத்தம இலக்கணம்; அகலம் – மார்பு; இழை – அணி, ஆபரணம்; புல்லுதல் – தழுவுதல்; நாள்முரசு – நாட்காலையில் முழங்கும் முரசு;

Koviloor Digital Library

வரைப்பு - எல்லை; கலம் - ஆபரணம்; தானை - படை; வாளமர் - வாட்போர்.

162

இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண், இனி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண், இனி; நின் ஊர்க்
கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடு நல் யானை எம் பரிசில்;
கடுமான் தோன்றல்; செல்வல் யானே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில்விடை.

பெருஞ்சித்திரனார் வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் துஞ்சுவான் தம்பியைப் 'பரிசில் கொடு' என, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது போய், குமணனைப் பாடி, குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று, வெளிமான் ஊர்க் கடிமரத்து யாத்துச் சென்று, அவர் சொல்லியது.

துறை விளக்கம் : "கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த நெடுநல் யானை எம் பரிசில், செல்வல் யானே" எனப் பரிசில் பெறாது கூறினமையால் பரிசில் விடைத் துறையாயிற்று.

உரை : விரைந்த வேகம் கொண்ட குதிரையுடைய தலைவனே! இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பாய் நீயும் அல்லை; பொருள் தந்து பாதுகாக்கும் புரப்போர் இரப்போருக்கு இல்லாமல் போய்விடவில்லை; இனி இரப்போர் இருத்தலையும் காண்பாயாக; இனி இரப்போர்க்கு கொடுப்போர் உண்டாதலையும் காண்பாயாக; நின்னுடைய ஊரில் காவல்மரம் வருந்த, யாம் கொண்டு வந்து

Koviloor Digital Library

கட்டிய, உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானை எமது பரிசில்; இனி யான் போகின்றேன்.

உரை விளக்கம் : வேந்தர் நாணப் பெயர்வேன் என்று குமணனிடம் கூறியவாறு, இளவெளிமான் நாணும்படி குமணன் பரிசிலாக தந்த யானையை இளவெளிமான் காவல்மரத்தில் கட்டி வைத்துப் பெருஞ்சித்திரனார் பாடியது. இளவெளிமான் சிறிது கொடுப்ப அதனைக் கொள்ளாது குமணன்பாமற் சென்று பரிசில் பெற்று மீண்டு வந்தவர், உலகில் புரப்போர் நீ ஒருவன் மட்டும் இல்லை; புரப்போர் பலர் இருக்கின்றனர் என்பதை உணர்த்த, ''இரவலர் புரவலை நீயும் அல்லை'', ''புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்'' என்று கூறினார். என்னையும், வள்ளல் குமணனையும் பார்த்து உலகில், 'இரவலர் உண்மையும் இரவலர்க்கு ஈவோர் உண்மையும்' அறிந்து கொள்க என அறிவுறுத்தினார். தமக்கு குமணன் தந்த பரிசிலைக் கண்டு இளவெளிமான் நாண வேண்டும் என்பதற்காகவும், தம்முடைய பெருமிதம் தோன்றவும், ''நின்னூர்க் கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த நெடுநல் யானை பரிசில்'' என்றார். பகைவருடைய காவன் மரத்தை வெட்டுதலும், வெட்டாமல் அம்மரத்தில் தம்முடைய யானையைக் கட்டுதலும் அரசர்க்கு இயல்பு; பகைவர் அணுகாத வண்ணம் வளர்க்கப்படும் காவன்மரத்தில் யானையைக் கட்டியதன்மூலம் இளவெளிமானுக்கு இழிவு ஏற்பட்டது என்பதையும் இதன்மூலம் உணர்த்தினார்.

''இரவலர்க்கு ஈத்த யானை'', (புற. 129 : 6), ''இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த அண்ணல் யானை'' (புற. 130 : 4 – 5), ''குன்றத்து அன்னதோர் பெருங்களிறு நல்கியோன்'', (புற. 140 : 7 – 8), ''ஊர்தொறும் கடிமரம் துளங்கிய காவும்'' (புற. 23 : 9), ''காவு தொறும் கடிமரம் தடியும் ஓசை'' (புற. 36 : 9), ''கடிமரம் தடிதல் ஓம்பு'' (புற. 57 : 10), எனவரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : இரவலர் – இரப்பவர்; ஈவோர் – கொடுப்போர், இடுவோர்; கடிமரம் – காவல்மரம்; கடுமான் – குதிரை; தோன்றல் – தலைவன்.

Koviloor Digital Library

163

நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்,
பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்,
கடும்பின் கடும் பசி தீர யாழ நின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி - மனை கிழவோயே! -
பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன் நல்கிய வளனே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில்.

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.

துறை விளக்கம் : பெருஞ்சித்திரனார் குமணனிடம் தாம் பெற்ற பரிசிலை மனைவியிடம் கொடுத்து 'எல்லோருக்கும் வழங்கி மகிழ்வாயாக' என்று மகிழ்ந்து உரைத்தலால் பரிசில் துறையாயிற்று. இப்பாடலில், ''எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே ... குமணன் நல்கிய வளனே'' என்று உரைத்தலால் பரிசில் துறையாயிற்று.

உரை : என் மனைக்கு உரியவளே! பலாப்பழம் மிகுந்த முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய, திருந்திய வேலுடைய குமணன் எமக்கு அளித்த செல்வத்தை, நின்னை அன்புசெய்து வாழும் மகளிர்க்கும், நீ அன்பு செய்து ஒழுகும் மகளிர்க்கும், பல குணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நின் சுற்றத்து மூத்த மகளிர்க்கும் அளிப்பாயாக; நம் சுற்றத்தின் பசி நீங்க நினக்கு நெடுநாள் கடன் தந்து (குறியெதிர்ப்பை) உதவியோர்க்கும், மற்றும் இன்ன தன்மையார் என்று கருதாதும், என்னோடு கேளாதும்,

Koviloor Digital Library

வளமுடன் வாழலாம் என்று பாதுகாத்து வைத்துக்கொள்ள நினையாதும் நீயும் எல்லோர்க்கும் வழங்கி மகிழ்வாயாக.

உரை விளக்கம் : பண்டை நாளில் பரிசில் பெற்று வரும் பரிசிலர் அதைத் தனக்கென வைத்துக்கொள்ளாது, பல்லோர்க்கும் பகுத்துக் கொடுத்து இன்பமுடன் வாழ்ந்த நிலையை பெருஞ்சித்திரனார் இப்பாடற்கண் எடுத்துரைத்துள்ளார். மிக்க வறுமை நிலையில் வாழ்ந்த போதிலும் பொருளைத் தனக்கென வைத்துக்கொள்ளாத பரிசிலரின் உயரிய மனப்பாங்கை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.' சுற்றத்தோரில் மூத்த மகளிரை, ''பன்மாண் கற்பின் நின் கிளை முதலோர்'' என்றார். அளவுகுறித்து வாங்கி அங்ஙனம் வாங்கியவாறே எதிர் கொடுக்கும், குறிஎதிர்ப்பை என்ற பண்டை வழக்கத்தினை, ''நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்'' என்றார். ''நீயும் எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே'' என்ற உம்மையால் யானும் கொடுப்பேன்; நீயும் அவ்வாறே கொடு என உணர்த்தினார்.

''கடும்பசி கலக்கிய இடும்பை'' (புற. 230 : 9), ''உடும்பு உரித்தன்ன என்பு எழு மருங்கின், கடும்பின் கடும்பசி களையுநர்'' (புற. 68 : 1 – 2), ''வறியார்க் கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து'' (குறள். 221), ''கூற்றுங், குறியெதிர்ப்பை கொள்ளும் தகைமைத்தே ... களிறு'' (முத்தொள்ளாயிரம்), போன்ற பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : நயந்து – விரும்பி, காதலித்து, அன்புசெய்து; உறைநர் – அண்டி வாழுதல்; கிளை – சுற்றம்; இங்குக் கற்புடைய மூத்த மகளிரைக் குறித்தது; கடும்பு – சுற்றம்; கடும்பசி – மிக்கபசி; குறியெதிர்ப்பை – கடனாக ஓர் அளவாக பொருள் பெற்று அதே அளவில் கடனை திருப்பிக் கொடுத்தல்; நல்கியோர் – தந்தோர்; இன்னோர் – (நல்லவர், கெட்டவர் என்று) இன்ன தன்மையார்; மனைகிழவோய் – மனைக்கு உரிய மனைவி.

Koviloor Digital Library

164

ஆடு நனி மறந்த கோடு உயர் அடுப்பின்
ஆம்பி பூப்ப, தேம்பு பசி உழவா,
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி,
இல்லி தூர்ந்த பொல்லா வறு முலை
சுவைத் தொறு அழூஉம் தன் மகத்து முகம் நோக்கி,
நீரொடு நிறைந்த ஈர் இதழ் மழைக்கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி, நினைஇ,
நிற் படர்ந்திசினே - நல் போர்க் குமண! -
என் நிலை அறிந்தனை ஆயின், இந்நிலைத்
தொடுத்தும் கொள்ளாது அமையலென் - அடுக்கிய
பண் அமை நரம்பின் பச்சை நல் யாழ்,
மண் அமை முழவின், வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப் பிறந்தோயே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது.

துறை விளக்கம் : ''மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ, நிற் படர்ந்திசினே ... குமண! ... இன்மை தீர்க்கும் குடிப் பிறந்தோயே'' எனப் பரிசில் விரும்பிப் பாடுதலால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : உணவு அடுதலை (சமைத்தலை) மிகவும் மறந்த உயர்ந்து ஓங்கிய அடுப்பில் காளான் பூத்துள்ளது; உடல் மெலியும் பசியால் வருந்திப் பாலின்மையால் தோலாந் தன்மையுடனே திரங்கித் துளை தூர்ந்த பொல்லாத வறிய முலையை சுவைக்குந்தோறும் பால் காணாமல் குழந்தை அழுகின்றது; அக்குழந்தையின் முகத்தைப் பார்த்து நீர் நிரம்பிய கண்ணோடு என் மனைவி வருந்துவாள்; என் மனைவியின் வருத்தத்தைப் பார்த்து,

Koviloor Digital Library

இவ்வருத்தம் தீர்த்தற்குரியாய் நீயென நினைந்து நின்னிடத்து வந்தேன்; நல்ல போராற்றலையுடைய குமண! பலவாக அடுக்கப்பட்ட பண் அமைந்த நரம்பினையுடைய தோலால் போர்க்கப்பட்ட நல்ல யாழையும், மார்ச்சனை நிறைந்த மத்தளத்தினையும் உடைய கூத்தரது வறுமையைத் தீர்க்கும் குடியில் பிறந்தவன் நீ! ஆதலால் என் வறுமைநிலையை நீ அறிந்தாயாயின், இவ்வாறு யான் வறுமையுற்று நிற்கின்ற நிலைமையில் நின்னை வளைத்தாயினும் பரிசில் பெறாமல் வறிதே மீளமாட்டேன்.

உரை விளக்கம் : தம்பியாகிய இளங்குமணன் நாட்டைக் கவர்ந்து கொண்டு குமணனைக் கொல்ல நினைக்கிறான்; அதனை அறிந்த குமணன் நாட்டை விட்டு நீங்கிக் காட்டில் சென்று வாழ்கிறான். குமணனிடம் பரிசில் பெற முதிரத்திற்கு வந்த பெருந்தலைச்சாத்தனார், நாட்டில் நிகழ்ந்த செய்தியறிந்து மனவருத்தம் அடைகிறார். உடன்பிறந்தார் இருவர்க்கும் இடையே நிலவிய பகைமையைப் போக்கி ஒற்றுமை ஏற்படுத்த நினைக்கின்றார்.

காட்டில் குமணன் இருக்கும் இடத்தை அறிந்து அவன்பால் சென்று பரிசில் வேண்டி வந்ததாக இப்பாடற்கண் எடுத்துரைக்கின்றார். அடுதலை மிகவும் மறந்ததால் தேய்வின்றி உயர்ந்த அடுப்பை, "கோடுயர் அடுப்பு" என்றார். பயன்படுத்தாத பொருளின்மேல் காளான் பூப்பது இயல்பாதலால், "ஆம்பி பூப்ப" என்றார். பசியால் உடல் மெலிந்து பால் இலதாயிற்று. ஆதலால் "தோலொடு திரங்கி இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை" என்றார். பாலில்லாத வறுமுலையைச் சுவைக்கும் குழந்தையின் துயரைக் கண்டு மனைவி வருந்தும் நிலையை, "மகத்து முகம் நோக்கி நீரொடு நிறைந்த ... என் மனையோள்" என்றார். சேய் (குழந்தை) துயரத்தையும், தாய் துயரத்தையும் கண்ட யான் வேறொருவரையும் நினையாது, நின்னையே நினைந்து வந்தேன் என்பதை, நினைஇ நிற்படர்ந்திசினே" என்றார். பரிசிலரின் வறுமை தீர்ப்பது நின் கடனாதல் என்பதை உணர்த்த" வயிரியர் இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோய்" என்று உரைத்தார்.

Koviloor Digital Library

புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில், காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த, பூழி பூத்த புழற்காளாம்பி, ஒல்குபசி யுழந்த ... வளைக்கைக் கிணைமகள் (சிறு. 132 – 136), ''பாஅல் இன்மையின் பல்பாடு சுவைத்து, முலைக்கோள் மறந்த புதல்வனொடு'' (புற. 211 : 20 – 21), ''மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள் பிசைந்து தின வாடிய முலையள்'' (புற. 159 : 7 – 8), ''புல் லுளைக் குடுமிப் புதல்வன் பல்மாண், பால் இல் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்'' (புற. 160 : 18 – 19). ''விளக்கழல் உருவின் விசியுறு பச்சை'' (பொரு. 5), ''புகழ்வினைப் பொலிந்த பச்சை'' (சிறு. 226), ''நின் நசை வேட்கையின் இரவலர் வருவர் – அது, முன்னம் முகத்தின் உணர்ந்து அவர் இன்மை தீர்த்தல் வன்மையானே'' (புற. 3 : 24 – 26), ''கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று நிரப்புமோர் ஏஎர் உடைத்து'' (குறள். 1053) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஆம்பி – காளான்; தேம்புபசி – உடல் மெலிந்து கெடுதற்கு ஏதுவாகிய பசி; இல்லி – துளை; மகத்து – பிள்ளையது; எவ்வம் – வருத்தம்; பச்சை – யாழின் தோற்போர்வை; முழவு – மத்தளம்; வயிரியர் – கூத்தர்; இன்மை – வறுமை, மிடி.

165

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே;
துன் அருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்,
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்,
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே;
தாள் தாழ் படு மணி இரட்டும், பூ நுதல்,
ஆடு இயல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடு இல் நல் இசை வய மான் தோன்றலைப்

Koviloor Digital Library

பாடி நின்றனெனாக, கொன்னே
பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடு இழந்ததனினும் நனி இன்னாது' என,
வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,
தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்;
ஆடு மலி உவகையொடு வருவல்,
ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே.

திணை : பாடாண்திணை; **துறை :** பரிசில்விடை.

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு, அவன் தன் வாள் கொடுப்பக் கொண்டு வந்து, இளங்குமணற்குக் காட்டி, பெருந்தலைச் சாத்தனார் பாடியது.

துறை விளக்கம் : பரிசில் பெற்று விடை கொள்வான் பாடியதாகலின் பரிசில் விடையாயிற்று. ''பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என், நாடு இழந்ததனினும் நனி இன்னாது என, வாள் தந்தனனே தலை எனக்கு ஈய' என்றதால் பரிசில் விடை ஆயிற்று.

உரை : எப்பொருளும் நிலையாத இவ்வுலகத்தில் நிலைபெறக் கருதினோர், தம் புகழைப் பூமியிடத்து நிறுத்தித் தாம் இறந்தனர்; சிறப்பினையுடைய உயர்ந்த செல்வர், வறுமையால் இரப்போர்க்கு ஒன்றையும் கொடார்; ஆதலால் பழைய கொடை வண்மையுடைய மாக்கள் போலப் பின்னும் தம் பெயரை நிறுத்தாமல் உலகத்தோடு தொடர்பின்றி மறைந்து போயினர்; தாளின்கண் தாழ்ந்த ஓசையுடைய மணி ஒன்றற்கொன்று மாறி ஒலிக்கும், புகர் நுதலுடைய வெல்லும் யானையைப் பாடுநர்க்கு மிகுதியாகக் கொடுக்கும் அழிவில்லாத நல்ல புகழையும், வலிய குதிரையும் உடைய தலைவனை யான் பாடி நின்றேன்; பெருமை பெற்ற பரிசிலன் வாடிச் செல்லுதல், என் நாட்டை இழந்ததனினும் மிகவும் துன்பமுடையது என நினைந்தனன்; காட்டில் தருதற்குத் தன்னைக்

Koviloor Digital Library

காட்டிலும் சிறந்த பொருள் வேறொன்றும் இல்லாமையால், தன் தலையை எனக்குத் தரும்பொருட்டு வாளைத் தந்தனன்; அத்தகைய புறக்கொடாத மேற்கோளையுடைய நின் தமையனைக் கண்டு வென்றிமிக்க மகிழ்ச்சியோடு யான் நின்னிடத்து வந்தேன்.

உரை விளக்கம் : காட்டில் இருந்த குமணனிடம் சென்று தன் வறுமைநிலையை எடுத்துரைத்து பெருந்தலைச் சாத்தனார் பரிசில் வேண்டிப் பாடியது. குமணன் தன்னிடத்துப் பொருள் இல்லையாயினும், தன்னுடல் சிறந்த பொருளாதலையும், அதன்கண் தலை, சிறந்த உறுப்பாதலையும், அதனைக் கொண்டு வருவார்க்கு மிக்க பொருள் தருவதாய் இளங்குமணன் அறிவித்திருத்தலையும் நினைந்துப் பார்த்தான். தன் தலையை வெட்டிச் சென்று இளங்குமணனிடம் காட்டி, வேண்டும் பொருள் பெற்று வறுமைத் துயரைப் போக்கிக் கொள்க என்று தன் வாளை எடுத்து பெருந்தலைச் சாத்தனார் கையில் தந்தான். கைநடுங்க, உள்ளம் பதைக்க வாளை வாங்கிய சாத்தனார், விரைந்து வந்து இளங்குமணனிடம் காட்டி அறிவுறுத்தினார். இதனைக் கேட்டு நல்லுணர்வு பெற்ற இளங்குமணன் தன் சகோதரனை அடைந்து தன் தவற்றுக்கு வருந்தி, அவனை நாட்டிற்கு அழைத்து வந்தான். இவற்றிலிருந்து புலவர்கள் பரிசில் பெறுவது மட்டுமே நோக்கமாக அல்லாமல் அரசன் தவறு செய்தவழி அவனை இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் செயலையும் செய்துள்ளனர்.

நிலையா உலகத்து நிலைபெற்று இருத்தல் புகழ் ஒன்றேயாகும்; அத்தகைய புகழ்தரும் செயலைச் செய்து குமணன் நிலைபேறு அடைந்துவிட்டான். இதனை உணர்த்த, ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நீறிஇத் தாம் மாய்ந்தனரே'' என்றார். அவ்வாறு செய்யாதோர் இவ்வுலகில் தொடர்பின்றி மறைந்து போயினர் என்பதை, ''செல்வர் இன்மையின் இரப்போர்க்கு ஈயாமையின், தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே'' என்றார். பாடிய பரிசிலர் வறிதே பெயர்தல் தான் நாடு இழந்ததைக் காட்டிலும் மிக்க துன்பமுடையது எனக் குமணன்

Koviloor Digital Library

வருந்திய வருத்தத்தைப், ''பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என், நாடு இழந்ததனினும் நனி இன்னாதது'' என்றார். காட்டகத்தே இருப்பினும், தன்பால் பொருள் ஒன்றும் இல்லையாயினும், பரிசில் தரும் அவன் கொடை மேம்பாட்டை, ''வாள் தந்தனனே தலை எனக்கு ஈயத் தன்னில் சிறந்தது பிறிதொன்று இன்மையின்'' என்றார். கொடையில் சிறந்த கர்ணனையே விஞ்சி நிறுக்கும் குமணனின் கொடை உள்ளம் இப்பாடலில் சிறந்து விளங்குகின்றது. குமணனின் செயலைக் கண்டு மிகவும் மகிழ்வு அடைந்த நிலையை, ''ஆடுமலி உவகை'' எனக் குறிப்பிட்டார்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பது ஒன்றில் (குறள். 233), ''தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே'' (புற. 366 : 5), ''தாளின் தந்து தம்புகழ் நிறீஇ'' (புற. 18 : 3), ''நின்றுநீ கெடாஅ நல்லிசை நிலைஇ'', ''நல்லிசை நிலைஇய நனந்தலை உலகத்து'' (பதி. 14 : 20 – 21; 86 : 5), ''மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் ... சாவா உடம்பெய்தினார்'' (திரி. 16), ''மண்ணியன் ஞாலத்து மன்னு புகழ் வேண்டிப் பெண்ணியனல்லாய் பிரிந்தார்'' (கார். 8), ''நில்லா உலகத்து நிலைமை தூக்கி அந்நிலை அணுகல் வேண்டி'' (பெரு. 466 – 467), ''தொலையா நல்லிசை உலகமொடு நிற்ப'', ''இன்றிவன் செல்லாது உலகமொடு நிற்ப'' (மலை. 70, 541), ''படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள் நெடுநல்யானை'' (புற. 72 : 3 – 4), ''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்றுவிடல்'' (குறள். 158), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மன்னா உலகம் – நிலையாத உலகம்; மன்னுதல் – நிலை பெறுதல்; மாய்ந்தனர் – இறந்தனர்; இன்மை – வறுமை; ஈஇயாமை – கொடாமை; தொன்மை – பழமை; கேடு – அழிவு; நல்லிசை – நல்லபுகழ்; வயமான் – குதிரை; தோன்றல் – தலைவன்; பாடு – பெருமை; இன்னாது – துன்பமுடையது; ஆடு – வெற்றி; உவகை – மகிழ்ச்சி.

Koviloor Digital Library

166

நன்று ஆய்ந்த நீள் நிமிர் சடை
முது முதல்வன் வாய் போகாது,
ஒன்று புரிந்த ஈர் - இரண்டின்,
ஆறு உணர்ந்த ஒருமுது நூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்,
மெய் அன்ன பொய் உணர்ந்து,
பொய் ஓராது மெய் கொளீஇ,
மூவேழ் துறையும் முட்டு இன்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக!
வினைக்கு வேண்டி நீ பூண்ட
புலப் புல்வாய்க் கலைப் பச்சை
சுவல் பூண் ஞாண்மிசைப் பொலிய;
மறம் கடிந்த அருங் கற்பின்,
அறம் புகழ்ந்த வலை சூடி,
சிறு நுதல், பேர் அகல் அல்குல்,
சில சொல்லின், பல கூந்தல், நின்
நிலைக்கு ஒத்த நின் துணைத் துணைவியர்
தமக்கு அமைந்த தொழில் கேட்ப;
காடு என்றா நாடு என்று ஆங்கு
ஈரேழின் இடம் முட்டாது,
நீர் நாண நெய் வழங்கியும்,
எண் நாணப் பல வேட்டும்,
மண் நாணப் புகழ் பரப்பியும்,
அருங் கடிப் பெருங் காலை,
விருந்துற்ற நின் திருந்து ஏந்து நிலை,
என்றும், காண்கதில் அம்ம, யாமே! குடாஅது
பொன் படு நெடு வரைப் புயலேறு சிலைப்பின்,
பூ விரி புது நீர்க் காவிரி புரக்கும்
தண் புனற் படப்பை எம் ஊர் ஆங்கண்,
உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்;

Koviloor Digital Library

செல்வல் அத்தை, யானே; செல்லாது,
மழை அண்ணாப்ப நீடிய நெடு வரைக்
கழை வளர் இமயம் போல,
நிலீஇயர் அத்தை, நீ நிலம் மிசையானே?

திணை : வாகை; துறை : பார்ப்பனவாகை.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

துறை விளக்கம் : கேட்க வேண்டுவனவாகிய மறைகளைக் கேட்டுத் தலைமை பெற்ற அந்தணனின் வெற்றியைக் கூறுவது பார்ப்பன வாகை எனப்படும். "கேள்வியால் சிறப்பெய்தியானை வேள்வியான் விறல் மிகுத்தன்று" என்று புறப்பொருள் வெண்பாமாலை பார்ப்பனவாகையைப் பற்றிக் குறிப்பிடும். "மூவேழ் துறையும் முட்டின்று போகிய, உரைசால் சிறப்பின் உரவோர் மருக" என்று குறிப்பிடுவதால், இப்பாடல் பார்ப்பனவாகைத் துறையாயிற்று.

உரை : நன்றாக ஆராய்ந்த நீண்ட சடையுடைய முதுமுதல்வனாகிய சிவபெருமானின் வாக்கை விட்டு நீங்காது அறம் ஒன்றையே மேவியவனே! நான்கு கூற்றையுடைத்தாய், வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிக்கை, கற்பம் என்ற ஆறு அங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோர் புத்தர் முதலான புறச் சமயத்தோர். அவர்களின் மிகுதியை (கர்வம்) அழிப்பதற்காக அவரது மெய் போன்ற பொய்யை உளப்பட அறிந்து, அப்பொய்மையை மெய் என்று கருதாமல் உண்மைப் பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லியவனே! இருபத்தொரு வேள்வித் துறைகளையும் குறையின்றாக செய்து முடித்த புகழமைந்த தலைமையுடைய அறிவுடையோர் மரபில் வந்தவனே! வேள்வித்தொழிலுக்காக நீ போர்த்திய காட்டில் வாழும் புல்வாய்க் கலைமானின் உறுப்புத் தோல், நின் தோளில் இடப்பட்ட பூணூல் மீது சிறந்து விளங்கியது; நின் துணைவியராகிய

Koviloor Digital Library

மனைவியர், கொடுமையை நீக்கிய பெறுதற்கரிய கற்பினை உடையவர்; அறநூல் புகழ்ந்த சாலகம் என்னும் அணியைச் சூடியவர்; சிறிய நுதலையும், பெரிய அகன்ற அல்குலையும், மெல்லிய சொல்லையும், பலவாகிய கூந்தலையும் உடையவர்; நின் நிலைமைக்கு மனமொத்து, தத்தமக்குப் பொருந்திய நின் ஏவல் தொழிலைக் கேட்டுச் செய்பவர்; காடு என்றும் நாடு என்றும் சொல்லப்பட்ட அவ்விடத்தில், காட்டுள் எழுவகைப்பட்ட பசுவானும், நாட்டுள் எழுவகைப்பட்ட பசுவானும் தட்டுப்பாடின்றி, நீர் நாணும்படி நெய்யை வழங்கினாய்; எண்ணிறப்பப் பலவேள்விகளைச் செய்தாய்; மண் பொறாமல் புகழ்பரப்பினாய்; அவ்வாறு பெறுதற்கரிய விளக்கமுற்ற வேள்வி முடிந்த காலத்து விருந்தினர்க்கு விருந்து செய்தாய்; அவ்வாறு செய்த நின் மேம்பட்ட நிலையை, யாம் இன்று போல் எந்நாளும் காண்பேமாக; மேற்குத்திசைக்கண், பொன்படுகின்ற நெடிய குடகமலையில், முகிலின் இடியேறு முழங்கின் பூப்பரந்த, புது நீரையுடைய காவிரி உலகத்தைப் பாதுகாக்கும்; அத்தகைய குளிர்ந்த நீர்ப்பக்கத்தையுடைய எம் ஊரில் உண்ணப்படுவனவற்றை உண்டும், தின்னப்படுவனவற்றைத் தின்றும், ஏறப்படுவனவற்றை ஏறியும் நீ தந்த பரிசிலைக் கொண்டு கொண்டாடி மகிழ்வதற்காக யாம் செல்வேம்; நீ இவ்வுலகத்தில் போகாது (இறவாதிருந்து), மழை தலையெடுப்ப, உயர்ந்தநெடிய பக்கமலைகளையுடைத்தாய் மூங்கில் வளரும் இமயமலைபோல நிலத்தின் மேலே நிலைபெற்று வாழ்வாயாக.

உரை விளக்கம் : பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் செய்த வேள்வி விருந்தில் கலந்துகொண்ட வேளாளராகிய ஆவூர் மூலங்கிழார் அவனைப் போற்றிப் பாடியது. ''முதுமுதல்வன் வாய் போகாது'' என்பதன் கருத்து, அந்தணர் வேதத்தை எப்பொழுதும் ஓதிக் கொண்டிருப்பவர் என்ற கருத்தால் ஆகும். 'ஒன்று புரிந்த' என்பதற்கு மெய்ம்மை நீங்காமல் வீடுபேறு ஒன்றையுமே புரிந்தவென்றும், மூவேழ் துறை என்பதற்கு இருபத்தொரு கூறுப்பட்ட தருக்கநூல் என்றும், 'ஈர்ஏழின்' என்பதற்குக் காட்டுள் ஏழுநாளும், நாட்டுள் ஏழுநாளும் என்றும்,

Koviloor Digital Library

கற்பின் வலை சூடி என்பதற்கு கற்பினால் வலைசூடி என்றும் உரைப்பினும் அமையும். இருபத்தொரு வேள்விகளாவன – சோம யஞ்ஞும் ஏழு; ஹவிர்யஞ்ஞும் ஏழு; பாகயஞ்ஞும் ஏழு ஆகியனவாகும். வேள்வி செய்யும்போது கலைமானின் உறுப்புத்தோலைப் போர்த்துக் கொள்ளுதல் மரபாதலின், "வினைக்கு வேண்டி நீ பூண்ட, புலப் புல்வாய்க் கலைப்பச்சை" என்றார். அப்போது யாகபத்தினிகள் அறநூலால் புகழப்பட்ட சாலகம் என்னும் அணியை அணிந்துகொள்ளுதலை, "அறம் புகழ்ந்த வலை சூடி" என்று குறிப்பிட்டார்.

வேள்விகள் சிலவற்றிற்குப் பணிவிடை செய்தற்குப் பத்தினிகள் மூவருக்குக் குறையாதிருத்தல் வேண்டும் என்பது விதியாதலால், "நின் நிலைக்கு ஒத்த நின் துணைத் துணைவியர், தமக்கு அமைந்த தொழில் கேட்ப" என்றார். அவன் நெய் வழங்கி, பலவேள்விகள் செய்து, புகழ்பரப்பிய செயலைக் கண்டு நீர், எண், மண் நாணிய விதத்தை, "நீர் காண நெய் வழங்கியும், எண் நாணப் பல வேட்டும், மண் நாணப் புகழ் பரப்பியும்" என்றார். வேள்வியின் முடிவில் அனைவர்க்கும் விருந்து செய்யும் வழக்கத்தை, "விருந்துற்ற நின் திருந்து ஏந்துநிலை" என்று குறிப்பிட்டார். இமயம்போல் அழியாது நின்று புகழ்பரப்பி நெடுங்காலம் நிற்பாயாக என்று வாழ்த்துதல் மரபாகும். அதனால், "நெடுவரைக் கழைவளர் இமயம் போல நிலீஇயர் அத்தை நீ நிலமிசையானே" என்றார்.

"தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோற்கே" (புற. 1 : 13), "ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர் சடை" (புற. 56 : 1), "எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை" (அக. க. வா. 10), "நீர் நாண நெய் வழங்கி" (புற. 384 : 17), "நெய்மலி ஆவுதி பொங்கப் பன்மாண் வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி" (புற. 15 : 19 – 20), "படுதிரை நீர் சூழ் நிலவரை உயர நின் சீர்கெழு விழுப்புகழ்" (புற. 160 : 29 – 30), "மண் தேய்த்த புகழினான்" (சிலப். 1 : 36), "மண் நாணப் புகழ் வேட்டு" (புற. 384 : 16), "மலைத்தலைய கடற் காவிரி" (பட். 6), "குடமலைப் பிறந்த தண் பெருங் காவிரி" (மலை. 527),

Koviloor Digital Library

''குடமலைப் பிறந்த ... காவிரி (சிலப். 10 : 106 – 108), ''பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே'', (புற. 2 : 24) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : *முதுமுதல்வன் – சிவபெருமான்; முதுநூல் – வேதம்; இகல் – மாறுபாடு; மிகல் – மிகுதி; மூவேழ்துறை – இருபத்தொரு வேள்வித்துறை; முட்டு – குறை; புல்வாய்க்கலை – கலைமான்; பச்சை – தோல்; சுவல் – தோள்; பூண்ஞாண் – பூணூல்; மிசை – மேலே; அறம் – அறநூல்; வலை – சாலேகம் என்ற அணி; நுதல் – நெற்றி; துணைவியர் – மனைவியர்; குடாஅது – மேற்குத்திசை; வரை – மலை; புயல் – மழை முகில்; சிலைத்தல் – முழங்குதல்; புரக்கும் – பாதுகாக்கும்; புனற் படப்பை – புனற்பக்கம்; கழை – மூங்கில்; இமயம் – இமயமலை.*

167

நீயே, அமர் காணின் அமர் கடந்து, அவர்
படை விலக்கி எதிர் நிற்றலின்,
வாஅள் வாய்த்த வடு ஆழ் யாக்கையொடு,
கேள்விக்கு இனியை; கட்கு இன்னாயே;
அவரே, நிற் காணின் புறம் கொடுத்தலின்,
ஊறு அறியா மெய் யாக்கையொடு,
கண்ணுக்கு இனியர்; செவிக்கு இன்னாரே :
அதனால், நீயும் ஒன்று இனியை; அவரும் ஒன்று இனியர்;
ஒவ்வா யா உள, மற்றே? வெல் போர்க்
கழல் புனை திருந்து அழக் கடு மான் கிள்ளி!
நின்னை வியக்கும் இவ் உலகம்; அஃது
என்னோ? பெரும! உரைத்திசின் எமக்கே.

திணை : வாகை; துறை : அரசவாகை.

ஏனாதி திருக்கிள்ளியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : அரசவாகையாவது, அரசனது இயல்பை, அரசனது வெற்றியைக் கூறுதல் எனப் பொருள்படும். ''நீயே ... கேள்விக்கு இனியைகட்கு இன்னாயே ... அவரே ... கண்ணுக்கு இனியர் செவிக்கு இன்னாரே'' என்று அரசனது வெற்றி மேம்பாட்டைப் பழிப்பது போலப் புகழ்ந்துரைத்தலால் இப்பாடல் அரசவாகைத் துறையாயிற்று.

உரை : வெல்லும் போரைச் செய்யும் வீரக்கழல் அணிந்த திருந்திய அடியினையும், விரைந்த வேகம் கொண்ட குதிரையையும் உடைய கிள்ளி! நீதான் போரைக் கண்டால் அப்போரை வென்று, அப்பகைவரது படையை விலக்கி எதிர் நிற்கின்றாய்; அதனால் வாள் தைத்த தழும்புடைய உடம்புடன் காணப்படுதலால், நின் போர்ப்புகழைக் கேட்பவரின் செவிக்கு இனியனாகவும், புண்ணுடைய உடம்புடன் கண்ணுக்கு இன்னாதவனாகவும் இருக்கின்றாய்; பகைவராகிய அவர், நின்னைக் காணின் புறங்கொடுத்து ஓடுதலால், புண் அறியாத உடம்பாகிய வடிவுடன் கண்ணுக்கு இனியராகவும், செவிக்கு இன்னாதவராகவும் உள்ளனர். அதனால் நீயும் ஒன்றில் இனியை; அவரும் ஒன்று இனியர்; இனி அவர் ஒவ்வாதன வேறு யாவுள; ஆயினும், இவ்வுலகம் நின்னையே வியந்து போற்றுகின்றது. அதற்குக் காரணம் யாதோ? எமக்குச் சொல்லுவாயாக.

உரை விளக்கம் : மதுரைக்குமரனார், ஏனாதி திருக்கிள்ளியின் உடம்பு முழுதும் வாள் வடுவுற்று இருக்க, அவனது போர்த்திறத்தை வெளிப்படுத்தும் வீரத்தை வியந்து பழிப்பதுபோலப் புகழ்ந்து காரணம் வினவுவார் போல வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடியது. ஏனாதி திருக்கிள்ளி என்பான், சோழ நாட்டுக் குறுநில மன்னருள் ஒருவன்; சோழ அரசர்க்குப் படைத்துணையாய்ப் பல போர்களைச் செய்து மேம்பட்டவன். அவன் பகைவருடன் எதிர்நின்று நேருக்கு நேர் நின்று போரிட்டதால், வாளின் வாய் சென்று நன்கு பொருந்த உண்டான புண்ணாலாகிய வடுவை, ''வாஅள் வாய்த்த வடு'' என்றார். வடுப்பட்ட உடம்புடன் இருத்தலால் காண்போரின்

Koviloor Digital Library

கண்ணுக்கு அழகில் குறைந்திருப்பதால், ''கட்கு இன்னாயே'' என்றார். புறங்கொடுத்து ஓடும் பகைவர்மேல் தூயவீரர் வாள் முதலிய படைகளை எறியாராகலின், ''புறங்கொடுத்தலின் ஊறு அறியா மெய்யாக்கை'' என்றார். புண் இல்லாத உடம்புடன், காண்போரின் கண்ணுக்கு அழகாகக் காட்சி அளிப்பதால், ''கண்ணுக்கு இனியர்'' என்றும், அவரின் போர்த்திறத்தைக் கேட்போர்க்கு இன்னாமையாகிய துன்பம் தருதலால், ''செவிக்கு இன்னாரே'' என்றும் கூறினார். அறிவுடையோர் அழகைக் கண்டு பாராட்டுவதை விடச் செயலைக் கண்டே பாராட்டும் இயல்புடையவர். கிள்ளி செவிக்கினிய புகழுடையனாதலின், ''நின்னை வியக்கும் இவ்வுலகம்'' என்றார்.

''வருதார் தாங்கி அமர் மிகல் யாவது, பொருது ஆண்டு ஒழிந்த மைந்தர் புண் தொட்டு'' (புற. 62 : 1 – 2), ''கையது வேலே காலன புனைகழல், மெய்யது வியரே மிடற்றது பசும்புண்'' (புற. 100 : 1 – 2), ''வாள்வடு மயங்கி வடுவின்று வடிந்த யாக்கையன்'' (புற. 180 : 5 – 6), ''விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள், வைக்கும் தன் நாளை எடுத்து'', (குறள். 776) எனவரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அமர் – போர்; வடு – தழும்பு; யாக்கை – உடம்பு; புறங்கொடுத்தல் – போரில் புறமுதுகிட்டு ஓடுதல்; ஊறு – புண்; ஒவ்வா – பொருந்தாத.

168

அருவி ஆர்க்கும் கழை பயில் நனந் தலைக்
கறி வளர் அடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங் கிழங்கு மிளரக் கிண்டி, கிளையொடு,
கடுங் கண் கேழல் உழுத பூழி,
நல் நாள் வரு பதம் நோக்கி, குறவர்

Koviloor Digital Library

உழாஅது வித்திய பரூஉக் குரற் சிறு தினை
முந்து விளை யாணர் நாள் புதிது உண்மார்,
மரை ஆன் கறந்த நுரை கொள் தீம் பால்,
மான் தடி புழுக்கிய புலவு நாறு குழிசி.
வான் கேழ் இரும் புடை கழாஅது, ஏற்றி,
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளம் கவினிய குளவி முன்றில்,
செழுங் கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்,
நறை நார்த் தொடுத்த வேங்கை அம் கண்ணி,
வடி நவில் அம்பின் வில்லோர் பெரும!
கை வள் ஈகைக் கடுமான் கொற்ற!
வையக வரைப்பில் தமிழகம் கேட்ப,
பொய்யாச் செந் நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர், நாளும் –
ஈயா மன்னர் நாண,
வீயாது பரந்த நின் வசை இல் வான் புகழே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் துறை; இயன்மொழியும், அரசவாகையும் ஆம்.

பிட்டங்கொற்றனைக் கருவூர்க் கதம்பிள்ளைச் சாத்தனார் பாடியது.

துறை விளக்கம் : "பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப் பாடுப என்ப பரிசிலர்" என்றதனால் பரிசில் துறையாயிற்று; அரசனது இயல்பை உரைத்தலால் இயன்மொழி துறையாயிற்று; அரசனது வென்றிமேம்பாட்டைக் கூறுதலால் அரசவாகையாகவும் கொள்ளப்படும்.

உரை : மலைச்சாரலிடத்து அருவி ஒலித்து இழியும் மூங்கில் வளர்ந்த அகன்ற இடத்தில் மிளகுக்கொடி வளரும்;

Koviloor Digital Library

அச்சாரலில் மலர்ந்த காந்தளின் கொழுங்கிழங்கு வெளிப்பட்டுத் தோன்றும்படி தன் இனத்துடன் கூடி, தறுகண்மையுடைய பன்றி கிளறியது; அவ்வாறு பன்றி உழுத புழுதியில், குறவர் நல்லநாள் பார்த்து உழாமலே தினையை விதைத்தனர். பரிய தோகையுடைய சிறுதினை முற்பட விளைந்தது. புதுவருவாயாகிய தினைக்கதிரை நல்லநாளில் புதிதுண்ணவேண்டி, மானிறைச்சி சமைத்த புலால் நாறும் பானையைக் கழுவாதே, மரையாவைக் கறந்த நுரை கொண்ட இனிய பாலை உலைநீராக வார்த்து ஏற்றி, சந்தன விறகால் எரியூட்டித் தினையைச் சமைத்தனர்; கூதாளியால் அழகுபெற்ற மலைமல்லிகை நாறும் முற்றத்திடத்து, வளவிய குலையுடைய வாழையின் இலையிலே, பலருடனும் பகுத்து உண்ணுவர்; அத்தகைய வளமுடைய ஊரப்படாத குதிரை என்னும் மலைக்குத் தலைவ! கூரிய வேலையும், நறைக் கொடியின் நாரால் தொடுக்கப்பட்ட வேங்கைப் பூமாலையினையும், வடித்தல் கொண்ட அம்பினையும் உடைய வில்வீரர்களுக்குத் தலைவ! கைவண்மையும், கடிய குதிரையும் உடைய கொற்ற! பரிசிலர் நாள்தோறும் கொடாத வேந்தர் நாண, கெடாது பரந்த நின் குற்றம் இல்லாத வான்புகழை, உலகத்து எல்லையுள் தமிழ்நாடு கேட்கத் தம் பொய்யாத செந்நா வருந்தும்படி வாழ்த்திப் பாடுவர் என்று சொல்லுவர்.

உரை விளக்கம் : கருவூர்க் கதம்பிள்ளைச் சாத்தனார், சேரமான்கோதைக்குப் படைத்துணைவனாக விளங்கிய பிட்டங்கொற்றனைப் பரிசிலர் பலரும் புகழ்ந்து போற்றுவதாக வியந்து பாடியுள்ளார். பன்றி நிலத்தைக் கிளறுமிடத்துக் காந்தளின் கிழங்கு வெளிப்பட்டுத் தோன்றுதலால், ''கிழங்கு மிளிரக் கிண்டி'' என்றார். நிலத்தை உழும் அவசியமில்லாமல், பன்றியே உழுதலால் குறவர்க்கு தினை விதைக்க எளிதாயிற்று என்பதை, ''கேழல் உழுத புழுதி ... குறவர் உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை'' என்றார். விதைத்தற்கும், விளைந்த தானியத்தை உண்பதற்கும் நல்ல நாள் பார்ப்பது பண்டைத் தமிழரின் வழக்கமாகும். இதனை, ''நன்னாள் வருபதம் நோக்கி'' என்றும், ''சிறுதினை முந்துவிளை யாணர் நாள் புதிது உண்மார்'' என்றும் கூறினார்.

Koviloor Digital Library

குறவர் விருந்தோம்பும் சிறப்புத் தோன்ற, "வாழை அகல் இலைப் பகுக்கும்" என்றார். ஊராத குதிரை என்னும் மலைக்குப் பிட்டங் கொற்றன் தலைவனாதலால், "ஊராக் குதிரைக் கிழவ" என்றார். பரிசிலர் தம் செந்நா வருந்தும்படி மன்னனைப் புகழ்ந்து ஏத்துதல் மரபாதலின், "தமிழகம் கேட்பப் பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப் பாடுப என்ப" என்றார்.

"கறிவளர் அடுக்கத்து" (குறு. 288), "கறிவளர் சிலம்பில்" (ஐங். 243, சிலப். 28 : 114), "கறியிவர் சிலம்பின்" (அக. 112 : 4), "நாளால், உறையெதிர்ந்து வித்தியவூழ் ஏனல்" (திணை மாலை. 1), "கிழங்குஅகழ் கேழல் உழுத சிலம்பிற், தலைவிளை கானவர் கொய்தனர்" (ஐங். 270), "கேழல் உழுத கரிபுனக் கொல்லை" (ஐந். எழு. 11), "குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி ஆரமாதலின்" (புற. 108 : 1 – 2), "குல்லை குளவி கூதளங் குவளை" (நற். 376), "நாறிதழ்க் குளவியொடு கூதளங்குழைய" (புற. 380 : 7), "ஊராது ஏந்திய குதிரை" (புற. 158 : 8), "வசையில் வெம்போர் வானவன் மறவன், நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும், பொய்யா வாய்வாள் புனைகழற் பிட்டன், மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்" (அக. 143 : 10 – 13), "சாந்த ஞெகிழியின், ஊன் புழுக்கு அயரும் குன்ற நாட" (அக. 172 : 12 – 13), "தண்கமழ் நறைக்கொடி கொண்டு" (ஐங். 276), "நறை நார் வேங்கைக் கண்ணியன்" (அக. 282 : 9 – 10), "செறுத்த செய்யுள் செய்செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்குப் புகழ்க் கபிலன்" (புற. 53 : 11 – 12), "மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின் ... நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" (பதி. 85 : 10 – 13), "செய்யா கூறிக் கிளத்தல், எய்யாதாகின்று எம் சிறு செந்நாவே" (புற. 148 : 6 – 7), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கழை – மூங்கில்; கறி – மிளகுக்கொடி; அடுக்கம் – மலைச்சாரல்; கிளை – சுற்றம், இனம்; கேழல் – பன்றி; பூழி – புழுதி; நன்னாள் – நல்லநாள்; பதம் – செவ்வி; குரல் – தோகை; யாணர் – புதுவருவாய்; மரையான் –

Koviloor Digital Library

ஒருவகைப் பசு; காட்டு விலங்கு; தடி – இறைச்சி; புலவுநாறு – புலால் நாற்றம்; குழிசி – பானை; சாந்தம் – சந்தனம்; புன்கம் – சோறு; குளவி – மலை மல்லிகை; முன்றில் – முற்றம்; நறை – நறைக்கொடி; ஈகை – கொடை; வையகம் – உலகம்; வரைப்பு – எல்லை; ஏத்தி – வாழ்த்தி; வசை – குற்றம், பழி.

169

நும் படை செல்லும்காலை, அவர் படை
எடுத்து ஏறி தானை முன்னரை எனாஅ,
அவர் படை வருஉம்காலை, நும்படைக்
கூழை தாங்கிய, அகல் யாற்றுக்
குன்று விலங்கு சிறையின் நின்றனை எனாஅ,
அரிதால், பெரும! நின் செவ்வி என்றும்;
பெரிதால் அத்தை, என் கடும்பினது இடும்பை;
இன்னே விடுமதி பரிசில்! வென் வேல்
இளம் பல் கோசர் விளங்கு படை கன்மார்,
இகலினர் எறிந்த அகல் இலை முருக்கின்
பெரு மரக் கம்பம் போல,
பொருநர்க்கு உலையா நின் வலன் வாழியவே!

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

பிட்டங்கொற்றனைக் காவரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

துறை விளக்கம் : ''பெரிதால் அத்தை என் கடும்பினது இடும்பை, இன்னே விடுமதி பரிசில்'' என்று பரிசில் கேட்டுப் பாடுதலால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : நும் படை பகைவர்மேல் செல்லுங்காலத்து பகைவர் படையாகிய வேல் முதலானவற்றை எடுத்தெறிங்கால், நீ படைக்கு

Koviloor Digital Library

முன்னே நிற்கின்றாய்; பகைவர் படையெடுத்து நின்னிடத்து வரும் காலத்து, படையின் அணியைத் தாங்கவேண்டி, அகன்ற ஆற்றின் குறுக்கே தடுத்துக் கிடக்கின்ற மலையையொப்ப அதனைத் தடுத்து நிற்கின்றாய்; பெருமானே! எந்நாளும் நின்னைக் காணும் காலம் பெறுதல் அரிது; என் சுற்றத்தின் வறுமையோ பெரிது; நீ இப்பொழுதே எனக்குப் பரிசில் தந்து விடுவாயாக; வென்றிவேலையுடைய இளைய பல கோசர்களாகிய வீரர்கள், படைக்கலம் கற்குங்காலத்தே வேல் எறிந்து பழகும் (மாறுபட்டனராய் எறிந்த) அகன்ற இலையுடைய முள்ளு முருங்கை மரத்தாற் செய்யப்பட்ட தூணமாகிய இலக்கைப் போலப் பகைவர் வெல்லுதற்கு அரிய நின் வென்றியும் நிலைபெற்று வாழ்வதாக.

உரை விளக்கம் : பிட்டங்கொற்றனின் போர் ஆற்றலை வியந்து காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது. பகைவர் மேற்செல்லுங்காலத்திலும், பகைவர் படையெடுத்து வருங்காலத்திலும் படைக்கு முன் நின்றும், படையைத் தடுத்து நின்றும் செயலாற்றுதலின், "அரிதால் பெரும நின் செவ்வி என்றும் என்றார். நின் செவ்வி பெறல் அரிது; ஆனால் என் கடும்பினது இடும்பையோ பெரிது என்றது, விரையப் பரிசில் தந்து விடை தரவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. வீரர்களாகிய இளம்கோசர் படைக்கலப் பயிற்சியின்போது, இலக்கைப் பார்த்து வேல்முதலான கருவிகளை எறிந்து பழகுவராதலின், "இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார், இகலினர் எறிந்த ... பெருமரக் கம்பம்" என்றார்.

"தமியன் வந்த மூதிலாளன், அருஞ்சமம் தாங்கி முன் நின்று எறிந்த" (புற. 284 : 4 – 5), "வேந்துடைத் தானை முனைகெட நெரிதர, ஏந்துவாள் வலத்தன் ஒருவனாகி, தன் இறந்து வாராமை விலக்கலின் பெருங்கடற்கு, ஆழி அனையன் மாதோ" (புற. 330 : 1 – 4), "வருபுனல் கற்சிறை கடுப்ப விடையறுத்து ஒன்னார் ஒட்டிய செருப்புகல் மறவர்" (மது. 725 – 726), "வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய

Koviloor Digital Library

பெருமையானும்'' (தொல். புறத். நூ.8), ''பொருபடையுள் கற்சிறைபோல் ஒருவன் தாங்கிய நிலை உரைத்தன்று'' (பு.வெ.மா.54), ''நினக்கு ஒத்தது நீ நாடி நல்கினை விடுமதி பரிசில்'' (புற. 136 : 23 – 24), ''அருஞ்சமம் வருகுவது ஆயின் வருந்தலும் உண்டு என் பைதல் அம் கடும்பே'' (புற. 139 : 14 – 15) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கூழை – பின்படை; கடும்பு – சுற்றம்; இடும்பை – துன்பம், வறுமை; கோசர் – ஒருவகை வீரர்; இகலினர் – மாறுபட்டனர்; முருக்கு – முள்ளு முருங்கை மரம்; கம்பம் – தூணம்; பொருநர் – பகைவர்; வலன் – வென்றி.

170

மரை பிரித்து உண்ட நெல்லி வேலி,
பரலுடை முன்றில், அம் குடிச் சீறூர்,
எல் அடிப்படுத்த கல்லாக் காட்சி
வில் உழுது உண்மார் நாப்பண், ஒல்லென,
இழி பிறப்பாளன் கருங்கை சிவப்ப,
வலி துரந்து சிலைக்கும் வன் கண் கடுந் துடி
புலி துஞ்சு நெடு வரைக் குடிஞையோடு இரட்டும்
மலை கெழு நாடன், கூர் வேல் பிட்டன்,
குறுகல் ஓம்புமின், தெவ்விர்! அவனே
சிறு கண் யானை வெண் கோடு பயந்த
ஒளி திகழ் முத்தம் விறலியர்க்கு ஈத்து,
நார் பிழிக் கொண்ட வெங் கட் தேறல்
பண் அமை நல் யாழ்ப் பாண் கடும்பு அருத்தி,
நசைவர்க்கு மென்மை அல்லது, பகைவர்க்கு
இரும்புபயன் படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைத்து எறி கூடமொடு பொரூஉம்
உலைக் கல் அன்ன, வல்லாளன்னே.

Koviloor Digital Library

திணை : வாகை; **துறை :** வல்லாண் முல்லை; தானை மறமும் ஆம்.

பிட்டங்கொற்றனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது.

துறை விளக்கம் : ஒரு வீரனுடைய வீட்டையும், ஊரையும், இயல்பினையும் சொல்லி அவன் ஆண்மைத் தன்மையை நன்மை பெருகச் சொல்லுதல் வல்லாண்முல்லைத் துறையாகும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை, "இல்லும் பதியும் இயல்பும் கூறி, நல் ஆண்மையை நலமிகுத் தன்று" என்று குறிப்பிடும். "உலைக்கல் அன்ன வல்லாளன்னே" என்று இப்பாடலில் குறிப்பிட்டுள்ளதால் வல்லாண்முல்லைத் துறையாயிற்று.

போர் செய்தற்கு எதிர்ந்த இருவகைப் படைகளும் தம்முள் பொருது மடியாத வண்ணம் ஒரு வீரன் பாதுகாத்த ஆற்றலின் உயர்ச்சியைச் சொல்லுதல் தானைமறம் எனப்படும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை, "தாம் படைத் தலைக்கொள்ளாமை, ஓம்படுத்த உயர்பு கூறின்று" என்று குறிப்பிடும். "குறுநல் ஓம்புமின் தெவ்விர்" என்றதால் இப்பாடல் தானை மறம் துறையையும் சார்ந்தது என்பர்.

உரை : மரையாவால் பிரித்து உண்ணப்பட்ட நெல்லி மரங்களால் ஆகிய வேலியையும், அதன் விதையாகிய பரலுடைய முற்றத்தினையும், அழகிய குடியிருப்புகளையும் உடையது சீறூர், அவ்வூரில் பகற்பொழுதெல்லாம் வேட்டையாடித் திரிந்த கல்வி இல்லாத காட்சியையுடைய, வில்லாகிய ஏரால் உழுதுண்பாரின் (வேட்டுவரின்) நடுவே, ஒல்லென்னும் ஓசையுண்டாக இழிந்த பிறப்பினையுடைய புலையன் தன் கை சிவப்ப, வலிய அச்சத்தைத் தரும் துடியை முழக்கிக் கொட்டுவான்; அவ்வோசை புலி இருக்கும் மலையில் பேராந்தையோடு கூடி ஒலிக்கும்; பகைவீர்! அத்தகைய மலை பொருந்திய நாட்டை உடையவனாகிய கூரிய வேலுடைய

Koviloor Digital Library

பிட்டனை அணுகாதிருப்பீராக; அவன் சிறுகண் யானையின் தந்தத்தில் விளைந்த ஒளி திகழும் முத்தத்தை விறலியர்க்குக் கொடுத்தான்; நாரைப் பிழிந்தெடுத்த கள்தெளிவைப் பண்பொருந்திய யாழுடைய பாணர் சுற்றத்திற்கு நுகரக் கொடுத்தான்; இவ்வாறு தன்னிடத்துப் பரிசில் வேண்டி வந்தோர்க்கு மென்மையுடையவனாவான்; ஆனால் பகைவர்க்கு, இரும்பைப் பயன்படுத்துகின்ற வலிய கையையுடைய கொல்லன் உலைக்களத்திலே விளங்கும் உலைக்கல் போலும் வலிய ஆண்மையை உடையவன் ஆவான்.

உரை விளக்கம் : பிட்டங்கொற்றன், பரிசிலர்க்கும் பகைவர்க்கும் முறையே மெல்லியன் ஆகவும், வல்லியன் ஆகவும் விளங்கும் திறத்தை வியந்து உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியது. மரையா நெல்லிக்காயைத் தின்னுமிடத்து அதன் கொட்டையை வெளியே துப்பி விடுதலால், ''மரையா பிரித்துண்ட நெல்லிப் பரல்'' என்றார். விதையாகிய பரல் மனைமுற்றத்தே பரந்து கிடக்கும். வேட்டுவர் கல்வி அறிவின்மையால் வேட்டையாடி, வில்லாகிய ஏரால் உழுது உண்ணும் வாழ்க்கையர்; இதனைக், ''கல்லாக் காட்சி வில் உழுது உண்மார்'' என்றார். வில் உழுது உண்மார் என்றது, வேட்டுவரைக் குறித்தது; துடி ஒலியும் பேராந்தையின் ஒலியும் ஒப்ப எதிரொலிக்கும் என்பதை, ''துடி ... குடிஞையோடு இரட்டும்'' என்றார். யானையின் தந்தம் மிகவும் முதிர்ந்தவிடத்து அதன் நுனியில் முத்து உண்டாகும். அம்முத்தை விறலியர்க்கு அளித்ததை, ''சிறுகண் யானை வெண்கோடு பயந்த ... முத்தம் விறலியர்க்கு ஈத்து'' என்றார். உலைக்கல் என்றது பட்டடைக்கல்; 'உலைக்கல் அன்ன வல்லாளன்' என்றது பிட்டங்கொற்றனுக்கு ஒப்பாகக் கூறப்பட்டது.

''நெல்லி மரையினம் ஆரும் முன்றில், புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே'', ''புரிமட மரையான் கருநரை நல்லேறு, தீம்புளி நெல்லி மாந்தி'' (குறு. 235, 317), ''புல்லிலைப் பராரை நெல்லி யம்புளித் திரள்காய், கான மடமரைக் கணநிரை கவரும்'', ''நெல்லிப் பைங்காய் அருந்தி, மெல்கிடு கவுள மடமரை ஓர்க்கும்''

Koviloor Digital Library

(அக. 69, 399), ''மரையா மரல் கவர'' (கலி.6), ''வில்லேர் வாழ்க்கைச் சீறூர்'' (புற. 331 : 2), ''வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்'', ''வானம் வேண்டா வில்லேர் உழவர்'' (அக. 35, 193), ''வில்லேர் உழவர் பகை கொளினும்'' (குறள். 872), ''அத்தக் குடிஞைத் துடி மருள் தீம்குரல்'' (புற. 370 : 6), துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்து'' (பொரு. 210), ''ஆகுளி கடுப்பக் குடிஞை இரட்டும் நெடுமலை (மலை. 140 – 141), கடுங்குரல் குடிஞைய நெடும்பெருங் குன்றம்'' (அக. 19 : 4 – 5), ''வன்புல நாடன் வயமான் பிட்டன்'' (புற. 172 : 8), ''பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய உயர் மருப்பு ஏந்திய வரைமருள் நோன்பகடு'' (புற. 161 : 16 – 17), ''முத்துடை மருப்பின் மழகளிறு பிளிற'' (பதி. 32), ''பெருங்களிற்று முத்துடை வான்கோடு'' (முரு. 304 – 305), யானை முத்தார் மருப்பு'' (குறிஞ். 35 – 36), ''யானை முத்துடை மருப்பின்'' (மலை. 517 – 518), ''நாரரி தேறல் மாந்தி'' (புற. 367 : 7), ''நாரரி நறவம்'' (பரி. 6 : 49), ''பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி, நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்'' (அக. 216, 296), ''பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்'' (புற. 164 : 11), ''கேடு இன்றாக பாடுநர் கடும்பென, அரிது பெறு பொலங்கலம் எளிதினின் வீசி'' (புற. 160 : 10 – 11), ''தாளின் கொள்ளலிர் வாளின் தாரலன், ... நும் விறலியர் பின்வர, ஆடினிர் பாடினிர் செலினே, நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே'' (புற. 109 : 13 – 18), ''வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே, கிணைமகட்கு எளிதால் பாடினள் வரினே'' (புற. 111 : 2 – 4), ''ஆடுமகள் குறுகின் அல்லது, பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே'' (புற. 128 : 6 – 7), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : மரை – மரையா, காட்டுப்பசு; முன்றில் – முற்றம்; எல் – பகற்பொழுது; கல்லாக் காட்சி – கல்வியில்லாத காட்சி; வில் உழுது உண்மார் – வில்லேர் உழவர், வேட்டுவர்; இழிபிறப்பாளன் – புலையன்; சிலைக்கும் – ஒலிக்கும்; துடி – ஓர் இசைக்கருவி; குடிஞை – பேராந்தை; தெவ்விர் – பகைவர்;

Koviloor Digital Library

கோடு - கொம்பு, மருப்பு; முத்தம் - முத்து; தேறல் - கள், மது; பாண் கடும்பு - பாணர் சுற்றம்; நசைவர் - விரும்பி வந்தோர்; விசைத்துஎறி கூடம் - விசைத்து அடிக்கப்படும் உலைக்களம்; வல்லான் - வலிய ஆண்மையுடையவன்.

171

இன்று செலினும் தருமே; சிறு வரை
நின்று செலினும் தருமே; பின்னும்,
'முன்னே தந்தனென்' என்னாது, துன்னி
வைகலும் செலினும், பொய்யலன் ஆகி,
யாம் வேண்டியாங்கு எம் வறுங் கலம் நிறைப்போன்;
தான் வேண்டியாங்குத் தன் இறை உவப்ப
அருந் தொழில் முடியரோ, திருந்து வேற் கொற்றன்;
இன மலி கதச் சேக் களனொடு வேண்டினும்,
களம் மலி நெல்லின் குப்பை வேண்டினும்,
அருங் கலம் களிற்றொடு வேண்டினும், பெருந்தகை
பிறர்க்கும் அன்ன அறத் தகையன்னே.
அன்னன் ஆகலின், எந்தை உள் அடி
முள்ளும் நோவ உறாற்கதில்ல!
ஈவோர் அரிய இவ் உலகத்து,
வாழ்வோர் வாழ, அவன் தாள் வாழியவே!

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

பிட்டங்கொற்றனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : "ஈவோர் அரிய இவ்வுலகத்து, வாழ்வோர் வாழ அவன் தாள் வாழியவே" எனப் பிட்டங்கொற்றனின் இயல்புகளை வியந்து உரைத்தலால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : இன்று சென்றாலும் தருவன்; சிறிதுநாள் கழித்துச் சென்றாலும் தருவன்; பின்னையும் முன்னே தந்தேன் என்று பயின்று என்னாது பழக்கத்தால் நாள்தோறும் சென்றாலும் பொய்யானாகி யாம் வேண்டியவாறே எம் வறிய உண்கலத்தை நிரப்புவோன், திருந்திய வேலையுடைய கொற்றன்; அவன், தான் விரும்பியவாறே தன் அரசன் மகிழ, செய்தற்கரிய போர்த்தொழில் செய்து வெற்றி பெறுவானாக; இனமாகிய நல்ல காளைகளைத் தொழுவோடு (கொட்டில்) வேண்டினாலும், நெற்களத்தில் குவித்த வைத்த நெல்லின் குவியலை வேண்டினாலும், பெறுதற்கரிய அணிகலங்களைக் களிற்றுடன் வேண்டினாலும் அங்ஙனமே தரும் பெருந்தகைமையாளன்; பிறர்க்கும் அத்தன்மையில் அறஞ் செய்யும் தகைமை உடையவன்; ஆதலால் எம் இறையாகிய அவனது காலடியில் சிறுமுள்ளும் குத்தி நோவு செய்யாது ஒழிவதாக; கொடுப்போர் அரிதாகிய இவ்வுலகத்தில் உயிர்வாழ்வோர் வாழும்படி அவன் திருவடிகள் என்றும் நிலைபெற்று வாழ்வதாக.

உரை விளக்கம் : பிட்டங்கொற்றனின் கொடைத்தன்மையை வியந்து காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது. இன்று சென்றாலும், சிலநாள் கழித்துச் சென்றாலும், நாள்தோறும் சென்றாலும் பொய்க்காமல் வேண்டியதை அளிப்பான் பிட்டங்கொற்றன் என்று அவன் கொடை உள்ளத்தைப் போற்றி, "இன்று செலினும் ... நின்று செலினும் ... வைகலும் செலினும் பொய்யலனாகி யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்" என்றார். யாம் வேண்டியவாறே எமக்கு அளிப்பவன், தான் வேண்டியவாறே மேற்கொள்ளும் அரிய தொழில்களைச் செய்தல் வேண்டும் என்றும் அவ்வருந்தொழில் அவன் வேந்தர்க்கு மகிழ்ச்சியை அளித்தல் வேண்டும் என்றும் கூறினார். அருந்தொழிலை முடித்தலின் பயன்

Koviloor Digital Library

வேந்து மகிழ்தலாதலின், ''தான் வேண்டியாங்குத் தன் இறை உவப்ப'' என்றார். பரிசிலர்க்கு அளிப்பதைப் போன்றே பிறர்க்கும் அளிக்கும் தன்மையன் பிட்டன் என்பதை உணர்த்த, ''பிறர்க்கும் அன்ன அறத்தகை அன்னே'' என்றார்.

பிட்டனுக்குச் சிறு தீங்கும் வரக்கூடாது என ஆர்வம் கொண்டு அவன் காலடியில் சிறுமுள்ளும் குத்தக் கூடாது என்று வாழ்த்தும் தன்மையில், ''எந்தை உள்ளடி முள்ளும் நோவ உறாற்க தில்ல'' என்றார். செல்வர் பலராக இருந்தபோதும், ஈதல் மனப்பான்மை உடையார் மிகச் சிலரே உளராதலின், ''ஈவோர் அரிய இவ்வுலகத்து'' என்றும், உலகில் வாழ்வோர் இனிது உயிர் வாழ்வதற்கு இவன் காரணமாதல் பற்றி, ''வாழ்வோர் வாழ அவன் தாள் வாழியவே'' என்றும் வாழ்த்தினார். இனி வாழ்வோர் வாழ்வெல்லாம் இவன் வாழ்க என உரைப்பினும் அமையும் என்றார்.

''ஆனா ஈகை அடுபோர் அண்ணல்'' (புற. 42 : 1), ''ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினும், தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'' (புற. 101 : 1 – 3), ''இன்னும் தம் என எம்மனோர் இரப்பின், முன்னும் கொண்டிர் என நும்மனோர் மறுத்தல் இன்னாது'' (புற. 203 : 3 – 6), ''நாளும் இழை அணி யானை இரப்போர்க்கு ஈயும்'' (புற. 153 : 2) ''நின்னும் நின் மலையும் பாடி வருநர்க்கு, இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த அண்ணல் யானை'' (புற. 130 : 3 – 5), ''மன்றுபடு பரிசிலர் காணின் கன்றொடு கறையடி யானை இரியல் போக்கும்'' (புற. 135 : 11 – 12), ''பெருங்களிறு நல்கியோனே அன்னதோர் தேற்றா ஈகையும் உளது கொல்'' (புற. 140 : 8 – 9), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வைகல் – நாள்தோறும்; இறை – அரசன்; சே – காளைகள்; களன் – கொட்டில், தொழுவம்;

Koviloor Digital Library

களம் – நெற்களம்; குப்பை – குவியல், குவை, திரட்சி; அறத்தகை – அறம் செய்யும் இயல்புடைய தகைமையன்; எந்தை – எம் இறைவன் (அரசன்); உள்ளடி – காலடி, கால்பாதம்; ஈவோர் – கொடுப்போர்; வாழ்வோர் – உயிர் வாழ்வோர்; தாள் – திருவடிகள்.

172

ஏற்றுக உலையே; ஆக்குக சோறே;
கள்ளும் குறைபடல் ஓம்புக; ஒள் இழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக;
அன்னவை பிறவும் செய்க; என்னதூஉம்
பரியல் வேண்டா; வரு பதம் நாடி,
ஐவனம் காவலர் பெய் தீ நந்தின்,
ஒளி திகழ் திருந்து மணி நளி இருள் அகற்றும்
வன் புல நாடன், வய மான் பிட்டன்;
ஆர் அமர் கடக்கும் வேலும், அவன் இறை
மா வண் ஈகைக் கோதையும்,
மாறுகொள் மன்னரும், வாழியர் நெடிதே!

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

பிட்டங் கொற்றனை வடம வண்ணக்கன் தாமோதரனார் பாடியது.

துறை விளக்கம் : பிட்டங் கொற்றனின் கொடை இயல்பை போற்றி, "ஏற்றுக உலையே ஆக்குக சோறே, கள்ளும் குறைபடல் ஓம்புக ஒள்இழைப் பாடுவல் விறலியர் கோதையும் புனைக" என உரைத்தலால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : ஐவனம் நெல்லைக் காப்பார் காவற்கு இட்ட தீ, அவ்விடத்துக் கெட்ட காலத்து ஒளி விளங்கும் மாணிக்கம்

Koviloor Digital Library

செறிந்த இருளை அகற்றும் வலிய நிலமாகிய மலைநாட்டையும், விரைந்த வேகம் கொண்ட குதிரையும் உடையவன் பிட்டன்; பொருதற்கரிய போரை வெல்லும் வேலையுடைய பிட்டனும், அவன் தலைவனாகிய பெருங்கொடை பொருந்திய சேரமான் கோதையும், அவனொடு பகை கொண்டவேந்தரும் நெடிது வாழ்வாராக; அதுவே யாம் வேண்டுவது; இனி, மேல்வரும் உணவைத் தேடி இரங்குதல் வேண்டாம்; ஆதலால் உலையை ஏற்றுக; சோற்றை ஆக்குக; மதுவையும் நிறைய உண்டாக்குக; சிறந்த அணிகலன்கள் அணிந்த, பாடுதலில் வல்ல விறலியர் மாலையும் சூடுக; அத்தன்மையான பிறவும் செய்க.

உரை விளக்கம் : பாணன் ஒருவன் தான்பெற்ற இன்பத்தைச் சுற்றத்தார்க்குக் கூறும் முறையில் வடமவண்ணக்கன் தாமோதரனார், பிட்டனைப் புகழ்ந்துரைத்தது. ''மாறுகொள் மன்னரும் வாழியர்'' என்பதன் கருத்து, பிட்டனும், கோதையும் வென்று திறை கொள்வது அவருளராயின் (பகைமன்னன்) என்பதனால் ஆகும். அதனால் உணவு தரும் பிட்டனையும் கோதையையும் வாழ்த்துவதோடு அதற்குக் காரணமாய பகை மன்னரையும் வாழ்த்தினார். 'அன்னவை பிறவும்' என்றதனால், பூசுவன, உடுப்பன, பூண்பன முதலானவற்றையும் குறித்து நின்றது. உணவு கருதி வருந்த வேண்டாம்; அது தானே கிடைக்கும் என்றது, பிட்டங்கொற்றனின் வள்ளன்மையால் விளைந்த பெருமிதம் ஆகும். பிட்டங்கொற்றன் தரும் உணவு குறைந்தால், அவன் தலைவனாகிய கோதை தரும் உணவு வந்து நம் பசியை நீக்கும்; இவ்வாறு ஒருவர் தருவது குறையின், மற்றவர் தருவது நிறைக்கும் என்பதை உணர்த்த, ''ஐவனம் காவலர் பெய் தீ நந்தின், ஒளி திகழ் திருந்துமணி நளி இருள் அகற்றும்'' என்பதனால் உள்ளுறுத்துக் கூறினார். தீ அழிந்த காலத்து, மாணிக்கம் இருளை அகற்றி வழிகாட்டும் என்று பிட்டனையும், கோதையையும் ஒப்புமைப்படுத்திக் காட்டினார். அதனாலேயே அவன், ''மாவண் ஈகைக் கோதை'' எனச் சிறப்பிக்கப்படுகின்றான். பரிசிலரைப் பாதுகாக்கும் பிட்டனும், கோதையும் உள்ளதால், மனம் வருந்தாது, ''உலையை ஏற்றி

Koviloor Digital Library

சோற்றை ஆக்கி உண்க; மதுவை அருந்துக; மாலை சூடுக" என்றும், 'அவர்களை வாழ்க' என்று வாழ்த்தும் செயல் ஒன்றே நாம் செய்ய வேண்டுவன என்றும் பாண் சுற்றத்தார்க்குக் கூறுகிறார்.

"புறம் பெற்ற வயவேந்தன், மறம் பாடிய பாடினியும்மே ஏருடைய விழுக் கழஞ்சின், சீருடைய இழை பெற்றிசினே" (புற. 11 : 10 – 13), "வானவன் மறவன் வணங்குவில் தடக்கை, ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்" (அக. 77 : 15 – 16), "வானவன் மறவன் நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும், பொய்யா வாய்வாள் புனைகழல் பிட்டன்" (அக. 143 : 10 – 12), "கைவண் செழியன் ஆலங் கானத்து அமர் கடந்து உயர்த்த வேல்" (அக. 175 : 10 – 12), "வானம் நாண வரையாது சென்றோர்க்கு, ஆனாது ஈயும் கவிகை வண்மைக் கடுமான் கோதை" (புற. 54 : 6 – 8), "வண் மகிழ்ப் பிட்டன், பொருந்தா மன்னர் அருஞ்சமத்து உயர்த்த, திருந்திலை எஃகம் போல" (அக. 77 : 16 – 18) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : இழை – அணிகலன்; கோதை – மாலை; பரியல் – வருந்துதல், இரங்குதல்; ஐவனம் – மலைநெல்; மணி – மாணிக்கம்; வயமான் – குதிரை; அமர் – போர்; இறை – தலைவன், வேந்தன்; ஈகை – கொடை; மாறுகொள் மன்னர் – பகைத்த வேந்தர்.

173

யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!
பாணர்! காண்க, இவன் கடும்பினது இடும்பை;
யாணர்ப் பழு மரம் புள் இமிழ்ந்தன்ன
ஊண் ஒலி அரவம் தானும் கேட்கும்;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி,
முட்டை கொண்டு வன் புலம் சேரும்

Koviloor Digital Library

சிறு நுண் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்ப,
சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும்
இருங் கிளைச் சிறாஅர்க் காண்டும்; கண்டும்,
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்;
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

சிறுகுடி கிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பாடியது.

துறை விளக்கம் : சிறுகுடிக்கிழான் பண்ணனின் இயல்பு கூறி, "பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ, சேய்த்தோ" என்றதால் இயன்மொழித் துறையாயிற்று. பரிசில் பெறப் போகின்றான் வருகின்றவரைக் கண்டு வினவுவான் பண்ணனது இயல்பு கூறி வாழ்த்தியது.

உரை : பாணரே! இந்தப் பரிசிலனது சுற்றத்தின் வறுமையைக் காண்பீராக; புதுவருவாய் உடைய பழுத்த மரத்தில் பறவையினம் ஒலித்தாற்போல, உணவு உண்பதால் உண்டாகிய ஆரவாரம் கேட்கும்; காலம் தப்பாத மழை பெய்யும் காலத்தைப் பார்த்துச் சிறிய எறும்பு தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தினை அடையும்; அச்சிறு எறும்பு சாரைசாரையாகச் செல்லும் வரிசை ஒழுங்கை ஒப்பச், சோறுடைக் கையினராய் வேறு வேறு போகின்ற பெருஞ்சுற்றத்தோடும் கூடிய பிள்ளைகளைக் காண்பேம்; அவ்வாறு கண்டும் பசி வருத்தத்தானும், வழி நடந்த வருத்தத்தானும் பின்னரும் பின்னரும் பெருவிதுப்புற்றுக் கேட்கின்றோம்; பசி நோய் தீர்க்கும் மருத்துவனாகிய பண்ணன் இல்லம் பக்கமோ? தூரமோ? என்று எங்களுக்கு நீவிர் தெளியச் சொல்லுங்கள்; பரிசிலரின் வறுமையைத் தீர்க்கின்ற பண்ணன் யான் உயிர் வாழும் நாளையும் பெற்று வாழ்வானாக.

Koviloor Digital Library

உரை விளக்கம் : பண்ணனிடத்துப் பரிசில் பெறப் போகின்ற பாணன் ஒருவன், பரிசில் பெற்று வரும் பாணரைக் கண்டு வினவுவது போல் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது. மரம் பழுத்தவிடத்துப் பறவை இனம் மரத்தை நாடி வந்து கனியுண்டு களித்து ஆரவாரித்தல் இயல்பு; அவ்வாறு எழுந்த ஆரவாரத்தை ஒப்பப் பசிப்பிணி தீர்க்கும் பண்ணன் இல்லத்தில் பலரும் உணவருந்துவதால் ஆரவாரம் உண்டாகும். பழுக்காத மரத்தையும், ஈயாத செல்வரையும் யாரும் நாடிச் செல்லமாட்டார்கள். இதனை உணர்த்த, "யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந்தன்ன, ஊண் ஒலி அரவம் தானும் கேட்கும்" என்றார்.

எறும்பினம் தரையிலுள்ள வளைகளில் (புற்று) வாழ்வன; மழை பெய்யின் புற்றுக்களில் நீர் புகுந்து அவற்றின் முட்டைகளைச் சிதைக்கும். ஆதலால் மழை வருதலை முன்கூட்டி அறிந்து, முட்டைகளைப் பாதுகாப்பாக மேட்டு இடத்து அளைகளில் கொண்டு சேர்க்கும். அவ்வாறு செல்லும்போது சாரைசாரையாக ஓர் ஒழுங்குபடச் செல்லும். இதனைப், "பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி, முட்டை கொண்டு வன்புலம் சேரும், சிறு நுண் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்ப" என்றார். எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும் என்பது நம்பிக்கை. அதனால், "பொய்யா எழிலி" என்றார். வன்புலத்தில் நீர் அளைகளில் தங்காதாகலின், "வன்புலம் சேரும்" என்றார். எறும்பின் வரிசை ஒழுங்கையொப்ப, உணவுண்டதால் சோறுடைக் கையினராய்ச் சுற்றத்தோடும் கூடிச் சிறுபிள்ளைகள் சென்றனர். இக்காட்சியை ஒப்புமைப்படுத்தி, "எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்பச் சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும் இருங்கிளைச் சிறாஅர்" என்றார். பசியை நோய் என்றும், உணவை மருந்து என்றும் வழங்குதலால், உணவு அளிக்கும் பண்ணனைப் 'பசிப்பிணி மருத்துவன்' என்றார். அத்தகைய இயல்புடைய பண்ணனைப் பரிசிலர் பலரும் வாழ்த்துவதை, "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்று வாழ்த்துவதாக உரைப்பர்.

Koviloor Digital Library

''கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடி'' (புற. 70 : 13), ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், பண்ணன் சிறுகுடி'' (அக. 54), ''பண்ணன் சிறுகுடி வடாஅது, தீநீர்க் கான்யாறு'' (அக. 117), ''கழற்கால் பண்ணன் காவிரி வடவயின் நிழற்கயம்'' (அக. 177), ''பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும், ஊணொலி அரவமொடு கைதூவாளே'' (புற. 334 : 6 – 7), ''பழு மரம் உள்ளிய பறவை போல'' (புற. 370 : 11), ''வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி'' (புற. 47 : 1), ''பழுமரம் உள்ளிய பறவையின் ... புக்கு'' (பொரு. 64 – 67), ''பழுமரம் தேரும் பறவை போல ... பாண'' (பெரு. 20 – 22), ''பழந்தேர் வாழ்க்கைப் பறவைபோல ... துவன்றி'' (மது. 576 – 580), ''கனி பொழி கானம் கிளை யொடு உணீஇய, துனைபறை நிவக்கும் புள்ளின மான ... நன்னற் படர்ந்த கொள்கையொடு'' (மலை. 54 – 64), ''பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர், இசைச் சொல் அளவைக்கு என்னா நிமிராது'', ''பசிப்பிணி மருந்து'' (மணி. 11 : 80. 81; 28 : 217) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கடும்பு – சுற்றம்; இடும்பை – வறுமை; யாணர் – புதுவருவாய்; பழுமரம் – பழுத்த கனிமரம்; புள் – பறவை; ஊணொலி அரவம் – ஊணால் (உணவு உண்பதால்) உண்டாகிய ஆரவாரம்; பொய்யா – பொய்த்தல் செய்யாத; எழிலி – மழைமேகம்; வன்புலம் – மேட்டு நிலம்; ஒழுக்கு – வரிசை; ஏய்ப்ப – ஒப்ப; சிறாஅர் – சிறுவர்கள்; பசிப்பிணி – பசிநோய்.

174

அணங்குடை அவுணர் கணம் கொண்டு ஒளித்தென,
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது,
இருள் கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பை கொள் பருவரல் தீர, கடுந் திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு,

Koviloor Digital Library

அரசு இழந்திருந்த அல்லற்காலை,
முரசு எழுந்து இரங்கும் முற்றமொடு, கரை பொருது
இரங்கு புனல் நெரிதரு மிகு பெருங் காவிரி
மல்லல் நல் நாட்டு அல்லல் தீர,
பொய்யா நாவின் கபிலன் பாடிய,
மை அணி நெடு வரை ஆங்கண், ஒய்யெனச்
செருப் புகல் மறவர் செல்புறம் கண்ட
எள் அறு சிறப்பின் முள்ளூர் மீமிசை,
அரு வழி இருந்த பெரு விறல் வளவன்
மதி மருள் வெண்குடை காட்டி, அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ் மேம்படுந!
விடர்ப் புலி பொறித்த கோட்டை, சுடர்ப் பூண்,
கரும்பு ஆர் கண்ணி, பெரும் பெயர் நும் முன்
ஈண்டு செய் நல் வினை ஆண்டுச் சென்று உணீஇயர்,
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆகலின்,
ஆறு கொல் மருங்கின் மாதிரம் துழவும்
கவலை நெஞ்சத்து அவலம் தீர,
நீ தோன்றினையே - நிரைத் தார் அண்ணல்!
கல் கண் பொடிய, கானம் வெம்ப,
மல்கு நீர் வரைப்பின் கயம் பல உணங்க,
கோடை நீடிய பைது அறு காலை,
இரு நிலம் நெளிய ஈண்டி,
உரும் உரறு கருவிய மழை பொழிந்தாங்கே.

திணை : *வாகை;* **துறை** : *அரசவாகை.*

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

துறை விளக்கம் : *''மல்லல் நல்நாட்டு அல்லல் தீர ... செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட, எள் அறு சிறப்பின் முள்ளூர் மீமிசை அருவழி இருந்த பெருவிறல் வளவன், மதிமருள்*

Koviloor Digital Library

வெண்குடை காட்டி, அக்குடை புதுமையின் நிறுத்த புகழ் மேம்படுந" என்று அரசனது வெற்றியைக் கூறுதலின் அரசவாகைத் துறையாயிற்று.

உரை : பிறரை வருத்தும் அச்சத்தினை உடைய அசுரர் கூட்டம் தேவர்களுடன் பொருதவழி, ஞாயிற்றைக் (கதிரவன்) கொண்டு சென்று மறைத்தனர்; சேய்மைக்கண் விளங்குகின்ற ஞாயிற்றைக் காணாமையால் இருள் சூழ்ந்து உலகத்தாரின் கண்ணை மறைத்தது; வட்டமாகிய உலகத்தின், நோய்கொண்ட துன்பம் நீங்கும்படி மிக்கவலிமையும், கண்மைபோலும் நிறம் கொண்ட திருமேனியும் உடைய கண்ணன் ஞாயிற்றை மீட்டு வந்து இவ்வுலகின் இருள் நீங்கும்படி ஆகாயத்தில் நிறுத்தினான்; அதுபோலப் பகைவேந்தரொடு பொருது உடைந்து போதலால், தம் வேந்தனை இழந்து தவிக்கும் துன்பமான நேரத்தில், முரசு முழங்கும் முற்றமுடைய அரண்மனையையும், கரையைப் பொருது முழங்கும் காவிரியையும் உடைய சோழநாட்டின் துயரைப் போக்கும்படிச் செய்தவன்; பொய்யாத நாவினையுடைய கவிலனால் பாடப்பட்ட முகில் அணிந்த (முள்ளூர்) மலையிடத்துப் போரை விரும்பு மறவர் புறங்கொடுத்து ஓடும்படி செய்தவன்; இகழ்ச்சியற்ற தலைமையுடைய முள்ளூர் மலை உச்சியில் பிறரால் காண்பதற்கு அரிய இடத்தில் இருந்த பெருவென்றியுடைய சோழனது திங்கள் போலும் வெண்கொற்றக் குடையை தோற்றுவித்தவன்; அக்குடையைச் சோழநாட்டில் புதுமையுண்டாக நிலைபெறச் செய்த புகழ் மேம்பட்டவன். மலைக் குகையில் வாழும் புலியைப் பொறித்த இலாஞ்சனையுடைய (அடையாள முத்திரை) கோட்டையையும், சுடர்விடுகின்ற அணிகலத்தினையும், வண்டு மொய்க்கும் மாலையினையும், பெரும் புகழினையும், உடையவன் நும் முன்னோன் ஆகிய தந்தை. அவன் இவ்வுலகத்தில் செய்த நல்ல அறத்தின் பயனைத் தெய்வலோகத்துக்குச் சென்று நுகரும் பொருட்டுப் போயினன்; நன்னெறியைக் கொன்றவர் பக்கத்திருப்ப திசையெங்கும் சூழவரும் கவலையுற்ற மனத்தின் வருத்தம் கெட நீ வந்து தோன்றினாய்; இணைந்த மாலையையுடைய தலைவ!

Koviloor Digital Library

மலைஇடம் பொடிய, காடு தீ மிக, நீரெல்லையுடைய நீர் நிலைகள் பலவும் காய, கோடை மிகுந்த பசுமையற்ற காலத்துப் பெரிய நிலம் குழியும்படி, திரண்டு உருமேறு முழங்கும் மின் முதலாயின தொகுதியையுடை மழை சொரிந்தாற்போல நீ தோன்றினாய்; ஆதலால் இவ்வுலகிற்குக் குறையொன்றும் இல்லை.

உரை விளக்கம் : மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனின் தந்தையது சிறப்பைக் கூறி, இவன் தோற்றத்தால் உலகோரின் உள்ளம் குளிர்ந்தது என்பதைச் சிறப்பித்து மாறோக்கத்து நப்பசலையார் பாடியது. "அவுணர் கணங் கொண்டு ஒளித்தென ... ஞாயிறு காணாது ... பருவரல் தீர ... அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு" என்பது தேவர்களும் அசுரர்களும் போர் செய்யும்போது, பகலும் இரவுப்போல இயங்கித் தாம் போர் செய்தற்பொருட்டு அசுரர் ஞாயிற்றை மறைத்தார்கள்; உலகம் அதனால் உண்டாகிய வருத்தம் தீரத் திருமால் அஞ்ஞாயிற்றை மீண்டும் கொண்டு வந்தார் என்பதொரு புராணக் கதையாகும். சோழனுக்கு ஞாயிறும், சோழன் இல்லாத காவிரி நாட்டிற்கு இருள் சூழ்ந்த உலகும், சோழனைக் கொணர்ந்த மலையமானுக்குத் திருமாலும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. மலையமானுடைய முள்ளூர்மலை கபிலரால் பாடப்பட்ட சிறப்புடையது என்பதையும் மிக்க காவலும், பகைவர் கொள்ளுதற்கு அரியது என்பதையும் காட்ட, "பொய்யா நாவிற் கபிலன் பாடிய மைஅணி நெடுவரை, ... செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட எள் அறு சிறப்பின் முள்ளூர்" என்று கூறினார். அம்முள்ளூர் மலையுச்சியில் பிறரால் காண்பதற்கரிய இடத்தில் சோழன் மறைந்திருந்த இடத்தை, "அருவழி இருந்தபெருவிறல் வளவன்" எனக் குறித்தார்.

சோழநாட்டில் அரசனை இழந்து துன்பமுற்ற காலத்தில், முரசு முழங்கும் முற்றமுடைய தலைநகரமும், காவிரிபாயும் வளநாடும் சிறக்கும்படி மலையமான் செய்த உதவியை, "மதிமருள் வெண்குடை காட்டி அக்குடை, புதுமையின் நிறுத்த" என்றார். மலையமான் சோழனுக்குத் துணையாய் நின்றதோடு, அவனிடத்து

Koviloor Digital Library

அன்புடையவன் என்பதை உணர்த்த தன் கோட்டையில் சோழனுக்குரிய புலி இலாஞ்சினையைப் பொறித்து வைத்ததை, ''விடர்ப் புலி பொறித்த கோட்டை'' என்பதன் மூலம் உணர்த்தினார். இவ்வுலகத்தே செய்யப்படும் நல்வினைக்குரிய இன்பம் மறுமையில் துறக்க உலகத்தே நுகரப்படும் என்பதனால், ''ஈண்டுச் செய் நல்வினை ஆண்டுச்சென்று ஊணீஇயர், உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன்'' என்றார். ஏனாதி திருக்கண்ணனின் முன்னோன் ஆகிய மலையமான் திருமுடிக்காரி அத்தகைய புகழுக்குரியவன் என்பதையும், அம்மரபின் வழிவந்த அவனும் அத்தன்மையனே என்பதையும் இதன்மூலம் உணர்த்தினார். திருமுடிக்காரி இறந்தபின் நாட்டுக்கு உண்டாகிய நிலையைக் ''கோடை நீடிய பைதறு காலையாகவும்'', திருக்கண்ணன் தோன்றிய நிலையை, ''மழை பொழிந்ததாகவும்'', ஒப்புமைப்படுத்திக் காட்டுவர்.

''அரசுகெடுத்து அலம்வரும் அல்லற் காலை'' (சிலப். 4 : 8; 27 : 132), ''மறம்புரி கொள்கை வயங்கு செந் நாவின் உவலை கூராக் கவலையின் நெஞ்சின் நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்'' (பதி. 85), ''போரெனின் புகலும் புனைகழல் மறவர்'' (புற. 31 : 9), ''செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர்'' (அக. 157). ''ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர்'' (மது. 726), ''பயன் கெழு முள்ளூர் மீமிசை'' (புற. 123 : 5), ''உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை'' (புற. 3 : 1), ''மலைமிசைத் தோன்றும் மதியம் போல் யானைத், தலைமிசைக் கொண்ட குடையர்'' (நால்டி. 21), ''ஆண்டுச் செய் நுகர்ச்சி ஈண்டுக் கூடலின்'' (புற. 38 : 16), ''ஈண்டுச் செய்வினை ஆண்டு நுகர்ந்திருத்தல், காண்டகு சிறப்பினும் கடவுளர் அல்லது'' (மணி. 14 : 38 – 39), ''புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம் என்னும் ஈது அருமறைப் பொருளே'' (கம்ப. நகர. 5), ''சுடர் வழக்கற்றுத் தடுமாறு காலையோர் இளவள ஞாயிறு தோன்றிய தென்ன, நீயோ தோன்றினை'' (மணி. 10 : 10 – 12), ''உருகெழு மண்டிலம், கயங்கண் வறப்பப் பாஅய் நன்னிலம், பயங்கெடத் திருகிய பைதறு காலை'' (அக. 263), ''உரும் உரறு கருவியொடு பெயல் கடன் இறுத்து'' (புற. 161 : 4), ''உருகெழு ஞாயிற்று ஒண் கதிர்

Koviloor Digital Library

மிசைந்த, முளி புற் கானம் குழைப்ப கல்லென அதிர் குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு'' (புற. 160 : 1 – 3), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அணங்கு – வருத்தம்; அவுணர் – அசுரர்; கணம் – திரள், கூட்டம்; சேண் – சேய்மை; ஞாயிறு – கதிரவன்; பருதி – வட்டம்; ஞாலம் – உலகம்; பருவரல் – துன்பம்; இடும்பை – நோய்; திறல் – வலிமை; அஞ்சனம் – கண்மை; உருவு – மேனி; அஞ்சன உருவன் – திருமால்; அரசு – வேந்து; அல்லல் – துன்பம்; மை – முகில்; வரை – மலை; செரு – போர்; மறவர் – வீரர்; புறங்கண்ட – புறமுதுகிட்ட; எள் – இகழ்ச்சி; மிசை – உச்சி; அருவழி – அரியவழி, அரியஇடம்; மதி – நிலவு, திங்கள்; விடர் – மலைக்குகை; கோட்டை – அரண்மனை; பூண் – அணி; சுரும்பு – வண்டு; கண்ணி – மாலை; நல்வினை – நல்லறம்; உணீஇயர் – நுகர்தல், அனுபவித்தல்; உயர்ந்தோர் உலகம் – தெய்வலோகம்; ஆறு – வழி, நெறி; மருங்கு – பக்கம்; மாதிரம் – திசை; கானம் – காடு; வரைப்பு – எல்லை; கயம் – நீர்நிலை; பைதறு – பசுமையற்ற; உருமுரறு – உருமேறு.

175

எந்தை! வாழி; ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நிற் காண்குவரே;
நின் யான் மறப்பின், மறக்கும் காலை,
என் உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்,
என் யான் மறப்பின், மறக்குவென் – வென் வேல்
விண் பொரு நெடுங் குடைக் கொடித் தேர் மோரியர்
திண் கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறை வாய் நிலைஇய
மலர் வாய் மண்டிலத்து அன்ன, நாளும்
பலர் புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே.

Koviloor Digital Library

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது.

துறை விளக்கம் : "மலர்வாய் மண்டிலத்து அன்ன நாளும் பலர் புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே" என்று அவனது இயல்பைப் போற்றி உரைத்தலால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : என்னுடைய இறைவ! வாழ்வாயாக; ஆதனுங்க! யான் ஒன்றைச் சொல்ல நினைப்பின் அது நினது புகழல்லது வேறொன்றுமில்லை; வென்றி வேலையுடைய விசும்பைத் தோயும் நெடிய குடையினையும், கொடியணிந்த தேரினையும் உடைய மோரியர், நிலம் முழுதும் ஆண்டனர். அம்மோரியரது ஆரக்கால் சூழ்ந்த சக்கரம் செல்லுதற்காக வெட்டி வழி செய்யப்பட்ட வெள்ளிமலைக்கு அப்பால், நிலைபெற்று விளங்கும் பரந்த இடத்தை உடைய ஆதித்த மண்டிலத்தை (சூரிய மண்டிலம்) ஒப்பவன் நீ. அச்சூரிய மண்டிலத்தைப் போல நாள்தோறும் இரவு பகல் என்று பாராமல் பலரையும் பாதுகாத்தலை ஏற்றுக்கொண்டு, ஒரு தன்மைத்தாக விளங்கும் அறத்துறையாகிய நின்னை யான் மறவேன்; நின்னை யான் மறப்பின், மறக்கும் காலமாவது சொல்லக் கேட்பாயாக; என் உயிர், என் உடம்பை விட்டு நீங்கும் காலத்தும், என்னை யான் மறக்கும் காலம் உண்டாயின் அப்பொழுது மறப்பேன் அல்லது மறவேன்; ஆதலால் என் நெஞ்சைத் திறப்போர் ஆங்கு நின்னைக் காண்பர்.

உரை விளக்கம் : "ஆதனுங்கன்பால் உள்ள அன்பினை வெளிப்படுத்தும் தன்மையில் கள்ளில் ஆத்திரையனார் பாடியது. மோரியர் என்பார் வடநாட்டில் வாழ்ந்த சக்கரவாளசக்கரவர்த்திகள்; விச்சாதரரும், நாகரும் என்ப. உயிர் உடம்பின் நீங்கும் காலத்து ஐம்புலன்களும், தொழிற்பாடும் ஓய்ந்து போதலின் மறக்கும் நிலை ஏற்படும் என்பதை, "மறக்கும் காலை என் உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும், என் யான் மறப்பின் மறக்குவென்" என்றார்.

Koviloor Digital Library

அன்பு செய்யப்பட்டார் அன்புடையவர் நெஞ்சில் உறைவர் என்பதாலும், நெஞ்சைப் பிளந்து வெளிப்படுத்திக் காண்போர் ஆங்கு நின்னைக் காண்பர் என்பதாலும், ''என் நெஞ்சம் திறப்போர் நிற் காண்குவர்'' எனக் கூறினார். இவனை புற. 389ஆம் பாடலிலும் இவர் போற்றிப் பாடியுள்ளது நோக்கத்தக்கது.

ஆதனுங்கன் போல நீயும், பசித்த ஒக்கல் பழங்கண் வீட, வீறுசால் நன் கலம் நல்குமதி'' (புற. 389 : 13 – 15), ''விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர், பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த அறை'' (அக. 69), ''வம்ப மோரியர், புனைதேர் நேமி, உருளிய குறைத்த, விலங்கு வெள்ளருவிய வரை'', (அக. 251), மோரியர் தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு, விண்ணுற ஓங்கிய பனியிருங்குன்றத்து, ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த அறை'' (அக. 281), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : யாக்கை – உடம்பு; விண் – விசும்பு; திகிரி – சக்கரம்; மலர்வாய் மண்டிலம் – ஆதித்த மண்டிலம், சூரியமண்டலம்; புரவு – காத்தல்; அறத்துறை – அறச்செயல்களுக்கு துறையாய் நிற்பவர்.

176

ஓரை ஆயத்து ஒண் தொடி மகளிர்
கேழல் உழுத இருஞ் சேறு கிளைப்பின்,
யாமை ஈன்ற புலவு நாறு முட்டையைத்
தேன் நாறு ஆம்பற் கிழங்கொடு பெறூஉம்,
இழுமென ஒலிக்கும் புனல் அம் புதவின்,
பெரு மாவிலங்கைத் தலைவன், சீறியாழ்
இல்லோர் சொல் மலை நல்லியக்கோடனை
உடையை வாழி, எற் புணர்ந்த பாலே!
பாரி பறம்பின் பனிச் சுனைத் தெண் நீர்
ஓர் ஊர் உண்மையின் இகழ்ந்தோர் போல,

Koviloor Digital Library

காணாது கழிந்த வைகல், காணா
வழி நாட்கு இரங்கும், என் நெஞ்சம் - அவன்
கழி மென் சாயல் காண்தொறும் நினைந்தே.

திணை : பாடாண்திணை; துறை : இயன்மொழி.

(ஓய்மான் நல்லியக்கோடனைப் புறத்திணை நன்னாகனார் பாடியது)

துறை விளக்கம் : ''காணாது கழிந்த வைகல் காணா, வழிநாட்கு இரங்கும் என் நெஞ்சம் அவன், கழி மென் சாயல் காண்தொறும் நினைந்தே'' என்று அவனது இயல்புகளை எடுத்துரைத்தலால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : ஓரை விளையாட்டு ஆடும் ஒள்ளிய வளையணிந்த மகளிர், கேழல்பன்றி உழுத, கரிய சேற்றைக் கிளறி, ஆமை ஈன்ற புலால் நாறும் முட்டையைத் தேன்மணம் வீசும் ஆம்பல் கிழங்குடனே எடுப்பர். இழுமென முழங்கும் நீர் வழங்கும் வாய்த்தலைகளையுடைய பெரிய மாவிலங்கை என்னும் ஊர்க்குத் தலைவன்; சிறிய யாழையுடைய வறியோர் பாடும் புகழ் மாலைகளைச் சூடியவன் நல்லியம்கோடன்; (அவனை நீ துணையாக உடையையாதலால் என்னைப் பொருந்திய விதியே! நீ ஒரு குறையுடையை இல்லை; வாழ்வாயாக;) பாரியின் பறம்பிலே குளிர்ந்த நீர்ச்சுனைகள் போய்த் தேடவேண்டாமல், ஓர் ஓரின் கண்ணே இருத்தலால் நீர் வேண்டியபொழுது உண்ணலாம் என்று இகழ்ந்திருப்பர். அவரையொப்ப என் நெஞ்சம், நல்லியக்கோடனின் மெல்லிய சாயலைக் காணுந்தோறும், அவனைக் காணாது கழிந்த நாட்கள் எனக்கு வீண் நாட்களாய் கழிந்தன; அதனை மனத்துள் உட்கொண்டு அவனோடு தொடர்ந்த நட்பு இன்றே போல இடையறாது செல்லவேண்டும் என்று வருநாளை நினைந்து இரங்குகின்றது.

Koviloor Digital Library

உரை விளக்கம் : பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படையில் பாடப்பட்டுள்ள தலைவனாகிய நல்லியக்கோடனைப் பாராட்டிப் புறத்திணை நன்னாகனார் தன் நெஞ்சிற்கு உரைப்பதுபோல் பாடியது. 'இல்லோர் சொல்மலை' என்பதற்கு இல்லோர் சொல்லைச் சூடுமென்றும், 'எற் புணர்ந்த பாலே' என்று கூறி என்னை அவனொடு கூட்டிய விதியே என்றும், 'வழிநாட்கு இரங்கும்' என்பதற்கு இன்னும் இவனொடு தொடர்ந்த நட்பு இடையற்றுக் கழியுங் கொல் என்று இரங்கும் என்றும் உரைப்பாரும் உளர். விளையாட்டு மகளிர் சேற்றைக் கிளறும்போது ஆமை முட்டையும் ஆம்பற் கிழங்கும் தாமே வெளிப்படப் பெறுவர் என்றதனால் ஓய்மான் நாட்டவர் பெருமுயற்சியின்றியே அரிய பொருள்களைப் பெறும் நல்வளமுடையவர் என்பதை உணர்த்தி நின்றது.

வாய்த்தலைகளில் கதவம் அமைத்து நீரை அளவறிந்து செலவிடுபவராதலின், ''இழுமென ஒலிக்கும் புனல் அம் புதவு'' என்றார். ''எற் புணர்ந்த பாலே'' என்று விதியைப் பாராட்டிக் கூறியது, ''நல்லியக் கோடனை உடையையாதலால்'' என்பதனாலாகும். அவனால் வேண்டுவனவற்றைக் குறைவறப் பெறுதலால், 'குறையுடையை அல்லை' என்றார். பாரி பறம்பின் சுனை பெறுதற்கு அரிது; ஆயினும் உள்ளூரில் பெறப்படும் அரிய பொருள் ஒருவர்க்கு அரிதாகாது மிக எளிதாய்க் கருதப்படுவது பற்றி, ''பாரி பறம்பின் பனிச் சுனைத் தெண்ணீர், ஓர் ஊர் உண்மையின் இகந்தோர் போல'' என்றார். நல்லியக்கோடனைக் காணாது பல நாட்கள் வீணே கழிந்தன என்றும், இனி வரும் நாட்களில் அவனொடு கொண்ட நட்பு தொடரவேண்டும் என்றும் விரும்புவார், ''காணாது கழிந்த வைகல் காணா, வழிநாட்கு இரங்கும் என் நெஞ்சம்'' எனக் கூறினார்.

''விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது'' (நற். 68), ''ஓரை ஆயம் கூற'', ''ஓரை மகளிர்'' (குறு. 48, 316, 401), ''நிறைச் சூல் யாமை மறைத்தீன்று புதைத்த, கோட்டு வட்டு உருவின் புலவுநாறு முட்டை'' (அக. 160), ''புனலம் புதவின் மிழலை'' (புற. 24 : 19),

Koviloor Digital Library

''நெல் அமல் புரவின் இலங்கைக் கிழவோன்'' (புற. 379 : 6), ''தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்னருள்ளும் ... மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள் உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் (சிறு. 119 – 122), ''பாரி பறம்பின் பனைச் சுனைபோல'' (புற. 337 : 6), ''இன்றே போல்க நும் புணர்ச்சி'' (புற. 58 : 28), ''நாள் போல் கழியல ஞாயிற்றுப் பகலே'' (புற. 65 : 12), ''நீரினும் இனிய சாயல் பாரிவேள்'' (புற. 105 : 7 – 8), என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஓரை – மகளிர் விளையாட்டு; ஆயம் – திரள்; தொடி – வளையர்; கேழல் – பன்றி; புலவு – புலால்; புனல் – நீர்; புதவு – கதவு; இல்லோர் – வறியோர்; பால் – விதி; வைகல் – நாள்; வழிநாள் – பின்வருநாள், வருநாள்; சாயல் – மென்மை.

177

ஒளிறு வாள் மன்னர் ஒண் சுடர் நெடுநகர்,
வெளிறு கண் போகப் பல் நாள் திரங்கி,
பாடிப் பெற்ற பொன் அணி யானை,
தமர் எனின், யாவரும் புகுப; அமர் எனின்,
திங்களும் நுழையா எந்திரப் படு புழை,
க்ள் மாறு நீட்ட நணி நணி இருந்த
குறும் பல் குறும்பின் ததும்ப வைகி,
புளிச் சுவை வேட்ட செங் கண் ஆடவர்
தீம் புளிக் களாவொடு துடரி முனையின்,
மட்டு அறல் நல் யாற்று எக்கர் ஏறி,
கருங் கனி நாவல் இருந்து கொய்து உண்ணும்,
பெரும் பயிர் ஆதி, பிணங்கு அரில் குட நாட்டு,
எயினர் தந்த எய்ம் மான் எறி தசைப்
பைஞ் ஞிணம் பெருத்த பசு வெள் அமலை,
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய,

Koviloor Digital Library

இரும் பனங் குடையின் மிசையும்
பெரும் புலர் வைகறைச் சீர் சாலாதே.

திணை : பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

மல்லிகிழான் காரியாதியை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

துறை விளக்கம் : "பெரும் பெயர் ஆதி ... எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப், பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை, வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய" என்று அவன் கொடை இயல்பைப் போற்றியமையால் இயன்மொழித் துறையாயிற்று.

உரை : விளங்கிய வாளையுடைய வேந்தரது ஒண் சுடரினையுடைய உயர்ந்த அரண்மனையில், கண் ஒளி மங்கும்படியாக, பல நாள் நின்று, வாய் உலர்ந்து பாடிப் பெற்ற பொற்படை அணிந்த யானை, மல்லிகிழான் காரியாதி புலர்ச்சியுடைய விடியற்காலத்துத் தரும் சோற்றின் சீருக்கு ஒப்பாகாது. ஆதியின் அரண்மனையில் தமக்குச் சிறந்தாராயின் (தமராயின்) எல்லோரும் எளிதில் செல்லப் பெறுவர்; போற்மேற்செல்லும் பகைவராயின், நிலவும் நுழையாத பொறிகள் பல பொருந்திய இட்டிவாயிலை யுடையது அவனது அரண்; ஒன்றற்கொன்று நெருக்கமாய் இருக்கின்ற குறிய பல அரண்களில் இருந்து கள்ளை ஒருவர்க்கு ஒருவர் மாறி மாறி நீட்ட, அக்கள்ளை நிரம்ப உண்பர்; பின் செருக்கினால் விடாய் மிக்குப் புளிச் சுவையை விரும்பிய மதத்தால் சிவந்த கண்ணையுடைய ஆடவர், புளிப்புடைய களாப்பழத்துடன் துடரிப்பழத்தைத் தின்பர்; அதனைத் தின்று வெறுப்பின், கரை மரத்து தேன் ஒழுகுகின்ற கான்யாற்றின் மணற் குன்றில் ஏறிக் கரிய நாவற்பழத்தைப் பறித்து இருந்தவாறே உண்பர்; அத்தகைய ஊரின் புகழ்பெற்ற தலைவன் ஆதி. செடி கொடி பின்னிய பிணங்கரில் காட்டையுடைய குடநாட்டு மறவர் வேட்டையாடிக் கொண்டு வந்த எய்ப்பன்றித் தசையுடன், செவ்விய நிணம்மிக்க வெண்சோற்றுக் கட்டியை வருவார்க் கெல்லாம்

Koviloor Digital Library

குறைபடாது ஒப்ப வழங்குபவன் ஆதி. அச்சோற்றுக்கட்டியை இரவலர் பனையோலையால் செய்யப்பெற்ற பனங்குடையில் பெற்று உண்டு மகிழ்வர்.

உரை விளக்கம் : வேந்தர் தரும் களிற்றுக் கொடையையும், காரியாதி விடியலில் தரும் சோற்றையும் சீர்தூக்கி, அவனது கொடையைச் சிறப்பித்து ஆவூர் மூலங்கிழார் பாடியது. காரியாதியின் அரண்மனை இரவலர், நண்பர்களுக்குப் புகுதற்கு எளிதாய் இருந்ததைத் ''தமரெனின் யாவரும் புகுப'' என்றார். எந்திரப் படு புழையின் இயல்பையும், காவற் சிறப்பையும் சிறப்பிக்க, ''அமர் எனின் திங்களும் நுழையா எந்திரப் படுபுழை'' என்று கூறினார். கள்ளை மிகுதியாக அருந்தியவிடத்து, அதன் களிப்பால் கண் சிவத்தலின், கள்ளுண்டவரைச் ''செங்கண் ஆடவர்'' என்றார். கள், களாப்பழம், துடரிப்பழம் (ஈச்சம் பழம்), நாவற்பழம் தின்றதோடு, எய்ப்பன்றித்தசையைச் சோற்றுடன் பெற்றுண்டு மகிழ்ந்தனர் என்றதனால் காரியாதி நாட்டின் வளத்தைக் கூறினார். ''வைகறைச் சீர் சாலாது'' என்றது, அக்காலத்து அவன் செய்யும் சிறப்பினை நோக்கிக் கூறியதாகும்.

''நீளிடை அத்த நோக்கி வாளற்றுக் கண்ணும் காட்சி தௌவின'' (நற். 397), ''என் கண்ணே, நோக்கி நோக்கிவாள் இழந்தனவே'' (குறு. 44), ''அகத்தாரே வாழ்வார் என்று அண்ணாந்து நோக்கிப், புகத் தாம் பெறாஅர் புறங்கடை பற்றி, மிகத் தாம் வருந்தியிருப்பரே மேலைத் தவத்தால் தவம் செய்யாதார்'' (நாலடி. 31) ''காலின் உதிர்ந்தன கருங்கனி நாவல்'' (மலை. 135), ''ஊன் சோற்றுஅமலை'' (புற. 33 : 14), ''வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை'' (புற. 10 : 8), ''செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்'' (குறள். 86), ''பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி'' (நற். 253 : 7), ''வேணீர் உண்ட குடையோர் அன்னர்'' (கலி. 23), ''ஆறுசென்மாக்கள் சோறு பொதிவெண்குடை'' (அக. 121), ''குடை கலனா உப்பிலி வெந்தை தின்று'' (நாலடி. 289) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சுடர் - விளக்கம்; நெடுநகர் - அரண்மனை, கோயில்; திரங்கி - உலர்ந்து; தமர் - தமக்குச் சிறந்தார்; அமர் - போர்; திங்கள் - நிலவு; எந்திரம் - பொறி; புழை - வாயில்; குறும்பு - அரண்; களா - களாப்பழம்; துடரி - ஒருவகைப்பழம், ஈச்சம்பழம் என்றும் கூறுவர்; முனை - வெறுத்தல்; மட்டு - தேன், மது; அறல் - அரித்தொழுகுதல்; எக்கர் - மணற்குன்று; குடநாடு - மேற்குத்திசைநாடு; எயினர் - மறவர்; எய்ம்மான் - எய்ப்பன்றி; ஞிணம் - நிணம், இறைச்சி; வெள்அமலை - வெண்சோறு; வருநர் - இரவலர்; வரையாது - குறைவுபடாது; பனங்குடை - பனை ஓலையால் செய்யப்பெற்ற உண்கலம்; புலர் - புலர்ச்சி, புலருதல்; வைகறை - விடியல்; சாலாது - ஒவ்வாது.

178

கந்து முனிந்து உயிர்க்கும் யானையொடு, பணை முனிந்து
கால் இயற் புரவி ஆலும் ஆங்கண்,
மணல் மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணார் ஆயினும், தன்னொடு சூளுற்று,
'உண்ம்' என இரக்கும் பெரும் பெயர்ச் சாத்தன்
ஈண்டோ இன் சாயலனே; வேண்டார்
எறி படை மயங்கிய வெருவரு ஞாட்பின்,
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறு பேராளர்
அஞ்சி நீங்கும் காலை,
ஏமமாகத் தான் முந்துறுமே.

திணை : வாகை; துறை : வல்லாண்முல்லை.

பாண்டியன் கீரஞ்சாத்தனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : ஒரு வீரனுடைய வீட்டையும், ஊரையும், இயல்பினையும் சொல்லி அவன் ஆண்மைத் தன்மையை நன்மை பெருகச் சொல்லுதல் வல்லாண்முல்லைத் துறையாகும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை, ''இல்லும் பதியும் இயல்பும் கூறி, நல் ஆண்மையை நலமிகுத் தன்று'' என்று குறிப்பிடும். ''இன் சாயலனே, வேண்டார் எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின் ... நெடுமொழி மறந்த சிறுபேராளர், அஞ்சி நீங்கும் காலை, ஏமமாகத் தான் முந்துறுமே'' என அவனது வல்லாண்மையைச் சிறப்பித்ததால் வல்லாண்முல்லைத் துறையாயிற்று.

உரை : கம்பத்தை வெறுத்து நெட்டுயிர்ப்புக் கொள்ளும் யானையோடு, பந்தியில் (வரிசையில்) நிற்றலை வெறுத்துக், காற்றுப் போல விரைந்த வேகம் கொண்ட குதிரைகளும் அவன் முற்றத்தில் ஆரவாரிக்கும்; அத்தகைய இடுமணல் மிக்க முற்றத்தில் சான்றோர் புகுந்தனர்; அவ்வேளையில் அவர் உண்ணாராயினும், தன்னுடனே சார்த்திச் சூள் உரைத்து உண்மின் என்று அவரை வேண்டிக்கொள்ளும் பெரும் புகழாளன் சாத்தன்; இரவலரான எம்போல்வார்க்கு இனிய மென்மையுடையவன்; இங்ஙனம் மென்மையுடையவனாயினும், பகைவர் எறிந்த படைக்கலம் தம்மிற் கலந்த அஞ்சத்தக்க போரில், கள்ளுண்ட கலத்தினராய், அதனால் விளைந்த செருக்கால் ஊர்க்குள்ளே சொல்லிய வீரம் மேம்பட்ட வார்த்தையைப் போரில் மறந்த சிறிய பேராண்மையுடையோர், போர்க்களத்து அஞ்சிப் புறங்கொடுத்து ஓடினர். புறங்கொடுத்து ஓடும் அவர்க்கு அரணாகத் (பாதுகாப்பாக) தான் தன் வலிமையால் முன்னிற்பதோடு தன் வீரரையும் காத்துப் பகைவரை வெற்றி கொள்ளும் ஆண்மையன்.

உரை விளக்கம் : பாண்டியன் கீரஞ்சாத்தன் சான்றோர்பால் காட்டிய அன்பும், போரில் படைக்கு அரணாக முந்துற்று நிற்கும் திறமும் கண்டு வியந்து ஆவூர்மூலங்கிழார் பாடியது. தன்னோடு சூளுறுதலாவது, 'நீர் உண்ணீராயின் யானும் உண்ணேன்' என்றும், 'பகைவரை வென்று புறங்காண்பேன்' என்றும் உரைத்தற் பொருட்டாகும். சான்றோரை உடன் இருந்து உண்பிக்கும்

Koviloor Digital Library

இயல்புடையவன் சாத்தன் என்பதை, "உண்ணாராயினும் ... உண்ம் என இரக்கும் ... இன் சாயலனே" என்றார். நெடுமொழி கூறுதலால் பேராண்மையும், பின் போரில் அதனை மறத்தலால் சிறுமையும் உடைமையின், சிறுபேராளர் (சிறிய பேராண்மை) என்றார். கள் உண்டபோது கூறிய நெடுமொழி என்பதை, "கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய நெடுமொழி" என எடுத்துரைத்தார். போரில் வீரர் புறங்கொடுத்து ஓடும்போது கீரஞ்சாத்தனின் தறுகண்மையுடைய (ஆண்மை) செயலை, "ஏமமாகத் தான் முந்துறுமே" எனக் கூறினார்.

"வெளிறு இல் நோன் காழ்ப் பணைநிலை முனைஇ களிறு" (புற. 23 : 1), "காலியக் கன்ன கதழ்பரி கடைஇ" (மது. 440), "பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்" (சிலப். 13 : 147), "பணைநிலைப் புரவி பலவெழுந்து ஆல" (மணி. 7 : 117), "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள். 81), "நெடுமொழி மன்னர்" (புற. 54 : 9), "நசைவர்க்கு மென்மை அல்லது பகைவர்க்கு ... உலைக்கல் அன்ன வல்லாளன்னே" (புற. 170 : 14 – 17), "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" (குறள். 664), "அழிபடை தாங்கல்" (சிறு. 211) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கந்து – கம்பம்; முனிந்து – வெறுத்து; பணை – குதிரைப் பந்தி; கால் – காற்று; புரவி – குதிரை; ஆலும் – ஆரவாரிக்கும்; சூள் – சூளுரை; சாயல் – மென்மை; வேண்டார் – பகைவர், விரும்பாதவர்; ஞாட்பு – போர்; நெடுமொழி – வஞ்சினம் கூறல்; பேராளர் – பேராண்மையுடையோர்; ஏமம் – அரண், பாதுகாப்பு.

179

"ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென,
ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
மலர்ப்போர் யார்?' என வினவலின், மலைந்தோர்

Koviloor Digital Library

விசி பிணி முரசமொடு மண் பல தந்த
திரு வீழ் நுண் பூண் பாண்டியன் மறவன்,
படை வேண்டுவழி வாள் உதவியும்,
வினை வேண்டுவழி அறிவு உதவியும்,
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசை நுகம் படாஅ ஆண்தகை உள்ளத்து,
தோலா நல் இசை, நாலை கிழவன்
பருந்து பசி தீர்க்கும் நற் போர்த்
திருந்து வேல் நாகற் கூறினர், பலரே.

திணை : வாகை; துறை : வல்லாண்முல்லை.

நாலைகிழவன் நாகனை வடநெடுந்தத்தனார் பாடியது.

துறை விளக்கம் : "ஆண்தகை உள்ளத்து ... பருந்து பசி தீர்க்கும் நற்போர்த் திருந்துவேல் நாகன்" என நாகனின் வல்லாண்மையைச் சிறப்பித்ததால் வல்லாண் முல்லைத் துறையாயிற்று.

உரை : உலகில் வள்ளன்மை உடையோர் இறந்தனர்; பிறர்பால் ஒருபொருளையும் ஏற்றுக்கொள்ளாமல் கவிழ்த்து வைத்த என் இரத்தலையுடைய உண்கலத்தை உணவு ஏற்கும்படி இட்டு மலர்த்தவல்லார் யாரெனக் கேட்டேம்; தன்னோடு மாறுபட்ட பகைவரின் வலித்துப் பிணிக்கப்பட்ட முரசத்தோடு, நாடு (மண்) பலவற்றையும் கைக்கொண்டவன் பாண்டியன்; திருமகள் விரும்பிய நுண்ணிய தொழில் பொருந்திய ஆபரணத்தை அணிந்தவன்; அவனுடைய படைத்தலைவனான வீரன் நாலைக்கிழவன் நாகன்; அவன் பாண்டியனுக்குப் படை வேண்டியவிடத்து வாட்போரை தந்து உதவினான்; அரசியற்கேற்ற கருமச்சூழ்ச்சி வேண்டியவிடத்து அமைச்சியலோடு நின்று அறிவு தந்து உதவினான்; இவ்வாறு வேண்டியவற்றை வேண்டியவாறே அவ்வரசனுக்குத் தந்துதவினான்; தான் பூண்ட நுகம் ஒருபாற் கோடித் தளராமல் செலுத்தும்

Koviloor Digital Library

எருதுபோல, ஆண்மையினும், சூழ்ச்சியினும் தளராத ஆண்மைக்கூறுபாடு பொருந்திய ஊக்கத்தினையும், தோற்காத நற்புகழையும் உடையவன்; பருந்தின் பசி தீர்க்கும் நற்போரைச் செய்யும் திருந்திய வேலையுடைய நாலைகிழவன் நாகன் இரவலர் பசிதீர்க்க உளன் என்று பலரும் சொன்னார்கள்.

உரை விளக்கம் : உலகில், இரவலரின் பசி தீர்க்க உள்ள நாலைகிழவன் நாகனின் சிறப்புக்களை வியந்து பாடியது. நாகனைச் சிறப்பிக்கும் முன், அவன் தலைவனான பாண்டியனை, ''விசி பிணி முரசமொடு மண்பல தந்த, திருவீழ் நுண்பூண் பாண்டியன்'' எனச் சிறப்பித்தார். பகைவரின் முரசத்தோடு, மண்பல தந்த என்றதால் பகைவரின் நாடும் கைப்பற்ற நாகன் உதவினான் எனவும் பொருள்படும். மண் பல கோடற்குப் படை வேண்டுவழி வாளும், வினை வேண்டுவழி அறிவும் உதவினான் என நாகனைச் சிறப்பித்தார். நாகனின் ஆண்மையினும், சூழ்ச்சியினும் தளராத தன்மைக்கு எருதை (பகடு) ஒப்புமைப்படுத்தி, ''அசை நுகம் படாஅ ஆண்தகை உள்ளத்து'' எனக் காட்டினார். பருந்து பசி தீர்க்கும் நாகன் என்றது, அஃறிணை உயிர்களுக்கும் இரங்கிப் பசி தீர்ப்போன், இரவலரின் பசியைத் தீர்க்க வரையாது வழங்குவோன் என்பதை உணர்த்தற்காம்.

''கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரென'' (புற. 103 : 3), ''அடல் நசை மறந்த எம் குழிசி மலர்க்கும், கடன் அறியாளர் பிற நாட்டு இன்மையின், வள்ளன்மையின் எம் வரைவோர் யாரென'' (புற. 393 : 3 – 5), ''நிலந்தந்த பேருதவிப், பொலந்தார் மார்பின் நெடியோன்'' (மது. 60 – 61), ''முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி'' (பெரு. 443 – 444), ''தோலா நல்லிசை'' (புற. 56 : 10) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஞாலம் – உலகம்; வள்ளியோர் – வண்மையுடையோர், கொடையாளர்; ஏலாது – நிமிராது; இரவன் மண்டை – இரவலரின் உண்கலம்; பிச்சைப்பாத்திரம்; மலர்ப்போர் –

Koviloor Digital Library

உணவு இட்டு மலர்த்த வல்லவர்; மலைந்தோர் - மாறுபட்டோர், பகைவர்; மண் பல தந்த - நாட்டைக் கவர்தல்; திரு - திருமகள், இலட்சுமி; வினை - தொழில்; தோலா - தோல்வி இல்லாத; இசை - புகழ்.

180

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
'இல்' என மறுக்கும் சிறுமையும் இலனே;
இறை உறு விழுமம் தாங்கி, அமரகத்து
இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் நோய் தீர்ந்து,
மருந்து கொள் மரத்தின் வாள் வடு மயங்கி,
வடு இன்று வடிந்த யாக்கையன், கொடை எதிர்ந்து,
ஈர்ந்தையோனே; பாண் பசிப் பகைஞன்;
இன்மை தீர வேண்டின், எம்மொடு
நீயும் வம்மோ? - முது வாய் இரவல! -
யாம் தன் இரக்கும் காலை, தான் எம்
உண்ணா மருங்குல் காட்டி, தன் ஊர்க்
கருங் கைக் கொல்லனை இரக்கும்,
'திருந்து இலை நெடு வேல் வடித்திசின்' எனவே.

திணை : வாகை; துறை : வல்லாண்முல்லை; பாணாற்றுப்படையும் ஆம்.

ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

துறை விளக்கம் : ''வாள்வடு மயங்கி, வடு இன்று வடிந்த யாக்கையன் கொடை எதிர்ந்து ஈர்ந்தையோனே'' என்று அவனது வல்லாண்மையைச் சிறப்பித்ததால் வல்லாண்முல்லைத் துறையாயிற்று. பாணாற்றுப்படையாவது, மலைவழியில் பாணனை அரசர், வள்ளல்

Koviloor Digital Library

ஆகியோரிடத்து பரிசில் பெற்றுவர வழிப்படுத்துதல். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்'' என்று தொல்காப்பியமும், ''சேணோங்கிய வரையதரிற் பாணனை ஆற்றுப்படுத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலையும் பாணாற்றுப்படைக்குப் பொருள் கூறுகின்றன. ''இன்மை தீர வேண்டின் எம்மொடு நீயும் வம்மோ! முதுவாய் இரவல'' என்று பாணனை ஆற்றுப்படுத்தியதால் பாணாற்றுப்படைத் துறையாயிற்று.

உரை : நாள்தோறும் தொடர்ந்து கொடுக்கும் செல்வமும் உடையன் அல்லன்; வறிஞனாயினும் இரந்தோர்க்கு இல்லை எனச் சொல்லி மறுக்கும் புன்மையும் உடையன் அல்லன்; தன் அரசனுக்கு வந்துற்ற போரால் உண்டாகிய துன்பங்களைத் தாங்கிக் கொண்டவன்; அப்போரில் படைக்கலங்கள் சுவை (பதம்) கொண்ட விழுப்புண்ணாகிய நோய் தீர்ந்து, உடல் முழுதும் வாளுற்ற தழும்புகள் (வடு) விரவி இருத்தல், மருந்துக்காகக் கொள்ளப்பட்ட மரத்தின் புறம்போலத் தோன்றும். போரில் புண்பட்ட வடு நிறைந்த ஆண்மையினனாய்ப், புகழால் பொலிவுபெற்ற உடம்பை உடையவன்; பாணரது பசிக்குப் பகைவனானவன், கொடையை ஏற்று ஈர்ந்தை என்னும் ஊரில் உள்ளான்; யாம் அவனை இரக்கும்பொழுது, அவன் எம் உண்ணாத வயிற்றைக் காட்டித், தன் ஊரில் உள்ள வலிய கையுடைய கொல்லனைத் 'திருந்தின இலையுடைய நெடிய வேலை விரைந்து வடிப்பாயாக' என்று சொல்லி வேண்டி நிற்பான். முதுவாய் இரவல! நின் வறுமை நீங்க வேண்டுமாயின், நீயும் எம்முடன் வருவாயாக.

உரை விளக்கம் : பரிசில் பெற்ற பாணன் ஒருவன், பரிசில் பெறாத பாணனுக்கு ஈர்ந்தூர் கிழானின் இயல்புகளைக் கூறி, ஆற்றுப்படுத்தும் தன்மையில் மதுரைக்குமரனார் பாடியது. நாடோறும் கொடுக்கும் செல்வம் இல்லையாயினும், இரந்தோர்க்கு இல்லையென்று சொல்லாத அவன் கொடைக்குணத்தை, ''இல் என மறுக்கும் சிறுமையும் இலனே'' என்றார். தன் அரசனுக்காகப் போர்

Koviloor Digital Library

செய்ததோடு, அப்போரில் பகைவரின் இரும்பால் செய்யப்பட்ட போர்க்கருவிகள் இவன் உடலைப் பதம் பார்க்க அதனால் உடம்பிலும் மார்பிலும் விழுப்புண் ஏற்பட்ட நிகழ்ச்சியை, ''இறை உறு விழுமம் தாங்கி அமரகத்து இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண்'' என்றார்.

அவன் உடம்பில் போரினால் ஏற்பட்ட புண் ஆறித் தழும்புகளாக மறையாது இருத்தலை மருந்துக்காக வெட்டுப்பட்ட மரத்தோடு ஒப்பிட்டு, ''மருந்துகொள் மரத்தின் வாள் வடு மயங்கி வடுவின்று வடிந்த யாக்கையன்'' எனக் காட்டுகிறார். 'மருந்துகொள்மரம் மற்றவரின் நோய் தீர்க்கப் பயன்படுதல் போல, இவன் உடம்பும் தன் அரசனுக்காகவும், இரவலரின் பசி தீர்க்கவும் பயன்படுகின்றது. ''தன் ஊர்க் கருங்கைக் கொல்லனை இரக்கும், திருந்து இலை நெடுவேல் வடித்திசின்'' என்றது, கொல்லன் விரைவில் வேல் வடித்துக் கொடுப்பதன் மூலம் போர் செய்து, பொருள் கொணர்ந்து இரவலரின் பசியைத் தீர்க்க முடியும் என்பதற்காம்.

''ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று'' (புற. 204 : 2), ''இல்லென இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு'' (கலி. 2, 15), ''இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன், நல்லது வெஃகி வினை செய்வார்'' (பரி. 10 : 87 – 88), ''இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல், குலனுடையான் கண்ணே உள'' (குறள். 223), ''முன்னம் முகத்தின் உணர்ந்து அவர் இன்மை தீர்த்தல் வன்மையானே'' (புற. 3 : 25 – 26), ''இரும்பு மேய்ந்து ஒழிந்த மிச்சில் வரை மார்பன்'', (சீவக. 1790), ''இரும்புண்டு மிகுத்த மார்பு'' (சீவக. 2281), ''இரும்பு எச்சிற் படுத்த மார்பர்'' (சீவக. 2353), ''மரஞ் சா மருந்தும் கொள்ளார் மாந்தர்'' (நற். 226), ''மரம் முதல் சாய மருந்து கொண்டாங்கு'' (பெருங். 1 : 37 : 188), ''பசிப்பிணி மருத்துவன்'' (புற. 173 : 11), ''இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்'' (புற. 170 : 15), ''வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே'' (புற. 312 : 3), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சிறுமை – புன்மை; இறை – அரசு, வேந்தன், தலைவன்; விழுமம் – துன்பம், இடும்பை; அமர் – போர்; இரும்பு – இரும்பால் செய்யப்பட்ட படைக்கலங்கள்; விழுப்புண் – முகம், மார்பில்பட்ட புண்; நோய் – பிணி, துன்பம்; மருந்துகொள்மரம் – மருந்திற்காகப் பயன்படும் மரம்; வடு – தழும்பு; யாக்கையன் – உடம்பை உடையவன்; பாண்பசிப் பகைஞன் – பாணரின் பசியைப் போக்குவன்; இன்மை – வறுமை; மருங்குல் – வயிறு.

181

மன்ற விளவின் மனை வீழ் வெள்ளில்,
கருங் கண் எயிற்றி காதல் மகனொடு,
கான இரும் பிடிக் கன்று தலைக் கொள்ளும்
பெருங் குறும்பு உடுத்த வன் புல இருக்கை,
புலாஅ அம்பின், போர் அருங் கடி மிளை,
வலாஅரோனே, வாய் வாட் பண்ணன்;
உண்ணா வறுங் கடும்பு உய்தல் வேண்டின்,
இன்னே சென்மதி, நீயே – சென்று, அவன்
பகைப் புலம் படரா அளவை நின்
பசிப் பகைப் பரிசில் காட்டினை கொளற்கே.

திணை : வாகை; துறை : வல்லாண்முல்லை; பாணாற்றுப்படையும் ஆம்.

வல்லார் கிழான் பண்ணனைச் சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார் பாடியது.

துறை விளக்கம் : "பெருங்குறும்பு உடுத்த வன்புல இருக்கை, புலாஅ அம்பின் போர் அருங் கடி மிளை, வலாஅரோனே வாய்வாட் பண்ணன்" என்று பண்ணனின் ஊரைச் சிறப்பித்ததால்

Koviloor Digital Library

வல்லாண்முல்லைத் துறையாயிற்று. பாணாற்றுப்படையாவது, மலைவழியில் பாணனை அரசர், வள்ளல் ஆகியோரிடத்து பரிசில் பெற்றுவர வழிப்படுத்துதல். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்'' என்று தொல்காப்பியமும், ''சேணோங்கிய வரையதரிற் பாணனை ஆற்றுப்படுத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலையும் பாணாற்றுப்படைக்குப் பொருள் கூறுகின்றன. ''உண்ணா வறுங்கடும்பு உய்தல் வேண்டின் இன்னே சென்மதி நீயே'' என்று பாணனை ஆற்றுப்படுத்தலின் பாணாற்றுப்படைத் துறையும் ஆயிற்று.

உரை : மன்றத்தில் உள்ள விளாமரத்தின் பழம், மனையிடத்து முற்றத்தில் வீழ்ந்தால், கரிய கண்ணையுடைய எயிற்றியின் காதல் மகனான சிறுவனும், காட்டு யானையின் சிறுகன்றும் ஒன்றாக வந்து எடுப்பர். அத்தகைய அரண் சூழ்ந்த வன்னிலத்தில் அமைந்தது புலால் நாறும் அம்பினையும், பொருதற்கரிய காவற்காட்டினையுமுடைய 'வலார்' என்னும் ஊர். அத்தகைய வலார் என்னும் ஊரிடத்தே வாய்த்த வாளையுடைய பண்ணன் இருந்தான். உண்ணாது வருந்தும் நின் வறிய சுற்றம் உண்டு பிழைத்தல் வேண்டுவையாயின், நீ இப்பொழுதே செல்வாயாக; அவன் பகைப்புலம் நோக்கிப் படையெடுத்துச் செல்லுவதற்குள், உன் பசிக்குப் பகையாகிய பரிசிலைப் பெற்று வறுமையைப் போக்கிக் கொள்ள விரைந்து செல்லுவாயாக.

உரை விளக்கம் : பண்ணனின் வலார் என்னும் ஊரைச் சிறப்பித்தும், பண்ணனிடத்துப் பாணனை ஆற்றுப்படுத்தும் முறையிலும் சிறுகருந்தும்பியார் பண்ணனின் கொடை, போர் ஆற்றலை வியந்து பாடியது. பண்ணன் இரவலரின் பசியைப் போக்கும் இயல்பை, ''உண்ணா வறுங்கடும்பு உய்தல் வேண்டின்'' என்று கூறினார். அவன் நாட்டின் காவல் மிகுதியை, ''பெருங் குறும்பு உடுத்த வன்புல இருக்கை'' என்றும், ''போர் அருங்

Koviloor Digital Library

கடிமிளை" என்றும் கூறினார். பண்ணனின் போர் ஆற்றலைச் சிறப்பித்து அவன் போருக்குச் செல்லுமுன் பசிக்குப் பகையாகிய பரிசிலை நின் வறுமையைக் காட்டிப் பெறுக என்பதை, "பகைப்புலம் படரா அளவை நின் பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே" என்றார்.

"கதிர் நுழை கல்லா மரம்பயில் கடிமிளை அருங்குறும்பு உடுத்த" (புற. 21 : 6), "வன்புலக் காட்டு நாட்டதுவே" (நற். 59), முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி, நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற, குறியிறைப் புதல்வரொடு மறுவந்தோடி" (குறு. 394 : 1 – 3), "புலவுநுனைப் பகழி" (பெரு. 269), "கடிமிளைக் குண்டு கிடங்கின் நெடுமதில் நிரைஞாயில் அம்புடை ஆரெயில்" (பதி. 20 : 17 – 19), "அருஞ்குழு மிளை" (மது. 64), "பாசம், பசிப்ப மடியைக் கொளலும்" (திரி. 20), "அருஞ்சமம் வருகுவது ஆயின் வருந்தலும் உண்டு, என் பைதல் அம் கடும்பே" (புற. 139 : 14 – 15), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வெள்ளில் – விளாமரம்; குறும்பு – அரண்; வன்புலம் – வன்னிலம்; இருக்கை – (ஊராகிய) இருப்பை; இருப்பிடம்; மிளை – காவற்காடு; வறுங் கடும்பு – வறிய சுற்றம்; உய்தல் – பிழைத்தல்; பகைப்புலம் – வேற்றுப்புலம்.

182

உண்டால் அம்ம, இவ் உலகம் – இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழி எனின்,
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி,

Koviloor Digital Library

தமக்க என முயலா நோன் தாள்,
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடியது.

துறை விளக்கம் : முனிவர், தெளிந்த பொருளைச் சொல்லுதல். உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதி தருகிற பொருளை ஒருவனுக்குக் கூறுதல். ''உண்டால் அம்ம, இவ்வுலகம் ... தமக்கு என முயலா நோன்தாள் பிறர்க்கு என முயலுநர் உண்மையானே'' எனக் கூறி, அவ்வாறு முயல்வதே சிறந்த பொருளாகும் என்றதால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித் துறை ஆயிற்று.

உரை : தேவர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தாலோ, தவத்தாலோ தமக்கு வந்து கூடுவதாயினும், அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலும் இலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அது தீர்த்தற்பொருட்டு சோம்பியிருத்தலும் இலர்; புகழ் கிடைக்குமாயின் தம் உயிரையும் கொடுப்பர்; பழியெனின் அதனால் உலகம் முழுதும் பெறினும் கொள்ளார்; மனக்கவலை இல்லார்; அத்தகைய மாட்சிமைப்பட்ட தன்மையராய், தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் சான்றோர் உளராதலால் இவ்வுலகம் இருக்கின்றது.

உரை விளக்கம் : பாண்டிய மன்னனான கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, சான்றோரின் சான்றாண்மையை வியந்து பாடியது. 'இந்திரர்' என்றது தேவர்களையும், அமிழ்தம் என்றது அவரது உணவையும் குறித்து நின்றது. 'இயைவதாயினும்' என்பதற்கு இந்திரர் அமிழ்தம் தெய்வத்தால் அல்லது தவத்தால் தமக்கு வந்து கூடுவதாயின் என்று பொருள் உரைத்தார். கிடைத்தற்கு அரிய அமிழ்தம் தமக்குக் கிடைத்தாலும் அதனை

Koviloor Digital Library

உண்டு நீண்ட நாள் வாழலாம் என்று கருதார்; தனித்து தாம் மட்டும் உண்ணுவதை விரும்பார். இதனை, ''இனிது எனத் தமியர் உண்டலும் இலர்'' என்றார். யாவரிடத்தும் அன்புடையர் என்பதை உணர்த்த 'முனிவிலர்' என்றும், அஞ்சத்தகும் துன்பத்திற்கு அஞ்சி, அதனால் செயல்படாது சோம்பியிரார் என்பதை, ''துஞ்சலும் இலர்'' என்றும் கூறினார். புகழ் தரும் செயல்களுக்காகத் தம் உயிரையும் கொடுப்பர்; பழி தரும் செயலாயின், உலகத்தையே பரிசாகக் கொடுத்தாலும் செய்யமாட்டார் என்பதை ''புகழ் எனின் உயிரும், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்'' என்றும் சான்றோரின் குணங்களையும், செயல்களையும் எடுத்துரைத்தார்.

இனியவை பெறினே தனிதனி நுகர்கேம் (பதி. 38), ''மருந்தே ஆயினும் விருந்தோடு உண்க'' (கொன்றை வேந்தன்), ''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் (குறள். 428), ''அறிவது அடங்கி அஞ்சுவது அஞ்சி, உறுவது உலகுவப்பச் செய்து பெறுவதனால் இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும், துன்புற்று வாழ்தல் அரிது'' (நாலடி. 74), ''வாணன் வைத்த விழுநிதி பெறினும், பழி நமக்கு எழுக வென்னாய் விழுநிதி, ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே'' (மது. 203 - 205), ''அடிபிறக்கிடில் அமரர்தம் உலகொடு இவ்வுலகு கைப்படும் எனினும் அது ஒழிபவர் ... உயிரை விற்று உறு புகழ் கொள உழல்பவர்'' (கலிங். 340), ''தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன்'' (அக. 54), (மணி. 5 : 73), ''தன்னுயிர்க்கு இரங்கான் பிற உயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன்'' (மணி. 25 : 116 - 117), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : இந்திரர் - தேவர்; அமிழ்தம் - தேவர்க்குரிய உணவு; முனிவு - வெறுப்பு; துஞ்சல் - சோம்பி இருத்தல்; அயர்வு - மனக்கவற்சி, மனக்கவலை; நோன்தாள் - முயற்சி.

Koviloor Digital Library

183

உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும்,
பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே :
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்,
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

திணை : *பொதுவியல்;* துறை : *பொருண்மொழிக் காஞ்சி.*

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியது.

துறை விளக்கம் : *உயிருக்கு உறுதி தரும் பொருளான கல்வியால் வரும் சிறப்புக்களை எடுத்துரைத்தலால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.*

உரை : *தன் ஆசிரியர்க்கு ஒரு துன்பம் வந்தவிடத்து அது தீர்த்தற்கு உதவி செய்தல் வேண்டும்; மிக்க பொருளை அவர்க்குக் கொடுக்க வேண்டும்; மிக்க பொருள் கொடுத்தும் ஆசிரியரை வழிபடுதற்கு வெறுப்படைதல் கூடாது; இவ்வாறெல்லாம் செய்து ஒருவன் கல்வி கற்பது நன்மையைத் தரும்; அதற்குக் காரணம் யாதெனின், பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரு தாய் வயிற்றில் பிறந்தவருள்ளும் அவரவர் சிறப்பின் காரணமாகத் (கல்விச் சிறப்பால்) தாயும் பாசத்தில் மனம் வேறுபடுவாள்; ஒரு குடியில் பிறந்த பலருள்ளும் மூத்தோனை வருக என்று அழையாது, அவருள் அறிவுடையோனை வருக என்று அழைத்து, அவன் காட்டும் நெறிவழியே அரசனும் நடப்பான்; வேற்றுமை தெரிந்த*

Koviloor Digital Library

நாற்குல மக்களுள், கீழ்க்குலத்துள் (கீழ்ச்சாதி) ஒருவன் கற்று வல்லானாயின் மேற்குலத்துள் ஒருவனும் இவன் கீழ்க்குலத்தான் என்று பாராது கல்வி பொருட்டு அவனிடத்துச் சென்று வழிபடுவான்; ஆதலால் எவ்வகையானும் கல்வி கற்றல் சிறப்புடையது.

உரை விளக்கம் : கல்விச் சிறப்புடையவனையே குடும்பம், அரசு, சமுதாயம் மதிக்கும் என்பதை வலியுறுத்திப் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாடியது. உற்றுழி உதவி, உறுபொருள் கொடுக்க என்று அறிவுறுத்தியவன், பிற்றை நிலை முனியாது கற்க என்று கூறியதன் காரணம், உற்றுழி உறுபொருள் கொடுத்தவழி தன்பால் உயர்வும், இவற்றைப் பெறும் ஆசிரியர்பால் தாழ்வும் உண்டாதலால், ஆசிரியரின் ஆணைவழி நின்று தாழ்ந்து கேட்டற்கு அவற்றின் வழி பிறந்த மானம் தடை செய்யும். அதனால் கல்வி அறிவு நன்கு பெறப்படாது. ஆதலால் அறநெறிப்படாத மானத்தை பணிவோடு விலக்கிப், ''பிற்றை நிலை முனியாது கற்க'' என்றார். அன்பும், வழிபாடுமே ஆசிரியர்பால் உள்ள அறிவுச் செல்வத்தைப் பெறுதற்கு வாயிலாகும். ''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்'' அன்பு செய்க; ''பிற்றைநிலை முனியாது'' வழிபடுக என்று கல்வி கற்கப் புகும் மாணாக்கர்க்குப் பாடலின் தொடக்கத்திலே வற்புறுத்துவர்.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் கல்வி கற்றவனையே தாய் விரும்புவாள்; கல்லாதவனை விரும்பாள் என்பதை உணர்த்த, ''தாயும் மனம் திரியும்'' என்றார். அன்பிலே சிறந்தது, உயர்ந்தது தாய் அன்பு; அத்தகைய தாயின் மனமே வேறுபடும் என்பதை இங்குச் சுட்டுகிறார். ஒரு குடியில் பிறந்த பலருள் மூத்தோனுக்குச் சிறப்புச் செய்யாது இளையோன் கல்வி அறிவுடையனாயின் அவனையே அரசனும் சிறப்புச் செய்வான்; உலக மக்களுக்கு இன்ப வாழ்வு நல்கும் அரசன் நெறி காட்டும் அறிவுடையோனையே நோக்கி இயங்கும் என்பதை, ''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்'' என்றார்.

Koviloor Digital Library

நால்வருணத்துள் கீழ்க்குலத்தான் ஒருவன் கற்றனாயின் மேற்குலத்தான் அவன்பாற் சென்று வழிபட்டு, அவன் காட்டும் நெறிப்படி ஒழுகுவானாதலால், ''மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே'' என்றார். இவற்றால் கல்வியால் ஒருவனுக்கு ஏற்படும் சிறப்புக்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

''உடையார்முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லாதவர்'' (குறள். 395), ''தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது'' (குறள். 68), ''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' (குறள். 69), ''ஒரு குடியிற், கல்லாது மூத்தானைக் கைவிடுபு கற்றான் இளமை பாராட்டும் உலகு'' (நான்மணி. 65), ''அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்'' (வெற்றிவேற்கை), தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக், காணின் கடைப்பட்டான் என்று இகழார் - காணா, அவன் துணையா ஆறுபோயற்றே நூல் கற்ற, மகன் துணையா நல்ல கொளல்'' (நாலடி. 136), ''சிறப்பின் பாலார் மக்கள் அல்லார், மறப்பின் பாலார் மன்னர்க்கு'' (மணி. 23 : 31 - 32), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : உறுபொருள் - மிக்கபொருள்; முனியாது - வெறுக்காது; பிற்றை நிலை - வழிபாட்டு நிலை; ஆறு - நெறி; வேற்றுமை - வேறுபாடு; நாற்பால் - நாற்குலம், நால்வருணம்.

184

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;
நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;

Koviloor Digital Library

அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போல,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

திணை : பாடாண்திணை; **துறை** : செவியறிவுறூஉ.

பாண்டியன் அறிவுடை நம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் பாடியது.

துறை விளக்கம் : பகைமையும் கெடுதலுமற்ற பெரிய எண்ணங்களை அரசனுக்கு உரைத்தல் செவியறிவுறூஉ எனப்படும். ''மறம் திரிவு இல்லா மன்பெரும் சூழ்ச்சி, அறம்தெரி கோலாற்கு அறிய உரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை இத்துறைக்குப் பொருள் கூறும். அரசனிடம் உலகங் காவன் முறையைச் சொல்லி, அவன் செவியிற் புகுத்தி அறிவித்தல் எனவும் பொருள்படும். ''அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே, கோடி யாத்து நாடுபெரிது நந்தும்'' என்று உரைத்தலால் இப்பாடல் செவியறிவுறூஉ துறையைச் சார்ந்ததாயிற்று.

உரை : ஒரு மாவிற்கு குறைந்த நிலமாயினும், அதன்கண் விளைந்த காய்ந்த நெல்லை அறுத்துக் கவளமாகக் கொள்ளின் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாக அது பயன்படும்; நூறு வயல்களாயினும் யானை தனித்துச் சென்று புகுந்து உண்ணுமாயின், அதன் வாயில் புகுந்த நெல்லினும், காலடியில் பட்டு அழிவது மிகுதியாகும்; அத்தன்மையில் அறிவுடை அரசன், தாம் கொள்ளும் அரசிறையைக் கொள்ளும் நெறியறிந்து கொள்ள வேண்டும்; அவ்வாறு செய்தால், அவன் நாடு கோடிப் பொருளினை ஈட்டிக் கொடுத்துச் செழிப்படையும்; வேந்தன் அறிவால் மெல்லியனாகி (அறிவு குறைந்து),

Koviloor Digital Library

நாடோறும் வரிசை அறியாத, ஆரவாரத்தையுடைய சுற்றத்தோடு கூடி குடிகளின் அன்பு கெடக் கொள்ளும் பொருள் தொகுதியை விரும்பின், அவ்வியானை புகுந்த நிலம்போலத் தானும் உண்ணப்பெறான்; உலகமும் கெடும்.

உரை விளக்கம் : பாண்டியன் அறிவுடைநம்பி குடிமக்களிடம் வரி வாங்கும் முறையை அறிவுறுத்திப் பிசிராந்தையார் பாடியது. களிற்றுயானைக்கு உணவாகும் நெற்கதிர், அது விளையும் நிலத்திலிருந்து கொண்டுவரப்பட்டுக் கவளம் கவளமாகக் கொள்ளப்படுமாயின், விளைநிலம் ஒருமா அளவினும் குறைந்ததாயினும் பலநாட்கள் அக்களிற்றுக்கு உணவாகும் என்பதை, "மா நிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்" என்றார். அதுபோல அரசன் குடிமக்களிடம் நெறி அறிந்து சிறிது சிறிதாக வரி வசூல் செய்வானாயின் மக்களுக்கு வருத்தம் நேராது. அரசனும் அவ்வரியைக் கொண்டு படிப்படியாகப் பல நன்மைகளைச் செய்து நாட்டை முன்னேற்ற வழிக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதைக், "கோடி யாத்து நாடு பெரிது நந்தும்" என்றார்.

அரசனுக்குத் துணை செய்யும் அமைச்சர், அரசியற் சுற்றத்தாரும் அவனை நன்னெறிப்படுத்தாத நிலையில் உள்ளதை, "வரிசை அறியாக் கல்லென் சுற்றம்" என்று கூறினார். அரசன் குடிமக்களை வருத்தி நன்னெறியின் பாற்படாது மிகுதியான வரியை வாங்குவானாயின் நூறு வயல்களில் விளைந்த நெற்பயிரை யானை தானும் உண்ணாமல் கால்பட்டு அழிந்து போதலைப் போலக் குடிமக்களும் வருந்துவர்; அரசனும் கெடுவான் என்பதை, "யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடும்" எனக் காட்டினார். யானையின் உணவுக்கு நெற்பயிரைச் சிறிது சிறிதாகக் கொள்வது போல நாட்டு மக்களிடம் வரியைச் சிறிது சிறிதாகப் பெற வேண்டும் என்பதை ஒப்புமைப்படுத்தியுள்ளார்.

"காய் நெற் கவளம் தீற்றிக் காவுதொறும் கடுங்கண் யானை" (புற. 337 : 14), "நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ ...

Koviloor Digital Library

அலமரல் யானை'' (புற. 44 : 2 – 5), ''மாவின் வயின் வயின் நெல்'' (பொரு. 180), ''நல்லற நெறி நிறீஇ உலகாண்ட அரசன்'' (கலி. 129 : 4), ''குடியோம்பிக் கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே மாநிதியம், வெள்ளத்தின் மேலும் பல'' (நீதிநெறி. 29), ''வாய்ப் படும் கேடும் இன்றாம் வரிசையின் அறிந்து நாளும், காய்த்த நெற்கவளம் தீற்றின் களிறுதான் கழனி மேயின், வாய்ப்படல் இன்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளின், நீத்தநீர் ஞாலமெல்லா நிதிநின்று சுரக்குமன்றே'' (சீவக. 2907), ''கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்'' (பெரு. 21), ''கல்லென் சுற்றக் கடுங்குரல் அவித்து'' (குறி. 151), ''இகழின் இகழ்ந்தாங்கு இறைமகனொன்று புகழினும் ஒக்கப் புகழ்ப'' (நீதிநெறி. 44), ''வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்ம்'' (பதி. 51), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கவளம் – உணவு; மா – ஒருவகை அளவை; மெல்லியன் – அறிவு குறைந்தவன்; வைகல் – நாள்தோறும்; சுற்றம் – உறவினர்; பரிவு – அன்பு; பிண்டம் – பொருள் தொகுதி; புலம் – நிலம்.

185

கால் பார் கோத்து, ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு கைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்,
பகைக் கூழ் அள்ளற் பட்டு,
மிகப் பல் தீ நோய் தலைத்தலைத் தருமே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

தொண்டைமான் இளந்திரையன் பாடியது.

Koviloor Digital Library

துறை விளக்கம் : "காவற் சாகாடு கைப்போன் மாணின் ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே" என்று உலகாளும் முறையை எடுத்துரைத்தலால் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

உரை : உருளையையும், (வண்டிப்)பாரையும் கோத்து, உலகில் செலுத்தும் காப்புடைய சகடம் (வண்டி), அதனைச் செலுத்துவோன் மாட்சிமைப்படின், ஒரு துன்பமின்றி வழியில் இனிதாகச் செல்லும்; அவன் அவ்வண்டியை இனிதாகச் செலுத்துதலை அறியானாயின் அது நாடோறும் பகையாகிய செறிந்த சேற்றில் அழுந்தி மிகப்பல தீய துன்பத்தை மேன்மேலும் உண்டாக்கும்.

உரை விளக்கம் : அரசனின் ஆட்சித்திறத்தை ஒரு சகடமாக உவமித்துத் தொண்டைமான் இளந்திரையன் பாடியது. வண்டியைச் செலுத்துவோன், திறம் பெற்றவனாயின் வண்டி இடையூறு சிறிதுமின்றி இனிதாகச் செல்லும்; அதைப்போல, அரசியலை நடத்தும் வேந்தன் அரசியல் முறையைத் திறம்பட அறிந்தானாயின் நாடு நலம் பெறும்; அவனும் சிறப்புப்பெறுவான் என்பதை, "காவற் சாகாடு உகைப்போன் மாணின் ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே" என்று ஒப்புமைப்படுத்தி உரைப்பர். வண்டியைச் செலுத்தும் திறன் அறியானாயின் நெறி தவறிச் சென்று சேற்றில் அழுந்தி மிக்கத் துன்பத்திற்கு உள்ளாவான்; அதைப்போல வேந்தன் அரசுமுறையைத் திறம்பட அறியானாயின் உட்பகை, புறப்பகைகளாகிய சேற்றில் அழுந்தித் துன்புறுவான்; நாடும் சீர்கேடு அடையும் என்பதை, "உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும் பகைக் கூழ் அள்ளற்பட்டு மிகப் பல் தீ நோய் தலைத் தலை தருமே" என்று ஒப்புமைப்படுத்தி உரைப்பர்.

"கழி உப்பு முகந்து கல்நாடு மடுக்கும், ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும், உரனுடை நோன் பகட்டு அன்ன எம் கோன்" (புற. 60 : 7 – 9), "அச்சொடு தாக்கிப் பார் உற்று இயங்கிய, பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய, வரி மணல் ஞெமரக் கல் பக நடக்கும்

Koviloor Digital Library

பெருமிதப் பகட்டுக்கு" (புற. 90 : 6 – 9), "அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய" (புற. 256 : 2), "ஆர்வலஞ் சூழ்ந்த ஆழி அலைமணித் தேரை வல்லான், நேர்நிலத்து ஊருமாயின் நீடுபல் காலஞ் செல்லும், ஊர்நில மறிதல் தேற்றா தூருமேல் முறிந்து வீழும், தார்நில மார்ப வேந்தர் தன்மையும் அன்ன தாமே" (சீவக. 2909), "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்" (குறள். 475) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கால் – உருளை; பார் – வண்டியின் உறுப்புக்களுள் ஒன்று; ஞாலம் – உலகம்; காவல் – காப்பு; சாகாடு – வண்டி; கைப்போன் – செலுத்துவோன்; ஊறு – துன்பம்; ஆறு – வழி; தேற்றான் – தெளியான்; வைகலும் – நாடோறும்; அள்ளல் – சேறு; தலைத்தலை – மேலும்மேலும்.

186

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம் :
அதனால், யான் உயிர் என்பது அறிகை
வேல் மிகு தானை வேந்தற்குக் கடனே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

மோசிகீரனார் பாடியது.

துறை விளக்கம் : "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று வேந்தர்க்குரிய கடனை உரைத்தலால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

உரை : பரந்த இடத்தையுடைய உலகம், வேந்தனாகிய உயிரை உடைத்து; அதனால் இவ்வுலகத்தார்க்கு நெல்லும் உயிர் அன்று;

Koviloor Digital Library

நீரும் உயிர் அன்று; வேலால் மிக்க படையையுடைய அரசனுக்கு இவ்வுலகுக்கு யான் உயிர் என்பதை அறிதல் கடனாகும்.

உரை விளக்கம் : இவ்வுலகுக்கு அரசனது முறையான ஆட்சியே உயிர் என்பதை உணர்த்தி மோசிகீரனார் பாடியது. அரசனது ஆட்சி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை உலகோர் அறியும்வண்ணம் உணர்த்துகின்ற பாடல். ''மன்னன் உயிர்த்தே'' என்றது, உடல், உயிரை ஆக்கும் நெல்லும், நீரும் செழிப்படைவது மன்னன் முறைசெய்து காக்கும் ஆட்சித்திறத்தால் என்பதாலாகும். நாட்டின் அரசு முறை இன்றியமையாமையின், அதனைச் செலுத்தும் அரசனே உலகிற்கு உயிராவான்; உயிர் தான் இருக்கும் உடம்புக்கு வந்த நோயைத் தாங்கிக் கொண்டு அதனைப் பேணுதல் போல, அரசன் உலகைக் காப்பதன் பொருட்டு வரும் துன்பம் அனைத்தையும் உயிராகிய தான் ஏற்று, உடலாகிய மக்களைக் காப்பது கடன் என்பதை, ''யாமன் உயிர் என்பது அறிகை கடன்'' என்றார்.

''நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே; உண்டி முதற்றே உணவின் பிண்டம்; உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே; நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு, உடம்பும் உயிரும் படைத்திசினோரே'' (புற. 18 : 18 – 23), ''நீரின்று அமையாது உலகு'' (குறள். 20), ''மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' (மணி. 11 : 95 – 96), ''வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன், கோல் நோக்கி வாழும் குடி'' (குறள். 542), ''இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட, பெயலும் விளையுளும் தொக்கு'' (குறள். 545), ''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன், அடிதழீஇ நிற்கும் உலகு'' (குறள். 544), ''நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர் இரண்டும் செப்பின், புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழல் இலங்கு வாட்கை, மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய், நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேல் நம்பி என்றான்'' (சீவக. 2908), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : மலர்தலை உலகம் - பரந்த இடத்தையுடைய உலகம்; தானை - படை; கடன் - முறைமை, கடமை.

187

நாடாகொன்றோ; காடாகொன்றோ;
அவலாகொன்றோ; மிசையாகொன்றோ;
எவ் வழி நல்லவர் ஆடவர்,
அவ் வழி நல்லை; வாழிய நிலனே!

திணை : பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

ஔவையார் பாடியது.

துறை விளக்கம் : "எவ் வழி நல்லவர் ஆடவர், அவ் வழி நல்லை வாழிய நிலனே" என்று ஆடவரது ஒழுக்கமே உலகமேம்பாட்டிற்கு அடிப்படை என உலக இயற்கை கூறியதால் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

உரை : நிலனே! நீ ஒன்றில் நாடேயாக; ஒன்றில் காடேயாக; ஒன்றில் பள்ளமேயாக; ஒன்றில் மேடேயாக; எவ்வாறாயினும், ஆடவர் எவ்விடத்து நல்லவராக விளங்குகின்றனரோ அவ்விடத்து நீயும் நன்மையுடையை; அதுவல்லது நினக்கென ஒரு நன்மை உடையை இல்லை; நீ வாழ்வாயாக!

உரை விளக்கம் : வாழ்வும் தாழ்வும் நிலத்தைப் பொறுத்தது அன்று; அவ்வந் நிலத்துவாழ் ஆடவரைப் பொறுத்ததே என்று ஔவையார் உலகத்தியற்கை குறித்துப் பாடியது. நற்பண்பும் நற்செயலும் உடைய ஆடவரே நாட்டின் நலத்துக்கும், புகழுக்கும், வளத்துக்கும் காரணமாவார்; தீய நிலனேயாயினும் நல்லோர்

Koviloor Digital Library

இருப்பின் நல்ல நிலம் எனவும், நல்ல நிலனேயாயினும் தீயோர் இருப்பின் தீயநிலம் எனவும் வழங்கப்படும். எனவே தன்னிடத்து வாழ்வோர் இயல்பல்லது தனக்கென ஓர் இயல்பு உடைத்து இல்லை என்பதை, ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்று நிலத்தை இழித்துக் கூறுவது போல உலகத்தியற்கை கூறினார்.

''காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல், மீக்கூறும் மன்னன் நிலம்'' (குறள். 386), என வரும் பகுதி நோக்கத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : அவல் - பள்ளம்; மிசை - மேடு; நல்லை - நலமுடையை, நன்மையுடையை.

188

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும், இடைப் படக்
குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி,
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய் பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக் குறை இல்லை - தாம் வாழு நாளே.

திணை : பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

பாண்டியன் அறிவுடை நம்பி பாடியது.

துறை விளக்கம் : ''மயக்குறு மக்களை இல்லோர்க்குப், பயக்குறை இல்லை தாம் வாழு நாளே'' என்று மக்கட்பேற்றின் சிறப்பை எடுத்துரைத்தலால் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

Koviloor Digital Library

உரை : படைக்கப்படும் செல்வம் பலவற்றையும் படைத்துப் பலருடன் கூட உண்ணும் உடைமை மிக்க செல்வத்தை உடையோராயினும் அதனால் பயன் என்ன? இடைப்பட குறுகக்குறுக நடந்து சென்று, சிறு கையை நீட்டிக் கலத்தில் கிடந்ததனைத் தரையிலே இட்டும், பிசைந்து தோண்டியும், வாயால் கவ்வியும், கையால் துழாவியும் நெய்யுடை சோற்றை உடம்பில் சிதறியும் இங்ஙனம் அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குத் தாம் உயிர் வாழும் நாளில் பயனாகிய முடிக்கப்படும் பொருள் இல்லை.

உரை விளக்கம் : இன்பம் சான்ற புதல்வரைப் பெறாதவர்க்கு உயிர் வாழ்வால் முடிக்கக்கூடிய பொருள் இல்லை என்பதை உலகோர் அறியும் வண்ணம் பாண்டியன் அறிவுடை நம்பி பாடியது. செல்வம் பலவற்றையும் உடையராய்ப் பலருடன் கூடி இருந்து உண்பவராயினும் அவர் பெற்ற செல்வத்தால் வாழ்வின் பயன் ஒன்றும் இல்லை என்பதை உணர்த்த, ''படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப் பெருஞ் செல்வர்'' என்றார். அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வரை, ''மயக்குறுமக்கள்'' என்றார். அப்புதல்வரைப் பெறாதவர்க்கு இன்பமாகிய பயனும் இல்லை; வாழும் நாளும் இல்லை; அவ்வாழ்க்கை வெறுமை உடைய வாழ்க்கையே என்பதைப், ''பயக்குறை இல்லை தாம் வாழு நாளே'' என்றார்.

''துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப், பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க'' (நாலடி. 2), ''தளர்நடைப் புதல்வனை'' (ஐங். 66), ''தளர்பு தளர்பு ஓடும் பூங்கட் புதல்வன்'' (அக. 66), ''இம்மை உலகத்து இசையொடும் விளங்கி, மறுமை உலகமும் மறுவின்று எய்துப, செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச் சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப் பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம் வாயே யாகுதல்'' (அக. 96), ''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற'' (குறள். 61), ''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்'' (குறள். 64),

Koviloor Digital Library

''மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம், மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'' (குறள். 65), ''குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' (குறள். 66) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அடிசில் - சோறு; மெய் - உடம்பு; மயக்குறுமக்கள் - அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வர்.

189

தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

துறை விளக்கம் : ''செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே'' என்று ஈதலாகிய அறத்தை வலியுறுத்தியதால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித்துறையாயிற்று.

உரை : தெளிந்த நீரால் சூழப்பட்ட உலகம் முழுவதையும் பிற வேந்தர்க்குப் பொதுவாதலின்றித் தமக்கே உரித்தாக ஆட்சிச் செய்து, வெண்கொற்றக் குடையால் நிழல் செய்த அரசர்க்கும், இடையாமத்தும், நண்பகலும் துயிலாது, விரைந்த வேகம் கொண்ட

Koviloor Digital Library

விலங்குகளை வேட்டையாடித் திரியும் கல்வியில்லாத ஒருவனுக்கும் (வறியோன்) உண்ணப்படும் பொருள் நாழித் தானியமே; உடுக்கப்படுபவை அரை ஆடை, மேலாடை என இரண்டே; இவைப் போலப் பிற உடல்,\ உள்ளத் தேவைகளும் ஒன்றாகவே விளங்கும். ஆதலால் செல்வத்தாற் பெறும் பயனாவது கொடுத்தல் ஆகும். செல்வத்தை தாமே நுகர்வேம் என்று கருதின் அறம் பொருள் இன்பம் பெறப்படாவாம்.

உரை விளக்கம் : உண்பது, உடுப்பது ஆகிய செயல் இரண்டிலும் அரசனும் ஆண்டியும் ஒன்றேயாதலால், பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டுவது ஈதலறமே என்பதை உலகோர்க்கு உணர்த்த மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது. அரைக்கு நான்கு முழமும், மேலுக்கு இரண்டு முழமுமாக இரண்டாடை வேண்டுதலால் ''உடுப்பவை இரண்டே'' என்றார். ''பிறவும் எல்லாம்'' என்றது உண்ணல், உறங்கல், இனம் பெருக்குதல் ஆகிய செயல்கள் இருவருக்கும் ஒக்கும் என்றார். உயிர்கட்கு உறுதிப் பொருளான அறம், பொருள், இன்பத்தைப் 'பல' எனக் கூறினார். செல்வத்தைப் பெற்ற பயனால் ஈதலாகிய காரியத்தைச் செய்வதால் அறம் பொருள் இன்பமாகிய இம்மைப்பயனும், மறுமைப் பயனும் கிடைக்கும் என்றார். அவ்வாறு செய்யாதவர் அப்பயன் கிடைக்காது வருந்துவர் என்பதால், ''துய்ப்பேம் எனினே தப்புந பலவே'' என்றார்.

''திரைதரு முந்நீர் வளாஅகம் எல்லாம்'' (கலி. 146 : 28), ''வையம் காவலர் வழிமொழிந்து ஒழுக, போகம் வேண்டி பொதுச்சொல் பொறாஅது, இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப, ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகை'' (புற. 8 : 1 – 4), ''தண்தமிழ் பொது எனப் பொறாஅன் போர் எதிர்ந்து'' (புற. 51 : 5), ''பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்க்கு'' (கலி. 68), ''கொடியும் முரசும் கொற்ற வெண்குடையும் பிறர்கொளப் பொறாஅன் தானே கொண்டு'' (சிதம்பர மும்மணி. 25), ''அரையிருள் யாமத்துப் பகலும் துஞ்சார்'' (சிலப். 4 : 81),

Koviloor Digital Library

''நாழி அரிசிக்கே நாம்'' (நல்வழி. 19), ''உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்'' (நல்வழி. 28), ''வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற, முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி, வேய்முற்றி முத்து உதிரும் வெற்ப அதுவன்றோ, நாய்பெற்ற தெங்கம் பழம்'' (பழ. 151), ''மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'' (குறள். 222), ''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி'' (குறள். 226), ''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்கண் அவர்'' (குறள். 228), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வளாகம் - உலகம்; பொதுமை - பொதுவாதல்; நிழற்றிய - நிழல் செய்த; ஒருமையோர் - ஒரு தன்மையுடையோர் (அரசர்); நடுநாள் யாமம் - இடையாமம்; (அர்த்தசாமம்), நடுஇரவு; பகல் - நண்பகல்; துஞ்சான் - துயிலான்; மா - விலங்கு; கல்லா - கல்வியில்லாத; உண்பது - உண்ணப்படுவது; நாழி - அளவுப்பெயர் (தானியத்தைக் குறித்தது); ஈதல் - கொடுத்தல்; துய்ப்பேம் - நுகர்வேம்; தப்புந - தவறுவன.

190

விளை பதச் சீறிடம் நோக்கி, வளை கதிர்
வல்சி கொண்டு, அளை மல்க வைக்கும்
எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்
வளன் வலியுறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லாகியரோ!
கடுங் கண் கேழல் இடம் பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணாதாகி, வழி நாள்,
பெரு மலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து,
இருங் களிற்று ஒருத்தல் நல் வலம் படுக்கும்
புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து
உரனுடையாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உள ஆகியரோ!

Koviloor Digital Library

திணை : பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

சோழன் நல்லுருத்திரன் பாடியது.

துறை விளக்கம் : "புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து உரனுடையாளர் கேண்மையொடு இயைந்த வைகல் உளவாகியரே" என வலியுடையோரின் நட்பை வலியுறுத்திப் பாடியதால் இப்பாடல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாயிற்று.

உரை : விளைந்து முற்றியபின் அறுப்பதற்கு முன் உள்ள சிறிய விளைவயலில் இருந்து கதிராகிய உணவைக் கொண்டு சென்று எலி தன் வளையுள் மிகுதியாகச் சேமித்து வைக்கும்; அவ்வெலியைப் போலச் சிறிய முயற்சியராகித் தம்மிடம் உள்ள செல்வத்தை அனுபவிக்காது இறுகப் பிடிக்கும் உள்ளமிகுதி (உயர்வு) இல்லாதாருடன் பொருந்திய நட்பு இல்லையாக; தறுகண்மையுடைய பன்றி தனது இடப்பக்கத்தில் இறந்து வீழ்ந்து கிடப்ப, அன்று அவ்விடத்து உண்ணாதாகிச் சென்றது புலி; அடுத்த நாள் பெரிய மலையில் தன் குகையிடம் தனிமைப்பட உணவை விரும்பி எழுந்து, களிற்றை வலப்பக்கத்தே வீழுமாறு கொன்று உண்ணும்; அத்தகைய புலி பசித்தாற்போலும் குறையில்லாத மேற்கோளையுடைய வலியுடையோர் நட்போடு பொருந்திய நாட்கள் உளவாக.

உரை விளக்கம் : நட்பாகக் கொள்ளத்தகாதவரையும், நட்பாகக் கொள்ளத்தக்கவரையும் இனம் காட்டிச் சோழன் நல்லுருத்திரன் பாடியது. தனக்கென உழைத்து உணவைத் தேடிக் கொள்ளாமல், அடுத்தவர் உழைத்த விளைவயலில் சென்று நெல்லைக் கொண்டு வந்து சேமித்து வைக்கும் என்பதால், "வல்சி கொண்டு அளை மல்க வைக்கும் எலி முயன்றனையராகி" என்றார். அவ்வாறே அடுத்தவர் உழைத்து ஈட்டிய செல்வத்தை மறைமுகமாகச் சிறுகசிறுகப் பறித்துக் கொள்ளும் பண்பும், குறுகிய உள்ளமும், தன்னலச் சூழ்ச்சியும் உடையராதல் பற்றி அவர் நட்பை விலக்கவேண்டும் என்பதை, "உள்ள தம் வளன் வலி உறுக்கும்

Koviloor Digital Library

உளம் இலாளரொடு இயைந்த கேண்மை இல்லாகியரோ'' என உரைத்தார்.

புலி தான் செய்யும் வேட்டைக்கண் மிக்க பசியுற்றபோதும் இடப்பக்கம் வீழ்ந்ததை உண்ணாது செல்லும் இயல்புடையதைக், ''கடுங் கண் கேழல் இடம்பட வீழ்ந்தென அன்று அவன் உண்ணாதாகி'' என்றார். ஆனால் அப்புலி முயற்சியில் சோம்பியிராமல் அடுத்த நாள், உணவை விரும்பி எழுந்து பன்றியை விடப் பெரிய விலங்கான யானையை வலப்பக்கத்தே வீழ்த்தி உண்ணும் என்பதை, ''இருங் களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும் புலி பசித்தன்ன'' என்றார். இதன் மூலம் புலியின் முயற்சியையும், வலிமையையும், மானத்தையும் காட்டி, இப்புலியைப் போன்ற முயற்சியும், உரனமைந்த உள்ளமும் உடையவர் நட்பையே கொள்ள வேண்டும் என்பதை, ''மெலிவு இல் உள்ளத்து உரனுடையாளர் கேண்மையொடு இயைந்த வைகல் உள ஆகியரோ'' என்றார். இழிந்த தன்மையுடைய விலங்கான பன்றியை உண்ணாது, உயர்ந்த விலங்கான பெரிய களிற்றை (ஆண் யானையை) வீழ்த்திப் புலி உண்ணும் தன்மையால், ''புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது'' என்னும் அதன் உயரிய குணத்தை நட்பாகக் கொள்ளத்தக்கவர்க்கு ஒப்புமையாகக் காட்டினார்.

''புலி பார்த்து ஒற்றிய களிற்று இரை பிழைப்பின், எலி பார்த்து ஒற்றாதாகும்'' (புற. 237 : 16 – 17), ''நல்லாறு ஒழுக்கின் தலை நின்றார் நல்கூர்ந்தும், அல்லன செய்தற்கு ஒருப்படார் – பல்பொறிய, செங்கட் புலியே நறப்பசித்துத் தின்னாவாம், பைங்கட் புனத்தபைங் கூழ்'' (நீதிநெறி. 61), ''தொடங்குவினை தவிராது அசைவின் நோன்தாள், கிடந்து உயிர் மறுகுவதாயினும் இடம்படின், வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த தாழ்வில் உள்ளம்'' (அக. 29), ''கடமா தொலைச்சிய கானுறை வேங்கை, இடம் வீழ்ந்த துண்ணாது இறக்கும்'' (நாலடி. 300), ''எற்றிற்குரியர் கயவர் ஒன்று உற்றக்கால் விற்றற் குரியர் விரைந்து'' (குறள். 1080), ''மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும் ஒருவுக ஒப்பிலார் நட்பு'' (குறள். 800) என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பதம் – செல்வி; சீறிடம் – சிறிய இடம்; வல்சி – உணவு; அளை – குகை, முழை, வளை; வளன் – செல்வம்; உளமிலாளர் – உள்ள மிகுதி இல்லாதார், உள்ள உயர்வு இல்லார்; கேண்மை – நட்பு; கேழல் – பன்றி; வழிநாள் – மறுநாள், அடுத்த நாள், பிற்றை நாள்; விடரகம் – முழையிடம்; களிற்றொருத்தல் – ஆண்யானை; வலம்படுக்கும் – வலப்பக்கத்தே வீழ்த்தும்; உரனுடையாளர் – வலிமையுடையோர்; வைகல் – நாள்.

191

'யாண்டு பல ஆக, நரை இல ஆகுதல்
யாங்கு ஆகியர்?' என வினவுதிர் ஆயின்,
மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்;
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே.

திணை : பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரை, ''கேட்கும் காலம் பலவாலோ? நரை நுமக்கு இல்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் பாடியது.

துறை விளக்கம் : ''மாண்ட என் மனைவி, மக்கள், ஏவல் செய்பவர், அல்லவை செய்யா வேந்தன், ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'' என்று செம்மையான வாழ்வு அமைந்ததால், நரை தோன்றவில்லை என உயரிய வாழ்க்கை பற்றிக் கூறியதால் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

Koviloor Digital Library

உரை : நுமக்குக் கழிந்து சென்று ஆண்டுகள் பலவாயின; ஆயினும் நரையில்லையே; எவ்வாறு இந்நிலை பெற்றீர் எனக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியொடு, புதல்வரும் அறிவு நிரம்பினார்; என்னுடைய பேச்சைக் கேட்டு ஏவல் செய்பவரும் யான் கருதியதனையே கருதுவர்; அரசனும் முறையல்லாதன செய்யானாய் காத்து வருகிறான்; அதற்கும் மேலே யான் இருக்கின்ற ஊரில் கல்வி, நற்குணங்களால் நிரம்பிப் பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர் பலர் உள்ளனர்.

உரை விளக்கம் : கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தவழி, அவரைக் காணச் சென்ற பிசிராந்தையார் அரசன் உயிர்விட்டு நடுகல் ஆயின விடத்து மனம் சோர்ந்து வருந்தினார்; அங்கிருந்த சான்றோர் நரைதிரை தோன்றாமைக்குக் காரணம் யாதோ என வினவியவிடத்து, அவர்க்கு மறுமொழியாகப் பிசிராந்தையார் பாடியது. நரை தோன்றுவதற்குக் காரணம் முதுமையன்று; மனக்கவலையே என்பதையும், வீட்டிலோ, ஊரிலோ, நாட்டிலோ கவலைத் தரும்படியான நிலைகள் தனக்கு இல்லை என்பதை அச்சான்றோர்க்குக் கூறினார்.

மனைவி நற்குண நற்செயல்கள் உடையளாதலாலும், மனைவாழ்வாலும், மகப்பெற்று வளர்த்தலாலும் இயற்கை அறிவு மிகுந்தவளாதளாலும், ''மாண்ட என் மனைவியொடு'' என்றார்; புதல்வரும் கல்வி, கேள்விகளால் அறிவு நிறைந்து விளங்கினராதலால், ''மக்களும் நிரம்பினர்'' என்றார்; யான் கருதிய அதனையே கருதி, யான் சொல்வதையே செய்யும் இயல்புடைய ஏவலரை, ''யான் கண்டனையர் என் இளையர்'' என்றார்; முறைசெய்து காப்பாற்றும் மன்னவனும் அறமல்லாதவற்றைச் செய்யான் என அவன் செங்கோன்மைத் திறத்தை, ''வேந்தனும் அல்லவை செய்யான்'' என உரைத்தார். செங்கோன்மையாலும் சான்றோர் பலர் இருத்தலாலும் மழை தப்பாது பெய்யும்.

Koviloor Digital Library

அத்தகைய சான்றோரைக் கல்வி கேள்வி நற்குணங்களால் நிறைந்தும், மனம் மொழி மெய்களாலும் ஐம்புலனாலும் அடக்கம் உடையராயும் இருத்தல்பற்றி, ''ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்'' எனக் குறிப்பிட்டார்.

''மனைத்தக்க மாண்புடையளாகி'', ''மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின்'', ''இல்லவள் மாண்பானால்'' (குறள். 51, 52, 53), ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும்'' (சிலம்பு), அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் ஆமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே'' (சிலப். 20 : இறுதி வெண்பா, 1), ''நற்றவ முனிவரும் கற்று அடங்கினரும், நன்னெறி காணிய தொன்னூற் புலவரும் எங்கணும் விளங்கிய எயிற்புற இருக்கையின் ... வஞ்சி'' (மணி. 26 : 74 – 78), ''வான் நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி'' (குறள். 542), ''இறை காக்கும் வையகமெல்லாம் அவனை முறை காக்கும் முட்டாச் செயின்'' (குறள். 547), ''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்'' (குறள். 388) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : யாண்டுபல – ஆண்டுகள் பல; மாண்ட – மாட்சிமைப்பட்ட; இளையர் – ஏவலர்; அல்லவை – முறையல்லாதனவற்றை; கொள்கை – கோட்பாடு.

192

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர் தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண் துளி தலைஇ, ஆனாது

Koviloor Digital Library

கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப்படூஉம் புணைபோல், ஆர் உயிர்
முறை வழிப்படூஉம்' என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

கணியன் பூங்குன்றனார் பாடியது.

துறை விளக்கம் : "நீர் வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறை வழிப்படூஉம்" எனக் கூறியதால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

உரை : எல்லா ஊரும் எமக்கு சொந்தமான ஊரே; எல்லாரும் எம் சுற்றத்தார்; கேடும் ஆக்கமும் பிறர் தர வாரா; நோதலும் அது தீர்தலும் பிறரால் வருவதன்று; துன்பமும் இன்பமும் தம்மாலே விளைவதாகும்; இறத்தலும் புதிதன்று; கருவில் தோன்றிய நாள் முதல் இறப்பு என்பது தீர்மானிக்கப்பட்டது. வாழ்தலை இனிதென்று மகிழ்ந்ததும் இல்லை; ஒரு வெறுப்பு வந்தவிடத்து வாழ்க்கை துன்பமானது என்று ஒதுக்குதலும் இல்லை; மின்னலுடன் மழை குளிர்ந்த துளியைப் பெய்தலால், கல்லை உருட்டி ஒலிக்கும் ஆறு. அவ்வளவிய பேர்யாற்று நீரின்வழியே செல்லும் தெப்பம் போல, அரிய உயிர் ஊழின் வழியே செல்லும் என்பதை நன்மை கூறுபாடு அறிவோர் கூறிய நூலாலே தெளிந்தனம்; ஆகையால் நன்மையால் மிக்க பெரியோரை மதித்தலும் இலேம்; சிறியோரைப் பழித்தல் அம்மதித்தலினும் இலேம்.

உரை விளக்கம் : உயிர்கள் அனைத்தும் தாம் தாம் செய்த வினைக்கேற்ப இன்பமும் துன்பமும், உயர்வும் தாழ்வும், செல்வமும் வறுமையும் எய்தும் என்பதை உலகோர்

Koviloor Digital Library

அறியும் வண்ணம் கணியன் பூங்குன்றனார் பாடியது. யாவரும் உறவினராகியவிடத்து அவர் வசிக்கும் ஊரெல்லாம் தமக்குச் சொந்தமான ஊரே என்பதை, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றார். தீமையும் நன்மையும், இன்பமும் துன்பமும் பிறரால் வருவதாக எண்ணுதல் தவறு என்பதை உணர்த்த, ''தீதும் நன்றும் பிறர்தர வாரா; நோதலும் தணிதலும் அவற்றோரன்ன'' என்று கூறினார். வாழ்க்கை இன்பமானது என்று மகிழ்தலோ, துன்பமானது என்று வெறுத்தலோ இன்றித் தன் இயல்பிலே வாழ்வை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை, ''நீர் வழிப் படூஉம் புணைபோல ஆருயிர் முறை வழிப்படூஉம்'' என ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார். ஊழின் (விதி) உண்மையும் அதன் செயற்பாடும் காட்சி அளவையானன்றிக் கருத்தளவையானறிந்து நூல்களில் குறிக்கப்பட்டிருத்தலின், ''திறவோர் காட்சியின் தெளிந்தனம்'' என்றார்.

அருஞ்சொற்பொருள் : கேளிர் – சுற்றத்தார், உறவினர்; நோதல் – துன்பம்; தணிதல் – துன்பம் தீர்தல் (இன்பம்); சாதல் – இறப்பு; முனிவு – வெறுப்பு; இன்னாது – துன்பமானது; வானம் – மழை; இரங்கும் – ஒலிக்கும்; மல்லல் – வளமை; புணை – தெப்பம், மிதவை; முறை – ஊழ், விதி; திறவோர் – நன்மை கூறுபாடு அறிவோர்; மாட்சி – நன்மை; வியத்தல் – மதித்தல், போற்றுதல்; இகழ்தல் – பழித்தல்.

193

அதள் எறிந்தன்ன நெடு வெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும் மன்;
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

Koviloor Digital Library

ஓரேருழவர் (ஓர் ஏர் உழவர்) பாடியது.

துறை விளக்கம் : ''ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே'' எனச் சுற்றத்தோடு கூடி வாழும் வாழ்க்கை இயல்பைக் கூறியதால் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

உரை : தோலை உரித்து, அதனை மேல் கீழாகத் திருப்பி வைத்தாற்போன்று தோற்றமளிக்கும் வெளிய களர்நிலத்தில் ஒருவன் புல்வாய்மானை அலைத்து துரத்த, அது தப்பிப் பிழைத்து ஓடும்; அம்மானைப் போல யானும் துறவாகிய நன்னெறிக்கண் ஓடிப் பிழைக்கவும் கூடும்; ஆனால் சுற்றத்தோடு கூடி வாழும் இல்வாழ்க்கை அதன்பாற் செல்லவிடாமல் கால்களைக் கட்டிப்போட்டு விடுகின்றது; ஆதலால் அவ்வாழ்க்கையிலிருந்து தப்பிப்பிழைத்தல் கூடாது.

உரை விளக்கம் : மனைவி, மக்கள், சுற்றமுமாய் வாழும் இன்பவாழ்வும் நன்னெறி வாழ்வே என்பதை உணர்த்த ஓரேருழவர் பாடியது. தோலைப் புடைத்து வைத்தாற்போன்று களர்நிலம் இருக்கும் என்பதைக் காட்ட, ''அதள் எறிந்தன்ன நெடுவெண் களர்'' என்றார். புல்வாய்மான் வேடனிடமிருந்து தப்பிப் பிழைத்தல் போல, துன்பம் தரும் இல்வாழ்க்கையிலிருந்து துறவு வாழ்க்கைக்கு ஓடிப் பிழைத்தல் கூடும் என்ற எண்ணம் தோன்றுவது இயல்பே; அதனை ''ஒருவன் ஆட்டும் புல்வாய் போல ஓடி உய்தலும் கூடும்'' என்றார். ஆயினும், சுற்றத்துடன் கூடி வாழும் வாழ்க்கை இல்லாதவர்க்கே துறவும் தாபத ஒழுக்கமும் தகும்; ஆதலால் சுற்றத்துடன் கூடி வாழும் இல்வாழ்க்கையே சிறந்த நன்னெறியில் நிற்பதான வாழ்க்கை என்று இப்பாடல் மூலம் உணர்த்தினார்.

''காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரிச் சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' (தொல். பொருள். அகத்.), ''காட்டகத் தொருமகன் துரக்கு மாக்கலை, ஓட்டுடைத் தாமெனின்

Koviloor Digital Library

உய்யும் நங்களை, ஆட்டியிட் டாருயிர் அளைந்து கூற்றுவன், ஈட்டிய விளைமதுப் போல உண்ணுமே'' (சீவக. 2919), ''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை'', ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'', ''இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து'' (குறள். 41, 43, 48), ''சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்'', ''அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்'', ''தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக் காரணம் இன்றி வரும்'' (குறள். 524, 525, 529) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : அதள் - தோல்; களர் - களர்நிலம்; புல்வாய் - மான்; உய்தல் - பிழைத்தல்; ஒக்கல் - சுற்றம்.

194

ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்
ஈர்ந் தண் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப்பண்பிலாளன்!
இன்னாது அம்ம, இவ் உலகம்;
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே.

திணை : பொதுவியல்; துறை : பெருங்காஞ்சி.

பக்குடுக்கை நன்கணியார் பாடியது.

துறை விளக்கம் : நிலையாமையை உணர்த்துதல் பெருங்காஞ்சி எனப்படும். ''மலையோங்கிய மாநிலத்து, நிலையாமை நெறியுரைத்தன்று'' என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும். ''இன்னாது அம்ம இவ் உலகம், இனிய காண்க இதன்

Koviloor Digital Library

உயல்பு உணர்ந்தோரே'' எனக் கூறியதால் இப்பாடல் பெருங்காஞ்சித் துறையாயிற்று.

உரை : ஒரு மனையில் (வீட்டில்) சாக்காட்டுப்பறை ஒலிக்கின்றது; ஒரு மனையில் திருமணத்திற்குக் கொட்டும் குளிர்ந்த முழவு ஓசை முழங்குகின்றது; கணவரொடு கூடிய மகளிர் பூ அணிகின்றனர்; கணவரைப் பிரிந்த மகளிர் வருத்தத்துடன் கண்களினின்றும் கண்ணீர் சொரியக் கலங்குகின்றனர். இவ்வாறு பண்பில்லாதோனாகிய நான்முகன் உலகை இன்பம், துன்பம் ஒருசேரப் படைத்தான்; இவ்வுலகத்தினது இயற்கை மிகவும் கொடிது; ஆதலால், இவ்வுலகத்தின் தன்மையறிந்தோர் (வீடுபேறு) வீட்டின்பத்தைத் தரும் நல்ல செயல்களை அறிந்து செய்தல் வேண்டும். உலகத்தின் இயல்பை உணர்ந்தோர், இவ்வின்னாமையை இனியவாகக் காணுதல் வேண்டும் என்று உரைப்பினும் பொருந்தும்.

உரை விளக்கம் : நிலையாமை உடைய இவ்வுலகின் தன்மையை அறிந்தவர் இதனிடையே கிடந்து உழலாமல், இதனினும் சிறந்த இன்ப உலகத்து வீட்டின்பம் பெறும் செயல்களைச் செய்ய வேண்டும் என்று பக்குடுக்கை நன்கணியார் பாடியது. மணவொலி கேட்பார்க்கு இன்பமும் குளிர்ச்சியும் தருவதாகலின், ''ஈர்ந்தண் முழவின் பாணி'' என்றார். நெய்தற்பறையாகிய சாக்காட்டுப்பறை கேட்பார்க்கு வருத்தம் செய்யக் கூடியது. கணவரோடு சேர்ந்திருக்கும் காலங்களில் மகளிர் ஆடை, அணி, மலர் ஆகியவற்றால் ஒப்பனை செய்து மகிழ்வோடு இருப்பர். இவ்வழக்கத்தைப், ''புணர்ந்தோர் பூவணி அணிய'' என்றார். கணவர் பிரிந்திருக்கும் காலங்களில் ஆடை, அணி, பூ ஆகியவற்றால் ஒப்பனை செய்து கொள்ளாமல், வருத்தமுடன் கண்களில் நீர் சொரிய நிற்பர். இவ்வழக்கத்தைப், ''பிரிந்தோர் பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப'' என்றார். இவ்வாறு இன்பமும் துன்பமுமாக இவ்வுலகைப் படைத்த நான்முகனைப் ''பண்பிலாளன்'' எனக் குறிப்பிட்டார். நிலையாமை பொருந்திய இவ்வுலகம் இன்னாமை உடையதாகையால், நிலைத்த இன்பமுடைய வீடுபேறு பெறும் பொருட்டு நற்செயல்களைச் செய்து

Koviloor Digital Library

உய்யவேண்டும் என்பதை, ''இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே'' என அறிவுறுத்தினார்.

''நெஞ்சு நடுக்குறூஉ நெய்தல் ஓசையும்'' (மணி. 6 : 71), ''நிறையும் செல்வத்து எதிர் மனைகள் இரண்டில் நிகழ்மங்கல இயங்கள் அறையும் ஒலியொன் றினில் ஒன்றில் அழுகை ஒலி வந்து எழுதலும்'' (பெரிய. வெள்ளானை. 5), ''அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவை ... ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத் தண்கமழ் கோதை புனைய'' (புற. 146 : 7 – 10), ''பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தான் நறுமலர்க் கூந்தல் நாணி பெறுகென'' (சிலப். 27 : 215 – 216), ''ஐதே கம்மஇவ் உலகு படைத்தோனே'' (நற். 240 : 1), ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றியான்'' (குறள். 1062), ''மன்றம் கறங்க மணப்பறை யாயின, அன்றவர்க்கு ஆங்கே பிணப்பறையாய்ப் – பின்றை ஒலித்தலும் உண்டாமென்று உய்ந்து போமாறே, வலிக்குமா மாண்டார் மனம்'' (நாலடி. 23), என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : நெய்தல் – சாக்காட்டுப்பறை; கறங்க – ஒலிக்க; இல் – மனை; பாணி – ஓசை; புணர்ந்தோர் – கணவரைக் கூடினமகளிர்; பைதல் – வருத்தம், துன்பம்; படைத்தோன் – நான்முகன்; இன்னாது – கொடியது.

195

பல் சான்றீரே! பல் சான்றீரே!
கயல் முள் அன்ன நரை முதிர் திரை கவுள்,
பயன் இல் மூப்பின், பல் சான்றீரே!
கணிச்சிக் கூர்ம் படைக் கடுந் திறல் ஒருவன்
பிணிக்கும் காலை, இரங்குவிர் மாதோ;
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,

Koviloor Digital Library

அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல் ஆற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே.

திணை : பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

நரிவெரூஉத்தலையார் பாடியது.

துறை விளக்கம் : "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும், அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான் எல்லாரும் உவப்பது அன்றியும், நல் ஆற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே" எனக் கூறியதால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று.

உரை : பலவாகிய குணங்கள் அமைந்த சான்றீர்! பலவாகிய குணங்கள் அமைந்த சான்றீர்! மீனின் முள் போன்ற நரை முதிர்ந்த திரைந்த கன்னத்தினையும், பயனில்லாத முதுமையையும் உடைய பலவாகிய குணங்களையுடையீர்! மழுவாகிய கூரிய படைக்கலத்தையும், கடும் வலிமையும் உடைய ஒருவன் (யமன்) பாசமாகிய கயிற்றால் கட்டிக் கொண்டு போகுங்காலத்து நீர் நும் நிலைக்கு இரங்குவீர்; ஆதலால், நல்வினைகள் செய்யமாட்டீராயினும், தீவினைகளையாவது செய்யாது விலக்குங்கள்; அச்செயல்தான் எல்லாராலும் புகழப்படுவது; அதுமட்டுமல்லாமல் நும்மை நன்னெறியில் (வீடுபேறு) செலுத்தும் வழியும் அதுவாகும்.

உரை விளக்கம் : நல்வினை செய்து நன்னெறிக்குச் செல்லுங்கள் என்று நரிவெரூஉத் தலையார் சான்றோர்க்கு அறிவுறுத்திப் பாடியது. கயல்மீனின் முள்ளைக் கன்னத்தின் நரைக்கு ஒப்பாகக் காட்டிக், "கயல் முள் அன்ன நரை முதிர் திரைகவுள்" என்றார். நன்னெறிக்கண் வாழ்நாள் கழியாமையின், "பயனில் மூப்பு" என்றார். கூற்றுவனை யாவராலும் வெல்லற்கு அரிதாகலின், "கடுந்திறல் ஒருவன்" என்று குறிப்பிட்டார்.

Koviloor Digital Library

ஒருவன் என்றது எமனைக் குறித்தது. அவன் கயிற்றால் கட்டி உயிரை இழுத்துச் செல்வான் என்பதால், ''பிணிக்கும் காலை'' என்றார். நல்லது செய்தலைக் காட்டிலும் தீயது செய்யாதிருத்தல் நன்மையுடையது என்பதால், ''அல்லது செய்தல் ஓம்புமின்'' என்று குறித்தார். நன்மை செய்தல் எல்லாராலும் இயலாது; தீமை செய்யாதிருத்தல் எல்லார்க்கும் எளிதின் இயைவதாகலின், ''எல்லாரும் உவப்பது'' என்றும், நலம் பெறும் வழியும் அதுவாகலின், ''நல்லூற்றுப்படுஉம் நெறியும் மாரதுவே'' என்றும் வற்புறுத்தினார்.

''பல் சான்றீரே பல் சான்றீரே'' (புற. 246 : 1), ''கரிந்தநீள் கயல் முள்ளின் நரையும்'' (திருவிளை. விருத்த. 20), ''வறுமையால் ஈதல் இசையாதெனினும் இரவாமை ஈதல் இரட்டி உறும்'' (நாலடி. 95) என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கவுள் – கன்னம்; மூப்பு – முதுமை; கணிச்சி – மழு; திறல் – வலிமை; ஒருவன் – ஞமன், கூற்றுவன்; பிணித்தல் – கட்டுதல்; நல்லது – நன்மை, நல்வினை; அல்லது – தீமை, தீவினை; ஓம்புமின் – பாதுகாமின்; நல்லாற்று – நன்னெறி; நெறி – வழி.

196

ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்
ஒல்லாது இல் என மறுத்தலும், இரண்டும்,
ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே;
ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது
இல் என மறுத்தலும், இரண்டும், வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும், புரப்போர்
புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை;
அனைத்து ஆகியர், இனி; இதுவே எனைத்தும்

Koviloor Digital Library

சேய்த்துக் காணாது கண்டனம்; அதனால்,
நோய் இலராக நின் புதல்வர்; யானும்,
வெயில் என முனியேன், பனி என மடியேன்,
கல் குயின்றன்ன என் நல்கூர் வளிமறை,
நாண் அலது இல்லாக் கற்பின் வாள் நுதல்
மெல் இயல் குறு மகள் உள்ளிச்
செல்வல் அத்தை; சிறக்க, நின் நாளே!

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தானை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

துறை விளக்கம் : ''இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர் புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை ... நோயிலராக நின் புதல்வர் ... சிறக்க நின் நாளே'' என்று கூறியதால் இப்பாடல் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று. பரிசில் நீட்டித்துத் தந்ததால், அதனால் வருந்திய புலவரின் மனநிலையை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

உரை : தம்மால் கொடுக்க இயலும் பொருளை இயலுமென்று சொல்லிக் கொடுத்தலும், யாவர்க்கும் தம்மால் கொடுக்க இயலாத பொருளை இல்லையென்று சொல்லி மறுத்தலும் ஆகிய இரண்டும் தாளாண்மை உடையார்பால் உள்ளன; தனக்கு இயலாததனை இயலும் என்றலும், இயலும் பொருளை இல்லையென்று மறுத்தலும் ஆகிய இரண்டும் விரைவில் இரப்போரை வாட்டமுறச் செய்வதோடு, ஈவோரின் புகழைக் குறைவுபடச் செய்யும்; இப்பொழுது நீ என்பாற் செய்ததும் அவ்வாறே ஆயிற்று; இஃது எத்துணையும் எம் குடியில் உள்ளார் முன்பு காணாதது; இப்பொழுது யாம் கண்டேம்; யானும் வெயில் என்று நினைந்து செல்லுதலை வெறுக்காமலும், பனியென்று கருதிச் சோம்பியிராமலும் செல்கின்றேன். என்னை விட்டு நீங்காது, கல்லால் செய்தாற்போன்ற வறுமையின் மிகுதியால் வளிமறையாகிய

Koviloor Digital Library

மனையிடத்து உறைபவள் என் மனைவி; அவள் நாணைத் தவிர வேறில்லாத கற்பினையும், ஒளியுடைய நுதலினையும், மெல்லிய சாயலினையும் உடையவள்; அவளை நினைந்து போகின்றேன்; நீ எமக்குச் செய்த அத்தீங்கினால் (பரிசில் கொடாததால்) நின் பிள்ளைகள் நோயின்றி இருப்பாராக; நின் வாழ்நாள் சிறந்து மிகுவதாக.

உரை விளக்கம் : பரிசில் தராமல் காலம் நீட்டித்த அரசனுக்கு அறிவுறுக்கும் தன்மையில் ஆலூர் மூலங்கிழார் பாடியது. ''நோயிலராக நின் புதல்வர்'' என்பதூஉம், ''சிறக்க நின்னாள்'' என்பதூஉம் குறிப்புமொழி. இல்லையென்று மறுத்தல் இரப்போரை மெலியச் செய்வதோடு, ஈவோரின் புகழையும் குறைக்குமாதலால், "இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர் புகழ் குறைபடூஉம் வாயில்" என்றார். "சேய்த்துக் காணாது கண்டனம்" என்றது, எம் குடியில் உள்ளோர் முன்பு காணாது யாம் கண்டேம் என்பதை உணர்த்தும் பொருட்டாகும். நின் (பாண்டியன்) முன்னோர் பரிசில் நீட்டித்தது இல்லை என்பதால் எம் குடியினர் காணாதது என்றும், நீ அவ்வாறு செய்ததால் 'கண்டனம்' என்றும் கூறினார். வெயிலில் வெளியில் செல்லுவதற்கு வெறுப்பு ஏற்படுமாதலால், ''வெயிலென முனியேன்'' என்றும், பனிக்காலத்தில் உடல் சோம்பி இருக்குமாதலால், ''பனியென மடியேன்'' என்றும் உரைத்தார். வறுமை நீங்காது பிணித்துக் கொண்டிருத்தலால், ''கல் குயின்றன்ன நல்கூர்'' என்றார். வீட்டின் சுவர் காற்றை மறைப்பது தோன்ற ''வளிமறை'' என்றார். மனைவியானவள் நாண், கற்பு ஆகிய பண்புகளையே செல்வமாகப் பெற்றவள் என்பதை, ''நாண் அலது இல்லாக் கற்பின் வாள் நுதல்'' என்று கூறினார். பரிசில் மறுத்தலான் இவன் புதல்வர்க்கும், இவனுக்கும் தீங்கு வரும் என்றஞ்சி, ''நோயிலராக நின் புதல்வர்'' எனவும் ''சிறக்க நின் நாள்'' எனவும் வாழ்த்தினார்.

"இயைவது கரத்தலின் கொடுமை இல்லை" (முதுமொ. கா. 55), ''இசையா ஒரு பொருள் இல்லென்றல் யார்க்கும், வசையன்று வையத்து இயற்கை" (நாலடி. 111), ''நட்டார்க்கும் நள்ளாதவர்க்கும் உளவரையால், அட்டது பாத்துண்டல் அட்டுண்டல் - அட்டது

Koviloor Digital Library

அடைத்திருந்து உண்டொழுகு மாவதின் மாக்கட்கு அடைக்குமா ஆண்டைக் கதவு'' (நாலடி. 271), ''இசைவ கொடுப்பதூஉம் இல்லென்பதூஉம், வசையன்று வையத்து இயற்கை அஃதன்றிப், பசை கொண்டவன் நிற்கப் பாத்துண்ணாயின், நசை கொன்றான் செல்லுலகம் இல்'' (பழ. 24), ''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு'' (குறள். 231), ''வறியார்க் கொன்று ஈவதே ஈகை'', ''மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'', ''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி'' (குறள். 221, 222, 226), ''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'' (தொல். பொருள். கள. நூ. 22), ''உயிரினும் சிறந்த நாணும்'' (நற். 17 : 8), ''தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றி மற்று, எம்மை இகழ்ந்த வினைப் பயத்தால் - உம்மை, எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல் என்று பரிவதூஉம் சான்றோர் கடன்'' (நாலடி. 58) என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : ஆள்வினை - தாளாண்மை, முயற்சி; மருங்கு - பக்கம்; கேண்மை - நட்பு; வாட்டல் - மெலிவித்தல்; புரப்போர் - ஈவோர்; வாயில் - வழி; முனியேன் - வெறுப்பினேன்; மடியேன் - சோம்பியிரேன்; நல்கூர் - வறுமை; வளிமறை - காற்றை மட்டும் மறைப்பது; நாண் - நாணம்; குறுமகள் - மனைவி; உள்ளி - நினைத்து; நாள் - வாழ்நாள், ஆயுள்.

197

வளி நடந்தன்ன வாச் செலல் இவுளியொடு
கொடி நுடங்கு மிசைய தேரினர் எனாஅ,
கடல் கண்டன்ன ஒண் படைத் தானையொடு
மலை மாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ,
உரும் உரற்றன்ன உட்குவரு முரசமொடு
செரு மேம்படூஉம் வென்றியர் எனாஅ,

Koviloor Digital Library

மண் கெழு தானை, ஒண் பூண் வேந்தர்
வெண் குடைச் செல்வம் வியத்தலோ இலமே;
எம்மால் வியக்கப்படூஉமோரே,
இடு முள் படப்பை மறி மேய்ந்து ஒழிந்த
குறு நறு முஞ்ஞைக் கொழுங் கண் குற்றடகு,
புன் புல வரகின் சொன்றியொடு, பெறூஉம்,
சீறூர் மன்னர் ஆயினும், எம் வயின்
பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரே;
மிகப் பேர் எவ்வம் உறினும், எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;
நல் அறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும், பெரும! யாம், உவந்து, நனி பெரிதே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் பரிசில் நீட்டித்தானைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது.

துறை விளக்கம் : "தேரினர் எனாஅ ... களிற்றினர் எனாஅ ... வென்றியர் எனாஅ ... வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே ... எம்மால் வியக்கப்படூஉமோரே ... சீறூர் மன்னராயினும் எம்வயின் பாடறிந்து ஒழுகும் பண்பினாரே, மிகப் பேர் எவ்வம் உறினும் எனைத்தும், உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்" என கூறியதால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : காற்றின் வேகத்தைப் போன்ற தாவுதலையுடைய குதிரையோடு, கொடி அசையும் உச்சியையுடைய தேரினை உடையவர்; கடலைக் கண்டாற்போன்ற ஒள்ளிய படைக்கலத்தையுடைய படையுடன், மலையோடு மாறுபட்டுப் போர் செய்யும் களிற்றினை உடையவர்; இடி முழங்கினாற் போன்ற அஞ்சத்தக்க முரசத்தோடு போரில் மேம்படும் வெற்றியை உடையவர்; இவையெல்லாம் உடையவரெனக் கருதி

Koviloor Digital Library

நிலத்தைப் பொருந்தின படையினையும், ஒள்ளிய பூணினையும் உடைய அரசர் வெண்கொற்றக்குடை நிழற்றும் செல்வத்தை யாம் மதித்தல் இல்லேம்; இடப்பட்ட முள்வேலியுடைய தோட்டத்தில் ஆடு தின்று எஞ்சி நின்ற நாற்றமுடைய முஞ்ஞையது (முன்னைக் கீரை) இலையைப், புல்லிய நிலத்தில் விளைந்த வரகுச் சோற்றுடன் பெறுகின்ற சிற்றூர் வேந்தரே, எம்மால் மதிக்கப்படுவர். சிற்றூர் வேந்தராயினும் எம்மிடத்துச் செய்யும் முறைமையை அறிந்து நடக்கும் குணத்தினையுடையவர். யாம் மிகப் பெரிய துன்பமுற்றாலும் சிறிதும் அறிவில்லாதோருடைய செல்வம் பயன்படாமையின் அதனை நினையோம்; நல்லறிவுடையவர் மிக்க வறுமையுற்றாராயினும், அவ்வறுமை பயன்படுதலின் அதனை யாம் மகிழ்ந்து மிகப் பெரிதும் நினைப்பேம்.

உரை விளக்கம் : புலவரின் தன்மை அறிந்து ஒழுகும் பண்பில்லாத வேந்தர் எத்துணைப் பெரியராயினும், அவர்களைப் பொருளாகக் கொள்ளேம், எனச் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் பரிசில் நீட்டிக்க, அவனுக்கு அறிவுறுக்கும் பொருட்டுக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது. மிகப்பெரும் வேந்தர் என்பதை, ''தேரினர் களிற்றினர் வென்றியர்'' என்று காட்டுகிறார். சீறூர் மன்னரை, ''குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு, புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம் என்றார். பெருவேந்தர் மதிக்கப்படாததை, ''வேந்தர் வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே'' என்றும், சீறூர் மன்னர் மதிக்கப்படுதலை, ''எம்மால் வியக்கப்படூஉமோரே ... பாடறிந்து ஒழுகும் பண்பினாரே'' என்றும் கூறினார். செல்வம் பெற்றதன் பயன் ஈதலாகும். ஈயாதாரின் செல்வத்தால் பயன் இல்லை என்பதால், ''உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்'' என்றார்.

''கால் இயற் புரவி ஆலும்'' (புற. 178 : 2), ''காற் கடுப்பன்ன கடுஞ்செலல் இவுளி'' (அக. 224 : 4), ''கடல் மருள் தானை'' (அக. 212 : 15), ''உருமிடி முரசம்'' (முரு. 121), ''கடிப்புஇகு முரசின் முழங்கி இடிஇடித்துப் பெய்தினி வாழியோ பெருவான்''

Koviloor Digital Library

(குறு. 270 : 3 – 4), "இடுமுள் நெடுவேலி" (கலி. 12 : 1), "முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி" (புற. 320 : 1), "தாளி முதல் நீடிய சிறு நறு முஞ்ஞை" (புற. 328 : 14), "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" (கலி. 133 : 8), "நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே, கல்லார்கட் பட்ட திரு" (குறள். 408), "ஈத்துவக்கும் இன்பம் அறியார்சொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்" (குறள். 228) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வளி – காற்று; இவுளி – குதிரை; மிசை – உச்சி; தானை – படை; மலைக்கும் – பொரும்; உரும் – இடி; செரு – போர்; வென்றியர் – வெற்றியையுடையர்; படப்பை – தோட்டம்; மறி – ஆடு; முஞ்ஞை – முன்னைக்(கீரை); அடகு – இலை; புன்புலம் – புல்லியநிலம்; சொன்றி – சோறு; பாடு – முறைமை; எவ்வம் – துன்பம்; உணர்ச்சி இல்லோர் – அறிவில்லாதோர்; உடைமை – செல்வம்; நல்குரவு – வறுமை; உள்ளுதல் – நினைத்தல்; உவந்து – மகிழ்ந்து.

198

'அருவி தாழ்ந்த பெரு வரை போல
ஆரமொடு பொலிந்த மார்பில் தண்டா,
கடவுள் சான்ற கற்பின், சேயிழை
மடவோள் பயந்த மணி மருள் அவ் வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிக!' என்று ஏத்தி,
திண் தேர் அண்ணல் நிற் பாராட்டி,
காதல் பெருமையின் கனவினும் அரற்றும் என்
காமர் நெஞ்சம் ஏமாந்து உவப்ப,
ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம்,
வேல் கெழு குருசில்! கண்டேன்; ஆதலின்,
விடுத்தனென்; வாழ்க; நின் கண்ணி! தொடுத்த
தண் தமிழ் வரைப்பகம் கொண்டியாக,

Koviloor Digital Library

பணித்துக் கூட்டு உண்ணும் தணிப்பு அருங் கடுந் திறல்
நின் ஓரன்ன நின் புதல்வர், என்றும்,
ஒன்னார் வாட அருங் கலம் தந்து, நும்
பொன்னுடை நெடு நகர் நிறைய வைத்த நின்
முன்னோர் போல்க, இவர் பெருங் கண்ணோட்டம்!
யாண்டும் நாளும் பெருகி, ஈண்டு திரைப்
பெருங் கடல் நீரினும், அக் கடல் மணலினும்,
நீண்டு உயர் வானத்து உறையினும், நன்றும்,
இவர் பெறும் புதல்வர்க் காண்தொறும், நீயும்,
புகன்ற செல்வமொடு புகழ் இனிது விளங்கி,
நீடு வாழிய! நெடுந்தகை! யானும்
கேள் இல் சேஎய் நாட்டின், எந்நாளும்,
துளி நசைப் புள்ளின் நின் அளி நசைக்கு இரங்கி, நின்
அடி நிழல் பழகிய அடியுறை;
கடுமான் மாற! மறவாதீமே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் பாடியது.

துறை விளக்கம் : "பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும், நீண்டு உயர் வானத்து உறையினும் ... நீயும் புகன்ற செல்வமொடு புகழ் இனிது விளங்கி நீடு வாழிய! கடுமான் மாற! மறவாதீமே" என்று கூறியதால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : அருவி வீழும் பெரிய மலை போல முத்தாரம் பொலிந்த மார்பின்கண் வேட்கை தணியாத தெய்வத்தன்மை பொருந்திய கற்பினையும், சிவந்த அணிகளையும் உடையவள் நின் மனைவி; நின் கற்புடைய மனைவி பெற்ற பவழமணி போன்ற வாயையும் கிண்கிணியையும் உடைய புதல்வரைப் பொலிக என்று வாழ்த்தினேன்; திண்ணிய தேரையுடைய வேந்தே!

Koviloor Digital Library

நின்னைப் புகழ்ந்து பரிசில் மேல் உள்ள அன்பு பெரிதாகலின் கனவினும் நின் புகழையே கூறும் விருப்பத்தை உடையேன், என் நெஞ்சம் இன்புற்று மகிழ, ஆலிலையில் எழுந்தருளியுள்ள திருமால் போன்ற நின் செல்வத்தைக் கண்டேன்; ஆதலால், விடை பெற்றுச் செல்கின்றேன், வாழ்க, நின் கண்ணி! தமிழ்நாடு எல்லை முழுதும் வென்று கவர்ந்ததுடன், பகைவரைப் பணித்து, அவர் தரும் பொருள்களையும் பெற்று வந்து உண்ணும் தணித்தற்கரிய வலிமையுடையவன் நீ; வலிமையுடைய நின் புதல்வரும் நின்னை ஒப்பர்; நின் புதல்வர் எந்நாளும் பகைவர் வருந்த, அவருடைய பெறுதற்கரிய அணிகலத்தைக் கொணர்ந்து, நும் பொன்னுடைய நெடிய நகரில் தொகுத்துப் பொலிய வைத்த, நின் முன்னோர் போலக் கண்ணோட்டம் உடையராகுக; அலையுடைய கடல்நீரினும், அக்கடல் கொழித்திட்ட மணலினும், நீரைப் பொழியும் மழைத்துளியினும் நின் ஆண்டும் நாளும் பெருகுக; நின் புதல்வர் பெரும் பிள்ளைகளைக் காணும்தோறும் நீயும் விரும்பிய செல்வத்துடனே புகழும் இனிதாக விளங்கி நெடுங்காலம் வாழ்க! பெருந்தகாய்! யானும் உறவல்லாத தொலைநாட்டிற்குச் செல்கின்றேன்; அந்நாட்டின்கண், நாடோறும் மழைத்துளியை விரும்பும் வானம்பாடி என்னும் பறவைபோல நின் கொடை நசைக்கு இரங்கி, நினது அடி நிழற்கண் பழகிய அடியின் வாழ்வேன்; விரைந்த வேகம் கொண்ட குதிரையுடைய மாறனே! நீ செய்த செயலை மறவாதொழிவாயாக.

உரை விளக்கம் : பரிசில் நீட்டித்துத் தந்த பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனிடம், வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் 'நீயும், நின் புதல்வரும், நின் முன்னோரைப் போலக் கண்ணோட்டம் உடையவராகச் சிறந்து விளங்குவீராக' என்று அறிவுறுத்திப் பாடியது. 'ஆலமர் கடவுள் அன்ன நின்' என்றதற்கு ஆலின்கீழ் அமர்ந்த முக்கட் செல்வனாகிய (சிவன்) கடவுளை ஒப்ப என்று உரைப்பினும் பொருந்தும். 'முன்னோர் போல்க இவர் பெருங் கண்ணோட்டம்' எனவும், 'வாழ்க நின் கண்ணி' எனவும், 'நீடுவாழிய' எனவும் குறித்தது குறிப்புமொழியாகும்.

Koviloor Digital Library

என்னிடத்து நீ செய்த கொடுமையால் தீங்கு வரும்; அத்தீங்கு நினக்கு வாராதிருப்பதாக என வாழ்த்தியதுமாம். நின் முன்னோர் போல்க இவர் பெருங்கண்ணோட்டம் என்றது, அவரும் வழங்காது வைத்தலின் கண்ணோட்டம் இலர்; இவரும் அவரையொக்கக் கண்ணோட்டம் இலராக என்பதைக் குறித்து நின்றது. 'மறவாதீமே' என்றது, எனக்கு நீ செய்த செய்தியை மறவாது ஒழிவாயாக என்பதாகும். 'யாண்டும் நாளும் பெருகி' என்பதற்கு நின் நாளே திங்கள் (மாதம்) அனையவாக; அத்திங்கள் ஆண்டோர் அனையவாக; ஆண்டே ஊழியனைய வரம்பினவாக என்ற கருத்தாகும்.

தெய்வம் போலப் பெய்யென மழை பெய்யும் கற்பு மாண்புடையள் என்றற்குக், ''கடவுள் சான்ற கற்பின் சேயிழை மடவோள்'' என்றார். பவழமணி போலும் சிவந்த வாய் என்றற்கு, ''மணிமருள் அவ்வாய்'' என்றும், சிறுவயதில் புதல்வர்க்கு, கிண்கிணி அணியும் வழக்கத்தை, ''கிண்கிணி புதல்வர் என்றும் கூறினார். நனவு முற்றும் பரிசிலையே நினைந்தும் பேசியும் இருத்தலின், ''கனவிலும் அரற்றும் என் காமர் நெஞ்சம்'' என்றார். பரிசில் பெற வந்த என்னைப் புறக்கணித்தமையால் யான், ''கேள் இல் சேஎய் நாட்டு''க்குச் செல்கின்றேன் என்றார். தொலைவில் இருந்தாலும், நின்னை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பேன் என்பார், ''எஃநாளும் துளி நசைப் புள்ளின் நின் அளி இசைக்கு இரங்கிநின், அடி நிழல் பழகிய அடியுறை'' என்றார். மழைத்துளியை விரும்பி வாழும் வானம்பாடியைப் போல, நின் கொடை அளிக்கு இரங்கி நிற்றலை, ''துளி நசைப் புள்ளின் நின் அளி நசைக்கு இரங்கி'' என்றார்.

''மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை அணிமுலைத் துயல் வருஉம் ஆரம் போலச், செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாறு'' (சிறு. 1 – 3), ''அலை நீராடை மலை முலையாகத், தாரப் பேரியாற்று மாரிக் கூந்தல், கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை'' (சிலப். 5 : 1 – 3), ''கடவுட் கற்பின் மடவோள்'' (அக. 314 : 5), ''மணிபுரை செவ்வாய்'' (அக. 16, 66),

Koviloor Digital Library

"கடவுட் கற்பொடு குடிக்கு விளக்காகிய புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின் நன்னராட்டிக்கு அன்றியும் எனக்கு இனிதாகின்றால் சிறக்க நின் ஆயுள்" (அக. 184 : 1 – 4), "வார்கழல் வேந்தே வாழ்க நின் கண்ணி" (மணி. 5 : 28), "நோயிலராக நின் புதல்வர்" (புற. 196 : 10), "ஆலமர் செல்வன்" (கலி. 81, 84; சிலப். 24), "ஆல்கெழு கடவுள்" (முரு. 256), "நன்னீர்ப்பஃறுளி மணலினும் பலவே" (புற. 9 : 11), "சிறக்க நின் ஆயுள் ... காவிரி எக்கர் இட்ட மணலினும் பலவே" (புற. 43 : 21 – 23), "தற்பாடிய தளி உணவின் புள்" (பட். 3 – 4), (கலி. 46 : 20 – 21, 146 : 52 – 53) என வரும் பகுதிகள் ஒப்பிடத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : வரை – மலை; ஆரம் – முத்தாரம்; மணி – பவழமணி; கிண்கிணி – ஓர் அணிவகை; காமர் – விருப்பம்; ஏமாந்து – இன்புற்று; உவப்ப – மகிழ; ஆலமர் கடவுள் – ஆல்இலை திருமால், ஆலின்கீழ் அமர்ந்த சிவன் எனவும் பொருள்படும்; கொண்டி – கொள்ளை; திறல் – வலிமை; ஒன்னார் – பகைவர்; அருங்கலம் – அணிகலம்; உறை – மழைத்துளி; கேள் – உறவு, சுற்றம்; சேஎய் – தொலைவு, தூரம்; துளி – மழைத்துளி; புள் – வானம்பாடி; நசை – விருப்பம்; கடுமான் – குதிரை.

199

கடவுள் ஆலத்துத் தடவுச் சினைப் பல் பழம்
நெருநல் உண்டனம் என்னாது, பின்னும்
செலவு ஆனாவே, கலி கொள் புள்ளினம்;
அனையர் வாழியோ இரவலர்; அவரைப்
புரவு எதிர்கொள்ளும் பெருஞ் செய் ஆடவர்
உடைமை ஆகும், அவர் உடைமை;
அவர் இன்மை ஆகும், அவர் இன்மையே.

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் கடாநிலை.

Koviloor Digital Library

பெரும்பதுமனார் பாடியது.

துறை விளக்கம் : "புரவு எதிர் கொள்ளும் பெருஞ் செய் ஆடவர் உடைமை ஆகும் அவர் உடைமை" என்று கூறியதால் பரிசில் கடாநிலைத் துறையாயிற்று.

உரை : ஒலித்தலையுடைய பறவையினங்கள், தெய்வம் உறையும் ஆலமரத்தின் பல பழத்தை நேற்றும் உண்டேம் என்று நினையாது, நாடோறும் அவ்விடத்துப் பழத்தைத் தேடிச் செல்லும்; இரப்போரும் அப்பறவையினத்தை ஒப்பார்; அவ்விரப்போர் செல்வம், அவரைக் காத்தற்கு எதிர்ந்து கொள்ளும் பெருஞ்செய்கையுடைய ஆண்மக்களது செல்வமாகும்; அவ்விரப்போர் வறுமை, அவ்வாண்மக்களுடைய வறுமையாகும்.

உரை விளக்கம் : தம்மைப் பேணும் புரவலரைச் சூழ்ந்திருந்து அவர் செல்வத்தைத் தம் செல்வமாகக் கருதி உண்டலும், அவரது வறுமையைத் தம் வறுமையாக கருதியிருத்தலும் இரவலர்களுக்கு இயல்பு என்று பெரும்பதுமனார் அவரைப் புகழ்ந்து பாடியது. ஆலமரத்தில் கடவுள் உறையும் இயல்பு பற்றி, "கடவுள் ஆலத்து" என்றார். ஆலமரம் பழுத்த காலத்தில் பறவையினம் பலவும் சேர்ந்துண்டு மகிழும். பழுத்த மரத்தைப் பறவை தேடிச் செல்லுதல் போலக், கொடுக்கும் கொடையோரை நாடியே நாள்தோறும் இரவலர் பலரும் செல்வர். இதனை உணர்த்த, "ஆலத்துத் தடவுச் சினைப் பல்பழம், நெருநலும் உண்டனம் என்னாது பின்னும் செலவு ஆனாவே கலி கொள் புள்ளினம்" என்ற உவமையைக் கூறினார்.

பழங்களை உண்டு செல்லும் பறவையினம், அதன் விதைகளைப் பல்வேறு இடங்களில் சொரிந்து, பழுத்த மரத்தின் இனத்தைப் பெருக்குவது போல, இரவலரும் தமக்குப் பரிசில் தந்து சிறப்பிப்பாரின் புகழை நாட்டின் பல்வேறு இடங்களிலும் பரப்பி ஆங்காங்கு வள்ளன்மை உடையாரைத் தோற்றுவிப்பர்; வலிமையும் படையும் உடையார் தொகுக்கும் பொருள், அவை இல்லார்க்குப்

Koviloor Digital Library

பயன்பட்டு உலக வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவேண்டும். இதனால், ''கலிகொள் புள்ளினம் அனையர் இரவலர்'' என்றார். செல்வம் உள்ள காலத்தில் அவரைச் சூழ்ந்திருக்கும் புலவர், பாணர் முதலிய இரவலர் அச்செல்வத்தைத் தமது செல்வமாகக் கருதி உண்ணுவதோடு அமையாது, அவர் செல்வமின்றி வறியராகிய விடத்து, தாமும் உடனிருந்து வறுமைத் துன்பத்தை நுகர்ந்து, அவ்வறுமை அவர்க்குத் தோன்றாதவாறு ஆறுதல் உரைக்கும் செயலிலும் ஈடுபடுவர். அதனாலேயே, ''புரவு எதிர்கொள்ளும் பெருஞ்செய் ஆடவர் உடைமை ஆகும் அவர் உடைமை, அவர் இன்மை ஆகும் அவர் இன்மையே'' என்றார்.

''கடவுள் ஆலத்து'' (நற். 343), ''அழல்புரை குழை கொழு நிழல்தரும் பலசினை, ஆலமும் கடம்பும் ... வேறுவேறு பெயரோய்'' (பரி. 4 : 66 – 69), ''துறையும் ஆலமும் தொல்வலி மராமும் முறையுளி பராஅய்'' (கலி. 101), ''ஆலும் கடம்பும் அணிமார்'' (கலி. 106), ''புட்பயில் பழுமரப் பொலிவிற்றாகிய, மட்டிலா வளநகர்'' (சீவக. 93), ''பழுமரம் உள்ளிய பறவையின்'' (பொரு. 64), ''யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந்தன்ன ஊண்ஒலி அரவம்'' (புற. 173 : 3 – 4), ''வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி'' (புற. 47 : 1), ''பழுமரம் தேரும் பறவைபோல ... பாண'' (பெரு. 20 – 22), ''பழந்தேர் வாழ்க்கைப் பறவை போல ... துவன்றி'' (மது. 576 – 580), கனிபொழி கானம் கிளையொடு உணீஇய, துனைபறை நிவக்கும் புள்ளின மான ... நன்னற் படர்ந்த கொள்கையொடு'' (மலை. 54 – 64), ''பழுமரம் உள்ளிய பறவை போல'' (புற. 370 : 11), என வரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : கடவுள் ஆலம் – தெய்வம் உறையும் ஆலமரம்; சினை – கொம்பு; நெருநல் – நேற்று; செலவு – போதல், செல்லுதல்; கலி – ஒலி; புள்ளினம் – பறவையினம்; புரவு – காத்தல்; உடைமை – செல்வம்; இன்மை – வறுமை.

Koviloor Digital Library

200

பனி வரை நிவந்த பாசிலைப் பலவின்
கனி கவர்ந்து உண்ட கரு விரற் கடுவன்
செம் முக மந்தியொடு சிறந்து, சேண் விளங்கி,
மழை மிசை அறியா மால் வரை அடுக்கத்து,
கழை மிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!
நிணம் தின்று செருக்கிய நெருப்புத் தலை நெடு வேல்,
களம் கொண்டு கனலும் கடுங்கண் யானை,
விளங்கு மணிக் கொடும்பூண், விச்சிக்கோவே!
இவரே, பூத் தலை அறாஅப் புனை கொடி முல்லை
நாத் தழும்பு இருப்பப் பாடாது ஆயினும்,
கறங்கு மணி நெடுந்தேர் கொள்க!' எனக் கொடுத்த
பரந்து ஓங்கு சிறப்பின் பாரி மகளிர்;
யானே, பரிசிலன், மன்னும் அந்தணன்; நீயே,
வரிசையில் வணக்கும் வாள் மேம்படுநன்;
நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி – சினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடு கிழவோயே!

திணை : பாடாண்திணை; துறை : பரிசில் துறை.

பாரி மகளிரை விச்சிக் கோனுழைக் கொண்டு சென்ற கபிலர் பாடியது.

துறை விளக்கம் : ''பரந்து ஓங்கு சிறப்பின் பாரி மகளிர், யானே பரிசிலன் மன்னும் அந்தணன் நீயே வரிசையில் வணக்கும் வாள் மேம்படுநன் நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி'' என இரங்கிக் கூறியதால் இப்பாடல் பரிசில் துறையாயிற்று:

உரை : குளிர்ந்த மலையின்கண் ஓங்கிய பசிய இலையுடைய பலாவின் பழத்தைக் கவர்ந்து உண்ட கரியவிரலுடைய ஆண்குரங்கு,

Koviloor Digital Library

சிவந்த முகத்தையுடைய தன் மந்தியுடன் பொலிந்து தோன்றும்; தொலைவின்கண்ணேயும் விளங்கி, முகிலாலும் உச்சி அறியப்படாத உயர்ந்த மலைப்பக்கத்து மூங்கில் உச்சியில் அக்குரங்குகள் உறங்கும் மலையகத்துத் தாழ்ந்த வரையை உடையோய்! நிணத்தைத் தின்று செருக்கிய நெருப்புப் போன்ற தலையுடைய நெடுவேலினையும், போர்க்களத்தைத் தனதாக்கிக் கொண்டு சினக்கும் வலிய யானையினையும், விளங்கிய மணிகளால் செய்யப்பட்ட அணிகலத்தினையுமுடைய விச்சிக்கோவே! இவர்கள்தாம், பூவைத் தலையில் அலங்கரித்தாற் போன்ற கொடிமுல்லை தான் நாத்தழும்பேறப் பாடாதாயினும், ஒலிக்கும் மணியுடைய நெடுந்தேரைக் கொள்க என்று சொல்லிக் கொடுத்த பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரிக்கு மகளிர்; யான் பரிசிலன்; அதுவன்றியும் நிலைபெற்ற அந்தணன்; நீ, பகைவரைப் போர் செய்யும் முறைமையால் பொருது, பணிவிக்கும் வாளால் மேம்பட்டவன்; சினத்தையுடைய போரால் பகைவேந்தரை அடக்கும் வலிமையும், மடங்கா விளையுளும் உடைய நாட்டையுடையோய்! ஆதலால், நினக்குப் பாரி மகளிரை யான் தரக் கொள்வாயாக.

உரை விளக்கம் : ''பாரி மகளிரை மணந்து கொள்ளுதலே யான் இரந்து வேண்டும் பரிசில், என்று விச்சிகோனிடம் கபிலர் வேண்டிப் பாடியது. மகள் பேசிவிடக் கொடுத்தலையன்றித் தாமே இவரைக் கொள்வாயாக என்று இரந்து கூறினார். பலவின் கனி கவர்ந்துண்ட கடுவன் மந்தியொடு சிறந்து சேண் விளங்கிக் கழை மிசைத் துஞ்சும் என்றதனால், நீயும் இவரை மணந்துகொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டும் என்பதைக் குறித்து நின்றது. 'யானே பரிசிலன்' என்றதனால், நினக்கு என் குறை முடிக்கவேண்டும் என்பதும், 'அந்தணன்' என்றதனால் யான் தருதற்கு உரியேன் என்பதும் உணர்த்தப்படும். கடுவனுக்கு விரல் கருத்திருத்தலும், மந்திக்கு முகம் சிவந்திருத்தலும் இயல்பாதலின், ''கருவிரல் கடுவன்'' என்றும் ''செம்முக மந்தி'' என்றும் கூறினார்.

Koviloor Digital Library

வாள்மேம்படுகின்ற மரபில் தோன்றியதற்கேற்ப வேந்தரின் மிகுதியை அடக்குபவன் என்பதை, ''அடங்கா மன்னரை அடக்கும் கிழவோய்'' என்றார். விளைச்சல் பல்கிப் பெருகுதலின், ''மடங்கா விளையுள்'' என்றார். பாரியின் கெழுதகை நண்பராதலால் கபிலர் முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் கொடையைக் கூறி, அத்தகைய மன்னரின் மகள் இன்று தந்தையை இழந்து படும் அவலநிலையையும் சுட்டியுள்ளார். இதனைப், ''புனை கொடி முல்லை நாத் தழும்பு இருப்பப் பாடாதாயினும் ... நெடுந்தேர் கொள்க எனக் கொடுத்த ... பாரி மகளிர் ... நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி'' என்று குறிப்பிட்டுள்ளார்.

''மழை அண்ணாப்ப நீடிய நெடுவரை, கழைவளர்'' (புற. 166 : 32), ''தேருடன் முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப் படுமணி யானைப் பறம்பிற் கோமான் நெடுமாப் பாரிமகளிர்'' (புற. 201 : 2 – 5), ''தேர்வண் பாரி தண்பறம்பு நாடே'' (புற. 118 : 5), ''தேர் வீசு இருக்கை நெடியோன் குன்று'' (புற. 114 : 6), ''சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய ... பறம்பிற் கோமான் பாரியும்'' (சிறு. 87 – 91), ''முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்'' (பழ. 74), ''புலன் அழுக்கற்ற அந்தணாளன்'' (புற. 126 : 11), ''அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே'' (புற. 201 : 7). ''வில் கெழு தானை விச்சியர் பெருமகன்'' (குறு. 328) என வரும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

அருஞ்சொற்பொருள் : பனிவரை – குளிர்ந்த மலை; கடுவன் – ஆண்குரங்கு; மந்தி – பெண்குரங்கு; சேண் – தொலைவு; மழை – முகில்; வரை அடுக்கம் – மலைப்பக்கம்; கழை – மூங்கில்; மிசை – உச்சி; களம் – போர்க்களம்; கனலும் – சினக்கும்; பூண் – ஆபரணம், அணிகலம்; கறங்கும் – ஒலிக்கும்; வரிசை – சிறமை; வணக்கும் – பணிவிக்கும், தாழ்விக்கும்; அடங்கா மன்னர் – பகைவேந்தர்.

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

Koviloor Digital Library

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 14127

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No: 67343
Date of purchases:
Call Number: 894.811E P4